MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY,
TIRUVANMIYUR, MADRAS-41.

மதுரையறுபத்துநான்கு

திருவிளையாடற்புராணம்.

பரஞ்சோதிமுனிவர்

அருளிச்செய்தது.

இது

யாழ்ப்பாணத்து நல்லூர்

ஆறுமுகநாவலரவர்கள்

ஒருவாறு பரிசோதித்து வைத்திருந்த பிரதியையும்

வேறு சில பிரதிகளையுங் கொண்டு

மேற்படியூர்

சதாசிவப்பிள்ளையால்

பரிசோதித்து

சென்னபட்டணம்

வித்தியாநுபாலனயந்திரசாலையில்

௨ அச்சிற்பதிப்பிக்கப்பட்டது,

பிலவங்க௵ ஐப்பசி௴.

இதன் விலை ரூபா - ௨.

உ

காண்டவகராதி.

காண்டம்.	பக்கம்.
மதுரைக்காண்டம்	௨௭
கூடற்காண்டம்	௧௩௯
திருவாலவாய்க்காண்டம்	௨௪௭

படலவகராதி.

படலம்.	பக்கம்.
அங்கம்வெட்டினபடலம்.	௧௬௮
அட்டமாசித்தியுபதேசித்தபடலம்	௧௮௭
அருச்சனைப்படலம்.	௩௪௯
அன்னக்குழியும் வைகையுமழைத்த படலம்.	௯0
இசைவாதுவென்றபடலம்.	௨௨௮
இடைக்காடன்பிணக்குத்தீர்த்தபடலம்	௨௭௭
இந்திரன்பழிதீர்த்தபடலம்.	௩௮
இந்திரன்முடிமேலவளையெறிந்தபடலம்	௧௧௧
இரசவாதஞ்செய்தபடலம்.	௧௯௭
உக்கிரபாண்டியன்றிருவவதாரப் படலம்.	௯௮
உக்கிரபாண்டியனுக்கு வேல்வளை செண்டுகொடுத்தபடலம்.	௧0௨
உலவாக்கிழியருளியபடலம்.	௧௮௧
உலவாக்கோட்டையருளியபடலம்.	௨0௩
எல்லாம்வல்லசித்தர் திருவிளையாடற் படலம்.	௧௪௨
எழுகடலழைத்தபடலம்.	௯௩
கடல்சுவறவேல்விட்டபடலம்.	௧0௯
கரிக்குருவிக்குபதேசஞ்செய்தபடலம்.	௨௪௧
கல்லானைக்குக்கரும்பருத்தியபடலம்.	௧௪௪
கீரனைக்கரையேற்றியபடலம்.	௨௭0
கீரனுக்கிலக்கணமுபதேசித்தபடலம்.	௨௭௩
குண்டோதரனுக்கு அன்னமிட்ட படலம்.	௮௮
சங்கத்தார்கலகந்தீர்த்தபடலம்.	௨௭௬
சங்கப்பலகைதந்தபடலம்.	௨௫௫
சமணரைக்கழுவேற்றியபடலம்.	௩௩௫
சுந்தரப்பெயரம்பெய்தபடலம்.	௨௫0
சோழனைமடுவில்வீட்டியபடலம்.	௨00
தடாதகைப்பிராட்டியார்திருவவதாரப் படலம்.	௫௭
தண்ணீர்ப்பந்தல்வைத்தபடலம்.	௧௯௩
தருமிக்குப்பொற்கிழியளித்தபடலம்.	௨௫௯
தலவிசேடப்படலம்.	௨௭
திருநகரங்கண்டபடலம்.	௫௨
திருமணப்படலம்.	௬௫
திருமுகங்கொடுத்தபடலம்.	௨௨௩
திருவாலவாயானபடலம்.	௨௪௭
திருவிளையாடல்வரலாறு.	௨௨
தீர்த்தவிசேடப்படலம்.	௨௯
நகரச்சிறப்பு.	௧௧
நரிபரியாக்கியபடலம்.	௨௯௭
நாகமெய்தபடலம்.	௧௭௧
நாட்டுச்சிறப்பு.	௫
நாரைக்குமுத்திகொடுத்தபடலம்.	௨௪௪
நான்மாடக்கூடலானபடலம்.	௧௩௯
பதிகம்.	௩௭
பரிநரியாக்கிவைகையழைத்தபடலம்.	௩௧0
பலகையிட்டபடலம்.	௨௨௬
பழியஞ்சினபடலம்.	௧௫௮
பன்றிக்குட்டிக்குமுலைகொடுத்தபடலம்.	௨௩௩
பன்றிக்குட்டிகளைமந்திரிகளாக்கிய படலம்	௨௩௯
பாண்டியன்சுரந்தீர்த்தபடலம்.	௩௨௮
பாயிரம்.	௨

படலம்.	பக்கம்.
மண்சுமந்தபடலம்.	௩௧௭
மலயத்துவசனையழைத்தபடலம்.	௬௫
மாணிக்கம்விற்றபடலம்.	௧௨௬
மாபாதகந்தீர்த்தபடலம்.	௧௬௩
மாமனாகவந்துவழக்குரைத்தபடலம்.	௨௦௫
மாயப்பசுவைவதைத்தபடலம்.	௧௭௩
மாறியாடினபடலம்.	௧௫௫
மூர்த்திவிசேடப்படலம்.	௩௩
மெய்க்காட்டிட்டபடலம்.	௧௭௭
மேருவைச்செண்டாலடித்தபடலம்.	௧௧௮
யானையெய்தபடலம்.	௧௪௭
வரகுணனுக்குச் சிவலோகங்காட்டிய படலம்.	௨௦௮
வருணனவிட்ட கடலைவற்றச்செய்த படலம்.	௧௩௬
வலைவீசினபடலம்.	௨௮௧
வளையல்விற்றபடலம்.	௧௮௩
வன்னியுங்கிணறும் இலிங்கமுமழைத்த படலம்.	௩௪௪
வாதவூரடிகளுக்குஉபதேசஞ்செய்த படலம்.	௨௮௮
விடையிலச்சினையிட்டபடலம்.	௧௯௦
விருத்தகுமாரபாலரானபடலம்.	௧௫௨
விறகுவிற்றபடலம்.	௨௧௬
வெள்ளையானைச்சாபந்தீர்த்தபடலம்.	௪௮
வெள்ளியம்பலத் திருக்கூத்தாடிய படலம்.	௮௫
வேதத்துக்குப் பொருளருளிச்செய்த படலம்.	௧௦௦

DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR MADRAS-41

உ

கணபதி துணை

மதுரை யறுபத்துநான்கு திருவிளையாடற்
போற்றிக் கலிவெண்பா

காப்பு.

நாறறுக்கும் போறறு நதிமதுரைச் சொக்கரையாம்
போற்றிக் கலிவெண்பாப் போற்றிசெயச் — சீற்றமதன்
றைக்குஞ் சரமுகத்தான் சாயவிழித் தோளுதவு
கைக்குஞ் சரமுகத்தான் காப்பு.

பூமேவு கற்பகநா டாளும் புரந்தரனார்
தீமை விருத்திரனைச் செற்றபழி — போமாறு
பொற்கமலந் தோய்ந்து விமானமிசைப் பூசிக்க
நற்கருணை செய்த நலம்போற்றி — நற்றவத்தோர்
ஈசனார் சாத்து மெழின்மலரைக் கால்சிதைத்த
வாசவனார் வெள்ளானை மண்ணிழிந்து — பூசனைசெய்
தல்லற் படுசாபந் தீர வருள்சுரந்த
மல்லற் கருணை வளம்போற்றி — நல்வணிகன்
கண்டுவந்து கூறக் கனவினருட் சித்துருவங்
கொண்டுவந்து காடெறிந்து கோநகரங் — கண்டிடெனக்
கொத்தரு நிம்பக் குலசே கரனையெதிர்
சித்தரா யாட்கொண்ட சீர்போற்றி — பத்தி
மலையத் துவசன் மகநதன்னின் மேனறு
முலையுத் தமியாய் முளைத்துக் — கலைமுழுதுங்
கற்றுமுடி சூடிக் கயற்கண்ணி வெங்கலியைச
செற்றுலகை யாண்டிருந்த சீர்போற்றி — கொற்றமணித்
தேரேறி யெட்டுத் திசைவென்று நந்திகணப்
போரேறி வென்றெதிர்க்கும் போதிலொரு — வாரேறு
கொங்கை மறைந்தமதிக் கொமமைமணஞ் செய்துமுடி
மங்கலஞ் செய்த வளம்போற்றி — அங்கனக
மன்றூடல் வேட்ட விரு மாதவர்க்கு வெள்ளிமன்றுள்
நின்றாடிக் காட்டு நிலைபோற்றி — குன்றமென
முன்ன [illegible]பசித்தீ மூளுங் குறள்வீரற்
கன்னமலை யீந்த வருள்போற்றி — பின்னுமவனா
வெய்யபசிக் கனனக் குழியுநீர் வேட்கைக்கு
வையையுந் தந்த வரம்போற்றி — ஐயைதனை
ஈன்றாள் கடலாட வேண்ட வெழுகடலுஞ்
சான்றா வரநிறுத்துந் தாள்போற்றி — வான்றாழ
வாழுமலை யத்துவச மன்னனைக்கூஉய்த் தேவியொடும்

போற்றிக்கலிவெண்பா.

ஆழிபடி வித்த வருள்போற்றி—வேள்விவரு
விலவளைக்கை நங்கை விறலுக் கிரகுமரச்
செல்வனைப் பெற்ற திறம்போற்றி—செல்வனுக்கு
மன்றன் முடித்து வளைசெண்டு வேல்கொடுத்து
வென்றிமுடி சூட்டும் விறல்போற்றி—வன்றிறல்வே..
வேலை.சுவற விடுத்துக் கிரகுமரன்
ஞாலம் புரந்த நலம்போற்றி—வேல்வலக்கை
சேயனைய வுக்ரன் றிகிரியெறிந் திந்திரன்பே
[illegible] யம்போற்றி—ஆயவரி
வண்டலம்பு தார்க்குமரன் மேரு மணிமுடிமேற்
செண்டெறிந்து வைப்பெடுத்த சீர்போற்றி—பண்டொருநாள்
ஆறறிய வந்தணருக் காதி மறைப்பொருளைத்
தேற விரித்த திறம்போற்றி—ஈறடைந்த
தென்னன் குமரன் றிருமுடிக்கு வாணிபராய்
நன்மணிகள் விற்ற நலம்போற்றி—நன்னகர்மேல்
வென்றி வருணன் விடுத்த கடல்பருகத்
துன்றுமுகி ஞன்கேவுஞ் சூள்போற்றி—கன்றியவன்
வான்மாரி யேழும் விடுப்பமழை நான்கும்போய்
நான்மாட மான நலம்போற்றி—தேனிதழி
வைத்த முடிமறைத்து மாடநக ரெங்கெங்குஞ்
சித்தரா யாடியருள் சீர்போற்றி—சித்தராய்
மன்னவன் கைக்கரும்பை வாங்கிக்கல் யானைக்குத்
தின்ன வளித்த திறம்போற்றி—தென்னவன்மேல்
வெங்க ணமணர் விடுத்த களிற்றைநர
சிங்கசரந் தொட்டெய்த சீர்போற்றி—தொங்குதிரை
மூப்பிளைய காளை முலையுண் குழவியெனக்
கோப்பருவங் கொண்ட குணம்போற்றி—மாப்பெரியோர்
தேறுநடந் தன்னையொரு தென்னன் றனக்கிரங்கி
மாறிநடஞ் செய்த மலர்போற்றி—ஆறடைந்தோர்
வஞ்சி யுயிரிழப்ப நாடு மறப்பழியை
அஞ்சி வெளிசெய்த வறம்போற்றி—வஞ்சமனத்
தாயைப் புணர்ந்தமகன் றந்தை தனைவதைத்த
தீயபழி தீர்த்தவருட் சீர்போற்றி—தாயனைய
ஆசான் மனைவிதன்மே லாசைவைத்த மாணவனைக்
கூசாமற் கொன்ற கொலைபோற்றி—மாசமணர்
வல்வித்தை செய்துவிடு வன்னஞ்ச வாளரவைக்
கொல்வித்த நல்ல குணம்போற்றி—வல்லமணர்
கூரியகோட் டாவை வரவிடுப்பக் கொல்லேற்றால்
வீரியஞ் சாய்த்த விறல்போற்றி—தாரணியில்
வெந்திறல்வேன் மீனவன்முன் மெய்க்காட்டிட் டன்புடைய
மந்திரியைக் காத்த வளம்போற்றி—நொந்திரந்த
கொற்கையர்கோ வேந்தன் குறையிரப்பச் சித்தராய்ப்
பொற்குவை தந்த புகழ்போற்றி—நற்குவளை
மையேற்ற வாட்கண் வணிகமட வார்க்குவளை
கையேற்றி மாலேற்றுங் கைபோற்றி—மைதீரப்
பட்டமங்கைப் பாறையுரு நீத்தாறு பைந்தொடியார்க்

கட்டசித்தி யீந்த வருள்போற்றி—கட்டவிழார்த்
தாராற் கரையிரவிற் றாழ்திறந்து காப்படைத்துச்
சீரார் விடைபொறித்த சீர்போற்றி—ஆரானை
மூண்டெழுபோருந் தென்னன் முனைப்போர்க்குத் தண்ணீர்தந்
தாண்ட கருணை யுறம்போற்றி—ஈண்டயன்மால்
வன்மனத்துக் கெட்டான் வடிவெடுத்துப் பொன்னனையாள்
தன்மனையிற் சென்ற நடைபோற்றி—தென்னனெதிர்
ஆயிர வாம்பரிக்கோ ராடவனை யோடையினில்
வீய வலந்திரித்த வேல்போற்றி—தூயவளம்
ஒல்கு மடியாற் குலவாத் தனிக்கோட்டை
நல்குங் கருணை நலம்போற்றி—நல்வணிகன்
மாமனென வந்து வழக்குரைத்து ஞாதியர்பாற்
சேமநிதி வாங்கியருள் சீர்போற்றி—கோமகனை
ஆட்டிய வன்பழிதீர்த் தாண்டச் சிவலோகங்
காட்டி யருள்கருணைக் கண்போற்றி—பாட்டிசைக்குப்
பாண னடிமையெனப் பாடி விறகெடுத்த
நாண மிலாத நடைபோற்றி—பாணனுக்குச்
செந்தமிழாற் றீட்டுந் திருமுகத்தைச் சேரனிடைத்
தந்தருளிச் செய்த தனம்போற்றி—வந்திறைஞ்சி
அற்பொழியு மாரிவெள்ளத் தாழ்ந்திசைக்கும் பாணனுக்குப்
பொற்பலகை யிட்ட புகழ்போற்றி—கற்பதனுன்
மாட்சிபெறு பாடினியை வாதுக்குத் தோற்றுடன்
றோட்சுமையாத் தாங்குவித்த சூள்போற்றி—காட்சிபெற
வீயாமல் வெஞ்சுரத்து வல்லேனக் குட்டிக்குத்
தாயாய் முலைகொடுத்த தாய்போற்றி—வீயாத
ஏனமிரண் டாறனைய மீராறு மந்திரியா
மீனவனுக் கீந்த விறல்போற்றி—மானவலி
எய்த்தெளிய ஞான விரும்புட் குபதேசம்
வைத்துவலி தந்த வரம்போற்றி—சித்தநெகிழ்
பத்தியினாற் சூழ்ந்துவழி பாடுசெய்யு நாரைக்கு
முத்தி கொடுத்த முறைபோற்றி—சித்தரணி
கோளரவு நான்மாடக் கூடலை யாலவாய்
வாளகிரி போல்வளைந்த மாண்போற்றி—கோளமரிற்
சுந்தரப்பே ரம்பெய்து சோழன் கடற்சேனைக்
கந்தரநா டந்த வருள்போற்றி—செந்தமிழ்நூல்
ஆய்ந்தவர் கல்வி யளந்தறியும் பொற்பலகை
ஈந்த கருணை யிசைபோற்றி—வேந்தனிடைச்
சொற்சுவையாற் பாட லெடுத்துத் தருமிக்குப்
பொற்கிழி தந்த புகழ்போற்றி—நக்கீரன்
மெய்வெந தழற்கண்ணால் வெந்தோடை வீழ்ந்தேனைக்
கைதந்தே றிட்ட கரைபோற்றி—மைதவிர
ஏதமுறுங் கீரற் கியற்றமிழைத் தென்மலய
மாதவனாற் றேற்றுவித்த மாண்போற்றி—யோதணிந்த
மங்கல மண்டபத்து வந்துமன் சங்கத்தார்
சங்கையறத் தேற்றுந் தமிழ்போற்றி—சங்கையாய்ப்
போனவிடைக் காடன்பின் போய்ப்பாடல் கேட்டரசன்

போற்றிக்கலிவெண்பா.

மாணநிதி நல்குவிக்கு மாண்போற்றி—மீன்மகளாய்ச்
செங்கையொரு நான்குடைய திண்மீன் பிடித்துவலை
மங்கையை வேட்ட மணம்போற்றி—துங்கமறை
ஆன்றதிரு வாதவூ ரந்தணருக் கைந்தெழுத்தின்
மூன்றுபொரு டேற்று முறைபோற்றி—தேன்றதும்பு
வேம்புநறுந் தாரான்முன் வெவ்வாய் நரித்திரளை
வாம்பரியாத் தந்த வரம்போற்றி—வாம்பரிகள்
நின்ற பரிக ணிணம்பிடுங்கி யூளையிட்டுத்
இன்றுநரி யாகுஞ் செயல்போற்றி—அன்றொருத்திக்
காளாய் முதுகி லடிபட்டு மண்சுமந்து
தாளாண்மை செய்த சயம்போற்றி—கோளமணர்
வீறுகெடக் கூனிமிர்த்து வெப்பொழித்துப் பாண்டியனை
நீறுபுனை வித்த நிலைபோற்றி—சீறமணர்
அங்கனலும் வேகவதி யாறுந் தமிழறிய
வெங்கழுவி லேற்றும் விறல்போற்றி—அங்கொருத்தி
மன்றற்குச் சான்றாக வன்னி கிணறிலிங்கம்
அன்றழைத்துக் காட்டு மருள்போற்றி—அன்றிறைவன்
ஆற்றிய வாட லறுபத்து நான்கனையுஞ்
சாற்றிய தென்முனிவன் றாள்போற்றி—சாற்றிய
வண்ணங்கேட் டர்ச்சித்த மாமுனிவர் தாள்போற்றி
தண்ணங் கயற்கண்ணி தாள்போற்றி—அண்ணலருள்
போற்றி மதுரைநகர் விண்ணிழிந்த பொற்கோயில்
போற்றி கருணைமுகப் போது.

திருவிளையாடற்போற்றிக்கலிவெண்பா முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

மதுரையறுபத்துநான்கு

திருவிளையாடற்புராணம்.

காப்பு.

சத்தி யாயச்சிவ மாகித் தனிப்பர
முத்தி யான முதலைத் துதிசெயச்
சுத்தி யாகிய சொற்பொரு ணல்குவ
சித்தி யானைதன் செய்யபொற் பாதமே.

சிவம்.

வென்றுளே புலன்க ளைந்தார மெய்யுண ருள்ளந் தோறுஞ்
சென்றுளே யமுத மூற்றுந் திருவருள் போற்றி யேற்றுக்
குன்றுளே யிருந்து காட்சி கொடுத்தருள் கோலம் போற்றி
மன்றுளே மாறி யாடு மறைச்சிலம் படிகள் போற்றி.

சத்தி

சுரும்புமுரல் கடிமலர்ப்பூங் குழல்போற்றி யுத்தரியத் தொடித்தோள் போற்றி
கரும்புருவச் சிலைபோற்றி கவுணியர்க்குப் பால்சுரந்த கலசம் போற்றி
இரும்புமனங் குழைத்தென்னை யெடுத்தாண்ட வங்கயற்க ணம்மை பாட்டி
அரும்புமிள நகைபோற்றி யாரணநூ புரஞ்சிலம்பு மடிகள் போற்றி.

வாழ்த்து.

மல்குக வேத வேள்வி வழங்குக சுரந்து வானம்
பல்குக வளங்க ளெங்கும் பரவுக வறங்க ளின்பம்
நல்குக வுயிர்கட் கெல்லா ஞானமறைச் சைவ மோங்கி
புல்குக வுலக மெல்லாம் புரவலன் செங்கோல் வாழ்க.

திருவிளையாடற்புராணம்.

நூற்பயன்.

திங்களணி திருவால வாயெம் மண்ண
றிருவிளையாட் டிவையன்பு செய்து கேட்போர்
சங்கநிதி பதுமநிதிச் செல்வ மோங்கித்
தகைமைதரு மகப்பெறுவர் பகையை வெல்வர்
மங்கலநன் மணம்பெறுவர் பிணிவந் தெய்தார்
வாழ்நாளு நனிபெறுவர் வானு டெய்திப்
புங்கவரா யங்குள்ள போக மூழ்கிப்
புண்ணியராய்ச் சிவனடிக்கீழ் நண்ணி வாழ்வார்.

பாயிரம்.

பரசிவம்.

பூவண்ணம் பூவின் மணம்போலமெய்ப் போத வின்ப
மாவண்ண மெய்கொண் டவன்றன்வலி யாணை தாங்கி
மூவண்ண றன்சந் நிதிமுத்தொழில் செய்ய வாளா
மேவண்ண லன்னான் விளையாட்டின் வினையை வெல்வாம். (௧)

சிவசத்தி.

அண்டங்க ளெல்லா மணுவாக வணுக்க ளெல்லாம்
அண்டங்க ளாகப் பெரிதாய்ச்சிறி தாயி னானும்
அண்டங்க ளுள்ளும் புறம்புங்கரி யாயி னானும்
அண்டங்க ளீன்ற வணையென்ப ரறிந்த நல்லோர். (௨)

சொக்கலிங்கமூர்த்தி.

பூவி னாயகன் பூமக ணாயகன்
காவி னாயக னாதிக் கடவுளர்க்
காவி நாயக னங்கயற் கண்ணிமா
தேவி நாயகன சேவடி யேத்துவாம். (௩)

அங்கயற்கண்ணி.

பங்கயற்க ணரியபரம் பரனுருவே தனக்குரிய படிவ மாகி
இங்கயற்க ணகனுலக மெண்ணிறந்த சராசரங்க ளீன்றுந் தா[illegible]
கொங்கயற்கண் மலர்க்கூந்தற் குமரிபாண் டியன்மகள்போற் கோலங் கொண்ட
அங்கயற்க ணம்மையிரு பாதப்போ தெப்போது மகத்துள வைப்பாம். (௪)

சபாபதி.

உண்மையறி வானந்த வுருவாகி யெவ்வுயிர்க்கு முயிராய் நீரின்
றண்மையனல் வெம்மையெனத் தனையகலா திருந்துசரா சரங்க ளீன்ற
பெண்மையுரு வாகியதன் னானந்தக கொடிமகிழ்ச்சி பெருக யார்க்கும்
அண்மையதா யம்பலத்து ளாடியருள் பேரொளியை யகத்துள் வைப்பாம். (௫)

* படிவமாகி என்றும் பாடம்.

சோமசுந்தரர்.

சடைமறைத்துக் கதிர்மகுடந் தரித்துநறுங் கொன்றையந்தார்தணந்து வேப்பந்
தொடைமுடித்து விடநாகக் கலனகற்றி மாணிக்கச் சுடர்ப்பூணேந்தி
விடைநிறுத்திக் கயலெடுத்து வழுதிமருமகனாகி மீனநோக்கின்
மடவரலை மணந்துலக முழுதாண்ட சுந்தரனை வணக்கஞ்செய்வாம். (௬)

தடாதகைப்பிராட்டியார்.

செழியர்பிரான் றிருமகளாய்க் கலைபயின்று முடிபுனைந்து செங்கோலோச்சி
முழுதுலகுஞ் சயங்கொண்டு திறைகொண்டு நந்திகண முனைப்போர் சாய்த்துத்
தொழுக்கணவற் கணிமணமாலிகைசூட்டித் தனமகுடஞ் சூட்டிச் செல்வந்
தழைவுறுதன் னரசளித்த பெண்ணரசியடிக்கமலந் தலைமேல் வைப்பாம். (௭)

கான்மாறியாடியவர்.

பொருமாறிற் கிளர்தடந்தோ ளொருமாறன் மனங்கிடந்த புழுக்க மாற
வருமாறிற் கண்ணருவி மாறுது கவிப்படைய மணனுமவினனும்
உருமாறிப் பவக்கடலவீழ்ந் தூசலெனத் தடுமாறி யுழலுமாக்கள்
கருமாறிக் கதிபடையக் கான்மாறி நடித்தவரைக் கருத்துள் வைப்பாம். (௮)

தக்ஷிணாமூர்த்தி.

கல்லாலின் புடையமர்ந்து நான்மறையா றங்கமுதற் கற்ற கேள்வி
வல்லாரக ணால்வருக்கும் வாக்கிறந்த பூரணமாய் மறைக்கப் பாலாய்
எல்லாமா யலலதுமா யிருந்ததனை யிருந்தபடி யிருந்து காட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நினையாம னினைந்துபவத் தொடக்கை வெல்வாம். ௯

சித்திவிநாயகர்.

உள்ளமெனுங் கூடத்தி லூக்கமெனுந் தறிநிறுவி யுறுதி யாகத்
தள்ளரிய வன்பெனுநாற் றொடர்பூட்டி யிடைப்படுத்தித் தறுகட் பாசக்
கள்ளவினைப் பசுபோதக் கவளமிடக் களித்துண்டு கருணை யென்னும்
வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை நினைந்துவரு வினைகடப்பாம். (௧௦)

சுப்பிரமணியர்.

கறங்குதிரைக் கருங்கடலுங் காரவுணப் பெருங்கடலுங் கலங்கக் கார்வந்
துறங்குசிகைப்பொருப்புஞ்சூரப்பொருப்புமபிளப்பமறையுணர்ந்தோராற்றும்
அறங்குலவு மகத்தழலு மவுணமடவாரவயிற்றி னழலு மூள
மறங்குலவு வேலெடுத்த குமரவேள் சேவடிகள் வணக்கஞ் செய்வாம். (௧௧)

சரஸ்வதி.

பழுதகன்ற நால்வகைச்சொன் மலரெடுத்துப பத்திபடப் பரப்பித் திக்கு
முழுதகன்று மணந்துசுவை யொழுகியணி பெறமுக்கண் மூர்த்தி தாளிற்
றொழுதகனற வனபெனுநார் தொடுத்தலங்கல் சூட்டவரிச் சுரும்புந் தேனுங்
கொழுதகனற வெள்ளோட்டு முண்டகத்தா ளடிமுடிமேற் கொண்டு வாழ்வாம்.

திருநந்திதேவர்.

வந்திறை யடியிற் றாழும் வானவர் மகுட கோடி
பந்தியின் மணிகள் சிந்த வேத்திரப் படையாற் றாக்கி
அந்தியும் பகலுந் தொண்ட ரலகிடுங் குப்பை யாக்கும்
நந்தியெம் பெருமான் பாத நகைமலர் முடிமேல் வைப்பாம். (௧௩)

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

கடியவிழ் கடுக்கை வேணித் தாதைபோற் கனற்கண் மீனக்
கொடியனை வேவ நோக்கிக் குறையிரந் தனையாள் கற்பிற்
பிடியன நடையாள் வேண்டப் பின்னுயி ரளித்துக் காத்த
முடியணி மாடக் காழி முனிவனை வணக்கஞ் செய்வாம். (கச)

திருநாவுக்கரசுநாயனார்.

அறப்பெருஞ் செல்வி பாகத் தண்ணலஞ் செழுத்தா லஞ்சா
மறப்பெருஞ் செய்கை மாறா வஞ்சக ரிட்ட நீல
நிறப்பெருங் கடலும் யார்க்கு நீந்துதற் கரிய வேழு
பிறப்பெனுங் கடலு நீத்த பிரானடி வணக்கஞ் செய்வாம். (கரு)

சுந்தரமூர்த்திநாயனார்.

அரவக லல்கு லார்பா லாசைநீத் தவர்க்கே வீடு
தருவமென் றவில வேதஞ் சாற்றிய தலைவன் றன்னைப்
பரவைதன் புலவி தீர்ப்பான் கழுதுகண் படுக்கும் யாறள்
இரவினிற் றூது கொண்டோ னிணையடி முடிமேல் வைப்பாம். (கசு)

மாணிக்கவாசகசுவாமிகள்.

எழுதரு மறைக டேறா விறைவனை யெல்லிற் கங்குற்
பொழுதறு காலத் தென்றும் பூசனை விடாது செய்து
தொழுதகை தலைமே லேறத் துளும்புகண் ணீருண மூழ்கி
அழுதடி யடைந்த வன்ப னடியவர்க் கடிமை செய்வாம். (கஎ)

சண்டேசுரரும் மற்றை நாயன்மாரும்.

தந்தைதா ளொடுமெபிறவித் தாளெறிந்து திருத்தகு தாளைச் சேர்ந்த
மைந்தாதாள் வேதநெறி சைவநெறி பத்திநெறி வழாது வாய்மெய்
சிந்தைதா னரணடிக்கே செலுத்தினராய்ச் சிவாநுபவச் செல்வ ராகிப்
பந்தமாந் தொடக்கறுத்த திருத்தொண்டர் தாள்பரவிப் பணிதல் செய்வாம். (கஅ)

நூல் இயற்றுதற்குக்காரணம்.

அண்ணல்பாற் றெரிந்த நந்தி யடிகள்பாற் சனற்கு மாரன்
உண்ணிறை யன்பி னாய்ந்து வியாதனுக் குணர்த்த வந்தப்
புண்ணிய முனிவன் சூதற் கோதிய புராண மூவா
றெண்ணிய விவற்றுட் காந்த மீசசங் கிதையின் மாதோ. (ககூ)

அறைந்திடப் பட்ட தாகு மாலவாய்ப் புகழ்மை யந்தச்
சிறந்திடும் வடநூ றன்னைத் தென்சொலாற் செய்தி யென்றிங்
குறைந்திடும் பெரியோர் கூறக் கடைப்பிடித் துறுதி யிதனாற்
பிறந்திடும் பிறப்பி லெய்தப் பெறுதுமென் றுள்ள நேர்ந்து. (உ0)

திருநகர் தீர்த்த மூர்த்திச் சிறப்புமூன் றந்த மூர்த்தி
அருள்விளை யாட லெட்டெட் டருச்சனை வினையொன் றாக
வருணமுறை யிருபத் தெட்டா மற்றவை படலமாக
விரிமுறை விருத்தச் செய்யுள் வகைமையால் விளம்ப லுற்றேன். (உக)

---

* அறுகாலம் - காலை, உச்சி, எற்பாடு, மாலை, யாமம், வைகறை.

அவையடக்கம்.

நயக்கன கவிக்குங் குற்ற நாட்டிய கழக மாந்தர்
மயக்கறு தலைச்சங் கத்தோர்க் கென்னவெள் ளறிவுரையிற் குற்றம்
நயப்பார் நீசனே ரேனுஞ் சீர்த்த னென்ன முணர்ந்தோர்
நாட்டிடம் பெற்ற கொள்கைச் சுந்தரன் சரிதந் தனையே. (௨௨)

சுவைக்கொ பூந்தழ றூசுசுவை கண்டபூ ணிமைமேயார்
சுவைக்கக வின்னமு தாயின துளக்கமில் சான்றோர்
அவைக்களம் புகுந் தினியவா யாலவா யுடையார்
செவிக்களம் புகுந் தேறுவ சிறியனேன் பனுவல் (௨௩)

யவ ரியுமொ டோடெடுத் துலகெலாம் பருகத்
தூய வாக்கிய காரென்ச சொற்பொரு டெளிந்தோர்
ஆய கேள்விய தாகளறுத் தாலவா யுடைய
நாயனார் கனி தாகக நலமிலேன் புன்சொல் (௨௪)

அல்லை யீதல்லை யீதெனு மறைகளு மன்மைச்
சொல்லி னாற்றுதித் திளைக்குமிச் சுந்தர னாடற்
கெல்லை யாகுமோ வென்னுரை யென்செய்கோ வித்தனைச்
சொல்லு வேனெனு மாசையென் சொல்வழிக் கேள் (௨௫)

ஆக்கியோன்பெயர்.

அறுகாற்பீ டத்துயர்மா லாழிக்கடைந் தமுதையரங் கேற்று மாபோல்
அறுகாற்பே டிசைபாடுங் கூடன்மான் மியத்தமுதை யருந்தமிழாற் பாடி
அறுகாற்பீ டியாமுடியார் சொக்கேச சந்நிதியி லமரர் சூழும்
அறுகாற்பீ டத்திருந்து பரஞ்சோதி முனிவனரங் கேற்றினனே. (௨௬)

பாயிரமுற்றிற்று.

ஆக திருவிருத்தம் - ௩௧

நாட்டுச்சிறப்பு.

கறைநிறுத் தியகந் தரசுந் தரக்கட வுள்
உறைநிறுத் தியவா ளினுறப் பகையிரு ளோட்டுக்கு
மறைநிறுத் தியவழி யினால்வழு தியாய்ச் செங்கோன்
முறைநிறுத் தியபாண் டிநாட் டணியது மொழிவாம். (௧)

தெய்வ நாயக னீறணி மேனிபோற் சென்று
பௌவ மேய்ந்துமை மேனிபோற் பசந்துபல் லுயிர்க்கும்
எவ்வ மாற்றுவான் சுரந்திடு மின்னரு ளென்னக்
கௌவை நீர்சுரந் தெழுந்தன கருங்குரன் மேகம். (௨)

இடித்து வாய்திறந் தொல்லென வெல்லொளி மருங்கைத்
தடித்து வாள்புடை விதிர்த்துநன் னிந்திர சாபம்
பிடித்து நீள்மபு கோடைமேற் பெய்துவெம் பெரும்போர்
முடித்து நாமென வருதல்போன் மொய்த்தன கொண்மூ. (௩)

முனித னீள்வரை யுச்சிமேன் முழங்கிவா னிவந்து
தனித நீர்மழை பொழிவன தடஞ்சிலை யிராமன்
கனித னீராமையா லாலவாய்க் கண்ணுதன முடிமேற்
புனித நீர்த்திரு மஞ்சன மாட்டுவான் போலும். (௪)

சுந்த ரன்றிரு முடிமிசைத் தூயநீ ராட்டும்
இந்தி ரனறனை யொத்தகா ரெழிலிதென் மலைமேல
வந்து பெய்வவத் தனிமுதன் மௌலிமேல் வலாரி
சிந்துகின்றகைப் போதெனப் பனமணி தெறிப்ப. (௫)

உடுத்த தெண்கடன் மேகலை யுடையபார் மகடன்
இடத்து தித்தபல் லுயிர்க்கெலா மிரங்கித்தன் கொங்கைக்
தடத்து நின்றிழி பாலெனத் தடவரை முகடு
தொடுத்து வீழ்வன விழுமெனத் தூங்குவெள் ளருவி. (௬)

வேறு.

கருநிற மேக மென்னுங் கச்சணி சிகரக் கொங்கை
அருவியாந் தீம்பால் சோர வகணசுனை யென்னுங் கொப்பூழ்ப்
பொருவிலவே யென்னு மென்றோட் பொதியமாஞ் சைலப் பாவை
பெருகுதண் பொருநை யெனனும் பெண்மகப் பெற்றா ளன்றே. (௭)

கல்லெனக் கரைந்து வீழுங் கடும்புனற் குழவி கானத்
தொல்லெனத் தவழ்ந்து தீம்பா லுண்டொரீஇத் திண்டோண் மள்ளர்
செல்லெனத் தெழிக்கும் பம்பைத் தீங்குரல் செவிவாய்த் தேக்கி
மெல்லெனக் காலிற் போகிப் பணைதொறும் விளையாட் டெய்தி. (௮)

அரம்பைமென் குறங்கா மாவி னவிர்தளிர் நிறமாத் தெங்கின்
குரும்பைவெம் முலையா வஞ்சிக் கொடியிறு நுசுப்பாக் கூந்தல்
சுரும்பவிழ் குழலாக் கஞ்சஞ் சுடாமதி முகமாக் கொண்டு
நிரம்பிநீள் கைதை வேலி நெய்தல்சூழ் காவில் வைகி. (௯)

பன்மலர் மாலை வேய்ந்து பானுரைப் போர்வை போர்த்துத்
தென்மலைத் தேய்ந்த சாந்த மான்மதச் சேறு பூசிப்
பொன்மணி யாரந் தாங்கிப் பொருநையாங் கன்னி முந்நீர்த்
தன்மகிழ் கிழவ னாகந் தழீஇக்கொடு கலந்த தன்றே. (௧௦)

வல்லைதா யிருபால் வைகுஞ் சிவாலய மருங்கு மீண்டி
முலலையா னைந்துந் தேனுந் திரைக்கையான் முகந்து வீசி
நல்லமான் மதஞ்சாந் தப்பி நறுவிரை மலர்தூய் நீத்தஞ்
செல்லலாற் பூசைத் தொண்டின் செயல்வினை மாக்கள் போலும். (௧௧)

அரும்பவிழ் பூனங்க வாளி யலைதர வாகம் பொன்போர்த்
திரங்கிவா லன்ன மேந்தி யிருகையுஞ் சங்கஞ் சிந்தி
மருங்குசூழ் காஞ்சி தள்ளி வரம்பிற வொழுகும் வாரி
பரம்பரற் கையம் பெய்யும் பார்ப்பன மகளிர் போலும். (௧௨)

வரைபடு மணியும் பொன்னும் வைரமுங் குழையும் பூட்டி
யரைபடு மகிலுஞ் சாந்து மப்பியின் னமுத மூட்டிக்
கரைபடு மருத மென்னுங் கன்னியைப் பருவ நோக்கித்
திரைபடு பொருநை நீத்தஞ் செவிலிபோல் வளர்க்கு மாதோ. (௧௩)

மறைமுதற் கலைக ளெல்லா மணிமிடற் றவனே யெங்கு
நிறைபர மென்றும் பூதி சாதன நெறியீ டென்றும்
அறைகுவ தறிந்துந் தேரு ரறிவெனக் கலங்கி யந்த
முறையின்வீ டுணர்ந்தோர் போலத் தெளிந்தது மூரி வெள்ளம். (கச)

மறைவழி கிளைத்த வெண்ணெண் கலைகள்போல் வருநீர் வெள்ளந்
துறைவழி யொழுகும் பலகால் சோலைதன் பழனஞ் செய்தேன்
உறைவழி யோடை யெங்கு மோடிமன் றுடையார்க் கன்பர்
நிறைவழி யாத வுள்ளத் தன்புபோ னிரம்பிற் றன்றே. (கரு)

வேறு.

இழிந்த மாந்தர்கைப் பொருள்களு மிகபரத் தாசை
கழிந்த யோகியர் கைப்படிற் றூயவாய்க் களங்கம்
ஒழிந்த வாறு* போ லுவரியுந் தெ கெடுத் தெழிலி
பொழிந்த நீரமு தாயின புவிக்கும்வா னவர்க்கும். (கசா)

சறிவாதவ னொருத்தியே யைந்தொழி லியற்ற
வேறு வேறுபேர் பெற்றென வேலைநீ ரொனறே
ஆறு காலகுளங் கூவலகுண் டகழ்கிடங் கெனப்பேர்
மாறி யீறிலவான் பயிரெலாம் வளர்ப்பது மாதோ. (கஎ)

வேறு.

களமர்கள் பொனனேர் பூட்டித் தாயாவாய்க் கனிந்த பாடற்
குளமகிழ் சிறுரி னேறு மொருத்தலு முவகை தூங்க
வளமலி மருதம் பாடி மனவலி கடந்தோர வென்ற
அளமரு † பொறிபோ லேவ லாற்றவாள் வினையின் மூண்டார். (கஅ)

பலமற மணிகோத் தென்னப் பன்னிற வேறு பூட்டி
அலமுக விரும்பு தேய வாள்வினைக் கருங்கான் மள்ளர்
நிலமக ளுடலங் கீண்ட சால்வழி நிமிர்ந்த சோரிச்
சலமென நிவந்த செஙகேழ்த் தழனமணி யிமைக்கு மன்னே. (ககூ)

ஊறுசெய் படைவாய் தேய வுழுநரு நீர்கால் யாத்துச்
சேறுசெய் குநருந் தெய்வந் தொழுதுநீஞ் செந்நெல் வீசி
நாறுசெய் குநரும் பேர்த்து நடவுசெய் குநருந் தெவ்வின்
மாறுசெய் களைகட் டோம்பி வளம்படுக் குநரு மானூர். (உ0)

பழிபடு நறவந் தன்னைக் கடைசியர் பருகிச் செவ்வாய்
மொழிதடு மாற வேர்வை முகத்தெழ முறுவ ரூன்ற
விழிசிவந் துழலக் கூந்தன் மென்றுகில சோர வுள்ளக
கழிபெருங் களிப்பு நலகிக் கலந்தவ ரொத்த தன்றே. ‡ (உக)

பட்பகை யாருந் தீஞ்சொற் கடைசியர் பவளச் செவ்வாய்க்
குட்பகை யாம்ப லென்று மொண்ணறுங் குவளை நீலங்
கட்பகை யாகு மென்றுங் கமலமென் முகத்துக் கெனறுந்
திட்பகை யாகு மென்றுஞ் செறுதல்போற் களைதல் செய்வார். (உஉ)

கடைசியர் முகமுங் காலுங் கைகளுங் கமல மென்னார்
படைவிழி குவளை யென்னார் பவளவாய் குமுத மென்னார்
அடையவுங் களைந்தார் மள்ளர் பகைஞரா யடுத்த வெலலை
உடையவ னுணை யாற்று லொறுப்பவாக் குறவுண் டாமோ. (உங)

* ஒழிந்தவாறு - தெளிவுபற்றி இறந்தகாலமாயிற்று. † அளமரு-அலமரு போலி. ‡ நறவம் நல்கி, கலந்தவரை ஒத்ததென்க. நல்கி - நலஇனமையால்.

புரையற வுணர்ந்தோர் நூலின் பொருளினுள் ளடங்கி யந்நூல்
வரையறை கருத்து மான வளர்கருப் புறம்பு தோன்றிக்
கரையமை கல்வி சாலாக் கவிஞரோ விறுமாந் தந்நூல்
உரையென விரிந்து கற்பின் மகளிர்போ லொசிந்த தன்றே. (௨௪)

அன்புறு பத்தி வித்தி யார்வநீர் பாய்ச்சுந தொண்டாக்
கின்புரு வான வீச னின்னருள் விளையு மாபோல்
வன்புறு காங்கான் மள்ளர் வைகலுஞ் செய்வி நோக்கி
நன்புல முயன்று காக்க விளைந்தன நறுந்தண் சாலி. (௨௫)

அகனில வேறு பாட்டி னியல்செவ்வி யறிந்து மள்ளா
தகவினை முயற்சி செய்யக் காமநூல் சாற்று நான்கு
வகைநலா பணபு செவ்வி யறிந்துசோ மைந்தர்க் கின்பம்
மிகவிளை போகம் போன்று விளைந்தன பைங்கூ ழெல்லாம். (௨௬)

கொடும்பிறை வடிவிற் செய்த கூனிரும் பங்கை வாங்கி
முடங்குகால் வரிவண் டாரப்ப முள்ளரைக் கமல நீலம்
அடங்கவெண் சாலி செந்நெல் வேறுவே றரிந்தி டாக்கி
நெடுங்களத் தம்பொற் குன்ற நிரையெனப் பெருமபோர் செய்து (௨௭)

கற்றைவை களைந்து தூற்றிக் கூப்பியூர்க் காணித் தெய்வம்
அற்றவர்க் கற்ற வாறீந் தளவைகண் டாறி லொனறு
கொற்றவர் கடமை கொள்ளப் பண்டியிற் கொடுபோய்த் தென்று
லொற்றவர் சுற்றந் தெய்வம் விருந்தினாக் கூட்டி யுண்பார். (௨௮)

சாறடு கட்டி யெள்ளுச் சாமைகொள் ளிறுங்கு தோரை
ஆறிடு மதமால் யானைப் பழுக்குலை *யவரை யேனல
வேறுபல் பயறு டினன புன்னில விளைவு மற்றும்
ஏறுடு பண்டி யேற்றி யிருநிலங் கிழிய வுய்ப்பாா. (௨௯)

நாறவின ரீச னேசத் தொண்டினர் பசிக்கு நல்லூண்
டிறவினைப் பிணிக்குத் தீாககு மருந்துடற் பனிப்புக் காடை
உறைவிடம் பிறிது நல்கி யவரவ ரொழுகிச் செய்யும்
அறவினை யிடுக்க ணீக்கி யருங்கதி யுயக்க வல்லாா. (௩௦)

நிச்சலு மீச னன்பர் நெறிப்படிற் சிறார்மேல் வைத்த
பொச்சமி லன்பு மன்னா புதல்வரைக் கண்டா லன்ன
அச்சமுங் கொண்டு கூசி யடிபணிந் தினிய கூறி
இச்சையா றொழுகி யுள்ளக் குறிப்பறிந் தேவல செய்வாா. (௩௧)

நறைபடு கனிதேன் றோய்த்த பாலொடு நறுநெய் வெள்ள
நிறைபடு செம்பொன் வண்ணப் புழுக்கலா னிமிர்ந்த சோறு
குறைவற வுண்டு வேண்டும் பொருள்களுங் கொண்டி னனன
மறைமுத லடியார் தம்மை வழிமறித் தருந்து வாாகள். (௩௨)

பின்னெவ னுவமை பகர்தப் பெருந்தமிழ் நாடாங் கன்னி
தன்னிடை யூர்க ளென்னு மவயவந் தாஙகச் செய்த
பொன்னியற் கலனே கோயின் மடமறப் புறநீர்ச் சாலை
இன்னமு தருத்து சாலை யெனவுருத் திரிந்த தம்மா (௩௩)

* யானைப்பழுககுலை - யானைமுகம்போன்ற முத்த வாழைககுலை.

திணை மயக்கம்.

இன்ற டம்புனல் வேலிசூ ழிந்நில வரைப்பிற்
குன்ற முல்லைகள் ணைநெய்தல குலத்திணை நானகும்
மன்ற வுள்ள வைகிற்க மயங்கிய மரபின்
ஒன்றொ டொன்றுபோய் மயங்கிய திணைவகை யுரைப்பாம். (௧௪)

கொல்லை யானிரை மேய்ப்பவர் கோழிணர்க் குருந்தின்
ஒல்லை தாயதிற் படர்கறிக் கருந்துண ருகுப்ப
முல்லை சோறெனத் தேன்விராய முத்திழை சிற்றில
எல்லை யாயமோ டாடிய வெயின்சிறு மகளிர. (௧௫)

கன்றொ டுங்களி வண்டுவாய் நக்கவீர்ங் கரும்பு
மென்று பொன்சொரி வேங்கைவா யுறங்குவ மேதி
குன்றி ளந்தினை மேய்ந்துபூங் கொழுநிழன் மருதஞ்
சென்று றங்குவ சேவக மெனமுறச் செவிமா. (௧௬)

எற்று தெண்டிரை யெறிவளை யெயிற்றிய ரிழைத்த
சிற்றில் வாய்நுழைந் தழிப்பவச் சிறுமியர வெகுண்டு
பற்றி லாரெனச் சிதறிய மணவணி பரதர
முற்றி லாமுலைச் சிறுமியர முத்தொடுங் கோபர. (௧௭)

முல்லை வண்டுபோய் முல்லையாழ் முளரிவாய் மருதம்
வல்ல வண்டினைப் பயிற்றிப்பின் பயில்வன மருதங்
கொல்லை யான்மடி யெறிந்திளங் குழவியென் றிரங்கி
ஒல்லை யூற்றுபால் வெள்ளத்து ளுகள்வன வாளை. (௧௮)

கருமபாற் கோட்டிளம் புன்னைவாய்க் கள்ளுண்டு காளைச்
சுரும்பு செவ்வழிப் பாண்செயக் கொன்றைபொன் சொரிவ
வருந்த டங்கடல வளையெடுத் தாழியான் கையில
இருந்த சங்கென விறைகொளப் பூவைமே லெறிவ. (௧௯

ழிந்த தெங்கின்றெண் பழம்பரீஇ முட்பலாக் கனிகீண்
டழிந்த தேனுவர்க் கேணிபாய்ந் தகற்றுவ வுவரை
வழிந்த தேனமடற் கேதகை மலர்நிழல குருகென்
றொழிந்த தாமரைப் போதுபுக் கொளிப்பன கெண்டை. (௨௦)

ஆறு சூழ்கழிப் புலால்பொரு தசைந்துகூன் கைதை
சோறு கால்வன வாம்பல்வாய் திறப்பன துணிந்து
கூறு வாரெனக் குவளைகண் காட்டிடக் கூடித்
தூறு வாரெனச் சிரித்தலர தூற்றுவ முல்லை. (௨௧)

துள்ளு சேல்விழி நுளைச்சியர் சுறவொடு மருந்தக்
கள்ளு மாறவுங் கூனலங் காய்தினை யவரை
கொள்ளு மாறவுங் கிழங்குதேன் கொழுஞ்சுவைக் கன்னல்
எள்ளு மாறவு மளப்பன விடைக்கிடை முத்தம். (௨௨)

அவமி கும்புலப் பகைகடந் துயிர்க்கெலா முன்பாம்
நவமி குங்குடை நிழற்றிமெய்ச் செய்யகோ னடாத்திச்
சிவமி கும்பர ஞானமெய்த் திருவொடும் பொலிந்து
தவமி ருந்தர சாள்வது தண்டமிழ்ப் பொதியம். (௨௩)

---

* மயங்கியமரபின - அநுலோமா பிரதிலோமா முதலிய மரபினர்போல.

வான யாறுதோய்ந் துயரிய மலயமே முக்கண்
ஞான நாயக னம்மலை போர்த்தகார் நால்வாய்.
ஆனை யீருரி யம்மலை யசும்பதன் புண்ணீர்
கூனல் வான்சிலை குருதிதோய் கோடுபோன் றன்றே. (௪௪)

சுனைய கஞ்சுரைச் சூழல்வாய்ச் சுரும்புசூழ் கிடப்ப
நனைய விழ்ந்தசெங் காந்தண்மே லுகிள வேங்கைச்
சினைய விழ்ந்தவீ கிடப்பபொன் ரெய்கலத் தெண்ணீர்
அனைய பொன்சுடு நெருப்பொடு கரியிருந் தனைய. (௪௫)

குண்டு நீரப்படு குவளைவாய்க் கொழுஞ்சினை மரவம்
வண்டு கூப்பிடச் செம்மறாய்ப் புதுமது வார்ப்ப
அண்டர் வாய்ப்பட மறைவழி பொரிசொரிந் தானெய்
மொண்டு வாக்கிமுத் தீவினை முடிப்பவ ரனைய. (௪௬)

அகிலு மாரமுந் தழன்மடுத் தகழ்ந்தெறிந தழல்கால்
துகிரு மாரமுந தொட்டெறிந் தைவனந் தூவிப்
புகரின் மாலகரி மருப்பினால் வேவிகள் போக்கி
இகலில் வான்பயி ரோம்புவ வெயினர்தஞ் சீறூர். (௪௭)

அண்ட வாணருக் கின்னமு தருத்துவோர் வேள்விக்
குண்ட வாரழற் கொழும்புகை கோலுமக் குன்றிற
புண்ட வாதவே விறவுளர் புனத்தெரி மடுப்ப
உண்ட காரகிற் றூமமு மொக்கவே மயங்கும். (௪௮)

கருவி வான்சொரி மணிகளுங் கழைசொரி மணியும்
அருவி கான்றபன் மணிகளு மகன்றலை நாகத்
திரவி கான்றசெம் மணிகளும் புனங்கவ ரினமான்
குருவி வீழ்ந்திடக் கொடிச்சியர் கோத்தெறி கவண்கல. (௪௯)

மாய வன்வடி வாயது வையமா லுந்திச்
சேய பங்கய மாயது தென்னனா டலர்மேற்
போய மென்பொகுட் டாயது பொதியமப் பொகுட்டின்
மேய நான்முக னகத்தியன முத்தமிழ் வேதம். (௫0)

ஏக மாகிய மேருவும் பொதியமே யிரும்பொன்
ஆகு மேருவைச் சூழ்ந்தசாம் பூநத யாறும்
நாக ராடுதண் பொருநையே நாவலா றுடுத்த
போக பூமியும் பொருநைசூழ் பூமியே போலும். (௫௧)

சிறந்த தண்டமி ழாலவாய் சிவனுல காகப்
புறந்த யங்கிய நகரெலாம் புரந்தர னபிரமன
மறந்த யங்கிய நேமியோ னாதிய வீரனோர்
அறந்த யங்கிய வுலகுரு வானதே யாகும். (௫௨)

வளைந்த நுண்ணிடை மடந்தையர் வனமுலை மெழுகிக்
கவிந்த குங்குமக் கலவையுங் காசறைச் சாந்தும
அளைந்த தெண்டிரைப் பொருநையோ வங்கதி ஞாங்கா
விளைந்த செந்நெலுங் கன்னலும் வீசுமவ் வாசம. (௫௩)

பொதியி லேவிளை கின்றன சந்தனம் பொதியின்
நதியி லேவிளை கின்றன முத்தமந் நதிசூழ்
பதியி லேவிளை கின்றன தருமமப் பதியோர்
மதியி லேவிளை கின்றன மறைமுதற் பத்தி. (௫௪)

கடுக்க வின்பெறு கண்டனுந் தென்றிசை நோக்கி
அடுக்க வந்துவந் தாடுவா னாடலி னிளைப்பு
விடுக்க வாரமென் காலிரு முகத்திடை வீசி
மடுக்க வந்தமிழ் திருச்செவி மாந்தவு மன்றே. (௫௫)

விடையு கைத்தவன் பாணினிக் கிலக்கண மேனாள்
வடமொ ழிக்குரைத் தாங்கியன் மலயமா முனிக்குத்
திடமு றுத்தியம் மொழிக்கெதி ராக்கிய தென்சொல்
மடம கட்கடய கணபது வழுதிநா டன்றே. (௫௬)

கண்ணு தற்பெருங் கடவுளுங் கழகமோ டமர்ந்து
பண்ணு றத்தெரிந் தாய்ந்தவிப் பசுந்தமி ழேனை
மண்ணி டைச்சில விலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணி டைப்படக் கிடந்ததா வெண்ணவும் படுமோ. (௫௭)

தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்ததும் முதலை
உண்ட பாலனை யழைத்தது மெலும்புபெண் ணுருவாக்
கண்ட தும்மறைக் கதவினைத் திறந்ததுங் கன்னித்
தண்ட மிழ்ச்சொலோ மறுபுலச் சொற்களோ சாற்றீர். (௫௮)

வெம்மை யால்விளை வஃகினும் வேந்தர்கோல் கோடிச்
செம்மை மாறினும் வறுமைநோய் சிதைப்பினுஞ் சிவன்பாற்
பொய்ம்மை மாறிய பத்தியும் பொலிவுகுன் றுவாய்த்
தம்மை மாறியும் புரிவது தருமமந் நாடு. (௫௯)

உலகம் யாவையு மீன்றவ ளும்பரு ளுயர்ந்த
திலக நாயகி பரஞ்சுடர் சேயென மூன்று
தலைவ ரான்முறை செய்தநா டஃதன்றிச் சலதி
சுலவு பாரினுண் டாகுமோ துறக்கத்து மஃதே. (௬௰)

நாட்டுச்சிறப்பு முற்றிற்று.

ஆக திருவிருத்தம் - ௬௧.

நகரச்சிறப்பு

மங்க லம்புனை பாண்டிநா டாகிய மகட்குச்
சங்க லம்புகை தோளிணை தடமுலை யாதி
அங்க மாம்புறந் தழுவிய நகரெல[illegible]ரய
நங்கை மாமுக மாகிய நகர்வளம் பகர்வாம். (௧)

கொங்கை யேபரங் குன்றமுங் கொடுங்குன்றுங் கொப்பூழ்
அங்க மேதிருச் சுழியலவ் வயிறுகுற் றாலம்
செங்கை யேடக மேனியே பூவணந் திரடோள்
பொங்கர் வேய்வனந் திருமுக மதுரையாம் புரமே. (௨)

வடிவினை மாநில மடந்தைமார் பிடைக்கிடந் திமைக்கப்
படிவி லாரமே பாண்டிநா டாரமேற் பக்கத்
திடுவின மாமணி யந்தபுற நகரெலா மிவற்றுள்
நடுவி னாயக மாமணி மதுரைமா நகரம். (௩)

திரும கட்கொரு தாமரைக் கூடமே திருமான
மரும கட்குவெண் டாமரை மாடமே ஞானத்
தரும கட்கியோ கத்தனிப் பீடமே தரையாம்
பெரும கட்கணி திலகமே யானதிப் பேரூர். (௪)

திக்கும் வானமும் புதையிரு டின்றுவெண் சோதி
கக்கு மாளிகை நிரைப்புறு காட்சிய நகருள்
மிக்க வாலிதழ்த் தாமரை வெண்மக ளிருக்கை
ஒக்கு மல்லது புகழ்மக ளிருக்கையு மொக்கும். (௫)

புடைநகர்.

பொறக ரும்பெனக் கரும்பெலா நெடுங்கமு கென்ன
வாக்க வான்கமு கொலிகலித் * தெங்கென வளர்ந்த
பொற்க வின்குலைத் தெங்குகாய்ப் பந்தரைப் பொறுத்து
நிற்க நாட்டிய காலென நிவந்ததண் பணையே. (௬)

சிவந்த வாய்க்கருங் கயற்கணாள் வலாரியைச் சீறிக்
கவர்ந்த வான்றருக் குலங்களே கடிமணம் வீசி
உவந்து வேறுபல பலங்களும் வேண்டினார்க் குதவி
நிவந்த காட்சியே போன்றது நிழன்மலர்ச் சோலை. (௭)

ஒல்லொ லிக்கதிர்ச் சாலிகள் புறந்தழீஇ யோங்க
மெல்லி லைப்பசுங் கொடியினால் வீக்குறு பூகம்
அல்லெ லுங்களத் தண்ணற னணிவிழாத் தருப்பைப்
புல்லொ டேபிணிப் புண்டபொற் கொடிமரம் போலும். (௮)

சீத வேரியுண் டளிமுரல் கமலமேற் செருந்தி
போத வேரியு மலர்களுஞ் சொரிவன புத்தேள்
வேத வேதியர் செங்கரம் விரித்துவாய் மனுக்கள்
ஓத வேமமு முதகமு முதவுவா ரனைய. (௯)

விரைசெய் பங்கயச் சேக்கைமேற் பெடையொடும் விரவி
அரச வன்னங்கண் மணஞ்செய வம்புயப் பொய்கை
திரைவ ளைக்கையா னுண்டுளி செறிந்தபா சடையாம்
மரக தக்கலத் தரளநீ ரானசன மளிப்ப. (௧௦)

இரும்பி னன்னதோள் வினைஞரார்த் தெறிந்துவாய் மடுக்கும்
கரும்பு தின்றிடி யேற்றொலி காட்டியின் சாறு
சுரும்பு சூழ்கிடந் தரற்றிடச் சொரிந்துவெஞ் சினத்தீ
அரும்பு கட்களி றொத்தன வாலையெந் திரங்கள். (௧௧)

பள்ள நீர்குடைந் தஞ்சிறைப் பாசிபோர்த் தெழுந்த
வெள்ளை யன்னத்தைக் காரன மெனப்பெடை வீழ்ந்த
உள்ள மீட்டல மரச்சிறை குதறியுள் ளன்பு
கொள்ள வாசையிற் றழீஇக்கொடு குடம்பைசென் றணையும். (௧௨)

* ஒலிகலித்தெங்கு - மிக்க தழைத்தலையுடைய தெங்கு.

இரவி யாழியொன் றுடையதே ரீத்தெழு மிமையாப்
புரவி நாகிமீத் தயில்வன பொங்கர்வாய்த் தளிர
கரவி லாமகத் தெழுபுகை கற்பக நாட்டிற்
பரவி வாட்டுக பனியெனப் பங்கயப் பொய்கை (கங)

இடைநகர்.

பிறங்கு மாலவா யகத்துளெம் பிரானரு ளால்வந்
தறங்கொ டேர்த்தமா வெழுகட லமர்ந்தவா நோக்கிக்
கறங்கு தெண்டிரைப் பெரும்புறக் கடலும்வந் திவ்வூர்ப்
புறங்கி டந்ததே போன்றது புரிசைசூழ் கிடங்கு. (கச)

எறியும் வாளையு மடிக்கடி யெழுந்துடல் பரப்பிப்
பறியு மாடை.. வாளொடு கேடகம் பற்றிச்
செறியு நாண்மல ரகழியுஞ் சேணொடு புரிசைப்
பொறியு மேயொன்றி யுடனறு போர் புரிவன போலும். (கரு)

கண்ணி லாதவெங் கூற்றெனக் கராங்கிடந் தலைப்ப
மண்ணி லுறவேர வேறுமிம் மதிலிடை வீழ்ந்தோர்
தெண்ணி லாமதி மிலைந்தவர்க் கொப்பெனச் சிலரை
எண்ணி லூரிரு ணரகநீத் தேறினு மேரூர். (கசு)

குமிழ லர்ந்தசெங் தாமரைக் கொடிமுகிழ் கோங்கின்
உமிழ்த ரும்பர ஞானமுண் டுமிழ்ந்தவாய் வேதத்
தமிழ றிந்துவை திகமுடன் சைவமு நிறுத்தும்
அமிழ்த வெண்டிரை வைகையு மொருபுறத் தகழாம். (கஎ)

பிள்ளை யும்பெடை யன்னமுஞ் சேவலும் பிரியாக்
கள்ள முண்டகச் செவ்வியாற் கண்டவா கண்ணும்
உள்ள முந்திரும் பாவகை சிறைப்படுத் தோங்கும்
புள்ள லம்புதண் டிடங்கிது புரிசையைப் புகல்வாம். (கஅ)

மாக முந்திய கடிமதின் மதுரைநா யகர்கைந்
நாக மென்பதே தேற்றமந் நகாமதில விழுங்கி
மேக நிறைசை கின்றதவ வெஞ்சினப் பணிதன்
ஆக மொன்றுதோ லுரிபட நெளிவதே யாகும். (ககூ)

புரங்க டந்தபொற் குன்றுகோ புரமெனச் சுருதிச்
சிரங்க டந்தவர் தென்னரா யிருந்தனா திருந்தார்
உரங்க டந்திட வேண்டினு முதவிசெய் தவரால்
வரங்க டந்திடப் பெறவெதிா நிற்பது மானும். (உ0)

சண்ட பானுவுந் திங்களுந் தடைபடத் திசையும்
அண்ட கோளமும் பரந்துநீண் ட...றகோ புர...
விண்ட வாயிலால வழங்குவ லிடவரா வங்காந்
துண்ட போல்பவு முமிழ்வன போல்பவு முழலா. (உக)

மகர வேலையென் றியானைபோன் மழையருந் தகழிச்
சிகர மாலைசூ ழம்மதி றிரைக்கரந் துழாவி
அகழ வோங்குநீர் வைகையா லல்லது வேற்றுப்
பகைவர் சேனையார் ...ாரப்படும் பாலதோ வன்றே. (உஉ)

எல்லை தேர்வழித் தடைசெயு மிம்மதிற் புறஞ்சூழ்ந்
தொல்லை மேவுலா வளைந்துழி யுடனறுபோ ராற்றி
வெல்ல யன்னாரும் வேண்டுமோ பொறிகளை வெல்ல
வல்ல வம்மதிற் பொறிசெயு மறஞ்சிறி துரைப்பாம். (௨௩)

வேறு.

மழுக்கள் வீசுவன நஞ்சு பூசுமுனை வாள்கள் வீசுவன முத்தலைக்
கழுக்கள் வீசுவன குந்த நேமியெரி கால வீசுவன காலனேர்
எழுக்கள் வீசுவன கப்ப ணங்கள்விட மென்ன வீசுவன வன்னெடுங்
கொழுக்கள் வீசுவன கற்க வணைகயிறு கோத்து வீசுவன வார்த்தரோ. (௨௪)

நஞ்சு பில்குதுளை வாளெ யிற்றரவு நாகிமாத தெறியு மலையரா
வெஞ்சி னங்கொணமுழை வாய்தி றந்துபொரு வாரை விக்கிட விழுங்குமாற்
குஞ்ச ரங்கொடிய முசலம் வீசியெதி ரா குறுகு வாரதலைகள் சிதறுமால
அஞ்சு வெம்பொறி விசைப்பி னுகைகடுங் கயடுபு லிப்பொறி யமுக்குமால். (௨௫)

எள்ளி யேறுநரை யிவுளி மார்பிற வெறிந்து குண்டகழி யிடைவிழத்
தள்ளி மீளுமுருள் கலவி ருப்புமுளை தந்து வீசியுடல சிந்துமாற்
கொள்ளி வாயலகை வாய்தி றந்துகனல் கொப்பு ளிப்பவுடல் குப்புறத்
துள்ளி யாடுவன கைகள் கொட்டுவன தோள்பு டைப்பசில கூளியே. (௨௬)

துவக்கு சங்கிலி [illegible]ந்தி ழுக்குமரி தொடர்பி டித்தகை யறுக்கவிட்
டுவக்கு மொன்னலர்க டலைக ளைத்திருகி யுடனெ ருக்குமர நிலைகளாற்
கவைக்கொ ழுந்தழல் கொளுத்தி வீசுமெதி கல்லு ருட்டியடு மொல்லெனக்
குவைக்க டுங்கன்மழை பெயயு மட்டமணல கொட்டு மேவலர்கள் கிட்டவே. ()

உருக்கி யீயமழை பெய்யு மாலய வுருக்கு வட்டுருகு செம்பினீர்
பெருக்கி வீசும்விடு படையெ லாமெதிர் பிடித்து விட்டவர் தமைத்தெறச்
செருக்கி வீசுநடை கற்ற மாடமொடு சென்று சென்றுதுடி முரசொடும்
பெருக்கி மீளுநடை வைய மேனடவி யெய்யும் வாளிமழை பெய்யுமால். (௨௮)

வெறிகொ ளைம்பொறியை வெல்லி னும்பொருது வெலலு தற்கரிய காலனை
முறிய வெல்லினும் வெலற்க ருங்கொடிய முரண வாயமர ரரணெலாம்
அறிவி னுணிறுவு கம்மி யனசெயவு மரிய வாயவனா புரியுமிப்
பொறிகள் செய்யும்வினை யின்ன பொன்னணி புரத்து வீதிக ளுரைத்துமால். ()

அகநகர்.

கழையுந் தாமமுஞ் சுண்ணமு மணிநிழற் கலனுங
குழையுந் தூபமுந் தீபமுங் கும்பமுந் தாங்கித்
தழையுங காதலர் வரவுபார்த் தன்பகந் ததும்பி
விழையுங் கற்பினு ரோத்தன விழாவறா வீதி. (௩0)

ஆல நின்றமா மணிமிடற் றண்ணலா னந்தக்
கோல நின்றசே வடிநிழல் குறுகினோர் குணம்போல்
வேலை நின்றெழு மதியெதிர் வெண்ணிலாத் தெண்ணீர்
கால நின்றன சந்திர காந்தமா ளிகையே. (௩௧)

குன்ற நேர்பளிக் குபரிகை நிரைதொறுங் குழுமி
நின்ற பல்சரா சரமுமங் கீழல்வாய் வெள்ளி
மன்ற கம்பொலிந் தாடிய மலரடி நிழல்புக்
கொன்றி யொன்றறக் கலந்தபல் லுயிர்நிலை யனைய. (௩௨)

கறித்த ருந்துபுற் குவைகழீஇக் காற்றொடோர் பரிய்த்
தெறித்த கன்றயன் மரகதச் சித்திரத் தெற்றி
எறித்த பைங்கதிர்க் கொழுந்தையு மெட்டிநா வளைத்துப்
பறித்த துமென்று வாயசைப்பன பசலையான் கன்று. (கங)

சிறுகு கண்ணவாய்க் கூற்றெறி செவியவாய்ப் பாசம
இறுகு காலவாய்க் கோட்டுமோ னினம்வழங் காறுங
குறுகு நுண்மருங் கிறுத்தெழு கோட்டுமோ னினம்போம்
மறுகும் வண்டுசூழ்க் கிறைகொளா மான்மத நாறும். (கச)

மாட மாலையு மேடையு மாளிகை நிரையும்
ஆட ரங்கமு மன்றிவே ளன்னவா முடியும்
ஏட விழ்ந்ததா ரகம்பமு பிணைத்தடந் தோளுஞ்
சூடு மாகரார் சிறடிப் பஞ்சுதோய் சுவடு. (கரு)

[illegible]ருமச் செம்புன லாறிட மாறுகோ டுப்
பருமச் செங்கண்மால் யானையின பணைக்கையு மறைநூல்
அருமைச் செம்பொரு ளாய்ந்தவாக் கரும்பொரு ளீவோர
தருமச செங்கையு மொழுகுவ தானநீ ராறு. (கசா)

பரிய மாமணி பத்தியிற் பதித்திருட் படலம்
பொரிய வில்விடக் குயிற்றிய பொன்னர மியமுந்
தெரிய மாமுர சொலிகெழு செம்பொனு டரங்கும்
அரிய மின்பயோ தரஞ்சுமந் தாடுவ கொடிகள். (கஎ)

வலம்ப டும்புயத் தாடவர் மார்பமேற் புலவிக்
கலம்ப டார்ந்தபூண் முலையினார் காலெடுத் தோச்சச்
சிலம்ப லம்பிசை மழுங்கமுன னெழுமவர் தேந்தார்ப்
புலம்பு வண்டுநொந் தரற்றிய பொங்குபே ரொலியே. (கஅ)

தைய லார்மதி முகங்களுந் தடங்களுங் குழைய
மைய ளாவிய விழிகளு மாடமுங் கொடிய
கையு நாண்மலாப் பொதும்பருங் கறங்கிசை வண்ட
நெய்ய வோதியும் வீதியு நீளற னெறிய. (ககூ)

மலருந் திங்கடோய் மாடமுஞ் செய்வன மணங்கள்
அலருந் தண்டுறை யுங்குடைந் தாடுவ தும்பி
சுலவுஞ் சோலையு மாதருந் தூற்றுவ வலாகள்
குலவும் பொய்கையு மனைகளுங் குறைபடா வண்ணம். (உ0)

ஊடி னோரெறி கலன்களு மம்மனை யுடன்பந்
தாடி னார்பரி யாரமு மடியினாற் சிற்றில
சாடி னோரொடு வெகுண்டுகண் டதும்புமுத் திறைப்ப
வாடி னார்பரி நித்தில மாலையுங் குப்பை. (உக)

ஐய வென்னுரை வரம்பின வாகுமோ வடியார்
உய்ய மாமணி வரிவளை விறகுவிற் றுழன்றோன்
பொய்யில் வேதமுஞ் சுமந்திடப் பொருதகன் றரற்றுஞ்
செய்ய தாண்மலர் சுமந்திடத் தவஞ்செய்த தெருக்கள். (உஉ)

வேறு.

தோரண நிரைமென் காஞ்சி சூழ்நிலை நெடுந்தே ரல்குற்
பூரண கும்பக் கொங்கைப் பொருவின்மங் கலமா டங்கை
தாரணிந் தாரந் தூக்கிச் சந்தகி றிமிர்ந்து பாலிச்
சீரணி முளைவெண் மூரல் செய்துவீற் றிருக்கு மன்றோ. (௪௩)

இங்கலிச சுணணஞ் செயது சேறுசெய் தூட்டி யன்ன
பொங்குவெண் மாடப் பந்தி புண்ணியம் பூசுந் தொண்ட
தங்கண்மெய் வேடந் தன்னைத் தரித்தன சாலக் கண்கொண்
டங்கணன் விழவு காண்பா னடைந்தென மிடைந்த வன்றே. (௪௪)

தேரொலி கலினப் பாய்மான் சிரிப்பொலி புரவி பூண்ட
தாரொலி கருவி யைந்துந் தழங்கொலி முழங்கு கைம்மான்
பேரொலி யெல்லா மொன்றிப் பெருகொலி யன்றி யெலாறுங்
காரொலி செவிம டாது கடிமணி மாடக் கூடல். (௪௫)

பரத்தையர் வீதி.

இழிபவ ருயர்ந்தோர் மூத்தோ ரிளையவர் கழியா நோயாற்
கழிபவர் யாவ ரேனுங் கண்வலைப் பட்டு நெஞ்சம்
அழிபவர் பொருள்கொண் டெள்ளுக் கெணணெய்போ லளந்து காட்டிப்
பழிபடு போகம் விற்பா ராவணப் பண்பு சொல்வாம். (௪௬)

மெய்படு மன்பி னோர்போல் விரும்பினோர்க் கருத்துந் தங்கள்
பொய்படு மின்பம் யார்க்கும் புலப்படத் தேற்று வார்போல்
மைபடு கண்ணார் காமன் மறைப்பொருள் விளங்கத் தீட்டிக்
கைபடச் சுவராய்த் தோன்றச் சித்திரங் காணச் செய்வார். (௪௭)

திருவிற்கான் மணிப்பூ ணாகம் பலகையாத் தெண்முத் தார
அருவிக்கால் வரைமென் கொங்கைச் சூதொட்டி யாடி வென்று
மருவிக்கா முகரைத் தங்கள் வடிக்கண்வேன் மார்பந் தைப்பக்
கருவிச்சூ தாடி வென்றுங் கைப்பொருள் கவர்தல் செய்வார். (௪௮)

தண்பனி நீரிற் றோய்த்த மல்லிகைத் தாம நாற்றி
விண்படு மதியந் தீண்டும் வெண்ணிலா முற்றத் திட்ட
கண்படை யணைமேற் கொண்டு காமனுங் காமுற் றெயதப்
பண்பல பாடி மைந்த ராவியைப் பரிசில் கொள்வார். (௪௯)

சுரும்பைவெம் முலையிற் சிந்து சாந்தமுங் குழலிற் சிந்தும்
அரும்பவிழ் மாலைத் தாது மளிநுகர்ந் தெச்சி லாகிப்
பொரும்பரிக் காலிற் றூளாய்ப் போயர மாதிர் மெய்யும்
இருங்குழற் காடுஞ் சூழ்போ யியன்மணம் விழுங்கு மன்றோ. (௫0)

ஆலவா யுடையா னென்று மங்கயற் கண்ணி யென்றுஞ்
சோலைவாழ் குயிலி னல்லார் சொல்லியாங் கொருங்கு சொல்லும்
பாலவாங் கிளிகள் பூவை பன்முறை குரவ னோதும்
நூலவாய்ச் சங்கீத கூட்டி நுவன்மறைச் சிறுரை யொத்த. (௫௧)

ஔவிய மதர்வேற் கண்ணா ரந்தளிர் விரன டாத்துந்
திவ்விய நரம்புஞ் செவ்வாய்த் தித்திக்கு மெழாலுந் † தம்மிற்
கௌவிய நீர வாகிக் காளையர் செவிக்கா லோடி
வெவ்விய காமப் பைங்கூழ் விளைதர வளர்க்கு மன்றே. (௫௨)

* கருவியைந்து - தோல், துளை, நரம்பு, கஞ்சம், மிடறு.
† எழால்- மிடற்றோசை.

கட்புல னாதி யைந்து முவப்புற* கனிந்த காமம்
விட்புலத் தவரே யன்றி வீடுபெற் றவரும் வீழ்ந்து
பெட்பமுற் றமுதுங் கைப்பப் பெருங்குலக் கற்பி னார்போல்
நட்பிடைப் படுத்திலிற்கு நல்லவ ரிருக்கை யீதால். (௫௩)

வேளாளர்வீதி.

வழுக்கறு வாய்மை மாண்புங் கங்கைதன் மரபின் வ
விழுக்குடிப் பிறப்பு மூவ ரேவிய வினைகேட் டாற்றும்
ஒழுக்கமு மமைச்சாய் வேந்தர்க் குறுதிசூழ் வினையுங் குன்றா
இழுக்கறு மேழிச் செல்வர் வளமறு கியம்ப லாற்றும். (௫௪)

வருவிருந் தெதிர்கொண் டேற்று நயனுரை வழங்கு மோசை
அருகிருந் தடிசி லூட்டி முகமனன் கறையு மோசை
உரைபெறு தமிழ்பா ராட்டு மோசைகேட் டுவகை துள்ள
இருநிதி யளிக்கு மோசை யெழுகட லடைக்கு மோசை. (௫௫)

அருந்தின ரருந்திச் செல்ல வருந்துகின் றாரு மாங்கே
இருந்தினி தருந்தா நிற்க வின்னமு தட்டுப் பின்னும்
விருந்தினர் வரவு நோக்கி வித்தெலாம் வயலில் வீசி
வருந்திவிண் ணோக்கு மோரே ருழவர்போல் வாடி நிற்பார் (௫௬)

வானமுந் திசையும் பொங்கும் புகழ்மையும் வானம் பேணும்
ஞானமும் பொறையுங் குன்றா நன்றியு மூக்கப் பாடுந்
தானமுங் கொடையு மன்பும் வரிசையுந் தகைசா ணண்பும்
மானமுந் தவஞ்செய் தீன்ற மகவுபோல் வளர்க்க வல்லார். (௫௭)

வணிகர் வீதி.

புல்லியோர் பண்டங் கொள்வார் வினவின பொருடம் பக்கல்
இல்லெனி னினமா யுள்ள பொருளுரைத் தெதிர்ம றுத்தும்
அல்லதப் பொருளுண் டென்னின் விலைசுட்டி யறுத்து நேர்ந்துஞ்
சொல்லினு மிலாபங் கொள்வார் தொன்மர பிருக்கை சொல்வாம். (௫௮)

வேறு.

நீல வேதிமேற் பளிங்கினா னிழற்சுவர் நிறீஇமின்
கால வாலிய வைரவாட் காணிரைத் தும்பர்க்
கோல வாணிலாச் சொரிமணி குயிற்றிவெண் மாடம்
மாலை போல்வகுத் தியற்றின பீடிகை மறுகு. † (௫௯)

திரைய ளிப்பவுந் திரைபடு தீம்புனல் வேலிக்
கரைய ளிப்பவுங் கரையிலா னிரைபடு கானத்
தரைய ளிப்பவுந் தரைகிழித் தூன்றிவிண் டாங்கும்
வரைய ளிப்பவும் வாங்கிவாய் மடுப்பன மாடம். (௬0)

கரிய கம்பலக் கிடுகின் ‡ மேற் கதிர்விடு பவளத்
தெரியல் பொன்னரி மாலிகை தெண்ணிலாச் சொரியும்
பரிய நித்தில மணிவட மரகதப் பசுந்தார்
விரிய விட்டன வித்திர வின்னிரை யனைய. (௬௧)

---

* உவர்ப்பற என்றும் பாடம். † கம்பலக் கிடுகு - கம்பலம்வேய்ந்த சட்டம்.
‡ பீடிகைமறுகு - கடைத்தெரு.

நாள்க ளுங்குளிர் திங்களு ஞாயிறு மேனைக்
கோள்க ளுங்குளிர் விசும்பொரீஇக் குடிபுகுந் தாங்கு
வாள்கி டந்திராப் பகலொளி மழுக்கலால் வணிகர்
ஆள்க லம்பகர் பீடிகை துறக்கநா டனைய. (௬௨)

பன்னி றந்தபல் பெருவிலைப் பட்டெலா மவண
அன்ன பட்டின்மேம் படுவிலைப் பருத்தியு மவண்
எந்நி லத்தரும் பொருள்பதி னெழுபுல வணிகர்
மன்னி ருக்கையு மரும்பெறல் வளனெலா மவண (௬௩)

மரக தத்தினா லம்மிகள் வைரவா ளுலக்கை
உரல்கள் வெள்ளியா லடுப்பகில் விறகுலை பனிநீர்
அரிசி முத்தழல் செம்மணி யடுகலன் பிறவும்
எரிபொ னாலிழைத் தாடுப விவர்சிறு மகளிர். (௬௪)

செயிரிற் றீர்ந்தசெம் பொன்னினாற் றிண்ணிலைக் கதவம்
வயிரத் தாழுடைத் தவர்கடை வாயிலு மென்றால்
அயிரிற் றீர்ந்தபே ரறிஞரு மனையர்தஞ் செல்வத்
தியலிற் றாமென வரையறுத் திசைப்பதை யெவனோ. (௬௫)

எரிக்கு றும்பொறி யனையசெம் மணிசுட ரெறிபொன்
வரிச்சு ரும்புநேர் மரகத முத்துவாள் வைரந்
தெரிப்ப ருந்துகிர் சிந்தின செல்லுநா ளொன்றுக்
கரிப்பர் கையகப் படுவன வாயிரத் திரட்டி. (௬௬)

பாய தொன்மரப் பறவைபோற் பயன்கொள்வான் பதினெண்
டேய மாந்தருங் கிளந்தசொற் றிரட்சிதான் றூய
மாயை காரிய வொலியன்றி வான்முதற் கருவின்
ஆய காரிய வோசையே *யாய்க்கிடந் தன்றே. (௬௭)

ஒழிவில் வேறுபல் பொருளுமே ழுலோகமும் பிறவும்
வழுவில் வேறுபல் கலைகளு மரபுளி வகுத்துத்
தழுவி வேண்டினர் தாங்கொளத் தக்கவா பகராஅ
அழிவி லாமறை போன்றன வாவண வீதி. (௬௮)

திக்கெ லாம்புகழ் மதுரையைச் சிவபுர மாக்கி
முக்க ணாயக னரசுசெய் முறையினுக் கேற்பத்
தக்க தோழனோ டளகைமா நகருறை தயக்கம்
ஒக்கு மந்நகர் வாணிக ருறையுள்சூழ் நிகமம். (௬௯)

மன்னவர் வீதி.

ஒற்றை யாழியா னுலகிரு ளொதுக்குமா போலச்
செற்ற நேமியாற் கலியிரு டின்றுகோ லோச்சி
ஏற்ற டம்புய வலியினான் மாறடு சிற்றக்
கொற்ற மன்னவா விழுக்குடிக் கோமறு குரைப்பாம். (௭0)

தரங்க வேலைக டம்மையே தாளுறப் பிணித்துத்
துரங்க மாவெனத் தொகுத்தமர் துரைபல வருவி
இரங்கு மோ-றி வுயிர்வளர யாவையும் பெயர்த்து
மரங்கொல் யானைபோற் பிணித்தகூ டம்பல மன்னோ. (௭௧)

* வான்முதற் கருவின் ஆய காரிய ஓசை - ஆகாசமாகிய முதற்காரணத்தானாகிய காரியமாகிய ஓசை: என்றது பொருள்பயவாத ஓசை.

மழுக்கள் வச்சிரங் கார்முகம் வாளிமுக் குடுமிக்
கழுக்கள் சக்கர முடம்பிடி கப்பணா நாஞ்சில்
எழுக்க ணூந்தகம் பலகைதண் டிவைமுதற் படையின்
குழுக்க ளோமகல் லிக்கைவாழ் கூடமும் பலவால். (எ௨)

துளைய கல்லைமா லெனக்கொண்டு சுழற்றியுஞ் செந்தாள்
அளையும் யானைபோற் பாய்ந்துமல் லாற்றிய மாற்றல்
விளைய வாளொடு கேடகம் வீசியும் வென்றி
இளைய ராடமர் பயில்வன வெண்ணிலாக் கூடம். (எ௩)

வேறு.

தேசவிர் நீல மாடஞ் செம்மணிச் சென்னி மாடங்
காசறு கனக மாடஞ் சந்திர காந்த மாடம்
மாசற விளங்கு மின்ன மாடநீள் மாலை கூடற்
பாசிழை மடந்தை பூண்ட பன்மணிக் கோவை யன்ன. (எ௪)

விரையகல கதுப்பி னல்லார் வீங்கிளங் கொங்கை போழ்ந்த
வரையகன் மார்ப மன்றி வடுப்படார் தமக்கன் பில்லா
உரையகன் மான வாற்ற லொழுகுவார் பலகை யொள்வாட்
கரையகல் விஞ்சை வீரர் கணம்பயில் காட்சித் தெங்கும். (எ௫)

மின்னைவா ளென்ன வீசி வீங்குகார் தம்மிற் போர்மூண்
டென்னவான் மருப்பு நீட்டி யெதிரெதிர் புதையக் குத்தி
அன்னவா னென்ன வாய்விட் டதுவெனச் செங்கீர் சோரப்
பொன்னவா மகன்ற மார்பர் பொருகளி றூட்டு வார்கள். (எ௬)

[illegible] ருளமுந் தங்கள் பின்னிடத் துவக்குண் டீர்த்துத்
தாண்டுமா றொற்றை யாழித் தேரினுந் தள்ளித் துள்ளப்
பாண்டில்வாய்ப் பசும்பொன் றேயப் பார்மகண் முதுகு கீண்டு
சேண்டிசை போய்ம டங்கச் செலவத்தேர் நடாத்து வார்கள். (எ௭)

மைந்தர்தந் நெருக்கிற் சிந்து கலவையு மகளிர் கொங்கைச்
சந்தமுங் கூந்தல் சோர்ந்த தாமமுஞ் சிவிறி வீசு
சிந்துரப் பொடியு நாறத் தேனொடு மெழுந்து செந்தாள்
அந்தர வயிறு தூர்ப்ப வடுபரி நடாத்து வார்கள். (எ௮)

தம்முயிர்க் கிரங்கா ராகித் தருக்கொடு மான மீர்ப்பத்
தெம்முனை யெதிர்ந்தா ராற்றுஞ் செருவெனக் குருதிச் செங்கேழ்க்
கொய்ம்மலர்க் குடுமிச் சேவல் கோழிளந் தகர்போர் மூட்டி
வெம்முனை நோக்கி நிற்பார் வேறவற் றூறு நோக்கார். (எ௯)

பெண்முத்த னைய பேதைச் சிறுமியர் பெருநீர் வையை
வெண்முத்த மிழைத்த சிற்றில் சிதைபட வெகுண்டு நோக்கிக்
கண்முத்தஞ் சிதறச் சிந்துங் கதிர்முத்த மாலை தட்பத்
தெண்முத்தி னகைத்துச் செல்வச் சிறார்கடே ருருட்டு வார்கள் (அ0)

கொடிமுகி றுழாவு மிஞ்சிக் கோ [illegible] டகிழு [illegible]யகர்
முடிமிசை வேம்பு நாற முருகவி ழாரும் போந்தும்
அடிமிசை நாறத் தென்னர் வழிவழி யரசு செய்யும்
இடிமுர சுறங்கா வாயி லெழுநிலை மாடக் கோயில். (அ௧)

மறையவர்வீதி.

ஆத்திக ருண்டென் றோது மறமுதற் பொருள்க ளுங்கும்
நாத்திகம் பேசும் வஞ்சர் நாவரி கருவி யாக
ஆத்தனு லுரைத்த வேத வளவுகண் டுள்ளந் தேறித்
தீர்த்தராய் முத்தீ வேட்குஞ் செல்வர்தம் மிருக்கை சொலவாம். (௮௨)

முஞ்சிநாண் மருங்கின் மின்னப் பொன்செய்த முளரி வேய்ந்து
துஞ்சிநான் றசையத் தானைச் சொருக்குமுன் கொய்து தூங்கப்
பஞ்சினுண் கலைத்தோன் மார்பும் பலாசக்கோல் கையுந் தாங்கி
எஞ்சினுன் மறைநூல் கற்போர் கிடைகளே யில்ல மெல்லாம். (௮௩)

தீவினை யந்த ணாளர் சிறார்பயி றெய்வ வேதம்
நாவுரு வேற்றக் கேட்டுக் கிளிகளோ நவிலும் வேற்றுப்
பூவையும் பயின்று புத்தே ளுலகுறை புதுமந் தரக்
காவுறை கிளிகட் கெல்லாங் கசடறப் பயிற்று மன்றே. (௮௪)

வேதமு மங்க மாறு மிருதியும் புராண நூலின்
பேதமுந் தெரிந்தோ ராலும் பிறமதங் களைய வல்ல
வாதமு மதமேற் கொண்டு மறுத்தலு நிறுத்த வல்ல
போதமு முடையோ ராலும் பொலிந்தன கழக மெல்லாம். (௮௫)

உறிபொதி கரகக் கைய ரொளிவிடு செங்கற் றோய்த்த
அறுவைய ருயிர்க்கூ றஞ்சு நடையின ரவிச்சை மாள
எறிசுடர் மழுவா ளன்னக் கோவணம் யாத்த கோலர்
மறைமுடி வன்றித் தேறு மாதவர் மடங்க ளெங்கும். (௮௬)

அட்டில்வாய்ப் புகையு மாடத் தகில்படு புகையும் வேள்வி
விட்டெழு புகையு மொன்றி விரிசுடர் விழுங்கக் கங்குல்
பட்டது பலருந் தத்தம் பயில்வினை யிழக்க நங்கை
மட்டவிழ் கடுக்கை யான்கண் புதைத்தநாண் மானு மன்றே. (௮௭)

சைவர்வீதி.

தெய்வ நீறுமைந் தெழுத்துமே *சிதைக்கல னாக
எவ்வ மாசிரு வினையுடம் பெடுத்துழல் பிறவிப்
பௌவ மேழையுங் கடந்தரன் பதமலர்க் கரைசேர்
சைவ மாதவ ருறைமடத் தனிமறு குரைப்பாம். (௮௮)

எங்கு மீசனைப் பூசைசெய் திகபர மடைவார்
எங்கு மன்பரைப் பூசைசெய் தெழுபிறப் பறுப்பார்
எங்கு மாகமஞ் செவிமடுத் தெதிர்வினை தடுப்பார்
எங்கு நாயகன் வடிவுணர்ந் திருண்மலங் களைவார். (௮௯)

அழிவி லாவுரை யாகம மிலக்கணமாயம் தவற்றுள்
விழுமி தாகிய விதியினும் விலக்கினு மடியைத்
தழுவு தொண்டர்கண் மைந்தர்கள் சாதகர் பாசங்
கழுவி வீடருள் போதகக் கா[illegible]யர் பலரால். (௯௦)

மறைக ளாகமம் பொதுச்சிறப் பெனச்சிவன் வகுத்து
முறையி †னோதிய விதியிலக் குரைகளு முடிவில்
அறையும் வீடுமொன் றிரண்டெனும் பிணக்கற வமைந்த
குறைவி லாச்சிவ யோகியர் குழாங்களும் பலவால். (௯௧)

---

* சிதை - பாய்மரம். † வகுத்த - முறையும் என்றும் பாடம்.

திருக்கோயில்.

குழலுக் தும்புரு நாரதர் பாடலுங் குனித்துச்
சுழலுங் கொம்பனா ராடலு மூவர்வாய்த் துதியும
விழவின் செல்வமுஞ் சுருதியுந் திசையெலாம் விழுங்கும்
முழவுங் கண்டுயி லாதது முன்னவன் கோயில். (௯௨)

மடங்க லின்றிவிண் பிளந்துமேல் வளர்ந்துவெள் ளேறு
விடங்கர் வெள்ளிமன் றிமைத்தெழு வெண்சுடர் நீட்டம்
முடங்கல் வெண்பிறைக் கண்ணியான் கயிலையு முலகும்
ஒடுங்கு கின்றநா ளோங்கிய வோக்கமே யொக்கும். (௯௩)

சுரந்து தேன்றுளித் தலர்களுஞ் சொரிந்துவண் டரற்ற
நிரந்து சுந்தரற் கொருசிறை நின்றபூங் கடம்பு
பரந்து கட்புன லுகப்பல மலர்கடேய்ப் பழிச்சி
இரந்து நின்றருச் சனைசெயு மிந்திர னிகரும். (௯௪)

உழல்செய் தீவினை யுருப்பற வுயிர்க்கெலா மடியின்
நிழல்செய் வார்க்குநீ ணிழல்செயா நின்றபூங் கடம்பின்
குழல்செய் வண்டுகற் பகமதுக் கொணர்ந்துவந் தூட்டித்
தழல்செய் காமமென் பேடையி னூடனோய் தணிக்கும். (௯௫)

ஆரு நீர்க்கட லன்றது வெனநிறை யகழ்கார்
ஊரு மாழியன் றதுவென வோங்கெயி லெட்டாய்ச்
சாரு நேமியன் றதுவெனச் சமைந்தகோ புரம்பொன்
மேரு வன்றது வெனச்சுடர் விசும்பிழி விமானம். (௯௬)

வேத வந்தமுந் துளக்கற மெய்ப்பொருள் விளங்கும்
நாத வந்தமுங் கடந்ததோர் நடுநிலைப் பொருளின்
பாத வந்தனைப் பத்தியின் பாலராய்ப் பயிலவோர்
மாத வந்தரு பயனெனத் தழைத்தபல் வளனும். (௯௭)

பொறிக ளைந்தினுக் கூட்டுபல் போகமு மிதப்பச்
செறிகொ ணீரவா லுவர்ப்பவத் திருநகர் மாக்கள்
நெறிகொள் செஞ்சடைப் பிறைமுடி நிருமலக் கொழுந்தின்
வெறிகொ ளுண்மல ரடிதழீஇ வீடுபெற் றாரபோல. (௯௮)

முன்ன வன்னர சிருக்கையா லந்நகர் முளரிப்
பொன்னை யீன்றதா லதுபல பொருணிறை செல்வந்
தன்னை யீன்றதா லதுபல தருமமென் றுரைக்கும்
மின்னை யீன்றதஃ தீன்றதால் விழுத்தகு புகழே (௯௯)

எழுக்க டந்ததோ ளுருத்திர வுலகமென் றியாரும்
வழுத்த நின்றவிந் நகர்வயி னும்பரின் மாண்ட
விழுத்த கும்பல செல்வமும் விழைந்துபார்த் துள்ளத்
தழுக்க றாமையா லின்னமு மமரர்கண் ணுறங்கார். (௧௦௦)

விரைய விழ்ந்ததார் மீனவர் வாகைவேல் விடுத்துத்
திரையை வென்றது முடிதகர்த் திந்திரன் செருக்குக்
கரைய வென்றதுங் கார்தளை யிட்டதுங் கனக
வரையை வென்றது மிந்நகர் வலியினா லன்றே. (௧௦௧)

எங்கு நாவுமா யெங்கணுங் கண்ணுமா யெங்குந்
தங்கு பேரொளி யல்லதித் தனிநகர்ச் செல்வஞ்
செங்க ணாயிர நாவினான் செப்பவு மெதிர்கண்
டங்க ணாயிர முடையவ னளக்கவும் படுமே (௧௦௨)

புண்ணி யம்புரி பூமிபா ரதில்வரு போகம்
நண்ணி யின்புறு பூமிவா னொடென்ப நாளும்
புண்ணி யம்புரி பூமியு மதில்வரு போகம்
நண்ணி யின்புறு பூமியு மதுரைமா நகரம். (௧௦௩)

வேறு.

பண்கனிந் தனைய சொல்லார் நரம்பிசைப் பாணி தேவ,
உண்கனி யமுதுங் கைப்பச் செவிதுளைத் தூட்ட வுண்டும்
பெண்களி னமுத மன்னார் பெருமித நடன முன்னாக்
கண்களை விடுத்துங் காலங் கழிப்பவ ரளவி லாதார். (௧௦௪)

கலவிவித் தாக வூடிக் கட்புனல் குளிக்கு நல்லார்
புலவிதீர் செவ்வி நோக்கிப் புணர்முலைப் போகந் துய்த்தும்
நிலைநிலை யாமை நோக்கி நெறிப்படு தரும தானங்
கலைஞர்கைப் பெய்துங் காலங் கழிப்பவ ரெண்ணி லாதார். (௧௦௫)

சந்தித்து மீன நோக்கி தலைவனை மூன்று போதும்
வந்தித்து மீசன் பூசை மரபுளி முடித்தும் வேதம்
அந்தித்து மறியான் செய்த திருவிளை யாடல் கேட்டுஞ்
சிந்தித்து மன்பர் பூசை செய்துநாள் கழிப்பார் பல்லோர். (௧௦௬)

கற்பவை கற்றுங் கேட்டுங் கேட்டவை கருத்து ளூறச்
சொற்பொரு ளினைந்துங் கேட்போர்க் குணர்த்தியுட் டுளக்கந் தீர்த்தும்
எற்பக லிரவு நீங்கு மிடத்துமெய் யறிவா னந்த
அற்புத வெள்ளத் தாழா தாழ்ந்துநாள் கழிப்பார் சில்லோர். (௧௦௭)

தன்னிக ருயர்ச்சி யில்லான் காப்பியத் தலைவ னாக
முன்னவர் மொழிந்த தேனோர் தமக்கெலா முகம னன்றோ
அன்னது தனதே யாகு மண்ணலே பாண்டி வேந்தாய்
இந்நகர்க் கரச னாவா னிக்கவிக் கிறைவ னாவான். (௧௦௮)

என்னென வுரைப்பே னிந்த விறைமகன் பண்பை யேனை
மன்னவர் வானோர் போல மதித்துரை விரிக்கற் பாற்றோ
அன்னவ னாணை யாற்றா னடப்பதிவ் வகில மென்றான்
முன்னவன் செய்த வாடல் வரவினை முறையிற் சொல்வேன். (௧௦௯)

நகரச்சிறப்புமுற்றிற்று.

ஆக திருவிருத்தம் - ௨௦௦.

திருவிளையாடல்வரலாறு.

வரங்க டந்தரு ளெனமுது வானவர் முனிவோர்
கரங்க டந்தலை முகிழ்த்திடக் கருணைசெய் தவிச்சை
உரங்க டந்துபர யுணர்வெலாங் கடந்தரு மறையின்
சிரங்க டந்தவ னிருப்பது திருக்கயி லாயம். (௧)

புரந்த ராதிவா னவர்பதம் போதுறை புத்தேள்
பரந்த வான்பதஞ் சக்கரப் படையுடைப் பகவன்
வரந்த வாதுவாழ் பதமெலா நிலைகெட வருநாள்
உரந்த வாதுநின் றாழிதோ ரோங்குமவ் வோங்கல். (உ)

அரம்பை மாதரா ராடலி னரவமும் பாடல்
நரம்பி னோசையு முழவதிர் சும்மையு நால்வாய்
வரம்பி லோதையு மருவிவீ ழொலியுமா றாது
நிரம்பி வானமுந் திசைகளு நிமிர்வன மாதோ. (௩)

வெந்த நீற்றொளி வெண்மையும் விமலனை யகங்கொண்
டந்த மின்றியே யசைவற விருக்கையு மருவி
வந்த கண்களுங் கொண்டவ ணிருக்குமா தவர்க்குத்
தந்த தாலரன் கயிலையுந் தனதுசா ரூபம். (௪)

ஆங்கு வெண்டுகில் விரித்தெனக் கல்லென வார்த்து
வீங்கு காலரு வித்திரள் வெள்ளமே யன்றி
ஓங்கு நான்மறைக் குடுமியி னுள்ளொளி நோக்கித்
தூங்கு மாதவர் கண்களுஞ் சொரிவன வெள்ளம். (௫)

கோட்டு மாமலர் நிலமலர் குண்டுநீ ரெடுத்துக்
காட்டு மாமலர் கொடிமலர் கொண்டுமுட் கரைந்த
பாட்டு மாமலர் கொண்டுநம் பரஞ்சுட ரடியிற்
சூட்டு மாதவர் தொகுதியுஞ் சூழ்வன வொருபால். (௬)

கையு நாகமுங் காய்சின வுழுவையுங் கடுவாய்ப்
பையு நாகமுந் தங்கிளை பரவிய முக்கண்
ஐய னாகமெய் யருந்தவர் தமையடைந் தன்பு
செய்ய நாகமும் வையமும் புகழ்வதச் சிலம்பு. (௭)

வேறு.

அளந்தி டற்கரி தாயவக் குன்றின்மேற்
களங்க றுத்துவிண் காத்தவன் கோயின்முன்
விளம்ப ருஞ்சிவ தீர்த்தத்தின் மிக்கதாய்
வளம்பெ றுஞ்சிவ தீர்த்தத்தின் மாடது. (அ)

தண்ட ருமக ஜாச சநதிர காந
பண்ட யங்க நவமணி பத்திசெய்
தண்டர் தச்ச னனேக தவஞ்செய்து
தாயிரக் கான்மண் டபமரோ. (௯)

ஆன '' ன்மையி னுலந்த மண்டபம்
ஞான ாயக னுண்மலர்த் தாடொழு
வ... ... னொடு வந்து பதங் * குறித்
தான மின்மதி வைகுவ தொத்ததே. (௧௦)

அன்ன மண்டபந் தன்னு ளருந்தவம்
என்ன வேங்கை யதண்மே லிருந்தனன்
பன்னு கேள்விப் பதினெண் புராணமுஞ்
சொன்ன மாதவச் சூத முனிவனே. (௧௧)

* பதம் - காலம்.

அந்த வேலையி லச்சிவ தீர்த்தத்தில்
வந்து மூழ்கியம் மண்டபத் தேறியே
சந்தி யாதி தவ்முடித் திறிலா
இந்து சேகரன் றணிவனந் தேத்தியே. (கஉ)

சம்புபத்தன் சதானந்த னுத்தமன்
அம்புயத்த னனைய மகோதரன்
உம்ப ரஞ்சிய வுக்கிர வீரியன்
நம்பு கேள்விப் பிரசண்ட நற்றவன். (கங)

ஆதி மாதவர் யாவரு மன்புமை
பாதி யாய்முற்று மாகும் பராபரச்
சோதி பால்வைத்த சூதனைத் தோத்திரம்
ஓதி யஞ்சலித் தொன்று வினவினர். (கச)

வேறு.

வேத வாகம புராணமே மிருதியே முதலா
ஓது நூல்களின் றுணிபொரு ளுலகெலாம் பயந்த
பேதை பாகனே பரமெனத் தேர்ந்துணர் பெரிய
போத மாதவ வுணக்கியாம் புகல்வதொன் றுளதால். (கரு)

மேரு மந்தரங் கைலைபர்ப் பதமுதல் விடைமேல்
ஊரு மந்தர நாடவ னுறைபதி யனந்தம்
ஆரு மந்தமில் போகம்வீ டடைவதென் றவற்றின்
கார ணங்களோ டுரைத்தனை கருத்தினுக் கிசைய. (கசா)

ஐய மாதிமுக் குற்றமு மகலநீ யருளிச்
செய்ய வுந்தெளிந் திலேங்கள்யாஞ் சிற்றறி வுடையேம்
மைய னெஞ்சினே மாகையான் மயக்கற வின்னும்
உய்யு மாறருள் செய்தியென் றுரைத்தனர் மன்னோ. (கஎ)

தலங்க டம்மின்மிக் குள்ளதாய்த் தகுதிசா றீர்த்தக்
குலங்க டம்மின்மிக் குள்ளதாய்க் குறையிரந் தோர்க்கு
நலங்க டந்தருண் மூர்த்தியாய் நாதவே தாந்தப்
புலங்க டந்தபே ரொளியுறை தலனொன்று புகலாய். (கஅ)

என்ற போதெதிர் முகமலர்ந் திருண்மல வலியை
வென்ற சூதனுந் தலங்களின் விசேடமாய்ந் தம்பொற்
குன்ற வார்சிலை யானிடங் கொண்டுறை பதியுள்
ஒன்று கேட்கவீ டளிப்பதா யுளதுமற் றதுதான். (கக)

முற்ற வோதிய புராணமூ வாறினுட் காந்தம்
பெற்ற தாறுசங் கிதையவை யாறுந்தம் பெயராற்
சொற்ற பேர்சனற் குமரமா முனிவரன் சூதன்
கற்றை வார்சடைச் சங்கரன் மாலயன் கதிரோன். (உ0)

இன்ன வாறனுட் சங்கர சங்கிதை யென்று
சொன்ன நூலினை யுணர்த்தினன் சங்கரன் றுணைவிக்
கன்ன போதவள் மடியினி லிருந்துகேட் டதனை
மின்னு வேற்பணி கொண்டவேள் வெளிப்பட வுணர்ந்தான். (உக)

ஐயமாதிமுக்குற்றம் - ஐயம், திரிபு, அறியாமை.

குன்றெறிந்தவேள் வழிபடு குறுமுனிக் குரைத்தான்
அன்று தொட்டஃ தகத்திய சங்கிதை யாகி
நின்ற தன்னது கேட்பவர்க் கரனடி நீழல
லென்று மிணையிலீ டளிப்பதா வொருதல னுரைசால் (உஉ)

அதிக வப்பதி யாதெனி னாலவாய் கேட்கக்
கதிவ ளிப்பதென் றோதிய சூதனைக் கதியின
மதியை வைத்தவ ரன்னதைப் பகரென வந்த
விதியி னிற்பக லின்றனன் வியாதன்மா ணாக்கன். (உ௩)

புதிய தாமரை மேவிய பழமறைப் புத்தேள்
விதியி னாற்கடு நடைப்பரி மகஞ்செய்வான் வேண்டிக்
கதியை மாய்ந்தவர்க் குதவுதண் டுறைகெழு காசிப்
பதியின் மைந்தரோ டெய்தினன் பண்டொரு வைகல்.

வேறு.

அகத்தியன் வியாத னாரதன் சனக னாதிநான் முனிவர்கோ தமனாற்
சிகைத்தெளி வுணர்ந்த பராசரன் வாம தேவன்வான் மீகியே வசிட்டன்
சகத்தியல் கடந்த சுகன்முதன் முனிவர் தம்மொடும் பத்துவெம் பரிமா
மகத்தொழின் முடித்து மற்றவர்க் குள்ள மகிழ்வுற வழங்குந வழங்கா. (உ௫)

சத்திய வுலகிற் சரோருகக் கிழவன் சார்ந்தபின் புலப்பகை சாய்த்த
அத்திரு முனிவ ரனைவருங் காசி யடிகளை யடைந்தனர் பணிந்து
முத்தி மண்டபத்தி னறமுத னன்கு மொழிந்தருண் மூர்த்திசந் நிதியிற்
பத்தியா யிருந்து நாரத முனியைப் பார்த்தொரு விஞ்வுரை பகர்வார். (உ௬)

தலமுதன் மூன்றுஞ் சிறந்ததோர் சைவத் தலமுறை யென்னநா ரதன்முன்
கலைமுழு துணர்ந்த சனற்குமா ரன்பாற் கற்றவன் வியாதனு மவன்பால்
நலமுறக் கேண்மி னெனவவன் கதிர்வே னம்பிபான் மறைமுத லனைத்தும்
அலைவற வுணர்ந்தோன் குறுமுனி யாகு மவனிடைக் கேண்மென விடுத்தான். ()

மலயமா தவனை யடைந்துகை தொழுது வாழ்த்திவா தாவிவில் வலனைக்
கொலைபுரி தரும மூர்த்தியே விந்தக் குன்றடக் கியதவக் குன்றே
யலைகடல் குடித்த வருட்பெருங் கடலே யருந்தமிழ்க் கொண்டலே தென்பார்
துலைபெற நிறுத்த கனைகனே யென்று சுருதியா யிரமெனத் துதித்தார். (உ௮)

மூவகைச் சிறப்பு முள்ளதோர் தான மொழிகென முகமலர்ந் தருள்கூர்ந்
தியாவையு முணர்ந்தோன் முத்திமண் டபத்தி னிரிரு தொகையின்வந் திறக்குஞ்
சேவல்* டமைய [illegible]ங்கரன் றனையுஞ் சேவலங் கொடியுடை வடிவேற்
காவலன் றனையாம் வடநிழ லமர்ந்த கண்ணுதற் பரனையும் பணியா. (உ௯)

அங்கயற் கண்ணி தன்னையு மெந்தை யாலவா யானையு மீதல
பங்கயத் திருத்திச் சமாதியி லிருந்து பரவச மடைந்துபார்ப் பதிகுக
சங்கர னருளிச் செய்தசங் கிதையைத் தாரக னுடலிரண் டாகச்
செங்கைவேல் விடுத்த சேவக னெனக்குத் தெருட்டின னனையசங் கிதையில. ()

* சேவல்கள் என்றது - மாகனந்தனென்னுமறையவனும், அவன்மனைவியும், மக்களிருவரும், மூன்றும்யுகத்தில் பாவத்தாற் கோழிகளாய்ப்பிறந்து முத்தியடைந்தனரென்று காசிகாண்டத்திற் கூறிய அக்கோழிகளை.

பெறற்கருந் தவஞ்செய் தகந்தெளிந் தரிதிற் பெறுங்கதி கேட்பவர்க் கெளிதா
யுறப்படுந் தலநீர் வினையமுச் சிறப்பு முள்ளதெத் தலத்தினுங் கழிந்த
சிறப்பினுங் கெண்ணெண் டிருவிளை யாடல செய்தருள் வடிவெடுத் தென்றும்
மறைப்பொருள் விளங்கு மாலவா யதனை மண்ணின்மேற் சிவனுல கென்னும். ()

அத்தலத் தனைப்ப மூவகைச் சிறப்பு மளவிலா வுயிர்க்கெலாங் கருணை
வைத்தவன் செய்த திருவிளை யாட்டும் வரையுரங் கிழியவே லெடுத்த
வித்தக னெனக்கு விளம்பிய வாறே விளம்புவ னுமக்கென வந்த
வுத்தம முனிவர் யாவருங் கேட்க வுணர்த்துவான் கடலெலா முண்டான். (௯௨)

திருவிளையாடல்வரலாறு முற்றிற்று.

ஆக திருவிருத்தம் - ௨௯௨

உ

முதலாவது

மதுரைக்காண்டம்

தலவிசேடப்படலம்.

நாட்டமொரு மூன்றுடைய நாயகனுக் கன்புடையீர் நயந்து நீவிர்
கேட்டதல மீண்டுரைத்த திருவால வாயதனுட் கிளைத்துப் பொன்னந்
தோட்டலர்தா மரைமுளைத்த தொருதடமுஞ் சுந்தரச்செஞ் சோதி ஞான
ஈட்டமென முளைத்தசிவ லிங்கமொன்று முளவின்னு மிசைப்பக் கேண்மின். ()

திருவால வாய்க்கிணையா மொருதலமுந் தெய்வமணஞ் செய்யப் பூத்த
மருவார்பொற் கமலநிகர் தீர்த்தமுமத் தீர்த்தத்தின் மருங்கின் ஞான
உருவாகி யுறைசோம சுந்தரன்போ லிகபரந்தந் துலவா வீடு
தருவானு முப்புவனத் தினுமில்லை யுண்மையிது சாற்றின் மன்னோ. (௨)

அவ்வகைய மூன்றின்முதற் றலப்பெருமை தனைச்சுருக்கி யறையக் கேண்மின்
எவ்வகைய வுலகத்துந் தருமதல மதிகமவற் றீறிலாத
சைவதல மதிகமவற் றறுபத்தெட் டதிகமவை தமிலீரெட்டுத்
தெய்வதல மதிகமவற் றதிகதல நான்கவற்றைச் செப்பக் கேண்மின். (௩)

அன்னமலி வயற்புலியூர் காசிநகர் காளத்தி யால வாயாம்
இன்னவளம் பதிநான்கிற் றிருவால வாயதிக மெவ்வா றென்னின்
மின்னவிரம் பலங்காணக் காசிநகர் வதிந்திறக்க வியன்கா ளத்திப்
பொன்னகரம் பத்தியினால் வழிபாடு செயவளிக்கும் போகம் வீடு. (௪)

அறந்தழையுந் திருவால வாய்கேட்ட வுடன்போக மளிக்கு மீண்டு
பிறந்திறவாப் பேரின்பக் கதியளிக்கு மிதுவன்றிப் பிறழா தெங்கும்
நிறைந்தபர னித்தலமும் படைப்பானித் தலத்தைமுத னிருமித் திங்ஙன்
உறைந்தருளி னன்றி யின்னமுள ததன்பெருமை யுரைப்பக் கேண்மின். (௫)

திருவால வாயென்று கேட்டவரே யறம்பெறுவர் செல்வ மோங்குந்
திருவால வாயென்று நினைத்தவரே பொருளடைவர் தேவ தேவன்
திருவால வாயதனைக் * கண்டவரே யின்பநலஞ் சேர்வ ரென்றுந்
திருவால வாயிடத்து வதிந்தவரே வீட்டுநெறி சேர்வ ரன்றே. (௬)

சுரநதிசூழ் காசி... பதிமறுமைக் கதியளிக்குந் தூநீர் வையை
வரநதிசூழ் திருவால வாய்சீவன் முத்திதரும் வதிவோர்க் கீது
திரணதிகம் பரகதியும் பின்கொடுக்கு மாதலினிச் சீவன் முத்தி
புரணதிக மென்பதெவ னதற்கதுவே யொப்பாமெப் புவனத் துள்ளும்.)

ஆதலினிப் பதிவிட்டுப் பிறபதியிற் போய்நோற்போ ரங்கை கொண்ட
சீதளவா னமுதேய்ப்பத் தித்திக்கத் தேம்பெய்து செய்த தீம்பால்
ஓதனத்தைக் கைவிட்டுப் புறங்கையை நக்குவா ரொப்பா ரிந்
மாதலத்தின் பெருமைதனை யாவரே யளவிட்டு வழுத்தற் பாலா. (௮)

---

* தேவதேவைத் - இருவ...ாயிடத்து என்றும் பாடம்.

வேறு.

மற்றைய தலங்க டம்மிற் பரிமகம் வாச பேயம்
அற்றமில சோட சாக மக்கினிட் டோமம் யார்க்கும்
முற்றரு மிராச சூய முதன்மக முடித்த பேறுஞ்
செற்றமி றெரிச பூர்ண முதலிட்டி செய்த பேறும் (கூ)

எள்ளிழு தன்னங் கன்னி யிவுளிதே ரியானை யில்லம
வெள்ளியான் பொன்பூ ணுடை விளைவொடு பழன முன்னதை
தள்ளரு மடிமை யாதி தானங்கள் செய்த பேறும்
வள்ளறன் காசி யாதிப் பதிகளில் வதிந்த பேறும். (க0)

கங்கைகா ளிந்தி வாணி காவிரி கண்ண வேணி
துங்கபத திரைசிம் பாலி தூயதண் பொருநை முன்னுஞ்
சங்கையி னதிகண் முற்று மாடிய தவத்தின் பேறும்
மங்கல மதுரை தன்னில் வைகலும் வதிவோர்க் கெய்தும். (கக)

அன்னிய தலங்க டம்மி லாற்றிய பிரம கத்தி
பொன்னினைக் களவு செய்தல் கள்ளுண்டல் புனித வாசான்
பனனியைப் புணர்த லின்ன பாதக மனைத்து மென்றுந்
தன்னிக ரால வாயில் வதிபவர் தமைவிட் டேகும். (கஉ)

மற்றைய தலத்திற் சாந்தி ராயண மதியந் தோறும்
உற்றபே றிங்குக் கங்கு லுண்டியா லடைபே றுகும்
மற்றைய தலத்தின் மாதப் பட்டினிப் பலத்தின் பேறிங்
குற்றொரு வைக லுண்டி யொழிந்தவர் பெறும்பே றுகும். (கங)

அயனக ரடைந்து நான்கு திங்கணோன் பாற்றும் பேறிவ்
வியனக ரடைந்து நோற்கு மட்டமி விரத நல்கும்
அயனக ரெய்தி யாறு திஙகணோன் பாற்றும் பேறிவ்
வியனகர்ச் சோம வார விரதமே யளிக்கு மன்றே. (கச)

ஏனைய தலத்தி லோராண் டணவொழிந் தியற்று நோன்பால்
ஆனபே றிங்கு நோற்குஞ் சிவனிரா வளிக்கு மிஙகே
ஊனவைம பொறியும் வென்றோன் முப்பொழு துண்டு வைகித்
தானமாந் தாலுங் காலுண் டியற்றுமா தவத்தோ ருகும். (கரு)

இந்தநான் மாட மோங்கு மாலவா யிடத்தியா ரேனும்
அந்தணர் தமக்கோ முட்டி யருந்தவர் தமக்கோர் பிச்சை
தந்தவா புநம்பு செய்த சோடச தானந் தம்மால்
வந்தபே றடைவர் பல்வே றுரைப்பதென் மதியான் மிக்கீர். (கசா)

பலவகைத் தலங்க ளெல்லாம் வைகிய பயனு மென்றும்
பலவகைத் தீர்த்த மெல்லா மாடிய பயனு மென்றும்
பலவகைத் தான மெல்லா நல்கிய பயனு மென்றும்
பலவகைத தான பூசை பண்ணிய தவத்தின் பேறும். (கஎ)

பலவகைத் தவங்க ளெல்லா முற்றிய பயனுந் தூய
பலவகை மந்தி ரத்தி லெய்திய பயனு நாலின
பல்வகைக் கேள்வி யெல்லா மாய்ந்துணர் பயனும் யோகம்
பல்வகை ஞான மெல்லாம் பயின்றுணர்ந் தடங்கும் பேறும். (கஅ)

அனையதொல் பதியி லென்றும் வைகுவோ ரடைவ ரென்றால்
இனையதொல் பதிக்கு நேர்வே றில்லையிப் பதியின் மேன்மை
தனையறி பவரா ரீசனை ருனன்றி யாத லாலே
வினையைவெல் பவாங் கொப்தி வதிவதே வேண்டு மாதோ. (ககூ)

வேறு.

கைத்தலநான் கிரண்டுடைய மலர்க்கடவுண் மேலொருநாட் கயிலை யாதி
எத்தலமு மொருதுலையிட் டித்தலமு மொருதுலையிட் டிரண்டுந் தூக்க
உத்தமமாந் திருவால வாய்மிகவுங் கனத்ததுகண் டுலகின் மேலா
வைத்ததல மிதுவென்று விதன்பெருமை யாவரே வழுத்தற் பாலார். (உ0)

அத்திருமா நகரின்பேர் சிவநகரங் கடம்பவன மமர்ந்த சீவன் *
முத்திபுரங் கன்னிபுரந் திருவால வாய்மதுரை முடியா ஞானம்
புத்திதரும் பூவுலகிற் சிவலோகஞ் சமட்டிவிச்சா புரந்தென் கூடல்
பத்திசாரு துவாதசாந் தத்தலமென் றேதுவினாற் பகர்வர் நல்லோர். (உ

என்றுதலச் சிறப்புரைத்த குறுமுனிவ னெதிரறவோ ரிரும்பூ தெய்தி
நன்றுதலப் பெருமையருள் செய்தனைகேட் டெலெடுத்த நயப்பா டெல்லாம்
இன்றடைந்தே மினிச்சுவண புண்டரிகச் சிறப்பதனை யிசைத்தி யென்னக்
குன்றமடக் கியகருணைக் குன்றனையான் வரன்முறையாற் கூறு கின்றான். (உஉ)

வேறு.

விரதமா தவத்தீர் காணின் வெவ்வினை யெல்லாம் வெ
சரதமாப் போக நல்குந் தபனிய முளரி வந்த
வரவு மக்கனக கஞ்சப் பெருமையும் வளனு நன்கா
உனரசெய்துங் கேண்மி னென்று முனிவர னுரைக்கு மன்றே. (உங)

தலவிசேடப்படல முற்றிற்று.

ஆக திருவிருத்தம் - உங.

தீர்த்தவிசேடப்படலம்.

கண்ணகன் குடுமி மாடக் கடிபொழி லால வாயின்
அண்ணலம் பெருமை யாரே யளப்பவ ரவிர்தண் முத்த
வெண்ணகை யுமையா ளன்பு விளைமுகச் செவ்வி போலத்
தண்ணறுங் கமலம் பூத்த தடப்பெருந் தகைமை சொல்வாம். (க)

ஆற்றினுக் கரசாங் கங்கை காவிரி யாதி யாறும்
வேற்றுரு வாய முந்நீர் வேலையும் பிறவுங் காருந்
தோற்றுமுன் றன்னை யாட்டச் சுந்தர மூர்த்தி செங்கண்
ஏற்றினன் கண்ட தீர்த்த மாகுமீ தெவ்வா றென்னின்

அகளமா யுலக மெல்லா மொடுக்கிடந் நெறியே யாகவும
நிகளமாம் † விருத்தி தோன்ற நினைவற நினைந்து நிற்கும்
துகளிலா வறிவா னந்த சுந்தரச் சோதி மேனாட்
சகளமா முருவங் கொண்டு தானொரு விளையாட் டாலே (ங)

* அமர்ந்தோர் சிவன் என்றும் பாடம்.
† நிகளமாய் என்றும் பாடம்.

முக்கண னரவப் பூண நூலினன் முகிழ்வெண் டிங்கட்
செக்கரஞ் சடையன் சூல கபாலத்தன் செங்க ணேற்றன்
மைக்கருங் கயலுண் கண்ணி வாமத்தன் முன்னும் பின்னும்
பக்கமு நந்தி யாதி கணாதிபர் பரவிச் சூழ, (௪)

சென்றுதன் மேனித் தேசாற் றிசையெலாம் விளங்கச் செங்கண்
வென்றிகொ ளுரக வேந்த னகரமும் விபுதர் வேந்தன்
பொன்றிகழ் நகரும் வேதன் புரமுமால் புரமு மேலைத்
தன்றிரு நகருஞ் சென்று சஞ்சரித் தாடி மீள்வான். (௫)

அன்னபோ தயனுந் தேவர்க் கரசனு மாழி வேந்தும்
முன்னர்வந் திறைஞ்சி யேத்த முனிவரும் பேறு நல்கித்
தன்னக ரடைந்து நீங்காத் தனிப்பெருங் கணத்தி னோரை
இன்னருள் சுரந்து நோக்கி யிலிங்கத்திற் புகுது மெல்லை. (௬)

வேத்திரப் படையோ னாதி கணாதிபர் வீழ்ந்து பால
நேத்திர வன்பர்க் கன்ப நிரஞ்சன நிருத்தா னந்த
சாத்திர முடிவுந் தேறாத் தனிமுத லொருவ வென்னாத்
தோத்திர வகையா லேத்தித் தொழுதொன்று வினாவல் செய்வார். (௭)

ஐயவிவ் விலிங்க மூர்த்திக் காட்டவு மடியே மூழ்கி
உய்யவுங் கங்கை யாதி நதிகளு முலகத் துள்ளோர்
மையறு தடாக நீரு மற்றிலை யிருமைப் பேறுஞ்
செய்யவோர் தீர்த்த மிங்குண் டாக்கெனச் செப்ப லோடும். (௮)

அத்தகை யிலிங்க மூர்த்திக் கடுத்ததென் கீழ்சா ராக
முத்தலை வேலை வாங்கி நாட்டினான் முதுபார் கீண்டு
பைத்தலைப் பாந்தள் வேந்தன் பாதலங் கீண்டு போயெண்
கைத்தலப் பிரம னண்ட கடாகமுங் கீண்ட தவ்வேல். (௯)

அவ்வழிப் புறம்பு சூழ்ந்து கிடந்தபே ராழி யூழிப்
பௌவநீ ரென்ன வோங்கப் பாணியா லமைத்து வேணித்
தெய்வநன் னீரைத் தூவிக் கலந்துமா தீர்த்த மாக்கிக்
கைவரை கபாலி நந்தி கணத்தினை நோக்கிக் கூறும். (௧0)

இன்னமா தீர்த்தந் தன்னை யெனைப்பல தீர்த்தங் கட்கு
முன்னம்யா மிங்குக் கண்ட முதன்மையா லாதி தீர்த்தம்
என்னலா மினியுண் டாக்குந் தீர்த்தங்க ளெவைக்கு மேலாய்
மன்னலாற் பரம தீர்த்த மெனப்பெயர் வழங்க லாகும். (௧௧)

மருட்கெட மூழ்கி னோர்கள் மங்கலம் பெறலா னாமம்
அருட்சிவ தீர்த்த மாகும் புன்னெறி யகற்றி யுள்ளத்
திருட்கெட ஞானந் தன்னை யீதலான் ஞான தீர்த்தந்
தெருட்கதி தரலான் முத்தி தீர்த்தமென் றிதற்கு நாமம். (௧௨)

குடைந்துதர்ப் பணமுஞ் செய்து தானமுங் கொடுத்தம் மாடே
அடைந்தெழுத் தைந்து மெண்ணி யுச்சரித் தன்பா லெம்மைத்
தொடர்ந்துவந் திறைஞ்சிச் சூழ்ந்து துதித்தெமை யுவப்பச் செய்தோர்
உடம்பெடுத் ததனா லெந்த வுறுதியுண் டதனைச் சேர்வார். (௧௩)

இந்தந ரெம்மை யாட்டி னேழிரண் டுலகின் மிக்க
அந்தமி றீர்த்த மெல்லா மாட்டிய பயன்வந் தெய்தும்
வந்திதின் மூழ்கி யிங்கு வைகுநங் குறியை யுங்கள்
சிந்தையி லார்வம் பொங்கப் பூசனை செய்மி னென்றே. (௧௪)

விண்ணவர் தமமன் மேலாம் வேதிய னாகி நின்ற
பண்ணவன் முனந் நீரிற் படிந்துதன் னனுச்சை யாலே
அண்ணலங் கணத்தி னோரை மூழ்குவித் தனாதி யாய
புண்ணிய விலிங்கந் தன்னுட் புகுந்தினி திருந்தான் மன்னோ. (௧௫)

அந்தமா நீரா னந்தி யாதியோர் விதியாற் சோம
சுந்தரன் முடிமே லாட்டித் துகளறப் பூசை யாற்றிச்
சிந்தையில் விழைந்த வெல்லா மடைந்தனர் செம்பொற் கஞ்சம்
வந்தவா றிதுவத் தீர்த்த மகிமையு முரைப்பக் கேண்மின். (௧௬)

வளையெறி தரங்க ஞான வாவியை நோக்கிற் பாவத்
தளையறு மூழ்கின் வேண்டுங் காமிய மெல்லாஞ் சாரும்
உளமுற மூழ்கு மெல்லை முழுக்கொன்றற் குலகத் துள்ள
அளவறு தீர்த்த மெல்லா மாடிய பயன்வந் தெய்தும். (௧௭)

மெய்யைமண் ணாதி கொண்டு விதிவழி சுத்தி செய்த
மையறு வருண சூத்த மந்திர நவின்று மூழ்கிற்
றுய்யமா தீர்த்த மெல்லாந் தோய்ந்துநான் மறையு மாய்ந்தோர்
கையிலெப் பொருளு மீந்த காசறு பேறு நல்கும். (௧௮)

தெய்வவித் தீர்த்தந் தன்னை நினைவின்றித் தீண்டி னாலும்
அவ்விய வினையி னீந்தி யரும்பெறல் வீடு சேர்வர்
இவ்வுரை மெய்யே யாகு மென்னெனின் மனத்தா னன்றி
வெவ்வழ றீண்டி னாலுஞ் சுடுமன்றி விடுமோ வம்மா. (௧௯)

ஆருமந் நீரி லென்று மாடினர் சிவன் முத்தி
சேருவ ரந்நீ ராடுஞ் சிறப்புறு பயனுக் கொவ்வா
வாருண மாக்கி னேய மந்திர மிவைமுன் னான
பேருணர் வளிக்கு நானஞ் செய்தவர் பெறும்பே றெல்லாம். (௨௦)

அன்னநீர் தனையு மாடி யாலவா யுடைய நாதன்
றன்னையும் பணிவோன் மேலைப் பரகதி தன்னைச் சாரும்
என்ன* நன் னூலிற் சொன்ன பவித்திர மெவைக்கு மேலாய்ப்
பன்னரும புனித மான பவித்திர மாகி நிற்கும். (௨௧)

ஆதர விலனா யந்நீ ராடினோன் சுவர்க்கஞ் சேரும்
ஆதர வினாய் மூழ்கி வானவ ராதி யானோர்க்
காதர வரிசி யெள்ளுத் தருப்பண முமையச் செய்தோன்
ஆதர வேள்வி முற்று மாற்றிய பயனைச் சேரும். (௨௨)

ஏனமா தலங்க டம்மி லிருந்துசெய் விரதம் பூசை
தானமா தரும மோமந் தவஞ்செபந் தியானந் தம்மால்
ஆனமா பயனிற் கோடி யதிகமா மடைந்து மூழ்கி
ஞானமா தீர்த்த ஞாங்க ரிவந்தவை நயந்து செய்யின். (௨௩)

* என்ன - எப்படிப்பட்ட.

பிறந்தநா ளந்நீர் மூழ்கின் மேலைவெம் பிறவிப் பௌவம்
மறிந்திடு மறிதேள் கும்ப மதிகளின் மூழ்கித் தென்பால்
உறைந்தவர் பொருட்டுப் பிண்ட முதவினு லவர்தா மாழ்ந்து
நிறைந்திடு பிறவிப் பௌவ நின்றுமே லெழுவ ரன்றே (௨௪)

அத்தட மருங்கின் யாவர் தென்புல மடைந்தோர் தங்கள்
சித்தமா சகற்ற வேண்டிச் செய்கடன் முடிக்கி னன்னோர்
எத்தனை யெண்ணோர்ந் தாலு மெள்ளுக்கா யிரமாண் டாக
அத்தனை யாண்டு மட்டு மவரைவிண் ணுள வைப்பார். (௨௫)

மூவகை யுலகி லுள்ள தீர்த்தமு முறையா லென்றுஞ்
சேவகஞ் செய்யு மிந்தத் தீர்த்தமெந் நாளு மூழ்கி
ஏவரந் நீரா லென்று மீசனைப் பூசை செய்வோர்
ஆவரிப் பிறவி தன்னி லவர்கதிக் கரையைச் சார்வார் (௨௬)

விடுத்திட லரிய நித்த வேள்விமா விரதம் வேதந்
தடுத்திட லரிய தானந் தவமிவை தரும்பே றெல்லாம்
அடுத்ததன் கரையில் வைகி யீசனை யருச்சிப் போர்க்குக்
கொடுத்திடு புண்ணி யத்திற் கோடியி லொன்றுக் கொவ்வா. (௨௭)

உம்மையிற் பிறவி தோறு நியமநல் லொழுக்கம் பூண்டு
பொய்ம்மையில் விரதந் தானந் தவஞ்செய்து புனித ராகிச்
செம்மைசா னெறியி னின்ற சித்தருக் கலதித் தீர்த்தம்
இம்மையி லடைந்து நித்த மாடுதற் கெய்தா தன்றே. (௨௮)

வேறு.

மதிகதிரோ னிடத்தொடுங்கு தினந்திங்கட் பிறப்பரவம் வாயங் காந்து
கதிர்கடமை விழுங்குதினம் விதிபாத மிந்நாளிற் கருதி மூழ்கித்
துதிகடருப் பணந்தானம் புரிதன்மனு வோதுதலத் தொகையொன் றற்கொன்
றதிகபல னம்முறைநூ றுயிரநூ றுயிரமோ ரநந்த மாகும். (௨௯)

பொருவரிய தகர்த்திங்க டலாத்திங்க ளிவையுதிக்கும் போது மூழ்கின்
ஒருபதினு யிரமடங்காஞ் சுறவுகவைத் தாளலவ னுதிப்பின் மூழ்கின்
இருபதினு யிரமடங்கா மிந்திரவி யிடத்தொடுங்கு மிந்து வாரம்
வருவதறிந் தாடிமனு வோதன்முதற் செயினனந்த மடங்குண் டாகும். (௩௦)

பிரயாகை தனின்மகர மதிநாண்முப் பதுங்குடைந்து பெறும்பே றிந்தத்
திரையார்பைந் தடத்தொருநாண் மூழ்குவோன் பெறும்விரத சீலம் பூண்டு
வரையாம லொருவருடம் படிந்துமையை யமரர்சிகா மணியாம் வேத
உரையானை வழிபடுமேன் மலடிக்கு நன்மகப்பே றுண்டா மன்றே. (௩௧)

எண்டிசைய நதிவாவி வடிவான மாதீர்த்த மெல்லா மிப்பொற்
புண்டரிக தடத்திலொரு கோடியிலோர் கூறுநிகர் போதா வீது
கண்டதரு லறந்தீண்டப் பெற்றதனு னற்பொருளங் கையா லள்ளிக்
கொண்டதனு லின்பநலங் குடைந்ததனுற் பேரின்பங் கொடுக்கு மன்றே. (௩௨)

வேறு.

முன்னவ னருளிச் செய்த காரண முறையா லன்றி
இன்னமிப் புனித வாவிக் கேதுவா லெய்து நாமம்
மின்னவிர் சடையான் சென்னி மேவிய கங்கை நீரிற்
பின்னது கலந்த நீராற் பெறுஞ்சிவ கங்கை யென்றும். (௩௩)

* கதிக்கரசராவார் என்றும் பாடம்.

அலகில்லாத் தீர்த்தந் தம்மு ளதிகவுத் தமமாயத் தோன்றி
இலகலா விதனைத் தீர்த்த வுத்தம மெனப ராய்ந்தோர்
பலவிதழ் விரித்துச் செம்பொற் பஙகய மலர்ந்த நீரால்
உலகவர் யாரும் பொற்றா மரையென வுரைப்ப ரன்றே. (௩௪)

தருமமுன் னாகு நான்குந் தருதலாற் றரும தீர்த்தம்
அருமைசா லருத்த தீர்த்த மரும்பெறற் காம தீர்த்தம்
இருமைசேர் முத்தி தீர்த்த மென்பதா மினைய தீர்த்தம்
வெருவரு பாவ மென்னும் விறகினுக் கெரியா மன்றே. (௩௫)

இவ்வருந் தலத்தி னன்ற பெருமையு மெரிகால் செம்பொற்
றெய்வத பதும தீர்த்தப் பெருமையுஞ் செப்பக் கேட்டோர்
எவ்வமில் போகம் வீடு பெறுவரென் றிசைத்தான் முந்நீர்ப்
பௌவமுண் டமரா வேந்தன் பரிபவ விழமந் தீர்த்தோன். (௩௬)

தீர்த்தவிசேடப்படலமுற்றிற்று.

ஆ. திருவிருத்தம் - உ௯௯.

மூர்த்திவிசேடப்படலம்.

ஆலவா யலர்ந்த செம்பொ னம்புயப் பெருந்தீர்த் தத்தின்
மேலவாம் பெருமை தன்னை விளம்புவா ரெவரே யங்கண்
நீலமா மிடற்று முக்க ணிராமய னறிவா னந்த
மூலமா விலிங்க மேன்மை முறையினு லறைய லுற்றாம். (௧)

பொன்னெடு மேரு வெள்ளிப் பொருப்புமந் தரங்கே தாரம்
வன்னெடும் புரிசை சூழ்ந்த வாரணா வாசி யாதிப்
பன்னருந் தலங்க டம்மிற் பராபர விலிங்கந் தோன்று
முன்னரிக் கடம்பின் மாடே முளைத்ததிச் சைவ லிங்கம். (௨)

அப்பதி யிலிங்க மெல்லா மருட்குறி யிதனிற் பின்பு
கப்புவிட் டெழுந்த விந்தக் காரண மிரண்டி னாலும
ஒப்பரி தான ஞான வொளிதிரண் டன்ன விந்தத்
திப்பிய விலிஙக மூல விலிங்கமாய்ச் சிறக்கு மன்னோ. (௩)

இந்தமா விலிங்கத் தென்னன் இலக்கண விச்சை மேனி
அந்தமி லழகன பாகத துமையொடு மழகு செய்து
சந்ததம் விளக்கஞ் செய்யுந் தகைமையை நோக்கிச் சோம
சுந்தர னென்ற நாமஞ் சாத்தினார் துறக்க வாணர். (௪)

திறப்படு மூலக மெங்கும் வியாபியாய்ச் சிறந்து நிற்கு
அறப்பெருங் கடவுள் சோம சுந்தர னதனு லன்றோ
கறைக்கதிர் வடிவேற் றென்னன் ம...ற்பொற் பிரம்பு பட்ட
புறத்தடித் தழும்பு மூன்று புவனமு பட்ட தன்றே. (௫)

சொற்றவிச் சமட்டி யான சோமசுந் தரனைக் காணப்
பெற்றவா வியட்டி யான பிறபதி யிலிங்கங் காணல்
உற்றவ ராவ ரென்னென் றுரைக்கின்வே ரூட்டுநீர் போய்
...ற்றைய கிளைக ளெல்லாந் தழைவிக்கு மரத்தின் ம...

சோமசுந்தரன - உமையோடுகூடியவழகன்.

எத்தலத் தியாவ னெண்ணெண் டிருவிளை யாடல் செய்தான்
அத்தலத் தவனுக் கொப்பு மதிகமாஞ் சிறப்பும் பெற்ற
உத்தம னென்று மெந்த வுலகினு மில்லை யந்த
வித்தக னதிகத் தன்மை யினைத்தெனின் விளம்பக் கேண்மின். (௭)

பொருப்பினுட் டலைமை யெய்தும் பொன்னெடுங் குடுமி மேரு
தருக்களிற் றலைமை சாருந் தண்ணறுந் தெய்வ தாரு
விருப்புறு வேள்வி தம்முண் மேம்படும் புரவி மேதம்
அருட்படு தானந் தம்முள் விழுமிதா மன்ன தானம். (௮)

மணிதரி லுயர்ந்தோ ராதி மறையவர் தேவர் தம்மிற்
பணிதரு திங்கள் வேணிப் பகவனே யுயர்ந்தோன் வேட்டோர்க்
கினிதருள் விரதந் தம்மு ளதிகமா மிந்து வாரம்
புனிதமந் திரங்க டம்முட் போதவைந் தெழுத்து மேலாம். (௯)

மின்மைசான் மணியிற் சிந்தா மணிவரம் விழுப்ப நல்குந்
தன்மைசா லறங்க டம்மின் மிகுஞ்சிவ தருமமென்ப
இன்மைசா னெறிநின் றோருக் கேற்குநற் கலங்க டம்மின்
நன்மைசான் றவரே முக்க ணுதனுக் கன்பு பூண்டோர். (௧௦)

தீயவான் சுவைப்பா லாவிற் றேவரா வதிகம் பல்வே
றுயமா தீர்த்தந் தம்மு ளதிகமாஞ் சுவண கஞ்சம்
மாயமா சறுக்க வெல்லாத் தலத்தினும் வதிந்து மன்னுந்
தூயவா னவரிற் சோம சுந்தரன் சிறந்தோ னாகும். (௧௧)

அந்தமு முதலு மில்லா வகண்டபூ ரணமா யார்க்கும்
பந்தமும் வீடு நல்கும் பராபரச் சோதி தானே
வந்தனை புரிவோர்க் கிம்மை மறுமைவீ டளிப்பா னிந்தச்
சுந்தர விலிங்கத் தென்றும் விளங்குவான் சுருதி யேத்த. (௧௨)

இத்தகு சயம்பு தன்னை யேனைய சயம்பு வெல்லாம்
நித்தமுந் தரிசித் தேகு நிருமல வொளியா மிந்த
உததம விலிங்கங் கண்டோ ருரையுணர் வொடுங்க வுள்ளே
சித்தமா சொழியத் தோன்றுஞ் சிவபரஞ் சுடரைக் கண்டோர். (௧௩)

இத்தனிச் சுடரை நேர்கண் டிறைஞ்சினோர் பாவ மெல்லாங்
கொத்தழற் பொறிவாய்ப் பட்ட பஞ்சுபோற் கோப மூள
மெய்த்தவஞ் சிதையு மாபோன் மருந்தினால் வீயு நோய்போல்
உத்தம குணங்க ளெல்லா முலோபத்தா லழியு மாபோல். (௧௪)

கலிகட லிரவி தோன்றக் கருகிரு ளுடையு மாபோல்
ஒலிகெழு பெருங்கா றள்ள வுடைபடு மேகம் போல
வலிகெழு மடங்கல் சீற மாயுமால் யானை போலக்
குலிசவல் லேறு தாக்கப் பொடிபடுங் குன்றம் போல. (௧௫)

மருட்சிசெய் காம நோயான் மதிகெடு மாறு போல
அருட்சிவ ஞான நோக்கால் வலிகெடு மவிச்சை போலத்
தருக்குறு முவணஞ் சீறத் தழலரா விளியு மாபோற்
செருக்குற வழியுங் கற்ற கல்விபோற் சிதையு மன்றே. (௧௬)

லம் - தானபாத்திரம்

புலரியிற் சிவன் முத்தி புரேசனைக் காணப் பெற்றால்
அலைகட லன்குட் பட்ட வவனிமா தானஞ் செய்த
பலனுறுங் கதிர்கா லுச்சி வைகலிற் பணியப் பெற்றாற்
கலைஞர்பா னூற்றுப் பத்துக் கபிலைமா தானப் பேறும். (௧௭)

விண்ணிடைப் பரிதிப் புத்தேண் மேலைநீர் குளிக்கு மெல்லை
அண்ணலை வணங்கிற் கோடி யானினத் தானப் பேறும்
பண்ணவர் பரவும் பாதி யிருள்வயிற பணியப் பெற்றால
வண்ணவெம் புரவி மேத மகம்புரி பெரும்பே றெய்தும். (௧௮)

இன்னன வதிக மாம்பே றறிந்துபோ யெத்தே வர்க்கும்
முன்னவன் சமட்டி விச்சா புரமுறை முதல்வன் றனைச்
சொன்னவிக் காலந் தோறு மிறைஞ்சியுந் தொழுதுஞ் சூழ்ந்தும்
பொன்னடிக் கன்ப ராகி வழிபடும் புனித சீலர். (௧௯)

உயமையில் வினைக ளென்னும் பிணியவிழ்ந் தொருவித் தூய
செம்மைய ராகி யானுத் திருவொடு செல்வ மோங்க
வெம்மையில போக மூழ்கி மலவிருள் வீக்க நீந்தி
மைம்மலி கணடத் தெங்கோன மலரடி நீழல் வாழ்வார (௨௦)

வேறு

அறவுருவ னுலவா யானுமஞ் செவிமடுத்தா லடைந்த பத்துப்
பிறவிவினை யறுநினைந்தா னூறுபெரும் பவப்பாவப் பிணிபோங் கூடல்
இறைவனையின் றிறைஞ்சுதுமென் றெழுந்துமனைப் புறம்போந்தா லீரைஞ் ஞூறு
மறுமூறுவெம் பவத்திழைத்த பாதகவல வினையனைத்து மாயு மன்றே. (௨௧)

புழைக்கைவரை தொலைத்தானைத் தரிசித்தோ ராயிரவாம் புரவி வேள்வி
தழைத்தபெரும் பயனபெறுவ ருருத்திர சூத்தம்* மதனாற் றவவானோர்க
டொழற்கரியான் றனைத்துதிதோர் கணததுக்கா யிரராச சூய யாகம்
இழைத்தபெரும் பயன்பெறுவர் சமட்டிவடி வாகியவவ் விலிஙகந் தன்னை. (௨௨)

அங்கையள வாகியநன் னீராட்டிப் பூசித்தோ ரளவி லேனைத்
துங்கதலத் துறையிலிங்க மூர்த்திகளைச் சிவாகமநூல் சொன்ன வாற்றான்
மங்கலமா கியமுகம னீரெட்டும வழுவாது வாசந தோய்ந்த
செங்கனக மணிக்கலசப் புனலாட்டி மாபூசை செய்தோ ராவார். (௨௩)

அவ்வண்ணஞ் சுந்தரனை யைந்தமுத மானுதவு மைந்து தீந்தேன்
செவ்வணணக் கனிசாந்தச் சேறுமுதன மட்டித்துத் தேவர் தேறு
மெய்வ்வண ணங குளிரவிரைப் புனலாட்டி மாபூசை விதியாற் செய்தோர்
மைவ்வண்ண வினைநீந்தி யறமுதனாற் பொருளடைந்து மன்னி வாழ்வார. (௨௪)

நல்லவகை முகமன மரட்டுள்ளும் வடித்தவிரை நன்னீ ராட்ட
வல்லவாநூ றாயிரமா மேதமகப் பயன்பெறுவா வாச நானம்
எல்லவிர்குங குமஞ்சாந்த மிவைபலவு மட்டித்தோ ரெழிலார் தெய்வ
முல்லைநகை யாரோடும் விரைக்கலவை குளித்தினப மூழ்கி வாழவார. (௨௫)

நன்மலரொன் றாலவா யான்முடிமேற் சாத்தினு னயநது நூறு
பொன்மலர்கொண் டயற்பதியிற் பூசித்த பயனெய்தும் புனித போகத்
தன்மைதரு சுந்தரற்குத் தூபமொரு காற்கொடுப்போர் தமக்குத் தாஙகள்
சொன்மனமெய் யுறசெய்த குற்றமா யிரமபொறுப்பன் சுருதி நாதன. (௨௬)

---

* சூத்தம் - சூக்தம எனறும வடமொழிததிரிபு.

திருவமுது நிவேதிப்போ ரவிழொன்றற் குகமொன்றுச் சிவலோ கத்தின்
மருவிநிறை போகருட்டின வைகுவர்தாம் பூலமுக வாச மீந்தோர்
பொருவரிய கடவுளரா னொருநூறு கோடிசிவ புரத்து வாழ்வார்
ஒருபளித விளக்கிடுவோர் வெண்ணிறமுங் கண்ணுதலு முடைய ராவார். (௨௭)

றுந்திருமஞ் சனமெடுக்கக் குடமாட்ட மணிக்கலச மல்ல வர்சம்
பெறுந்தகைய தூபக்கா றீபக்கான் மணியின்ன பிறவுங் கங்குற்
றெறுங்கதிர்கான் மணிமாட மதுரைநா யகர்க்கீந்தோர் செய்த பாவம் [வார்.
வெறுந்துகள்செய் தைம்பொறிக்கும் விருந்தூட்டும் பெருங்காம வெள்ளத் தாழ

கயலிசையங் கண்ணுமைகோன் றிருமுன்னர்ப் பல்லியமுங் கல்லென் றார்ப்ப
இயலிசைய பாடலினே டாடலிவை செய்விப்போ ரிறுமாப் பெய்திப்
புயலிசைய வியங்கலிப்ப மூவுலகுந் தொழவரசாய்ப் பொலங்கொம் பாடுஞ்
செயலிசைய வணங்கனையா ராடரங்கு கண்டின்பச் செல்வத் தாழ்வார். (௨௯)

ஒருகாலட் டாங்கமுடன் பஞ்சாங்க முடனுகை வொண்செங் கால்வெண்
குருகாலு மலர்த்தடஞ்சூழ் கூடனு யகற்பணிவோர் கோலொன றேச்சிப்
பொருகாலின் வருபரித்தேர் மன்னவரா யாவருந்தம் புடைவந் தெய்தி
இருகாலுந் தலைவருட வெக்காலுந் தமைவணங்க விருப்ப ரன்றே. (௩0)

இத்தகைய திருவால வாயுடையான் றிருமுன்ன ரியற்று மோமம்
மெய்த்தவமந் திரந்தான மின்னவனு வளவெனினு மேருவாகும்
உத்தமமா மிவ்விலிங்கப் பெருமையெலாம் யாவரளந் துரைப்பர் வேத
வித்தகரே சிறிதறிந்த வாறுரைத்தே மினிப்பலகால் விளம்பு மாறென் (௩௧)

இத்தலத்துக் கொப்பாக வொருதலமும் பொற்கமல மென்னு மிந்த
உத்தமமா தீர்த்தத்துக் கொப்பதொரு தீர்த்தமுமெய் யுணர்வா னந்த
வித்தனைய விலிங்கமிதற் கொப்பாவோ ரிலிங்கமும்பார் விண்மே லென்னும்
முத்தலத்து மிலையந்த மூர்த்திதிரு நாமங்கண் மொழியக் கேண்மின். (௩௨)

கருப்பூர சுந்தரன்பூங் கடம்பவன சுந்தரனுட் கரவாத் தொண்டர்
விருப்பூருங் கலியாண சுந்தரனல லறவடிவாய் விளங்கு மேற்றுப்
பொருப்பூரு மபிராம சுந்தரனறேன் புடைகவிழப் பொன்னிற் பூத்த
மருப்பூசு சண்பகசுந் தரன்மகுட சுந்தரனுன் வாழி மன்னே. (௩௩)

மாமன்மதசுந் தரன்கொடிய பழியஞ்சு சுந்தரனேர் மருங்கின் ஞானத்
தேன்மருவி யுறைசோம சுந்தரனறேன் செவ்வழியாழ் செய்யப் பூத்த
கானமருவு தடம்பொழில்சூ ழாலவாய்ச் சுந்தரனமீன கணங்கள் சூழப்
பான்மதிசூழ் நான்மாடக் கூடனு யகன்மதுரா பதிக்கு வேந்தன். (௩௪)

சிரநாலோன் பரவரிய சமட்டிவிச்சா புரநாதன் சீவன் முத்தி
புரநாதன் பூலோக சிவலோகா திபன்குணனி புரேசன் யாக்கும்
வரநாளுந் தருமூல விலிங்கமென விவைமுதலா மாடக் கூடல
அரனுமை மின்னமளப் பிலவாகுமுலகுய்ய வவ்வி லிங்கம். (௩௫)

பாதாள மேழுருவ முளைத்தெழுந்த தவ்விலிங்கப் படிவந் தன்னுள்
ஆதார மாகவமாந் தறுபத்து நாலுவினை யாடல செய்த
போதானந் தன்பெருமை நங்குரவன் மொழிப்படியே புகன்றே மென்றான்
வேதாதி கலைதெரிந்த மலயமுனி கேட்டறவோர் வினுதல் செய்வார். (௩௬)

அருட்கடலை யிறைவிளையாட் டறுபத்து நான்கென்று யவையா னந்தப்
பொருட்கடவு ளெக்காலத் தியாவர்பொருட் டாடினனெனும் போதந் தேறித்
தெருட்படர வரன்முறையாற் செப்புகெனக் கரங்குவித்தார் தென்பால் வெற்பில்
இருப்பவனும் விருப்புபடிக் கிறைநிரம்பத் தொகுத்ததுவிரித் தியம்பு கின்றான். ()

மூர்த்திவிசேடப்படல முற்றிற்று.

ஆ. திருவிருத்தம் - ௩௨௮.

பதிகம்.

வானவர்கோன் பழிதொலைத்த விளையாட்டுங் கரிசாப மாய்த்த வாறும்
மீனவர்கோன் காடெறிந்து புரங்கண்ட பெருஞ்சிறப்பு மீன நோக்கி
யானதடா தகையழல்வா யவதரித்துப் பாராண்ட வருளு மீசன்
ரனவளை மணஞ்செய்து முடிதரித்து மண்காத்த தகைமைப் பாடும். (௧)

புலிமுனியும் பணிமுனியுந் தொழவெள்ளி மன்றுணடம் புரிந்த வாறும்
வலிகெழுதோட் குண்டகட்டுக் குறட்கன்னக் குன்றளித்த வகையும் பின்னும்
நலிபசிநோய் கெடவன்னக் குழியழைத்துக கொடுத்துநீர் நசைக்கு வைகை
அலைபுனல்கூ யருத்தியதும் பொன்மாலைக் கெழுகடலு மழைத்த வாறும். (௨)

அந்தரர்கோ னுதனதி லுறைமலயத் துவசனைமீண் டழைத்த வாறுஞ்
சுந்தரவுக் கிரகுமர னவதரித்த வாறும்வளை சுடாவேல் செண்டு
தந்தையிடத் தவன்பெற்ற வாறுமவ னவ்வடிவேல் சலதி வீறு
சிந்தவிடுத் ததுமகவான் முடியைவளை யெறிந்திறைவன் சிதைத்த வாறும். (௩)

பொன்னசலந் தனைச்செண்டாற் புடைத்துநிதி யெடுத்ததுவும் புனிதர்க் கீசன்
பன்னரிய மறைப்பொருளைப் பகர்ந்ததுவு மாணிக்கம் பகர்ந்த வாறுந்
தொன்னகர்மே னீர்க்கிழவன் வரவிடுத்த கடலசுவறத் தொலைத்தவாறும்
அன்னதனித் தொன்மதுரை நான்மாடக் கூடனக ரான வாறும். (௪)

வட்டங்கொள் சடையுடைய சித்தாவிளை யாடியதோர் வனப்புங் கையிற்
கட்டங்கந் தரித்தபிரான் கல்லானை கரும்பருந்தக் காட்டு மாறும்
உட்டங்கு வஞ்சனையா லமணாவிடு வாரணத்தை யொழித்த வாறும்
இட்டங்கொள் கௌரிமுனம் விருத்தனிளை யோன்குழவி யான வாறும். (௫)

செய்யதாண் மாறிநட மாடியதும் பழியஞ்சு திறனுந் தாயை
மையலாற் புணர்ந்தமகன் பாதகத்தை மாற்றியது மதியா தாசான்
றையலா டனைவிரும்பு மாணவனை வாளமரிற் றடிந்த வாறும்
பையரா வெய்துதவும் படிற்றமணர் விடுத்தபசுப் படுத்த வாறும். (௬)

அறவேற்றுப் பரியுகைத்து மெய்க்காட்டுக் கொடுத்தவிளை யாட்டு நாட்டுஞ்
சுறவேற்றுக் கொடியரசன் றனக்குலவாக் கிழிகொடுத்த தொடர்பு நாய்கர்
நறவேற்ற மலர்க்குழலார் மணங்கவர்ந்து வளைபகர்ந்த நலனு மாறு
மறவேற்கண் மாதரார்க் கட்டமா சித்திபெற விருத்த வாறும். (௭)

சென்னிபொருட் டெயில்வாயி றிறந்தடைத்து விடைபொறித்தசெயலுஞ்சென்
மன்னிகலிட் டமர்விளைப்ப மீனவற்கு நீர்ப்பந்தர் வைத்த வாறும் [னி
பொன்னனையாள் பொருட்டிரத வாத வினை முடித்ததுவும் புகார்க்கு வேந்தன்
றன்னையகன் குழிவீட்டித் தென்னவற்கு மறவாகை தந்த வாறும். (௮)

மணக்கவலை கெடவுலவாக் கோட்டையடி யாற்களித்த வகையு மாமன்
எனக்கருணை வடிவாகி வழக்குரைத்துப் பொருள்வணிகற் கீந்த வாறுஞ்
சினக்கதிர்வேல் வரகுணற்குச் சிவலோகங் காட்டியதுந் திவவுக் கோலான்
றனக்கடிமை யெனவிறகு திருமுடிமேற் சுமந்துபகை தணித்த வாறும் (௯)

அப்பாணற் கிருநிதியஞ் சேரனிடைத் திருமுகமீந் தளித்த வாறும்
அப்பாணன் பாடமழை யரையிரவிற் பொற்பலகை யளித்த வாறும்
அப்பாணன் மனைவியிசைப் பகைவெல்ல வண்ணலவை யடைந்த வாறும்
அப்பாணா ளென்றேன முலையருத்திப் பன்றியுயி ரளித்த வாறும். (௧௰)

வயவேனக குருளைகளை மந்திரிக ளாக்கியதும் வலியுண் டாகக்
கயவாய்க்குக் குருமொழிவைத் தருளியது நாரைக்குக் கருணை நாட்ட
நயவாலவைத் தருண்முத்தி நல்கியதுங் கூடனகர் தன்னைச் சித்தர்
புயநாகம் போய்வளைந்து திருவால வாயாக்கிப் போந்த வாறும். (௧௧)

சுந்தரனென் றெழுதியகூ ரம்பெய்து செம்பியன்போர் தொலைத்த வாறுஞ்
செந்தமிழோர்க் கியற்பலகை யருளியதுந் தருமிக்குச் செம்பொன் பாடித்
தந்ததுவு மாறுபடு கீரற்குக் கரையேற்றந் தந்த வாறும்
விந்தமடக் கியமுனியாற் கீரனியற் றமிழ்தெளிய விடுத்த வாறும். (௧௨)

ஊமனாற் புலவரிக லகற்றியது மிடைக்காட னுடன்போய்க் கொன்றைத்
தாமனார் வடவால வாயமர்ந்த பரிசும்வலை சலதி வீசிப்
பூமனாய் குழலியைவேட் டருளியதும் வாதவூர்ப் புனிதர்க் கேறத்
தேமனாண் மலரடிகண் முடிசூட்டி யுபதேசஞ் செய்த வாறும். (௧௩)

நரிகள்பரி யாக்கியதும் பரிகணரி யாக்கியது நாகம் பூண்டோன்
அரியதிரு மேனியின்மே லடிசுமந்து மண்சுமந்த வருளுந் தென்னன்
எரியடுவெஞ் சுரந்தணித்த வாறுமம ணரைக்கழுவி லிட்ட வாறுங்
கரியதென வன்னிகிண றிலிங்கங்கூய் வணிகமகட் காத்த வாறும். (௧௪)

எனத்தொகையா லறுபத்து நான்கிவற்றை நிறுத்தமுறை யீறிலாத
வினைத்தொகையா றகன்றீரெக் காலமெவர் பொருட்டெனநீர் வினாய வாற்றான்
மனத்தளவி லன்புமடை யுடைந்தொழுகத் திருவால வாயான் றாளை
நினைத்தளவி லானந்தம் பெருகவிரித் துரைப்பலெனை நெறியாற் கூறும். (௧௫)

பதிகமுற்றிற்று.

ஆ திருவிருத்தம்-௫௪௫.

முதலாவது

இந்திரன்பழிதீர்த்தபடலம்.

மின்பயில் குலிசப் புத்தேள் விருத்திரா சுரனைக் கொன்ற
வன்பழி விடாது பற்றக் கடம்பமா வனத்தி லெய்தி
என்பர வாரம் பூண்ட விறைவனை யருச்சித் தேத்திப்
பின்பது கழிந்து பெற்ற பேற்றினை யெடுத்துச் சொல்வாம் (௧)

முன்னதா முகத்தில் வண்டு மூசுமந் தார நீழற்
பொன்னவிர் சுணங்குண் கொங்கைப் புலோமசை மணாளன் பொற்பூண்
மின்னவிர்ந் திமைப்பச் சிங்கஞ் சுமந்தமெல் லணைமேன் மேவி
அன்னமென் னடையா ராடு மாடன்மே லாவம் வைத்தான். (௨)

மூவகை மலரும் பூத்து வண்டுளே முழங்கத் தெய்வப்
பூவலர் கொடிபோந் தன்ன பொன்னனார் கூத்து மன்னார்
நாவல ரமுத மன்ன பாடலு நாக நாட்டுக்
காவலன் கண்டு கேட்டுக் களிமகூக் கடலி லாழ்ந்தான். (௩)

பையரா வணிந்த வேணிப் பகவனை யனைய தங்கள்
ஐயனும் வியாழப் புத்தே ளாயிடை யடைந்தா னாகச்
செய்யதாள் வழிபா டன்றித் தேவர்கோ னிருந்தா னந்தோ
தையலார் மயலிற் பட்டோர் தமக்கொரு மதியுண் டாமோ. (௪)

ஒல்லெனக் குரவ னேக வும்பர்கோன் றிருவி னாக்கம்
புல்லெனச் சிறிது குன்றப் புரந்தர னறிந்திக் கேடு
நல்லதொல் குரவர் பேணா மையினால் விளைந்த தென்னா
அல்லலுற் றறிவ னன்னைத் தேடுவா னாயி னானே. (௫)

அங்கவ னிருக்கை புக்கான் கண்டில னவித்த பாசப்
புங்கவ னுலகு மேனோர் பதவியும் புவன மூன்றில்
எங்கணுந் துருவிக் காணா னெங்குற்றான் குரவ னென்னுஞ்
சங்கைகொண் மனத்த னாகிச் சதுர்முக னிருக்கை சார்ந்தான். (௬)

துருவின னங்குங் காணான் றிசைமுகற் றொழுது தாழ்ந்து
பரவிமுன் பட்ட வெல்லாம் பகர்ந்தனன் பகரக் கேட்டுக்
குரவனை யிகழ்ந்த பாவங் கொழுந்துபட் டருந்துஞ் செவ்வி
வருவது நோக்கிச் சூழ்ந்து மலர்மக னிதனைச் சொன்னான். (௭)

அனையதால குரவற காணு மளவுந் துவட்டா
தனையன்முச் சென்னி யுள்ளான் றானவர் குலத்தில் வந்தும்
வினையினா லறிவான் மேலான் விச்சுவ வுருவ னென்னும்
இனையனைக் குருவாக் கோடி யென்றலு மதற்கு நேர்ந்தான். (௮)

அழலவிர் தனைய செங்கே ழுடுக்கிதழ் முளரி வாழ்க்கைத்
தொழுதகு செம்ம றன்னைத் தொழுதுமீண் டகன்று நீங்கா
விழைதகு காதல் கூர விச்சுவ வுருவன் றன்னை
வழிபடு குருவாக் கொண்டான் மலர்மகன் சூழ்ச்சி தேறான். (௯)

கைதவக் குரவன் மாயங் கருதிலன் வேள்வி யொன்று
செய்திட லடிக ளென்னத் தேவர்கட் காக்கங் கூறி
வெய்தழல் வளர்ப்பா னுள்ளம் வேறுபட் டவுணர்க் கெல்லாம்
உய்திற நினைந்து வேட்டான் றனக்குமே லுறுவ தோரான். (௧௦)

வாக்கினான் மனத்தால் வேறாய் மகஞ்செய்வான் செயலை யாக்கை
நோக்கினா னோதி தன்னா னோக்கினன் குலிச வேலாற்
றாக்கினான் றலைகண் மூன்றுந் தனித்தனி பறவை யாகப்
போக்கினா னலகை வாயிற் புகட்டினான் புலவுச் சோரி. (௧௧)

தெற்றெனப் பிரம பாவஞ் சீறிவந் தமரர் வேந்தைப்
பற்றலு மதனைத் தீர்ப்பான் பண்ணவர் மரமேன் மண்மேற்
பொற்றொடி யார்மே னீர்மேல் வேண்டினர் புகுத்த லோடும்
மற்றவ ரிஃதியாந் தீர்க்கும் வண்ணம்யா தென்ன விண்ணோர். (௧௨)

சோமபானஞ்செய்யும் முகமுடையதலையைக் காடையாகவும், சுராபானஞ்செய்யும் முகமுடையதலையை ஊர்க்குருவியாகவும், அன்னபானஞ்செய்யும் முகமுடையதலையைச் சிச்சிலியாகவும் போக்கினனென்க

அப்பிடை நுரையாய் மண்ணி லருவருப் புவரா யம்பொற்
செப்பிளங் கொங்கை யார்பாற் றீண்டுதற் கரிய பூப்பாய்க்
கப்பினார் மரத்திற் காலும் பயினதாய்க் கழிக வென்றா
னிப்பழி சுமந்த வொன்க[illegible] கென்னல மென்[illegible]னும். (கங)

வேறு

கருவின் மாதர் கருவுயிர்க்கு மளவு முறையாற் கணவர்தோண்
மருவி வாழக் மண்ணகழ்ந்த குழியு மதனா லவ்வொழிக
பொருவி னீரு மிறைதோறு மூறிப் பொலிக மரங்குறைபட்
டொருவி னுலுந் தழைக்கவென வொழியா நலனு முதவினா (கச)

மாசிற் கழிந்த மணியேபோல் வந்த பழிதீர்ந் திந்திரனும்
தேசிற் றிகழ்த் துவட்டாத்தன் செல்வன் றனையீந் தேவர்பிரான்
வீசிக் குலிசத் துயிருண்ட விழுமங் கேட்டு வெகுண்டுயிர்த்துக்
கூசிப் பழிகொள் கருதியொரு கொடிய வேள்வி கடிதமைத்தான். (கரு)

அந்தக் குண்டத் தெரிசிகைபோ லழலுங் குஞ்சி யண்டமுக
டுந்தக் கொடிய தூமம்போ லுயிர்த்துச் செங்கண் சினஞ்செந்தீச்
சிந்தப் பிறைவா ளெயிறதுக்கித் திசைவான் செவிடு படநகைத்து
வந்தக் கொடிய விடம்போல வெழுந்தா னொருவான் மறவீரன். (கசு)

வேறு.

ஈங்குவன் விருத்திர னெனப்ப வாரழற்
றூங்குவன் கணைவிடு தூர நீண்டுநீண்
டோங்குவ னோங்குதற் கொப்ப வைகலும்
வீங்குவ னறனிலா வினையி னெனப்பவே. (கஎ)

வீங்குடல் விருத்திரன் றனைவிண் ணவர்
ஏங்குற வருதுவட் டாவெ னும்பெயர்த்
தீங்குறு மனத்தினேன் றேவர் கோனுயிர்
வாங்குதி பொருதென வரவிட் டானரோ. (கஅ)

மதிரத் துணி யெயிறறிஞேன் வடவை போற்சினைஇக்
கொதித்தெதிர் குறுகினான் கொண்ட வூர்தியும்
எதிர்த்தனன் களிற்றின்மே லிமையத் துச்சிமேல்
உதித்ததோர் கருங்கதி ரொக்கு மென்னவே (கக)

அறத்தொடு பாவநேர்ந் தென்ன வார்த்திரு
திறத்தரு மூண்டமர் செய்யக் கறசிறை
குறைத்தவன் றருவன்மேற் குலிச வேலெடுத்
துறைத்திட வீசினா னுடன்று களவனும். (உ0)

இடித்தனன் கையிலோ ரிருட்பு லக்கையைப்
பிடித்தனன் வரையெனப் பெயர்ந்து தீயெனத்
துடித்தனன் சசிமுலைச் சுவடு தோய்புயத்
தடித்தன னிந்திர ன[illegible]மாயினான். (உக)

அண்ட[illegible]னயவ னவச மாறிப்பின்
கண்டகன் கைதவ நினைந்திக் களவனோ
மண்டம ராற்றுவான் வலியி லோவெனப்
புண்டரீ கத்தவ னுலகிற் போயினான். (உஉ)

தாழ்ந்துதான் படுதுயர் விளம்பத் தாமரை
வாழ்ந்தவன் வலாரியோ டணைந்து மாமகள்
வீழ்ந்தமார் பினனடி வீழ்ந்து செப்பமால்
சூழ்ந்துவா னடைவை நோக்கிச் சொல்லுவான். (உ௩)

ஆற்றவும பழையது .... வச்சிரம்
மாற்றவ ருயிருண வலியின் முதலால்
வேற்றொரு புதியது வேண்டு மாவினிச்
சாற்றுது மதுபெறுந் தகைமை கேட்டியால். (உ௪)

தொடையகன் மார்பநாந் தூய பாற்கடல்
கடையுநா ளசுரருஞ் சுரருங் கையில்வெம்
படையொடு மடையஞ்மின் பழுதென் றப்படை
யடையவுந் ததீசிபா லடைவித் தாமரோ. (உ௫)

சேட்படு நாணனி செல்லத் தேவரா
வாட்படை யவுணரா வந்து கேட்டிலர்
ஞாட்படை படையெலா ஞான நோக்கினு
வேட்படை வென்றவன் விழுங்கி னூரே. (உ௬)

விழுங்கிய படையெலாம் வேற றத்திரண்
டொழுங்கிய தான்முது கந்தண் டொன்றி
எழுங்கதிர்க் குலிசமா மதனை யெய்துமுன்
வழங்குவன் கருணையோர் வடிவ மாயினான். (உ௭)

வே று.

என்று மாதவ னியம்ப வும்பர்கோன்
ஒன்றும் வானவர் தம்மொ டொல்லெனச்
சென்று மாயையின் செயலை நோன்பினால்
வென்ற மாதவ னிருக்கை மேவினான். (உ௮)

வே று.

அகமலர்ந் தருந்தவ னமரர்க் கன்புகூர்
முகமலர்ந் தின்னுரை முகமன் கூறிநீர்
மிகமெலிந் தெய்தினீர் விளைந்த தியாதது
தகமொழிந் திடலென வலாரி சாற்றுவான். (உ௯)

அடிகணீர் மருதமதொள் றதனை வேண்டியிம்
முடிகொள்வா னவரொடு முந்தி னேனது
செடிகொள்கா ரிருளுட லவுணர்த் தேய்த்தெமர்
குடியெலாம் புரப்பதோர் கொள்கைத் தாயது. (௩௦)

யாதெனி னினையதுன் யாக்கை யுள்ளதென்
றோதலும் யாவையு முணர்ந்த மாதவன்
ஆதவற் கண்டதா மரையி னனைப்
போதலர்ந் தின்னன புகலுவ தாயினான். (௩௧)

நாய்நம தெனநரி நமதெ னப்பிதாத்
தாய்நம தெனநமன் றனதெ னப்பிணி
பேய்நம தெனமன மதிக்கும் பெற்றிபோ
லாய்நம தெனப்படும் யாக்கை யாரதே. (௩௨)

விடம்பயி லெயிற்றர வுரியும் வீறுழை
குடம்பையுந் தானெனுங் கொள்கைத் தேகொலாம்
நடம்பயில் கூத்தரி னடிக்கு மைவர்வாழ்
உடம்பையும் யானென வுரைக்கற் பாலதோ. (௩௩)

நடுத்தயா விலார்தமை நலியத் துன்பநோய்
அடுத்தயா வருந்திரு வடைய யாக்கையைக்
கொடுத்தயா வறம்புகழ் கொள்வ னேயெனின்
எடுத்தயாக் கையின்பய னிதனின் யாவதே. (௩௪)

வேறு.

என்றனன் கரண மொன்றி யெழுகருத் தறிவை யீர்ப்ப
நின்றனன் பிரமநாடி நெறிகொடு கபாலங் கீண்டு
சென்றனன் விமான மேறிச் சேர்ந்தன னுலகை நோனபால்
வென்றனன் றுறக்கம் புக்கு வீற்றினி திருந்தா னம்மா. (௩௫)

அம்முனி வள்ள லீந்த வடுபடை முதுகந் தண்டைத்
தெம்முனை யடுபோர் சாய்க்குந் திறல்கெழு குலிசஞ் செய்து
கம்மியப் புலவ னுக்கங் கரைந்துகைக் கொடுப்ப வாங்கி
மைம்முகி லூர்தி யேந்தி மின்விடு மழைபோ னின்றான். (௩௬)

மறுத்தவா வஞ்சப் போரால் வஞ்சித்து வென்று போன
கறுத்தவா ளவுணற் கொல்வான் கடும்பரி நெடுந்தேர் நீழல்
வெறுத்தமால் யானை மள்ளர் வேலைபுக் கெழுந்து குன்றம்
அறுத்தவா னவர்கோ னந்த வவுணர்கோ மகனைச் சூழ்ந்தான். (௩௭)

வானவர் சேனை மூண்டு வளைத்தலும் வடவைச் செந்தீ
யானது வரையி னோங்கி யழன்றுருத் தெழுந்தா லென்னத்
தானவர் கோனு மானந் தலைக்கொள வெழுந்து பொங்கிச்
சேனையுந் தானு மூண்டு சீறிநின் றடுபோர் செய்வான். (௩௮)

அடுத்தன ரிடியே றென்ன வார்த்தன ராக்கங் கூறி
எடுத்தனர் கையிற் சாப மெறிந்தனர் சிறுநா ணோசை
தொடுத்தனர் மீளி வாளி தூர்த்தனர் குந்த நேமி
விடுத்தனர் வானோர் சேனை வீரர்மே லவுண வீரர். (௩௯)

கிட்டினர் கடகக் கையாற் கிளர்வரை யனைய திண்டோள்
கொட்டினர் சாரி மாறிக் குதித்தனர் பலகை நீட்டி
முட்டின ரண்டம் விள்ள முழங்கினர் வடிவா ளோச்சி
வெட்டின ரவுணச் சேனை வீரரை வான வீரர். (௪௦)

வீழ்ந்தனர் தோளுந் தாளும் விண்டனர் சோரி வெள்ளத்
தாழ்ந்தனர் போருந் தாரு மகன்றன ரகன்ற மார்பம்
போழ்ந்தனர் சிரங்க ளெங்கும் புரண்டனர் கூற்றார் புக்கு
வாழ்ந்தன ரடுபோ ராற்றி வ[illegible]கன் சேனை மள்ளர். (௪௧)

தாளொடு கழலு மற்றார் தலையொடு முடியு மற்றார்
தோளொடு வீர மற்றார் தும்பையொ டமரு மற்றார்
வாளொடு கரமு மற்றார் மார்பொடு கவச மற்றார்
கோளொடு மாண்மை யற்றார் குறைபடக் குறையா மெய்யார். (௪௨)

தொக்கன கழுகு சேனஞ் சொரிகுடர் பிடுங்கி யீர்ப்ப
உக்கன குருதி மாந்தி யொட்டல்வாய் நெட்டைப் பேய்கள்
நக்கன பாடல் செய்ய நாட்பிணுட் கவந்த மாடப்
புக்கன பிணத்தின் குன்றம் புதைத்தபார் சிதைச் சண்டம். (௪௩)

இவ்வகை மயங்கிப் போர்செய் திறந்தவ ரொழியப பனுனுங்
கைவ்வகை யடுபோ ராற்றிக் கரையிறந் தார்கண் மாண்டார்
அவ்வகை யறிந்து வானத் தரசனு மவுணர் வேந்துந்
தெய்வதப் படைகள் வீசிச் சீறினின் றடுபோர் செய்வார். (௪௪)

அனற்படை விடுத்தான் விண்ணோ ராண்டகை யதனைக் கள்வன்
புனற்படை விடுத்துச் சிற்றந் தணித்தனன் புனிதன் காற்றின்
முனைப்படை விடுத்தான் வெய்யோன் முழங்குகால் விழுங்கு நாகச்
சினப்படை தொடுத்து வீசி விலக்கினான் றேவ ரஞ்ச. (௪௫)

நாகமாப் படைவிட் டார்த்தா னகர்கோ னுவணச் செல்வன்
வேகமாப் படையை வீசி விலக்கினான் றகுவர் வேந்தன்
மோகமாப் படையைத் தொட்டு முடுக்கினான் முனைவ னன்ன
தேகமாப் படிறன் ஞானப் படைவிடுத் திருள்போ னின்றான் (௪௬)

மட்டிடு தாரான் விட்ட வானவப் படைக்கு மாறு
விட்டுடன் விலக்கி வேறும் விடுத்திடக் கனன்று வஞ்சன்
முட்டிட மான வெங்கான் மூட்டிடக் கோபச் செந்தீச்
சுட்டிடப் பொருது பொங்கிச் சுராதிப னிதனைச் செய்தான். (௪௭)

வீங்கிரு ளொதுங்க மேக மின்விதிர்த் தென்னக் கையில்
ஓங்கிருங் குலிச வேலை யொல்லென விதிர்த்த லோடுந்
தீங்குளம் போன் றிருண்ட திணியுடற் கள்வ னஞ்சி
வாங்கிருங் கடலில் வீழ்ந்தான் மறைந்தமை நாக மொத்தான். (௪௮)

ஒக்கவிந் திரனும் வீழ்ந்தா னுடல்சின வுருமே றன்னான்
புக்கிடந் தேடிக் காணான் புண்ணிய முளரி யண்ணல்
பக்கம்வந் தனைய செய்தி பகர்ந்தனன் பதகன் மாளத்
தக்கதோர் சூழ்ச்சி முன்னிச் சராசர மீன்ற தாதை. (௪௯)

விந்தவெற் படக்கி னாற்கீ துரையென விடுப்ப மீண்டு
சந்தவெற் படைந்தான் வானோர் தலைவனை முகமன் கூறிப்
பந்தவெற் பறுத்தான் வந்த தெவனெனப் பறைக ளெல்லாஞ்
சிந்தவெற் பறுத்தான் வந்த செயலெல்லா முறையாற் செப்பி. (௫௦)

யாவையு முணர்ந்த வெந்தைக் கியானெடுத் துணர்த்து கின்ற
தாவதென் னமருக் காற்றா தாழிபுக் கொளித்தா னவி
வீவது மவனால் வந்த விழுமமோ யெல்லா மின்று
போவதுங் கருதி நும்பாற் புகுந்தன் மடிக வென்றான். (௫௧)

என்றவ னிடுக்கண் டீர்ப்பா னிகல்புரி புலன்க ளைந்தும்
வென்றவ னெடியோன் றன்னை விடையவன் வடிவ மாக்கி
நின்றவ னறிவா னந்த மெய்ம்மையாய் நிறைந்த வெள்ளி
மன்றவ னூழிச் செந்தீ வடிவினை மனத்துட் கொண்டான் (௫௨)

கைதவன் கரந்து வைகுங் கடலைவெற் படக்குங் கையிற்
பெய்துழுந் தெல்லைத் தாக்கிப் பருகினன் பிறைசேர் சென்னி
ஐயனை தருளைப் பெறரூர்க் கதிசய மிதென்கொன் மூன்று
வையமுத் தொழிலுஞ் செய்ய வல்லவ ரவரே யன்றோ. (௫௩)

அறந்துறந் திட்டு வார்த மருஞ்பெறற் செல்வம் போல
வறந்தன படுநீர்ப் பௌவம் வடவைகட் புலப்பட் டாங்கு
நிறைந்தசெம் மணியு மத்தீ நீண்டெரி சிகைபோ னீண்டு
சிறந்தெழு பவளக் காடுந் திணியிருள் விழுங்கிற் றம்மா. (௫௪)

பணிகளின் மகுட கோடிப் பரப்பென விளங்கிப் பல்கா
சணிகலப் பேழை பேழ்வாய் திறந்தனைத் தாகி யொன்டான்
மணிகிடந் திமைக்கு நீரான் மகபதி வேள்விக் கரவாய்த்
திணியுட லவுணன்பட்ட செங்கள மனைய தன்றே. (௫௫)

வறந்தநீர் தன்னின் மின்னு வாள்விதிர்த் தென்னப் பன்மீன்
எறிந்தன நெளிந்த நாக மிமைத்தன வளையு முத்துஞ்
செறிந்தன கரந்த யாமை சேர்ந்தபல் பண்டஞ் சிந்தி
முறிந்தன வங்கங் கங்க முக்கின சிறுமீ னெல்லாம். (௫௬)

செருவினி லுடைந்து போன செங்கண்வா ளவுண னங்கோர்
அருவரை முதுகிற் கார்போ லடைந்துவா னுடர் செய்த
உருகெழு பாவந் தானே ருருவெடுத் திருந்து நோற்கும்
பரிசென நோற்று னின்னும் பரிபவ விளைவு பாரான். (௫௭)

கைதவ நோன்பு நோற்குங் கள்வனைக் கண்டு வானோர்
செய்தவ மனையான் யாணர் வச்சிரஞ் * சீரிப் பான்போற்
பொய்தவன் றலையைக் கொய்தான் புணரிவாய் நிறையச் சோரி
பெய்தது வலாரி தன்னைப் பிடித்தது பிரமச் சாயை. (௫௮)

உம்மெனு மார்பைத் தட்டு முருத்தெழு மதிர்க்கும் போர்க்கு
வம்மெனும் வாய்ம டிக்கும் வாளெயி றதுக்கும் வீழுங்
கொம்மென வோடு மீளுங் கொதித்தழுஞ் சிரிக்குஞ் சீறும்
இம்மெனு மளவு நீங்கா தென்செய்வா னஞ்சி னானே. (௫

விரைந்தரன் றிசையோர் வாவி வீழ்ந்தொரு கமல நாலுட்
கரந்தனன் மகவா னிப்பாற் கற்பக நாடு புல்லென்
றிருந்ததா விருக்கு மெல்லை யிம்பரி னகுட னென்போன்
அரும்பரி மேத வேள்வி யாற்றினு னூற்று மெல்லை. (௬௦)

அரசிலா வறுமை நோக்கி யவனைவா னுடர் யாரும்
விரைசெய்தார் மகுடஞ் சூட்டி வேந்தனாக் கொண்டார் வேந்த
வருபவன் சசியை யீண்டுத் தருகென மருங்கு ளார்போய்த்
திரைசெய்நீ ரமுத னுட்குச் செப்பவக் கற்பின் மிக்காள். (௬௧)

பொன்னுயிர்த் தனைய காட்சிப் புண்ணிய குரவன் முன்போய்
மின்னுயிர்த் தனையா ணின்று விளம்புவா ளிதென்கொல் கெட்டேன்
என்னுயிர்த் துணைவ னிங்கே யிருக்கமற் றொருவ னென்னைத்
தன்னுயிர்த் துணையாக் கொள்கை தருமமோ வடிக ளென்றாள். (௬௨)

* சீரித்தல் - பரீக்ஷித்தல்.

மாதவ மைழுவ தாங்க மாமணிச் சிவிகை மீது
போதரி னவனே வானோர் புரந்தர னவனே யுன்றன்
காதல னுகு மென்றான் கைதொழு ததற்கு நேர்ந்தம்
மேதகு சிறப்பா லிங்கு வருகென விடுத்தா ரேது. (௬௩)

மனிதரின் மகவா னாகி வருபவன் சிவிகை தாங்கும்
புனிதமா தவரை யெண்ணான் புன்கணோய் விளைவும் பாரான்
கனிதரு காமந் துய்க்குங் காதலால் விரையச் செல்வான்
இனிதயி ராணி பாற்கொண் டேகுமின் * சர்ப்ப வென்றான். (௬௪)

சர்ப்பமா கெனமுற் கொம்பு தாங்கிமுன் னடக்குந் தென்றல்
வெற்பனு முனிவன் சாபம் விளைத்தனன் விளைத்த லோடும்
பொற்பமா சுணமே யாகிப் போயின னறிவி லாத
அற்பரா னவர்க்குச் செல்வ மல்லது பகையே றுண்டோ. (௬௫)

பின்னர்த்தங் குரவ னான பிரானடி பணிந்து வானோர்
பொன்னகர் வேந்த னின்றிப் புலம்படை கின்ற தைய
என்னலுங் குரவன் போயவ் விலஞ்சியு ளொளித்தாற் கூவித்
தன்னுரை யறிந்து போந்த சதமகற் கொண்டு மீண்டான். (௬௬)

கொடும்பழி கோட்பட் டான்றன் குரவனை வணங்கி யென்னைச்
சுடும்பழி கழிவ தெங்ஙன் சொல்லெனத் தொலைவ தோர்ந்தான்
அடும்பழி மண்மே லன்றி யறாதுநீ வேட்டைக் கென்னப்
படும்பழி யிதனைத் தீர்ப்பான் பார்மிசை வருதி யென்றான். (௬௭)

ஈசனுக் கிழைத்த குற்றந் தேசிக னெண்ணித் தீர்க்குந்
தேசிகற் கிழைத்த குற்றங் குரவனே தீர்ப்ப தன்றிப்
பேசுவ தெவனோ தன்பாற் பிழைத்தகா ரணத்தால் வந்த
வாசவன் பழியைத் தீர்ப்பான் குரவனே வழியுங் கூற. (௬௮)

வாம்பரி யுகைத்துத் தன்னால் வழிபடு குரவன் வானோர்
தாம்பரி வோடுஞ் சூழத் தராதலத் திழிந்து செம்பொற்
காம்பரி தோளி பங்கன் கயிலைமால் வரையைத் தாழ்ந்து
தேம்பரி யலங்கன் மார்பன் றென்றிசை நோக்கிச் செல்வான். (௬௯)

வேறு.

கங்கைமுத லளவிறந்த தீர்த்தமெலாம் போய்ப்படிந்து காசி காஞ்சி
அங்கனக கேதார முதற்பதிகள் பலபணிந்து மவுணற் கொன்ற
பொங்குபழி விடாதழுங்கி யராவுண்ண மாசுண்டு பொலிவு மாழ்குந்
திங்களனை யான்கடம்ப வனத்தெல்லை யணித்தாகச் செல்லு மெல்லை. (௭௦)

தொடுத்தபழி வேறுகி விடுத்தகன்ற திந்திரன்றான் சுமந்த பாரம்
விடுத்தவனைத் தளவிறந்த மகிழ்வெய்தித் தேசிகன்பால் விளம்பப் பாசங்
கெடுத்தவன்மா தலம்புனித தீர்த்தமுள விவணமக்குக் கிடைத்தல் வேண்டும்
அடுத்தறிக வென்ச்சிலரை விடுத்தவ்வே ழுநிலைநின் றப்பாற் செல்வான். (௭௧)

அருவிபடிந் தருவியெறி மணியெடுத்துப் பரிறையிலிட் டருவி நீர்தூய்க்
கருவிரல்கொய் தலர்சூட்டிக் கனியூட்டி வழிபடுவ கல்லா மந்தி
ஒருதுறையில யாளிகரி புழைக்கைமுகந் தொன்றற்கொன் றூட்டி யூட்டிப்
பருகுவன புலிமுலைப்பால் புலவாய்க்கன் றருத்தியிடும் பசிமாய்த்தீர. (௭௨)

* சர்ப்ப என்பது - விரைந்து நடக்கவென ஏவுதல்.

நெளியராக் குருளைவெயில் வெள்ளிடையிற் கிடந்துயங்கி நெளியப் புள்ளே
றொளியருச் சிறைவிரித்து நிழல்பரப்பப் பறவைநோ யுற்ற தேகொல்
அளியவா யச்சோவென் றோதியயன் மடமந்தி யருவி யூற்றுந்
துளியநீர் வளைத்தசும்பின் முகந்தெடுத்துக் கருங்கையினுற் சொரிவ மாதோ.

படவரவ மணியீன்று நெரிச்சிப்பா சிலையன்ன பைந்தாண் மஞ்ஞை
பெடைதழுவி மணஞ்செய்ய மணவறையில் விளக்கிடுவ பெருந்தண் கானத்
தடர்சிறைமென் குயிலோமென் றார்ப்பமடக் கிள்ளையெழுத் தைந்து மோசைத்
தொடர்புபெற வுச்சரிப்பக் குருமொழிகேட் டாங்குவப்ப தொடிக்கட் பூவை.

இன்னவிலங் கொடுபுள்ளின் செயற்கரிய செயனோக்கி யிறும்பூ தெய்திப்
பொன்னகரான் புளகமுடல் புதைப்பநிறை மகிழ்ச்சியுளம் புதைப்பப் போவான்
அன்னபொழு தொற்றுவர்மீண் டடிவணங்கி யின்சுவைப்பா லருந்து வான்முன்
பின்னரிய தேனசொரிந்தாங் குவகைமேற் பேருவகை பெருகச் சொல்வார்.

எப்புவனத் திலுமென்றுங் கண்டறியா வதிசயமு மெண்ணுக் கெய்தாத்
திப்பியமு மிக்கடம்ப வனத்தின்று கண்டுவகை திளைத்தே மங்கண்
வைப்பனைய வொருபுனித வாவிமருங் கொருகடம்ப வனத்தினீழல்
ஒப்பிலொளி யாய்முளைத்த சிவலிங்க மொன்றுளதென் றுரைப்பக் கேட்டான்.

செவித்துளையி லமுதொழுக்கு முழையரொடும் வழிக்கொண்டு சென்னிமேற்கை
குவித்துளமெய் மொழிகரணங் குணமூன்று மொன்றித்தன் கொடியபாவம் †
அவித்துளயர் வொழிக்கமுளைத் தருள்குறிமே லன்பீர்ப்ப வடைவான் கானங்
கவித்துளபூந் தடம்படிந்து கடம்பவனத் துழைநுழைந்தான் கவலை தீர்வான்.

அருவாகி யுருவாகி யருவுருவங் கடந்துண்மை யறிவா னந்த
உருவாகி யளவிறந்த வுயிராகி யவ்வுயிர்க்கோ ருணர்வாய்ப் பூவின்
மருவாகிச் சராசரங்க ளகிலமுந்தன் னிடையுதித்து மடங்க நின்ற
கருவாகி முளைத்தசிவக் கொழுந்தையா யிரங்கண்ணுங் களிப்பக் கண்டான்.

கண்டுவிழுந் தெழுந்துவிழி துளிப்பவெழு களிப்பென்னுங் கடலி லாழ்ந்து
விண்டுமொழி தழுதழுப்ப வுடல்பனிப்ப வன்புருவாய் விண்ணோர் வேந்தன்
அண்டர்பிரா னருச்சனைக்கு வேண்டுமுப கரணமெலா மகல்வா னெய்திக்
கொண்டுவரச் சிலரைவிடுத் தவரேகப் பின்னுமொரு குறைவு தீர்ப்பான். (௭௯)

தங்குடிமைத் தச்சனையோர் விமானமமைத் திடவிடுத்தத் தடத்தின் பாற்போய்
அங்கணனைக் கடிதருச்சித் திடநறிய மலர்கிடையா தயர்வா னந்தச்
சங்கெறிதண் டிரைத்தடத்தி லரனருளாற் பலபரிதி சலதி யொன்றிற்
பொங்குகதிர் பரப்பிமுளைத் தாலென்னப் பொற்கமலம் பூப்பக் கண்டான். (௮௰)

அன்புதலை சிறப்பமகிழ்ந் தாடினான் காரணத்தா லதற்கு நாமம்
என்பதுபொற் றாமரையென் றேழுலகும் பொலிகவென விசைத்துப் பின்னும்
இன்புதுமத் தடங்குடைந்து பொற்கமலங் கொய்தெடுத்து மீண்டு நீங்காத்
தன்பிணிநோய் தணியமுளைத் தெழுந்தமுழு முதன்மருந்தின் றன்பால் வந்து.

மொய்த்தபுனக் காடெறிந்து நிலந்திருத்தி வருமளவின் முளைத்த ஞான
வித்தனைய சிவக்கொழுந்தின் றிருமுடிமேற் பரிதிகர மெல்லத் தீண்டச்
சித்தநெகிழ்ந் திந்திரன்றன் வெண்கவிகைத் திங்கணிழல் செய்வா னுள்ளம்
… னணப் போதிர்வி மண்டலம்போ விழிந்ததொரு மணிவி மானம். (௮௨)

தொடிக்கண் - வட்டமாகிய கண்.

† கொடியபாசம் என்றும் பாடம்.

கிரியெட்டு மேனமழையைக் கிழித்தெட்டும் புழைக்கைமதிக் கீற்றுக் கோட்டுக்
கரியெட்டுஞ் சினமடங்க னாலெட்டு மெட்டெட்டுக் கணமுந் தாங்க
விரியெட்டுத் திசைபரப்பு மயனிருமித் துதவியவவ் விமானஞ் சாத்தி
அரியெட்டுத் திருவுருவப் பரஞ்சுடரை யருச்சிப்பா னாயி னானே. (௮௩)

முந்தவம ருலகடைந்து பூசனைக்கு வேண்டுவன முழுதுந் தேர்வார்,
வந்துதரு வைந்தினைற பொன்னாடை மின்னுமிழு மணிப்பூண் யாச்ச்
சந்தனமர் தாகினிமஞ் சனந்தூபந் திருப்பள்ளித் தாமந் தீபம்
அந்தமிலா னைந்துநறுங் கனிதீந்தேன் றிருவமுத மனைத்துந் தந்தார். (௮௪)

தெய்வத்தா மரைமுளைத்த தடம்படிந்து பவந்தொலைக்குந் திருநீ றுடிச்
சைவத்தாழ் வடந்தாங்கி யன்புருவா யருளுருவந் தானாய்த் தோன்றும்
பைவைத்தா டரவூர்த்த பசுபதியை யவனுரைத்த பனுவ லாற்றின்
மெய்வைத்தா தரம்பெருக வருச்சனைசெய் தானந்த வெள்ளத் தாழ்ந்தான்

பாரார வட்டாங்க பஞ்சாங்க விதிமுறையாற் பணிந்துள் வாய்மெய்
நேராகச் சூழ்ந்துடலங் கம்பித்துக் கும்பிட்டு நிருத்தஞ் செய்து
தாராருந் தொடைமிதப்ப வானந்தக் கண்ணருவி ததும்ப நின்றன்
பாராமை மீக்கொள்ள வஞ்சலித்துத் துதிக்கின்றா னமரர் கோமான். (௮௬)

வேறு.

அங்கணா போற்றி வாய்மை யாரணா போற்றி நாக
கங்கணா போற்றி மூல காரணா போற்றி நெற்றிச்
செங்கணா போற்றி யாதி சிவபரஞ் சுடரே போற்றி
எங்கணா யகனே போற்றி யீறிலா முதலே போற்றி. (௮௭)

யாவையும் படைப்பாய் போற்றி யாவையுந் துடைப்பாய் போற்றி
யாவையு மானாய் போற்றி யாவையு மல்லாய் போற்றி
யாவையு மறிந்தாய் போற்றி யாவையு மறந்தாய் போற்றி
யாவையும் புணர்ந்தாய் போற்றி யாவையும் பிரிந்தாய் போற்றி. (௮௮)

இட்டுறப் பிணித்த விந்தப் பழியினின் றென்னை யீர்த்துன்
அடியிணைக் கன்ப னாக்கு மருட்கடல் போற்றி சேற்கண்
மடவரன் மணாள போற்றி கடம்பமா வனத்தாய் போற்றி
சுடர்விடு விமான மேய சுந்தர விடங்க போற்றி. (௮௯)

பூசையும் பூசைக் கேற்ற பொருள்களும் பூசை செய்யும்
நேசனும் பூசை கொண்டு நியதியின் பேறு நல்கும்
ஈசனு மாகிப் பூசை யான்செய்தே னெனுமென் போத
வாசனை யதுவு மான மறைமுத லடிகள் போற்றி. (௯0)

என்னநின் றேத்தி னானை யின்னகை சிறிது தோன்ற
முன்னவ னடியா ரெண்ண முடிப்பவ னருட்க ணோக்கால்
உன்னது வேட்கை யாதிங் குரையென விரையத் தாழ்ந்து
சென்னிமேற் செங்கை கூப்பித் தேவர்கோ னிதனை வேண்டும். (௯௧)

ஐயநின் னிருக்கை யெல்லைக் கணியனா மளவி னிங்கா
வெய்யவென் பழியி னோடு மேலைநா ளடியேன் செய்த
மையல்வல் வினையு மாய்ந்துன் மலரடி வழுத்திப் பூசை
செய்யவு முரிய னானேன் சிறந்தபே றிதன்மேல் யாதோ. (௯௨

இன்னநின் பாதப் போதே யிவ்வாறே யென்றும் பூசித்
துன்னடி யாருள் யானு மோரடித் தொண்ட னாவேன
அன்னதே யடியேன் வேண்டத் தக்கதென் றடியில் வீழ்ந்த
மன்னவன் றனக்கு முக்கண் வரதனுங் கருணை பூத்து. (கூங)

வேறு.

இருதுவிற் சிறந்த வேனிலு மதியா றிரண்டினிற் சிறந்தவான் நகரும்
பொருவிறு ரகையிற் சிறந்தசித் திரையுந் திதியினிற் சிறந்தபூ ரணையும்
மருவுசித் திரையிற் சித்திரை தோறும் வந்துவந் தருச்சியோர் வருடந்
தெரியுநாண் முந்நூற் றறுபது மைந்துஞ் செய்தவர்ச் சனைப்பய னெய்தும். ()

துறக்கநா டணைந்து சுத்தபல் போகந் துய்த்துமேன் மலபரி பாகம்
பிறக்கநான் முகன்மான் முதற்பெருந் தேவர் பெரும்பதத் தரிசையும் பிறவும்
மறக்கநாம் வீடு வழங்குது மென்ன வாய்மலர்ந் தருளிவான் கருணை
சிறக்கநால் வேதச் சிகையெழு மநாதி சிவபரஞ் சுடர்விடை கொடுத்தான். (கூரு)

மூடினான் புளகப் போர்வையால் யாக்கை முடிமிசை யஞ்சலிக் கமலஞ்
சூடினான் வீழ்ந்தா னெழுந்துகண் ணருவி துளும்பினான் பன்முறை துதிசெய்
தாடினா னைய னடிபிரி வாற்றா தஞ்சினா னவனரு ளாணை
நாடினான் பிரியா விடைகொடு துறக்க நண்ணினான் விண்ணவர் நாதன். (கூசு)

வேறு.

வந்தரமங் கையர்கவரி மருங்கு வீச மந்தார கற்பகப்பூ மாரி தூற்ற, அந்தர நாட் டவர்முடிக ளடிகள்சூட வயிராணி முலைத்த டந்தோய்ந் தகலந் திண்டோள், விந்தமெனச் செம்மாந்து விம்மு காம வெள்ளத்து ளுடலழுந்த வுள்ளஞ் சென்று, சுந்தரநா யகன்கருணை வெள்ளத் தாழ்ந்து தொன்முறையின் முறைசெய்தான் றுறக்க நாடன். (கூஎ)

இந்திரன்பழிதீர்த்தபடல முற்றிற்று.

ஆக திருவிருத்தம் - சசo.

இரண்டாவது

வெள்ளையானைச்சாபந்தீர்த்தபடலம்.

மட்டவிழுங் கொன்றைச் சடையான் மகவானைத்
தொட்ட பழியின் றொடக்கறுத்த வாறீது
பட்டமத வேழம் பரனைப் பராய்முனிவன்
இட்டகொடுஞ் சாபநீத் தேகியவா றோதுவாம். (க)

கருவா சனைகழிக்குங் காசிநகர் தன்னிற்
றுருவாச வேதமுனி தொல்லா கமத்தின்
பெருவாய்மை யாற்றன் பெயர்விளங்க வீசன்
ஒருவா விலிங்க வொளியுருவங் கண்டான். (உ)

இன்புற் றருச்சனைசெய் தேத்துவா னவ்வேலை
அன்புக் கெளிய னருளாற் றிருமுடிமேன்
மின்பொற் கடிக்கமலப் போதொன்று வீழ்த்திடலுந்
தன்பொற் கரகமலப் போதலர்த்தித் தாங்கினான். (ங)

தாங்கிக்கண் சென்னி தடமார் பணைத்துடலம்
வீங்கித் தலைசிறந்த மெய்யுவகை மேற்கொள்ள
நீங்கிக் கழிந்த கருணை நிதியனையான்
பூங்கற் பகநாட்டிற் போகின்றா னவ்வேலை. (ச)

சங்கலறச் செங்களத்துத் தானவரைத் தேய்த்துவிறற்
கொங்கலர்தார் வேய்ந்தமரர் கோமான்றன் கோநகரிற்
செங்க ணமரர்பெருஞ் சேனைக் கடல்கலிப்ப
மங்கலப்பல் லாண்டு மறைமுழங்க வந்தணைவான். (ரு)

எத்திக்குங் கல்லென் றியங்கலிப்ப வேந்திழையார்
தித்தித் ததும்புதொழுக்குங் கீதஞ் செவிமடுப்பப்
பத்திக் கவரிநிரை தானைப் படுகடலிற்
த்திப் புரளுந் திரைபோற் றலைபனிப்ப. (சு)

அங்கட் கடலி னெடுங்கூம் பகநிமிர்ந்த
வங்கத் தலையுய்க்கு மீகான் றனைமானத்
திங்கட் குடைநிழற்றத் தீந்தே மதங்கவிழ்க்கும்
வெங்கட் களிற்றின் மிசைப்பவனி போந்தணைந்தான். (எ)

அத்தலைவிண் ணாட ரருகணைந்து வெவ்வேறு
தத்த மனக்கிசைந்த கையுறைக டாங்கொடுத்துக்
கைத்தலங்கள் கூப்பினார் கண்டார் கடவுளரில்
உத்தமனை யர்ச்சித்துப் போந்தமுனி யுத்தமனும். (அ)

தீங்கரிய வாசிமொழி செப்பித்தன் செங்கரத்தின்
நீங்கரிய தாமரையை நீட்டினான் மற்றதனைத்
தாங்கரிய செல்வத் தருக்காலோர் கையோச்சி
வாங்கிமத யானையின்மேல் வைத்தான் மதியில்லான். (கூ)

சீறிக் கிடந்த மதியனைய கிம்புரிக்கோட்
டேறிக் கடங்கவிழ்க்கு மால்யானை யுச்சியின்மேல
நாறிக் கிடந்த நறுமலரை வீழ்த்தியுரற்
சீறிக் கிடந்தநெடுந் தாளாற் சிதைத்தன்றே. (கO)

கண்டான் முனிகாமற் காய்ந்தா னுதற்கண்போல்
விண்டா ரழல்சிதற நோக்கினான் வெங்கோபங்
கொண்டா னமர ரொதுங்கக் கொதித்தாலம்
உண்டா னெனநின் றுருத்தா னுரைக்கின்றான். (கக)

புள்ளியந்தோ லாடை புனைந்தரவப் பூணணிந்த
வெள்ளிய செங்கண் விடையா னடிக்கமலம்
உள்ளிய மெய்யன் புடையா ரருவருத்துத்
தள்ளிய செல்வத் தருக்கினா யென்செய்தாய். (கஉ)

கதிர்த்தார் முடியமரர் கையுறையே நன்கு
மதித்தா யெம்மீசன் மதிமுடிமேற் சாத்தும்
பொதித்தா தவிழ்மலரைப் போற்றாது வாங்கி
மிதித்தானை சிந்தவதன் மேல்வைத்தாய் பேதாய். (கங)

வண்டுளருந் தண்டுழாய் மாயோ னிருமாப்பும்
புண்டரிகப் போதுறையும் புத்தே ளிருமாப்பும்
அண்டர்தொழ வாழுன் னிருமாப்பு மாலாலம்
உண்டவனைப் பூசித்த பேறென் றுணர்ந்திலையால் (௧௪)

சேட்டானை வானவங்கின் சென்னி செழுமலரை
வாட்டானை வீரன் வளையாற் சிதறுகின்
கோட்டான நாற்கோட்டு வெண்ணிறத்த குஞ்சரமுங்
காட்டானை யாகவென விட்டான் கடுஞ்சாபம். (௧௫)

சவித்தமுனி பாதந் தலைக்கொண்டு செங்கை
குவித்தமரர் தங்கோன் குறையிரப்பா ரைய
அவித்தபொறி யாயெம் மரசுங்கா றள்ளுந்
செவித்தறுகண் வேழமுந் தீங்குடைய ரன்றோ. (௧௬)

அத்தகைய சீரரற் சபித்தீ ரடிகேண்மற்
றித்தகைய சாப மினிவிடுமி னென்றிரந்து
கைத்தலங்கள் கூப்பிக் கரைந்தார்க் கிரங்கியருள்
வைத்த முனிபிறிது சாபம் வகுக்கின்றான். (௧௭)

வேறு.

சிந்தனை வாகுற மகட்டாச் சிவனரு ளளித்த சேட
நிந்தனை பரிகா ரத்தா னீங்காது தலைமட் டாக
வந்தது முடிமட் டாக மத்தமா வனமா வாகி
ஐந்திரு பஃதாண் டெல்லை யகன்றபின் பண்டைத் தாக. (௧௮)

என்றனன் பிறிது சாப மிந்திரன் மகுட பங்கம்
ஒன்றிய செய்கை பின்ன ருரைத்துமற் றஃது நிற்க
நின்றவெள் ளானை வான நீத்தறி விழந்து நீலக்
குன்றென வனத்து வேழக் குழாத்தொடு குழீஇய தன்றே. (௧௯)

மாவொடு மயங்கிச் செங்கண் மறம்பயில் காடு முல்லைப்
பூவொடு வழங்கு நீத்தப் புறவமுங் குறவர் தங்கள்
தேவொடு பயிலுங் கல்லுந் திரிந்துநா ளுண்டுஞ் செல்லக்
காவொடு பயிலுந் தெய்வக் கடம்பமா வனம்புக் கன்றே. (௨௦)

புக்குரல் வட்டத் திண்காற் பொருவிறே வியலிற் றீர்ந்த
மைக்கருங் களிறு முக்கண் மாதவ னருள்வந் தெய்தத்
தக்கதோ ரமையஞ் சார மரகதந் தழைத்து மின்னு
நக்கபொன் முளரி பூத்த நளிர்கயந் தலைக்கண் டன்றே. (௨௧)

கண்டபோ தறிவு தோன்றக் கயந்தலை குடைந்த போது
பண்டைய வடிவுந் தோன்றப் பரஞ்சுட ரருட்கண் டோன்றக்
கொண்டதோர் பரமா னந்தக் குறியெதிர் தோன்றக் கும்பிட்
டண்டர்நா யகனைப் பூசை செய்வதற் கன்பு தோன்ற. (௨௨)

தூம்புடைக் [illegible] மஞ்சனத் தூநீ ராட்டித்
தேம்புடை யொழுகப் பள்ளித் தாமமுந் தெரிந்து சாத்திப்
பாம்புடைத் தாயவேணிப் பரனையர்ச் சிக்கவுள்ளத்
தாம்புடை யறிந்த வெள்ளை யானையை நோக்கிக் கூறும். ([illegible])

வந்தனை யெவனீ வேண்டும் வரமெவ ... ... யன்னச்
சிந்தையி லன்பு கூர்ந்த தெய்வத வேழந் தாழ்ந்து
முந்தையில் வினைவீம் வந்த முறைமையு முறையா...
எந்தையை யடையப் பெற்றேற் கினியொரு குறையுண் டாமோ. (உச)

என்பதா மாரம் பூண்ட வெந்தையிக் கரிக வீட்டோ
டொன்பதா யடிய னேனு முன்னடி பிரியா துன்றன்
முன்பதா யிவ்வி மான முதுகுறச் சுமப்ப லென்றோர்
அன்பதா யொன்றென் னுள்ளத் தடுத்ததா லஃதே வேண்டும். (உரு)

இடையறு வன்பின் வேழ மிங்ஙனங் கூற விண்ணு
டையவ னம்பான் மெய்யன் புடையவ னவனைத் தாங்கி
அடைவதே நமக்கு வேண்டு மகமகிழ் வென்னப் பின்னும்
விடையவன் வரங்க ணல்கி விடைகொடுத் தருளி னானே. (உசு)

வேறு.

விடைகொடு வணங்கி பேரும்வெள் ளானை மேற்றிசை யடைந்துதன் பெயராற்
றடமுமற் றதன்பா லரனையுங் கணேசன் றன்னையுங் கண்டருச் சனைசெய்
திடையறு வன்புந் தானுமங் கிருக்கு மெல்லையிச் செய்திகேட் டருள்கூர்
கடவுளர் பெருமானுழையரைவிளித்தெங்களிற்றினைக்கொணர்கெனவிடுத்தான்

வல்லைவந் தழைத்தார் தம்மைமுன் போக்கி வருவலென் றெழுந்துகீழ்த் திசையோ
ரெல்லைவந் தோரூர் தன்பெய ராற்கண் டிந்திரேச் சுரனென விறைவன்
றொல்லைவண் பெயரா லொன்றுகண் டரனைத் தூயபூ சனைசெய்தங் கிருப்பக்
கல்லைவன் சிறகு தடிந்தவ னின்னுங் களிறுவந் திலதெனப் பின்னும். (உஎ)

மனத்தினுங் கடிய தூதரை விடுப்ப வானடைந் திறைவனை வணங்கிப்
புனத்தினுங் கடிய கல்லினும் பன்றூட் புன்கணே யுறவரு சாபங்
கனத்தினுங் கரிய கண்டனைக் கண்டு களைந்ததுங் கிளந்துதிக் கயத்தின்
இனத்தினுங் கழிந்த தெய்வத வேழ மினிதுவீற் றிருந்தது மாதோ. (உகூ)

குடவயி னயிரா வதப்பெருந் தீர்த்தங் குடைந்தயி ராவத கணேசக்
கடவுளைத் தொழுதை ராவதேச் சுரத்துக் கடவுளைப் பணிந்தவர் சாபத்
தொடர்பினும் பாவத் தொடர்பினுங் கழிவர் சுராதிபன் களிறுசென் னெறிபோய்
இடர்கெட வைகை படிந்துதென் கரையி லிந்திரேச் சுரனடி பணிவோர். (௩0)

வேறு.

இம்மையி லறமுன் மூன்று லெய்திய பயனை யெய்தி
அம்மையின் மகவா னீரே ழுரும்பத மளவும் வானில்
வெம்மையில் போக மூழ்கி வெறுப்புவந் தடைய வுள்ளச்
செம்மையில் வினைபே ரின்பச் சிவகதிச் செல்வ ராவார். (௩க)

வெள்ளையானைச்சாபந்தீர்த்தபடலமுற்றிற்று.

ஆக திருவிருத்தம் - ௨௭௧.

மூன்றாவது

திருநகரங்கண்டபடலம்.

ஞான வாரிதி புகர்முகத் தடிகரி சாபம்
போன வாறுரை செய்துமேற் புதுமதி முடிமேல்
வான வாறினன் கடம்பமா வனமுது நகரம்
ஆன வாறது தனைச்சிறி தறிந்தவா றறைவாம். (௧)

இன்ன ரம்புள ரேழிசை யெழான்மிடற் றளிகள்
கின்ன ரம்பயில் கடம்பமா வனத்தினின் கீழ்சார்த்
தென்னர் சேகர னெனுங்குல சேகர னுலக
மன்னர் சேகர னரசுசெய் திருப்பது மணவூர். (௨)

குலவு மப்பெரும் பதியிளங் கோக்களி லொருவன்
நிலவு மாநிதி போலருச் சனைமுத னியதி
பலவு மாஞ்சிவ தருமமுந் தேடுவான் பரன்பாற்
றலைமை சான்றமெய் யன்பினான் றனஞ்சய னென்பான். (௩)

செல்வ மா[illegible]ரிருந்துமேற் றிசைப்புலஞ் சென்று
மல்லல் வாணிகஞ் செய்துதன் வளம்பதி மீள்வான்
தொல்லை யேழ்பவக் கடற்கரை தோன்றுவித் தடியார்
அல்ல றீர்ப்பவன் கடம்பமா வனம்புகு மளவில். (௪)

இரவி கண்மறைந் தேழ்பரி யிரதமுந் தானும்
உரவு நீர்க்கருங் கடலில்வீழ்ந் தொளித்தன னாக
இரவு நீண்மயங் கிருள்வயிற் றமியனாய் மெலியும்
அரவு நீர்ச்சடை யண்ணலுக் கன்பினோ னங்கண். (௫)

வாங்கு நான்மருப் பேந்திய மதமலை யெருத்தந்
தாங்கி யாயிரங் கரங்களாற் றடவியெண் டிசையுந்
தூங்கு காரிரு டுரத்துசெஞ் சுடரெனச் சூழ்போய்
வீங்கு காரிரு ளொதுக்கிய விமானநேர் கண்டான். (௬)

அடுத்த ணைந்தன னவிர்சுடர் விமானமீ தமர்ந்த
கடுத்த தும்பிய கண்டனைக் கண்டுதாழ்ந் துவகை
மடுத்த நெஞ்சின னங்கனம் வைகிருள் கழிப்பான்
எடுத்த சிந்தையி னிருந்தன னிருக்குமவ் விருள்வாய். (௭)

சோம வாரமன் றுதலாற் சுரர்களங் கெய்தி
வாம மேகலை மலைமக டலைமகன் மலர்ந்த
காமர் சேவடி பணிந்தவன் கங்குல்போற் கருதி
யாம நான்கினு மருச்சனை யின்புறப் புரிவார். (௮)

அண்டர் வந்தது மருச்சனை புரிவது மனைத்துந்
தொண்ட ரன்பினுக் கெளியவன் சுரர்தொழக் கறுத்த
கண்ட னின்னருட் கண்ணினாற் கண்டன னுதலிற்
புண்ட ரம்பயி லன்புடைப் புண்ணிய வணிகன். (௯)

நாண் மென்பனி நறும்புன னாயகன் பூசைக
கான நல்விரை வருக்கமு மமரர்கைக் கொடுத்து
ஞான வெண்மதிச் சடையவன் கோயிலின் ஞாங்கர்த்
தான மர்ந்தருச் சனைசெய்வான் றங்கனா யகனை (௰)

வள்ள றன்னைமெய் யன்பினா லருச்சிசெய் வானோர்
உள்ள வல்வினை யீட்டமுங் கங்குலு மொதுங்கக்
கள்ள மில்லவன் யாரையுங் கண்டிலன் கண்டான்
தள்ள ருஞ்சுடர் விமானமேற் றனித்துறை தனியை. (௧௧)

ஆழ்ந்த சிந்தைய னதிசய மடைந்துசே வடிக்கீழ்த்
தாழ்ந்தெ ழுந்திரு கைகளுந் தலைமிசைக் கூப்பிச்
சூழ்ந்து தன்பதிக் கேகுவா னொருதலை துணிந்து
பாழ்ந்த வன்பினான் விடைகொடு வழிக்கொடு வந்தான். (௧௨)

முக்க டம்படு களிற்றினான் முகிறவழ் கோயில்
புக்க டங்கலர் சிங்கமன் னானெதிர் புகல்வான்
திக்க டங்கலுங் கடந்தவெந் திகிரியாய் நெருநல்
அக்க டம்பமா வனத்திலோ ரதிசயங் கண்டேன். (௧௩)

வல்லை வாணிகஞ் செய்துநான் வருவழி மேலைக்
கல்ல டைந்தது வெங்கதிர் கங்குலும் பிறப்பும்
எல்லை காணிய கண்டன னிரவிமண் டலம்போல்
அல்ல டுஞ்சுடர் விமானமு மதிற்சிவக் குறியும். (௧௪)

மாவ லம்புதார் மணிமுடிக் கடவுளர் வந்தத்
தேவ தேவனை யிரவெலா மருச்சனை செய்து
போவ தாயினார் யானுமப் பொன்னெடுங் கோயில்
மேவு மீசனை விடைகொடு மீண்டன னென்றான். (௧௫)

ஊறா மன்பினான் மொழிந்திட முக்கணெம் பெருமான்
ஏறா மஞ்சலி கரங்களுந் தலையில்வைத் துள்ளம்
நீறா மன்புமற் புதமுமே நிரம்பநீர் ஞாலம்
ஆறா மன்னவ னிருந்தனன் போயினா னருக்கன். (௧௬)

ஈட்டு வார்வினை யொத்தபோ திருண்மலங் கருக
வாட்டு வாரவர் சென்னிமேன் மலரடிக் கமலஞ்
சூட்டு வார்மறை கடந்ததந் தொல்லுரு விளங்கக்
காட்டு வாரொரு சித்தராய்த் தோன்றினார் கனவில். (௧௭)

வடிகொள் வேலினாய் கடம்பமா வனத்தினைத் திருந்தக்
கடிகொள் காடகழ்ந் தணிநகர் காண்கென வுணர்த்தி
அடிக ளேகினார் கவுரிய ராண்ட   ங்குல்
விடியும் வேலைகண் விழித்தனன் பரிதியும் விழித்தான். (௧௮)

கனவிற் றீர்ந்தவ னியதியின் கடன்முடித் தமைச்சர்
சினவிற் றீர்ந்தமா தவாக்குந்தன் கனாத்திறஞ் செப்ப
நனவிற் கேட்டதுங் கனாவினிற் கண்டது நயப்ப
வினவித் தேர்ந்துகொண் டெழுந்தனன் மேற்றிசைச் செல்வான். (௧௯)

அமைச்ச ரோடுமந் நீபமா வனம்புகுந் தம்பொன
சமைச்ச விழ்ந்தபொற் றாமரைத் தடம்படிந் தொளிவிட்
டிமைச்ச லர்ந்தபொன் விமானமீ தினிதுவீற் றிருந்தோர்
தமைச்ச ரண்பணிந் தஞ்சலி தலையின்மேன் முகிழ்த்தான். (௨௦)

அன்பு பின்றள்ள முன்புவந் தருட்க ணீர்த் தேக
என்பு நெக்கிட வேகிவீழ்ந் திணையடிக் கமலம்
பொன்பு னைந்ததார் மௌலியிற் புனைந்தெழுந் திறைவன்
முன்பு நின்றுசொற் பதங்களாற் றோத்திர மொழிவான். (௨௧)

சரண மங்கையோர் பங்குறை சங்கர சரணஞ்
சரண மங்கல மாகிய தனிமுதல் சரணஞ்
சரண மந்திர வடிவமாஞ் சதாசிவ சரணஞ்
சரண மும்பர்க ணாயக பசுபதி சரணம். (௨௨)

ஆழி ஞாலமே லாசையு மமரர்வான் பதமேல்
வீழு மாசையும் வெறுத்தவர்க் கன்றிமண் ணாண்டு
பீழை மூழ்கிவா னரகொடு பிணிபடச் சுழலும்
ஏழை யேங்களுக் காவதோ வெந்தைநின் கருணை. (௨௩)

சூள தாமறைச் சென்னியுந் தொடத்தொட நீண்ட
நீள னீயுனக் கன்பில மாயினு நீயே
மூள வன்புதந் தெங்குடி முழுவதும் பணிகொண்
டாள வேகொலிக் கானகத் தமர்ந்தனை யென்னா. (௨௪)

சுரந்த வன்பிரு கண்வழிச் சொரிவபோற் சொரிந்து
பரந்த வாறொடு சிவானந்தப் பரவையுட் படிந்து
வரந்த வாதமெய் யன்பினால் வலங்கொடு புறம்போந்
தரந்தை தீர்ந்தவ னொருசிறை யமைச்சரோ டிருந்தான். (௨௫)

ஆய வேலையின் மன்னவ னாணையா லமைச்சர்
மேய வேவலர் துறைதுறை மேவினர் விடுப்பப்
பாய வேலையி னார்த்தனர் வழிக்கொடு படர்ந்தார்
சேய காடெறிந் தணிநகர் செய்தொழின் மாக்கள். (௨௬)

வட்ட வாய்மதிப் பிளவின்வெள் வாய்க்குய நவியம்
இட்ட தோளினர் யாப்புடைக் கச்சின ரிரும்பின்
விட்ட காரொளி மெய்யினர் விசிகொள்வார் வன்றோல்
தொட்ட காலினர் வனமெறி தொழிலின ரானார். (௨௭)

மறியு மோதைவண் டரற்றிட மரந்தலை பணிப்ப
எறியு மோதையு மெறிபவ ரோதையு மிரங்கி
முறியு மோதையு முறிந்துவீ ழோதையு முகில்வாய்ச்
செறியு மோதையுங் கீழ்ப்பட மேற்படச் செறியும். (௨௮)

ஒளிறு தாதொடு போதுசெந் தேனுக வொலித்து
வெளிறில் வன்மரஞ் சினையிற வீழ்வசெங் களத்துப்
பிளிறு வாயவாய் நிணத்தொடு குருதிநீர் பெருகக்
களிறு கோடிற மாய்ந்துவீழ் காட்சிய வனைய. (௨௯)

* அருட்கணீர்தேங்க என்றும் பாடம்.

பூவ டைந்தவண் டினமயற் புறவொடும் பழனக்
காவ டைந்தன பறவைவான் கற்பக மடைந்த
கோவ டைந்திட வொதுங்குறுங் குறும்புபோற் செறிந்து
மாவ டைந்தன மாடுள வரைகளுங் காடும். (௯௦)

இருணி ரம்பிய வனமெலா மெறிந்துமெய் யுணர்ந்தோர்
தெருணி றைந்தசிந் தையின்வெளி செய்துபல் லுயிர்க்கும்
அருணி றைந்துபற் றறுத்தர னடிநிழ லடைந்த
கருணை யன்பர்தம் பிறப்பென வேரொடுங் களைந்தார். (௯௧)

களைந்து நீணிலந் திருத்திச்செந் நெறிபடக் கண்டு
வளைந்து நன்னக ரெடுப்பதெவ் வாறெனத் தேறல்
விளைந்து தாதுகு தார்முடி வேந்தன்மந் திரரோ
டளைந்த ளாவிய சிந்தையோ டிருந்தன னங்கண். (௯௨)

மெய்ய ரன்புதோய் சேவடி வியனிலந் தீண்டப்
பொய்ய கன்றவெண் ணீறணி மேனியர் பூதிப்
பையர் நள்ளிருட் கனவில்வந் தருளிய படியே
ஐயர் வல்லைவந் தருளினா ரரசுளங் களிப்ப. (௯௩)

கனவி லும்பெருங் கடவுளர் காண்பதற் கரியார்
நனவி லும்வெளி வந்தவர் தமையெதிர் நண்ணி
நினைவி னின்றதா ளிறைஞ்சிநேர் நின்றுநல் வரவு
வினவி யாதனங் கொடுத்தனன் மெய்யுணர் வேந்தன். (௯௪)

தென்ன ரன்பினி லகப்படு சித்தர்தா முன்னர்ச்
சொன்ன வாதிநூல் வழிவரு சார்புநூற் றொடர்பால்
நன்ன ராலய மண்டபங் கோபுர நகரம்
இன்ன வாறுசெய் யெனவகுத் திம்மென மறைந்தார். (௯௫)

மறைந்தெ வற்றினு நிறைந்தவர் மலரடிக் கன்பு
நிறைந்த நெஞ்சுடைப் பஞ்சவ னிலத்துமேம் பட்டுச்
சிறந்த சிற்பநூற் புலவராற் சிவபரஞ் சுடர்வந்
தறைந்து வைத்தவா ருலய மணிநகர் காண்பான். (௯௬)

வேறு.

மறைபயில் பதும மண்டப மருத்த மண்டப மழைநுழை வளைவாய்ப்
பிறைபயில் சிகைமா மண்டப மறுகாற் பீடிகை திசையெலாம் பிளக்கும்
பறைபயி லிருத்த மண்டபம் விழாக்கொள் பன்மணி மண்டபம் வேள்வித்
துறைபயில் சாலை திருமடைப் பள்ளி சூழுறை தேவர்தங் கோயில். (௯௭)

வலவயி னிமய வல்லிபொற் கோயின் மாளிகை யடுக்கிய மதில்வான்
நிலவிய கொடிய நெடிய சூளிகைவா னிலாவிரி தவளமா ளிகைமீன்
குலவிய குடுமிக் குன்றிவர் செம்பொற் கோபுரங் கொண்டல்கண் படுக்குஞ்
சுலவெயி லகழிக் கிடங்குகம் மியநூற் றொல்வரம் பெல்லைகண் டமைத்தான். ()

சித்திர நிரைத்த பீடிகை மறுகு தெற்றிகள் வாணிலாத் தெளிக்கும்
நித்தில நிரைத்த விழாவரு வீதி நிழன்மணிச் சாளர வொழுக்கப்
பித்திகை மாடப் பெருந்தெருக் கவலை பீடுசால் சதுக்கநற் பொதியில்
பத்தியிற் குயின்ற மன்றுசெய் குன்று பருமணி மேடையா டரங்கு. (௯௯)

அருந்தவ ரிருக்கை யந்தண ருறையு ளரசரா வணங்குல வணிகப்
பெருந்தெரு நல்வே ளாளர்பே ரறஞ்சால் பெருங்குடி யேனைய கரிதேர்
திருந்திய பரிமா நிலைக்களங் கழகந் தீஞ்சுவை யாறுநாண்குண்டி
இரந்தவர்க் கருத்து நல்லறச் சாலை யிணையன பிறவுநன் கமைத்தான். (௪௰)

துணிகயங் கீழ்நீர்க் கூவல்பூவோடை தொடுகுளம் பொய்கைநந் தவனந்
இணிமலர்ச் சோலை துடைவையுய் யானந் திருநகர்க் கணிபெறச் செய்து
மணிமலர்த் தாரோன் மாளிகை தனக்கம் மாநகர் வடகுண பாற்கண்
டணிநகர் சாந்தி செய்வது குறித்தா னண்ணலா ரறிந்திது செய்வார். (௪௧)

பொன்மய மான சடைமதிக் கலையின் புத்தமு துகுத்தன ரதுபோய்ச்
சின்மய மான தம்மடி யடைந்தார்ச் சிவமய மாக்கிய செயல்போற்
றன்மய மாக்கி யந்நகர் முழுதுஞ் சாந்திசெய் ததுவது மதுர
நன்மய மான தன்மையான் மதுரா நகரென வுரைத்தனர் நாமம். (௪௨)

கீட்டிசைக் கரிய சாத்தனுந் தென்சார் கீற்றுவெண் பிறைநுதற் களிற்றுக்
கோட்டிளங் களபக் கொங்கையன் னையருங் குடவயின் மதுமடை யுடைக்குந்
தோட்டிளந் தண்ணந் துழாயணி மௌலித் தோன்றலும் வடவயிற் றோடு
நீட்டிரும் போந்தி னிமிர்குழ லெண்டோ ணீலியுங் காவலா நிறுவி. (௪௩)

கைவரை யெருத்திற் கனவரை கிடந்த காட்சியிற் பொலிந்தொளிர் கோயின்
மைவரை மிடற்று மதுரைநா யகரை மரபுளி யருச்சனை புரிவான்
பொய்வரை மறையா கமநெறி யொழுகும் புண்ணிய முனிவரை யாதி
சைவரைக் காசிப் பதியினிற் கொணர்ந்து தலத்தினிற் றாபனஞ் செய்தான். ()

உத்தம குலத்து நாற்பெருங் குடியு முயர்ந்தவு மிழிந்தவு மயங்க
வைத்தவு மான புறக்குடி மூன்று * மறைவழுக் காமநு வகுத்த
தத்தம நெறிநின் றொழுகவை திகமுஞ் சைவமுந் தருமமுந் தழைப்பப்
பைத்தெழு திரைநீர் ஞாலமேற் றிலகம் பதித்தென நகர்வளம் படுத்தான். (௪௫)

அன்றுதொட் டரச னந்நக ரெய்தி யணிகெழு மங்கல மியம்ப, என்று
தொட் டிமைக்கு மனையின்மங் கலநா ளெய்தின னிருந்துமுப் புரமுந, குன்று
தொட் டெய்தான் கோயின்மூன் றுறுப்புந் † குறைவில்பூ சனைவழா றோங்கக்,
கன்றுதொட் டெறிந்து கனியுகுத் தானபோற் கலிதுரந் தரசுசெய் நாளில். ()

பவநெறி கடக்கும் பார்த்திவன் கிரணம் பரப்பிளம் பரிதிபோன் மலயத்
துவசனைப் பயந்து மைந்தன்மேன் ஞாலஞ் சுமத்திநாள் பலகழித் தொருநாள்
நவவடி ‡ விறந்தோ ருலயத் தெய்தி நாதனைப் பணிந்துழு வலஞ்செய்
துவமையி லின்ப வருணிழ லெய்தி யொன்றியொன் றாநிலை நின்றான். (௪௭)

திருநகரங்கண்டபடல முற்றிற்று.

ஆக திருவிருத்தம் - ௫௧௮.

* புறக்குடிமூன்று-அநுலோமர், பிரதிலோமர், சங்கரசாதியார்.

† மூன்றுறுப்பு - நித்தியம், நைமித்திகம், காமியம்.

‡ நவவடிவம் - பிரமன், விட்டுணு, உருத்திரன், மகேசுரன், சதாசிவன் விந்து, நாதம், சத்தி, சிவம்.

வந்தனை யெவனீ வேண்டும் வரமெவ னுரைத்தி யென்னச்
சிந்தையி லன்பு கூர்ந்த தெய்வத வேழந் தாழ்ந்து
முந்தையில் விளைவீம் வந்த முறைமையு முறையா
எந்தையை யடையப் பெற்றேற் கினியொரு குறையுண் டாமோ. (௨௪)

என்பதா மாரம் பூண்ட வெந்தையிக் கரிக ளீட்டே
டொன்பதா யடிய னேனு முன்னடி பிரியா துன்றன்
முன்பதா யிவ்வி மான முதுகுறச் சுமப்ப லென்றோர்
அன்பதா யொன்றென் னுள்ளத் தடுத்ததா லஃதே வேண்டும். (௨௫)

இடையரு வன்பின் வேழ மிங்ஙனங் கூற விண்ணா
டுடையவ னம்பான் மெய்யன் புடையவ னவனைத் தாங்கி
அடைவதே நமக்கு வேண்டு மகமகிழ் வென்னாப் பின்னும்
விடையவன் வரங்க ணல்கி விடைகொடுத் தருளி னானே. (௨௬)

வேறு.

விடைகொடு வணங்கி யேகும்வெள் ளானை மேற்றிசை யடைந்துதன் பெயராற்
றடமுமற் றதன்பா லரனையுங் கணேசன் றன்னையுங் கண்டருச் சனைசெய்
திடையரு வன்புந் தானுமங் கிருக்கு மெல்லையிச் செய்திகேட் டருள்கூர்
கடவுளர் பெருமானுழையரைவிளித்தெங்களிற்றினைக்கொணர்கெனவிடுத்தான்

வல்லைவந் தழைத்தார் தம்மைமுன் போக்கி வருவலென் றெழுந்துகீழ்த் திசையோ
ரெல்லைவந் தோரூர் தன்பெய ராற்கண் டிந்திரேச் சுரனென விறைவன்
றொல்லைவண் பெயரா லொன்றுகண் டரனைத் தூயபூ சனைசெய்தங் கிருப்பக்
கல்லைவன் சிறகு தடிந்தவ னின்னுங் களிறுவந் திலதெனப் பின்னும். (௨௮)

மனத்தினுங் கடிய தூதரை விடுப்ப வானடைந் திறைவனை வணங்கிப்
புனத்தினுங் கடிய கல்லினும் பன்னாட் புன்கணோ யுறவரு சாபங்
கனத்தினுங் கரிய கண்டனைக் கண்டு களைந்ததுங் கிளந்துதிக் கயத்தின்
இனத்தினுங் கழிந்த தெய்வத வேழ மினிதுவீற் றிருந்தது மாதோ. (௨௯)

குடவயி னயிரா வதப்பெருந் தீர்த்தங் குடைந்தயி ராவத கணேசக்
கடவுளைத் தொழுதை ராவதேச் சுரத்துக் கடவுளைப் பணிந்தவர் சாபத்
தொடர்பினும் பாவத் தொடர்பினுங் கழிவர் சுராதிபன் களிறுசென் னெறிபோய்
இடர்கெட வைகை படிந்துதென் கரையி லிந்திரேச் சுரனடி பணிவோர். (௩0)

வேறு.

இம்மையி லறமுன் மூன்றா லெய்திய பயனை யெய்தி
அம்மையின் மகவா னீரே ழுரும்பத மளவும் வானில்
வெம்மையில் போக மூழ்கி வெறுப்புவந் தடைய வுள்ளச்
செம்மையில் விளைபே ரின்பச் சிவகதிச் செல்வ ராவார். (௩௧)

வெள்ளையானைச்சாபந்தீர்த்தபடலமுற்றிற்று.

ஆக திருவிருத்தம் - ௩௭௧.

ஐம்முக னாதிபர மாத்தனுரை யாற்றல்
நெய்ம்முக நிறைத்தழ னிமிர்த்துவரு ல்லை
பைம்முக வராவணி பரஞ்சுடர் தனிட்
மைம்முக நெடுங்கணிம வான்மனைவி நாண. (௧0)

வள்ளன்மல யத்துவச மீனவன் வலத்தோள்
துள்ளமனை காஞ்சனை சுருங்கிய மருங்குல்
தள்ளவெழு கொங்கைக டதும்பநிமிர் தீம்பால்
வெள்ளமொழு கக்கரிய வேற்கணிட னாட. (௧௧)

இவ்வுலக மன்றியுல கேழுமகிழ் வெய்தச்
சைவமுத லாயின தவத்துறை நிவப்ப
ஔவிய மறங்கெட வறங்குது கலிப்பத்
தெய்வமறை துந்துபி திசைப்புல னிசைப்ப. (௧௨)

மைம்மலர் நெடுங்கணர மங்கையர் நடிப்ப
மெய்ம்மன மொழிச்செயலின் வேறுபட லின்றி
அம்மதுரை மாநகரு ளாரக மகிழ்ச்சி
தம்மையறி யாதன தலைத்தலை சிறப்ப. (௧௩)

மாந்தர்பயின் மூவறுசொன் மாநில வரைப்பிற்
றீந்தமிழ் வழங்குதிரு நாடது சிறப்ப
ஆய்ந்ததமிழ் நாடர சளித்துமுறை செய்யும்
வேந்தர்களின் மீனவர் விழுத்தகைமை யெய்த. (௧௪)

நொய்தழ லெரிக்கடவு ளேற்றபய னெய்தக்
கொய்தளி ரெனத்தழல் கொழுந்துபடு குண்டத்
தைதவ ழிதழ்க்கமல மப்பொழு தலர்ந்தோர்
மொய்தளிர் விரைக்கொடி முளைத்தெழுவ தென்ன. (௧௫)

விட்டிலகு சூழியம் விழுங்குசிறு கொண்டை
வட்டமதி வாய்க்குறு முயற்கறையை மானக்
கட்டியதி னுற்றிய கதிர்த்தரள மாலை
சுட்டியதில விட்டொழுகு சூழ்கிரண மொப்ப. (௧௬)

தீங்குதலை யின்னமுத மார்பின்வழி சிந்தி
யாங்கிள நிலாவொழுகு மாரவட மின்ன
வீங்குட விளம்பரிதி வெஞ்சுடர் விழுங்கி
வாங்குகடல் வித்துரும மாலையொளி கால. (௧௭)

சிற்றிடை வளைந்தசிறு மென்றுகில் புறஞ்சூழ்
பொற்றிரு மணிச்சிறிய மேகலை புலம்ப
விற்றிரு மணிக்குழை விழுங்கிய குதம்பை
சுற்றிருள் கடிந்துசிறு தோள்வருடி யாட. (௧௮)

தெள்ளமுத மென்மழலை சிந்தவிள மூரல்
முள்ளெயி றரும்பமுலை மூன்றுடைய தோர்பெண்
பிள்ளையென மூவொரு பிராயமொடு நின்றாள்
எள்ளரிய பல்லுயிரு மெவ்வுலகு மீன்றாள். (௧௯)

* தழனிமிர்ந்துவரு என்றும் பாடம்.

வே று.

குறுந்தளிர்மெல் லடிக்கிடந்த சிறுமணிநூ புரஞ்சதங்கை குழறி யேங்க
நறுந்தளிர்போ லசைந்துதளர் நடையொதுங்கி மழலையிள நகையுந் தோன்றப்
பிறந்தபெரும் பயன்பெறுபொன் மாலைமடி யிருந்தொருபெண் பிள்ளை யானாள்
அறந்தழுவு நெறிநின்றோர்க் கிகம்போகம் வீடளிக்கு மம்மை யம்மா. (௨௦)

செய்யவாய் வெளிறாது துணைமுலைக்கண் கருகாது சேல்போ னீண்ட
மையவாய் மதர்த்தகருங் கண்பசவா தையிரண்டு மதியந் தாங்கா
தையவா விலைவருந்தப் பெறாதுபெறு மகவையெடுத் தணைத்தாண் மோந்தாள்
துய்யவாய் முத்தங்கொண் டின்புற்றாண் முன்பெற்ற தோகை யன்னாள். (௨௧)

பரையாதி விருப்பறிவு தொழிலாகி யுலகமெலாம் படைத்துக் காத்து
வரையாது துடைத்துமறைத் தருளியவை நின்றுந்தன் வடிவு வேறாய்
உரையாதி மறைகடந்த வொருமுதல்வி திருமகளா யுதித்தற் கிந்தத்
தரையாளு மன்னவன்செய் தவமிதுவோ வதற்குரிய தவந்தான் மன்னோ. (௨௨)

கள்ளமா நெறியொழுகும் பொறிகடந்து கரணமெலாங் கடந்தா னந்த
வெள்ளமாம் பரஞான வடிவுடையா டன்னன்பின் வெளிவந் தின்றோர்
பிள்ளையா யவதரித்த கருணையுந்தன் மணாட்டிதவப் பேறுந் தேறான்
பள்ளமா கடற்றானைப் பஞ்சவர்கோ னெஞ்சகத்துப் பரிவு கூர்ந்தான். (௨௩)

மகவின்றிப் பலபகல்யான் வருந்தியருந் தவம்புரிந்தேன் மைந்தற் பேறு
தகவிந்த மகஞ்செய்தே னதுவுமொரு பெண்மகவைத் தந்த தந்தோ
முகவிந்து நிலவொழுக வருபெண்ணா முலைமூன்றாய் முகிழ்த்து மாற்றார்
நகவந்த தென்னேயோ வென்றுவகை யிலனாகி நலியு மெல்லை. (௨௪)

மன்னவநின் றிருமகட்கு மைந்தர்போற் சடங்கனைத்தும் வழாது வேதஞ்
சொன்னமுறை செய்துபெயர் தடாதகையென் றிட்டுமுடி சூட்டு வாயிப்
பொன்னனையா டனக்கிறைவன் வரும்பொழுதோர் முலைமறையும் புந்திமாழ்கேல்
என்னவர னருளாலோர் திருவாக்கு விசும்பிடைநின் றெழுந்த தன்றே. (௨௫)

அவ்வாக்குச் செவிநிரம்ப வன்புவகை யகநிரம்ப வகல மெல்லாம்
மெய்வாக்கு மனமொன்ற விழிவாக்கும் புனனிரம்ப விமலற் போற்றி
நெய்வாக்கு மகநிரப்பி யெழுந்துமனை யொடுஞ்சாலை நீத்தி ரண்டு
கைவாக்கு மியங்கலிப்பக் கடிமாட மனைபுகுந்தான் கழற்கால வேந்தன். (௨௬)

முரசதிர்ப்ப மங்கலங்கொண் டெதிர்வருவார் முகத்துவகை முறுவல் பூப்ப
அரசிருக்கு மண்டபம்புக் கினிதமர்ந்து கனகமழை யான்ற கேள்வி
விரசிருக்கு மறையவர்கைப் பெய்தெவர்க்கு மம்முறையால் வெறுப்ப நல்கிப்
பரசிருக்குங் கரதலத்தெம் பரன்கோயி லணிசிறப்புப் பல்க நல்கா. (௨௭)

சிறைவிடுமின் சிறைக்களமுஞ் சீத்திடுமி னேழாண்டு தேயத் திட்டும்
இறைவிடுமி னயல்வேந்தா இறைவிடுமி னிறைநிதிய மீட்டு மாயத்
துறைவிடுமி னாலயமு மறப்புறமும் பெருக்குமெனத் தொழாரைக் காய்ந்த
கறைவிடுமின் னயில்வேலான வள்ளுவனைக் கூய்முரசங் கறங்கச சாற்றி. (௨௮)

கல்யாண மணிமௌலி வேந்தரையுங் கால்யாப்புக் கழல நீத்துக்
கொல்யானை பரிநெடுந்தே ரரசுரிமை தொன்முறையாற் கொடுத்துப் போக்கிப்
பல்லாருங் கொள்கவெனப் பண்டாரந் தனைத்திறந்து பசும்பொன் னாடை
வில்லாரு மணிக்கொடும்பூண் வெறுக்கைமுத லெனைப்பலவும் வெறுப்ப வீசி. (

தூமரபின் வருபெருமங் கலகவிகட் கிருநிதியந் துகில்பூண் பாய்மா
காமர்கரி பரித்தடந்தேர் முதலாய பலபொருளுங் களிப்ப நல்கிக்
கோமறுகு களிதூங்கச் சுண்ணமொடு மெண்ணெய்விழாக் குளிப்ப நல்கி
மாமதுரா நகரன்றி மற்றுமுள நகரெங்கு மகிழ்ச்சி தூங்க.' (௫௦)

இவ்வண்ண நகர்களிப்ப விறைமகனுங் களிப்பெய்தி யிறைய... ...ணை
அவ்வண்ணஞ் சாதமுதல் வினைநிரப்பித் தடாதகையென் றழைத்துத் தேவி
மெய்வண்ண மறையுணரா விறைவிதனை மேனைபோன் மேனாளூற்ற
கைவண்ணத் தளிர்தீண்டி வளர்ப்பவிம வான்போலக் களிகூ நாளில். (௫௧)

திருந்தாத விளங்குதலை யாயமொடு புறம்போந்து சிறார்க்குச் சிற்றில்
விருந்தாக மணற்சிறுசோ றட்டும்வரை யுரங்கிழித்த வேளும் வாய்வைத்
தருந்தாத விளமுலைவாய் வைத்தருந்தப் பாவைதனக் களித்தும் போதில்
வருந்தாதை யண்டமெலாஞ் சிற்றிலிழைப் பாளாய்க்கு மகிழ்ச்சி செய்தாள். ()

தீட்டுவா ளிரண்டனைய கண்களிப்பத் தோழியர்க்குத் தெரிய வாடிக்
காட்டுவா ளணக்கழங்கு பந்துபயின் றம்மனையுங் கற்றுப் பாசம்
வீட்டுவாண் மேலொடுகீழ் தள்ளவெவமை வினைக்கயிறு வீக்கி யூசல்
ஆட்டுவாள் காட்டுதல்போ லாடினா ணித்திலத்தாம் பசைத்த வூசல். (௫௩)

இம்முறையாற் றுயர்க்குந் தோழியர்க்கு மகத்துவகை யீந்தா ளாகி
அம்முறையாற் றாதைக்கு மகத்துவகை யீவாளா யாத்த வாய்மைச்
செம்மறையா ரணமுதனா லீரெட்டுக் கலைமுழுதுந் தெளிந்தா ளந்த
மெய்ம்மறையார் கலையனைத்து மேகலையா மருங்கசைத்த விமலை யம்மா. (௫௪)

சொல்வாய்மைக் கலைத்தெளிவு முழுமதியைப் பிளந்திருபாற் சொருகி யன்ன
பல்வாய்மைக் கடகரிதோ பரியுகைக்குந் திறனுமழற் பகழி தூர்க்கும்
வில்வாள்வச சிரமுதற்பல் படைத்தொழிலுங் கண்டிளமை விழுங்கு மூப்பிற்
செல்வாய்மைத் திறலரசன் றிருமகட்கு முடிசூட்டுஞ் செய்கை பூண்டான். (௫௫)

முடிகவிக்கு மங்கலநாள் வரையறுத்துத் திசைதோறு முடங்கல் போக்கிக்
கடிகெழுதார் மணிமௌலிக் காவலரை வருவித்துக் காவல் சூழ்ந்த
கொடியணிமா நகரெங்கும் விழாவெடுப்ப வழகமைத்துக் குன்ற மன்ன
தொடிகெழுமேதாட் சுமதிதிரு மணத்தினுக்கு வேண்டுவன சூழ்ந்து செய்தான். ()

மங்கலதூ ரியமுழங்க மால்யானை யுச்சிமிசை வந்த பூத
கங்கைமுத லொனபதுதீர்த் தமுநிரப்பிக் கதிர்விடுபொற் கடம்பூ சித்துப்
புங்கவரை மந்திரத்தீ வளர்த்தமுத மருத்தியெரி பொன்னுற் செய்த
சிங்கமணி யாதனத்தை நேசித்துப் பூசித்துத் தெய்வ மேற்றி. -௭)

திருமுடியை மதயானை மிசைவைத்து நகரைவலஞ் செய்து பூ...
தருமணியாற் சுடிகையிழைத் தாடகத்தாற் சூயிற்றியதோ ரைவாய் நாகம்
பெருமணிநீள் படம்விரிப்பி மிசைகவிப்ப வச்சிங்க பீடத் தேற்றிக்
குருமணிவா ணகைமயிலைக் கும்பத்துப் புண்ணியநீர் குளிர வாட்டி. (௫௮)

புங்கவர்மங் தாரமழை பொழியவருந் தவராக்கம் புகலத் தெய்வப்
பங்கயமென் கொம்பனையா ராடமுனி பன்னியர்பல் லாண்டு பாட
மங்கலதூ ரியமுழங்க மறைதழங்க மாணிக்க மகுடஞ் சூட்டி
எங்கருணைப் பெருமாட்டிக் கரசமைச்சர் பணியுந்தன் னிறைமை நல்கா. (௫௯)

---

*' தெய்வ மேத்தி என்றும் பாடம்.

பாலனைய மதிக்கவிகை மிசைநிழற்ற மதிகிரணம் பரப்பி யன்ன
கோலமணிக் கவரிபுடை யிரட்டமலர் மழைதேவர் குழாங்க டூற்றக்
காலையிளங் கதிர்கயிலை யுதித்தெனவெண் கடாயானைக் கழுத்தில் வேப்ப
மாலைமுடிப் பெண்ணரசை மங்கலதூ ரியமுழங்க வலஞ்செய் வித்தான். (௬௦)

விண்ணாடு மொழிகேட்ட மகிழ்ச்சியினுந் திருமகடன் விளக்க நோக்கி
உண்ணாடு பெருங்களிப்புத் தலைசிறப்பச் சிலபகல்சென் றொழிய மேனாட்
புண்ணாடு வேன்மங்கை குதுகலித்து நடிப்பத்தன் புயமேல் வைத்த
மண்ணாடு மகட்களித்து வானாடு பெற்றானம் மகவு பெற்றான். (௬௧)

விரதநெறி யடைந்தீற்றுக் கடன்பிறவுந் தாதைக்கு விதியா லாற்றி
அரதனமெல் லணைமேற்கொண் டுலகமெலா மொருகுடைக்கீ ழாள்வா ளானாள்
சரதமறை யாய்மநுவின் பொருளாய்ப் பொருண்முடிவு தானாய்த் தேனின்
இரதமெனப் பூவின்மண மெனப்பரம னிடம்பிரியா வெம்பி ராட்டி. (௬௨)

வேறு.

ர சிறைஞ்ச ஞால மநுவழி புரந்து மாறன்
விண்ணர சிருக்கை யெய்தப் பெற்றபின் விடையோ னுள்ளத்
தெண்ணர சன்ன மென்னத் தென்னவ னீன்ற கன்னிப்
பெண்ணர சிருந்து நேமி யுருட்டிய பெருமை சொல்வாம். (௬௩)

இன்னிய மியம்பு மாக்க ளெழுப்பவா னிரவி தோன்றக
கன்னலைந் தென்னப் பள்ளித் துயிலெழீஇக் கடிநீ ராடித்
தன்னிறை மரபுக் கேற்ற நியதிமா தான மன்பு
துன்னிய கடவுட் பூசைத் தொழின்முத லனைத்து முற்றா. (௬௪)

திடம்படு மறிஞர் சூழச் சிவபரன் கோயின் முன்னிக்
கடம்படி முளைத்த முக்கட் கரும்பினை மறைவண் டார்க்கும்
விடம்பொதி கண்டத் தேனை விதிமுறை வணங்கி மீண்டு
குடம்பயில குடுமிச் செம்பொற் குருமணிக் கோயி னண்ணி. (௬௫)

அரசிறை கொள்ளுஞ் செம்பொ னத்தாணி யிருக்கை யெய்தி
நிரைசெறி மடங்க லாறு முடங்கின நிமிர்ந்து தாங்க
விரைசெறி மலர்மீப் பெய்த வியன்மணித் தவிசின் மேவித்
திரைசெறி யமுதிற் செய்த பாவைபோற் சிறந்து மாதோ. (௬௬)

அணிந்திதை யமுதின் சாயற் கமலினி யணங்குங் காதல்
கனிந்தபார் மகளி ராய்வந் தடைப்பைபொற் களாஞ்சி யேந்த
இணந்திரி பதுமக் கோயி விருவரு மனைய ராகிப்
புனைந்தவெண் கவரிக் கற்றை யிருபுடை புரட்டி வீச. (௬௭)

செடியுட லெயினச் செல்வன் சென்னிமேற் சுமந்து சாத்துங்
கடியவிழ் மலரிற் பொன்னிக் காவலன் குடக்கோ னேனை
முடிகெழு வேந்த ருள்ளார் முடிமிசை மிலைந்த தாமம்
அடிமிசைச் சாத்தி நங்கை யாணையா றேவல் செய்ய (௬௮)

வையுடை வாள ராகி மார்புறப் பின்னி யாத்த
கையின ராகி யன்னை யென்றுதன் கருணை நோக்கஞ்
செய்யுமென றிமையார் நோக்கி நோக்குமேற் செங்கை கூப்பி
உய்குந மெனவாய் பொத்தி யுழையர்தம் பணிகேட் டுய்ய. (௬௯)

ஆங்கவன் மராடர் வேந்த னவன்கரு நாடர் வேந்தன்
ஈங்கிவன் விராடர் வேந்த னிவன்குரு நாடர் வேந்தன்
ஊங்குவன் சேரன் சென்னி யுவனெனக் கோலாற் சுட்டிப்
பாங்கிரு மருங்குங் காட்டக் கஞ்சுகப் புடிவ மாக்கள். (௫0)

செந்தமிழ் வடநூ லெல்லை தெரிந்தவர் மறைநூ லாதி
அந்தமி லெண்ணெண் கேள்வி யளந்தவர் சமய மாறுட
வந்தவர் துறந்தோர் சைவ மாதவர் போத மாண்ட
சிந்தனை யுணர்வான் மாயை வலிகெடச் செற்ற வீரர். (௫௧)

முன்னிருந் தினிய தேற்று மூத்தவ ரெண்ணி யெண்ணிப்
பன்னுமைந் துறுப்பிற் கால மளந்தறி பனுவன் மாந்தர்
பின்னுமுன் னோக்குஞ் சூழ்ச்சிப் பெருந்தகைச் சுமதி யோடும்
இன்னமு தனைய கேள்வி மந்திரர் யாருஞ் சூழ. (௫௨)

கற்றறி யந்தணாளர் விருத்திகள் கடவுட் டானத்
தற்றமில் பூசைச் செலவ மறப்புற நடக்கை யேனைச்
செற்றமில் குடிகண் மற்று மமைச்சராற் றெளிந்தும் வெவ்வே
றொற்றுவிட் டுணர்ந்தும் வேறு குறையுண்டே லொறுத்துத் தீர்த்தும். ()

ஆதியுத் தேசத் தானு மிலக்கண வமைதி யானுஞ்
சோதனை வகைமை யானுஞ் சொன்னநூ லனுவா தித்து
நீதியி னவற்றுாற் கண்டித் தவ்வழி நிறுத்தித் தம்மில்
வாதிகள் வாதஞ் செய்யுங் கோட்டிமேன் மகிழ்ச்சி கூர்ந்தும். (௫௪)

பையுள பகுவாய் நாகப் பள்ளியோ னாதி வானோர்
கையுள வலியா லட்ட கடலமு தனைத்தும் வாரிப்
பொய்யுள மகலக் கற்ற புனிதநூற் புலவர் நாவிற்
செய்யுளின் விளைவித் தூட்டத் திருச்செவி தெவிட்ட வுண்டும். (௫௫)

தொல்லைநான் மறையோர் சைவா துறந்தவர் யார்க்கு மின்பம்
புல்லவா னமுதுங் கைப்பப் பாகநூற் புலவ ரட்ட
முல்லைவான் முகையி னன்ன வறுசுவை முரியா மூரல
நல்லவூ ணருத்தி யன்னா ரவிருந் தமுது செய்தும். (௫௬)

எல்லவ னுச்சி நீந்து மெல்லையி னன்கு மாறும்
வல்லவர் சூத னோதி வகுத்தமூ வாறு கேள்வி
சொல்லவுண் மலர்ந்து மேனை மநுமுதற் றுறைமாண் கேள்வி
நல்லன நயந்து கேட்டு நயைகற் போது நீத்தும். (௫௭)

கலைக்குறை விரிப்பா ரென்ன வறுமையிற் கல்வி போலப்
புலப்படா மருங்கு லல்லா ரெந்திரப் புலவன் பூட்டி
அலைத்திடு பாவை போனின் றாடல்செய் யாடற் கண்ணும்
நலத்தகு பாடற் கண்ணு நல்லரு ணாட்டஞ் செய்தும். (௫௮)

இன்னிலை யொழுகுந் தொல்லோ ரியற்றிய தருமம் வேறும்
அந்நிலை நிறுத்தும் வேள்வி யறம்பல வாக்கஞ் செய்ய
நன்னிதி யளித்தும் வேள்வி நடாத்தியுஞ் செல்வங் கல்வி
தன்னிரு கண்க ளாகத் தழைந்திட வளர்க்கு நாளும். (௫௯)

ஒப்புரு முதலீ றில்லா வொருத்திதன் சத்தி பெற்ற
முப்பெருந் தேவ ராலே முத்தொழி னடாத்து மென்று
செப்பலும் புகழுந் தென்னிற் றென்னவன் கன்னி யாகி
இப்புவி மநுவிற் காக்கு மென்பதென் பேதை மைக்கே. (௬௦)

வேறு.

வரைசெய் பூண்முலைத் தடாதகை மடவரற் பிராட்டி
விரைசெய் தார்முடி வேய்ந்துதண் குடைமநு வேந்தன்
கரைசெய் நூல்வழி கோல்செலக் கன்னியாம் பருவத்
தரசு செய்தலாற் கன்னிநா டாயதந் நாடு. (௬௧)

இன்ன வாறுமை யவதரித் திருந்தன ளென்னப்
பொன்ன வாவினர் பெறவெறி பொருநைகால் பொருப்பன்
சொன்ன வாய்மைகேட் டகங்களி தூங்கினர் தொழுது
மின்னு வார்சடை முனிவரோர் வினவுரை செய்வார். (௬௨)

இருந்து நான்மறைச் சென்னியுந் தீண்டுதற் கரிதாய்
இருந்த நாயகி யாவையு மீன்றவெம் பிராட்டி
விரிந்த வன்புகூர் தக்கனும் வெற்பனும் பன்னாள்
வருந்தி நோற்றலா லவர்க்கொரு மதலையாய் வந்தாள். (௬௩)

மணித்தணுகிய பூழியன் மகளென வீங்குத்
தனித்த காரணம் யாதெனத் தபனியப் பொதுவிற்
குனித்த சேவடிக் கன்புடைக் குடமுனி யருள்கூர்ந்
தினித்த தோர்கதை கேண்மினென் றெடுத்துரை செய்வான். (௬௪)

விச்சு வாவசு வெனுமொரு விச்சையன் பயந்த
நச்சு வாள்விழி மடந்தைவிச் சாவதி நாமம்
அச்சு வாகத மொழியினு ளம்பிகைக் கன்பு
வைச்சு வாழ்வுறு மனத்தினு டாதையை வணங்கா. (௬௫)

ஐய வம்பிகை தன்னையா னன்பினால் வழிபட்
டுய்ய வேண்டுமென் றுளவ னுலகெலாம பயந்த
தையன் மந்திரந் தனைமக டனக்குப தேசஞ்
செய்ய வந்நெறி யொழுகுவாள் செப்புவாள் பின்னும். (௬௬)

இறைவி தன்னையா தரிப்பதற் கிம்பரிற் சிறந்த
குறைவி னன்னகர் யாதெனக் கூறுவான் கேள்வித்
துறைவி ளங்கினோர் பயில்வது துவாதச முடிவென்
றறைவ ளம்பதி யவனிமேற் சிவபுர மாமால். (௬௭)

சேடு தாங்குமூ வுலகினுட் சிறந்தன சத்தி
பீட மூவிரு பததுநான் கவற்றின்முற் பீடம்
மாட மோங்கிய மதுரையா முற்றது போகம்
வீடும் வேண்டிய சித்தியும் விளைப்பதென் றெண்ணு. (௬௮)

அல்லு மெல்லும்வா னகர்க்கத வடைப்பின்றிச் சுவர்க்கச்
செல்வ ரங்கடைந் துமையருள் சித்தியால் வினையை
வெல்லு வாரதான் றெந்தையோ டைவர்கள் வேண்டி
நல்வ ரம்பல வடைந்தனர் நமர்களந் நகரில். (௬௯)

* ஐவர் - பஞ்சசுரா, வசுபூரணா, சௌசசவிதத்யா, யக்ஷா, வதத்யாதரர் இவருள் பஞ்சசுரர் என்பவர் விச்சுவாவசுவின் பிதா.

எம்மை யாரையும் யாவையு முடையவங் கயற்கண்
அம்மை யாவரே யாயினு மன்பினா தரிப்போர்
இம்மை யாகிய போகம்வீ டெண்ணியாங் கெய்தச்
செம்மை யாகிய வின்னருள் செய்துவீற் றிருக்கும். (௭௦)

என்ற தந்தையை யிறைஞ்சினா ளனுச்சைகொண் டெழுந்தாள்
மன்றன் மாமலர் வல்லிபோல் வழிக்கொடு கானங்
குன்ற மாறுபின் கிடப்பமுன் குறுகினா ளன்பின்
னின்ற வாதியெம் பரையரு ணிறைந்தவந் நகரில். (௭௧)

அடைந்தி ளம்பிடி யாடல்போ லாடக கமலங்
குடைந்து நான்மறைக் கொழுந்திடங் கொண்டுறை குறிப்பாற்
படர்ந்த பொன்மலை வல்லியைப் பணிந்துவெங் கதிரோன்
றொடர்ந்த வான்சுரு மதியமே யாதியாத் தொடங்கா. (௭௨)

வேறு.

பெரும்பக னல்லூண் கங்குலா னுதவப் பெற்றவூ ணிலைமுதற் பல்லூண்
அரும்பொடி யெள்ளுண் சாந்திரா யணமா னைந்துபா னறியநீர் தருப்பை
இரும்புத னுனிநீர் காவிவை நுகர்ந்து மியற்றரும் பட்டினி யுற்றும்
வரம்புற விராறு திங்களு நோற்று வாடிமேல் வருஞ்சுரு மதியில். (௭௩)

சந்நிதி யடைந்து தாழ்ந்துநின் றிளமாந் தளிரடிக் காஞ்சிசூழ் கிடந்த
மின்னிகர் மருங்கு விழையிடை நுழையா வெம்முலைச் செம்மலர்க் காந்தட்
பொன்னிரை வளைக்கை மங்கலக் கழுத்திற் பூரண மதிக்கலை முகத்தின்
இன்னிசை யளிசூ ழிருட்குழற் கற்றை யிறைவியை யிம்முறை நினையா. (௭௪)

கோலயாழ்த் தெய்வம் பராய்க்கரங் குவித்துக் கொழுஞ்சுடர்ப் பசுங்கதிர் விளக்கம், போலநூற் பொல்லம் பொத்துபொன் னிறத்த போர்வைநீத் தவிழ் கடி முல்லை, மாலைமேல் வீக்கிப் பத்தர்பின் கிடப்ப மலர்க்குழ ரேய்சுவற் கிடத்திச், சேலைநேர் விழியாண் மாடகந் திரித்துத் தெறித்தனள் பண்ணறிந் திசைப்பாள். (௭௫)

வேறு.

ஒளியா லுலகின் றுயிரனைத்து மீன்போற் செவ்வி யுறநோக்கி
அளியால் வளர்க்கு மங்கயற்க ணன்னே கன்னி யன்னமே
அளியா விமவான் றிருமகளா யாவி யன்ன மயிலபூவை
தெளியா மழலைக் கிளிவளர்த்து விளையாட் டயருஞ் செயலென்னே. (௭௬)

அண்டக் குவைவெண் மணற்சிறுசோ றாக்கித் தனியே விளையாடுங்
கொண்டற் கோதாய் படியெழுத லாகா வுருவக் கோகிலமே
கொண்டற் குடுமி யிமயவரை யருவி கொழிக்குங் குளிர்முத்தால்
வண்டற் குதலை மகளிரொடும் விளையாட் டயரும் வனப்பென்னே. (௭௭)

வேதமுடிமே லானந்த வுருவாய் நிறைந்து விளையாடும்
மாத ரரசே முத்தநகைமானே யிமய மடமயிலே
மாத ரிமவான் றேவிமணி வடந்தோய் மார்புந் தடந்தோளும்
பாத மலர்சேப் புறமிதித்து விளையாட் டயரும் பரிசென்னே. (௭௮)

வேறு.

யாழியன் மொழியா ளிவ்வழி பாடி யேத்தினா ளாகமெய் யுள்ளத்
தாழிய வன்பின் வலைப்படு கருணை யங்கயற் கண்மட மானோர்
சூழிய நுழைமெல் விளங்குழற் குதலைத் தொண்டைவா யகவைமூன் றெய்தி
வாழிளங் குழவி யாகியா லயத்து வந்துநின் றுள்வரங் கொடுப்பாள். (௭௯)

இறைஞ்சியஞ் சலித்தா டன்னையெம் மன்னை யாதும்வண டினையென வென்றும்
கிறைந்தபே ரன்பு நின்னடிப் போதி னீங்கலா நிலைமைதந் தருளென்
றறைந்தன ளின்னும் வேண்டுவ தேதென் றருளவிம் மகவுரு வாகிச்
சிறந்துவந் தென்பா லருள்சுரந் திருக்கத் திருவுளஞ் செய்யெனப் பணிந்தாள். ()

சிவபரம் பரையு மதறகுநேர்ந் தருளவா டென்னவர் மனனனுய் மலயத்
துவசனென் றொருவன் வருமவன் கற்பின் றுணைவியாய் வருதியப் போதுன்
தவமக வாக வருவலென் றன்பு தந்தனள் வந்தவா றிதுவென்
றுவமையில் பொதியத் தமிழ்முனி முனிவர்க் கோதினு னுள்ளவா றுணர்ந்தார்.

தடாதகைப்பிராட்டியார் திருவவதாரப்படல முற்றிற்று

ஆ. திருவிருத்தம் - ரு௧௧.

ஐந்தாவது

திருமணப்படலம்.

தரைபுகழ் தென்னன் செல்வத் தடாதகைப் பிராட்டி தானே
திரைசெய்நீர் ஞாலங் காத்த செயல்சிறி துரைத்தேன் றெய்வ
விரைசெய்பூங் கோதை மாதை விடையவன் மணந்து பாரா
டரசுசெய் திருந்த தோற்ற மறிந்தவா றியம்ப லுற்றேன். (௧)

காயிரும் பரிதிப் புத்தேள் கலியிரு டிமிப்பச்சோதி
பாயிருங் குடைவெண் டிங்கட் படரொளி நீழல் செய்ய
மாயிரும் புவன மெல்லா மறுமுறை யுலக மீன்ற
தாயிளங் குமரி யாகித் தனியர சளிக்கு நாளில். (௨)

மருங்குதேய்ந் தொளிப்பச் செம்பொன் வனமுலை யிறுமாப் பெய்தக்
கருங்குழற் கற்றை பானாட் கங்குலை வெளிறு செய்ய
இரங்குரல் யாழ்மென் றீஞ்சொ லின்னகை யெம்பி ராட்டிக்
கருங்கடி மன்றல் செய்யுஞ் செவ்விவந் தடுத்த தாக. (௩)

பனிதரு மதிக்கொம் பன்ன பாவையைப் பயந்தா ளோக்கிக்
குனிதர நிறையப் பூத்த கொம்பனாய்க் கின்னுங் கன்னி
கனிதரு செவ்வித் தாயுங் கடிமணப் பேறின் றென்னாத்
துனிதரு நீர ளாகிச் சொல்லினள் சொல்லக் கேட்டாள். (௪)

அன்னைநீ நினைந்த வெண்ண மாம்பொழு தாகும் வேறு
பின்னைநீ யிரங்கல் யான்போய்த் திசைகளும் பெருநீர் வைப்பும்
என்னது கொற்ற நாட்டி மீள்வலிங் கிருத்தி யென்னாப்
பொன்னவிர் மலர்க்கொம் பன்னாள் பொருக்கென வெழுந்து போந்தாள். (௫)

தேம்பரி கோதை மாதின் றிருவுளச் செய்தி நோக்கி
ஆம்பரி சுணர்ந்த வேந்த ரமைச்சரும் பிறரும் போந்தார்
வாம்பரி கடாவித் தின்டேர் வலவனுங் கொணர்ந்தான் வைய
தாம்பரி வகல வந்தா ளேறினள் சங்க மார்ப்ப

ஆர்த்தன தடாரி பேரி யார்த்தன முருடு மொந்தை
ஆர்த்தன வுடுக்கை தக்கை யார்த்தன படகம் பம்பை
ஆர்த்தன முழவந் தட்டை யார்த்தன சின்னந் தாரை
ஆர்த்தன காளந் தாள மார்த்தன திசைக ளெங்கும்.

வீங்கிய கொங்கை யார்த்த கச்சினர் விழிபோற் றைப்ப
வாங்கிய சிலையே றிட்ட கணையினர் வட்டத் தோல்வாள்
தாங்கிய கையர் வைவேற் றளிர்க்கையர் பிணைத்தெய் வம்போல்
ஓங்கிய வாயத் தாரு மேறினா ருடனத் திண்டேர். (௮)

இடைப்பன வுருளாற் பாரைக் கீண்டுபா தலத்தி னெல்லை
அடைப்பன பரந்த தட்டா லடையவான் றிசைக ளெட்டும்
உடைப்பன வண்ட முட்டி யொற்றிவான் கங்கை நீரைத்
துடைப்பன கொடியாற் சாரி சுற்றுவ பொற்றிண் டேர்கள். (௯)

செருவின்மா தண்டந் தாங்கிச் செல்லும்வெங் கூற்ற மென்ன
அருவிமா மதநீர் கால வரத்தவெங் குருதிக் கோட்டாற்
கருவிவான் வயிறு கீண்டு கவிழுநீர் வாயங் காந்து
பருகிமால் வரைபோற் செல்வ பரூஉப்பெருந் தடக்கை யானை. (௧௦)

ஒலியவார் திரையி னன்ன வொழுங்கின யோக மாக்கள்
வலியகா லடக்கிச் செல்லு மனமெனக் கதியிற் செல்வ
கலியநீர் ஞாலங் காப்பான் கடையுக முடிவிற் றோற்றம்
பொலியும்வாம் புரவி யொன்றே போல்வன புரவி வெள்ளம். (௧௧)

காலினுங் கடிது செல்லுஞ் செலவினர் கடுங்கட் கூற்ற
மேலினு மிகையுண் டாயின் வெகுண்டுவெங் கண்டு மீளும்
பாலினர் பகுவாய் நாகப் பல்லினும் பில்கு மால
வேலினர் வீயா வென்றி வீக்கிய கழற்கால் வீரர். (௧௨)

எண்புதைத் தெழுந்த வீர ரிவுளிதேர் யானை வெள்ளம்
மண்புதைத் தனப தாகை மாலைவெண் கவிகை பீலி
விண்புதைத் தனநுண் ணேளி வெயில்விடு பரிதிப் புத்தேள்
கண்புதைத் தனபே ரோதை கடலொலி புதைத்த தன்றே. (௧௩)

தேரொலி கலினப் பாய்மான் செலவொலி கொலைவெண் கோட்டுக்
காரொலி வீர ரார்க்குங் கனையொலி புனைதார்க் குஞ்சி
வாரொலி கழற்காற் செங்கண் மள்ளர்வன் றிண்டோள் கொட்டும்
பேரொலி யண்ட மெல்லாம் பிளந்திடப் பெருத்த வன்றே. (௧௪)

பரந்தெழு பூழி போர்ப்பப் பகலவன் மறைந்து முந்நீர்
கரந்தவன் போன்று ளாகக் கங்குல்வந் திறுதத தேய்ப்பச்
சுரந்திரு ணிறைய முத்தின் சோதிவெண் குடையும் வேந்தர்
நிரந்தபூண் வயிர வூரு நிறைநிலா வெறிக்கு மன்றே. (௧௫)

தேர்நிரை கலனாய்ச் செல்லப் பரிநிரை திரையாய்த் துள்ள
வார்முர சொலியாய்ச் சில்ல வாட்கலன் மீனாய்க் கொட்பத்
தார்நிரை கவரிக் காடு நுரைகளாய்த் ததும்ப வேழங்
கார்நிரை யாகத் தானைக் கடல்வழிக் கொண்ட தன்றே. (௧௬)

கள்ளவிழ் கோதை மாத ரெடுத்தெறி கவரிக் காடு
துள்ளவந் தணர்வா யாசி யொருபுறந் துவன்றி யார்ப்பத்
தெள்விளி யமுத கீத மொருபுறந் திரண்டு விம்ம
வள்ளைவார் குழையெம் மன்னை மணித்திண்டேர் நடந்த தன்றே. (௧௭)

மீனவன் கொடியுங் கான வெம்புலிக் கொடியுஞ் செம்பொன்
மானவிற் கொடியும் வண்ண மயிற்றழைக் காடுந் தோட்டுப்
பானலங் கருங்கட் செவ்வாய் வெண்ணகைப் பசுந்தோ ணிம்பத்
தேனலம் பலங்கல் வேய்ந்த செல்விதேர் மருங்கிற் செல்ல. (௧௮)

மறைபல முகங்கொண் டேத்தி வாயதடு மாறி யெய்ப்ப
நிறைபரம் பரைநீ யெங்க ணிருபர்கோன் மகளாய் வையம்
முறைசெய்து மாசு தீர்ப்பா யடியனேன் முகத்து மாசுங்
குறையென நிழற்றுந் திங்கட் கொள்கைபோற் கவிகை காப்ப. (௧௯)

அங்கய னேக்கி மான்றேர்க் கணித்தொரு தடந்தே ரூர்ந்து
வெங்கதிர் வியாழச் சூழ்ச்சி மேம்படு சுமதி யென்போன்
நங்கைதன் குறிப்பு நோக்கி நாற்பெரும் படையுஞ் செல்லச்
செங்கையிற் பிரம்பு நீட்டிச் சேவகஞ் செலுத்திச் செல்ல. (௨0)

அல்கினூற் கருவிச் சேனை யாழ்கட லனைத்துந் தன்போல்
மலர்தலை யுலக மன்றி மகபதி யுலக மாதி
உலகமும் பிறவுஞ் செல்ல வுலப்பிலா வலிய தாக்கித்
திலகவா ணுதலாண் மன்னர் திருவெலாங் கவரச் செல்வாள். (௨௧)

கயபதி யாதி யாய வடபுலக் காவல் வேந்தர்
புயவலி யடங்க வென்று புழைக்கைமான் புரவி மான்றேர்
பயன் மதி நுதல்வே லுண்கட் பாவைய ராய மோடு
நயமலி திறையுங் கொண்டு திசையின்மே லோட்டம் வைத்தாள். (௨௨)

வீர்கழல் வலவன் றேரை வலியகா லுதைப்ப முந்நீர்
ஊர்கல னொப்பத் தூண்ட வும்பர்கோ னணிகத் தெய்திப்
போர்விளை யாடு முன்னர்ப் புரந்தரன் மிலைந்த தும்பைத்
தார்விழ வாற்றல் சிந்தத் தருக்கழிந் தகன்று போனான். (௨௩)

இழையிடை நுழையா வண்ண மிடையிற வீங்கு கொங்கைக்
குழையிடை நடந்து மீளுங் கொலைக்கணார் குழுவுந் தான
மழைகவிழ் கடாத்து வெள்ளை வாரண மாவுங் கோவுந்
தழைகதிர் மணியுந் தெய்வ தருக்களுங் கவர்ந்து மீண்டாள். (௨௪)

வேறு.

இவ்வா றுமற்றைத் திசைகாவலர் யாரை யும்போய்த்
தெவ்வாண் மைசிந்தச் செருச்செய்துதி றையுங் கைக்கொண்
டவ்வா றுவெல்வா ளனமூன்றர ணட்ட மேருக்
கைவார் சிலையான் கயிலைக்கிரி நோக்கிச் செல்வாள். (௨௫)

சலிக்கும் புரவித் தடந்தேருடைத் தம்பி ராட்டி
கலிக்கும் பலதூ ரியங்கைவரை தெய்வத் திண்டேர்
வலிக்கும் பரிமள் ளர்வழங்கொலி வாங்கி நேரே
ஒலிக்கும் படிகிட் டினளூழிதொ றோங்கு மோங்கல. (௨௬)

வானோர் கயிலை மலையான்மக டன்னை நீத்துப்
போனாள் வந்தாளென் றருவிக்கட் புனலுக் கந்நீர்
ஆனா வொலியா லனைவாவென றழைஇத்தன் றே
தானா நகையாற் றழீஇயெதி ரேற்பச் சென்றாள். (௨௭)

* பயல் - பாதி.

கிட்டிப் பொருப்பைக் கிரியோடு கிரிக டாக்கி
முட்டிப் பொருதா லெனவேழ முழங்கிப் பாயப்
புட்டிற் புறத்தார் மறத்தார்கணை பூட்டு வில்லார்
வட்டித் தருமே றெனவார்த்து வளைந்து கொண்டார். (௨௮)

ஓடித் திருமா மலைகாவல ருமப ரார்க்கும
நாடிப் பணிதற் கரிதாகிய நந்தி பாதங்
கூடிப் பணிந்தித் திறங்கூறலுங் கொற்ற வேனந்
தேடிக் கிடையா னுளந்தேர்ந்தன னந்தி யெந்தை. (௨௯)

வென்றிக் கணத்தை விடுத்தான்கனன் மீது பெய்த
குன்றிக் கணம்போற் சுழல்கண்ணழல் கொப்புளிப்பச்
சென்றிக் கனைய மொழியாள்பெருஞ் சேனை யோடும்
ஒன்றிக் கடலுங் கடலும்பொரு தொத்த தன்றே. (௩௦)

சூலங் கண்மழுப் படைதோமர நேமி பிண்டி
பாலங் கள்கழுக் கடைவாட்படை தண்ட நாஞ்சில்
ஆலங் கவிழ்க்கின் றவயிற்படை வீசி யூழிக்
காலங் கலிக்குங் கடல்போன்ற களம ரார்ப்பு. (௩௧)

எறிகின் றனவோச் சுவவெய்வன வாதி யாகச்
செறிகின் றனபல் படைசெந்நிறப் புண்ணீர் மூழ்கிப்
பறிகின் றனவும் பிழைக்கின்றவும் பட்டுத் தாக்கி
முறிகின் றனவு முயன்றார்வினைப் போக மொத்த. (௩௨)

தெரிசிக் கவந்த சிலதேவர் சிறைப்பு ளூர்தி
வெருவிப் பறந்த வொழிந்தோர்விலங் கூர்தி மானங்
கருவிப் படையாற் சிதைபட்டன கால னூர்தி
குருதிப் புனலுக் கதுகொற்றவை யுண்ட தென்ன. (௩௩)

பொருகின் றதுகண் டுவிச்சாதரர் போகம் வீடு
தருகின் றவனைத் தொழுவானெறி சார்ந்து நேரே
வருகின் றவர்வே றுவழிக்கொடு போவ ரன்புக்
குருகின் றனிமெல லடியாரொடு மூற்ற மஞ்சா. (௩௪)

திங்கட் படைசெங் கதிரோன்படை சீற்ற மேற்ற
அங்கிப் படைதீம் புனலான்படை நார சிங்க
துங்கப் படைசிம் புணைடும்படை சூறைச் செல்வன்
வெங்கட் படைபன் னகவெம்படை மாறி விட்டார். (௩௫)

கொட்புற் றமராடு மிக்கொள்கையர் தம்மி னந்தி
நட்புற் றவர்கைப் படைதாட்பட ஞான மூர்த்தி
பெட்புற் றருள வருமெங்கள்பி ராட்டி வெய்ய
கட்புற் றரவிற் கணைமாரிக ளேற்றி நின்றாள். (௩௬)

கையிற் படையந் தனர்கற்படை தொட்டு வீரர்
மெய்யிற் படுமென் றுவிடுக்குமுன் வீரக் கன்னி
பொய்யிற் படுநெஞ் சுடையார்தவம் போல மாய
வெய்யிற் படுவச் சிரவேலொளி மிர்த்து வீசி. (௩௭)

துண்டம் படவே துணித்தக்கண வீரர் தம்மைத்
தண்டங் கொடுதாக் கினள்சாய்ந்தவர் சாம்பிப் போனா
ரண்டங் கள்சரா சரம்யாவையுந் தானே யாக்கிக்
கொண்டெங் குநின்றாள் வலிகூறவ ரம்பிற் றாமோ. (௩௮)

படையற் றுவிமா னமும்* பற்றற வற்றுச் சுற்றுந்
தொடையற் றிகன்மூண் டெழுதோள்வலி யற்றுச் செற்றம்
இடையற் றுவீர நகையற்றட லேறு போலும்
நடையற் றடைவார் நிலைகண்டன னந்தி யண்ணல். (௩௯)

உடையா னடிதாழ்ந் திவையோதலு மோத நீத்தச்
சடையா னிளவா ணகைசெய்து தருமச் செங்கண்
விடையான் சிலையா னிகல்வென்றி விளக்குந் தெய்வப்
படையா னெழுந்தா னமராடிய பாரிற் சென்றான். (௪௰)

வேறு.

மேவ யாவவப் பாரிடைப் பாரிட வீரரை யமராடி
ஓவி லாவலி கவர்ந்தது மன்றினி யுருத்தெவ ரெதிர்ந்தாலுந்
தாவி லாவலி கவரவு மடங்கலின் றணிப்பிணா வெனநிற்குந்
தேவி யாதிரு வுருவமுஞ் சேவகச் செய்கையு மெதிர்கண்டான் (௪௧)

ஒற்றை வார்கழற் சரணமும் பாம்பசைத் துடுத்தவெம் புலித்தோலுங்
கொற்ற வாண்மழுக் கரமும்வெண் ணீறணி கோலமுந் நூன்மார்புங்
கற்றை வேணியுந் தன்னையே நோக்கிய கருணைசெய் திருநோக்கும்
பெற்ற தன்வலப் பாதியைத் தடாதகைப் பிராட்டியு மெதிர்கண்டாள். (௪௨)

கண்ட வெல்லையி லொருமுலை மறைந்தது கருத்தினாண் மடனச்சங்
கொண்ட மைந்திடக் குனிதர மலர்ந்தபூங் கொம்பர்போ லொசிந்தொல்கிப்
பண்டை யன்புவந் திறைகொளக் கருங்குழற் பாரமும் பிடர்தாழக்
கெண்டை யுண்கணும் புறவடி நோக்கமண் கிளைத்துமின னெனநின்றாள். (௪௩)

நின்ற மென்கொடிக் ககல்விசும் பிடையர னிகழ்த்திய திருமாற்றம்
அன்ற றிந்தமூ தறிவனுஞ் சுமதிசீ றடிபணிந் தன்னாயிக்
கொன்றை யஞ்சடைக் குழகனே நின்மணக் குழகனென் றலுமன்பு
துன்ற நின்றவட் பார்த்தருட் சிவபரஞ் சோதிமற் றிதுகூறும். (௪௪)

என்று தொட்டுநீ திசையின்மேற் சயங்குறித் தெழுந்துபோந் தனையாமும்
அன்று தொட்டுநம் மதுரைவிட் டுனைவிடா தடுத்துவந் தனமுன்னைத்
தொன்று தொட்டநான் மறையுரை வழிவரு சோமவா ரததோரை
நன்று தொட்டநாண் மணஞ்செய வருதுநின் னகர்க்குநீ யேகென்றான். (௪௫)

என்ற நாதன்மே லன்பையு முயிரை —ருத்தியா யஞ்சூழக்
குன்ற மன்னதேர் மேற்கொடு தூரியங் குரைகட லெனவார்ப்ப
நின்ற தெய்வமால் வரைகளும் புண்ணிய நீத்தமு நீத்தேகி
மன்றன் மாமது ராபுரி யடைந்தனண் மதிக்குல விளக்கன்னாள். (௪௬)

மங்கை நாயகி மங்கல மெதிர்கொள வந்துவா னிழிசெல்வம்
பொங்கு மாளிகை புகுந்தன ளாகமேற் புதுமணத் திறந்தீட்டி
எங்கு மோலையுய்த் தமைச்சர்மங் கலவினைக் கியைவன வமைக்கின்றார்
அங்கண் மாநக ரெங்கணுங் கடிமுர சாணைமே லறைவித்தார். (௪௭)

* படையற்றபிமானமும் என்றும் பாடம்.

வேறு.

கன்னிதன் மணமுரசறைதலுங் கடிநக ருறைபவர் கரைகெடத்
துன்னிய வுவகையர் கடவுளைத் தொழுகைய ருடல முகிழ்ப்பெழப்
பன்னிய துதியின ரியலெழின் மகளிரை யழகுசெய் பரிசென
இன்னிய லெழில்வள நகரெலாஞ் செயல்வினை யணிபெற வெழில்செய்வார். ()

கோதையொ டும்பரி சந்தனக் குப்பை களைந்தனர் வீசுவார்
சீதள மென்பனி நீர்கரைச் சிந்தின பூழி யடக்குவார்
மாதரு மைந்தரு மிறைமகண் மன்றன் மகிழ்ச்சி மயக்கினாற்
காதணி குழைதொடி கண்டிகை கழல்வன தெரிகிலர் தொழில்செய்வார். (௪௯)

மங்கல மென்றெனை வினவுவார் வருமதி நாளென வுரைசெய்வார்
தங்களை யொல்லை தழீஇக்கொள்வார் தாங்கரு மோகை தலைக்கொள்வார்
திங்களி னெல்லையு மாறுநா ளாறுக மென்று செலுத்துவார்
நங்கைய ருங்கடி காணவோ துடித்தன தோள்க ணமக்கென்பார். (௫0)

பித்திகை வெள்ளை புதுக்குவார் பெட்புறு வார்களும் பெட்புறச்
சித்திர பந்தி நிறுத்துவார் தெற்றிகள் குங்கும நீவுவார்
வித்திய பாலிகை மென்றழை விரிதலை நீர்நிறை பொற்குடம்
பத்தியின் வேதி நிரப்புவார் தோரணம் வாயில் பரப்புவார். (௫௧)

நீளிடை மணிமறு கெங்கணு நெடுநடைக் காவண நாட்டுவார்
பாளைகொள் கமுகு சுவைக்கழை பழுக்குலை வாழை யொழுக்குவார்
கோளிறை கொண்டென வாடிகள் கோத்தணி வார்மிசை கொடிநிரை
வாளரி யெழுபரி யடிபட மத்திகை நிரையென வைப்பரால். (௫௨)

பூவொடு தண்பனி சிந்துவார் பொரியொடு பொற்சுணம் வீசுவார்
பாவை விளக்கு நிறுத்துவார் பைந்தொடை பந்தரி னாற்றுவார்
ஆவண மென்ன வயிர்ப்புற வணிமறு கெங்கணு மரதனக்
கோவையு மரகத மாலையுங் கோப்பமை யாரமுந் தூக்குவார். (௫௩)

அடுகரி சிந்துர மப்புவா ரழன்மணி யோடை மிலைச்சுவார்
கடுநடை யிவுளி கழுத்தணி காலணி கலனை திருத்துவார்
சுடர்விடு தேர்பரி பூட்டுவார் தொடையொடு கவரிக ணேக்குவார்
வடுவறு பொற்கல நவமணி மங்கல தீப மியற்றுவார். (௫௪)

பழையன கலனை வெறுப்பராற் புதியன பணிகள் பரிப்பராற்
குழைபனி நீரளை குங்குமங் குவிமுலை புதைபட மெழுகுவார்
மெழுகிய வீரம் புலர்த்துவார் விரைபடு கலவைக ளப்புவார்
அழகிய கண்ணடி நோக்குவார் மைந்தரை யாகுல மாக்குவார். (௫௫)

அஞ்சனம் வேல்விழி தீட்டுவா ராடவர் மார்பிடை நாட்டுவார்
பஞ்சுகள் பாத மிருத்துவார் பரிபுர மீது திருத்துவார்
வஞ்சியர் தேற லருந்துவார் மருங்கு தள்ளாட வருந்துவார்
கொஞ்சிய கனிமொழி குழறுவார் குழுவொடு குரவைகள் குழறுவார். (௫௬)

கின்னர மிதுன மெனச்செல்வார் கிளைகெழு பாணொடு விறலியர்
கன்னிய ரரசை வணங்குவார் கடிமண மெய்து களிப்பினால்
இன்னிசை யாழொடு பாடுவா ரீந்தன துகில்விரித் தேந்துவார்
சென்னியின் மீதுகொண் டாடுவார் தேறலை யுண்டு செருக்குவார். (௫௭)

மன்னவர் மகளிரு மறையவர் மகளிரும் வந்துபொன் மாலையைத்
துன்னினர் சோபனம் வினவுவார் தோகைதன் மணவணி நோக்குவார்
கன்னித னேவலர் வீசிய காசறை கர்ப்புர வாசமென்
பொன்னறுங் கலவையின் மெய்யெலாம் புதைபட வளனொடும் போவரால்.

அங்கண கஞ்செய் தசும்பின வாடை பொதிந்தன தோடவிழ்
தொங்கல் வளைந்தன மங்கையர் துள்ளிய கவரியி னுள்ளன
கங்கையும் வாணியும் யமுனையுங் காவிரி யும்பல துறைதொறும்
மங்கல தூரிய மார்ப்பன மதமலை மேலன வருவன. (௫௯)

அங்கவர் மனைதொறு மணவினை யணுகிய துழனிய ரெனமறைப்
புங்கவ ரினிதுண வறுசுவைப் போனக மடுவினை புரிகுவார்
இங்கடு வனபலி யடிகளுக் கெனயதி களையெதிர் பணிகுவார்
சங்கர னடியரை யெதிர்கொள்வார் சபரியை விதிமுறை புரிகுவார். (௬௦)

இன்னண நகர்செய லணிசெய வினையிலி மணமகன் மணவினைக்
கன்னியு மனையவ ளென்னினிக் கடிநகர் செயுமெழில் வளனையாம்
என்னவ ரியநகர் செயலெழி லிணையென வுரைசெய்வ தெவனிதன்
முன்னிறை மகடமர் மணவணி மண்டப வினைசெயு முறைசொல்வாம். (௬௧)

வேறு.

கருவி வான்முகி லூர்தியைப் பொருதநாட் கலைமதி மருமாட்டி
செருவில் வாங்கிய விமானமா லைகளெனத் தெய்வத வரையெல்லாம்
மருவி யந்நகர் வைகிய தம்மிறை மடமக டனைக் காண்பான்
துருவி நின்றென நட்டன ரெட்டிவான் றொடுநிலை நெடுந்தேர்கள். (௬௨)

பளிக்கி னேழுயர் களிறுசெய் தமைத்தபொற் படியது பசுஞ்சோதி
தெளிக்கு நீலத்தி னுளிக ணிரைமணித் தெற்றிய துற்றோர்சாய்
வெளிக்கு ளாடிய வோவியப் பாவைபோன் மிளிர்பளிங் காற்சோதி
தளிர்க்கும் பித்திய திடையிடை மரகதச் சாளரத் ததுமாதோ. (௬௩)

பல்லு ருச்செய்த பவளக்கா லாயிரம் படைத்ததிந் திரநீலக்
கல்லு ருத்தலைப் போதிய தாடகக் கவின்கொ ளுத்தரமேல
தல்லு ருக்கிய செம்மணித் துலாத்ததா லமுதுடற் பசுந்திங்கள்
வில்லு ருக்குகன் மாடம தாகிய வேள்விமண் டபஞ்செய்தார். (௬௪)

முத்திற் பாளைசெய் தவிர்மர கதத்தினான் மொய்த்தபா சிலைதுப்பின்
கொத்திற் றீம்பழம் வெண்பொனாற் கோழரை குயின்றபூ கமுந்துப்பின்
றொத்திற் றூங்குபூச் செம்பொனாற் பழுக்குலை தூக்கிப்பொன் னாற்றண்டு
வைத்துப் பாசொளி மரகத நெட்டிலை வாழையு நிரைவித்தார். (௬௫)

பித்தி மாதவி சண்பகம் பாதிரி பிறவுமண டபஞ்சூழப்
பத்தி யாவளர்த் தளிகள்வாய் திறந்துபண் பாடவின் மதுக்காலத்
தத்தி யாய்மணங் கவர்ந்துசா ளரந்தொறுந் தவழ்ந்தொழு கிளந்தென்றல்
தித்தி யாநிற்கு மதுத்துளி தெளித்திடச் செய்தன ருய்யானம். (௬௬)

வேள்விச் சாலையும் வேதியுங் குண்டமு மேகலை யொடுதொன்னூற்
கேள்விச் சார்பினாற் கண்டுகண் ணடிவிடை கிளர்சுடர் சீவற்சம்
நீள்விற் சாமரம் வலம்புரி சுவத்திக நிறைகுட மெனவெட்டு
வாள்விட் டோங்குமங் கலந்தொழில் செய்பொறி வகையினா னிருமித்தார்.

* சபரியை - பூசை.

மணங்கொள் சாந்தொடு குங்குமப் போதளாய் மான்மதம் பனிநீர்தோய்த்
திணங்கு சேறுசெய் திருநிலந் தடவிவா னிரவிமண் டலநாணப்
பணங்கொ ளுகமா மணிவிளக் கிருகையும் பாவைக ளெடுத்தேந்தக்
கணங்கொ டாரகை யெனநவ மணிகுயில் கம்பலம் விதானித்தார். (௬௮)

செம்பொற் கோயின்முன் சேண்டொடு காவணர் திசையெலாம் விழுங்கச்செய்
தம்பொற் பாலிகைப் பாண்டில்வாய் முளைதெளித் தம்புயத் தவனூறி
உம்பர்க் கேற்றபொற் கம்பல மேல்விரித் துள்ளுறத் தவிசிட்டுத்
தும்பைத் தாழ்சடை யான்றமக் காதனஞ் சூழவிட் டதனுப்பண். (௬௯)

கற்ட கந்தரு வயிரவா ளரிப்பிடர் மதுவப்பொற் குறடேற்றி
எற்ப டுந்துகி ராற்குடஞ் சதுரமா வியற்றிய வெருத்தத்தூண்
விற்ப டும்பளிக் குத்தரந் துப்பினல் விடங்கமே னிலமூன்றுப்
பொற்ப நூல்வழி விமானம்பன் மணிகளாற் பொலியச் செய்துள்ளாக. (௭௦)

அங்க மாறுமே கால்களாய் முதலெழுத் தம்பொற்பீ டிகையாகித்
துங்க நான்மறை நூல்களே சித்திலந் தொடுத்தசை தாம்பாகி
எங்க ளுயக னெம்பெரு மாட்டியோ டிருப்பதற் குருக்கொண்டு
தங்கி னுலென நவமணி குயின்றபொற் றவிசது சமைத்திட்டார். (௭௧)

புரந்த ரன்றரு கற்பகம் பொலந்துகில் பூண்முத லியநல்கச்
சுரந்த ரும்பெற லமுதமை வகையறு சுவையுணு முதலாகப்
பரந்த தெய்வவான் பயப்பச்சிந் தாமணி பற்பல வுஞ்சிந்தித்
திரந்து வேண்டுவ தரத்தர வீட்டினு ரிந்திர நகர்நாண. (௭௨)

தென்னர் சேகரன் றிருமக டிருமணத் திருமுகம் வரவேற்று
மன்னர் வந்தெதிர் தொழுதுகைக் கொண்டுதம் மணிமுடி மிசையேற்றி
அன்ன வாசகங் கேட்டனர் கொணர்ந்தவர்க் கருங்கலந் துகினல்கி
முன்ன ரீர்த்தெழு களிப்புற மனத்திடு முந்தினர் வழிக்கொள்வார். (௭௩)

கொங்கர் சிங்களர் பல்லவர் வில்லவர் கோசலர் பாஞ்சாலர்
வங்கர் சோனகர் சீனர்கள் சாளுவர் மாளவர் காம்போசர்
அங்கர் மாகத ராரியர் நேரிப ரவந்தியர் வைதர்ப்பர்
கங்கர் கொங்கணர் விராடர்கண் மராடர்கள் கருநடர் குருநாடர்.

கலிங்கர் சாவகர் கூவிள ரொட்டியர் கடாரர்கள் காந்தாரர்
குலிங்கர் கேகயர் விதேகர்கள் பௌரவர் கொல்லர்கள் கல்யாணர்
தெலுங்கர் கூர்ச்சரர் மர்ச்சரகண் மிலேச்சர்கள் செஞ்சையர் முதலேனைப்
புலங்கொண் மன்னருந் துறைதொறு மிடைந்துபார் புதைபட வருகின்று (௭௫)

இத்த கைப்பல தேயமன் னவர்களு மெண்ணிடம் பெறுதீண்டிப்
பைத்த வாழிபோ னிலமகண் முதுகிறப் பரந்ததா னையராகித்
தத்த நாட்டுள பலவகை வளனொடுந் தழீஇப்பல நெறிதோறும்
மொய்த்து வந்தனர் செழியர்கோன் றிருமகண் முரசதிர் மணமூதூர். (௭௬)

வந்த காவல ருழையர்சென் றுணர்த்தினர் வருகென வருளுய்ப்ப
சந்த வாளரிப் பீடமீ மீதறந் தழைத்தருள் பழுத்தோங்குந்
தந்த நாண்மலர்க் கொம்பினைக் கண்டுகண் களிப்புற முடித்தாமஞ்
சிந்த வீழ்ந்தருள் சுரந்திடத் தொழுதுபோய்த் திருந்துதம் மிடம்புக்கார். (௭௭)

வரைவ ளங்களும் புறவினில் வளங்களு மருதத்தண் பணைவேலித்
தரைவ ளங்களுஞ் சலதிவாய் நடைக்கலந் தருவளங் களுமீண்டி
உரைவ ரம்பற மங்கலம் பொலிந்ததிவ் வூரினி நால்வேதக்
கரைக டந்தவன் றிருமணஞ் செயவரு காட்சியைப் பகர்கின்றேன். (௭௮)

ஏக நாயகி மீண்டபி ஞாட்பிகந் திரசத கிரியெய்தி
நாக நாயக மணியணி சுந்தர நாயக னுயிர்க் கெல்லாம்
போக நாயக னாகிப்போ கம்புரி புணர்ப்பறிந் தருணந்தி
மாக நாயகன் மாலய னுருத்திரர் வரவின்மேன் மனம்வைத்தான். (௭௯)

சங்கு கன்னனை யாதிய கணாதிபர் தமைவிடுத் தனனன்னோர்
செங்க ணேற்றவர் மாலயன் முதற்பெருந் தேவர்வான் பதமெய்தி
எங்க ணாயகன் றிருமணச் சோபன மியம்பினா ரதுகேட்டுப்
பொங்கு கின்றபே ரன்புபின் றள்ளுறப் பொள்ளென வருகின்றார். (௮௰)

அஞ்சு கோடியோ சனைபுகைந் திருமடங் கழன்றவர் தமைப்போலீ
ரஞ்சு தியுருத் திரர்புடை யுடுத்தவ ரழற்கணுற் பூதங்கள்
அஞ்சு நூறுருத் திரரண்டத் துச்சிய ரரியயன் முதற்றேவர்
அஞ்சு மாமலையு மாற்றலும் படைத்தவ ரடுகுறட் படைவீரர். (௮௧)

புத்தி யட்டகர் நாலிரு கோடிமேற் புகப்பெய்த நரகங்கள்
பத்தி ரட்டியுங் காப்பவர் பாரிடப் படையுடைக் கூர்மாண்டா
சத்தி யச்சிவ பரஞ்சுட ருதவிய சதவுருத் திரரன்னோர்
உய்த்த ளித்தவீ ரைம்பது கோடிய ருருத்திரர் கணநாதர். (௮௨)

பட்ட காரிவா யரவணி பவர்பசு பதியுருத் திரராதி
அட்ட மூர்த்திகண் மேருவி னவிர்சுட ராடகர் தோடேந்தும்
மட்ட றுமலர் மகன்செருக் கடங்கிட மயங்கிய விதிதேற்ற
நிட்டை யாலவ னெற்றியிற் றோன்றிய நீலலோ கிதநாதர். (௮௩)

பால் மேற்றசெந் தழல்விழி யுருத்திரர் பதினொரு பெயர்வாகைச்
சூல மேற்றகங் காளக பாலியர் தூரகத நெடுங்காரி
நீல மேற்றபைங் கஞ்சுகப் போர்வையி னெடியவர் திருவாணைக்
கோல மேற்றவ ரெண்மர்நா லிப்புறங் கொண்டகேத் திரபாலர். (௮௪)

செய்ய தாமரைக் கண்ணனுடைக் கரியவன் செம்மலர் மணிப்பீடத்
தையன் வாசவ னாதியெண் டிசைப்புலத் தமரரெண் வசுதேவர்
மையில கேள்விசா லேழெழு மருத்துகண் மருத்துவ ரிருவோர்வான்
வெய்ய வாள்டழங் காறிரண் டருக்கரோர் வெண்சுடர் மதிச்செல்வன். (௮௫)

கையுங் கால்களுங் கண்பெற்றுக் கதிபெற்ற கடும்புலி முனிச்செல்வன்
மையய ராமுடிப் பதஞ்சலி பாற்கடல் பருகிமா தவன்சென்னி
செய்ய தாள்வைத்த சிறுமுனி குறுமுனி சிவமுனார் சனகாதி
மெய்யு ணர்ச்சியோர் வாமதே வன்சுகன் வியாதனா ரதன்மன்னோ. (௮௬)

எழுவ ரன்னையர் சித்தர்விச் சாதர ரியக்கர்கின் னரர்வேத
முழுவ ரம்புணர் முனிவர்யோ கியர்மணி முடித்தலைப் பலநாக
வழுவில் வான்றவ வலியுடை நிருதர்வாள் வலியுடை யசுரேச
பழுவொ டும்பயில் பூதவே தாளர்வெங் கூளிக [illegible]

ஆண்டி னோடைய னம்பரு வந்திங்க ளாறிரண் டிருபக்கம்
ஈண்டு மைம்பொழு தியோகங்கள் கரணங்க ளிராப்பக லிவற்றோடும்
பூண்ட நாழிகை கணமுதற் காலங்கள் பொருகட னதிதிக்கு
நீண்ட மால்வரை திக்கய மேகமின் னிமிர்ந்தவைம் பொறிம்பூதம். (அஅ)

மந்தி ரம்புவ னங்கடத் துவங்களை வருணங்கள் பதம்வேதந்
தந்தி ரம்பல சமயநூல் புறந்தழீஇச் சார்ந்தநூ றருமாதி
முந்தி ரங்கிய சதுர்விதஞ் சரியையே முதலிய சதுட்பாதம்
இந்தி ரங்குநீர் முடியவ ரடியவ ரிச்சியா வெண்சித்தி. (அகூ)

ஆயி ரங்கட லனையவாய்ப் பரந்தெழு மாயிர மணிகத்துள்
ஆயி ரங்கதி ரனையரா யுருத்திர ரந்தரத் தவரண்டம்
ஆயி ரந்தகர் பட்டெனத் துந்துபி யாயிரங் கலந்தார்ப்ப
ஆயி ரஞ்சத கோடியோ சனைவழி யரைக்கணத் திடைச்செல்வார். (கூ0)

சித்தந் தேர்முனி வேந்தருந் தேவருஞ் சிவனுருத் தரித்தோருந்
தத்தந் தேர்முத லூர்தியர் வார்திகழ் சந்தன மணிக்கொங்கைக்
கொத்தந் தேமலர்க் குழன்மனை யாரொடுங் குளிர்விசும் பாறுச்சென்
றத்தந் தேரிடை யாள்பங்க னணிவரைக் கணியராய் வருகின்றார். (கூக)

இழிந்த வூர்தியர் பணிந்தெழும் யாக்கைய ரிறைபுகழ் திருநாமம்
மொழிந்த நாவினர் பொடிப்பெழு மெய்யினர் முகிழ்த்தகை முடியேறக்
கழிந்த வன்பினர் கண்முதற் புலங்கட்குங் கருணைவான் சுவையூறப்
பொழிந்த வானந்தத் தேனுறை திருமலைப் புறத்துவண் டெனமொய்த்தார். (கூஉ)

விரவு வானவர் நெருக்கற வொதுக்குவான் வேத்திரப் படையோச்சி
அரவு வார்சடை நந்தியெம் பிரானவ ரணிமணி முடிதாக்கப்
பரவு தூளியிற் புதைபடு கயிலையம் பருப்பதம் பகல்காணும்
இரவி மண்டலத் தொடுங்குநா ளொடுங்கிய விந்துமண் டலமானும். (கூங)

வந்த வானவர் புறநிற்ப நந்தியெம் வள்ளலங் குள்ளெய்தி
எந்தை தாள்பணிந் தையவிண் ணவரெலா மீண்டினா ரெனவீண்டுத்
தந்தி டென்னவந் தழைத்துவேத் திரத்தினாற் றராதரந் தெரிந்துய்ப்ப
முந்தி முந்திவந் திறைஞ்சினார் சேவடி முண்டக முடிசூட. (கூச)

தீர்த்தன் முன்பணிந் தேத்துகின் றார்களிற் சிலர்க்குத்தன் றிருவாயின்
வார்த்தை நல்கியுஞ் சிலர்க்கருண் முகிழ்நகை வழங்கியுஞ் சிலர்க்குக்கண்
பார்த்து நீண்முடி துளக்கியுஞ் சிலர்க்கருட் பரிசிறந் தெழுந்தண்டங்
காத்த கண்டனோர் மண்டபத் திடைபுக்குச் * கடிமணக் கவினகொள்வான்.

ஆண்ட நாயகன் றிருவுளக் குறிப்புணர்ந் தளகைநா யகனுள்ளம்
பூண்ட காதன்மேற் கொண்டெழு மன்புந்தன் புனிதமெய்த் தவப்பேறும்
ஈண்ட வாங்கணைந் தெண்ணிலா மறைகளு மிருவரு முனிவோருந்
தீண்ட ருந்திரு மேனியைத் தன்கையாற் றீண்டிமங் கலஞ்செய்வான். (கூசு)

பூந்து கிற்படாங் கொய்சகத் துணைபின் போக்குகோ வணஞ்சாத்தி
ஏந்தி ரட்டைஞாண் புட்டிகை யிறுக்கிவண் டிரைக்குநாண் மலர்க்குஞ்சி
வேய்ந்து கற்பகப் புதுமலர்ச் சிகழிகை மிலைந்துநீ றணிமெய்யிற்
சாந்த மான்மதந் தண்பனி நீரளாய்த் தடக்கையான் மட்டித்தான். (கூஎ)

* கூடி என்றும் பாடம்.

இரண்டு செஞ்சுடர் நுழைந்திருந் தாலென விணைமணிக் குழைக்காதிற்
கருண்ட தோடுபொற் குண்டலந் திணியிரு டிரந்துதோட் புறந்துள்ள
மருண்ட தேவரைப் பரமென மதிப்பவர் மையல்வல் லிருண்மாள
இருண்ட கண்டயே* [illegible] கோத்தென விணைத்தகண் டிகைசாத்தி. (கூஅ)

வலங்கி டந்தமுந் நூல்வரை யருவியின் வயக்குமார் பிடைச்சென்றித்
தலங்கி டந்தவெண் டிங்களுற் றமுதெனத் தரளமா லிகைசாத்தி
இலங்கி டந்தமா லிகைப்பரப் பிடையியைத் திருண் முகம் பிளந்தார
கலங்கி டந்தபாற் கடன்முளைத் தெழுமிளங் கதிரெனக் கவின்செய்து. (கூகூ)

இசைக டந்தநாற் புயங்களிற் பட்டிகை சேர்த்துவா ளுறிக்குந்தோள்
நசைக டந்தநல் லார்மனங் கவர்ந்துயிர் நக்கவங் கதஞ்சாத்தி
அசைக டங்கலுழ் வாரண வுரிவைமீத் தணிகொளுத் தரியம்பெய்
திசைக டந்தமந் திரபவித் திரமெடுத் தெழில்விர னுழைவித்து. (க00)

உடுத்த கோவண மிசைப்பொலந் துகிலசைத் துரகமைந் தலைநால
விடுத்த போல்வெயின் மணித்தலைக் கொடுக்குமின் விடவிரு புறந்தூக்கித்
தொடுத்த தார்புயந் தூக்கிநூ புரங்கழல் சொற்பதங் கடந்தன்பர்க்
கடுத்த தாளிலிட் டிருநிதிக் கோமக னருந்தவப் பயன்பெற்றான். (க0க)

செங்கண் மாலய னிந்திரன் முதற்பெருந் தேவர்க்கும் யாவர்க்கும்
மங்க லந்தரு கடைக்கணு யகனொரு மங்கலம் புனைந்தான்போற்
சங்கை கொண்டுகும் போதரன் முதுகின்மேற் சரணம்வைத் தெதிர்போந்த
துங்க மால்விடை மேற்கொடு நடந்தனன் சுரர்கள்பூ மழைதூர்த்தார். (க0உ)

அந்த ரத்தவ ரந்தர துந்துபி யைந்துமார்த் தனர்சூழ
வந்த ரக்கரு மியக்கரும பூதரு மங்கல வியங்கல்லக்
கொந்த லர்க்கருங் குழலர மடந்தையர் கொளை † வல்விஞ் சையர்தாளந்
தந்த சைத்திட மலர்ந்தபூங் கொம்பர்போற் சாய்ந்தசைந் தனராட. (க0௩)

துங்க மாயிரங் கருவியா யிரமலைத் தூங்கிருண் முழைதோறுஞ்
சிங்க மாயிரம் வாய்திறந் தார்த்தெனச் சிரங்களா யிரந்திண்டோள்
அங்க மாயிர மாயிர முடையவ னுயிர முகந்தோறுஞ்
சங்க மாயிர மாயிர மாயிரந் தடக்கையும் பிடித்தூத. (க0௪)

போகரு மாயைவன் புணர்ப்பையு மிருண்மலப் புணர்ப்பையுங் கடந்தெம்மைக்
காக்கு நாயக னருச்சனை விடாதருட் கதியடைந் துளவாணன்
தூக்கு நேர்பட வாயிரங் கரங்களாற் றொம்மென முகந்தோறுந்
தாக்க வேறுவே றெழுகுட முழாவொலி தடங்கட லொலிசாய்ப்ப. (க0௫)

முனிவ ரஞ்சலி முகிழ்த்தசெங் கையினர் மொழியுமா சியருள்ளங்
கனிவ ரும்பிய வன்பினர் பரவுட் கருத்தொரு ‡ வழிக்கொண்டோர்
துனிவ ருங்கண நாதர்கொட் டதிர்கரத் துணையினர் மழைபோலப்
பனிவ ருங்கண ராடிய தாளினர் பாடுநா வினரேத்த. (க0௬)

இந்தி ரன்மணிக் களாஞ்சிகொண் டொருமருங் கெய்தமெல் விலைவாசந்
தந்தி லகுபொன் னடைப்பைகொண் டிசனோர் சூர்வர மருத்துக்கோ
வந்தி ரங்கொலி யாலவட் டம்பணி மாறவா ரழறூபந்
தந்து நேரகீர்க் கடவுள்பொற் கோடிகந் தாமரைக் கரந்தூக்க. (க0௭)

* யிமைத்திருண் என்றும் பாடம். † கொளை - இசை.
‡ கருத்தொடு என்றும் பாடம்.

நிருதி யாடிகொண் டெதிர்வர வடிக்கடி நிதிமுகந் தளகைக்கோன்
கருதி யாயிரஞ் சிதறிடத் தண்டிநன் காஞ்சுகர் வினைசெய்யப்
பரிதி யாயிரம் பணாடவி யுரகரும் பன்மணி விளக்கேந்தச்
சுருதி நாயகன் றிருவடி முடியின்மேற் சுமந்துபின் புறஞ்செல்ல. (௧௦௮)

கங்கை காவிரி யாதிய நவநதிக் கன்னியர் குளிர்தூங்கப்
பொங்கு வார்திரைக் கொழுந்தெனக் கவரிகள் புரட்டவெண் பிறைக்கீற்றுத்
துங்க வாளெயிற் றிருளுடற் குழிவிழிச் சுடரழற் செம்பங்கிச்
சங்க வார்குழைக் குறியகுண் டோதரன் றண்மதிக் குடைதாங்க. (௧௦௯)

இடிக்கும் வானுரு மேறுயர் நெடுங்கொடி யெகினவெண் கொடிஞாலம்
முடிக்கு மூழிநா ளுளர்கடுங் காலென மூச்செறி விடநாகந்
துடிக்க வாய்விடு முவணவண் கொடிமுதற் சூழ்ந்துசே வகஞ்செய்யுங்
கொடிக்கு ழாத்தினுட் கொடியர சாய்விடைக் கொடிபுடை பெயர்ந்தாட. (௧௧௦)

கண்ணு தற்பிரான் மருங்கிரு கடவுளர் கப்புவிட் டெனத்தோன்றும்
வண்ண முத்தலைப் படையெடுத் தொருகுட வயிறுடைப் பெரும்பூதப்
பண்ண வப்பதி னெண்படைக் கலமுந்தன் பக்கமாச் சேவிப்ப
அண்ணன் முச்சுடர் முளைத்தொரு வரைநடந் தனையதோர் மருங்கெய்த. (௧௧௧)

பந்த நான்மறைப் பொருட்டிரட் டெனவட பாடல்செய் தெதிர்புட்ப
தந்த னேத்தவா னுயிருண வுருத்தெழு தழல்விடத் தெதிர்நோக்கும்
அந்த மாதியி லானிழல் வடிவமா யாடியி னிழல்போல
வந்த சுந்தரன் சாத்துநீ றுடுதிரு மாலையு மெடுத்தேந்த. (௧௧௨)

அன்னத் தேரின னயன்வலப் பாங்கரு மராவலி கவர்சேனை
வண்ணத் தேரினன் மாலிடப் பாங்கரு மலர்க்கரங் குவித்தேத்தப் [ந்தால்
பொன்னத் தேமலர்க் கொன்றையான் வெள்ளியம் பொருப்பொடு மெழீஇப்போ
என்னத் தேரணி மதுரைமா நகர்ப்புறத் தெய்துவா னவ்வேலை. (௧௧௩)

வேறு.

தவேர்க டேவன் வந்தான் செங்கண்மால் விடையான் வந்தான்
மூவர்கண் முதல்வன் வந்தான் முக்கணெம் பெருமான் வந்தான்
பூவல ரயன்மால் காணாப் பூரண புராணன் வந்தான்
யாவையும் படைப்பான் வந்தா னென்றுபொற் சின்ன மார்ப்ப. (௧௧௪)

பெண்ணினுக் கரசி வாயிற் பெருந்தகை யமைச்ச ரேனை
மண்ணினுக் கரசர் சேனை மன்னவர் பிறரு மீண்டிக்
கண்ணினுக் கினியான் றன்னைக் கண்டெதிர் கொண்டு தாழ
விண்ணினுக் கரச னூரின் வியத்தகு நகரிற் புக்கான். (௧௧௫)

முகிறவழ் புரிசை மூதூர் முதற்பெரு வாயி னீந்தி
அகிறவழ் மாட வீதி வலம்பட வணைவா னாக
நகிறழை பொலங்கொம் பன்ன நன்னகர் மகளி ரம்பொற்
றுகிறழை மருங்கு லாயத் தொகைபுறந் தழுவச் சூழ்ந்தார். (௧௧௬)

தமிழ்முதற் பதினெண் டேதது மகளிருந் தாரு நாட்டின்
அமிழ்தமன் னவரு முல்லை யம்புயங் குமுத நீலங்
குமிழ்நறுங் கோங்கு காந்தள் கோழிண ரசோகம் வாசம்
உமிழ்தர மலர்ந்த நந்த வனமென வொருங்கு மொய்த்தார். (௧௧௭)

எம்மைநீர் விடுதிரேயோ வென்பபோற் கலையுஞ் சங்கும்
விம்மநாண் மடனுமுங்க ணைஞ்சுடை வெளியா றாக
உம்மைநீத் தோடு மங்கேதா வுரைத்தன முரைத்தோ மென்று
தம்மைநா புரங்காள் [illegible]ற்றித் தடப் [illegible]போ லார்ப்பச் சென்றார். (ககஅ)

கடியவிழ் கமலக் கூடு பூத்ததோர் கருணை வாரி
அடிமுதன் முடியீ றாக வலர்விழிக் குவளை சாத்திக்
கொடியசெம் பதுமப் போது குழன்மிசைச் சூடு வார்போற்
றொடியணி கரங்கள் கூப்பித் துதியென வினைய சொல்வார். (ககக)

நங்கையென் னோற்றாள் கொல்லோ நம்பியைத் தினைத்தற் கென்பார்
மங்கையை மணப்பா னென்னோ வள்ளலு நோற்றா னென்பார்
அங்கடி மதுரை யென்னோ வாற்றிய் தவந்தா னென்பார்
இங்கிவர் வதுவை காண்பா னென்னநா நோற்றோ மென்பார். (கஉ

தென்னவன் வருந்தி மேனாட் செய்தவப் பேறாப் பெற்ற
தன்மகள் வதுவை காணத் தவஞ்செய்தா னிலனே யென்பார்
கன்னித னழகுக் கேற்ற வழகனிக் காளை யென்பார்
மன்னவ னிவனே யன்றி வேறிலை மதுரைக் கென்பார். (கஉக)

நங்கைதன் னலனுக் கேற்ப நம்பியைத் தந்த திந்தத்
துங்கமா மதிநூல் வல்ல சுமதிதன் சூழ்ச்சி யென்பார்
அங்கவ டவப்பே றென்பா ரன்னைதன் கன்னிக் கன்றி
இங்கிவன் மருக னாக வெத்தவ முடையா ளென்பார். (கஉஉ)

பூந்துகி னெகிழ்ப்பர் சூழ்வர் புணர்முலை யலைப்பர் பூசு
சாந்தினை யுகுப்பர் நாணந் தலைக்கொண்டார் போலச் சாய்வர்
கூந்தலை யவிழ்ப்பர் வாரிக் கூட்டுவர் முடிப்பர் மேனி
மாந்தளி ரெங்கு மாரன் வாளிகள் புதையச் சோர்வார். (கஉங)

தண்ணளி யொழுக்கஞ் சார்ந்த குணத்தினைச் சார்ந்து மிந்த
வண்ணமென் மலர்க ளென்னே வாளியாய்த் தைத்த வென்பார்
கண்ணறுங் கூந்தல் வேய்ந்த கடியவிழ் நீலத் தாரும்
வெண்ணகை யரும்பு முல்லைத் தாமமும் வெறுத்து வீழ்ப்பார். (கஉச)

விம்மிச்செம் மாந்த கொங்கை மின்னனார் சிலர்விற் காமன்
கைம்மிக்க கணையே றுண்டு கலங்கிய மயக்காற் றங்கள்
மைம்மிக்க நெடுங்கண் மூரல் வதனமு மவனம் பென்றே
தம்மிற்றம் முகத்தை நோக்கார் தலையிறக் கிட்டுச் செலவார். (கஉ(

பற்றிய பைம்பொன் மேனிப் பசப்பது தேறா ரண்ணல்
ஒற்றைமால் விடையின் மேற்கொண் டிருந்துநம் முளத்து மேவப்
பெற்றன மிதென்கொன் மாயம் பேதைமீர் பெருமா னீண்ட
கற்றைவார் சடைப்பூங் கொன்றை யீதுவன் றோ காண்மி னென்பார். (கஉசு)

திங்களென் றெழுந்து நம்மைச் சுடுவதென் செந்தீ யென்பார்
புங்கவன் சென்னி மீதுங் கிடப்பதே போலு மென்பார்
அங்கவற் கிந்த வெப்ப மிலைகொலென் றயிர்ப்பா ராற்றக்
கங்கைநீர் சுமந்தா னென்பா ரதனையுங் காண்மி னென்பார். (கஉஎ)

கலையொடு நாணம் போக்கிக் கருத்தொடு வண்ணம் வேறாய்
உலையொடு மெழுகிட் டென்ன வுருகுகண் ணீர ராகிக்
கொலையொடு பயில்வேற் கண்ணார் குரிசிறன் பவனி நோக்கி
அலையொடு மதியஞ் சூடு மையன்மெய் யன்ப ரொத்தார். (கஉஅ)

நட்டவர்க் கிழுக்க ணெய்தி நன்றிகொன் றவர்போற் கையில்
வட்டவாய்த் தொடியுஞ் சங்கு மருங்குசூழ் கலையு நீங்க
இட்டபொற் சிலம்பிட் டாங்கே நன்றியி னிகவார் போற்கால்
ஒட்டியே கிடப்ப நின்று ருகுத்தபூங் கொம்ப ரன்னார். (கஉகூ)

மின்னகு வேற்க ணாளோர் விளங்கிழை விடைமே லையன்
புன்னகைப் போது நோக்கப் போதுமுப் புரமும் வேவின்
மன்னவன் புரமுஞ் சுட்ட வல்லவோ கெட்டேன் வாளா
இன்னவை சுடாது போமோ வேழையேன புரமு மென்று (கங௦)

உழைவிழி யொருத்தி தன்க ணுருவெளி யாகித் தோன்றுங்
குழகனை யிரண்டு செம்பொற் கொங்கையு மொன்றாய் வீங்கத்
தழுவுவா ளூற்றங் காணு டடமுலை யிரண்டே யாகி
யிழையிடை கிடக்க நீங்கி யிருக்கைகண் டிடைபோ லெய்த்தாள். (கஙக)

வாரிருங் கொங்கை யாளோர் மாதராள் வானோ ருய்யக்
காரிருள் விடமுண் டன்று கறுத்ததே யன்று கொன்றைத்
தாரிருஞ் சடையார் கண்டந் தையன்மீர் தமது நெஞ்சங்
காரிரும் பென்றே காட்டக் குறியிட்ட கறுப்பே யென்றாள். (கஙஉ)

பொன்னவிர் சடையான் முன்னே போனதென் னெஞ்சு தூதாய்
அன்னது தாழ்த்த தென்னென் றழுங்குவா ளொருத்தி கெட்டேன்
என்னது நெஞ்சும் போன தென்றன ளொருத்தி கேட்ட
மின்னனாள் வேற்கண் சேந்தாள் விளைத்தன ளவளும் பூசல். (கஙங)

செப்பிளங் கொங்கை யாளோர் தெரிவைமீர் திருநோக் கெம்பால்
வைப்பதென் மதன்போ லெம்மைச் சுடுவதே மதனுக் காவி
அப்பொழு தளித்தாற் போலெம் மாவியு மளித்தா லின்று
மெய்ப்புக ழுமக்குண் டின்றேற் பெண்பழி விளையு மென்றாள். (கஙச)

கவனமால் விடையான் றன்னைக் கடைக்கணித் திலனென் றங்கோர்
சுவணவான் கொடியோ ரோவத் தொழில்வல்லான குறுக நோக்கி
இவனைநீ யெழுதித் தந்தால் வேண்டுவ வீவனென்றாள்
அவனையா ரெழுதவல்லா ரென்றன ளாவி சோர்ந்தாள். (கஙரு)

வலத்தயன் வரவு காணான் மாவிடங் காணாள் விண்ணோர்
குலத்தையுங் காணான் மண்ணோர் குழாத்தையுங் காணான் ஞானப்
புலத்தவர் போலக் கண்ட பொருளெலா மழுமான் செங்கைத்
தலத்தவன் வடிவாக் கண்டா ளொருதனித் தையன் மாது. (கஙசு)

முன்பெற்றங் காவிற் செல்ல வண்ணலை முன்போய்க் காண்பான்
பின்பற்றி யாசைப் பாசம் பிணித்தெழ வோடு வாளோர்
பொன்பெற்ற முலையாள் கொம்ப ருகுமலர் போலத் தாளின்
மின்பெற்ற காஞ்சி தட்ப விலங்கொடு கடப்பா ளொத்தாள். (கஙஎ)

விதுக்கலை மிலைந்து செங்கண் விடையின்மேல் வருமா னந்த
மதுக்கட றனைக்கண் வாயான் முகந்துண்டு மகளி ரெல்லாம்
புதுக்கலை சரிவ தோரார் புரிவளை கழல்வ தோரார்
முதுக்குறை யகல்வ தோரார் மூழ்கினர் காம வெள்ளம். (௧௫௮)

பைத்தழ கெறிக்கு மாடப் பந்திமே னின்று காண்பார்
கைத்தலங் கூப்பி யாங்கே கண்களு நோக்கி யாங்கே
சித்தமுங் குடிபோய்ச் சொல்லுஞ் செயலுமாண் டங்கண் மாற
வைத்தமண் பாவை யோடு வடிவுவே றற்று நின்றார். (௧௫௯)

அன்பட்ட புரமுங் காம னுகமுஞ் சுட்ட தீயிம்
மின்பட்ட சடிலத் தண்ணன் மெய்யென்ப தறியார் நோக்கிப்
பொன்பட்ட கலனு மெய்யும் பொரிகின்றா ரவனைப் புல்லின்
என்பட்டு விடுமோ வைய வேழைய ராவி யம்மா. (௧௬௦)

கொடிகளபூத் துதிர்ந்த போதிற் கொம்பனார் கலையுஞ் சங்குந்
தொடிகளுஞ் சுண்ணத் தூளுஞ் சுரர்பொழி மலரு நந்தி
யடிகள்கைப் பிரம்பு தாக்கச் சிந்திய வண்ட வாணர்
முடிகளின் மணியுந் தாருங் குப்பையாய் மொய்த்த வீதி. (௧௬௧)

துன்னிய தருப்பை கூட வரசிலை துழாவித் தோய்த்துப்
பொன்னியல் கலச நன்னீர் பூசுரர் வீச வன்னார்
பன்னியர் வட்ட மாக வானவிற் பதித்தா லென்ன
மின்னிய மணிசெய் நீரா சனக்கலம் விதியாற் சுற்ற. (௧௬௨)

கொடிமுர சாடி செம்பொற் குடமணி நெய்யிற் பூத்த
கடிமல ரனைய தீப மங்குசங் கவரி யென்னும்
படிவமங் கலங்க ளெட்டும் பரித்துநேர் பதுமக் கொம்பர்
வடிவினார் வந்து காட்ட மாளிகை மருங்கிற் செல்வான். (௧௬௩)

செப்புரங் கவர்ந்த கொங்கை யரம்பையர் தீபங் காட்டுந
துப்புர வன்பி னார்க்குத் தூயமெய்ஞ் ஞான நல்கும்
முப்புரங் கடந்தான் றன்னை மும்முறை யியங்க ளேங்கக்
கப்புர விளக்கந் தாங்கி வலஞ்செயக் கருணை பூத்தான். (௧௬௪)

கோயின்முன் குறுகலோடு மைம்புலக் குறும்பு தேய்த்த
தூயநால் வேதச் செல்வர் சுவத்திக ளோத நந்தி
சேயிருந் தடக்கை பற்றிச் செங்கணே றிழிந்து நேர்ந்து
மாயனு மயனு நீட்டு மலர்க்கர மிருபாற் பற்றி. (௧௬௫)

எதிர்ந்தரு மறைகள் காணா தினைத்தடி சுமந்து காணும்
முதிர்ந்தவன் புருவ மான பாதுகை முடிமேற் சத்தி
பதிந்தவர் தலைமேற் கொண்டு பாசவல வினைதீர்த் துள்ளம்
பொதிந்துபே ரின்ப நல்கும் பொன்னடிப் போக சாக்தி. (௧௬௬)

பையர வுரியி னன்ன நடைப்படாம் பரப்பிப் பெய்த
கொய்யவிழ் போதி னீத்தங் குரைகழ லடிந னைப்பத்
தெய்வமந் தாரமாரி திருமுடி நனைப்பத் தென்னர்
உய்யவந் தருளுமைய னுள்ளெழுந் தருளு மெல்லை. (௧௬௭)

மங்கல மகளி ரோடுங் காஞ்சன மாலை வந்து
கங்கையின் முகந்த செம்பொற் கரகநீ ரனையார் வாக்கத்
திங்களங் கண்ணி வேய்ந்த சிவபரஞ் சோதி பாத
பங்கயம் விளக்கி பங்கீர் தலைப்பெய்து பருகி நின்றாள். (கசஅ)

பாதநாண் மலர்மே லீரம் புலர வெண்பட்டா னீவிச்
சீதமென் பனிநீ ராட்டி மான்மதச் சேறு பூசித்
தாதவிழ் புதுமந் தாரப் பொன்மலர் சாத்திச் சென்னி
மீதிரு கரங்கள் கூப்பி வேறுநின் றிதனைச் சொன்னாள். (கசகூ)

அருமையா லடியேன் பெற்ற வணங்கினை வதுவை செய்தித்
திருநகர்த் திருவுங் கன்னித் தேயமுங் கைக்கொண் டாள்யென்
றுரைசெய்தா ளதற்கு நேர்வா ருண்ணகை யுடைய ராகி
மருகனா ரிங்க ளார்ப்ப வதுவைமண் டபத்தைச் சேர்ந்தார். (கரு௦)

அருத்தநான் மறைக ளார்ப்ப வரிமணித் தவிசி லேறி
நிருத்தனாங் கிருந்து சூழ நின்றமா லயனை யேனை
உருத்திரா தியரைப் பின்னு மொழிந்தவா னவரைத் தத்தந்
திருத்தகு தவிசின் மேவத் திருக்கடை நாட்டம் வைத்தான். (கருக)

விண்டல வானோ ரேனோர் மிடைதலான் ஞாலச் செல்வி
பண்டைய ளன்றி யின்று பரித்தனள் பௌவ மேழும்
உண்டவன் றன்னைத் தானின் றுத்தரத் திருத்தி னானே
அண்டர்நா யகன்ற னாணை வலியினோ வறியே மம்மா. (கருஉ)

மாமணித் தவிசில் வைகி மணவினைக் கடுத்த வோரை
தாம்வரு மளவும் வானத் தபனிய மலர்க்கொம் பன்னார்
காமரு நடன நோக்கிக் கருணைசெய் திருந்தா னிப்பாற்
கோமகள் வதுவைக் கோலம் புனைதிறங் கூற லுற்றேன். (கருங)

மாசறுத் தமையா னந்த வாரிநீ ராட்டிப் பண்டைத்
தேசுரு விளக்க வலல சிவபரம் பரையைச் செம்பொன்
ஆசனத் திருத்தி நான மணிந்துகுங் குமச்சே றப்பி
வாசநீ ராட்டி னார்கண் மதிமுகக் கொம்ப ரன்னார். (கருச)

முரசொடு சங்க மேங்க மூழ்கிநுண் டூசு சாத்தி
அரசிய லறத்திற் கேற்ப வந்தணர்க் குரிய தானம்
விரைசெறி தளிர்க்கை யார வேண்டுவ வெறுப்பத் தந்து
திரைசெய்நீ ரமுத மன்னா டிருமணக் கோலங் கொள்வாள். (கருரு)

செம்மலர்த் திருவும் வெள்ளைச் செழுமலர்த் திருவுந் தங்கள்
கைம்மலர்த் தவப்பேறீன்று காட்டுவார் போல நங்கை
அம்மல ரனிச்ச மஞ்சு மடியிற்செம் பஞ்சு தீட்டி
மைம்மலர்க் குழன்மேல் வாசக் காசுறை வழியப் பெய்து. (கருசு)

கொங்கையின் முகட்டிற் சாந்தங் குளிர்பனி நீர்தோய்த் தட்டிப்
பங்கய மலர்மே லன்னம் பவளச்செவ் வாய்விட் டார்ப்பத்
தங்கிய வென்ன வார நூபுரந் ததும்பச் செங்கேழ்
அங்கதிர்ப் பாத சாலங் கிண்கிணி யலம்பப் பெய்து. (கருஎ)

எண்ணிரண் டிரட்டி கோத்த விரிசிகை யிருபத் தொன்றிற்
பண்ணிய கலாப மீரேழ் பருமநா லிரண்டிற் செய்த
வண்ணமே கலையி ரண்டிற் காஞ்சியிவ் வகையோ ரைந்து
புண்ணியக் கொடிவண் டார்ப்பப் பூத்தபோற் புலம்பப் பூட்டி. (கருஅ)

பொன்மணி வண்டு வீழ்ந்த காந்தளம் போது போல
மின்மணி யாழி கோத்து மெல்விரற் செங்கைக் கேற்ற
வன்மணி வைர யாப்புக் கடகமுந் தொடியும் வானத்
தென்மணிக் கரங்கள் கூப்ப விருதடந் தோளி லேற்றி. (கருகூ)

மரகத மாலை யம்பொன் மாலைவித் துரும மாலை
நிரைபடு வான வில்லி னிழல்பட வாரத் தாமம்
விரைபடு களபச் சேறு மெழுகிய புளகக் கொங்கை
வரைபடு மருவி யன்றி வனப்புநீர் நுரையு மான. (கசுo)

உருவமுத் துடுவா யம்முத் துடுத்தபல் காசு கோளாய்
மருவவக் காசு சூழ்ந்த மாமணி கதிராய்க் கஞ்சுல்
வெருவவிட் டிமைக்கு மார மேருவின் புறஞ்சூழ்ந் தாடுந்
துருவசக் கரம்போற் கொங்கை துயல்வர விளங்கச் சூட்டி. (கசுக)

கொடிக்கய வினமாய் நின்ற கோட்சுறா வேறும் வீறு
தொடிக்கலை மதியுந் தங்கோன் றொல்குல விளக்காய்த் தோன்றும்
பிடிக்கிரு காதி னூடு மந்தணம் பேசு மாபோல்
வடிக்குழை மகரத் தோடு பரிதிவாண் மழுங்கச் சேர்த்து. (கசுஉ)

மழைக்குமா மதிக்கு நாப்பண் வானவிற் கிடந்தா லொப்ப
இழைக்குமா மணிசூழ் பட்ட மிலம்பக மிலங்கப் பெய்து
தழைக்குமா முகிலை மைந்தன் றளையிடல் காட்டு மாபோற்
குழைக்குநீர்த் தகர ஞாழற் கோதைமேற் கோதை யார்த்து. (கசுங)

கற்பகங் கொடுத்த விந்தக் காமரு கலன்க ளெல்லாம்
பொற்பமெய்ப் படுத்து முக்கட் புனிதனுக் கீறி லாத
அற்புத மகிழ்ச்சி தோன்ற வழகுசெய் தமயந் தோன்றச்
சொற்கலை யாளும் பூவின் கிழத்தியுந் தொழுது நோக்கி. (கசுச)

சுந்தர வல்லி தன்னைச் சோபன மென்று வாழ்த்தி
வந்திரு கையுந் தங்கண் மாந்தளிர்க் கைக ணீட்டக்
கொந்தவிழ் கோதை மாது மறமெலாங் குடிகொண் டேறும்
அந்தளிர்ச் செங்கை பற்றா வெழுந்தனளண் மறைக ளார்ப்ப. (கசுரு)

வேறு.

அறைந்தன தூரிய மார்த்தன சங்கம்
நிறைந்தன வானவர் நீண்மலர் மாரி
எறிந்தன சாமரை யேந்திழை யார்வாய்ச்
சிறந்தன மங்கல வாழ்த்தெழு செல்வம். (கசுசு)

அடுத்தனள் சுந்தரி யம்பொன டைப்பை
எடுத்தன ளாடி திலோத்தமை யேந்திப்
பிடித்தனள் விந்தை பிடித்தனள் பொற்கோல்
உடுத்த நெருக்கை யொதுக்கி நடந்தாள். (கசுஎ)

கட்டவிழ் கோதை யரம்பை களாஞ்சி
தொட்டன ளேர்ப்பசி தூமணி யால
வட்ட மசைத்தனள் வன்ன மணிக்கா
சிட்டிழை கோடிக மேனகை கொண்டாள். (கசுஅ)

கொடிக ளெனக்குளிர் போதொடு சாதும்
வடிபனி நீரினர் வீசுபொன் வண்ணப்
பொடியின ரேந்திய பூம்புகை தீபத்
தொடியணி கையினர் தோகையர் சூழ்ந்தார். (கசுகூ)

தோடவி ழோதியர் சோபன கீதம்
பாட விரைப்பனி நீரொடு சாந்தம்
ஏடவிழ் மென்மல ரிட்டப டத்திற்
பாடக மெல்லடி பைப்பய வையா. (கஎ0)

செம்மல ராளொடு நாமக டேவி
கைம்மலர் பற்றின கல்வியொ டாக்கம்
இம்மையி லேபெறு வார்க்கிது போதென்
றம்மணி நூபுர மார்ப்பந டந்தாள். (கஎக)

ஒல்கினண் மெல்ல வொதுங்கின ளன்பு
பில்கி யிருந்த பிரானரு கெய்தி
மெல்கி யெருத்த மிசைத்தலை தூக்கிப்
புல்கிய காஞ்சி புலம்ப விருந்தாள். (கஎஉ)

வே று.

அற்பக விமைக்குஞ் செம்பொ னரதன பீடத் தும்பர்ப்
பொற்பக லாத காட்சிப் புனிதனோ டிருந்த நங்கை
எற்பகல் வலங்கொண் டேகு மெரிகதிர் வரையி னுச்சிக்
கற்பக மருங்கிற் பூத்த காமரு வல்லி யொத்தாள். (கஎங)

பண்ணுமின் னிசையு நீருந் தண்மையும் பாலும் பாலின்
நண்ணுமின் சுவையும் பூவு நாற்றமு மணியு மங்கேழ்
வண்ணமும் வேறு வேறு வடிவுகொண் டிருந்தா லொத்த
தண்ணனு முலக மீன்ற வம்மையு மிருந்த தம்மா. (கஎச)

விண்ணுளார் திசையி னுள்ளார் வேறுளார் பிலத்தி னுள்ளார்
மண்ணுளார் பிறரும் வேள்வி மண்டபத் தடங்கி யென்றும்
பண்ணுளா ரோசை போலப் பரந்தெங்கு நிறைந்த மூன்று
கண்ணுளா ரடியி னீழல் கலந்துளார் தம்மை யொத்தார். (கஎரு)

ஆயபோ தாழி யங்கை யண்ணல்பொற் கரக நீராற்
சேயவான் சோதியாடந் சேவடி விளக்கிச் சாந்தந்
தூயபோ தவிழச் சாத்தித் தூபமுஞ் சுடருங் கோட்டி
நேயமோ டருச்சித் தைய னிறையருள் பெற்று நின்றான் (கஎசு)

விண்டலத் தவரு ளாதி வேதியன் பாத தீர்த்தம்
முண்டகத் தவனு மாலு முனிவரும் புரந்த ராதி
அண்டரு நந்தி தேவு மடிகணத் தவரு மேனைத்
தொண்டரும் புறம்பு முள்ளு நனைத்தனர் சுத்தி செய்தார். (கஎஎ)

அத்தலை நின்ற மாயோ னுமைசெங் கரத்து நங்கை
கைத்தலங் கமலப் போது பூத்ததோர் காந்த ளொப்ப
வைத்தரு மனுவா யோதக் கரகநீர் மாரி பெய்தான்
தொத்தலர் கண்ணி விண்ணோர் தொழுதுபூ மாரி பெய்தார். (கஎஅ)

ஆடினா ரரம்பை மாதர் விஞ்சைய ரமுத கீதம்
பாடினா ரநவென் றார்த்துப் பரவினார் முனிவர் வானோர்
மூடினார் புளகப் போர்வை களைத்தவர் முடிமேற் செங்கை
சூடினார் பலரு மன்றற் றிருகெட லின்பத் தாழ்ந்தார். (கஎகூ)

புத்தனா ரெறிந்த கல்லும் போதென மிலைந்த வேத
வித்தனா ரடிக்கீழ் வீழ விண்ணவர் முனிவ ரேனோர்
சுத்தநா வாசிகூரங் குங்குமத் தேசயந் தோய்ந்த
முத்தவா லரிசி வீசி மூழ்கினார் போக வெள்ளம். (கஅ0)

அம்மையோ டப்ப னென்ன வலர்மணம் போல நீங்கார்
தம்மருள் விளையாட் டாலே யாற்றநாட் டமியர் போல
நம்மனோர் காணத் தோன்றி நன்மணம் புணர ஞாலம்
மும்மையு முய்ந்த வென்னாத் தத்தமின் மொழிய லுற்றார். (கஅக)

காமரு சுரபித் தீம்பால் கற்பகக் கனிநெய் கன்னல்
நாமரு சுவைய வின்ன நறுமது பருக்கஞ் செம்பொன்
ஆமணி வட்டத் திண்காற் பாசனத் தமையப் பெய்து
தேமரு கொன்றை யானைத் திருக்கைதொட் டருள்க வென்றார். (கஅஉ)

அங்கைவைத் தமுது செய்தாங் ககமகிழ்ந் தட்டமூர்த்தி
கொங்கவிழ் குமுதச் செவ்வாய் கோட்டிவாண் முறுவல் பூத்தான்
புங்கவர் முனிவர் கற்பின் மகளிரும் போதின் மேய
மங்கைய ரிருவ ரோடு மங்கலம் பாட லுற்றார். (கஅங)

மாக்கடி மூளரி வாணன் மைந்தரோ டொருங்கு வைகி
நாக்களி னடுநா வாரத் துடுவையா னறுநெ யார்த்தி
வாக்கிட வார மாந்தி வலஞ்சுழித் தகடு வீங்கித்
தேக்கிடு மொலி யினார்த்து நிமிர்ந்தது தெய்வச் செந்தீ. (கஅச)

சுற்றுநான் மறைக ளார்ப்பத் தூரியஞ் சங்க மேங்கக்
கற்றநான் முகத்தோன் வேள்விச் சடங்குநூல் கரைந்த வாற்றால்
முற்றமங் கலநாண் சாத்தி முழுதுல கீன்றாள் செங்கை
பற்றினன் பற்றி லார்க்கே வீடருள் பரம யோகி. (கஅரு)

இணைரெரித் தேவுந் தானே யெரிவளர்ப் பவனுந் தானே
உணவுகொள் பவனுந் தானே யாகிய வொருவன் வையம்
புணர்வுறு போக மூழ்கப் புருடனும் பெண்ணு மாகி
மணவினை முடித்தா னன்னோன் புணர்ப்பையார் மதிக்க வல்லார். அசு)

பின்புதன் பன்னி யோடு பிறைமுடிப் பெருமான் கையில்
நன்பொரி வாங்கிச் செந்தீ நாமடுத் தெனைத்து மான
தன்படி யுணர்ந்த வேத முனிவர்க்குத் தக்க தானம்
இன்பகந் ததும்ப நல்கி யெரிவல முறையால் வந்து. (கஅஎ)

மங்கலம் புனைந்த செம்பொ னம்மிமேன் மணாட்டி பாத
பங்கய மலரைக் கையாற் பரிபுரஞ் சிலம்பப் பற்றிப்
புங்கவன் மனுவா லேற்றிப் புண்ணிய வசிட்டன் றேவி,
எங்கெனச் செங்கை கூப்பி யெதிர்வர வருட்கண் சாத்தி. (௧௮௮)

விதிவழி வழாது வேள்வி வினையெலா நிரம்ப வங்ஙன்
அதிர்கட லுலகந் தேற வாற்றினன் மறைக ளார்ப்பக்
கதிர்மணி நகையார் வாழ்த்தக் காமனைக் காய்ந்த நம்பி
மதிநுதன் மங்கை யோடு மணவறை தன்னிற் புக்கான். (௧௮௯)

மணிதரு மிமையமா தையன் மங்கல வனப்பு நோக்கிப்
புனிதவா னவரை யொத்தா ரவர்க்கது புகழோ வெந்தை
கனிதரு கருணை நாட்டம் பெற்றவர் கடவு ளோரார்ப்
பணிதரு மலரிட் டேத்தி வழிபடற் பால ரன்றோ. (௧௯௦)

மானிட ரிமையோ ரென்னும் வரம்பில ராகி வேள்வி
தானிட ரகல நோக்கித் தலைத்தலை மயங்கி நின்றார்
கானிட நடனஞ் செய்யுங் கண்ணுத லருட்க ணோக்கால்
ஊனிட ரகலு நாளி லுயர்ந்தவ ரிழிந்தோ ருண்டோ. (௧௯௧)

மணவறைத் தவிசி னீங்கி மன்றன்மண் டபத்திற் போந்து
கணமணிச் சேக்கை மேவிக் கருநெடுங் கண்ணன் வாணி
துணைவனே முதல்வா னோர்க்குஞ் சூழ்கணத் தொகைக்கு மென்றுந்
தணவறு செல்வந் தந்தோன் சாறுசால் சிறப்பு நல்கி. (௧௯௨)

எட்டுவாய் முளரி யான்மா லேனைவா னவருந் தத்தம்
நாட்டுவாழ் பதியிற் செல்ல நல்விடை கொடுத்து வேந்தர்க்
காட்டுவா ணுடிக் காட்டுந் தன்மைபோ லரசு செய்து
காட்டுவா ணுகி யையன் றிருவுளக் கருணை பூத்தான். (௧௯௩)

வேறு.

அதிர்விடைக் கொடியங் கயற்கொடி யாக வராக்கலன் பொற்கல னாகப்
பொதியவிழ் கடுக்கை வேம்பல ராகப் புலியதள் பொலந்துகி லாக
மதிமுடி வைர மணிமுடி யாக மறைகிடந் தலம்புமா மதுரைப்
பதியுறை சோம சுந்தரக் கடவுள் பாண்டிய னாகிவீற் றிருந்தான். (௧௯௪)

வேறு.

விண்டவழ் மதியஞ் சூடுஞ் சுந்தர விடங்கப் புத்தேள்
கொண்டதோர் வடிவுக் கேற்பக் குருதிகொப் பளிக்குஞ் சூலத்
திண்டிறற் சங்கு கன்னன் முதற்கணத் தேவர் தாமும்
பண்டைய வடிவ மாறிப் பார்த்திபன் பணியி னின்றார். (௧௯௫)

தென்னவன் வடிவங் கொண்ட சிவபர னுலகங் காக்கும்
மன்னவர் சிவனைப் பூசை செய்வது மறையா றென்று
சொன்னது முன்ன மெல்லாந் துணிவது பொருட்டுத் தானும்
அந்நகர் நடுவூ ரென்றோ ரணிநகர் சிறப்பக் கண்டான். (௧௯௬)

மெய்ம்மைநூல் வழியே கோயில் விதித்தருட் குறிநி றீஇப்பேர்
இம்மையே நன்மை நல்கு மிறையென விறுவிப் பூசை
செம்மையாற் செய்து நீப வனத்துறை சிவனைக் கால
மும்மையுந் தொழுது வைய முழுவதுங் கோண டாத்தும். (௧௯௭)

பூவரு மயன்மா லாதிப் புனிதரு முனிவ ரேனோர்
யாவருந் தனையே பூசித் திகபர மடைய நின்ற
மூவருண் மேலா முக்கண் மூர்த்தியே பூசை செய்த
தாவர விலிங்க மேன்மைத் தகுதியா ரளக்க வல்லார். (கசுஅ)

வேறு.

மனித்த ருக்கர சரித்தெய்வ வேந்தர்க்கு மடங்கலாய் மடநல்லார்
கினித்த வைங்கணைக் காளையாய் நிலமகட் கிணர்த்துழா யணி மாலாய்
அனித்த நித்தமோர்ந் திகபரத் தாசைநீத் தகந்தெளிந் தவர்க் கொன்றாய்ந
தனித்த மெய்யறி வானந்த மாம்பர தத்துவ மாய்நின்றான். (கசுகூ)

திருமணப்படல முற்றிற்று.

ஆக திருவிருத்தம் - எகூஅ.

ஆறாவது

வெள்ளியம்பலத்திருக்கூத்தாடியபடலம்.

உலகிய னிறுத்து வான்வந் தொருபரஞ் சுடர்வான் றிங்கட்
குலமணி விளக்கை வேட்டுக் கோமுடி கவித்துப் பாராண்
டிலகுறு தோற்ற மீதான் முனிவர ரிருவர் தேற
அலகிலா னந்தக் கூத்துச் செய்தவா றறைய லுற்றாம். (க)

புண்ணிய மலர்மென் கொம்பை வேட்டபின் புவனந் தாங்குங்
கண்ணுதன் மூர்த்தி யாய கவுரியன் மணத்தில் வந்த
மண்ணியல் வேந்தர் வானோர் மாதவர் பிறரு முண்ண
நண்ணுதி ரென்ன லோடு நண்ணுவார் விரைவி னெய்த. (உ)

பொன்னவிர் கமலம் பூத்த புனிதநீ ராடித் தத்தம்
நன்னெறி நியம முற்றி நண்ணினார் புலிக்கா லோனும்
பன்னக முனியுந் தாழ்ந்து பரவியம் பலத்து ளாடும்
நின்னரு ணடங்கண் டுண்ப தடியேங்க ணியம மென்றார். (ங)

என்னலு மந்தக் கூத்தை யிங்குநாஞ் செய்துந் தில்லைப்
பொன்னக ருலக மெல்லா முருவமாம் புருடற் குள்ளம்
இன்னது துவாத சாந்த மென்றிறை யருளிச் செய்ய
மன்னவ வேனை யங்கம் யாவென மன்னன் சொல்வான். (ச)

அரைக்குமே லுலகே ழென்று மரைக்குக்கீ ழுலகே ழென்றும்
உரைக்கலா லுலக மெல்லா முருவமாம் புருடற் கிந்தத்
தரைக்குமே லணந்தந் தெய்வத் தானமுண் டனைத்துங் கூறின்
வரைக்குறு சிலதா னங்கள் வகுத்துரை செய்யக் கேண்மின். (ரு)

திருவள ராரூர் மூலந் திருவானைக் *காவே நாபி
மருவளர் பொழில்சூ ழண்ணா மலைமணி பூர நீவிர்
இருவருங் கண்ட மன்ற மிதயமாந் திருக்கா ளத்தி
பொருவருங் கண்ட மாகும் புருவமத் தியமாங் காசி. (சு)

* திருவானைக் காவே குய்யம் என்றும் பாடம்.

பிறைதவழ் கயிலைக் குன்றம் பிரமரந் திரமாம் வேதம்
அறைதரு துவாத, சாந்த மதுரையீ ததிக மெந்த
முறையினு லென்னின் முன்னர்த் தோன்றிய முறையா லென்றக்
கறையறு தவத்த ரோடு கவுரியன் கோயில் புக்கான். (எ)

தன்னரு ள . ‿ னீத்த தன்னையே தேடிப் போந்த
மின்னவிர் கயிலை தானோ விடையுரு மாறி மன்றாய்
மன்னிய தேயோ திங்கண் மண்டல மேயோ வென்னப்
பொன்னவிர் விமானக் கீழ்பால் வெள்ளியம் பொதுவுண் டாக. (அ)

மின்பயில் பரிதிப் புத்தேள் பாற்கடல் விளங்கி யாங்குப்
பின்பதன் மிசைமா ணிக்கப் பீடிகை தோன்றிற் றன்ன
தன்பார்த முளமே யாகு மல்லது வேதச் சென்னி
என்பதா மஃதே யன்றி யாதென விசைக்கற் பாற்றே. (கூ)

அன்னதோர் தவிசி னும்ப ராயிரங் கரத்தா லள்ளித்
துன்னிருள் விழுங்குங் கோடி சூரிய ரொருகா லத்து
மன்னின ருதித்தா லொப்ப மணமொழி பக்கங் கீழ்மேல்
பின்முதல் கடந்த ஞானப் பேரொளி வடிவாய்த் தோன்றி. (க0)

மூந்துறு கணங்கண மொந்தை தண்ணுமை முழக்கஞ் செய்ய
நந்திமா முழவந் தாக்க நாரண னிடக்கை யார்ப்ப
வந்துகந் தருவ நூலின் மரபுளி யிருவர் பாட
வைந்துதுந் துபியுங் கல்லென் றார்கலி முழக்கங் காட்ட. (கக)

மதுமுகத் தலர்ந்த வெண்டா மரைமகள் சுருதி கூட்டச்
சதுமுகத் தொருவன் சாம கீதயாழ் தடவிப் பாட
விதுமுகத் தருகு மொய்க்கு மீனென ஞான வெள்ளிப்
பொதுமுகத் தமரர் தூற்றும் பூமழை யெங்கும் போர்ப்ப. (கஉ)

பொருங்கட னிறத்த செந்தீப் பொங்குளைக் குறளன் மீது
பெருங்கடல் வடவைச் செங்கண் பிதுங்கமேற் றிரிந்து நோக்கி
முருங்கட லெரியிற் சீற முதுகிற வலத்தா ளூன்றிக்
கருங்கடன் முளைத்த வெய்யோன் காட்சியிற் பொலிந்து நின்று. (கங)

கொய்யுஞ்செங் கமலப் போது குவிந்தென வெடுத்துக் கூத்துச்
செய்யும்புண் டரிகத் தாளுந் திசைகடந் துளவீ ரைந்து
கையுந்திண் படையுந் தெய்வ மகளிர்மங் கலநாண் காத்த
மையுண்ட மிடறுஞ் சங்க வார்குழை நுழைந்த காதும். (கச)

செக்கரஞ் சடையுந் தேசார் வெண்டிரு நீறுந் தெய்வ
முக்கணு முரகக் கச்சுமுள்ளொளி யிமைக்கு மார்பும்
மைக்கருங் கயற்க ணங்கை வல்லியி னுைதுங்கி நிற்கும்
பக்கமு மவண்மேல் வைத்த பார்வையு நகையுந் தோன்ற. (கரு)

கங்கையா றலம்பு மோசை கமகமைவண் டிரங்கு மோசை
மங்கல முழவி னோசை மந்திர வேத வோசை
செங்கையா டெரியி னோசை திருவடிச் சிலம்பி னோசை
எங்கணு நிரம்பி யன்ப ரிருசெவிக் கமுத மூற்ற. (கசு)

ஆடினா னமலமூர்த்தி யஞ்சலி முகிழ்த்துச் சென்னி
சூடினா ரடியில் வீழ்ந்தார் சுருதியா யிரநா வாரப்
பாடினார் பரமா னந்தப் பரவையிற் படிந்தா ரன்பு
நீடினார் நிருத்தா னந்தங் காண்பது நியமம் பூண்டார். (கஎ)

முனிவர்கந் தருவர் வானோர் தானவர் மோன யோகர்
புனிதகிம் புருட ராதிப் புலவரு மிறைஞ்சி யன்பிற்
கனிதரு மின்பத் தாழ்ந்தார் திருமணங் காண வந்த
மனிதருங் காணப் பெற்றார் மாதவர் பொருட்டான் மன்னோ. (கஅ)

அனந்தனு முனிவர் வேந்த னளவிலா னந்த மூறி
மனந்தனி னிரம்பிமேலும் வழிவது போல மார்பம்
புனைந்தபுண் ணியவெண் ணீறு கரைந்திடப் பொழிகண் ணீருள்
நனைந்திரு கரமுங் கூப்பி நாதனைப் பாடு கின்றான். (கக)

பராபர முதலே போற்றி பத்தியில் விளைவாய் போற்றி
சராசர மாகி வேறாய் நின்றதற் பரனே போற்றி
கராசல வுரியாய் போற்றி கனகவம் பலத்து ளாடும்
நிராமய பரமா னந்த நிருத்தனே போற்றி போற்றி. (உ0)

ஒன்றாகி யைந்தா யையைந் தருவாகி வருவாய் போற்றி
இன்றாகிச் சென்ற நாளா யெதிர்நாளா யெழுவாய் போற்றி
நன்றாகித் தீய தாகி நடுவாகி முடிவாய் மன்றுள்
நின்றாடும் பரமா னந்த நிருத்தனே போற்றி போற்றி. (உக)

அடியரேம் பொருட்டு வெள்ளி யம்பலத் தாடல் போற்றி
பொடியணி தடந்தோள் போற்றி புரிசடை மகுடம் போற்றி
கடியவிழ் மலர்மென் கூந்தற் கயல்விழி பாகம் போற்றி
நெடியநற் பரமா னந்த நிருத்தனே போற்றி போற்றி. (உஉ)

என்றுநின் றேத்தி னன்பி னிருவரை நோக்கி வெள்ளி
மன்றுணின் றாடா நின்ற மறைமுதல் கருணை கூர்ந்து
நன்றுநீர் வேட்ட தென்னென் றருள்செய நாதன் பாதந்
துன்றுமெய் யன்பிற் றாழ்ந்து தொழுதுநின் றிதனைச் சொல்வார். (உ௩)

எந்தையித் திருக்கூத் தென்று மிந்நிலை நின்றி யார்க்கும்
பந்தவெம் பாச நீங்கப் பரிந்தருள் செய்தி யென்னச்
செந்தமிழ்க் கன்னி நாடு செய்தமா தவப்பே றெய்தத்
தந்தன மென்றான் வேதந் தலைதடு மாற நின்றான். (உச)

அராமுனி யீது வேண்டு மாதியெம் பெருமவிந்த
நிராமய பரமானந்த நிருத்தநேர் கண்டோ ரெல்லாந்
தராதல மிசைவந் தெய்தாத் தனிக்கதி பெறுதல் வேண்டும்
பராபர வென்று தாழ்ந்தான் பகவனு மதற்கு நேர்ந்தான். (உ௫)

ஆர்த்தனர் கணத்தோர் கைகோத் தாடின ரலர்பூ மாரி
தூர்த்தனர் விண்ணோர் கண்ணீர் துளும்பினர் முனிவ ராகம்
போர்த்தனர் புளக மன்பிற் புதைந்தனர் விழுங்கு வார்போற்
பார்த்தனர் புல்லிக் கொண்டார் பரவியவ் விருவர் தம்மை. (உசு)

வேறு.

அனித்த மாகிய பூதமைம் பொறிபுல னாதியா றாறாகி
இனித்த மாயையோ டிருவினைத் தொடக்கினு மிருளினும் வேறாகித்
தனித்த யோகிக ளகநிறைந் தாடிய தனிப்பெருந் திருக்கூத்தைக்
குனித்த வண்ணமாக் கண்டவர்க் கிகபரங் கொடுத்தவ னுறைகின்றான். (௨௭)

குனிவி லாதிரைத் தினந்தொடுத் தெதிர்வரு கொடுவி லாதிரை யெல்லை
புனித வாடக முளரிதோய்ந் தத்தனிப் பொதுநடந் தரிசித்தங்
கினித மர்ந்துநூற் றெண்மடங் கைந்தெழுத் தெண்ணியிந் நிலைநிற்கும்
கனியு மன்பினா ரெண்ணியாங் கெய்துவர் கருதிய வரமெல்லாம். (௨௮)

வெள்ளியம்பலத்திருக்கூத்தாடியபடல முற்றிற்று.

ஆ. திருவிருத்தம் ௮௨௬.

ஏழாவது

குண்டோதரனுக்கு அன்னமிட்டபடலம்.

பன்ன கேசனு மடுபுலிப் பாதனும் பணிய
மின்னு வார்சடை மன்னவன் வெள்ளிமன் றாடல்
சொன்ன வாறிது பசித்தழல் சுடவொரு பூதம்
அன்ன மாமலை தொலைத்தவா றெடுத்தினி யறைவாம். (௧)

கன்னி யர்க்கர சாயினாள் கடிமனை புகுந்த
மின்னி யற்சடை மாதவர் வேதிய ரேனோர்
எந்நி லத்துள மன்னவர் யாவர்க்கு முறையே
பொன்னி யற்கலத் தறுசுவைப் போனக மருத்தா. (௨)

பூசு கின்றவு முடிப்பவும் பூண்பவும் பழுக்காய்
வாச மெல்லிலை யேனவு மம்முறை வழங்காத்
தேச மன்னவ ரேனையோர் செல்லுநர்ச் செலுத்தி
ஈச னன்புறு கற்பினா ளிருக்குமவ் வேலை. (௩)

மடைவ ளத்தொழிற் புலவர்வந் தடியிணை வணங்கி
அடிய ரேமட்ட போனக மாயிரத் தொன்றின்
இடைய தாயினுந் தொலைந்தில தியாங்கண்மேற் செய்யக்
கடவ தேதெனப் பிராட்டிதன் கணவர்முன் குறுகா. (௪)

பணிந்தொ துங்கிநின் றடிகண்முப் பத்துமுக் கோடி
கணங்க டம்மொடு மிங்கெழுந் தருள்வது கருதி
இணங்கு மின்சுவைப் போனக மெல்லையின் றாக்கி
உணங்கு கின்றதுண் டெஞ்சிய தெனைத்தென வுரைக்கின். (௫)

இமையக் குன்றமு மடைக்கலா யிதன்புறங் கிடந்த
சிமையக் குன்றுக ளீட்டமுஞ் சேர்ந்தென நிமிரச்
சமையக் கொட்டிய வாலரிப் புழுக்கலுஞ் சாதக்
கமையக் கொட்டிய கறிகளின் வருக்கமு மனைத்தே. (௬)

என்றப் போதிறை யெம்பிரான் றேவியா யடனுவ
ஒன்று மன்பினு லொருவினை யாடலை நினைந்தோ
தன்ற னிக்குடைப் பாரிடத் தலைவன தாற்றல்
அன்றி யாவருமறிந்திடக் காட்டவோ வறியேம். (௭)

சிறிது வாணகை செய்துமூ வேந்தரிற் சிறந்த
மறுவின் மீனவ னரும்பெறன் மகளுனக் கரிதிற்
பெறுவ தேதுவான் றருவுநின் பணிசெயப் பெற்றிங்
குறைவ தேற்பிறர் திருவெலா முன்னதே யன்றோ. (௮)

அளவி லாதநின் செல்வத்தின் பெருக்கைநா மறிய
விளைவு செய்தனை போலுநின் விருந்துணப் பசியாற்
களைய டைந்தவ ராகிநங் கணத்தினுட் காணேந்
தளவ மூரலா யாஞ்செயத் தக்கதே தென்றான். (௯)

அடுக்க நின்றகுண் டோதர னகட்டிடை வடவை
மடுக்க வுண்ணினு ணதுவந்து வயிற்றெரி பசியாய்த்
தொடுக்க வாலமுண் டாங்குடல் சோர்ந்துவேர்த் தாவி
ஒடுக்க முற்றைய பசியினு லுயங்கினே னென்றான். (௧௦)

குடையெ டுக்குமிக் குறியதாட் குறட்கொரு பிடிசோ
றிடுமி னப்புறஞ் சோறுமா லெனத்தொழு தெல்லாம்
உடைய நாயகி போயினள் குறியனு முடனே
நடைத ளர்ந்துகண் புகைந்துவாய் புலர்ந்திட நடந்தான். (௧௧)

படைக்க ணேவல ரிறைமகள் பணியினாற் பசிநோய்
தொடுத்த வன்றனைக் கொண்டுபோய்ச் சொன்றிமுன் விடுத்தார்
அடுத்தி ருந்ததே கண்டன ரன்னமா மலையை
எடுத்த யின்றது மடிசிலங் கிருந்ததுங் காணார். (௧௨)

சிலம்பு நூபுரச் சீறடிச் சேடியர் சில்லோர்
அலம்பு வால்வளைக் கைநெரித் ததிசய மடைந்தார்
புலம்பு மேகலை யார்சிலர் பொருக்கென வெருண்டார்
கலம்பெய் பூண்முலை யார்சிலர் கண்புதைத் திரிந்தார். (௧௩)

முரவை போகிய முரிவில்வான் மூரல் † பால் வறையற்
கருணை ‡ தீம்பய றடுதுவை பல்வகைக் கறிகள்
விரவு தேம்படு பாறயி ரிழுதுதேன் வெள்ளம்
வரைவி லாதன மிடாவொடு வாரிவாய் மடுத்தான். (௧௪)

பல்ப ழக்குவை வேற்றுருப் பண்ணியங் கன்னல்
மெல்சு வைத்தண்டு தெங்கிவை யன்றியும் வேவா
வல்சி காய்களின் வருக்கமு நுகர்ந்துமா றாமல்
எல்லை தீர்நவ பண்டமு மெடுத்துவாய் மடுத்தான் (௧௫)

பாரித் துள்ளவிப் பண்டமும் பருஉக்குறுங் கையாற்
வாரித் தன்பெரு வயிற்றிடை வைப்பவுந் துடுவை
பூரித் தாகுதி பண்ணிய தழலெனப் பொங்கிக்
கோரித் தொன்பது வாயிலும் பசித்தழல் கொளுத்த. (௧௬)

---

* சோறும் - சொல்லுதும். † முரவைபோகிய முரிவில் வால் மூரல் - வரியற்ற இடைமுரியாத வெள்ளிய சோறு.
‡ பால்வறையற் கருணை - பாலைப்பொரித்ததனோடே கூடிய பொரிக்கறி.

அலங்க லோதிகண் டதிசய மடைந்துதன் னன்பின்
நலங்கெ ழுபகன் முன்புபோய் நாணமுட் கிடப்ப
இலங்கு பூங்குழல் சுவன்மிசை யிறக்கியிட் டொல்கி
நிலங்கி ளைத்துநின் றாணிலை கண்டனா னிருபன். (௧௭)

அஞ்சி லோதியை-வினவுவா னறிகலான் போலக்
குஞ்சி யாரழ லன்னவக் குடவயிற் றவனுண்
டெஞ்சி யுள்ளவேற் பூதங்க ளின்னமும் விடுத்துன்
நெஞ்சு வப்பவே யருத்துது மென்னலு நிமலை. (௧௮)

ஐய வின்னுமிக் குறட்பசி யடங்கிடா வேறு
வெய்ய பாரிட வீரரை விடுத்தியே லெடுத்து
வையம் யாவையும் வயிற்றிடை வைப்பரே யதனாற்
செய்ய காலருத் திரப்பெயர் தேற்றமா முனக்கே. (௧௯)

சங்க வார்குழைக் குறண்மகன் றன்செய றானே
இங்கு வந்துரை செய்திட வறிதியென் றிறைமுன்
மங்கை நாயகி குமுதவாய் மலர்பொழு தெயிற்றுத்
திங்கள் வாய்முழை யான்பசித் தீச்சுட வந்தான். (௨௦)

நட்ட மாடிய சுந்தர நங்கையெம் பிராட்டி
அட்ட போனகம் பணிவரை யனையவாய்க் கிடந்த
தொட்டு வாய்மடுத் திடவுமென் சுடுபசி தணியா
திட்டு ணாதவர் வயிறுபோற் காந்துவ தென்றான். (௨௧)

கையர் முப்புரத் திட்டதீக் கடும்பசி யுருவாய்ப்
பொய்ய னேன்வயிற் றிடைக்குடி புகுந்ததோ வென்னுங்
கையெ றிந்திடு மண்டங்கள் வெடிபடக் கதறும்
ஐய கோவெனு முயிர்த்திடு மாவிசோர்ந் தயரும். (௨௨)

குண்டோதரனுக்கன்னமிட்டபடலமுற்றிற்று.

௮. திருவிருத்தம் - ௮௬௮.

எட்டாவது

அன்னக்குழியும் வைகையுமழைத்தபடலம்.

வேத நாயகன் பாரிட வேந்தனுக் கமையா
ஓத னாதிக ளருத்திய தன்மையீ துவையும்
போத ராமையா லமைவுறப் போனகக் குழிதந்
தோத மாநதி யருத்திய செய்தியு முரைப்பாம். (௧)

கவன மால்விடை யாளிபின் கடிகமழ் தென்றற்
பவன மாமலை யாட்டியைப் பார்த்துளே நகைத்துத்
தவன மாப்பசி யுடையவன் றன்பொருட் டன்ன
புவன மாதினை நினைந்தன ணினைக்குமுன் போந்தாள். (௨)

நாற்ற டந்திசைத் தயிர்க்கட னனந்தலை நிலங்கீண்
டேற்றெ ழுந்துநாற் கிடங்கரா யுதித்தெழுந் தாங்கு
மாற்ற ருஞ்சுவைத் தீந்தயிர் வாலரிப் பதத்தோ
டேற்றெ ழுந்தது நாற்குழி யிடத்திலும் பொங்கி. (௩)

குரும் திக்குல மன்னவன் மருகனக் குண்டப்
பெருவ யிற்றிரு பிறையெயிற் றெரிசிகைப் பேழ்வாய்
ஒருகு றட்குடை வீரனை யுன்பசி தணியப்
பருகெ னப்பணித் தருளலும் பாரிடத் தலைவன். (௪)

அத்த யிர்ப்பதக் கிடங்கரி லலைகடல் கலக்கும்
மத்தெ னக்கரம் புதைத்தெடுத் தெடுத்துவாய் மடுத்துத்
துய்த்தி டப்பசி விடுத்தது சுருதிநா யகன்றாட்
பத்தி வைத்துவீ டுணர்ந்தவர் பழவினைத் தொடர்போல். (௫)

வாங்கி வாங்கிவாய் மடுத்தலு முடம்பெலாம் வயிறாய்
வீங்கி னான்றரை கிழிபடப் பொருப்பென வீழ்ந்தான்
நீங்கு நீளுயிர்ப் பிலனுடல் புரண்டன னீர்வேட்
டாங்கு நீர்நிலை தேடுவா னாயினா னெழுந்தான். (௬)

ஆவி யன்னவர்ப் பிரிந்துறை யணங்கனார் போலக்
காவி நாண்மலர் தாமரைக் கடிமலர் வாட
வாவி யோடையுங் குளங்களும் வறப்பவாய் வைத்துக்
கூவ நீணிலை நீர்களும் பசையறக் குடித்தான். (௭)

அனைய னாகியு நீர்நசை யாற்றலன் வருந்தும்
வினைய னாகிவா னதிச்சடை வேதியன் பாதத்
தினைய நாதனுந் தன்றிரு முடியின்மீ திருக்கும்
நனைய நாண்மல ரோதியைப் பார்த்தொன்று நவில்வான். (௮)

தேங்கு நீர்த்திரை மாவிகைச் செல்விநீ யிந்த
வாங்கு நீர்த்தடம் புரிசைசூழ் மதுரையின் மாடோர்
ஓங்கு நீத்தமா யொல்லென வருதியென் றுரைத்தான்
நீங்கு நீர்த்திரு மாதவ ளொருமொழி நிகழ்த்தும். (௯)

அன்று மெம்பிரா னாணையாற் பகீரதன் பொருட்டுச்
சென்று நீயொரு தீர்த்தமாய்த் திளைப்பவர் களங்கம்
ஒன்று தீவினைத் தொடக்கறுத் தொழுகெனப் பணித்தாய்
இன்று மோர்நதி யாகெனப் பணித்தியே லென்னை. (௧௦)

தெரிசித் தோர்படிந் தாடினோர் செங்கை யாலேனும்
பரிசித் தோர்பவத் தொடர்ச்சியின் பற்றுவிட் டுள்ளத்
துருசித் தோர்வுறு பத்தியும் விச்சையு முணர்வாய்
விரிசித் தோர்வுறு மெய்யுணர் வால்வரும் வீடும். (௧௧)

தந்தி டப்பணித் தருளெனாத் தடம்புனற் செல்வி
சுந்த ரப்பெருங் கடவுளை வரங்கொண்டு தொழுது
வந்த ளப்பிலா வேகமோ டெழுந்துமா நதியாய்
அந்த ரத்துநின் றிழிபவ ளாமென வருமால். (௧௨)

வேறு.

திரைவளையணி கரமுடையவள் செழுமணிநகை யுடையாள்
நுரைவளை துகி லுடையவள்கொடி நுணுகிடையவ ளறனீள்
விரைவளைகுழ லுடையவள்கயல் விழியுடையவள் வருவாள்
வரைவளைசிலை யவன்முடிமட வரனதிவடி வினுமே. (௧௩)

விரைபடுமகி லரைபொரிதிமில் வெயில்விடுமணி வரையோ
டரைபடமுது சினையலறிட வடியொடுகடி தகழாக்
குரைபடுகழ லிறவுளர்சிறு குடியடியொடு பறியாக்
கரைபடவெறி வதுவருவது கடுவிசைவளி யெனவே. (௧௪)

பிணையொடுகலை பிடியொடுகரி பிரிவிலவொடு பழுவப்
பணையொடுகரு முசுவயிறணை பறழொடுகழு வியதன்
துணையொடுகவி பயின்மரநிரை தொகையொடுமிற வுளர்செ
கணையொடுசிலை யிதவெறுடுமெறி கவணெறுடுகொடு வருமால். (௧௫)

அடியிறநெடு வரையுதைவன வகழ்வனவகழ் மடுவைத்
திடரிடுவன மழைசெருகிய சினைமரநிரை தலைகீழ்
படவிடுகரை தொறுநடுவன படுகடலுடை முதுபார
நெடுமுதுகிரு பிளவுறவரு நெடுநதியின வலையே. (௧௬)

பிளிறுவெழலியின முதுமரமகழ் பெருவலியின வசையா
வெளிறடிவன வெறிமணியின விரைசெலவின மதமோ
டொளிறளியின நுரைமுகபட முடையனவென வரலாற்
களிறனையது மதுவிதழிகள் கவிழ்சடையணி குடிஞை. (௧௭)

நீடியபில முறுநிலையின நிருமலன்மதி முடிமீ
தாடியசெய லினவெயிலுமி ழுருமணிதலை யினநீள்
கோடியகதி யினநிரைநிரை குறுகியபல காலின்
ஓடியவலி யினவளையுட லுரகமுமென வருமால். (௧௮)

மண்ணகழ்தலின் வளையணிகரு மாவனையது மிசைபோய்
விண்ணளவலி னவுணர்களிறை விடுபுணலொடு நெடுகும்
அண்ணலையனை யதுசுவையிமு தளையளவுறு செயலாற்
கண்ணனையனை யதுநெடுகிய கடுகியகதி நதியே. (௧௯)

திகழ்தருகரி பரிகவரிகள் செழுமணியொடு வருமா
றிகழ்தருகுட புலவரசர்க ணெறிசெய்துகவர் திருவோ
டகழ்தருபதி புகுமதிகுல வரசனையதை யலதேற்
புகழ்தருதிறை யிடவருகுட புலவரசனு நிகரும். (௨௦)

ஆரொடுமட லவிழ்பனையொடு மரநிகரிலை நிம்பத்
தாரொடுபுலி யொடுசிலையொடு தருகயலொடு தழுவாப்
பாரொடுதிசை பரவியதமிழ் பயிலரசர்கள் குழுமிச்
சேரொடுபல திருவொடுவரு செயலனையத நதியே. (௨௧)

வேறு.

கல்லார் கவிபோற் கலங்கிக்கலை மாண்ட கேள்வி
வல்லார் கவிபோற் பலவான்றுறை தோன்ற வாய்த்துச்
செலலாறு தோறும் பொருளாழ்ந்து தெளிந்து தேயத்
தெல்லாரும் வீழ்ந்து பயன்கொள்ள விறுத்த தன்றே. (௨௨)

வண்டோங்கு மாறு மலர்வேணியின் வந்த நீத்தங்
கண்டோத நஞ்சுண் டருள்கண்ணுதன் மூர்த்தி பேழ்வாய்
விண்டோ தணியா தென்விடாயென வெம்பி வீழ்ந்த
குன்றோ [illegible] தரனை விடுத்தானக் குடிஞை ஞாங்கர். (௨௩)

அடுத்தா னதியின் னிடைபுக்கிருந் தாற்ற லோடும்
எடுத்தான் குறுங்கை யிரண்டுங்கரை யேற நீட்டித்
தடுத்தான் மலைபோ னிமிர்தண்புனல் வாயங் காந்து
மடுத்தான் விடாயுங் கடலுண்ணு மழையு நாண. (உச)

தீர்த்தன் சடைநின் றிழிதீர்த்த மருந்தி வாக்குக்
கூர்த்தின்பு கொண்டு குழகன்றிரு முன்ன ரெய்திப
பார்த்தன் பணிந்த பதமுன்பணிந் தாடிப் பாடி
ஆர்த்தன் புருவாய்த் துதித்தானள வாத கீதம். (உரு)

பாட்டின் பொருளா னவன்பாரிட வீரன் பாடல்
கேட்டின்ப மெய்திக் கணங்கட்குக் கிழமை நல்கி
மோட்டின் புனன்மன் முறைசெய் திருந்தா னளகக்
காட்டின் புறம்போய் மடங்குங்கயற் கண்ணி யோடும். (உசு)

வேறு.

தீர்த்த னிதழிச் சடைநின்று மிழிந்து வரலாற் சிவகங்கை
தீர்த்த னுருவந் தெளிவோர்க்கு ஞானந் தரலாற் சிவஞான
தீர்த்தங் காலிற் கடுகிவருஞ் செய்தி யாலே வேகவதி
தீர்த்தங் கிருத மாலையென வைகை நாமஞ் செப்புவரால். (உஎ)

அன்னக்குழியும் வைகையுமழைத்தபடலமுற்றிற்று.

ஆக திருவிருத்தம் - அஎ௫.

ஒன்பதாவது

எழுகடலழைத்தபடலம்.

முடங்கன்மதி முடிமறைத்த முடித்தென்னன் குறட்கன்னக்
கடங்கரோடு நதியழைத்த கிளர்கருணைத் திறனிது மேல்
மடங்கல்வலி கவர்ந்தான்பொன் மாலைபடிந் தாடவெழு
தடங்கடலு மொருங்கழைத்த தன்மைதனைச் சாற்றுவாம். (க)

ஓதவரும் பொருள்வழுதி யுருவாகி யுலகமெலாஞ்
சீதளவெண் குடைநிழற்றி யறச்செங்கோல் செலுத்துநாள்
போதவரும் பொருளுணர்ந்த விருடிகளும் புனிதமுனி
மாதவரும் வரன்முறையாற் சந்தித்து வருகின்றார். (உ)

வேதமுனி கோதமனுந் தலைப்பட்டு மீள்வானோர்
போதளவில் கற்புடைய பொன்மாலை மனைபுகுந்தான்
மாதவளும் வரவேற்று முகமனுரை வழங்கிப்பொன்
ஆதனமிட் டஞ்சலிசெய் தரியதவத் திறங்கேட்பாள். (௩)

கள்ளவினைப் பொறிகடந்து கரைகடந்த மறைச்சென்னி
உள்ளபொருள் பரசிவமென் றுணர்ந்தபெருந் தகையமீகேள்
தள்ளரிய பவமகற்றுந் தவமருள்செய் கெனக்கருணை
வெள்ளமென முகமலர்ந்து முனிவேந்தன் விளம்புமால். (௪)

தலைவலியா னுலகீன்ற தடாதகைக்குத் தாயானாய்
சிவபெருமான் மருகனெனுஞ் சீர்பெற்றாய் திறன்மலயத்
துவசனருள் கற்புடையாய் கீயுறியாத் தொல்விரதம்
அவனியிடத் தெவரறிவா ராணுமியம்பக்கேள். (௫)

மானதமே வாசிகமே காயிகமே யெனவகுத்த
ஈனமில்சீர்த் தவமூன்று மிவற்றின்மா னதந்தரும
தானமிசை மதிவைத்த நயவுபொறை மெய்சிவனை
மோனமுறத் தியானித்த லைந்தடக்கன் முதலனந்தம். (சா)

வாசிகமைந் தெழுத்தோதன் மனுப்பஞ்ச சாந்திமறை
பேசுசதி வுருத்திரந்தோத் திரமுரைத்தல் பெருந்தருமங்
காசகல வெடுத்தோதன் முதலனந்தங் காயிகங்கள்
ஈசனருச் சனைகோயில் வலஞ்செய்கை யெதிர்வணங்கல். (எ)

நிருத்தனுறை பதிபலபோய்ப் பணிதல்பணி நிறைவேற்றல்
திருத்தன்முடி நதியாதி தீர்த்தயாத் திரைபோய்மெய்
வருத்தமுற வாடலிவை முதற்பலவவ் வகைமூன்றிற்
பொருத்தமுறு காயிகங்கள் சிறந்தனவிப் புண்ணியத்துள். (அ)

திருத்தயாத் திரையதிக மவற்றதிகஞ் சிவனுருவாந்
திருத்தமாங் கங்கைமுதற் றிருநதிக டணித்தனிபோய்த்
திருத்தமா டுவதரிதத் திருநதிக ளவைவந்து
திருத்தமாய் நிறைதலினா லவற்றதிகந் திரைமுந்நீர். (கூ)

என்றுமுனி விளம்பக்கேட் டிருந்தகாஞ் சனமாலை
துன்றுதிரைக் கடலாடத் துணிவுடைய விருப்பினளாய்த்
தன்றிருமா மகட்குரைத்தாள் சிறிதுள்ளந் தளர்வெய்திச்
சென்றிறைவற் குரைப்பலெனச் செழியர்தவக் கொழுந்தனையாள். (க0)

தன்றன்னை யுடையபெருந் தகைவேந்தர் பெருமான்முன்
சென்றன்ன மெனநின்று செப்புவாள் குறள்வீரற்
கன்றன்னக் குழியினொடு மாறழைத்த வருட்கடலே
இன்றன்னை கடலாட வேண்டினா ளென்றிரந்தாள்.

தேவிதிரு மொழிகேட்டுத் தென்னவராய் நிலம்புரக்குங்
காவிதிகழ மணிகண்டர் கடலொன்றோ வெழுகடலுங்
கூவிவர வழைத்துமென வுன்னினார் குணபாலோர்
வாவியிடை யெழுவேறு வண்ணமொடும் வருவனவால். (கஉ)

துண்டமதித் திரளனைய சுரிவளைவாய் விடவுதைத்து
வெண்டவள நுரைததும்பச் சுறுவேறு மிசைக்கொட்பத்
தண்டரள மணித்தொகுதி யெடுத்தெறியுந் தரங்கநிரை
அண்டநெடு முகடுரிஞ்ச வார்த்தெழுந்த கடலேழும். (கங)

காணுமா நகர்பனிப்பக் கலிமுடிவி னயன்படைப்புக்
கோணுமா றெழுந்ததெனக் கொதித்தெழுந்த கடலரவம்
பூணுநா யகனகில புவனமெலாங் கடந்ததிரு
ஆணையா லவனடிசென் றடைந்தார்போ லடங்கியதால். (கச)

தன்வண்ண மெழுகடலின் றனிவண்ண மொடுகலந்து
பொன்வண்ண நறும்பொகுட்டுப் பூம்பொய்கை பொலிவெய்தி
மின்வண்ணச் சடைதாழ வெள்ளிமணி மன்றாடும்
மனவண்ண மெனவெட்டு வண்ணமொடும் வயங்கியதால். (கரு)

எழுகடலழைத்தபடலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - அகூ0.

பத்தாவது

மலயத்துவசனையழைத்தபடலம்.

எழுகட லழைத்தவா றியம்பி னுமினிச்
செழுமதி மரபினோன் சேணி ழிந்துதன்
பழுதில்கற் பில்லொடும் பரவை தோய்ந்தரன்
அழகிய திருவுரு வடைந்த தோதுவாம். ௧)

புரவலன் றடாதகைப் பூவை யோடும்வந்
துரவுநீர்க் கடன்மருங் குடுத்த சந்தனம்
மரவமந் தாரமா வகுளம் பாடலம்
விரவுநந் தனத்தரி யணையின் மேவினான். (௨)

தாதவிழ் மல்லிகை முல்லை சண்பகப்
போதுகொய் திளையருஞ் சேடிப் பொற்றொடி
மாதருங் கொடுத்திட வாங்கி மோந்துயிர்த்
தாதர மிரண்டற வமரு மெல்லையில். (௩)

தன்னமர் காதலி தன்னை நோக்கியே
மன்னவ னுன்பொருட் டேழு வாரியும்
இங்கக ரழைத்தன மீண்டுப் போந்துநின்
அன்னையை யாடுவா னழைத்தி யாலென. (௪)

மடந்தையு மன்னையைக் கொணர்ந்து வாவிமா
டடைந்தன ளாகமற் றவள்பு ராணநூற்
படர்ந்தகேள் வியர்தமை நோக்கிப் பௌவநீர்
குடைந்திடும் விதியெவன் கூறு மென்னவே. (௫)

கோதறு கற்பினாய் கொழுநன் கைத்தலங்
காதலன் கைத்தல மன்றிக் கன்றின்வால்
ஆதலிம் மூன்றிலொன் றங்கை பற்றியே
ஓதநீ ராடுதன் மரபென் றோதினார். (௬)

மறையவர் வாய்மைபொன் மாலை கேட்டுமேற்
குறைவறத் தவஞ்செயாக் கொடிய பாவியேற்
கிறைவனுஞ் சிறுவனு மில்லை யேயினிப்
பெறுவது கன்றலாற் பிறிதுண் டாகுமோ. (௭)

ஆதலாற் கன்றின்வால் பற்றி யாடுகோ
மாதரா யென்றுதன் மகட்குக் கூறலும்
வேதன்மால் பதவியும் வேண்டி னார்க்கருள்
நாதனா ருயிர்த்துணை யாய நாயகி. (௮)

தன்னுயிர்க் கிழவனை யடைந்து தாழ்ந்துதன்
அன்னைதன் குறையுரை யாட வாண்டகை
மன்னவன் வலாரியோ டொருங்கு வைகிய
தென்னவன் மேன்மனஞ் செலுத்தி னானரோ (௯)

வேறு.

சிலையத் திரியார் திருவுள் ளமுணர்ந்
தலையத் திரியட் டவனு தனநீத்
துலையத் திரியொத் தவிமா னமொடு
மலையத் துவசச் செழியன் வருமால். (௧௦)

மண்பே றடைவான் வருமேழ் கடல்வா
எண்பே றடையா வருளின் னமுதைப்
பெண்பே றதனாற் பெறுபே றிதெனுக்
கண்பே றடைவா னெதிர்கண் டனனே (௧௧)

வந்தான் மருகன் சரணம் பணிவான்
முந்தா முனமா மனெனும் முறையால்
அந்தா மரையங் கையமைத் துமகட்
டந்தா னையெதிர்ந் துதழீஇ யினனால். (௧௨)

ஆத்தன் றிருவுள் ளமகிழ்ந் தருளாற்
பார்த்தன் புகிரம் பியபண் ணியொடுந்
தீர்த்தம் புகுந் தாடியசெல் கவெனப்
பூத்தான் பொருளைப் புனனு டவனும். (௧௩)

முன்னைத் தவமெய் திமுயன் றுபெறும்
அன்னப் பெடையன் னவள்வந் தெதிரே
தன்னைத் தழுவத் தழுவிக் கிரிவேந்
தென்னக் குறையா மகிழ்வெய் தினனே. (௧௪)

தண்டே மொழிவேள் விதவக் குறையாற்
கண்டே னிலனென் றுகருத் தவலம்
உண்டே யஃதிவ் வுவகைக் களிதேன்
வண்டே யெனவுண் டுமறந் தனனால். (௧௫)

சேணுற் றவனைச் சிலநாள் கழியக்
காணுற் றவள்போ னிறைகற் புடையாள்
பூணுற் றுமலர்ந் ததொர்பொற் கொடிபோல்
நாணுற் றெதிர்நண் ணியிறைஞ் சினளால். (௧௬)

மஞ்சோ தியகாஞ் சனமா லைகையிற்
பைஞ்சோ திவிளங் குபவித் திரையாய்ச்
செஞ்சோ திமுடிச் சிவநா மவெழுத்
தஞ்சோ திநெடுங் கடலா டுமரோ. (௧௭)

துங்கக் கலைவே தியர்தொன் மறைநூற்
சங்கற் பவிதிப் படிதன் றுணைகை
அங்கைத் தளிர்பற் றியகத் துவகை
பொங்கப் புணரிப் புனலா டினனே. (௧௮)

குடைந்தார் கரையே றினர்கொண் டைமுடி
மிடைந்தார் கருணைக் கண்விழிக் கமலம்
உடைந்தா ரனைமா ருதரங் குறுகா
தடைந்தா ருமைபா கரருட் படிவம் (௧௯)

ஒண்கொண் டன்மிடற் ருெளியும் மொருநால்
எண்கொண் டபுயத் தெழிலும் மழல்சேர்
கண்கொண் டநுதற் கவினும் பொலியா
மண்கண் டுவியப் பவயங் கினரால். (௨௦)

விண்ணின் றுவழுக் கிவிழுங் கதிர்போற்
கண்ணின் றநுதற் கருணா கரன்வாழ்
எண்ணின் றபுரத் தினிழிந் திமையா
மண்ணின் றதொர்தெய் வவிமா னமரோ. (௨௧)

அத்தெய் வவிமா னமடுத் திடலும்
முத்தெய் வதமுக் கணவன் பணியால்
நத் * தெய் வதருக் கரனங் கையொடு
எத்தெய் வதமுந் தொழவே றினனால். (௨௨)

தேமா ரியெனும் படிசிந் தநறும்
பூமா ரிபொழிந் ததுபொன் னுலகந்
தூமா மறையந் தரதுந் துபிகார்
ஆமா மெனவெங் குமதிர்ந் தனவால். (௨௩)

வே று.

எழுந்தது விமானம் வான மெழுந்ததுந் துபியு நாணி
விழுந்தது போலு மென்ன வரவொலி யெங்கும் விம்மத்
தொழுந்தகை முனிவ ரேத்தச் சுராதிகள் பரவத் திங்கட்
கொழுந்தணி வேணிக் கூத்தர் கோநகர் குறித்துச் செல்வார். (௨௪)

மூன்புதம் முருவாய் வைய முறைபுரி கோல்கைக் கொண்டு
பின்புதம் முருவந் தந்த மருகனும் பெருகு கேண்மை
அன்புதந் தருகு நின்ற தடாதகை யணங்கு மீண்டு
பொன்புனை குடுமிக் கோயில் புகுந்துநன் கிருப்பக் கண்டார். (௨௫)

முன்னைவல் வினையால் யாக்கை முறைதடு மாறித் தோற்றம்
மன்னிய மனிதர் போலப் பண்டைய வடிவ மாறி
அன்னையே மகளா வீன்ற வப்பனே மருக னாக
என்னயா நோற்றேம் யார்க்கு மியற்றருந் தவந்தா னென்னா. (௨௬)

நன்றக லான்போ லையன் கனைகழல் விடாது பற்றி
ஒன்றிய வன்பு பின்னின் றீர்த்தெழ வுள்ளத் தோடுஞ்
சென்றிரு கண்ணு முட்டி யடிக்கடி திரும்பி நோக்கக்
குன்றுறழ் விமானந் தன்னை யஞ்சலி கூப்பிச் செல்வார். (௨௭)

வே று.

புவலோகங் கடந்துபோய்ப் புண்ணியருக் கெண்ணிறந்த போக மூட்டுஞ்
சுவலோகங் கடந்துபோய் மகலோகஞ் சனலோகந் துறந்து மேலைத்
தவலோகங் கடந்துபோய்ச் சத்தியலோ கங்கடந்து தண்டு ழாயோன்
நவலோகங் கடந்துலக நாயகமாஞ் சிவலோக நண்ணி னாரே. (௨௮)

அறக்கொடிபின் னிறைமகனை யடிபணிந்து தனையீன்றார்க் காதி வேத
மறைப்பொருடன் வடிவளித்த வருளின்மன நிறைமகிழ்ச்சி யாய்கொள் ளாமற்
புறப்படுவ தெனவிரண்டு திருச்செவிக்குஞ் செங்குமுதம் பொதிந்த தீந்தேன்
நிறைப்பதெனப் பன்முறையாற் றுதிசெய்துதொழுதொன் றுநிகழ்த்தாநின்றாள்.

ந - சிறப்பு.

எண்ணிறந்த தேவர்க்கும் யாவர்க்கும் பயன்சுரக்கு மிஉ றள்
புண்ணியவான் றன்புனிற்றுக் கன்றுக்குக் குறைவேதென் பொருட்டென் னீன்
எண்ணியது கடலொன்றே யெழுகடலு மீண்டழைத்தா யின்று ளாட
விண்ணிருந்த கணவனையும் விளித்துனருள் வடிவளித்துன் மேனு டைந்தாய். ()

தென்னர்மர பிறந்ததெனப் படுபழியி லாழவருஞ செவ்வி நோக்கிப்
பொன்னவிர்தார் முடிபுனைந்து கோலோச்சி வருகின்றாய் பேர்லு மேலும்
இந்நிலைமைக் கிடையூறு மினியின்றே யெனத்தலைவி யியம்ப லோடுக்
தன்னிறைவி யுட்கோளை யகங்கொண்டு மகிழ்ந்திருந்தான் றமிழர் கோமான். ()

மலயத்துவசனையழைத்தபடல முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - கூஉக.

பதினொராவது

உக்கிரபாண்டியன்றிருவவதாரப்படலம்.

மன்ன வன்குல சேகரன் றிருமகன் மனைவி
தன்னொ டுங்கட லாடிய தகுதியீ தந்தத்
தென்ன வன்றனித் திருமக டிருவுளங் களிப்ப
உன்ன ருந்திற லுக்கிர னுதித்தவா றுரைப்பாம். (க)

வேறு.

தண்ணிலா மௌலி வேய்ந்த சுந்தர சாமி ஞாலத்
தெண்ணிலா வைக றன்ன திணையடி நிழல்போல் யார்க்குந்
தெண்ணிலாக் கவிகை நீழல் செய்தருட் செங்கோ லோச்சி
உண்ணிலா வுயிர்தா னாகி முறைபுரிந் தொழுகு நாளில். (உ)

கரியவன் கமலச் செம்மன் மறைமுதற் கலைகள் காண்டற்
கரியவ னன்பர்க் கென்று மெளியவ னாகு மேன்மை
தெரியவன் பகன்ற சிந்தைத் தென்னவன் றனக்குங் கற்பிற்
குரியவ டனக்குங் காதன் மகவென வுமையைத் தந்தான். (ங)

மற்றதற் கிசையத் தானு மருமக னாகி வைய
முற்றும்வெண் குடைக்கீழ் வைக முறைசெய்தா னாக மூன்று
கொற்றவர் தம்மிற் றிங்கட் கோக்குடி விழுப்ப மெய்தப்
பெற்றது போலு மின்னும் பெறுவதோர் குறைவு தீர்ப்பான். (ச)

ஒன்றினைச் செய்கை செய்யா தொழிகைவே றொன்று செய்கை
என்றிவை யுடையோ னாதி யீறிலாப் பரம யோகி
நன்றுதீ திகழ்ச்சி வேட்கை நட்பிகல் விளைக்கு மாயை
வென்றவன் செய்யு மாயை விருத்தியா ரளக்க வல்லார். (ரு)

இந்திர சால விச்சை காட்டுவா னென்னத் தன்பாற்
செந்தீழ னாட்ட மீன்ற செல்வனைக் கருப்ப மெய்தா
தந்தமி லுயிரு ஞால மனைத்தையு மீன்ற தாயாஞ்
சுந்தர வல்லி தன்பாற் றோன்றுமா றுள்ளஞ் செய்தான். (சா)

அங்கவன் வரவுக் கேற்ப வாயமும் பிறருந் தாழ்ந்து
மங்கைநின் வடிவுக் கேற்பக் கருவுரு வணப்புஞ் சீருந்
திங்களோ டொற்று மன்றற் செவ்வியுங் காண வாசை
பொங்கிய தெங்கட் கென்றார் புனிதையப் படிபோ லானாள். (எ)

கருமணிச் சிகரச் செம்பொற் கனவரை யனைய காட்சித்
திருமுலை யமுதம் பெய்த செப்பிரண் டனைய வாக
வருமுலை சுமந்து மாய்ந்த மருங்குலும் வந்து தோன்ற
அருள்கனிந் தனையா ளாவிற் கின்சுவை யார்வம் பொங்க. (௮)

என்னவு மெளிய வேணு மரியன வென்ன வேட்ட
அன்னவும் போக பூமி யரும்பெற லுணவு நல்கிப்
பன்னக ரமுதுந் திங்கட் படுசுவை யமுதுந் தெய்வப்
பொன்னக ரமுது மாசை புதைபடக் கணங்க ணல்க. (௯)

புண்ணிய முனிவர் வேத பண்டிதர் போந்து வேந்தர்க்
கண்ணிய சடங்கு மூனா ருங்கடி வெள்ளத் தாழ
எண்ணிய திங்க டோறு மியற்றவிக் கன்னித் தேயம்
பண்ணிய தருமச் சார்பாற் படுபயன் றலைப்பா டெய்த. (௧0)

மாசறத் துறந்தோ ருள்ள மானவான் களங்க நீங்க
ஈசர்தங் கிழமை யென்னு மிந்துவா திரைநாட் செய்த
பூசையின் பயன்ற னெய்த வெரிபுசும் பொற்கோள் வந்து
தேசொடு கேந்தி ரத்திற் சிறந்தநல் லோரை வாய்ப்ப. (௧௧)

முந்தைநான் மறைக டாமே முழங்கமந் தார மாரி
சிந்தநாண் மலர்பூத் தாடு மின்னெனத் திசைக டோறும்
அந்தர மகளி ராடத் துந்துபி யைந்து மார்ப்ப
விந்தையுந் திருவும் வெள்ளைக் கிழத்தியும் வீறு வாய்ப்ப. (௧௨)

அந்தணர் மகிழ்ச்சி தூங்க வடுத்தவர் வளர்க்கு முன்னர்
மந்திர வேள்விச் செந்தீ வலஞ்சுழித் தெழுந்தார்த் தாடச்
சிந்துர நுதன்மா வெட்டுஞ் சேடனும் பொறையெய்ப் பாற
இந்திரன் மேருப் புத்தேள் புணவிறைக் கிடந்தோ ளாட. (௧௩)

ஆலத்தை யமுத மாக்கு மண்ணலு மணங்குங் கொண்ட
கோலத்துக் கேற்பக் காலைக் குழந்தைவெங் கதிர்போ லற்றைக்
காலத்தி லுதித்த சேய்போற் கண்மழை பிலிற்று நிம்ப
மாலைத்தோட் செழியன் செல்வ மகள்வயிற் றோன்றி னானே. (௧௪)

எடுத்தனண் மோந்து புல்லி யேந்தினள் காந்தன் கையிற்
கொடுத்தனள் வாங்கி வீங்கு கொங்கைநின் றிழிபால் வள்ளம்
விடுத்தனள் குமுதப் போதில் வெண்ணிலா வெள்ளம் போல்வாய்
மடுத்தன ளருத்தி னுடன் மைந்தனை யெம்பி ராட்டி. (௧௫)

சலத்தலைக் கிடக்கைப் புத்தே டருநிழல் வாழ்க்கைப் புத்தேள்
அலர்த்தலை யிருக்கைப் புத்தே ளாதிப்புத் தேளிர் வேதப்
புலத்தலைக் கேள்வி சான்ற புண்ணிய முனிவ ரேனோர்
குலத்தலை மகளி ரோடுங் கோமகன் கோயில் புக்கார். (௧௬)

குடபுலத் தரசும் பொன்னிக் குளிர்புனற் கோழி வேந்தும்
வடபுலத் தரசர் யாருங் குறுநில வாழ்க்கைச் செல்வத்
தடல்கெழு தொண்டைத் தண்டா ரரசொடு மணிகஞ் சூழக்
கடல்களுற் றிசையும் பொங்கி வருவபோற் கலிப்ப வந்தார். (௧௭)

மன்னனைத் தேவி தன்னை முறையினால் வழுத்தி வாழ்த்தி
நன்னர்கோ ளாகி யோகை நவின்றுவெண் மழுமா ணீத்த
தென்னவர் பெருமான றேவி திருமுகக் கருணை பெற்றுப்
பொன்னடி பணிந்து தம்மூர் போகுவா ரினைய சொல்வார். (௧௮)

வழுதியர் பெருமான் ன்பாற் கந்தனே வந்தா னென்பார்
பழுதறு கற்பி னுடன் பாக்கிய மிதுவே யென்பார்
அழகினான் மதனும் பெண்மை யவாவுறு மிவன்கோ லானை
வீழுகட லுலகோ வைய மேழையுங் காக்கு மென்பார். (௧௯)

மனிதர்வான் றவமோ தென்பார் வைகுவோர் தவமோ வானப்
புனிதர்வான் றவமோ வேள்விப் பூசுரர் தவமோ கேள்வி
முனிவர்வான் றவமோ வீறு முதலிலா முதல்வ னுள்ளக்
கனிதரு கருணை போலிக் காதலன் றோற்ற மென்பார். (௨௦)

தருமமா தவத்தின் பேறோ வருத்தமா தவத்தின் பேறோ
பெருமைசால் காம நோற்ற பெருந்தவப் பேறோ வெய்தற்
கருமையாம் வீடு நோற்ற வருந்தவப் பேறோ விந்தத்
திருமக னென்று தம்மில் விளம்பிமகிழ் சிறப்பச் சென்றார். (௨௧)

அவ்வவர் [illegible] டாறு மங்கல வணிக ளாகக்
கௌவைமங் கலங்க ளார்ப்புக் கடிநக ரெங்கும் பொங்க
நெய்விழா வெடுப்பக் கேள்வி நிரம்பிய மறையோர்க் கீந்த
தெய்வமா தான நீத்தந் திரைக்கடன் மடுத்த தம்மா. (௨௨)

சுண்ணமும் பொரியுந் தூவெள் ளரிசியுந் தூர்வைக் காடுந்
தண்ணறுஞ் சிவிறி வீசு தண்பனி நீருஞ் சாந்தும்
எண்ணெயு நானச் சேறும் பசையற வெடுத்து வாரிக்
கண்ணக னகர மெங்குங் கழுவின தான வெள்ளம். (௨௩)

செம்பொன்செய் துருத்தி தூம்பு செய்குழல வட்ட மாக
அம்பொன்செய் சிவிறி வெண்பொ னண்டைகொண் டாரந் தூங்கு
வம்பஞ்சு முலையி னாரு மைந்தரு மாறி யாட
அம்பஞ்சு மாறி மாறி யநங்கனு மாடல செய்தான். (௨௪)

இன்னணங் களிப்ப மூதூ ரிந்துவா திரைநன் னாளிற்
பொன்னவன் கேந்தி ரித்த புனிதலக் கினதிற் போநத
தென்னவர் பெருமான சேய்க்குச் சாதகச் செய்தி யாதி
மன்னவர்க் கியன்ற வேத மரபினால் வ்யநக வாற்றி. (௨௫)

கரியவெண் டிரைநீர்ச் செல்வன் கல்விற கரிந்த வென்றித்
தெரியல னுலகந் தாங்கு தெய்வத வரைக்கோ னாதித்
தரியலர் வீரஞ் சிந்தத் தருக்கழித் தச்சந் தோற்றற்
குரியகா ரணத்தா னும முக்கிர வரும னென்றான். (௨௬)

நாலாகு மதியிற் சந்தி மிதிப்பது நடாத்தி யாரும்
பாலாகு மதியி லன்ன மங்கலம் பயிற்றி யாண்டின்
மேலாகு மதியிற் கேச வினைமுடித் தைந்தா மாண்டின்
நூலாறு தெரிந்து பூண நூற்கடி முடித்துப் பின்னர். (௨௭)

பதநிரை பாழி சாகை யாரணம் பணைத்த வேத
முதனிரைக் கலையும் வென்றி மூரிவிற் கலையும் வாளுட
மதநிரை யொழுகு மயன் மாநிரை வையம் பாய்மா
விதநிரை யேற்ற மேற்று முணர்த்தினன் வியாழப் புத்தேள். (உஅ)

குருமுகத் தறிய வேண்டு மென்பதோர் கொள்கை யாலே
ஒருமுறை கேட்டாங் கெண்ணெண் கலைகளு மொருங்கு தேறி
அரனல தொருவ ராலுந் தேற்றுவ தருமை யாலப்
பரனிடைத் தெளிந்தான் பாசு பதாத்திரப் படையு மன்றே. (உகூ)

எல்லையில் கலைக ளெல்லா மகவைநா விரண்டின் முற்றத்
தொல்லறி வுடைய னாகிக் குரவரைத் தொழுது போற்ற
வல்லவ னாகி யன்னார் மகிழ்ச்சிகொள் கலனாய் வென்றிச்
செல்வவேற் றிளைய ரோடுந் திருவிளை யாடல் செய்வான். (௩0)

புகர்மத வேழ முட்டிப் போர்விளை யாடி வென்றுந்
தகரொடு தகரைத் தாக்கித் தருக்கம ராடி வென்றும்
வகிர்படு குருதிச் சூட்டு வாரண மாடி வென்றும்
நகைமணிப் பலகை செம்பொ னன்குறுப் பாடி வென்றும். (௩க)

காற்றினுங் கடிய மாவிற் காவதம் பலபோய் மீண்டுங்
கூற்றினுங் கொடிய சீற்றக் குஞ்சர முகைத்தும் வைகை
யாற்றினுய் யானத் தாவி யகத்தினு ளின்பந் துய்த்தும்
வேற்றிறன் மைந்த ரோடு மல்லமர் விளைத்து வென்றும். (௩உ)

சந்தவெற் படைந்து வேட்டஞ் செய்துமச் சைல வாழ்க்கை
அந்தண ராசி கூற வவர்தொழில் வினவு மனனார்
கந்தமென் கனிவி ருத்தூண் கைதழீஇக் களித்து மீண்டும்
இந்தவா றைம்மூ வாண்டு கழியமே லெய்து மாண்டில். (௩௩)

சூர்முத றடிந்த தங்க டோன்றலே யிவனென் றெண்ணிக்
கார்முக மயிலும் வேலுங் கைவிடாக் காக்கு மாபோல்
வார்முக முலையி னாரும் வடிக்கணு மருங்கு மொய்ப்பக்
கூர்முக வேலா னின்ன கொள்கைய னாகத் தாதை. (௩௪)

பங்கயச் செவ்வித் தாகிக் கண்மனம் பருகு காந்தி
அங்கழற் காலுஞ் சொன்ன வடைவினிற் றிரண்டு நீண்ட
சங்கமும் வட்டந் தோன்றாச் செழுமுழந் தாளு நால்வாய்த்
துங்கவீங் கவுண்மால யானைத் துதிக்கைபோற் றிரள்க வாலு (௩௫)

சிறுகிய வயிறுந் தாழ்ந்த நாபியுஞ் செவ்வி நோக்கும்
மறுவில்கண் ணடியி னன்ன கடியகல் வரைகொண் மார்பும்
எறியிசை வீணைத் தண்டி னிணைந்துநீண் டிழிந்த கையும்
வெறியதார் கிடந்த மேரு வெற்பிரண் டனைய தோளும். (௩௬)

வலம்புரி யென்ன வாய்ந்த கண்டமு மலரா மன்னுட
பொலம்புரி கமல மன்ன வதனமும் பொதுவா னோக்கி
நிலம்புரி தவப்பே றன்னான் வடிவெலா நின்று நின்று
நலம்புரி நூலா னோக்கிச் சோதிப்பா னடிக்க வல்லான். (௩௭)

உன்னத மாறு நீண்ட வுறுப்பைந்து சூக்கந் தானும்
அன்னது குறுக்க நான்கா மகலுறுப் பிரண்டே ழாகச்
சொன்னது சிவப்பு மூன்று கம்பீரந் தொகுத்த வாறே
இன்னவை விரிக்கி னெண்ணான் கிலக்கண வுறுப்பா மென்ப.

வயிறுதோ ணெற்றி நாசி மார்புகை யடியிவ் வாறும்
உயரில்வான் செல்வ னாகு மொளிகவர் கண்க போலம்
புயல்புரை வள்ளற் செங்கை புதுமணங் கவருந் துண்டம்
வியன்முலை நடுமார் பைந்து நீண்டவேல் விளைக்கு நன்மை.

நறியபூங் குஞ்சி தோக்கு விரற்கணு நகம்பல் லைந்துஞ்
சிறியவே லாயுள் கோசஞ் சங்கநா முதுகிந் நான்குங்
குறியவேற் பாக்கி யப்பே றுஞ்சிரங் குளமென் றுய்ந்தோர்
அறியுமிவ் வுறுப்பி ரண்டு மகன்றவே லிதுவு நன்றாம்.

அகவடி யங்கை நாட்டக் கடையிதழ் ழண்ண நாக்கு
நகமிவை யேழுஞ் சேந்த நன்மையாற் பெறுமா வின்பம்
இகல்வலி யோசை நாபி யென்றிவை மூன்று மாழ்ந்த
தகைமையா லெவர்க்கு மேலா நன்மைசா றக்கோ னென்னா.

எல்லையின் மூர்த்தி மைந்த னிலக்கண நிறைவி னோடு
நல்லவாங் குணனு நோக்கிப் பொதுவற ஞாலங் காக்க
வல்லவ னாகி வாழ்நா ணனிபெற வல்ல னென்னா
அல்லணி மிடற்றான் பின்னு மனத்தினு ளளந்து சூழும்.

இத்தகு பண்பு சான்ற நீர்மையா விசைமை நீதி
வித்தக நல்ல வுள்ள முடைமைமெய் வீறு தெய்வ
பத்திமை யுலகுக் கெல்லா மகிழ்ச்சிசெய் பண்பு சாந்த
சித்தமெவ் வுயிர்க்கு மன்பு செய்கைநல் லீகை கல்வி.

வெல்லுதற் கரியார் தம்மை வெல்லுத றேவ ராலுஞ்
செல்லுதற் கரிய தேத்துஞ் சென்றிடு திறையுங் கோடல்
புல்லுதற் கரிய ஞால மாலைபோற் புயத்தி லேந்திச்
சொல்லுதற் கரிய கீர்த்தி யுலகெலாஞ் சுமப்ப வைத்தல்.

என்றிவை யாதி யாய வியற்குண முடைய னாகி
நன்றிசெய் துலகுக் கெல்லா நாயக னொருவ னாகி
நின்றிடு மிவற்குப் பின்னர் நீண்முடி கவித்து முன்னர்
மன்றல்செய் கென்று சூழ்ந்து மதிஞரோ டெண்ணி னானே.

உக்கிரபாண்டியன் றிருவவதாரப்படல முற்றிற்று.

ஆக திருவிருத்தம் - ௯௬௪.

பன்னிரண்டாவது

உக்கிரபாண்டியனுக்கு

வேல்வளைசெண்டுகொடுத்தபடலம்.

உருக்குந் திறலுக் கிரகுமர னுதய மிதுவான் மதியுநதிப்
பெருக்கும் கரந்த சடைக்கற்றைப் பெருந்தேர்ச் செழியர் பிரானவற்குச்
செருக்குஞ் செல்வ மணமுடித்துச் செவ்வேல் வளைசெண் டளித்துள்ளந்
தருக்கு முடிதந் தரசுரிமை தந்த செயலுஞ் சாற்றுவாம். (௧)

வையைக் கிழவன் றன்னருமைக் குமரன் றனக்கு மணம்புணர்ச்சி
செய்யக் கருதுந் திறனோக்கி யறிஞ ரோடுந் திரண்டமைச்சர்
மையற் றழியா நிலத்திருவ மரபுங் குடியும் புகழ்மையுநம்
ஐயற் கிசையத் தக்ககுலத் தரசர் யாரென் றளக்கின்றார். (௨)

தீந்தண் புனல்சூழ் வடபுலத்து மணவூ ரென்னுந் திருநகர்க்கு
வேந்தன் பரிதி திருமரபின் விளங்குஞ் சோம சேகரனென்
றாய்ந்த கேள்வி யவனிடத்துத் திருமா தென்ன வவதரித்த
காந்தி மதியை மணம்பேச விருந்தா ரற்றைக் கனையிருள்வாய். (௩)

வெள்ளைக் களிற்றின் பிடர்சுமந்த குடுமிக் கோயின் மேயவிளம்
பிள்ளைக் கதிர்வெண் மதிமௌலிப் பெருமா னிரவி மருமானும்
வள்ளற் கரத்தான் கனவிலெழுந் தருளி வானோர் நனவிற்குங்
கள்ளத் துருவாந் திருமேனி காட்டி யிதனை விளம்புவார். (௪)

அன்ன மிறைகொள் வயன்மதுரைச் சிவன்யா மரச நீயீன்ற
பொன்னை யனையா டனைமதுரா புரியிற் கொடுபோய் மறுபுலத்து
மன்னர் மகுட மணியிடற மழுங்குங் கழற்காற் சுந்தரனாந்
தென்னர் பெருமான் குமரனுக்குக் கொடுத்தி யென்று செப்புதலும். (௫)

உள்ளக் கமல முககமல முடனே மலர விருதடங்கண்
அள்ளற் கமல மலர்ந்துதன தங்கைக் கமல முகிழ்த் தெழுந்து
வள்ளற் பரமன் கருணையெளி வந்த செயலை நினைந்தன்பின்
வெள்ளத் தழுந்தி யெழுந்திரவி வேலை முளைக்கும் வேலையினில். (௬)

நித்த நியமக் கடனிரப்பி நிருப னமைச்ச ரொடுநான்கு
பைத்த கருவிப் படையினொடு பல்வே றியமுங் கலிப்பத்தன்
பொய்த்த மருங்குற் றிருமகளைப் பொன்ன னாரோ டிரதமிசை
வைத்து மணஞ்சேர் திருவினொடு மதுரை நோக்கி வழிக்கொண்டான். (௭)

நென்ன லெல்லை மணம்பேச நினைந்த வாறே யமைச்சர்மதி
மன்னர் பெருமான் றமரோடு மணவூர் நோக்கி வழிவருவார்
அன்ன வேந்தன் றனைக்கண்டா ரடல்வேற் குமர னனையானெனந்
தென்னர் பெருமான் குமரனுக்குன் றிருவைத் தருதி யெனவனையான். (௮)

குலனுங் குடியுங் கனவின்கட் கொன்றை முடியார் வந்துரைத்த
நலனுங் கூறி மணநேர்ந்து நயப்ப வதனை நன்முதியோர்
புலனொன் றுழையர் தமைவிடுத்துப் பொருளைத் துறைவற் குணர்த்திவரு
வலனுந் தயில்வேன் மன்னனொடு மதுரை மூதூர் வந்தணைந்தார். (௯)

இரவி மருமான் மதிமருமா னெதிரே பணியத் தழீஇமுகமன்
பரவி யிருக்கை செலவுய்த்துப் பாண்டி வேந்த னிருந்தான்மேல்
விரவி யமைச்சர் திருமுகங்கள் வேந்தர் யார்க்கும் விடுத்துநகர்
வரைவு நாள்செய் தணிசெய்ய மன்றன் முரச மறைவித்தார். (௧0)

மாடம் புதுக்கிப் பூகதமுங் கதலிக்காடு மறுகெங்கும்
நீட நிரைத்துப் பாவிகையு நிறைபொற் குடமு முறைநிறுத்தி
ஆடு கொடியுந் தோரணமும் புனைவித் தழகுக் கழகாகக்
கூட நெருங்கு நகரைமணக் கோலம் பெருகக் கொளுத்தினார். (௧௧)

* கொளுத்தல் - அலங்கரித்தல்.

தென்ற னுடன் றிருமகளைத தேவா பெருமான் மணம்புரிய
மன்ற லழகா லொருநகரொப் பதிக மின்றி மதுரைநகர்
அன்று தானே தனக்கொப்ப தாகும் வண்ண மணியமைத்தார்
இன்று தானே தனக்கதிக மென்னும் வண்ண மெழிலமைத்தார். (கஉ)

வேறு

முன்னர் மாலை முடியணி சுந்தரத்
தென்ன ரேற்றின் றிருமுகங் கண்டுதொழுந்
தன்ன வாசக முட்கொண் டயற்புல
மன்னர் மாதவர் யாரும் வருவரால். (கங)

புரவி வெள்ளமும் போர்க்கரி வெள்ளமும்
வரவிற் * கால்வலி மள்ளரின் வெள்ளமும்
விரவி யாழிய வெள்ளமு முள்ளுடை
இரவி தன்வழித் தோன்றல்வந் தெய்தினான் (கச)

கோடு வில்லொடு மேகக் குழாங்கண்மின்
நீடு வாளொடு நேர்ந்தென மார்புதாழ்ந்
தாடு குண்டலக் காதுடை யாடவர்
சேட னீகத்துச் சேரன்வந் தீண்டினான். (கரு)

கடலு முள்ளமுங் காற்றும்பல் வண்ணமும்
உடலுங் கொண்டன வுந்துறு வாம்பரிப்
படுக டற்குட் பரிதியிற் றோன்றினான்
அடுப ரிப்பதி யாகிய வேந்தனே. (கசு)

அலகி லாவுத யந்தொறு மாதவர்
அலகி லாருதித் தென்னப்பொன் னொடைசேர்
அலகி லானை யனீகமொ டெய்தினான்
அலகி லாற்றற் கயபதி யண்ணலே. (கஎ)

தொக்க மள்ள ரடிப்படு தூளிபோய்த்
திக்க டங்க விழுங்கித் திரைக்கடல்
எக்கர் செய்ய வெழுந்தியங் கல்லென
நக்க வேற்கை நரபதி நண்ணினான். (கஅ)

மீன வேலையிற் கந்துக மேற்கொடு
கூனல் வார்சிலை வஞ்சக் கொடுஞ்சமர்க்
கான வாழ்க்கை யரட்டக் கரும்படை
மான வேற்குறு மன்னவர் நண்ணினார். (கசு)

சீனர் சோனகர் சிங்களர் கொங்கணர்
மான வேல்வல மாளவர் சாளுவர்
தான மாங்கீரச் சாவக ராதியாம்
வீனை நாட்டுள மன்னரு மீண்டினார். (உ0)

நாலொ டெந்துவக் குண்டு நடங்குமான்
றோலர் தூருகு சுருக்குடைத் தானையர்
கோல முஞ்சியர் கிஞ்சுகக் கோவினார்
நாலு நூல்பயி லுவினர் நண்ணினார். (உக)

* வரைவில என்றும் பாடம்.

வட்ட நீர்க்கலக் கையினர் வார்ந்துதோள்
விட்ட குண்டலக் காதினர் வேட்டநீத்
தொட்ட கோவிஞர் வேள்வியிற் சுட்டநீ
றிட்ட நெற்றிய ரில்லொடு நண்ணினர். (உஉ)

மூண்ட நெற்றியர் வெண்ணிற மூரலர்
குஞ்சி கைக்கையர் கோவணம் வீக்கிய
தண்டு கையர்கற் றூணையர் மெய்யினைக்
கண்டு பொய்யினைக காய்ந்தவர் நண்ணினர். (உ௩)

தீந்தண் பாற்கடல் செந்துகிர்க் காட்டொடும்
போந்த போன்மெயிற் புண்ணியப் பூச்சினர்
சேந்த வேணியர் வேத சிரப்பொருள்
ஆய்ந்த கேள்வி யருந்தவ ரெய்தினர். (உச)

ஆதி சைவர் முதற்சைவ ரைவருங்
கோதி லாவகச் சைவக் குழாங்களும்
பூதி மேனியர் புண்ணிய வைந்தெழுத்
தோது நாவின ரால்லவந் தெய்தினர். (உரு)

வெண்க ளிற்றவன் வேரியந் தாமரைப்
பெண்க ளிப்புறு மார்பன் பிரமனே
டொண்க ளிப்புற வும்பர் முதற்பதி
னெண்க ணத்தவர் யாவரு மீண்டினர். (உசு)

அணைந்து கோயி லடைந்தரிச் சேக்கைமேற்
குணங்க டந்தவன் கோமள வல்லியோ
டிணங்கி வைகு மிருக்கைகண் டேத்தினர்
வணங்கி னர்வணங் கும்முறை வாழ்த்தினர். (உஎ)

விரைசெய் தார்முடிச் சுந்தர மீனவன்
சுரர்கண் மாதவர் வேந்தர்க்குத் தொன்முறை
வரிசை நல்கி யிருந்தனன் மன்னவன்
றிரும கன்மணஞ் செய்திறஞ் செப்புவாம். (உஅ)

சோம சேகரன் றேகை வனப்பெலாங்
கோம கன்கண் டுவப்பவக் கொள்கைகண்
டேம மேனிய னூல்வழி யார்க்குமத்
தேமன் கோதை யுறுப்பிய றேற்றுவான். (உகூ)

வே று.

பெருகநீண் டறவுங் குறுகிடா வாகிப் பிளந்திடாக் கடையவாய்த் தழைந்து
கருவிவான் வண்டின் கணமெனக் கறுத்துக் கடைகுழன் றிபுன்மணங் கான்று
புரையறச் செறிந்து நெறித்துமெல் லென்று புந்திகண் கவரநெய்த் திருண்ட
மருமலர்க் குழலா டன்பதிக் கினிய மல்லல்வான் செல்வமுண் டாகும். (௩0)

திண்மத வேழ மத்தகம் போலத் திரண்டுயர் சென்னியா ளவட்டன்
உண்மகிழ் கணவ னுயுணீண் டகில வுலகர சுரியனு மெட்டாத்
தண்மதி போன்று மயிர்நரம் பகன்று தசைந்தமூ விரலிடை யகன்ற
ஒண்மதி நுதறன் பதிக்குநற் றிருவோ டெப்பிலா ரோக்கிய முண்டாம். (௩௧)

கண்கடை சிவந்தான் பாலென வெளுத்து நடுவிழி கழியவுங் கரிதாய்
எண்கவி னடைந்து கோமள மாகி யிமைகரு மயிர்த்தெனி னினிய
ஒண்கரும் புருவங் குனிசிலை யொத்த தத்தமி லொத்திரு துளையும்
பண்கொள வுருண்டு துண்டமெட் போது பதுமமேற் பூத்தது போலும். (௩௨)

வள்ளைபோல் வார்ந்து தாழ்ந்திரு செவியு மட்றசுழி நல்லவாய் முன்னர்த்
தள்ளிய காதி மனோகர மாகுந் தன்மையா னன்மையே தழைக்கும்
ஒள்ளிய கபோலம் வட்டமாய்த் தசைந்திட் டுயர்ந்துகண் ணாடிமண் டலம்போற்
றெள்ளிய வூற்ற மினியது நன்றென் றோதினன் றிரைக்கடற் செல்வன். (௩௩)

கொவ்வைவா யதரந் திரண்டிரு புடையுங் குவிந்துசேந் திரேகைநேர் கிடந்தால்
அவ்வணி யிழைதன் னன்பனுக் கென்று நண்புரு வாகுமென் றான்கு
வல்லவா ளெயிறு மிடைவெளி யின்றி வார்ந்துமேல் கீழிரண் டொழுங்குஞ்
செவ்வனோர்ந் தாவின் பாலென வெள்கித் திகழினன் றென்பர்நூ றெளிந்தோர்.

மெல்லிதாய்ச் சிவந்து கோமள மான நாவினுள் வேட்டவேட் டாங்கே
வல்லைவந் தெய்த நுகர்ந்திடுந் தசைந்து வட்டமா யங்குல மிரண்டின்
எல்லைய தாகி மஞ்சுள மாகி யிருப்பது சுபுக கன்றென்பர்
அல்லியங் கமலம் போன்மணந் * திருடீர்ந் தவிர்மதி போல்வது முகமே. (௩௫)

திரைவளைக் கழுத்துத் தசைந்துநால் விரலி னளவதாய்த் திரண்டுமூன் றிரேகை
வரைபடிற் கொழுந னகிலமன் னவனு மார்பகந் தசைந்து மூவாறு
விரலள வகன்று மயிர்நரம் பகன்று மிதந்ததேல் விழுமிதாம் வேய்த்தோள்
புரையறத் தசைந்து மயிரகன் றென்பு புலப்படா மொழியகோ மளமாம். (௩௬)

செங்கைநீண் டுருண்டு கணுக்கள்பெற் றடைவே சிறுத்திடிற் செல்வமோ டின்பந்
தங்கும்வள் ளுகிர்சேந் துருண்டுகண் ணுள்ளன கவர்வதாய்ச் சரசரப் பகன்றால்
அங்கவை நல்ல வகங்கைமெல் லெனச்சேந் திடைவெளி யகன்றிடை யுயர்ந்து
மங்கல மாய்ச்சில் வரைகளி னல்ல விலக்கண வரையுள மாதோ. (௩௭)

முத்தணி தனங்கள் கடினமாய்த் தசைந்து வட்டமாய் முகிழ்த்திரு கடநேர்
ஒத்திறு மாந்தீர்க் கிடையற நெருங்கி யுள்ளன மெலிந்தமர்ந் துரோம
பத்திபெற் றயலே மயிர்நரம் பகன்ற பண்டியா ளுண்டிவேட் டாங்கே
துய்த்திடு நாபி வலஞ்சுழித் தாழ்ந்தாற் றொலைவிலாத் திருவளம் பெருகும். (௩௮)

இடைமயிர் நரம்பற் றிருபதோ டொருநான் கெழில்விர லளவொடு வட்ட
வடிவதாய்ச் சிறுகி மெலிவது நிதம்ப மத்தகம் யானையின் புறம்போற்
படிவநே ரொத்த னன்றிரு குறங்கும் படிமயி ரெனபகன் றியானைத்
தடவுடைக் கையுங் கரபமுந் † கதலித் தண்டுமொத் திருக்கினன் றென்ப

அங்கமுண் மறைந்து வட்டமாய்த் தசைவ தணிமுழந் தாண்மயிர் நரம்பு
தங்கிடா தடைவே யுருட்சியாய்ச் சிறுத்துச் சமவடி வாயழ கடைந்த
சங்கமாஞ் சிரையென் பறத்தசைந் தியாமை முதுகெனத் திரண்டுயர்ந் தழகு
மங்கலம் பொலிந்த புறவடி மடந்தை மனனவன் பன்னியா மன்றே. (௪௰)

அல்லியங் கமலக் கலைல்விர லுயர்ந்து தூயவா யழகவாய்க் கழூநீர்
மெல்லிதழ் நிரைத்தாங் கொழுங்குறத் திரண்டு வாலுகிர் ‡ வெண்மதிப் பிளவு
புல்லிய போன்று மெல்லிய வாகிப் புகரறத் தசைந்தன வகத்தாள்
சொல்லிய தசைவு மென்மையுஞ் சமமுந் துகளறப் படைத்தன நன்றால். (௪௧)

* போன்மலர்ந் தெனறும்பாடம்.

† கரபம் - மணிக்கட்டிலிருந்து சிறுவிரல்வரையும் உள்ள கையின் வெளிப்பாகம். ‡ விரலுகிர் என்றும் பாடம்.

வண்ணமாந் தளிர்போய லவந்தெரி பொன்போல் வைகலும் வெயர்வையற் றாகம்
உண்ணமா யிருக்கிற் செல்வமுண் டாகு மொண்மணம் பாடலங் குவளை
தண்ணறு முளரி மல்லிகை நறுந்தண் சண்பகம் போல்வன வாகும்
பண்ணவாங் கிளவி குயில்கிளி யாழிற் படின்வரும் பாக்கிய மென்னா. (சஉ)

வேறு.

கருங்குழற் சுற்றை தொட்டுச் செம்மலர்க் காவி னலைய
மருங்குனல் கூர்ந்த கன்னி வடிவெலாம் வாக்கின் செல்வன்
ஒருங்குநூ லுணர்வாற் றெள்ளி யிம்பரின் றும்பர் தேத்தும்
இரங்குமிக் குயிலன் னாண்மெய் யிலக்கண மரிய தென்றான். (சங)

அங்கது கேட்டோர் யாரு மகங்களி துளும்ப விப்பாற்
சொங்கலர் நறுந்தார்க் குஞ்சி யுக்கிர குமரன் போந்து
மங்கல வரிசை மாண மத்தமான் சுமந்த வைகைச்
சங்கெறி துறைநீ ராடித் தருங்கடி வணப்புக் கொள்வான். (சச)

கட்டவிழ் கண்ணி வேய்ந்து மான்மதக் கலவைச் சாந்தம்
மட்டணஞ் செய்து முத்தான் மாண்கலன் முழுதுந் தாங்கி
விட்டவிர் கலைவான றிங்கள் வெண்கதிர்ச் செல்வன் போல்வந்
திட்டபூந் தவிசின் மேற்கொண் டிருந்தனன் சங்க மேங்க. (சரு)

அந்நிலை மணநீ ராடி யருங்கலப் போர்வை போர்த்த
கன்னியைக் கொணர்ந்து நம்பி வலவயிற் கவின வைத்தார்
பன்னியொ டெழுந்து சோம சேகரன் பரனும் பங்கின்
மன்னிய வுமையு மாக மதித்துநீர்ச் சிரகந் தாங்கி. (சசு)

மங்கல நீரா னம்பி மலரடி விளக்கி வாசக்
கொங்கலர் மாலை சூட்டிக் குளிர்மது பருக்க மூட்டி
நங்கைதன் கையைப் பற்றி நம்பிதன் கையி லேற்றிப்
புங்கவ ரறிய நன்னீர் மந்திரம் புகன்று பெய்வான். (சஎ)

இரவிதன் மருமான் சோம சேகர னென்பேர் திங்கண்
மரபினை விளக்க வந்த சுந்தர மாறன் மைந்தன்
உரவுநீர் ஞாலந் தாங்கு முக்கிர வருமற் கின்றென்
குரவலர்க் கோதை மாதைக் கொடுத்தன னெனநீர் வார்த்தான். (சஅ)

மைந்துறு மடங்கற் றிண்கான் மணிவட வயிரவூசல்
ஐந்துடன் பதஞ்செய் பஞ்சி யணையினோ டன்னத் தூவிப்
பைந்துகி லணையீ ரைந்து பவளவாய்ப் பசும்பொன் மேனி
இந்திர மணிக்கட் பாவை விளக்குநான் கிரட்டி யென்ப. (சகூ)

அட்டில்வா யடுக்குஞ் செம்பொற் கலங்களா றம்பொன் வாக்கி
இட்டிழை மணிக்க ளாஞ்சி யேழுபொற் கவரி யெட்டு
விட்டொளிர் பசும்பொற் கிண்ணப் பந்திசூழ் விளங்க நாப்பண்
நட்டபொற் காலி னோடு நகைமணிக் கூலநூ றென்ப. (ருo)

பெருவிலை யாரப் பேழை யாயிரம் பெற்ற றுண்டே
சருவிலைப் பட்டு வெவ்வே றமைத்தன பேழைமுந்நூ
றுருவமு தெழுதிச் செய்த வோவியப் பாவை யன்னார்
திருமணிக் கலனோ டேவற் சேடிய ரெழுநூற் றைவர். (ருக)

* உஷ்ணம் - உண்ணமென்றாயிற்று.

வினையொடு மூன்று மூதூர் மின்னுவிட் டெறியுஞ் செம்பொன்
அளவிரு கோடி யின்ன வரும்பெறன் மகட்குச் செல்வ
வளமுற வரிசை யாக வழங்கினான் முழங்கி வண்டு
இளமதுக் கண்ணிச் சோம சேகர மன்னன் மாதே (௫௨)

ஆர்த்தன வியங்க ளெல்லா மமரர்மந் தார மாரி
தூர்த்தனர் வேள்விச் செந்தீச் சுழித்தது வலமாய்த் துள்ளி
வார்த்தன மடவார் நாவின் முளைத்தன வாழ்த்து மன்றல்
பார்த்தனர் கண்க ளெல்லாம் பெற்றன படைத்த பேறு. (௫௩)

பொதியவிழ் கடப்பந் தண்டார்ப் புயத்திளங் காளை யன்னான்
முதியவர் செந்தீ யோம்ப வின்னிய முழங்கக் காந்தி
மதியைமங் கலநாண் பூட்டி வரிவளைச் செங்கை பற்றி
விதிவழி யேனை மன்றல் வினையெலா நிரம்பச் செய்தான். (௫௪)

வேறு.

எண்ணி லாத வளத்தினொடு மிரவி மருமான் மடப்பிடியைப்
பண்ணி லாவு மறையொழுக்கம் பயப்ப வேள்வி வினைமுடித்துத்
தண்ணி லாவெண் கலைமதியுந் தாரா கணமுந் தவழ்ந்துழல
விண்ணி லாவு மணிமாட வீதி வலமாய் வருமெல்லை. (௫௫)

மின்னேர் பொன்னந் தொடியினரு மென்செம் பஞ்சி யடியினரும்
பொன்னேர் மணிப்பூண் முலையினரும் புலம்பு மணிமே கலையினரும்
அன்னே ரோதித் தாரினரு மாகிக் கண்ணு மனமுமவன்
முன்னே தூது நடப்பதென நடப்ப நடந்தார் முகிழ்முலையார். (௫௬)

சுருங்கு மிடையார் தன்பவனி தொழுது வருவார் தமக்கிரங்கி
மருங்குற் பாரங் கழிப்பான்போற் கலையைக் கவர்ந்தும் வளைத்தோண்மேல்
ஒருங்கு பாரங் கழிப்பான்போல் வளையைக் கவர்ந்து முள்ளத்துள்
நெருங்கு பாரங் கழிப்பான்போ னிறையைக் கவர்ந்து நெறிச்செல்வான். (௫௭)

வாண மதிசேர் முடிமறைத்த வழுதி மகனே யிவனென்றால்
ஆனை யெருத்திற் சிங்கவிள வடலே றென்ன வயல்வேந்தர்
சேனை தழுவ வரும்பவனிக் கொப்பே தொப்புச் செப்புங்கால்
யானை மகளை மணந்துவரு மிளையோன் பவனிச் செல்வமே. (௫௮)

இம்மை தனிலு நன்மைதரு மீசன் றனையும் வாச வற்கு
வெம்மை தருவன் பழிதவிர்த்த விமலன் றனையு மங்கயற்கண்
அம்மை தனையும் பணிந்துமீண் டரசன் கோயி லடைந்தீன்றோர்
தம்மை முறையா லடிக்கமலந் தலையிற் பணிந்தான் றனிக்குமரன். (௫௯)

ஆறு வாறு சுவையடிசி லயில்வோர் தம்மை யயில்வித்து
நாறு வரிசை வரன்முறையா னல்கி விடையு நல்கிப்பின்
வாறு டவர்க்கும் விடைகொடுத்து மதிக்கோ னொழுகி வைகுநாட்
டேனார் கண்ணித் திருமகனுக் கிதனைச் செப்பி யிதுசெய்வான். (௬௦)

மைந்த கேட்டி யிந்திரனுங் கடலு முனக்கு வான்பகையாஞ்
சந்த மேருத் தருக்கடையுஞ் சதவேள் விக்கோன் முடிசிதற
இந்த வளைகொண் டெறிகடலி விவ்வேல் விடுதி யிச்செண்டால்
அந்த மேரு தனைப்புடையென் றெடுத்துக் கொடுத்தா னவைமூன்றும். (௬௧)

அன்ன மூன்று படைக்கலமுந் தொழுது வாங்கி யடலேறு
தன்னை நேரா யெதிர்நிற்குந் தனயன் றனையுக் கிரவழுதி
என்ன வாதி மறைமுழங்க வியங்க ளேங்க முடிகவித்துத்
தன்ன தாணை யரசுரிமை தனிச்செங் கோலுந் தானல்கா. (சுஉ)

சூட்சி வினையிற் பொன்னனைய சுமதி தன்னைத் தொன்னூலின்
மாட்சி யறிஞர் தமைநோக்கி வம்மி னிவனைக் கண்ணிமைபோற்
காட்சி பயக்குங் கல்வியும்போற் காப்பீ ரிதுநுங் கடனிம்மண்
ஆட்சி யிவன தென்றிளைய வரியே றனையான் றனைநல்கா. (சுங)

வேறு.

வெய்யவேற் காளை யன்னான் றன்னையும் வேறு நோக்கி
ஐயவிவ் வையந் தாங்கி யளித்தனை யினிநீ நீத்த
மையறு மனத்தார் சொல்லும் வாய்மையா றொழுகி நீயுஞ்
செய்யகோன் முறைசெய் தாண்டு திருவொடும் பொலிக வென்றான். (சுச)

பன்னருங் கணங்க ளெல்லாம் பண்டைய வடிவ மாகத்
தன்னருட் டுணையாய் வந்த தடாதகைப் பிராட்டி யோடும்
பொன்னெடுங் கோயில் புக்குப் பொலிந்தன னிச்சை தன்னால்
இன்னருட் படிவங் கொள்ளு மீறிலா வின்ப மூர்த்தி. (சுரு)

வேறு.

பின்ன ருக்கிரப் பெயர்த ரித்தவத்
தென்னர் கோமகன் றெய்வ நான்மறை
மன்னு நல்லறம் வளர வையகந்
தன்ன தாணையாற் றாங்கி வைகினான். (சுசு)

உக்கிரபாண்டியனுக்குவேல்வளைசெண்டுகொடுத்தபடல முற்றிற்று.

ஆக திருவிருத்தம் - க,0௬உ.

பதின்மூன்றாவது

கடல்சுவறவேல்விட்டபடலம்.

வளையொடு செண்டுவேன் மைந்தற் கஞ்சுரும்
பளையவேம் பணிந்தகோ னளித்த வாறிதத்
தளையவிழ் தாரினான் றனயன் வேலைமேல்
இளையவ னென்னவே லெறிந்த தோதுவாம். (க)

திங்களி னுக்கிரச் செழியன் வெண்குடை
எங்கணு நிழற்றவீற் றிருக்கு நாள்வயிற்
சங்கையில் லாதமா தரும வேள்விகள்
புங்கவர் புடைதழீஇப் போற்ற வாற்றுநாள். (உ)

அரும்பரி மகந்தொண்ணூற் றாறு செய்துழிச்
சுரும்பரி னிசைத்தருத் தோன்ற றண்ணறா
விரும்பரி முரன்றுசூழ் வேம்பி னங்குழைப்
பொரும்பரி வீரன்மேற் பொறாது பொங்கினான். (௩)

மன்னிய நாடெலாம் வளஞ்சு ரந்துவான்
பொன்னியு ளுடுபோற் பொலித லாவிந்த
மின்னிய வேலினான் வேள்வி செய்வதென்
றுன்னிய மனத்தனோர் சூழ்ச்சி யுன்னினான். (௪)

பொருங்கடல் வேந்தனைக் கூவிப் பொள்ளென
இருங்கட லுடுத்தபா ரேழு மூழிநாள்
ஒருங்கடு வெள்ளமொத் துருத்துப் போய்வளைந்
தருங்கடி மதுரையை யழித்தி யாலென்றான். (௫)

விளைவது தெரிகிலன் வேலை வேந்தனும்
வளவயன் மதுரையை வளைந்திட் டிம்மெனக்
களைவது கருதினான் பேயுங் கண்படை
கொளவரு நனந்தலைக் குருட்டுக் கங்குல்வாய். (௬)

வேறு.

கொதித்தலைக் கரங்களண்ட கூடமெங்கு மூடுபோய்
அதிர்த்தலைக்க வூழிநாளி லார்த்தலைக்கு நீத்தமாய்
மதித்தலத்தை யெட்டிமுட்டி வருமொரஞ் சனப்பொருப்
புதித்தலொத்து மண்ணும்விண்ணு முட்கவந்த துததியே. (௭)

வங்கவேலை *வெள்ளைமாட மதுரைமீது வருசெயல்
கங்குல்வாய திங்கண்மீது காரிவாய காருடல்
வெங்கண்வாள ராவிழுங்க வீழ்வதொக்கு மலதுகார்
அங்கண்மூட வருவதொக்கு மல்லதேது சொல்வதே. (௮)

வட்டயாமை பலகைவீசு வாளைவாள்கண் மகரமே
பட்டயானை பாய்திரைப் பரப்புவாம் பரித்திரள்
விட்டதோணி யிரதமின்ன விரவுதானை யொடுகடல்
அட்டமாக வழுதிமே லமர்க்கெழுந்த தொக்குமே. (௯)

இன்னவா றெழுந்தவேலை மஞ்சுறங்கு மிஞ்சிசூழ்
நன்னகர்க் குணக்கின்வந்து நணுகுமெல்லை யரையிரா
மன்னவன்க னவின்வெள்ளி மன்றவாணர் சித்தராய்
முன்னர்வந் திருந்தரும்பு முறுவறோன்ற மொழிகுவார். (௧௦)

வழுதியுன்ற னகரழிக்க வருவதாழி வல்லைநீ
எழுதிபோதி வென்றிவே லெறிந்துவாகை பெறுகெனத்
தொழுதசெங் கரத்தினான் றுதிக்குநாவி னனெழீஇக்
கழுதுறங்கு கங்குலிற் கனவுணர்ந்து காவலான். (௧௧)

கண்ணிறைந்த வமளியிற் கழிந்துவாயில் பலகடந்
துண்ணிறைந்த மதியமைச்ச ருடன்விரைந்து குறுகியே
மண்ணிறந்த தென்முழங்கி வருதரங்க வாரிகண்
டெண்ணிறந்த வதிசயத்த னாகிநிற்கு மெல்லைவாய். (௧௨)

கனவில்வந்த சித்தவேடர் நனவில்வந்து காவலோன்
நினைவுகண்டு பொழுதுதாழ நிற்பதென்கொ லப்பனே
சினவிவேலை போலவந்த தெவ்வைமான வலிகெட
முனையவே லெறிந்துஞால முடிவுதீர்த்தி யாலென. (௧௩)

---

* வெள்ளமாட என்றும் பாடம்.

எடுத்தவேலை வலந்திரித் தெறிந்தவேலை வென்முனை
மடுத்தவேலை சுஃறெனா வறந்துமான வலிகெட
அடுத்துவேரி வாகையின்றி யடிவணங்கு தெவ்வரைக்
கடுத்தவேல் வலானகணைக் காலின்மட்ட தானதே. (௧௪)

சந்தவேத வேள்வியைத் தடுப்பதன்றி யுலகெலாஞ்
சிந்தவேறு சூழ்ச்சிசெய்த தேவர்கோவி னேவலால்
வந்தவேலை வலியழிந்த வஞ்சகர்க்கு நன்றிசெய்
திந்தவேலை வலியிழப்ப தென்றுமுள்ள தேகொலாம். (௧௫)

வேறு.

புண்ணிடை நுழைந்த வேலாற் புணரியைப் புறங்கண் டோன்பால்
மண்ணிடை நின்ற சித்தர் வானிடை மறைந்து ஞானக்
கண்ணிடை நிறைந்து தோன்றுங் கருணையால் வடிவங்கொண்டு
விண்ணிடை யணங்கி னோடு விடையிடை விளங்கி நின்றார். (௧௬)

முக்கணும் புயங்க ணான்கு முளைமதிக் கண்ணி வேய்ந்த
செக்கரஞ் சடையுங் காள கண்டமுந் தெரிந்து தென்னன்
பக்கமே பணிந்தெ ழுந்து பரந்தபே ரன்புந் தானுந்
தக்கவஞ் சலிசெய் தேத்தித் தரைமிசை நடந்து செல்வான். (௧௭)

துந்துபி யைந்து மார்ப்பப் பாரிடந் தொழுது போர்ப்பத்
தந்திர வேத கீதந் தநும்பியெண் டிசையுந தாக்க
அந்தர நாட ரேத்த வகல்விசும் பாற தாக
வந்துதன் கோயில் புக்கான் வரவுபோக் கிறந்த வள்ளல். (௧௮)

அஞ்சலி முகிழ்த்துச் சேவித் தருகுற வந்த வேந்தன்
இஞ்சிசூழ் கோயி லெய்தி யிறைஞ்சினன் விடைகொண் டேகிப்
பஞ்சின்மெல் லடியா ரட்ட மங்கலம் பரிப்ப நோக்கி
மஞ்சிவர் குடுமி மாட மாளிகை புகுந்தான் மன்னோ. (௧௯)

வளையெயின் மதுரை மூதூர் மறிகட லிவற்றி னுப்பண்
விளைவய னகர மெல்லாம் வெள்ளியம் பலத்து ளாடுந்
தளையவிழ் கொன்றை வேணித் தம்பிரான் றனக்கே சேர்த்துக்
களைகணு யுலகுக் கெல்லா மிருந்தனன் காவல் வேந்தன். (௨௦)

கடல்சுவறவேல்விட்டபடல முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௧,0௫௨.

பதினான்காவது

இந்திரன்முடிமேல்வளையெறிந்தபடலம்.

மின்னவிர் மணிப்பூண் மார்பன் வேலையை வேலால் வென்று
பொன்னவிர் வாகை வேய்ந்த புகழுரை செய்தேனக
நன்னக ராளி செம்பொ னகைமுடி சிந்தவந்த
மன்னவன் வளைகொண் டோச்சி வென்றதும் வகுத்துச் சொல்வாம். (௧)

கோமக னிகழு நாளிற் கோணிலை பிழைத்துக் கொண்மூ
மாமழை மறுப்பப் பைங்கூழ் வறந்துபுற் றலைக ரிந்து
காமரு நாடு மூன்றுங் கையற வெய்த மன்னர்
தாமது தீர்வு நோக்கித் தமிழ்முனி யிருக்கை சார்ந்தார். (௨)

முனிவனை யடைந்து வேந்தர் மூவருந் தங்க ணாட்டிற்
பனிவரு மாரி யின்றி வறந்தமை பகர மேருக்
குனிவரு சிலையார்க் கன்பன் கோணிலை குறித்து நோக்கி
இனிவரு மாரி யில்லை யாதினு லென்னிற் கேண்மின். (ங)

காய்சின வெய்யோன் சேயோன் முன்செலக் கதாகால் வெள்ளித்
தேசிகன் பின்பு சென்று நடக்குமிச் செயலான் முந்நீர்த்
தூசின வுலகிற் பன்னீ ராண்டுவான் சுருங்கு மென்று
பேசின நூல்கண் மாரி பெய்விப்போற் சென்று கேண்மின் (ச)

என்றவ னெதிர்யா மெவ்வா றேகுது மென்று ரைந்தும்
வென்றவன் சோம வார விரதநீர் நோற்று வெள்ளி
மன்றவ னருளைப் பெற்று வான்வழிச் சென்மி னென்றக்
குன்றவன் சிலையா னோன்பின் விதியினைக் கூறு கின்றான். (ரு)

உத்தம வானோர் தம்மு ளுத்தம னுகு மீசன்
உத்தம சத்தி மாரு ளுத்தமி யுருத்தி ராணி
உத்தம விரதந் தம்மு ளுத்தமந் திங்க ணோன்பென்
றுத்தம மறைநூ லாதி யுரைக்குமிச் சோம வாரம். (சா)

மந்தரங் காசி யாதிப் பதிகளில் வதிந்து நோற்கத்
தந்திடும் பயனிற் கோடி தழைத்திடு மதுரை தன்னில்
இந்தநல் விரத நோற்போர்க் கதிகம்யா தெனனிற் சோம
சுந்தர னுரிய வார மாதலாற் சோம வாரம். (எ)

அங்கதி னதிகப் பேறுண் டருக்கனின் மதிதோய்ந் தொன்றித்
தங்கிய திங்க ணோன்பு † தருதியி னோற்க வல்லார்க்
கிங்கதி னதிக நீதி யீட்டிய பொருள்கொண் டாற்றும்
மங்கல விரதப் பேறென் றனந்தமாய் வளரு மன்றே. (அ)

நலமலி விரத நோற்பத் தொடங்குநா ளவில்வாந் தேளிற்
சிலையினி லாத லன்றி யிரட்டிய தெரிசஞ் ‡ சேர்ந்த
மலமதி யொழித்து மற்றை மதியினு முந்தைப் பக்கத்
தலர்கதிர் வாரத் தல்லூ ணயின்றிடா வயலிற் றுஞ்சா. (கூ)

வைகறை யெழுந்து சேற்கண் மணாளனை யுள்கி யற்றைச்
செய்கட னிறீஇக் காமாதி சிந்தைநீத் தலர்பொற் கஞ்சப்
பொய்கையை யடைந்து கையிற் பவித்திரம் புனைந்து வாக்கு
மெய்கருத் தொருப்பா டெய்தச் சங்கற்பம் விதந்து கூறி. (க0)

கடம்படி மூளைத்த முக்கட் கரும்பினை நினைந்து ஞாலத்
திடம்படு தீர்த்த மெல்லா மாடிய பயனை யீண்டுத்
திடம்படத் தருதி யென்னுத் திரைத்தடம் படிந்து வெண்ணீ
றுடம்பணிந் தக்க மாலை யொளிபெற விதியாற் றுங்கி. (கக)

* சோமவாரஞ் சோமசுந்தரர்க் குரியவாரமென்பதை "உமையுடனே யொன்றி யுறுஞ்சிவன் சோமன்—உமைசிவன்வா ரம்மதுவென் றோர்." என்னும் சோமவாரகற்பத்தானுணர்க.

† அமாவாசையோடு கூடிய சோமவாரவிசேஷத்தை "சந்திரவா ரத்துதயந் தங்கியமா வாசிசிசி—அந்தியயா மத்தினுமுற் றால். ஒருமூன்று கோடிசிவ ராத்திரியொ டொக்கும்—பரமசிவ னைப்பூசை பண். அருச்சித்தா ரிவ்வா றரித்துமல மெல்லாம்—பரித்திருப்ப ரீசன் பதம்." என்னும் சோமவார சிவராத்திரி கற்பத்தானுமுணர்க. ‡ தெரிசம் - அமாவாசை.

வெள்ளைமந் தார முல்லை மல்லிகை வெடிவாய்ச் சாதி
கள்ளவிழ் மயிலை யாதி வெண்மலர் கவர்ந்து வேழப்
பிள்ளையை முந்தப் பூசித் திரந்துசங் கற்பம் பேசி
உள்ளணைந் துச்சி மேற்பன் னிருவிர லுயர்ச்சிக் கும்பர். (கஉ)

சத்திய ஞானா னந்த தத்துவந் தன்னை யுள்கி
வைத்ததன் வடிவங் கொண்டு மண்முதற் சிவமீ றான
அத்துவ விலிங்கந் தன்னை யாசன மூர்த்தி மூல
வித்தைமற் றுள நூலின் விதியினாற் பூசை செய்க. (கங)

ஐந்தமு தாவி னைந்து நறுங்கனி யைந்து * செந்தேன்
சந்தன தோயம் புட்பத் தண்புனன் மணிநீ ராட்டிச்
சுந்தர வெண்பட் டாடை கருப்புரச் சுண்ணஞ் சாந்தங்
கந்தமல் லிகைமுன் னான வெண்மலர்க் கண்ணி சாத்தி. (கச)

காசணி பொலம்பூண் சாத்திக் கனைகழ லாதி யங்க
பூசனை செய்து சேற்கட் பூரண பரையை யவ்வா
றீசனைந் தெழுத்தைப் பெண்பாற் கிசையவுச் சரித்துப் பூசித்
தாசறு சுரபித் தீம்பா லட்டவின் னமுதி னோடும். (கரு)

பண்ணிய வகைபா னீய நிவேதனம் பண்ணி வாசம்
நண்ணிய வடைக்காய் நல்கி நறுவிரைத் தூபந் தீபம்
எண்ணிய வகையாற் கோட்டிக் கண்ணடி யேனைமற் றும்
புண்ணியன் றிருமுன் காட்டி வில்வத்தாற் பூசை செய்தல். (கசு)

புரகர னிச்சா ஞானக் கிரியையாய்ப் போந்த வில்வ
மரமுத லடைந்து மூன்று வைகலூ ணுறக்க மின்றி
அரகர முழக்கஞ் செய்வோ ரைம்பெரும் பாத கங்கள்
விரகில்செய் கொலைக ளரு மாதலால விசேடம் வில்வம். (கஎ)

மடங்கிதழ் சுருங்கல் வாடி யுலர்ந்தது மயிர்சிக் குண்டல்
முடங்குகாற் சிலம்பிக் கூடு புழுக்கடி முதலாங் குற்றம்
அடங்கினுங் குற்ற மில்லை யுத்தம மாகும் வில்வந்
தடங்கைகொண் டீச னாம மாயிரஞ் சாற்றிச் சாத்தல். † (கஅ)

அடியனேன் செய்யுங் குற்ற மன்றைக்கன் றநந்த மாகுங்
கொடியனஞ் சமுதாக் கொண்டாய் குற்றமுங் குணமாக் கொண்டு
படியெழு தரிய மங்கை பங்கனே காத்தி யென்று
முடியுற வடியில் வீழ்ந்து மும்முறை வலஞ்செய் தேத்தி. (ககூ)

---

* நறுங்கனியைந்து - எலுமிச்சம்பழம், நாரத்தம்பழம், தமரத்தம்பழம், கொளிஞ்சிப்பழம், மாதுளம்பழம்.

† சிவார்ச்சனைக்கு வில்வம் இன்றியமையாதென அதன் விசேடமுணர்த்துவார் மடங்கிதழ் முதலிய குற்றம் அடங்கினும் குற்றமில்லை என்றாரேனும், அடங்கினும் என்னும் எதிர்மறையும்மையினாலும், உத்தமமாகும் வில்வந் தடங்கைகொண்டு சாத்துக என்றமையினாலும், மேற்கூறிய குற்றமுடையவில்வம் ஆகாவெனக் கொள்க. ஆசிரியர் துதிவாதமாகக் கூறிய இப்பொருளை உற்று நோக்காது, "புழுக்கடி முதலவான - அடங்கலுங்குற்ற மேயாம்." எனப் பாடங் கொள்வாருமுளர். பறித்துலர்த்தியதும் பழையதுமான வில்வம் அர்ச்சனைக்காகும் என்று ஆகமங் கூறும்.

வன்மனங் கரைய நின்று வேண்டிய வரங்கள் வேண்ட
நன்மணப் பேறு மக்கட் பேறுநல் வாக்குக் கல்வி
பொன்மணக் கினிய போகந் தெவ்வரைப் புறகு காண்டல்
இம்மையி லரசு மற்று மெண்ணியாங் கெய்து மன்றே. (௨0)

ஆதியில் விலிங்கந் தீண்டநீ கருகரல் லாத மவத
வேதியர் முதலோ ரிட்ட விலிங்கத்திவ் விதியா லர்ச்சித்
தோதிய விரத நோற்க வர்ச்சனைக் குரிய ரல்லாச்
சாதியர் பொருணேர்ந் தாதி சைவராற் பூசை செய்தல். (௨௧)

வேறு.

பொருவிலிவ் விரத மைவகைத் தச்சிப் போதினு ளிரவினு ளிரண்டும்
ஒருவுத லுறங்கா திருத்தலர்ச் சனைநால் யாமமு முஞற்றுத லென்னக்
கருதினிவ் வைந்து மொன்றனுக் கொன்று கீழியவு மதிகமா நோற்கும்
வருடமொன் றிரண்டு மூன்றுபன் னிரண்டு வருடம்வாழ் நாளள விவற்றுள். ()

உடலள வெண்ணி நோற்பவர் முந்த வுத்தியா பனஞ்செய்து நோற்க
கடவரவ் வருடக் கட்டளைக் கிறுதி கழிப்பதுத் தாபன விதிதான்
மடல்விழ் மாலை மண்டபங் குண்ட மண்டலம் வகுத்துமா பதியைப்
படரொளி வெள்ளி முப்பது கழஞ்சிற் படிமையா னிருமிதஞ் செய்து. (௨௩)

காலையி லாசான் சொல்வழி நித்தக் கடன்முடித் தச்சிதொட் டந்தி
மாலையி னளவும் புராணநூல் கேட்டு மாலைதொட் டியாமமோர் நான்குஞ்
சேலன கண்ணாள் பங்கனைப் பூசை செய்கவப் பூசனை முடிவின்
மூலமந் திரநூற் றெட்டுநூற் றெட்டு முறையினா லாகுதி முடித்தல். (௨௪)

வில்லமா யிரங்கொண் டாயிர நாமம் விளம்பிநால் யாமமுஞ் சாத்தல்
நல்லவைந் தெழுத்தா லைந்தெழுத் துருவி னாதனுக் கருக்கியங் கொடுத்தல்
எல்லையின் மூல மந்திரத் தாலு மேனைமந் திரங்களி னாலும்
வில்லழ லோம்பிப் பூரணா குதிசெய் தீறிலான் வேள்வியை முடித்தல். (௨௫)

புலர்ந்தபின் னித்த வினைமுடித் தரம்பைப் பொதுளும்பா சிலைபதின் மூன்றின்
நலந்தரு தூவெள் ளரிசிபெய் தினிய நறியகாய் கறியொடு பரப்பி
அலந்தர வான்பா னிறைகுடம் பதின்மூன் றரிசிமேல் வைத்தர னடியிற்
கலந்தவன் பினராய்ச் சிவார்ச்சனைக் குரிய கடவுள்வே தியர்களை வரித்து. (௨௬)

காதணி கலனுங் கையணி கலனுங் கவின்பெற வளித்தர னாக
ஆதரம் பெருக நினைந்தருச் சனைசெய் தரியதக் கிணையொடும் பாதப்
போதணி காப்பு விசிறிதண் கவிகை பூந்துகின் முதற்பல வுடனே
மேதகு தானஞ் செய்துபின் குருவைக் கற்புடை மின்னிடை யோடும். (௨௭)

ஆசனத் திருத்திப் பொலந்துகில் காதுக் கணிகள்கைக் கணிகளு மணிந்து
வாசநன் மலரிட் டருச்சனை செய்து மலைமக ளவனை வரைந்து
பூசனை செய்த படிமையோ டம்பொன் பூதலம் பதாதிகள் பிறவுந்
தூசலர் மாலை கோட்டணி பனைந்த சுரபிமா தானமுஞ் செய்து. (௨௮)

இனையவா றுத்தா பனமுடித் தாசா னேவலாற் சிவனடிக் கன்பர்
தனையரோ டொக்க லுடனமு தருந்த றகுதியிவ் விரதமுன் கண்ணன்
அனையதா மரையோ னிந்திரன் முதல்வா னுடைவர் மூவறு கணத்தோர்
அனைவரு நோற்றுர் மனிதரு மனுட்டித் தரும்பெறற் போகம்வீ டடைந்தார். ()

ஈதுநோற் பவர்வெம் பகைமனத் துயர்தீர்ந் தாயிரம் பிறவியி லியற்றுந்
தீதுசேர் வினைதீர்ந் தெடுத்தயாக் கையினிற் சிவகதி யடைவரிவ் விரதம்
ஓதினோர் கேட்டோர் மனைவியர் மக்க ளொக்கலோ டினிதுவாழ்ந் தும்பர்
மேதகு பதினா லிந்திரர் பதத்தில் வீற்றினி திருப்பரென் றறவோன். (௧௦)

வேறு.

சொல்லிய நெறியாற் சோம சுந்தரன் விரத நோற்பான்
வில்லிடு மணிப்பூண் வேந்தர் முனிவனை விடைகொண் டேகி
அல்லியங் கனக கஞ்சத் தாடியங் கயற்கண் வல்லி
புல்லிய பாகன் றன்னை வழிபடீஇப் போற்றி நோற்றார். (௧௧)

சுந்தரன் றன்னைப் பூசைத் தொழில்செய்து வரம்பெற் றேகி
அந்தரத் தாறு செல்வா ரமைந்தறிந் தமரர் வேந்தன்
வந்தவ ரிருக்க வேறு மடங்கன்மான் றவிசு மூன்று
தந்திடப் பணித்தா னிட்டார் தனதரி யணையிற் றாழ. (௧௨)

வான்வழி வந்த மூன்று மன்னரும் பொன்னா டெய்தி
ஊன்வழி குலிச வைவே லும்பர்கோன் மருங்கிற் புக்கார்
தேன்வழி போந்தின் கண்ணிச் சேரனு மார்த்தார் வேந்துங்
கான்வழி தாரு நாடன் காட்டிய தவிசின் வைக. (௧௩)

மைக்கடல் வறப்ப வென்ற வாகைவேற் செழியன் மௌலிச்
செக்கர்மா மணிவிற் காலத் தேவர்கோன் றவிசி லேறி
ஒக்கவீற் றிருந்தா னாக வும்பர்கோ னழுக்கா றெய்திப்
பக்கமே யிருந்த வேனைப் பார்த்திவர் முகத்தைப் பாரா. (௧௪)

முகமனன் கியம்பி நீவிர் வந்ததென் மொழிமி னென்ன
மகபதி யெங்க ணாட்டின் மழைமறுத் தடைந்தே மென்றார்
அகமலர்ந் தனையார் நாட்டி னளவும்வான் சுரக்க நல்கி
நகைமணிக் கலன்பொன் னாடை நல்கிநீர் போமி னென்றான். (௧௫)

அன்னவ ரகன்ற பின்னை யமரர்கோன் கன்னி நாடன்
தன்னரி யணைமே லொக்கத் தருக்கினோ டிருக்கு மாறும்
பின்னரு மாரி வேண்டாப் பெருமித வீறு நோக்கி
இன்னது புலப்ப டாமை யினையதோர் வினைய முன்னா. (௧௬)

பொற்புற வரிசை செய்வான் போலள விறந்தோர் தாங்கி
வெற்புறழ் திணிதோ ளாற்றன் மெலிவதோ ராரந் தன்னை
அற்புற வளித்தான் வாங்கி யலர்மதுத் தார்போ லீசன்
கற்புடை யுமையாண் மைந்தன் கதுமெனக் கழுத்தி லிட்டான். (௧௭)

கண்டனன் கடவு ளானதன் கழியவு மிறும்பூ துள்ளங்
கொண்டன னின்று தொட்டுக் குரையளி துழாவு நிம்பத்
தண்டழை மார்ப வாரந் தாங்குபாண் டியனென் றுன்னை
மண்டல மதிக்க வென்றான் வானநா டுடைய மன்னன். (௧௮)

அன்னது சிறிது மெண்ணா தங்குநின் றிழிந்து தென்னன்
தன்னக ரடைந்தா னிப்பாற் சதமக னானை யாலம்
மன்னவ ரிருவர் நாடு மழைவளம் பெருகப் பெய்த
தென்னவ னாடு பண்டைச் செயலதா யிருந்த தன்றே. (௧௯)

ஆயதோர் வைகல் வேட்டை யாடுவா னண்ணல் விண்ணந்
தாயதோர் பொதியக் குன்றிற் சந்தனச் சார னண்ணி
மேயதோ லரிமா னேனம் வேங்கையெண் கிரலை யின்ன
நீயதோர் விலங்கு வேட்டஞ் செய்துயிர் செருக்கு மெல்லை. (சo)

பொன்றத்து முருவிக் குன்றிற் புட்கலா வருத்த மாதி
மின்றத்து மேக நான்கும் வீழ்ந்தன மேயக் கண்டு
குன்றத்தி னெடிய திண்டோட் கொற்றவ னவற்றைப் பற்றிக்
கன்றத்திண் களிறு போலக் கடுந்தளை சிக்க யாத்தான். (சக)

வேட்டத்திற் பட்ட செங்கண் வேழம்போற் கொண்டு போகிக்
கோட்டத்தி லிட்டா னாகக் குன்றிற கரிந்த வென்றி
நாட்டத்துப் படிவத் தண்ட நாடன்மற் றதனைக் கேட்டுக்
காட்டத்துக் கனல்போற் சீறிக் கடுஞ்சமர் குறித்துச் செல்வான். (சஉ)

வாங்குநீர் வறப்ப வேலை விடுத்ததும் வலிய வாரந்
தாங்கிய செருக்குங் காரைத் தளையிடு தருக்கு நோக்கி
ஈங்கொரு மனித யாக்கைக் கித்துணை வலியா தென்னு
வீங்கிய மான மூக்க மீனவன் மதுரை சூழ்ந்தான். (சங)

வேறு.

ஓடின செற்றார்போய்ச் செழிய னொண்கழல்
சூடினர் நகர்ப்புறஞ் சுரர்கள் சேனைகள்
மூடின வென்னலு முனிவு மானமும்
நீடின னரியனை யிருந்து நீங்குவான். (சச)

பண்ணுக தேர்பரி பகடு வீரர்முன்
நண்ணுக கடிதென நடத்தி யாவரென்
றெண்ணலன் மதமலை யெருத்த மேற்கொடு
கண்ணகன் கடிநகர்க் காப்பு நீங்குமுன். (சடு)

அடுத்தனர் வானவ ரார்த்துப் பல்படை
எடுத்தனர் வீசினர் சிலையி லெய்கணை
தொடுத்தன ரிறுதிநாட் சொரியு மாரிபோல்
விடுத்தனர் மதிக்குல வீரன் சேனைமேல். (சசு)

ஆர்த்தனர் மலயவெற் பரையன் சேனையோர்
பார்த்தனர் வேறுபல் படைக்க லக்குவை
தூர்த்தனர் குனிசிலை தொடுத்து வாளியாற்
போர்த்தன ரமரர்மெய் புதைத்த ஜெவ்வபவே. (சஎ)

தறிந்தன தாள்சிரந் தகர்ந்த தோள்கரம்
பறிந்தன குருதிநீர் கடலிற் பாய்ந்தன
செறிந்தன பாரிடஞ் சேனங் கூளிகள்
முறிந்தன வானவர் முதல்வன் சேனையே. (சஅ)

ஆடின குறைத்தலை யவிந்த போர்க்களம்
பாடின பாரிடம் விந்தைப் பாவைதான்
சூடின கூளிகள் சோரி சோரப்பார்
மூடின பிணக்குவை யண்ட முட்டவே. (சகூ)

வெஞ்சின வலாரிதன் வீரச் சேனைகள்
துஞ்சின கண்டெரி சொரியுங் கண்ணனாய்ப்
பஞ்சின்முன் னெரியெனப் பதைத்துத் தெய்வ
வஞ்சினப் பனிட்டகளான் மூலைவ தூன்னினான். (௫0)

வேறு.

வெங்கதிர்ப் படைவிட் டார்த்தான் விண்ணவ னதனைத் திங்கட்
பைங்கதிர்ப் படைதொட் டோச்சி யவித்தனன் பாராள் வேந்தன்
சிங்கவெம் படைவிட் டார்த்தான் றேவர்கோ னதனைச் சிம்புட்
புங்கவன் படைதொட் டோச்சி யடக்கினான் புணரி வென்றோன். (௫க)

தானவர் பகைவன் மோக சரந்தொடுத் தெறிந்தா னாக
மீனவ னதனை ஞான வாளியால் விளித்து மாய்ந்து
போனபின் மற்றோ ராற்றிப் புக்கனர் புக்கார் தம்மில்
வானவன் மண்ணி னான்மேல் வச்சிரம் வீசி யார்த்தான். (௫உ)

காய்சின, மடங்க லன்னான் கைவளை சுழற்றி வல்லே
வீசினன் குலிசந் தன்னை வீழ்த்தது விடுத்தான் சென்னித்
தேசினன் மகுடந் தள்ளிச் சிதைத்தது சிதைத்த லோடுங்
கூசின னஞ்சிப் போனான் குன்றிற கரிந்த வீரன். (௫௩)

இந்திரன் டனைய கூர்ம்பல் விருள்வரை நெஞ்சு போழ்ந்த
மைந்தனில் வலிய காளை வரைந்தெறி நேமி சென்னி
சிந்திடா தாகி யம்பொன் மணிமுடி சிதறச் சோம
சுந்தர நாதன் பூசைத் தொழிற்பய னளித்த தென்னா. (௫௪)

போரினுக் காற்றா தோடிப் பொன்னகர் புகுந்த வென்றித்
தாரினுக் கிசைந்த கூர்வேற் சதமகன் பின்பு தன்னாட்
டேரினுக் கெல்லா மாரி யுதவுவே னிகள நீக்கிக்
காரினைத் தருக வென்னாக் கவுரியற் கோலை விட்டான். (௫௫)

முடங்கல்கொண் டணைந்த தூதன் முடிகெழு வேந்தன் பாதத்
தொடுங்கினின் றோலை நீட்ட வுழையுளா னொருவன் வாங்கி
மடங்கலே றனையான் முன்னர் வாசித்துக் காட்டக் கேட்டு
விடங்கலும் வேலான் விண்ணோர் வேந்துரை தேறா னாகி. (௫௬)

இட்டவன் சிறையை நீக்கி யெழிலியை விடாது மாறு
பட்டசிந் தையனே யாகப் பாகசா தனனுக் கென்று
நட்டவ னொருவே ளாள னன்பிணை யென்று தாழ்ந்தான்
மட்டவிழ்ந் தொழுகு நிம்ப மாலிகை மார்பி னானும். (௫எ)

இடுக்கண்வந் துயிர்க்கு றூற்ற மெய்தினும் வாய்மை காத்து
வடுக்களைந் தொழுகு நாலா மரபினா னுரையை யாத்தன்
எடுத்துரை மறைபோற் சூழ்ந்து சிறைக்களத் திட்ட யாப்பு
விடுத்தனன் பகடு போல மீண்டன மேக மெல்லாம். (௫அ)

தேவர்கோ னேவ லாலே திங்கண்மும் மாரி பெய்து
வாவியுங் குளனும் யாறு மடுக்களு மடுத்துக் கள்வாய்க்
காவிசூழ் வயலுஞ் செய்யுஞ் செந்நெலுங் கன்னற் காடும்
பூவிரி பொழிலுங் காவும் பொலிந்தது கன்னிநாடு. (௫௯)

இந்திரன்முடிமேல்வளையெறிந்தபடல முற்றிற்று.

ஆக திருவிருத்தம் - கககக.

மேருவைச்செண்டாலடித்தபடலம்.

அண்டரஞ்ச வமருழந்த வமரர்கோனை யரசர்கோன்
வண்டலம்பு மவுலிசிந்த வளையெறிந்து வென்புறங்
கண்டவண்ண மின்னதன்ன கன்னிநாடன் மேருவிற்
செண்டெறிந்து வைப்பெடுத்த செயலுநன்கு செப்புவாம். (௧)

மன்னவன் றனக்குமுன்னர் மலயவெற்பின் முனிவர்கோன்
சொன்னதிங்கள் விரதமன்று தொட்டுநோற்று வரலுமக்
கன்னலஞ்செய் பேறுபோல நங்கைகாந்தி மதிவயிற்
றுன்னருஞ் சயங்கொண்மைந்த னொருவன்வந்து தோன்றினான். (௨)

வயந்தனைப் பயந்ததென்ன மைந்தனைப் பயந்தபோ
தியந்துவைத்து நகர்களிப்ப வினிதிருந்த புரவலன்
சயந்தழைக்க விந்திரன் சயந்தனைப் பயந்தநாள்
வியந்நகத் தடைந்தவின்பம் விளைமகிழ்ச்சி யெய்தினான். (௩)

தென்னரேறு சாதகாதி செய்துவீர பாண்டியன்
என்னநாம வினைவிரப்பி யெழுதொணாத கலைமுதற்
பண்ணுகேள்வி கரிகடேர்கள் பரிபடைக் கலம்பயின்
றன்னகாத லான்விளங்க வகமகிழ்ச்சி யடையுநாள். (௪)

மல்குமாறு * கோடிரிந்து மழைசுருங்கி நதியுநீர்
ஒல்குமாறு பருவமாறி யுணவுமாறி யுயிரெலாம்
மெல்குமாறு பசியுழந்து வேந்தனுக்கு விளைபொருள்
நல்குமாறி லாமையின்ன னலியவந்த நாடெலாம். (௫)

மழைவறந்த தென்கொலென்று வழுதிகூற முழுதுணர்ந்
தழிவிலாத பிரமகற்ப மளவுமெல்லை கண்டநூல்
உழவர்கோள்க ளிரவிதன்னை யுற்றுநோக்கி நிற்றலாற்
றழையுமாரி வருடியாதொர் வருடமென்று சாற்றினார். (௬)

வேறு.

மகவுறு நோயை நோக்கி வருந்துறு தாய்போன் மன்னன்
பகவுறு மதியஞ் சூடும் பரஞ்சுடர் முன்போய்த் தாழ்ந்து
மிகவுறு பசியால் வைய மெலிவதை யைய வென்னாத்
தகவுற விரங்கிக் கண்ணீர் ததும்பநின் றிரந்து வேண்ட. (௭)

திரைக்கடல் விடஞ்சேர் கண்டர் காலத்தின் செவ்வி நோக்கி
இரக்கமில் லவர்போல் வாளா விருத்தலு மருத்தார் மார்பன்
கரைக்கரி தாய துன்பக் கடலில்வீழ்ந் திருக்கை புக்கான்
அரக்கர்போர்க் கடலி னீந்தி யருக்கனீர்க் கடலில் வீழ்ந்தான். (௮)

வள்ளறன் குடைக்கீழ்த் தங்கு முயிர்ப்பசி வருத்த மெல்லாங்
கொள்ளைகொண் டிருந்த நெஞ்சிற் குளிர்முகச் செவ்வி குன்றத்
தள்ளருந் துயரின் மூழ்கித் தரையிடைத் துயின்றா னாக
வெள்ளிமன் றுடையார் சித்த வேடராய்க் கனவில் வந்தார். (௯)

* மல்குமாறில் என்றும் பாடம்.

அடற்கதிர் வேலோய் மாரி யரிதிப்போ ததனை வேண்டி
இடர்ப்படல் வரைக்கு வேந்தா யிருக்கின்ற வெரிபொன் மேருத்
தடப்பெரு வரையின் மாடோர் தனிப்பெரு முழையி விட்டுக்
இடப்பதோ ரெல்லை யில்லாக் கேடிலாச் சேம வைப்பு. (கo)

இடைத்துமற் றனைய மேரு கிரிசெருக் கடங்கச் செண்டாற்
புடைத்துநின் றனைத் தாக்கிப் பொன்னறை பொதிந்த பாறை
துடைத்துநீ வேண்டுங் காறுந் தொட்டெடுத் ததனை மீள
அடைத்துநின் குறியிட் டைய வருதியென் றடிகள் கூற. (கக)

விழித்தன னெழுமான் றேரோன் விழிக்குமுன் கடன்க ளெல்லாங்
கழித்தனன் மீன நோக்கி கணவனை வலமாப் போந்து
சுழித்தெறி கடலனீகத் தொகைபுறஞ் சூழக் கொண்டல்
கிழித்தெழு வாயி னீங்கிக் கீழ்த்திசை நோக்கிச் செல்வான். (கஉ)

அதிர்ந்தன முரசஞ் சங்க மதிர்ந்தன வியங்க ளண்டம்
பிதிர்ந்தன வென்ன வார்ப்பப் பெயர்ந்துவெண் கவரி துள்ள
முதிர்ந்தநான் மறையோ ராசி மொழியநா வல்லோ ரேத்தப்
பதிந்துபார் கிழியத் திண்டேர் பாகுமுன் செலுத்த வூர்ந்தான். (கங)

பவளக்காற் பிச்சம் பொற்காற் பனமணிக் கவிகை முத்தத்
தவளக்காற் பதாகைக் காடுந் தானவா னருவி தூங்குங்
கவளக்காற் பொருப்பும் பாய்மாக் கடலுமண் மடந்தை யாக
துவளக்கால் வயவர் மான்றேர்த் தொகுதியுஞ் சூழல் போக. (கச)

கோழிணர் ஞாழ லன்ன கோட்டுகிர்ப் புலவுப் பேழ்வாய்த்
தாழ்சின வுழுவை யொற்றைத் தனிப்பெருங் கொடியுங் கூனற்
காழ்சிலைக் கொடியுஞ் சூழக் கயற்கொடி நிலந்து ழாங்கை
ஏழுயர் வரைமேற் றோன்றி யிருவிசும் பகடு கீற. (கரு)

தென்கடல் வடபா னோக்கிச் செல்வது போலத் தென்னன்
றன்கட லணிகங் கன்னித் தண்டமிழ் நாடு நீந்தி
வன்கட னெறிக்கொண் டேகி வளவர்கோ னெதிர்கொண் டாற்றும்
நன்கடன் முகம னேற்று நளிர்புன னாடு நீந்தி. (கசு)

தண்டக நாடு தள்ளித் தெலுங்கநா டகன்று சாய்தாட்
கண்டகக் கைதை வேலிக் கருநடங் கடந்து காடுந்
தொண்டகந் துவைக்குங் குன்று நதிகளுந் துறந்து கள்வாய்
வண்டக மலர்க்கா வேலி மாளவ தேச நண்ணி. (கஎ)

அங்குநின் றெழுந்து நீவா யருஞ்சுர நெறிப்பட் டேகி
மங்குனின் றதிருஞ் செம்பொன் மாடநீள் விராட நண்ணிக்
கொங்குநின் றவிழுங் கானங் குன்றொரீஇ வானை பாயத்
தெங்குநின் றிளநீர் சிந்து மத்திய தேயத் தெய்தி. (கஅ)

அந்நெடு நாடு நீங்கி யாடலே றுயர்த்த தோன்றல்
பொன்னெடுஞ் சடையிற் றாழ்ந்து புனிதமாந் தீர்த்தக் காசி
நன்னெடு நகரமெய்தி நளிர்புனற் கங்கை நீந்திக்
கன்னெடு நெறிய நேக காவதங் கடந்த பின்னர். (ககூ)

மடங்கன்மா நாகம் யாளி வழங்கலான் மனிதர் செல்லா
இடங்கடந் தாக ஐவஞ்ஞூற் றிரட்டியோ சனைத்தா மெல்லைக்
கடங்கெழு குமரி கண்டங் கடந்துமற் றதுபோ லெட்டுத்
தடங்கெழு கண்டங் கொண்ட பாரத வருடந் தள்ளி. (௨௦)

யாவையு மீன்று டன்னை யீன்றபொன் னிமயந் தன்னைத்
தாவியப் புறம்போய்ப் போகந் ததும்புகிம் புருட கண்டம்
மேவியங் கதுநீத் தேம வெற்படைந் ததுபின் னூக
ஓவியப்*புறத்துத் தோன்று மரிவரு டத்தை யுற்று. (௨௧)

உற்றது கழிந்தப் பாற்போய் நிடதவெற் பொழிந்து சம்புப்
பொற்றருக் கனிகால் யாறு போகிளா விருத கண்டத்
துற்றனன் கண்டான் மூன்றா ரொருங்கடு ஞான்று கூனி
வெற்றிவெஞ் சிலையாய் நின்ற வெற்பினை மலய வெற்பன். (௨௨)

வெம்படை மறவர் சேனை வெள்ளநீத் தேகித் தென்பாற்
சம்புவின் கனியின் சாறு வலம்படத் தழுவி யோடும்
அம்பொனீ ராறு மாற்றி னருகுபொன் மயமாய் நிற்கும்
பைம்புனங் கான நோக்கி வளைந்துதென் பால்வந் தெய்தா. (௨௩)

அவ்வரை யரசை நோக்கி வரைகளுக் கரசே யெந்தை
கைவரி சிலையே பாரின் களைகணே யளவில் வானந்
தைவரு சுடருங் கோளு நாள்களுந் தழுவிச் சூழுந்
தெய்வத வரையே மேலைத் தேவரா லயமே யென்று. (௨௪)

மாணிக்க மிமைக்கும் பூணோன் விளித்தலும் வரைக்கு வேந்தன்
பாணித்து வரவு தாழ்ப்பப் பாகசா தனனை வென்றோன்
நாணித்தன் சினமு மேரு நகைவரைச் செருக்கு மாறச்
சேணுற்ற சிகரந் தன்னிற் செண்டினா லடித்து நின்றான். (௨௫)

அடித்தலு மசையா மேரு வசைந்துபொற் பந்து போலத்
துடித்தது சிகர பந்தி சுரர்பயில் மாடப் பந்தி
வெடித்தன தருண பானு மண்டலம் விண்டு தூளாய்ப்
படித்தலை தெறித்தா லென்னப் பன்மணி யுதிர்ந்த வன்றே. (௨௬)

புடைவரைக் குலங்க ளெட்டும் புறந்தழீஇக் கிடக்குஞ் செம்பொன்
அடைகலோர் நான்கு நான்கு இடங்கரு மலர்ந்த நான்கு
தடமலர்ப் பொழிலு நான்கு தருக்களுஞ் சலித்த வம்மா
உடையவ னிடையூ றுற்றா லடுத்தவர்க் குவகை யுண்டோ. (௨௭)

புடைத்தபின் மேருத் தெய்வம் புடைக்குல வரையெட் டென்னப்
படைத்தவெண் டோளு நான்கு முடியுமேற் படுவெண் சோதி
யுடைத்தனிக் குடையுங் கொண்ட வுருவினோ டெழுந்து நாணிக்
கிடைத்தது கருணை வேந்தன் கிளர்சினந் தணிந்து நோக்கா. (௨௮)

இத்தனை வரவு தாழ்த்த தென்னென மேருத் தெய்வம்
வித்தக நம்பி கேட்டி மீனெடுங் கண்ணி யோடும்
பைத்தலை யரவம் பூண்ட பரனையிப் படிவங் கொண்டு
நித்தலும் போகிப் போகி வழிபடு நியமம் பூண்டேன். (௨௯)

இன்றுகேட் டிலையோ வையா வேந்திழை யொருத்தி காமந்
துன்றுமா கடலின் மோகச் சுழித்தலைப் பட்டு வெள்ளி
மன்றுளா டியபொற் பாதம் வழிபடன் மறந்து தாழ்த்து
நின்றுளே னினைய தீங்கி னிமித்தினா லடியும் பட்டேன். (௧௦)

திருவடி பிழைத்த தீங்கு தீர்த்தனை யிதனி லையன்
தருவதோ ருறுதி தானுந் தக்கதோர் கைம்மா றென்னால்
வருவது முண்டாங் கொல்லோ மற்றது நிற்க மன்றற்
பருவரை மார்ப வந்த பரிசென்கொல் பகர்தி யென்ன. (௧௧)

மன்னவன் வெறுக்கை வேண்டி வந்தன னென்றா னைய
உன்னது புலத்தோர்க் கேற்ப வுரைபடு மாற்ற தாய
பொன்னவிர் தேமா நீழற் புதைபடக் கிடக்குஞ் செம்பொன்
என்னவங் கையாற் சுட்டிக் காட்டிய தெரிபொற் குன்றம். (௧௨)

மின்னகு வேலான் முந்நீர் வேலையை வணக்கங் கண்டோன்
பொன்னறை மருங்கிற் போகிப் பொத்திய பாறை நீக்கித்
தன்னவா வளவிற் றூய தபனிய முகந்து மூடிப்
பின்னதுந் தன்ன தாகப் பெயரிலச் சினையுந் தீட்டா. (௧௩)

மின்றிகழ் மணிப்பூண் மார்பன் மீண்டுதன் றுணை யோடுந்
தென்றிசை நோக்கிப் பாகன் செலுத்தமான் றடந்தே ரூர்ந்து
பொன்றிகழ் வரையும் போக பூமியும் பிறவு நீத்து
நன்றிகொண் மனிதர் வைப்பி னண்ணுவா னண்ணு மெல்லை. (௧௪)

மாத்திமர் விராட மன்னர் மாளவர் தெலுங்க தேயப்
பார்த்திபர் பிறருந் தத்தம் பதிதொறும் வரவு நோக்கித்
தேர்த்திக ழனிகத் தோடுஞ் சென்றெதிர் முகமன் செய்யத்
தார்த்திரு மார்பன் கன்னித் தண்டமிழ் நாடு சார்ந்தான். (௧௫)

கன்னிப்பொன் னெயில்சூழ் செம்பொற் கடிநகர்க் கணிய னாகிப்
பொன்னிற்செய் திழைத்த நீள்கோ புரத்தினைக் கண்டு தாழ
உன்னித்தே ரிழிந்தெட் டோடைந் துறுப்பினாற் பணிந்தெ ழுந்து
வன்னிச்செஞ் சுடர்க்க ணெற்றி மன்னவன் மதுரை சார்ந்தான். (௧௬)

அறத்துறை யந்த ணாளர் துறந்தவ ரரன்றாள் பற்றிப்
புறத்துறை யகன்ற சைவ பூதியர் புனிதன் கோயிற்
றிறத்துறை யகத்துத் தொண்டர் திரண்டெதிர் கொள்ள முத்தின்
நிறத்துறை வையை நீத்து நெடுமதில் வாயில் புக்கான். (௧௭)

கொங்கலர் கோதை மாதர் குங்குமம் பனிப்பச் சிந்தும்
மங்கல மறுகி னேகி மறைகள்சூழ் கோயி லெய்தித்
தங்கணா யகனைச் சூழ்ந்து தாழ்ந்தெழுந் தேத்திப் போந்து
திங்களூர் குடுமிச் செல்வத் திருமணிக் கோயில் புக்கான். (௧௮)

பொன்மலைக் கடவு ளீந்த புண்ணிய நிதியை யந்த
நன்மலை மானக் கூப்பி நல்கிப்பல் குடியு மோம்பித்
தென்மலைக் கிழவன் றெய்வந் தென்புல வாண ரொக்கல்
தன்மனை விருந்து காத்துத் தருக்கினா னிருக்கு நாளில். (௧௯)

ஐவினை நடாத்து மீச னாணையா னடக்குங் கோளுஞ்
செய்வினைத் திரிவு மாறத் தென்னா டெங்கு மாரி
பெய்வினை யுடைய தாகிப் பெருவளம் பகிர்ந்து நல்க,
உய்வினை யுடைய வாகி யுயிரெலாந் தழைத்த வன்றே. (௬௦)

வேறு.

புவனியிம் முறையாற் புரந்தளித் தாரம் பூண்டபா ண்டியன்றிரு மகனுக்
கவனியே றிய வீரபாண் டியனென் றணிமுடி கவித்தர சளித்து
நவநிரதிசய பூரண வின்ப ஞானநோக் கருளிய மதுரைச்
சிவனடி நிழலிற் பிளப்பறப் பழைய தேசொடு நிறைந்துவீற் றிருந்தான். (௬௧)

மேருவைச்செண்டாலடித்தபடலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௧௧௫௨.

பதினாறாவது
வேதத்துக்குப்
பொருளருளிச்செய்தபடலம்.

உலம்பொரு தடந்தோ ளுக்கிரச் செழிய னுயரிய மேருமால் வரையைப், பொலம்புரி செண்டாற் புடைத்துவைப் பெடுத்துப் போந்தரு ளடைந்தவா புகன்றும், வலம்படு திணிதோள் வீரபாண் டியன்கோல் வழங்குநாண் மதுரையெம் பெருமான், புலம்பொரு முனிவர் தேறநால் வேதப் பொருளுணர்த் தியதிறம் புகல்வாம். (௧)

ஐம்பெரும் பூத நிலைதிரிந் தீரே ழடுக்கிய வுலகொடு மயன்மால்
உம்பர்வான் பதமு முதித்தவா றொடுங்க வருத்ததோ ரூழிவந் தெய்தச்
செம்பொருண் மறையு மொடுங்கிய வழிநாட் செஞ்சுடர்க் கடவுண்முன் மலரும்
வம்பவிழ் கமல மெனவரன் றிருமுன் மலர்ந்ததா லகிலமு மாதோ. (௨)

பண்டுபோற் பின்னு முத்தொழி னடாத்தப் பராபரஞ் சுடர்திரு வுள்ளங்
கொண்டுபோர்த் திகிரி வலவனைத் தரவிக் குரிசிறன் னாபிமுண் டகத்தில்
வண்டுபோற் பிரம னுதித்துமூ வுலகும் வரன்முறை படைக்குநா ணஞ்சம்
உண்டுபோற் றியவா னவர்க்குயி ரளித்த வும்பர்நா யகன்றிரு வாக்கில். (௩)

பிரணவ முதித்த ததனிடை வேதம் பிறந்தன நைமிசா ரணியத்
தருணிறை முனிவர் கண்ணுவர் கருக்க ராதியோ ரதிகரித் தவற்றின்
பொருணிலை தெரியா துள்ளமு முகமும் புலர்ந்தன ரிருப்பவப் போதத்
திருண்மல வலிவென் றவனர பதத னென்றொரு வேதியன் வந்தான். (௪)

வந்தவே தியனை யிருந்தவே தியர்கள் வரவெதிர்ந் திறைஞ்சிவே றிருக்கை
தந்தவே லையிலம் மறையவன் முனிவர் தமைமுக நோக்கியீ துரைப்பான்
பந்தவே தனைசா லவாவெறுப் பிகந்த பண்பின ராயினீர் நீவிர்
சிந்தைவே றாகி முகம்புலர்ந் திருக்குஞ் செய்தியா தெனவவர் சொல்வார். (௫)

மருட்படு மாயை கழிந்தவன் மொழிந்த மறைபயின் றுரைசெய்தே சிகனாற்
றிருட்படு மனத்தே மிருத்துமா லைய யாதுகூ றிதற்கெனக் கேட்ட
தெருட்படு மனத்தோன் செப்புவான் வேதஞ் செப்பிய சிவபரஞ் சுடரே
அருட்படி வெடுத்துப் பொருளையு முணர்த்து மல்லது சூழ்ச்சியா தறைவீர். (௬)

பண்ணிய தவத்தா லன்றியா தாலும் படுபொருள் பிறிதிலை தவமும்
புண்ணிய தலத்தி னல்லது பலியா புண்ணிய தலத்தினும் விழுப்பம்
நண்ணிய சைவ தலத்தினி தியற்றி னல்குமச் சிவதலங் களினும்
எண்ணிய வதிக தலத்தினி தியற்றி னிருந்தவ மெளிதுடன் பயக்கும். (எ)

அத்தகு தலமற் றியாதெனி னுலக மகிலமுந் தன்னுடம் பான
வித்தகன் சென்னிப் பன்னிரு விரன்மேல் விளங்கிய தலமது சீவன்
முத்தரா யெண்ணில் வானவர் முனிவோர் முயன்றுமா தவப்பய னடைந்து
சித்தமா சகன்று வதிவதென் றறநூல் செப்பிய மதுரையங் நகரில். (அ)

தெளிதரு விசும்பி னிழிந்ததோர் விமான சிகாமணி யருகுதென் மருங்கி
னொளிதரு பராரை வடகிழல் பிரியா முழுமுதல் வழிபடு மறவோர்க்
களிதரு கருணை முகமலர்ந் தளவா வருங்கலை யனைத்தையுந் தெளிவித்
தொளிதரு மனைய மூர்த்தியே நுங்கட் கோதிய மறைப்பொரு ளுணர்த்தும். (கூ)

அங்கவன் றிருமு னருந்தவ விரத மாற்றுவான் செல்லுமி னெனவப்
புங்கவ னருள்போல் வந்தமா தவன்பின் புனிதமா முனிவரு மங்கை
பங்கவன் மதுரைப் பதிபுகுந் தம்பொற் பன்மணிக் கோயில்புக் காழிச்
சங்கவன் கைபோல் வளைசெறி செழும்பொற் றாமரைத் தடாகநீ ராடி. (க0)

கரைகடந் துள்ளங் கடந்தவன் புந்தக் கடிதுபோய் நான்கிரு வெள்ளி
வரைகடம் பிடறிற் கிடந்ததோர் மேரு வரைபுரை விமானமேற் காணா
வுரைகடம் பொருளைக் கண்களாற் கண்டாங் கும்பர்தம் பிரானைநேர் கண்டு
திரைகடந் திடும்பே ரின்பவா ரியினுஞ் சேணிலத் திலும்விழுந் தெழுந்தார். (கக)

கைதலை முகிழ்த்துக் கரசர ணங்கள் கம்பிதஞ் செய்துகண் ணருவி
பெய்தலை வெள்ளத் தாழ்ந்துவாய் குழறிப் பிரமன்மா லின்னமுந் தேரு
மைதழை கண்ட வெள்ளிமன் றுடும் வானவர் நாயக வானோர்
உய்தர விடமுண் டமுதருள் புரிந்த வுத்தம போற்றியென் றேத்தா. (கஉ)

மறைப்பொருள் காணா துள்ளமா லுழந்து வாடிய வெமக்குநீ யேயந்
நிறைபொரு ளாகி நின்றனை யதற்கு நீயலாற் பொருள்பிறி தியாதென்
றிறைவனை யிறைவன் பங்கிலங் கயற்க ணிறைவியை யம்முறை யேத்தி
முறைவலஞ் செய்து வடகிழ லமர்ந்த மூர்த்திமுன் னெய்தினர் முனிவோர். (கங)

சீதளப் பளிக்கு மேனியும் பளிக்குச் செழுமலை பதித்தது பன்ன
பாதமுஞ் செவ்வாய் மலருமுக் கண்ணும் பங்கயச் செங்கர நான்கும்
வேதபுத் தகமு மமுதகும் பமுந்தன் விழிமணி வடமுமெய்ஞ் ஞான
போதமுத் திரையுந் தரித்ததோர் தனிமைப் போதன்முன் றாழ்ந்தெழுந் தேத்தா.

வடகிழ லமர்ந்த மறைமுதன் மேதா மனுவெழுத் திருபது மிரண்டுந்
திடமுற வரபத் தன்றனுற் றெளிந்து தேணிறை மதிமுத லுடைவிற்
படுமெதி யளவுந் தருப்பண மோமம் பார்ப்பன வுண்டிமுப் போதும்
அடைவுற நவன்று நோற்குமா தவர்மு னருமறைப் பொருள்வெளி வருமால். ()

வேறு.

மானமுனி வோரதி சயிப்பவட நீழல்
மோனவடி வாகிய முதற்குரவ னெண்ணான்
கூனமி லிலக்கண வுறுப்பகவை நானோன்
கானவொரு காளைமறை யோன்வடிவ மாகி. (கசு)

நீண்டதிரி மூண்டமழ னெற்றிவிழி பொத்தக்
காண்டகைய கண்டிகை வளைந்தொழுகு காதிற்
பூண்டகுழை கௌவிய பொலன்செய்பல தூசு
சேண்டவ ழிளங்கதிர் சிரித்திருள் சிதைப்ப. (கஎ)

உத்தரிய வெண்படம் வலம்பட வொதுங்க
முத்தவள நூலினொடு முத்தமிடை யிட்டு
வைத்தணியு மக்கவட மாலையெறி வாளாற்
பத்தரை மறைத்தமல பந்தவிருள் சிந்த. (கஅ)

கண்டிகை தொடுத்திரு கரத்தினொடு வாகு
தண்டினிடு மாலைவிட வாளரவு தள்ள
வெண்டுகிலி னுணவிரி கோவண மிருங்கிற்
றண்டரிய பட்டிகை வளைந்தொளி தழைப்ப. (கக)

வண்டுவரி பாடுவன போலமலர் பாத
புண்டரிக மேலுழல் சிலம்புகள் புலம்பத்
தொண்டரக மாசிரு டுணித்துமுடி சூட்டும்
முண்டக மலர்ப்புறம் விறற்கழன் முழங்க. (உ0)

ஏதமில் பவித்திரம் வலக்கர ணிமைப்பப்
போதம்வரை புத்தக மிடக்கையது பொற்ப
ஓதியுண ராதலறி யோலமிடும் வேதம்
பாதுகைக ளாகியிரு பாதமலர் சூட. (உக)

கள்ளமுள ரிக்குண்முரல் காளையறு கால
புள்ளொலியி னுவுமித மூம்புடை பெயர்ந்து
துள்ளவெழு வேதவொலி தொண்டர்செவி யாற்றால்
உள்ளவயல் புக்குவகை யொண்பயிர் வளர்ப்ப. (உஉ)

சீதமணி மூரறிரு வாய்சிறி தரும்ப
மாதவர்கள் காணவெளி வந்துவெளி நின்றான்
நாதமுடி வாயளவி னுன்மறையி னந்த
போதவடி வாகிநிறை பூரண புராணன். (உங)

வேறு.

வட்டவாண் மதிகண் டார்க்கு முவாக்கடன் மான மாண்ட
சிட்டரா முனிவர் காளைத் தேசிக வடிவ நோக்கி
ஒட்டறு வுவகை வெள்ள மேற்கொள வுருத்த கூற்றை
அட்டதா மரைதஞ் சென்னிக் கணிமல ராகத் தாழ்ந்தார். (உச)

அளவறு கலைகட் கெல்லா முறைவிட மாகி வேத
விளைபொரு ளாகி நின்ற வேதிய சரண மென்ற
வளைவுறு மனத்தி னுரைத் தேசிக வள்ள னோக்கிப்
பளகறு தவத்தீர் வேட்கை யாதெனப் பணிந்து சொல்வார். (உரு)

அடியரே முய்யு மாறு முலகெலா மளிக்கு மாறும்
படியிலா வரத்த வேதப் பயனருள் செய்தி யென்னக்
கொடியமா பாசந் தீர்ப்பான் குரவனம் முனிவ ரோடு
முடிவிலா விலிங்க முன்போய் மறைப்பொருண் மொழிவ தானான். (உசு)

அந்தணிர் கேண்மின் சால வருமறைப் பொருள்க ளெல்லாம்
மந்தண மாகு மிந்த மறைப்பொரு ளறித ருனே
நந்தலில் லாத போகப் பயனுக்கு நலியும் பாச
பந்தனே கழிக்கும் வீட்டின் பயனுக்குங் கருவி யாகும். (உஎ)

உத்தம சயம்புக் *துள்ளு முத்தம தரமாய் மேலாந்
தத்துவ மாகு மிந்தச் சுந்தர சயம்பு லிங்கம்
நித்தமாய் மறைகட் கெல்லா நிதானமாம் † பொருளா யுண்மைச்
சுத்தவத் துவித மான சுயம்பிர காச மாகும். (உஅ)

நிறைபராற் பரம்விஞ் ஞான நிராமய மென்று நூல்கள்
அறைபரம் பிரம மாகு மிதனுரு வாகு மேக
மறையிதன் பொருளே யிந்தச் சுந்தர வடிவா யிங்ஙன்
உறைசிவ லிங்க மொன்றே யென்பர்நூ லுணர்ந்த நல்லோர். (உகூ)

ஆகையான் மறையு மொன்றே யருமறைப் பொருளு மொன்றே
சாகையா லனந்த மாகித் தழைத்ததச் சாகை யெலலாம்
ஓகையா லிவனே யேத்து முலகுத யாதிக் ‡ கீந்த
ஏகனு னேயினுன் மூன்று மூர்த்தியா யிருந்த தன்றே. (கூ0)

மலர்மக னுகி மூன்று வையமும் படைத்து மாலாய்
அலேவற நிறுத்தி முக்க ணுதியா யழித்தம் மூவர்
தலைவனுய்ப் பரமா காச சரீரியாய் முதலீ றின்றித்
தொலைவருஞ் சோதி யாமிச் சுந்தர லிலிங்கந் தன்னில். (கூக)

வே று.

ஆதியி லான்ம தத்துவ மான வலர்மகன் பாகமு நடுவில்
நீதியில் விச்சா தத்துவ மான நெடியவன் பாகமு முடிவில்
ஓதிய சிவதத் துவமென லான வுருத்திர பாகமு முதிக்கும்
பேதியிம மூன்றி லெண்ணிறத் துவங்கள் பிறக்குமிம் மூன்றினு முறையால். ()

ஓதரு மகார முகாரமே மகார முதித்திடும் பிரணவம் விந்து
நாதமோ டுதிக்கும் வியத்ததா ரகததி னல்லகா யத்திரி மூன்று
பேதமாம் பதத்தாற் பிறக்குமிக் காயத் திரியிரு பேதமாம் பேதம்
யாதெனிற் சமட்டி வியட்டியென் றிரண்டு மேதுவாம் வேட்டவைக் கெல்லாம.

இன்னவை யிரண்டு மிவனருள் வலியா லீன்றநான் மறையயந் நான்கும்
பின்னிவ னருளா லளவில வான பிரணவ மாதிமந் திரமும்
அன்னவா றுண தாரகத் தகார மாதியக் கரங்களு முதித்த
சொன்னவக் கரத்திற் சிவாகம நூலிச் சுரவர னடுமுகத் துதித்த. (கூச)

கீட்டிசை முகத்தொன் றடுத்தநா லேந்திற் கிளைத்ததா லிருக்கது தென்பால்
ஈட்டிய விரண்டாம் வேதநூ றுருவோ டெழுந்தது வடதிசை முகத்தில்
நீட்டிய சாம மாயிர முகத்தா னிமிர்ந்தது குடதிசை முகத்தில்
நாட்டிய வொன்ப தருவொடு கிளைத்து நடந்தது நான்கதா மறையே. (கூரு)

அருமறை நால்வே றுகையால் வருண மாச்சிர மங்களு நான்காந்
தருமம்யா காதி கருமமு மறையின் றகைமையிற் றேன்றின மறையுள
கருமநூன் ஞான நூலென விரண்டாங் கருமநூ லிவனருச் சனைக்கு
வரும்வினே யுணர்த்து ஞானநூ லிவன்றன வடிவிலா வடிவினே யுணர்த்தும். ()

* சுவயம்பு - சயம்பு என மருவிற்று. † நிதானம் - ஆதிகாரணம்.
‡ உலகுதயாதி - பிரமா.

முதனுகர் நீராற் சினைகுழைத் தாங்கிம் முழுமுதற் கருத்துநல் லவியின்
பதமிவன் வடிவப் பண்ணவர் பிறர்க்குந் திருத்தியாம் பரனிவன் முகத்தின்
விதமுறு நித்த மாதிமூ வினைக்கும் வேண்டியாங் குலநவர் போகங்
கதிபெற வியற்றுஞ் சிவார்ச்சனை வினைக்குங் காரண மிச்சிவ கோசம். (௧௭)

மறைபல முகங்கொண் டலறிவா யிளைத்து மயங்கவே றகண்டபூ ரணமாய்
நிறைபரம் பிரம மாகுமிக் குறியைக் கருமநன் னெறிவழாப் பூசை
முறையினு ஞான நெறியினிப் பொருளை யருளினுன் முயக்கற முயங்கும்
அறிவினுந் தெளிவ துமக்குநா முரைத்த வருமறைப் பொருள்பிறர்க் கரிதால். ()

வேறு.

கருமத்தான் ஞான முண்டாங் கருமத்தைச்சித்த சுத்தி
தருமத்தா லிகந்த சித்த சுத்தியைத் தரும நல்கும்
அருமைத்தாந் தருமத் தாலே சாந்தியுண் டாகு மாண்ட
பெருமைத்தாஞ் சாந்தி யாலே பிறப்பதட் டாங்க யோகம். (௧௯)

கிரியையான் ஞானந் தன்னுற் கிளர்சிவ பத்தி பூசை
தரிசலஞ் சைவ லிங்க தாபனஞ் செய்த லீசற்
குரியமெய் யன்பர் பூசை யுருத்திர சின்னந் தாங்கல்
அரியதே சிகன்பாற் பத்தி யனைத்தையுந் தெரிய லாகும். (௨௦)

மறைவழி மதங்கட் கெல்லா மறைபிர மாணம் பின்சென்
றறைதரு மிருதி யெல்லா மவைக்கனு குணமா மின்ன
முறையினுன் மார்த்த மென்று மொழிவதம் மார்த்தஞ் சேர்ந்த
துறைகள்வை திகமா மேலாச் சொல்வதிச் சுத்த மார்க்கம். (௨௧)

வேறு.

தெருட்பெறு போகம் வீடுகா ரணமாய்ச் சிவமய மாமறைப் பொருளை
இருட்கெட வுரைத்தே மிப்பொருட் கதிக மில்லையிப் பொருளெலா முமக்கு
மருட்கெடத் தெளிவ தாகென வினைய வழிவழா மாதவர் புறத்தை
அருட்கையாற் றடவி யிலிங்கத்துட் புகுந்தா னருள்பழுத் தன்னதே சிகனே. ()

வேதத்துக்குப்பொருளருளிச்செய்தபடலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௧௧௯௪.

பதினேழாவது

மாணிக்கம்விற்றபடலம்.

சுகந்த வார்பொழின் மதுரையெம் பிரான்றன துணைத்தாள்
உகந்த வாவறு கன்னுவ முனிமுத லோதும்
அகந்த வாதபே ரன்பருக் கருமறைப் பொருளைப்
பகர்ந்த வாறிது மாணிக்கம் பகர்ந்தவா பகர்வாம். (௧)

அன்ன நாள்வயின் வீரபாண் டியற்கணங் கனைய
மின்ன ரூருளாம் போகமும் விளைநில மனைய
பொன்ன னூர்பெறு காளைய ரைங்கனைப் புத்தேள்
என்ன வீறினர் வான்பயிர்க் கெழுகளை யென்ன. (௨)

பின்ன ரும்பெறற் குமரனைப் பெறுவது கருதி
மன்ன னுங்குலத் தேவியுங் கயற்கணி மணாளன்
றன்னை நோக்கியட் டமிசதுர்த் தசிமதி வாரம்
இன்ன நோன்புநோற் றொழுகுவா ரிறைவனின் னருளால். (ங)

சிறிது நாள்கழிந் தகன்றபின் கங்கையிற் சிறந்த
மறுவி லாவட மீன்புரை கற்பினாள் வயிற்றிற்
குறிய வாலவித் தங்குரம் போன்றொரு குமரன்
நிறையு நீருல கருட்குடை நிழற்றவந் துதித்தான். (ச)

அத்த னிச்சிறு குமரனுக் ககங்களி சிறப்ப
மெய்த்த நூன்முறை சாதக வினைமுதல் வினையும்
வைத்த ஞான்பொலி வெய்துநாண் மன்னவ னூழ்வந்
தொத்த நாள்வர வேட்டைபுக் குழுவைகோட் பட்டான். (ரு)

வேங்கை வாய்ப்படு மீனவன் விண்விருந் தாக
வாங்கு நூன்மருங் கிறக்கர மார்பெறிந் தாரந்
தாங்கு கொங்கைசாந் தழிந்திடத் தடங்கண்முத் திறைப்ப
ஏங்க மாதர்பொன் னகருளார் யாவரு மிரங்க. (சா)

மற்ற வேலைகா மக்கிழத் தியர்பெறு மைந்தர்
அற்ற நோக்கியீ தமையமென் றானைமா வாதி
உற்ற பல்பிற பொருணிதி யொண்கல னோடுங்
கொற்ற மோலியுங் கவர்ந்தனர் கொண்டுபோய் மறைந்தார். (எ)

மன்ன னாணையா றொழுகிய மந்திரக் கிழவர்
மின்னு வேலிளங் குமரனைக் கொண்டு விண்ணடைந்த
தென்னர் கோமகற் கிறுதியிற் செய்வினை நிரப்பி
அன்ன காதலற் கணிமுடி சூட்டுவா னமைந்தார். (அ)

நாடிப் பொன்னறை திறந்தனர் நவமணி மகுடந்
தேடிக் கண்டிலர் நிதிசில கண்டிலர் திகைத்து
வாடிச் சிந்தைநோ யுழந்திது மாற்றவர் கூட்டுண்
டோடிப் போயின தாகுமென் றுணர்ந்திது நினைவார். (கூ)

வேறு மாமுடி செய்துமா லென்னினோ விலைமிக்
கேறு மாமணி யிலையர சிருக்கையின் றின்றேற்
றேறு நீருல கலையுமென் செய்வதிங் கென்னா
ஆறு சேர்சடை யாரருள் காண்டுமென் றமைச்சர். (க0)

கரைசெ யாப்பெருங் கவலைசூழ் மனத்தராய்க் கறங்கும்
முரசு கண்படாக் கடிமனை முற்றநீத் தருமை
அரசி ளந்தனிக் கொழுந்தினைக் கொண்டுபோ யம்பொன்
வரைசெய் கோபுர வாயின்முன் வருகுவார் வருமுன். (கக)

ஏற்ற தும்புகோ வணவுடை யிடம்படப் பிறங்கத்
துற்ற பல்கதிர் மணிப்பொதி சுவன்மிசைத் தூங்க
மற்ற டம்புய வரைமிசை வரம்பிலா விலைகள்
பெற்ற வங்கதம் பரிதியிற் பேர்ந்துபேர்ந் திமைப்ப. (கஉ)

மந்தி ரப்புரி நாலது வலம்படப் பிறழ
இந்தி ரத்திரு வில்லென வாரமார் பிலங்கச்
சுந்த ரக்குழை குண்டலந் தோள்புரண் டாடத்
தந்தி ரத்தரு மறைகழி தாணிலந் தோய. (கங)

வேறு.

பொன்னவிர்ந் திலங்குகோ புரமுன் போதுவார்
முன்னவர் துனிவுகூர் முன்ன நீக்கிய
தென்னவர் குலப்பெருந் தெய்வ மாகிய
மன்னவர் வணிகராய் வந்து தோன்றினர். (கச)

வந்தவ ரெதிர்வரு வாரை மம்மர்கொள்
சிந்தைய ராய்வரு செய்தி யாதென,
முந்தையில் வினைவெலா முறையிற் கூறினர்க்
கெந்தையாம் வணிகரீ தியம்பு வாரரோ. (கரு)

என்பட ரெய்துகின் றீர்க ளென்வயின்
ஒன்பது மணிகளு முள்ள வாலவை
பொன்பதி னாயிர கோடி போனவென்
றன்புற மணியெலா மடைவிற் காட்டுவார். (கசு)

இருந்தனர் கீழ்த்திசை நோக்கி யிட்டதோர்
கருந்துகி னடுவுமிந் திராதி காவலர்
அருந்திசை யெட்டினு மடைவிற் செம்மணி
பெருந்தண்முத் தாதியெண் மணியும் பெய்தரோ. (கஎ)

இம்மணி வலனுடற் சின்ன மென்னவக்
கைம்மறி கரந்தவர் கூறக் கற்றநூற்
செம்மதி யமைச்சரச் செம்மல் யாரவன்
மெய்ம்மணி யாயதென் விளம்பு கென்னவே. (கஅ)

மேவரும் வலனெனு மவுணன் மேலைநாள்
மூவரின் விளங்கிய முக்கண் மூர்த்திசெஞ்
சேவடி யருச்சனைத் தவத்தின் செய்தியால்
யாவது வேண்டுமென் றிறைவன் கூறலும். (கக)

தாழ்ந்துநின் றியம்புமியான் சமரில் யாரினும்
போழ்ந்திற வாவரம் புரிதி யூழ்வினை
சூழ்ந்திறந் தாலென்மெய் துறந்த மாந்தரும்
வீழ்ந்திட நவமணி யாதல் வேண்டுமால். (உ0)

என்றுவேண் டலும்வர மீச னல்கினன்
அன்றுபோ யமர்குறித் தமரர் கோனொடு
சென்றுபோ ராற்றலுந் தேவர் கோனெதிர்
நின்றுபோ ராற்றல னீங்கிப் போயினன். (உக)

தோற்றவா றுடைவன் மீண்டு சூழ்ந்தமர்
ஆற்றினும் வெல்லரி தழிவி லாவரம்
ஏற்றவ னுதலா லிவனைச் சூழ்ச்சியாற்
கூற்றினா ரேற்றுதல் குறிப்பென் றுன்னியே. (உஉ)

விடங்கலுழ் படைக்கல னின்றி விண்ணவர்
அடங்கலுந் தழீஇக்கொள வடுத்துத் தானவ
மடங்கலை வருஞெகண நோக்கி வானவக்
கடங்கலுழ் யானைபோற் கரைந்து கூறுவான். (உ௩)

விசையநின் றோள்வலி வென்றி வீக்கமெத்
திசையினும் பரந்ததச் சீர்த்தி நோக்கியுண்
ணசையறு மகிழ்ச்சியா னல்கு வேனுனக்
கிசையவேண் டியவரம் யாது கேளென. (உ௪)

கடிபடு கற்பக நாடு காவலோன்
றொடியுளர் செவித்துளை நுழையத் தானவன்
நெடியகை புடைத்துட னிமிர்ந்து கார்படும்
இடியென நகைத்திகழ்ந் தினைய கூறுவான். (உ௫)

வேறு.

நன்றிது மொழிந்தா யாரு நகைக்கநீ யெனைவெங் கண்ட
வென்றியு மதனாற் பெற்ற புகழுநின் வீறு பாடும்
இன்றுநின் போரிற் காணப் பட்டவே யிசைபோ யெங்கும்
நின்றதே யிதுபோ னின்கை வண்மையு நிற்ப தன்றே. (உ௬)

ஈறிலா னளித்த நல்ல வரமெனக் கிருக்க நின்பால்
வேறுநான் பெறுவ துண்டோ வேண்டுவ துனக்கியா தென்பாற்
கூறுநீ யதனை யின்னே கொடுக்கலே னாகி னின்போற்
பூறுவீழ் களத்திற் றோற்ற பழிப்புகழ் பெறுவ னென்றான். (உ௭)

மாதண்ட வவுணன் மாற்ற மகபதி கேட்டு வந்து
கோதண்ட மேருக் கோட்டிக் கொடும்புரம் பொடித்தான் வெள்ளி
வேதண்ட மெய்தி யாஙகோர் வேள்வியான் புரிவ னனப்
போதண்டர்க் கூட்ட வாவாய்ப் போதுவாய் வல்லையென்றான். (உ௮)

அன்றொரு தவத்தோ னென்பு வச்சிர மொன்றே யாக
ஒன்றிய கொடையாற் பெற்ற புகழுடம் பொன்றே யென்போல்
வென்றியி னாலும் வீயா மெய்யெலா மணிக ளாகப்
பொன்றிய கொடையி னாலும் புகழுடம் பிரண்டுண் டாமே. (உ௯)

மேவல னல்லை நீயே நட்டவன் மேலை வானோர்
யாவரு மருந்து மாற்று லறம்புக ழெனக்கே யாக
ஆவுரு வாதி யென்று னன்னதே செய்வே னென்றான்
ஈவதே பெருமை யன்றி யிரக்கின்ற திழிபே யன்றே. (௩0)

அதற்கிசைந் தவுணர் வேந்த னமரர்வேந் தனைமுன் போக்கி
மதர்க்கடுங் குருதிச் செங்கண் மைந்தனுக் கிறைமை யீந்து
முதற்பெருங் கலையாம் வேத மொழிமர பமைந்த வானுய்ப்
புதர்க்கடு வேள்விச் சாலைப் புறத்துவந் திறுத்து நின்றான். (௩௧)

வாய்மையான் மாண்ட நின்போல் வள்ளல்யா ரென்று தேவர்
கோமகன் வியந்து கூறத் தருக்குமேற் கொண்டு மேரு
நேமியோ டிகலும் விந்த வரையென நிமிர்ந்து வேள்விக்
காமெனை யூபத் தோடும் யாமினென் றடுத்து நின்றான். (௩௨)

யாத்தனர் தருப்பைத் தாம்பா லூர்ணை யால் * யாத்த சிங்கப்
போத்தென நின்றான் வாயைப் புதைத்துயிர்ப் படங்க வீட்டி
மாய்த்தனர் மாய்ந்த வள்ளல் வலனுமந் தார மாரி
தூர்த்திட விமான மேறித் தொல்விதி யுலகஞ் சேர்ந்தான். (கங)

மணித்தலை மலையின் பக்க மாய்த்தவன் வயிர வேலாற்
பிணித்துயிர் செகுத்த வள்ளற் பெருந்தகை யாவை வேதம்
பணித்திடும் வபையை வாங்கிப் படரெரி சுவைமுன் பார்க்கக்
குணித்தவா றுடர்க் கூட்டிக் கோதிலா வேள்வி செய்தான். (கச)

அத்தகை யாவின் சோரி மாணிக்க மாம்பன் முத்தம்
பித்தை † வை டூய மென்பு வச்சிரம் பித்தம் பச்சை
நெய்த்தவெண் ணிணங்கோ மேதந் தசைதுகிர் நெடுங்க ணீலம்
எய்த்தவை புருட ராக மிவைநவ மணியின் றோற்றம். (கரு)

இவ்வடி வெடுத்துத் தோன்றி யிருண்முகம் பிளப்பக் காந்தி
தைவரு மணியொன் பானுஞ் சார்விட நிறங்கள் சாதி
தெய்வத மொளிமா செள்ளிச் சோதனை செய்து தேசு
மெய்வர வணிவோ ரெய்தும் பயனிவை விதியாற் கேண்மின். (கசு)

வேறு.

வாளவிரு மாணிக்கங் கிரேதமுத லுகநான்கும் வழியே மக்கங்
காளபுரந் தும்புரஞ்சிங களமிந்நான் கிடைப்படுமக் கமல ராகம்
ஆளுநிற மொன்பதர விந்தமா துளம்பூவித் தழல்கல் லாரங்
கோளரிய கச்சோத நரந்தநறும் பலந்தீபங் கோப மென்ன. (கஎ)

இந்நிறத்த பொதுவாய மாணிக்க மறையவர்முன் னியலுற் சாதி
தன்னியல்பாற் சாதரங்கங் குருவிந்தஞ் சௌகந்தி கங்க வாங்கம்
என்னுமிவற் றுற்சிறந்து நானகரு மிவ்வடைவே யிந்நான் கிற்குஞ்
சொன்னவொளி பத்திருநான் கிருமூன்று நான்கவையுஞ் சொல்லக் கேண்மின்.

சாதரங்க நிறங்கமலங் கருநெய்த லிரவியொளி தழல்கச் சோதம்
மாதுளம்போ ததன்வித்துக் கார்விளக்குக் கோபமென வகுத்த பத்தும்
மேதகைய குருவிந்த நிறங்குன்றி முயற்குருதி வெள்ள லோத்தம்
போதுபலா சலர்திலகஞ் செவ்வரத்தம் விதார ‡ மெரி பொன்போ லெட்டு.

களிதருசௌ கந்திகத்தி னிறமிலவம் போதுகுயிற் கண்ண சோகந்
தளிரவிர்பொன் செம்பஞ்சி யைவண்ண மெனவாறு தருக வாங்க
வொளிகுரவு குசும்பைமலர் செஙகல்கொவ்வைக்கனியென் றொருநான் கந்த
மிளிர்பதும ராகத்தைப் பொதுமையினுற் சோதிக்க வேண்டு மெல்லை. (உ0)

திண்ணியதாய் மேல்கீழ்சூழ் பக்கமுற வொளிவிடுதல் செய்தாற் செவ்வே
அண்ணியவுத் தமமுதனமூன் றுமென்பர் சாதரங்க மணிவோர் விச்சை
புண்ணியவான் கன்னியறு சுவையன்ன முதலான புனித தானம்
பண்ணியதும் பரிமேத யாகமுதன் மகம்புரிந்த பயனுஞ் சேர்வர். (உக)

குருவிந்தந் தரிப்பவர்பார் முழுதுமொரு குடைநிழலிற் குளிப்ப வாண்டு
திருவிந்தை யுடனிருப்பர் சௌகந்தி கந்தரிப்போர் செல்வங் கீர்த்தி
மருவிந்தப் பயனடைலர் காவாங்கந் ¶ தரிப்போர்தம் மனையிற் பாலும்
பெருவிந்த மெனச்சாலி முதற்பண்ட முடன்செல்வப் பெருக்கு முண்டாம். ()

---

* ஊர்ணை - சிலம்பிநூல. † பித்தை - மயிர்.
‡ விதாரம் - முள்ளிலவு. ¶ கவாங்கம் காவாங்கம் என நீண்டது.

எள்ளியிடு குற்றமெலா மிகந்துகுண னேற்றொளிவிட் டிருள்கால் சித்துத்
தள்ளியவிச் செம்பதும ராகமது புனைதக்கோர் தம்பா லேனைத்
தெள்ளியமுத் துள்ளிட்ட பன்மணியும் வந்தோங்குஞ் செய்யா ளோடும்
ஒள்ளியநற் செல்வமதற் கொப்பதெடும் பாற்கடலி னோங்கு மாலோ. (௪௩)

வேறு.

பிறநிறச் சார்பு புள்ளி புள்ளடி பிறங்கு கீற்று
மறுவறு தராச மென்ன வகுத்தவைங் குற்றந் தள்ளி
அறைதரு பண்பு சான்ற வரதன மணியும் வேந்தன்
செறுநர்வா னூற்ற மின்றிச் செருமகட் கன்ப னவான். (௪௪)

குறுநிலக் கிழவ னேனு மவன்பெருங் குடைக்கீழ்த் தங்கி
மறுகுநீர் ஞால மெலலாம் வாழுமற் றவனைப் பாம்பு
தெறுவிலங் கலகைப் பூதஞ் சிறுதெய்வம் வறுமை நோய்தீக்
கறுவுகொள் கூற்றச் சீற்றங் கலங்கிட வாதி யாவாம். (௪௫)

முன்னவ ரென்ப கற்றோர் வச்சிர முந்நீர் முத்தம்
மன்னவ ரென்ப துப்பு மாணிக்கம் வணிக ரென்ப
மின்னவிர் புருட ராகம் வயிடூயம் வெயிற்கோ மேதம்
பின்னவ ரென்ப நீல மரகதம் பெற்ற சாதி. (௪௬)

பார்த்திபர் மதிக்கு முத்தம் பளிங்கன்றிப் பச்சை தானுஞ்
சாத்திகந் துகிர்மா ணிக்கங் கோமேதந் தாமே யன்றி
மாத்திகழ் புருட ராகம் வயிடூயம் வயிரந் தாமும்
ஏத்திரா சதமா நீலந் தாமத மென்ப ராய்ந்தோர். (௪௭)

இனையவை யளந்து கண்டு மதிக்குநா ளெழுமான் பொற்றேர்
முனைவனுண் முதலா வேழின் முறையினுற் பதும ராகங்
கனைகதிர் முத்தந் துப்புக் காருடம் புருட ராகம்
புனையொளி வயிர நீல மென்மனூர் புலமை சான்றோர். (௪௮)

வெய்யவன் கிழமை தானே மேதக மணிக்கு மாகும்
மையறு திங்க டானே வயிடூய மணிக்கு மாகும்
ஐயற விவையொன் பானு மாய்பவ ரகம்பு றம்பு
துய்யரா யறவோ ராய்முன் சொன்னநா ளடைவே யாய்வர். (௪௯)

அல்லியம் பதுமஞ் சாதி யரத்தவா யாம்பல் கோடல்
வல்லிசேர் மௌவற் போது நூற்றிதழ் மரைகா லேயம் †
மெல்லிதழ்க் கழுநீர் பேழ்வாய் வெள்ளைமந் தாரமின்ன
சொல்லிய முறையால் வண்டு சூழத்தன் முடிமேற் சூடி. (௫௦)

தலத்தினைச் சுத்தி செய்து தவிசினை யிட்டுத் தூய
நலத்துகில் விரித்துத் தெய்வ மாணிக்க நடுவே வைத்துக்
குலத்தமுத் தாதி யெட்டுங் குணதிசை முதலெண் டிக்கும்
வலப்பட முறையே பானு மண்டல மாக வைத்து. (௫௧)

அன்புறு பதும ராக மாதியா மரத னங்கள்
ஒன்பதுங் கதிரோ னாதி யொன்பது கோளு மேற்றி
முன்புரை கமலப் போது முதலெனன்பான் மலருஞ் சாத்தி
இன்புற நினைந்து பூசை யியன்முறை வழாது செய்தல். (௫௨)

---

* ஐயம் ஐ எனக் கடைக்குறைந்தது. † காலேயம் - மரமஞ்சண்மலர்.

தக்கமுத் திரண்டு வேறு தலசமே சலச மென்ன
இக்கதிர் முத்தந் தோன்று மிடன்பதின் மூன்று சங்கம்
மைக்கரு முகில்வேய் பாம்பின் மத்தகம் பன்றிக் கோடு
மிக்கவெண் சாலி யிப்பி மீன்றலை வேழக் கன்னல். (௫௩)

கரிமருப் பைவாய் மான்கை கற்புடை மடவார் கண்டம்
இருசிறைக் கொக்கின் கண்ட மெனக்கடை கிடந்த மூன்றும்
அரியன வாதிப் பத்து நிறங்களு மணங்குந் தங்கட்
குரியன நிறுத்த வாறே யெனவு முரைப்பக் கேண்மின். (௫௪)

மாடவெண் புறவின் முட்டை வடிவெனத் திரண்ட பேழ்வாய்க்
கோடுகொள் முத்தம் வெள்ளை நிறத்தன கொண்மூ முத்தம்
நீடுசெம் பரிதி யன்ன நிறத்தது கிளைமுத் தாலிப்
பீடுசா னிறத்த ராவின் பெருமுத்த நீலத் தாமால். (௫௫)

ஏனமா வாரஞ் சோரி யீர்ஞ்சுவைச் சாலி முத்தம்
ஆனது பசுமைத் தாகும் பாதிரி யனைய தாகும்
மீனது தரளம் வேழ மிரண்டினும் விளையு முத்தந்
தானது பொன்னின் சோதி தெய்வதஞ் சாற்றக் கேண்மின். (௫௬)

பான்முத்தம் வருணன் முத்தம் பகன்முத்தம் பகலோன் முத்தம்
மான்முத்த நீல மூத்த மாசறு குருதி முத்தங்
கான்முத்தம் பசிய முத்தங் காலன்றன் முத்தந் தேவர்
கோன்முத்தம் பொன்போன் முத்தங் குணங்களும் பயனுஞ் சொல்வாம். (௫௭)

உடுத்திர ளனைய காட்சி யுருட்சிமா சின்மை கையால்
எடுத்திடிற் றிண்மை பார்வைக் கின்புறல் புடித மென்ன
அடுத்திடு குணமா றின்ன வணியின்மூ தணங்கோ டின்மை
விடுத்திடுந் திருவந் தெய்தும் விளைந்திடுஞ் செல்வம் வாழ்நாள். (௫௮)

மாசறு தவத்தோ னென்பும் வலாசுர னென்பும் வீழ்ந்த
கோசல மாதி நாட்டிற் பட்டது குணத்தான் மாண்ட
தேசதா யிலேச தாகித் தெள்ளிதா யளக்கி னெல்லை
வீசிய விலைய தாகி மேம்படு வயிரந் தன்னை. (௫௯)

குறுநிலத் தரசுந் தாங்கிற் குறைவுதீர் செல்வ மெய்தி
உறுபகை யெறிந்து தங்கோன் முழுதுல கோச்சிக் காக்கும்
வறுமைநோய் விலங்கு சாரா வரைந்தநா ளன்றிச் செல்லுங்
கறுவுகொள் கூற்றம் பூதங் கணங்களு மணுங்கு செய்யா. (௬௦)

மாமணி மரபுக் கெல்லாம் வயிரமே முதன்மைச் சாதி
ஆமென வுரைப்பர் நூலோ ரதிகம்யா தென்னி னேனைக்
காமரு மணிகட் கெல்லாந் தமரிடு கருவி யாமத்
தூமணி தனக்குந் தானே துளையிடுங் கருவி யாகும். (௬௧)

மரகதத் தோற்றங் கேண்மின் வலாசுரன் பித்தந் தன்னை
இரைதமக் காகக் கௌவிப் பறந்தபுள் ளீர்ந்தண் டில்லித்
தரைதனிற் சிதற வீழ்ந்து தங்கிய தோற்ற மாகும்
உரைதரு தோற்ற மின்னும் வேறுவே றுள்ள கேண்மின். (௬௨)

---

* புடிதம் - காந்தி வீசுதல்.

விதிர்த்தவே லனைய வாட்கண் வினதைமா தருணச் செல்வன்
உதித்தவான் முட்டை யோட்டை யுவணவேற் றரையில் யாப்பங்
கதிர்த்தவோ டரையிற் றப்பி வீழ்ந்தொரு கடல்சூழ் வைப்பில்
உதித்தவா றுருகு மின்னு முண்டொரு வகையாற் றோற்றம். (௬௩)

முள்ளரை முளரிக் கண்ணன் மோகினி யணங்கா யோட
வள்ளரை மதியஞ் சூடி மந்தர வரைமட் டாகத்
துள்ளரி யேறு போலத் தொடர்ந்தொரு விளையாட் டாலே
எள்ளரி தாய செந்தீ யிந்தியக் கலனஞ் செய்தான். (௬௪)

அப்பொழு தமல வித்தி லரிகர குமரன் கான
வைப்புறை தெய்வத் தோடும் வந்தன னந்தவிந்து
துப்புறு கருடன் கௌவிக் கடலினுந் துருக்க நாட்டும்
பப்புற விடுத்த வாறே பட்டது கலுழப் பச்சை. (௬௫)

வேறு.

காடமே சுப்பிரமே காளமெனக் குணமூன்றாங் கருடப் பச்சைக்
கீடறுகி னிதழ்நிறத்த காடமது சாதியினு விருவே றுருகுஞ்
சாடரிய சகுணமெனச் சதோட மென வவையிரண்டிற் சகுண மாறும்
பீடுபெறு காடமொடு முல்லசிதம் பேசலம்பித் தகமே முத்தம். (௬௬)

புல்லரிய பிதுகமென விவையாறிற் காடமது புல்லின் வண்ணம்
உல்லசித மெலிதாகும் பேசலமே குளச்செநெலொண் டரளம் போலும்
அல்லடரும் பித்தகமே பசுங்கிளியின் சிறைநிறத்த தாகு முத்தங்
குல்லைநிறம் பிதுகமரை யிலையினிறஞ் சதோடத்தின் குணனைந் தாகும். (௬௭)

தோடலே சாஞ்சிதமே துட்டமே தோடமூர்ச் சிதமே வெய்ய
தோடலே சத்தினொடு சூழ்மந்த தோடமெனத் தொகுத்த வைந்தில்
தோடலே சாஞ்சிதஞ்சம் பிரவிலையா மலரியிலை துட்ட நீலத்
தோடதாம் புல்லிநிறந் தோடமூர்ச் சிதமுளரி தோட லேசம். (௬௮)

மந்ததோ டங்கலப மயிலிறகி னிறமாமிவ் வகுத்த தோடஞ்
சிந்தவா றுதகுண மணியணிவோர் நாற்கருவிச் சேனை வாழ்நாள்
உந்தவாழ் வார்வலன்க ணீலமிரண் டரன்கண்டத் தொளிவிட் டோங்கும்
இந்திரநீ லந்தான்மா நீலமென * வேறிரண்டெண் டின்னு நீலம். (௬௯)

முந்தியவிந் திரநீலம் விச்சுவரூ பனைமகவான் முடித்த நாளின்
நந்தியடு பழிதவிர்ப்பான புரியுமகப் பரிமகத்தி னறிய தூமம்
முந்தியரும் பரியிமையா நாட்டநுழைந் தளிசேற்றி னொழுகும் பீளை
சிந்தியவாற் றிடைப்படுமொன் றிந்திரவின் னீலமெனத் திகழு நீலம். (௭௦)

சஞ்சையாம் பகற்கடவுண் மனைவியவன் கனலுடலந் தழுவ லாற்றா
தஞ்சுவா டன்னிழலைத் தன்னுருவா நிறுவிவன மடைந்து நோற்க
விஞ்சையா லறிந்திரவி பின்றொடர மாப்பரியா மின்னைத்†தானுஞ்
செஞ்செவே வயப்பரியாய் மையல்பொரு திந்தியத்தைச் சிந்தி னானே (௭௧)

அவைசிதறும் புலந்தோன்று நீலமா நீலமிவை யணிவோர் வானோர்
நவையறுசீர் மானவரிந் நகைநீலஞ் சாதியினா னல்வே றந்தக்
கவலரிய வெள்ளைசிவப் பெரிபொன்மை கலந்திருக்கிற் கரிதாய் முற்றுங்
தவலரிதா யிருக்கிலிரு பிறப்பாளர் முதன்முதனாற் சாதிக் காகும். (௭௨)

---

* மாநீல மெனுமிரண்டி லிரணடிந்த நீலம் எனறும் பாடம்.
† இச்சரிதத்தைக் காசிகாண்டம் சனியுலகங்கண்ட அத்தியாயத்திற்காண்க.

இலங்கொளிய விந்நீல மெய்ப்படுப்போ மங்கலஞ்சேர்ந் திருப்பர் ரேனை
அலங்குகதிர் நீலத்திற் பெருவிலையா யிரப்பத்தி னளவைத் தாகித்
துலங்குவதான் பாற்கடத்தி னூறுகுணச் சிறப்படைந்து தோற்றுஞ் சோதி
கலங்குகட லுடைவைப்பி லரிதிந்த விந்திரனீப்பேர்க் கரிய நீலம். (எக)

மைந்துறுசெம் மணிமுத்து வாள்வயிரம் பச்சையொளி வழங்கு நீலம்
ஐந்திவைமேற் கோமேத முதற்பவள மீறுக வறைந்த நான்கும்
நந்தொளிய வேனுமவை சிறுவேட்கை பயப்பவழ னகுசெங் குஞ்சி
வெந்நுறுகண் வலனிணங்கள் சிதறுமிடைப் படுவனகோ மேத மென்ப. (எச)

உருக்குநறு நெய்த்துளிதேன் றுளிநல்லான் புண்ணியநீ ரொத்துச் சேந்து
செருக்குபசும் பொன்னிறமும் பெற்றுமெலி தாய்த்தூய்தூய்த் திண்ணி தாகி
இருக்குமது தரிக்கினிருட் பாவம்போம் பரிசுத்தி யெய்தும் வென்றித்
தருக்குவலன் கபம்விழுந்த விடைப்புருடராகமொளி தழையத் தோன்றும். ()

தாழ்ந்தபிலத் திழிந்தெரிபொற் கண்ணவுண னுயிர்குடிக்குந் தறுகட் புன்றி
போழ்ந்தமுழை வாய்திறந்து திசைசெவிடு படநகைத்துப் பொன்போற் கக்கி
வீழ்ந்தகபம் படுதீவிற் படுமுச்சி வட்டமாய் மெலிதாய்ப் பொன்போற்
சூழ்ந்தொளிவிட்டவிர்தழல்போற்றெளிவெய்திமனங்கவர்ந்துதோற்றஞ்செய்யும்.

இந்தமணி பாரியாத் திரகிரியிற் கொடுமுடியா யிலங்குந் தெய்வ
மந்தரமால் வரைப்புறஞ்சூழ் மேகலையா மயணிந்த மணியி னுலே
அந்தரநா டவனகரு மரசிருப்பு மண்டபமு மமைத்தா னிந்தச்
சந்தமணி தரிப்பவரே தரியார்வெந் நிடவாகை தரிக்க வல்லார். (எஎ)

வலன்மயிராம் வயிடூ மிளாவிருத கண்டத்தில் வந்து தோன்றிப்
பலர்புகழுங் கோரக்க மகதஞ்சிங் களமலயம் பார சீகம்
இலகுதிரி கூடாதி தேயங்கள் பிறதீப மெங்குந் தோற்றும்
அலைகடலும் படுமிறுதிக் காரிடிக்கும் போதுநிற மதற்கியா தென்னில். (எஅ)

கழையிலைகார் மயிலெருத்தம் வெருகின்கண் ணிறத்ததாய்க் கனத்ததாகி
விழைவுதரு தெளிதாகித் திண்ணிதாய் மெலிதாகி விளங்கு மீதில்
அழகுபெற வலமிடமேல் கீழொளிவிட் டனமுறையே யறவோ ராதித்
தழைவுறுநாற் சாதிகளாந் தினமிதனைப் பூசித்துத தரிக்க சான்றோர். (எகூ)

வலத்தவுணன் றசைவீழ்ந்த வழிபடுதுப் பயன்சநதி வடிவ மாத்தென்
புலத்தவரை விதிக்குமிடத் தவனுடன்மா சிழிபுலத்தும் புயல்போல் வண்ணன்
வலத்தமது கைடவரைக் குறைகுருதி வழிநிலத்தும் மகவான் வெற்பின்
குலத்தையிற கரிசோரி சிதறிடத்தும் வந்துகுடி கொண்டு தோன்றும். (அ0)

அவ்வழியிற் படுபவள முருக்கம்பூப் பசுங்கிளிமூக் கலர்ந்த செவ்விச்
செவ்வரத்த மலர்கொவ்வைக் கனிபோலுங் குணங்குற்றந் திருகிக் கோடல்
எவ்வமுறப் புழுவரித்தன் முகமொடிதல் பெரும்பானு மிப்பூ ணேந்தல்
பெய்வளையார் தமக்கேயாந் தரிக்கின்மகப் பேறுமுதற் பேறுண் டாகும். (அக)

இரவியெதி ரெரியிறைக்குங் கல்லுமதி யெதிர்செழுநீ ரிறைக்குங் கல்லும்
உரையிடுமொன் பதிலொன்றி னுட்கிடையாய்க் கிடக்குமெண வொன்பான் வேறு
மரபுரைத்து வணிகரே ருகியவான வரேறு வடபா னோக்கிப்
பரவியிருந் தருச்சித்து மணிகைக்கொண் டெதிர்மதுரைப் பரனை நோக்கா. ()

* சந்திவடிவமாத்தெனபுலத்தவரை விதித்தமை கூர்மபுராணம் பலவகைத் தோற்ற முரைத்த அத்தியாயத்தும், மதுகைடவரை அழித்தமை விநாயகபுராணம் விண்டுசெடக்கரமனுட்டித்தபடலத்தும் காண்க.

அஞ்சலிசெய் தகநோக்கா விக்குமரற் களவிறந்த வாயுள் செல்வம்
விஞ்சுகவென் றளித்தருள விறைமகனும் விண்ணிழிந்த விமான நோக்கிச்
செஞ்சரணம் பணிந்திருகைத் தாமரையும் விரித்தேற்றான் செல்வ நாய்கர்
மஞ்சனையும் புடைநின்ற வமைச்சரையு நோக்கிமுக மலர்ந்து சொல்வார். (அங)

இம்மணியா விழைத்தநவ முடிசூட்டி யிச்சிங்க விளவே றன்ன
செம்மறனை யபிடேக பாண்டியனென் றியம்புமெனச் செம்பொன் றாக்கிக்
கைம்மறியில் வணிகருக்கு விலைகொடுப்பான் வருவார்முன் கருணை நாட்டம்
அம்மகன்மே னிரப்பியிள நகையரும்பி நின்றுரை யங்குக் காணார். (அச)

ஓருருவாய் நேர்நின்ற வணிகேசர் விடையின்மே லுமையா ளோடும்
ஈருருவாய் முக்கண்ணு நாற்கரமு மஞ்சமர ரிறவா வாறு
காருருவா யெழுமிடறுங் காட்டித்தங் கோயில்புகக் கண்டா ரின்று
பாருருவாய் நின்றவணி கேசரிவ ரெனவேபின் பற்றிப் போவார். (அடு)

தேன்செய்த கொன்றைநெடுஞ் சடையார்முன் றாழ்ந்தெழுந்து செங்கை கூப்பி
யான்செய்யுங் கைம்மாறு யெம்பிராற் கொன்றுண்டோ யானு மென்ன
றான்செயுட லும்பொருளு முயிருமெனி னவையாவு முனவே யையா
வான்செய்யு நன்றிக்கு வையகத்தோர் செய்யுங்கைம் மாறுண் டேயோ (அசு)

என்றுமுன் வழுத்தலுறும் விறன்மாறன் கோக்கொழுந்தை யிகல்வேல் விந்தை
மன்றுகு மிவற்குமனை வாக்கிறந்த பூரணமா மதுரை நாதன்
பொன்னுரு மணிமகுடஞ் சூடமணி நல்குதலாற் புவிய நேகம்
பன்னாளு முறைபுரியத் தக்கதென வாழ்த்தினார் பல்சான் றோரும் (அஎ)

ஏத்திவலங் கொண்டிருநான் கிபந்தழுவப் பெற்றோங்கி யிருக்கு மட்ட
மூர்த்திவிடை யருள்பெற்று மூவாநன் மறையாகி முனிவர் கூறப்
பார்த்திவன்றன் பொலன்மாட மனைபுகுந்தா னிறைமணிப்பண் பாயுங் கேள்விச்
சாத்திரரு மந்திரரு மணிநோக்கி வியப்படைந்தார் சங்கை கூர்ந்தார். (அஅ)

வே று.

வேளென வந்த நாய்கர் சுந்தர விடங்க ரானல்
நாள்களுங் கோளும் பற்றி நவமணி யாக்கி னோரோ
தாள்களுந் தோளு மார்புந் தரித்தநீ ளுக மீனற
வாள்விடு மணியோ வீந்தார் யாதென மதிக்கற் பாலேம். (அகூ)

இந்திரக் கடவு ளூட்டு மிம்மணி யரிய வென்று
மந்திரக் கிழவர் நல்கி மயனினு மாண்ட கேள்வித்
தந்திரக் கனகக் கொல்லர்க் குவப்பன ததும்ப வீசிச்
செந்திரு மார்பி னற்குத் திருமணி மகுடஞ் செய்தார். (கூ0)

மங்கல மரபான் மாலை மணிமுடி சூட்டி நாமஞ்
செங்கனே றுயர்த்த நாய்கர் செப்பிய முறையால் வேத
புங்கவ ரிசைப்ப வீதி வலஞ்செய்து புனிதன் பாத
பங்கய மிறைஞ்சி வேந்தன் பன்மணிக் கோயி லெய்தா. (கூக)

போர்மகட் குறையு ளான புயத்தபி டேகத் தென்னன்
தேர்முதற் கருவித் தானைத் தெவ்வர்நீண் முடியெ லாந்தன்
வார்கழற் கமலஞ் சூட மனுமுறை பைங்கூழ் காக்குங்
காரெனக் கருணை பெய்து வையகங் காக்கு நாளில்.

வேறு.

தந்தைதன் காமக் கிழத்திய ரீன்ற தனயராய்த் தனக்குமுன் னவராய்
மூந்தைநா ளரசன் பொன்னறை முரித்து முடிமுதற் பொருள்கவர்ந் துட்குஞ்
சிந்தைய ராகி மறுபுலத் தொளித்த தெவ்வரைச் சிலர்கொடு விடுப்ப
வந்தவர் கவர்ந்த தனமெலா மீள வாங்கினு னீர்ங்கதிர் மருமான். (கக)

மாணிக்கம்விற்றபடல முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - க,உஅள.

பதினெட்டாவது

வருணன்விட்டகடலை

வற்றச்செய்தபடலம்.

கார்கெழு கண்டத் தண்ணல் கௌரியன் மகுடஞ் சூட
வீழ்கதிர் மணிக ளீந்த வியப்பிது விடையோன் சென்னி
வாழ்கரு முகிலைப் போக்கி மதுரைமேல் வருணன் விட்ட
ஆழ்கடல் வறப்பக் கண்ட வாடலைப் பாடல் செய்வாம். (க)

சித்திரை மதியிற் சேர்ந்த சித்திரை நாளிற் றென்னன்
மைத்திரண் மிடற்று வெள்ளி மன்றுளாற் களவு மாண்ட
பத்திமை விதியிற் பண்டம் பற்பல சிறப்ப நல்கிப்
புத்தியும் வீடு நல்கும் பூசனை நடத்த லுற்றான். (உ)

நறியநெய் யாதி யார நறுங்குழம் பீறு வாட்டி
வெறியகர்ப் புரநீ ராட்டி யற்புத வெள்ளம் பொங்க
இறைவனை வியந்து நோக்கி யேத்துவா னெறிநீர் வைகைத்
துறைவநீ யென்கர்ப் பூர சுந்தர னேயோ வென்றான். (௩)

பூசனை புரியு மெல்லைப் பொன்னகர்க் கிறைமை பூண்ட
வாசவன் வருடந் தோறும் பூசித்து வருவா னன்ன
காசறு மனத்தான் பூசை கழிவுறு மளவுந் தாழ்த்துத்
தேசமை சிறப்பார் பூசை செய்துதன் னாடு புக்கான். (௪)

அன்றுநீர்க் கடவுள் வேள்வி நாயக னவையத் தெய்தி
நின்றவன் றன்னோய் தீருஞ் செல்வியி னிகழ்ச்சி தோன்றக்
குன்றவன் சிறக ரீர்ந்த கொற்றவன் முகத்தை நோக்கி
இன்றுநீ சிறிது தேம்பி யிருத்தியா லிதென்கொ லென்றான். (௫)

சிலைப்படு முகிலூ ரண்ணல் செப்புவா னிருடீ ரன்பின்
வலைப்படு பெருமா னெம்மான் மதுரையெம் பிரானை யன்பு
தலைப்படு பூசை செய்யத் தாழ்த்ததின் றதனு லிப்போ
தலைப்படச் சிறிதெ னுள்ள மாகுல மடைந்த துண்டால். (௬)

என்னவவ் விலிங்கந் தான்மா விலிங்கமோ வென்று முந்நீர்
மன்னவன் வினவ லோடு மகபதி மொழிவான் முன்பென்
றன்னரும் பழியும் வேழச் சாபமுந் தொலைத்த தன்றோ
அன்னதை யறிந்தி லாய்கொ லென்னநீ ரண்ணல் கூறும். (எ)

அற்றது வாகிற் றெய்வ மருத்துவ ராலுந் தீரச்
செற்றிட வரிதா யென்னைத் தெறும்பெரு வயிற்று நோயை
வற்றிடு மாறு தீர்க்குங் கொல்லென வலாரி யையம்
உற்றுநீ வினைய தென்னென் றுண்ணாகை யரும்பிச் சொல்வான். (௮)

அரியய ராலுந் தீராப் பிறவிநோ யறுக்க வல்ல
பெரியவ னிந்த யாக்கைப் பெரும்பிணி பிறவுந் தீர்த்தற
கரியனோ வையன் செய்யுந் திருவிளை யாட்டை யின்னே
தெரியநீ சோதி யென்னத் தென்கடற் சேர்ப்பன் சொல்வான் ௯)

கல்விற கரிந்தோ யிங்கு நான்வருங் காலை வேட்டார்க்
கெல்லையில் காம நல்குஞ் சுரபியு மின்பால் சோரப்
புல்லிய கன்று மாற்றுப் பட்டவப் போது கண்ட
நல்லசோ பனத்தா லிந்த நன்மொழி கேட்டே னென்று. (௧0)

வருணனு மேகி வெள்ளி மன்றுடை யடிகள் செய்யுந்
திருவிளை யாடல் கண்டு வயிற்றுநோய் தீர்ப்பா னெண்ணி
முரசதிர் மதுரை மூதூர் முற்றுநீ யழித்தி யென்னாக்
குரைகட றன்னை வல்லே கூவினா னேவி னானே. (௧௧)

வேறு.

கொதித்தெழுந்து தருக்களிறக் கொத்தியெடுத் தெத்திசையும
அதிர்த்தெறிந்து வரைகளெல்லா மகழ்ந்துதிசைப் புறஞ்செல்லப்
பிதிர்த்தெறிந்து மாடநிரை பெயர்த்தெறிந்து பிரளயத்தில்
உதித்தெழுந்து வருவதென வோங்குதிரைக் கடல்வருமால். (௧௨)

கந்தமலர்த் தனிக்கடவுள் கற்பத்து மழியாத
இந்தவளம் பதிக்கிடையூ றெய்தியதெம் பதிக்குமினி
வந்ததெனச் சுந்தரனை வந்திறைஞ்சி வானவருஞ்
சிந்தைகலங் கினர்வருணன் செய்தசெய றெளியாதார். (௧௩)

சூலமோ டழலேந்துஞ் சொக்கர்திரு விளையாட்டின்
சீலமோ நாமிழைத்த தீவினையின் றிறமிதுவோ
ஆலமோ வுலகமெலா மழியவரும் பேரூழிக்
காலமோ வெனக்கலங்கிக் கடிநகரம் பனிப்பெய்த. (௧௪)

மண்புதைக்கத் திசைபுதைக்க மயங்கிருள்போல் வருநீத்தம்
விண்புதைக்க வெழுமாட வியனகரின் புறத்திரவி
கண்புதைக்க வருமளவிற் கண்டரச னடுநடுங்கிப்
பெண்புதைக்கு மொருபாகப் பிரானடியே சரணென்று. (௧௫)

ஆலமெழுந் திமையவர்மே லடர்க்கவரும் பொழுதஞ்சும்
மாலெனவுந் தன்னுயிர்மேன் மறலிவரும் பொழுதஞ்சும்
பாலனென வுங்கலங்கிப் பசுபதிசே வடியில்விழுந்
தோலமென முறையிட்டா னுலகுபுக ழுறையிட்டான். (௧௬)

முறையிட்ட செழியனெதிர் முறுவலித்தஞ் சலையென்னாக்
கறையிட்டு விண்புரந்த கந்தரசுந் தரக்கடவுள்
துறையிட்டு வருகடலைச் சுவறப்போய்ப் பருகுமெனப்
பிறையிட்ட திருச்சடையிற் பெயனான்கும் வரவிடுத்தான். (௧௭)

வேறு.

நிவப்புற வெழுந்த நான்கு மேகமு நிமிர்ந்து வாய்விட்
டுவர்ப்புறு கடலை வாரி யுறிஞ்சின வுறிஞ்ச லோடுஞ்
சிவப்பெருங் கடவுள் யார்க்குந் தேவெனத் தெளிந்தோர் ரேழு
பவப்பெரும் பௌவம் போலப் பசையற வறந்த தன்றே. (க௮)

அந்நிலை நகரு ளாரும் வானவ ராதி யோருந்
தென்னவர் பிரானு மெந்தை திருவிளை யாட னோக்கிப்
பன்னரு மகிழ்ச்சி பொங்கப் பன்முறை புகழ்ந்து பாடி
இன்னறீர் மனத்த ராகி யீறிலா வின்பத் தாழ்ந்தார். (க௯)

வருணன்விட்டகடலைவற்றச்செய்தபடல முற்றிற்று.

ஆக திருவிருத்தம் - க,௩௦௬.

மதுரைக்காண்டமுற்றிற்று.

உ

இரண்டாவது,

கூடற்காண்டம்.

பத்தொன்பதாவது

நான்மாடக்கூடலானபடலம்.

பூதங்க ளல்ல பொறியல்ல வேறு புலனல்ல வுள்ளமதியின்
பேதங்க ளல்ல வினையன்றி நின்ற பிறிதல்ல வென்று பெருநூல்
வேதங்கி டந்து தடுமாறும் வஞ்ச வெளியென்ப கூடன் மறுகிற்
பாதங்க ணோவ வளையிந்த னாதி பகர்வாரை யாயு மவரே. (௧)

வேறு.

திருமகள் வலக்கண் வாக்கின் சேயிழை யிடக்கண் ஞானப்
பெருமக ளுதற்க ணாகப் பெற்றுவான் செல்வங் கல்வி
அருமைவீ டளிப்பாள் யாவ ளவளுயிர்த் துணைவன் காண
ஒருமுலை மறைந்து நாணி யொசிந்தபூங் கொம்பி னின்றாள். (௨)

கதிர்மதி மிலைந்த வேணிக் கண்ணுதல் வருண னேய
அதிர்கடல் வறப்பச் செய்த வாடலீ தனையா னேய
முதிர்மழை யேழின் மேலு முன்னைநான் முகிலும் போக்கி
மதுரைநான மாடக் கூட லாக்கிய வண்ணஞ் சொல்வாம். (௩)

எற்று தெண் டிரைநீர்ச் சேர்ப்பன் றன்செய விழுக்கி நாணம்
உற்றிரு கண்ணுஞ் சேப்ப வுடன்றெழு கோபச் செந்திப்
பற்றிட வாகம் வெம்பிப் பரவையும் யாறும் வெந்து
வற்றிட வெகுண்டு நின்றான் மானமும் வலியுங் குன்றான். (௪)

நளிர்புனன் மதுரை மூதூர் நாயக னுட றன்னைத்
தெளிகில னாகிப் பின்னுஞ் செழுமுகி லேழுங் கூவிக்
குளிர்கடல் வறந்த தென்னைக் குடித்தெழூஉ இடித்துப் பெய்யா
ஒளிவளர் மதுரை முற்று மொலலெனக் களைமி னென்றான். (௫)

பொள்ளென மேக மேழும் புகுந்து பார் தெரிய முந்நீர்ப்
பள்ளமும் வறப்ப முற்றப் பருகிமெய் கருகி மின்னித்
தெள்ளருந் திசையும் வானுஞ் செவிடுறப் பிலமும் பாரும்
விள்ளமால் வரைக ளெட்டும் வெடிபட மேருச் சாய. ௬)

ஊழிநாள் வெடிக்கு மண்ட கடாகத்தி னொலிபோ லார்த்துப்
பாழிவா னுருமு வீழப் பணாடவி மணிகள் சிந்தி
ஆழிநீர் ஞாலந் தாங்கு மராவுட னெளியத் திக்கிற்
சூழிமால் யானை நின்ற நிலைகெடத் துணுக்கங் கொள்ள. (௭)

வெள்ளிய நீறு பூத்து முழுவென வீங்கு காய் * போற்
றெள்ளிய வாலி சிந்தத் திரண்டதிண் பளிக்குத் தூண்போல்
ஒள்ளிய தாரை சோர வும்பர்மீன் கணங்க ளோடுந்
துள்ளிய திரையி லாடு மீன்கணந் துடித்து வீழ. (அ)

ஆர்த்தெழு கொண்மூ வேழுஞ் சராசர மனைத்துஞ் சூழ்ந்து
போர்த்தன ஞாலமுண்ணப் புக்கதோர் வடிவங் கொண்ட
தீர்த்தனில விசும்பும் பாருந் திசைகளுந் தெரியா வாகப்
பார்த்தகண் ணுழையா வாகப் பரந்திருள் கான்ற வன்றே. (௯)

பைஞ்சுட ரெறிக்கும் பச்சை காரொளி பரப்பு நீலம்
புஞ்சவா ளுடுக்க ளன்ன நித்திலம் பொன்னங் குப்பை
செஞ்சுடர் மணிக ளுப்புச் சிதறுவ கணவ ரோடும்
விஞ்சையர் மகளி ரூடி வெறுத்தெறி கலன்கள் போல. (க0)

கடியகா லுதைப்பப் பெய்யுங் கடுஞ்செல வெழிலி மாடக்
கொடியநீ ணகரைச் சூழ்ந்து புதைத்தலுங் கோலொன் றேச்சிப்
படியெலாம் புரக்குங் கோனு நகருளார் பலரு ஞாலம்
மடியுநா ளிதுவே யென்று மயங்கினு ருயங்கி னரே. (கக)

கண்ணுதன் மூர்த்தி தானே யின்னமுங் காக்கு மென்றுப்
புண்ணிய நகரா ரோடும் பொருக்கெனக் கோயி லெய்தி
விண்ணிழி விமான வாழ்க்கை விடையவ னடிக்கீழ் வீழ்ந்தான்
அண்ணலா ராடன் முன்னு மறிந்துகை கண்ட வேந்தன். (கஉ)

விடையினை யால முண்ட மிடற்றினை கங்கை தாங்குஞ்
சடையினை கூற்றை வென்ற தாளினை மேரு சாபப்
படையினை யடியேந் துன்பப் பாட்டினை நீக்கி யாளும்
நடையினை யாகி யெங்க ணல்லுயிர் காத்தல் வேண்டும். (கங)

என்னலுந் தென்னர்க் கென்று மெய்திய விடுக்கண் டீர்க்கும்
முன்னவன் முன்போ னன்கு முகிலையு நோக்கி யின்ன
தொன்னக ரெல்லை நானகுஞ் சூழ்ந்துநான் மாட மாகி
யினனெடு மாரி யேழும் விலக்குமி னெனவி டுத்தான். (கச)

வந்துநான் மாட மாகி வளைந்துநாற் றிசையுஞ் சூழ்ந்து
சந்துவாய் தெரியா தொன்றித் தாமொரு குடிலாய் மாடப்
பந்திகோ புரஞ்செய் குன்றங் கால்கள்போற் பரிப்பப் போர்த்த
இந்துவார் சடையோ னேய வெழிலிமா நகர மெங்கும். (கரு)

அன்னநான் மாடத்துள்ளு நகருளா ரமைச்சர் வேந்தன்
றன்னநாற் கருவித் தானை சராசரம் பிறவுந் தாழ்ந்து
முன்னைநா டனினு மின்ப மூழ்கிநன் கிருந்தா ரூழிற்
பொன்னனாள் பாகன் றளிற் புக்கமர்ந் திருந்தா ரொத்தார். (கசு)

கழைகெழு வரையி னுச்சி கவிழ்கின்ற புயல்போற் கார்சூழ்ந்
திழைமணி மாடத் தும்ப ரெறிதுளி யுடைந்து துள்ளத்
தழைகடல் வறப்பவாங்கித் தம்முடல் வறப்பப் பெய்து
மழைகளும் வெள்கி நின்ற வருணனும் வெள்கி நின்றான். (கஎ)

---

* பூசினிக்காய்.

நடுங்கினன் கீழிந்த வச்ச நாணமீ தூர மானம்
ஒடுங்கின னுள்ளத் துள்ளோ ருவகைவந் தெய்தப் பொற்பூத்
தடங்கரை குறுகா முன்னேய் தணிந்துபின் றோய்ந்து பாசம்
மடங்கினன் மடங்கா வன்பின் வள்ளலைப் பூசை செய்வான். (கஅ)

புனிதநீ ருடிக் கண்டி பூண்டுவான் கங்கை யாதி
வனிதையர் பசும்பொற் கும்ப வாசநீர் வடித்து நீட்டப்
பனிமலர் சந்தங் கந்த மணிக்கலன் பசும்பொ னுடை
இனையன பிறவு மீன்று கற்பக மெடுத்துக் காட்ட. (கக)

ஐங்கனி யமுத மைந்து கௌவிய மமுது தூபஞ்
செங்கதிர் விளக்க மின்ன தேவராஜ் கொடுப்பச் சேற்கண்
நங்கைதன் பதியைப் பூசித் தாயிர நாமங்கூறிப்
பைங்கதிர் முத்தஞ் சாத்தித் தொழுதடி பணிந்து நின்றான். (உ0)

அருச்சனை யுவந்த வாதி யமலனீ யாது வேண்டிற்
றுரைத்தியென் றோத நீர்க்கோ னுலலைதாழ்ந் தொன்றி னுனுங்
கரைத்திட வரிய விந்தக் கடியவென் வயிற்று நோய்நின்
திரைத்தட மாடு முன்னே தீர்ந்திடப் பெற்றே னெந்தாய். (உக)

வேறு.

வேதமுதற் கலைகாட்சி முதலளவை விரிஞ்சன்முதல் விண்ணோர் செய்யுஞ்
சோதனையு ளகப்படாச் சோதியுனைச் சோதிக்கத் துணிந்தே னந்தோ
பேதைமையே னிடத்தென்ன குணங்கண்டென் பிணிதீர்த்தென் பெற்று யாசை
கோதமிலாய் குற்றமே குணமாகக் கொள்வதுநின் குணமோ வையா. (உஉ)

பொன்னகரான் காலந்தாழ்த் துனையருச்சித் தயர்ச்சியொடும் போன வாறும்
என்னெனயான் வினவியதும் வலாரியிறை கொடுத்ததுமவ் விறைக்கு நோயான்
பின்னைவிறு யதுமவன்சொல் வழியுன்னைச் சோதித்த பெற்றிதானும்
முன்னவனே யுன்னருளா லென்பிணிக்கு மருந்தாகி முடிந்த வாறே. (உங)

ஆறுமதி முடியணிந்த வருட்கடலே வயிற்றுநோ யன்றி மேனாள்
மாறுபடு மிருவினையு மலவலியுங் கெடவீட்டின் வழியும் பெற்றேன்
வேறினிமந் திரமென்னை மணியென்னை மருந்தென்னை மெய்ம்மை யாகத்
தேறுமவர்க் கிப்புனித தீர்த்தமே பிணியனைத்துந் தீர்ப்ப தன்றே. (உச)

வேறு.

அடியனேன் முன்னஞ் செய்த வபராத மிரண்டுந் தீரும்
படிபொறுத் தருள்வா யென்று பன்முறை பரவித் தாழ்ந்து
மடிவிலா மகிழ்ச்சி பொங்க வரங்களுஞ் சிறிது வேண்டிக்
கடியதன் னகரம் புக்கான் குடதிசைக் காவல் வேந்தன். (உரு)

வன்றிறல் வருணன் விட்ட மாரியை விலக்க வீசன்
மின்றிகழ் சடையி னின்று நீங்கிய மேக நான்குங்
குன்றுபோ னிவந்து நான்கு கூடமாக் கூடலாலே
அன்றுநான் மாடக் கூட லானதான் மதுரை மூதூர்.

நான்மாடக்கூடலானபடலமுற்றிற்று.

ஆக திருவிருத்தம் - ககஙஉ.

இருபதாவது

எல்லாம்வல்லசித்தர்

திருவிளையாடற்படலம்.

சத்த நான்மறைப் பொருள்வரை தன்னுநீண் முடிமேல
வைத்த கார்கணுன் மாடமாய் மதுரைமேல் வருணன்
உய்த்த மாரியைத் தடுத்தவா றுரைத்துமே றுயர்த்தோர்
சித்த ராய்விளை யாடிய செயல்சிறி துரைப்பாம். (க)

தேட ருங்கதிர் மணிமுடிச் செழியனும் பாண்டி
நாட ருந்திரு வெய்திமே னல்லவீ டெய்தக்
கூட லம்பதி மேவிய குணங்குறி கடந்த
வேட ரவகொரு சித்தமெய் வேடராய் வருவார். (உ)

வட்ட வாரசடைக் குஞ்சியும் பூணநூன் மார்பும்
இட்ட நீறணி திலகமு மிணைக்குழை தூங்க
விட்ட வெள்ளை * முத் திரையுந்தோல் விரித்தபட் டிகையுஞ்
சுட்ட வெண்பொடிப் பொக்கணந் தூக்கிய தோளும். (ஙு)

துய்ய வெண்பொடி யழிந்துமெய் சிவந்திடச் சுவடு
செய்யும் வெண்டிரட் படிகநீண் மாலையுஞ் சிவந்த
கையி லங்குகட் டங்கமுங் கண்டவர் மனஞ்சென்
றுய்ய வன்புற வீக்கிய வுதரபந் தனமும். (ச)

அட்ட வேங்கையி னுரிவைகீண் டசைத்தகோ வணமும்
ஒட்ட வீக்கிய புலியத ளுடுக்கையு மிடதோள்
இட்ட யோகபட் டிகையும்பொன் னிடையிடை கட்டப்
பட்ட சுஃறெருவி வேத்திரப் படைக்கையும் படைத்து. (ரு)

வேத கிங்கிணி சிலம்புசூழ்ந் தடிகளின் மிழற்ற
ஓத ரும்பத முளரியூ றருண்மது வொழுகப்
போத வானந்த மதுநுகர்ந் தலர்முகம் பொலியப்
பாத பங்கய முபசிடப் பாதுகை சூட. (சா)

சிறிது மூரலும் வெயர்வையுந் திருமுகத் தரும்பக்
குறுகி யாவணஞ் சித்திர கூடநாற் சந்தி
மறுகு சூளிகை யுபரிகை மாளிகை வாயில்
அறுகு சூழ்நிரைத் தெற்றியிவ் விடந்தொறு மடைந்து. (எ)

தெற்கி ருப்பவர் போல்வட திசைவயிற் சென்று
புக்கி ருப்பதுங் கிழக்குளார் போலமேற் றிசையில்
நக்கி ருப்பதும் யாவரு நாடின ரறியத்
தக்க தன்றியே யிந்திர சாலமாத் தணந்தும். (அ)

சேய வெற்பினை யணிமைதாச் செய்துமற் றணித்தாய்
மேய வெற்பினைச் சேயதா விடுத்துமெய் முதுமூப்
பாய மக்களை யிளையவ ராக்கியுங் குதலை
வாய மக்களைக் கழிமுது மக்களா வகுத்தும். (கூ)

* வெள்ளை - சஙகு.

ஆணைப் பெண்ணுரு வாக்கியும் பெண்ணையா ணுருவா
மாணக் காட்டியு மலடியை மகப்பெறச் செய்துங்
கோணற் கூன்கெழுவி னேமைகண் குருடுபங் கெவருங்
காணத் தீர்த்துநா லுலோகமுங் கனகமாச் செய்தும். (கo)

செல்வர் தம்மனைப் பொருளெலாம் வறுமையிற சிறந்தோர்
இல்ல மெய்தவு நட்டவ ரிகலின்றித் தம்மின்
மல்லு வெஞ்சம ரிழைப்பவுங் காஞ்சிர மரத்தின்
நல்ல தீங்கனி பழுப்பவும் விஞ்சைக ணயந்தும். (கக)

பருவ மாறியு பருவத்தில் வைகைநீர் பரந்து
வருவ தாக்கியு மீளவும் வறந்திடச் செய்தும்
பொருவி நீஞ்சுவை யோடையும் பொய்கையு முவர்ப்புத்
தருவ வாக்கியு முவரியின் சுவையவாத் தந்தும். (கஉ)

வீசி மாத்திரைக் கோலினை விண்ணினட் டதன்மேல்
ஊசி நாட்டியிட் டேசிமேற் பெருவிர லூன்றி
ஆசி லாடியு மூசிமேற் றலைகிழக் காக
மாசில் சேவடிப் போதுவான் மலர்ந்திடச் சுழன்றும். (கங)

சண்ட வெம்பணிப் பகையெனப் பறந்துவிண் டாவிக
கொண்ட லைப்பிடித் திடியொடுங் குடித்தநீர் பிழிந்து
கண்ட வர்க்கதி சயம்பெறக் காட்டியுங் காண
விண்ட லத்தினிற் பண்டுபோ லிறைகொள விடுத்தும். (கச)

எல்லி டைப்படும் பொருள்களை யிராவெழப் பார்த்தும்
அல்லி டைப்படும் பொருள்களைப் பகல்வர வமைத்தும்
வல்ல ழற்புன லுளர்வளி வலிகெடப் பார்த்தும்
நல்ல போதுகாய் கனியிலா நாள்படக் கண்டும். (கரு)

பீளை கால்விழிக் கிழவரைப் பிரம்பினால் வருடிக்
காளை யாடவ ராக்கியக் கணவருக் கிசைய
ஈளை வாய்முது கற்பினர் கருவடைந் திளமை
ஆள வேத்திரம் வருடிநீ றளித்தருள் செய்தும். (கசு)

அகர மாதிமூன் றுகிய வாகரு டணமே
புகரி லாவதி ரிச்சிய மஞ்சனம் பொருவில்
வகர மாதிமூன் றுகிய வசியமே வாதம்
இகலி லாவயத் தம்பமென் றின்னவை செய்தும். (கஎ)

வேத நூறெறி யார்களெக் கலைகளும் விளங்கப்
பூதி நாவினிற் சிதறியும் பூழியன் காதன்
மாத ராரொடும் பயில்புது மணமலர்க் காவிற்
காத நீண்டகோட் டெங்கினைக் கரும்பனை செய்தும். (கஅ)

* ஆகருஷணம் - தூரத்திலுள்ளதைச் சமீபத்தே வருவித்தல். அதிரிச்சியம் - கண்களுக்குப் புலப்படுவதைப் புலப்படாமற்செய்தல். அஞ்சனம் - மறைந்து கிடக்கும் பொருள்களை வெளிப்படக்காட்டுதல். வசியம் - பகைவரைத் தன், வயப்படுத்தல். வாதம் - இரும்புமுதலியவற்றைப் பொன்னாக்கல். வயஸ்தம்பம் வயதைத் தம்பித்தல.

ஏனை வான்றருக் குலங்களைப் புட்களை யிருகோட்
டானை யாதிபல் விலங்கினை யொன்றை யொன்றாக
ஞான நோக்கினா னோக்கியு நாடிய விளையோர்,
மாணி னோக்கிய ராகிலோ மெனவெழில் வாய்த்தும். (௧௯)

நாக நாடுபொன் னாட்டுள பொருளுமந் நகருள்
ஆக வாக்கியு மின்னணம் விச்சைக ளனந்தம்
மாக நாயகன் மலைமக னாயகன் மதுரை
ஏக நாயகன் றிருவிளை யாடல்செய் திருந்தான். (௨௦)

சித்த யோகிகள் செய்கின்ற வாடன்மேற் செலுத்தி
வைத்த கண்களுஞ் சிந்தையும் வாங்கலர் திகைத்துத்
தத்த மாள்வினைத் தொழின்மறந் திருந்தனர் தகைசால்
மூத்த வேதிய ராதிய மூதுநகர் மாக்கள். ௧)

இனைய செய்தியை யுழையரா லிறைமக னறிந்தான்
அனைய சித்தரை யிங்ஙனந் தருகென வடுத்தார்
தனைய கற்றினன் சித்தரைச் சார்ந்தவர் தாமும்
வினையை வென்றவ ராடலை வியந்துகண் டிருந்தார். ௨)

அமைச்சர் தங்களை விடுத்தன னமைச்சருந்
தமைச்ச ரண்பணிந் தரசன்முன் வருகெனத் தவத்தோர்
எமக்கு மன்னனா லென்பய னெனமறுத் திடமண்
சுமக்கு மன்னவன் றம்மவர் தொழுதனர் போனார். (௨௩)

வேறு.

மன்னன்மு னமைச்சர் சித்தர் மறுத்துரை மாற்றங் கூற
முன்னவ னருள்பெற் றிம்மை மறுமையு முனிந்த யோகர்
இங்கில வேந்தர் மட்டோ விந்திர னயன்மா லேனோர்
தன்னையு மதிப்ப ரோவென் றிருந்தனன் றரும வேந்தன். (௨௪)

எல்லாம்வல்லசித்தர்திருவிளையாடற்படல முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௧,௯௫௬.

இருபத்தொராவது

கல்லானைக்குக்கரும்பருத்தியபடலம்.

செல்லார் பொழில்சூழ் மதுராபுரிச் சித்த ரெல்லாம்
வல்லா ரவரா டலையா ருரைசெய்ய வல்லார்
எல்லாரும் வியப்புற வித்தனிச் சித்தசாமி
கல்லானை தின்னக் கரும்பீந்த கதையுஞ் சொல்வாம். (௧)

பின்னோய மச்சம் பெருகப்பெரி யோரை யெண்ணா
தென்னோ யெளியா ரெனயானிகழ்ந் திங்ங னீண்டச்
சொன்னோ னவர்க்கென் குறையென்னிற் றுருவி நானோ
தன்னோ ரிலா[illegible]ர் தமைக்காணத் தருவ தென்னா. (௨)

ஆனந்த சித்த[illegible] தமைக்காண்பலென் றன்பு கூர்ந்த
மீனந் தரித்த கொடிவேந்தன் குறிப்பு நோக்கி
மோனந் தரித்த சிவயோகரு முந்தித் தம்பொன்
மானந் தனக்கு வடமேற்றிசை வந்தி ருந்தார். (௩)

அருகாத' செல்வத் தவனன்றுதைத் திங்க டோற்றம்
வருகால மாக மதுரேசனை வந்து வந்தித்
துருகா தரத்தாற் கழிந்துள்வல மாக மீள
வருவா னவன்முன் வருகானாகி வன்கண் மாக்கள். (௪)

சீறிட்ட வேங்கை யதட்சேக்கையர் சீறி யைந்தும
பாறிட்ட வேடர் யோகபட்டத்தர் கட்டங் கத்தில்
ஏறிட்ட கைய ரிறுமாந்திருப் பாரை நோக்கி
மாறிட்டு நீக்கி யெழப்போகென வந்து சொன்னார். (௫)

பின்னா வருதென் னர்பிரான்பெரி யோரை நோக்கி
எந்நாடு நும்மூ ருமக்கென்வரும் யாது வேண்டும்
நுந்நாம மேது நுவன்மின்னென வைய ரெந்த
நன்னாடு மெந்த நகருள்ளுந் திரிவ மப்பா. (௬)

ஆனாலு மிப்போ தணிகான்மிர நாட்டிற் காசி
தானா மிருக்குந் தலமாகு மநாத ராகி
ஆனாத பிச்சைப் பெருவாழ்வு டையார் நமரா
நாணாளும் விஞ்சை நடாஅய்த்திரி சித்த ரேம்யாம். (௭)

ஆனந்த கானந் † தொடுத்திங்குள வான சைவத்
தானம் பலவுந் தொழுந்தற்பர ‡ மாகி வந்தேம்
ஞானந் தருமிந் நகரிம்மையிற் சீவன் முத்தி
மானந்த மான பரமுத்தி மறுமை நல்கும். (௮)

ஈண்டுள்ள வர்க்கெம் விளையாடலைக் காட்டி யிச்சை
வேண்டும் பலசித் தியுநல்குவம் வேத மாதி
மாண்டங்கு மெண்ணெண் கலைஞானமும் வல்ல மல்லாற்
சேண்டங்கு மெல்லாப் பொருளும்வல சித்த ரேம்யாம். (௯)

உன்னா னமக்குப் பெறல்வேண்டுவ தொன்று மில்லை
தென்னா வெனவுண் ணகைசெய்தனர் சித்த யோகர்
மன்னா மிவர்தம் மிறுமாப்புஞ் செருக்கும் வீறும்
என்னா லளவிட் டறிவேனென வெண்ணித் தேர்வான். (௧௦)

தேரும் பொழுதோ ருழவனொரு செல்வக் கன்னல்
ஆருங் கழுகென்ன வயிர்ப்புறக் கொண்டு தாழப்
பாருந் திசையும் புகழ்பங்கயச் செங்கை தாங்கி
நீரும் பிறையுங் கரந்தார்தமை நேர்ந்து சொல்வான். (௧௧)

வல்லாரில் வல்லே மெனவும்மை மதித்த நீரிக்
கல்லானைக் கிந்தக் கரும்பை யருத்தி னெல்லாம்
வல்லாரு நீரே மதுரைப்பெரு மானு நீரே
அல்லா லெவர்நும் மனம்வேட்ட தளிப்ப னென்றான். (௧௨)

என்னா முகிலைத் தளையிட்டவன் கூறக் கேட்டுத்
தென்னா வருதி யெனப்புன்னகை செய்து சித்தர்
நின்னால் வருவ தெமக்கேது நினக்கு நாமே
உன்னாசை தீரத் தருகின்ற தலாம லுண்டோ. (௧௩)

* தலமாகு மநாதனாகி என்றும், வாழ்வுடையான்றமரா என்றும் பாடம்.
† ஆனந்தகானம் - காசி. ‡ தற்பரம் - ஆசை, கடவுள்.

செல்லா வுலகத் தினுஞ்சென்ளுரு வீஞ்சை கற்ளுேர்
பல்லாரு நன்கு மதிக்கப்பய னெய்து வார்கள்
எல்லா மறிந்த வெமக்கொன்றினு மாசை யில்லை ,
கல்லானை கன்னல் கறிக்கின்றது காண்மி னென்ருர். (கச)

கடைக்கண் சிறிதே குழைத்தார்முன் கடாக்கல் யானை
மடைக்கண் டிறந்து மதமூன்றும் வழிய விண்வாய்
அடைக்கும் படிவாய் திறந்தார்த்துப் புழைக்கை நீட்டித்
தொடைக்குன் றனைன்கைச் சுவைத்தண்டைப் பறித்த தன்றே. (கரு)

பறித்துக் கடைவாய் வழிசாறளி பாய்ந்து நக்கக்
கறித்துக் குதட்டிப் பருகிக்கர மூச லாட
நெறித்துத் தருக்கி நிழல்சீறி நிமிர்ந்து நிற்ப
மறித்துக் கடைக்கண் குறித்தார்பினு மாயம் வல்லார். (கசு)

மட்டேற்ற தாரான் கழுத்திற்கண்ட மாலை தன்னை
எட்டிப் பறித்த திகல்காஞ்சுகி மாக்கள் சீறிக்
கிட்டிக் களிற்றைப் புடைப்பான்கிளர் கோல்கொண் டோச்சச்
சிட்டத் தவர்கண் சிவந்தானையைச் சீறி நோக்க. (கஎ)

கண்டா வளியைக் * களிறுண்டது கண்கள் சேப்புக்
கொண்டா னரசன் சிவயோகரிற் கோப மூளத்
தண்டா வரசன் றமருட்டறு கண்ணர் சீறி
வண்டா ரிதழி மறைத்தாரை யடிக்க வந்தார். (கஅ)

அப்போ திளமூர லரும்பியச் சித்த சாமி
கைப்போ தமைத்துக் கடிந்தோர்தமை நின்மி னென்ன
மைப்போ தகமன் னவர்வைத்தடி பேர்க்க லாற்ரு
தொப்போ தரிய நிலையோவியம் போல நின்ருர். (ககூ)

மத்தக் களிற்றுன் வெகுளித்தழன் மாறி யன்பு
பொத்தப் புதைந்த மனத்தற்புதம் பொங்கிச் சோரச்
சித்தப் பெருமா னடிமாமுடி தீண்டப் பாச
பெத்தத் தமியேன் பிழையைப்பொறு மென்று வீழ்ந்தான். (உ0)

அன்புக் கிரங்குங் கருணைக்கட லான வையர்
இன்புற்று வேண்டும் வரங்கேளெனத் தாழ்ந்து வேந்தன்
நன்புத் திரப்பே றருள்வாயென நல்கிச் செங்கை
வன்புற்ற வேழ மிசைவைத்தரு ளோட்டம் வைத்தார். (உக)

வேறு.

தழைக்கு நீள்கதிர்த் தண்முத்த மாலையைப்
புழைக்கை நீட்டிக் கொடுத்தது போதகம்
மழைக்கை நீட்டினன் வாங்கின னீதியிற்
பிழைக்க லாத பெருந்தகை வேந்தனே. (உஉ)

முத்த மாலிகை வாங்குமுன் முன்னின்ற
சித்த சாமி திருவுருக் கண்டிலன்
மத்த யானை வடிவமு மேனைய
ஒத்த தாக வுரவோன் வெருவினுன். (உங)

* கண்டாவளி - கண்டசரம்.

இந்த வாட லெமக்குயி ராயவிவ்
வந்த மில்லி யருள்வினை யாட்டெனு
முந்தை வேதா முதல்வனை மீளவும்
வந்து வந்தனை செய்தனன் மன்னனே. (உச)

முழுதுணர்ந்த முதல்வநின் னுடலை
இழுதை யேனறி யாதளந் தேனெனு
அழுதி றைஞ்சி யபராத மீந்துகை
தொழுது நின்று துதிக்கத் தொடங்கினன். (உரு)

வேறு.

வேதியாய் வேத விளைபொருளாய் வேதத்தின்
நீதியாய் நீதி நெறிகடந்த நீளொளியாய்
ஆதியா யீறாய் நடுவா யவைகழிந்த
சோதியாய் நின்றாயென் சோதனைத்தோ நின்னியல்பே. (உசு)

நின்றன் மொழிந்தமறை நின்னடிகள் வந்தித்தும்
பன்னா ளருச்சித்தும் பாதந் தலைசுமந்தும்
உன்னுமம் வாசித்து முன்னையறி யேனென்று
சொனனு லடியனேன சோதனைத்தோ நின்னியல்பே., (உஎ)

வேறு.

பெரியதினும் பெரியதுமாய்ச் சிறியதினுஞ் சிறியதுமாய்
அரியதினு மரியதுமா யெளியதினு மெளியதுமாய்க்
கரியதுமாய்க் காண்பானுங் காட்சியுமா யவைகடந்த
துரியமுமாய் நின்றாயென் சோதனைத்தோ நின்னியல்பே. (உஅ)

வேறு.

என்றுபல முறைபழிச்சி மனையெய்தி விக்ரமனை யீன்று பன்னாட்
டொன்றுமுறை கோலோச்சி விக்கிரமன் கவண்மிசைப்பார் சுமத்திப் பாசம்
வென்றுகளைந் தருட்சித்த சாமிதிரு வருளேக்கால் விளைபே றின்ப
மன்றன்மது வீழ்வண்டிற் கலந்திருந்தா னபிடேக மாறன் மனனே. (உகூ)

கல்லானைக்குக்கரும்பருத்தியபடல முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - க,௯அரு.

இருபத்திரண்டாவது

யானையெய்தபடலம்.

கட்டவிழ் கடுக்கையர் கலானைகழை தின்ன
இட்டதிது பஞ்சவ னிடத்தமண ரேவி
விட்டமத யானைவிழ மேவலர் புரத்தைச்
சுட்டகணை விட்டுயிர் தொலைத்தமுறை சொல்வாம். (க)

விக்கிரம பாண்டியன் வெலற்கரிய செங்கோல்
திக்குநில னுந்திறைகொள் செல்வநிறை வெய்
அக்கிரம வெங்கலி யரும்பகை யொதுங்கச்
சக்கர முருட்டியிடர் சாய்த்துமுறை செய்வான். (உ)

புத்தரம ணுதிய புறக்கலை யகழ்ந்து
நித்தமறை யாகம நெறிப்பயிர் வளர்த்து
மெய்த்தவிதி பத்தியின் விளைந்தபயன் யாருந்
துய்த்திட மருத்தொழி னடத்திவருந் தூயோன் (ங)

மருவிதழி யானுறையும் வானிழி விமானத்
தருகுவட பக்கமுற வாலய மெழுப்பி
உருவரு விரண்டிணையு மொருவிவரு சித்தர்
திருவுருவு கண்டுபணி செய்தொழுகு நாளில். (ச)

செய்யகதி ரோன்வழிய செம்பிய னொருத்தன்
கையனவன வென்றிபயில் காஞ்சிநக ருள்ளான்
பொய்யமணர் கட்டுரை புறத்துறையி னின்றான்
மையின்மதி மாறனொடு மாறுபட நின்றான். (ரு)

முடங்கன்மதி செஞ்சடை முடித்துவிடை யேறு
விடங்கரது சேவடி விழுங்கிய மனத்து
மடங்கனிகர் தென்னனெதிர் வந்துபொர லாற்றா
தடங்கலனோர் வஞ்சனையி னுலட மதித்தான். (சா)

வேறு.

அஞ்சனங் கவுஞ்சங் கோவர்த் தனந்திரி கூடங் காஞ்சி
குஞ்சர சைய மேம கூடமே விந்த மென்னும்
மஞ்சிவர் வரைக ளெட்டும் வைகுறு மமணர் தம்மில்
எஞ்சலில் குரவர்க் கோலை வேறுவே றெழுதி விட்டான். (எ)

வடிவுபோ லுள்ள மெல்லா மாசிருள் புதைய நின்ற
அடிகண்மா ராவா ரெண்ணா யிரவரு மார்த்தார் வேய்ந்த
முடிகெழு வேந்தன் விட்ட முடங்கலை நிமிர்த்து வாசித்
திடிகெழு கார்போற் குன்றி னிழிந்துவே றிடத்திற் செல்வார். (அ)

யாவரு மொருங்கு கூடி யிருள்வழி கொள்வ தேய்ப்பக்
காவல்வல் லரணஞ் சூழ்ந்த காஞ்சிமா நகரத் தெய்திப்
பூவலர் தாரான் கோயிற் புறங்கடை புகுந்து வேந்தன்
ஏவலர் விடுப்ப வுள்போ யிறைமக னிருக்கை புக்கார். (கூ)

மன்னவன் முடிமேற் பீலி வைத்தன ராக்கங் கூற
அன்னவ னவரை நோக்கி வசியமுன் றுறும் வல்லீர்
தென்னனை யாபி சாரஞ் செய்துயிர் செகுத்தா லுங்கட்
கென்னது நாடு பாதி தருவல்போ யியற்று மென்றான். (க0)

தவம்புரிந் தவமே செய்வார் தாமதற் குடன்பட் டேகி
நீவந்ததெண் டிரைநீர்ப் பாலி நெடுங்கரைக் காத மூன்றிற்
கவர்ந்தகன் சாலை கோலி யோசனை யகலங் கல்வி
அவம்படு வேள்விக் குண்டங் கோணமெட் டாகக் கண்டார். (கக)

விடம்பொதி காட்டம் பெய்து நிம்பநெய் விராய நஞ்சின்
உடம்புடை யுயிரின் கோழுன் கறிப்பொடி யூறு மெண்ணெய்
இடம்பட வாயங் காந்த வெரிக்குழி புதையப் பெய்து
கொடும்பழி வேள்வி செய்தார் கொல்லாத விரதம் பூண்டார். (கஉ)

மாமுள பொதும்பர் நந்தா வனமுள சோலை யுள்ள
காடுள கருகிச் சாயக் கயலுள வோடை யுள்ள
கோடுள வாவி யுள்ள குளமுள வறப்பத் தாவிச்
சேடுள முகிலுந் தீயச் சிகையெழு குண்டத் தீவாய். (௧௩)

கூற்றெழு தோற்றம் போல வஞ்சனக் குன்ற மபாலக்
காற்றெழு செவியு நால்வாய் கௌவிய மருப்பு மாறூ
ஊற்றெழு மதமு மூச லாடிய வொற்றைக் கையும்
ஏற்றெழு விடம்போற் சீறி யெழுந்ததோர் தறுகண் யானை. (௧௪)

அந்தமா வேள்வித் தீயு மவியமும் மதமுஞ் சோர
வந்தமா களிற்றை நீபோய் வழுதியை மதுரை யோடுஞ்
சிந்தவே தொலைத்தி யென்னாத் தென்றிசைச் செல்ல வேவி
முந்தவே விடுத்த மாசு மூழ்குட லமணப் பேய்கள். (௧௫)

வேறு.

அருளற்றிரு ளுடலிற்புதை யமணக்கய வர்களுட
டெருளற்றரு மறையிற்படர் செயலற்றிக பரமெய்ப்
பொருளற்றவ னனிகத்தொடு புறமொய்த்திட மதமா
வெருளற்றிடி குரலிற்படி வெடிபட்டிட வருமால். (௧௬)

அடியின்னள வகல்பாதல முடியின்னள வண்டம்
இடியின்னள வெழுகாசெவி யெறிகாலள வகிலம்
மடியும்மள வுளர்கான்மத மழையின்னள வுலக
முடிவின்னெழு கடலகண்ணழ லளவாமுது வடவை. (௧௭)

கூற்றஞ்சிட வருமிக்கரி குரலஞ்செவி முழைவாய்
ஏற்றஞ்செய மடங்குஞ்செவி யெறிகால்வழு விழித்தீ
ஊற்றஞ்செய மடைவாயுடைந் தொழுகுங்கட மதநீர்
நாற்றஞ்செயத் திசைவேழமு நடுக்கஞ்செய்து நலியும். (௧௮)

இடிக்கும்புயல் வயிற்றைக்கிழித் திடியேற்றினை யுதிர்க்கும்
வெடிக்கும்பிளி றொலியாற்றிசை விழுங்கிச்செவி டாகுந்
துடிக்கும்புழைக் கையோச்சிவிண் டொடுகுன்றினைச் சுற்றிப்
பிடிக்குங்கடல கலக்குந்தனிப் பெருமத்தெனத் திரிக்கும். (௧௯)

உருமுக்குர லொலியிற்றுள றொலிவிட்டெறி செவியிற்
றிருமுட்பிறை யெயிறிற்றழ லெரிகட்டிரு ளுடலிற்
றருமுக்கட வருவித்துர லடியிற்றென நிலமேல்
வருமுக்கிர வடவைக்கனல் வரினொப்பத மதமா. (௨௦)

தெழிபட்டதிக் கயத்தின்செவி தீயப்பகை யோடும்
வழிபட்டொரு கடுங்கூற்றென வருகுஞ்சர வரவை
விழிபட்டவர் மொழியாலுணர் விரைபட்டலர் வேம்பன்
சுழிபட்டலை புனல்போன்மனஞ் சுழன்றுணினைந் தழன்றான். (௨௧)

மைப்போதகம் பொறையாற்றிய மணிக்கோயின்முன் குறுகாக்
கைப்போதக முரித்தான்கழற் காற்போதக முறத்தாழ்ந்
திப்போதகந் தனையுந்தொலைத் தெனைக்காத்தியென் றிரந்தான்
அப்போதகல் வானின்றொரு திருவாக்கெழுந் தன்றே. (௨௨)

விட்டார்வலி கெடநாமொரு விற்சேவக னாகி
ஒட்டார்விட வருவெங்கரி யுயிர்வௌவுது முதனின்
மட்டார்பொழிற் கடிமாநக ரயற்கிட்டிசை மருங்கோர்
அட்டாலைமண் டபஞ்செய்யென வதுகேட்டெழுந் தரசன். (உக)

அகங்கவ்விய களிப்பெய்திவந் தட்டாலைமண் டபம்பொன்
நகங்கவ்விய தெனத்தூவொரு நாளன்கினி லெடுத்தே
சகங்கவ்விய புகழானசெயத் தறுகட்கணை மதமா
முகங்கவ்விய விற்சேவகன் வருவானது மொழிவாம். (உச)

வேறு.

நீனிற நீத்த நீந்து நிழன்மதி யிரண்டுன் டென்ன
வானிற வலயச் சங்க வார்குழை நுழைவித் தம்பூம்
பானிற வெகினங் காணுப் படர்சடை மறைத்துத் தோற்றுங்
கானிறை குஞ்சிச் சூட்டிற் களிமயிற் கலாபஞ் சூடி. (உரு)

கருங்கடன் முளைத்த செக்கர்க் கதிரெனக் குருதிக் கச்சை
மருங்குற வீக்கிச் சோரி வாயுடை வாளுங் கட்டி
இரங்குநான் மறைக ளேங்க விருகிலந் தீண்டு தாளிற்
பொருங்கமல் வளைத்து வாளிப் புட்டிலும் புறத்து வீக்கி. (உசா)

வீங்கிய தடந்தோ ளிட்ட வார்சிலை வில்லி னோடும்
பாங்குறை யிமயப் பாவை பாதியே யன்றி முற்றும்
வாங்கிய வண்ணம் போன்று மல்லது மாலு மோர்பால்
ஓங்கிய வண்ணம் போன்று மொளிநிறம் பசந்து தோன்ற. (உஎ)

காமனுங் காமுற் றஞ்சுங் காளையாம் பருவந் தோன்றத்
தாமுல களந்த வென்றித் தனிவிற்சே வகனாய்த் தோன்றி
மாமறை மகுட மன்ன மண்டபத் தேறித் தென்னர்
கோமக னிடுக்கண் டீர்ப்பான் குஞ்சர வரவு நோக்கா. (உஅ)

அஞ்சுகூ வினிசேய்த் தென்ன வதுவர வறனி லாதான்
வெஞ்சினக் கோலி னோன்றாண் மிதித்துமெய் குழைய வாங்கிச்
செஞ்சிலை நெடுநாண் பூட்டித் திருவிர றெறித்துத் தாக்கிக்
குஞ்சர மெட்டு மஞ்சக் கோளரி முழக்கங் காட்டி. (உகூ)

இங்கித நெடுங்கோ தண்ட மிடங்கையி லெடுத்து நார
சிங்கவெங் கணைதொட் டாகந் திருகமுன் னிடத்தாள் செல்ல
அங்குலி யிரண்டா லையன் செவியுற வலித்து விட்டான்
மங்குலின் முழங்கும் வேழ மத்தகங் கிழிந்த தன்றே. (௩0)

கொண்டலி னலறிச் சீறி வீழ்ந்தது கொடிய வேழம்
பிண்டது பாருஞ் சேடன் சென்னியும் பிளந்த தண்டம்
விண்டது போலு மென்னத் துண்ணென வெருவிப் போன
பண்டைய தருக்கும் வீறும் படைத்தன திசைமால் யானை. (௩க)

புதைபடக் கரித்தோல் போர்த்த புண்ணிய மூர்த்தி தாளால்
உதைபடக் கிடந்த கூற்ற மொத்தது மத்த யானை
சுதைபடு மதிக்கோ வேந்தன் றொழுகுலச் சிறுவ னொத்தான்
பதைபடு மமணர் கால படரெனப் படரிற் பட்டார். (௩உ)

இருள்கிடந் தனைய தானை யிட்டசிந் துரங்கார் மாலை
இருண்முகத் தொதுங்கிச் செல்லு மிரவிசெங் கிரணம் போன்ற
திருண்முழு துண்ணக் காலை யெழுகதிர் வட்ட மன்ன
திருளினை மறைத்த கண்ட னெய்தவாய் பெய்யுஞ் செந்நீர். (௧௩)

பொய்யரு மனத்தார் தேற்றும் புன்னெறி யொழுக்கம் பூண்ட
வெய்யகோன் கொடுங்கோ றன்னை வெண்மருப் பாகத் தாங்கி
மையன்மா வடிவங் கொண்டு வந்தவெங் கலியைத் தென்னன்
செய்யகோ லையன் சிங்க வாளியாய்ச் சிதைத்த தன்றே. (௧௪)

உருமுவீழ்ப் புண்ட குன்றி னும்பன்மா வம்பு தொட்ட
பெருமுழை வாயும் வாயும் பெருகின வருவிச் சோரி
கருமுகின் மானச் சேனங் கழுதுகள் பூத மொய்த்த
திருமணித் தடந்தோள் வீங்கத் தென்னவ னுவகை பூத்தான். (௧௫)

ஆனையின் புண்ணீ ருண்ண வடுத்தகா ருடற்பே யென்னச்
சேனையின் செல்லப் போந்த திணியிரு ளமணர் தம்மை
மீனவன் கண்டு சீற வேந்தவன் குறிப்பி னிற்கும்
மானவெஞ் சினவேன் மள்ளர் வல்லைபோய் முடுக்க லுற்றார். (௧௬)

எடுத்தனர் கையிற் றண்ட மெறிந்தனர் மறிந்து சூழ்போய்த்
தடுத்தனர் கரகந் தூளாத் தகர்த்தனர் பீலி யோடுந்
தொடுத்தன ருடுத்த பாயைத் துணிபடக் கிழித்துக் கால்வாய்
விடுத்தனர் மானம் போக்கி விட்டனர் சில்லோர் தம்மை. (௧௭)

எறியுண்டு செய்த மாய மிழப்புண்டு சேனை யோடு
முறியுண்டு நடுக்கம் பாவ மூழ்குண்டு மாழ்கிச் சாம்பிப்
பறியுண்ட தலையர் யாரும் பழிப்புண்டு பாயுந் தாமும்
உறியுண்ட கரகத் தோடு மொதுங்குண்டு பதுங்கிப் போனார். (௧௮)

மாதங்கந் தடிந்தட் டாலை மண்டபத் திருந்த வீரன்
பாதங்கள் கையாற் பற்றிப் பாண்டிய னிரந்து வேண்டிப்
போதங்கள் கடந்தா யென்றும் பொலியவிங் கிருத்தி யென்ன
வேதங்கட் கருத்தஞ் சொன்ன வேதிய னதற்கு நேர்ந்தான். (௧௯)

பின்னுஞ்சில் வரங்க ணலகப் பெற்றுநான் மாடக் கூடல்
மன்னுஞ்சின் மயனை வந்து வந்தித்து வருநாட் காமன்
என்னுஞ்சின் மலர்ப்பூந் தண்டா ரிராசசே கரனைப் பெற்று
மின்னுஞ்சில் லியந்தேர் வேந்தன் மேதினி புரக்கு மன்னோ. (௨௦)

வம்புளாய் மலர்ந்த வாரான் வரவிடு மத்தக் குன்றிற்
சிம்புளாய் வடிவங் கொண்ட சேவக னேவல் செய்த
அம்புளாய்த் தூணம் விள்ள வன்றவ தரித்த வாபோற்
செம்புளாய்க் கொடிய * நார சிங்கமா யிருந்த தன்றே. (௨௧)

வேறு.

உலகெலா மழித்து மீளவுண் டாக்கு முருத்திரன் வீரசத் தியினிற்
சிலதரித் திறவா வவுணனமார் பிடந்த சிங்கநா யகனையங் கெய்தி
அலகின்மா தவஞ்செய் துரோமசன் றன்பே ரறியவோர் தீர்த்தமுண் டாக்கி
இலகுபே றடைந்தான் பிரகலா தனுநோற் றீறிலாப் பெருவர மடைந்தான்

யானையெய்தபடல முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௧௪௨௭.

---

* கருடப்பக்ஷியாகிய கொடியையுடைய.

இருபத்துமூன்றாவது

விருத்தகுமாரபாலரானபடலம்.

தழையு லாங்கைய ரேவிய தந்திமேல் விடைமேல்
அழகர் சேவகஞ் செய்தவா றறைந்தன மவரே
கிழவ னாகிப்பின் காளையாய்க் கிஞ்சுகச் செவ்வாய்க்
குழவி யாய்விளை யாடிய கொள்கையைப் பகர்வாம். (க)

தென்னன் விக்கிர மன்புயத் திருநிலச் செல்வி
மன்னி வாழுநாண் மதுரையின் மறையுவ னொருவன்
அன்ன வன்விரு பாக்கனா மவன்குடி வாழ்க்கை
மின்ன னாள்வட மீனனாள் பெயர்சுப விரதை. (உ)

அனையர் தங்களுக் கரும்பெறன் மகவின்றி யகந்தம்
புனித நல்லறஞ் செய்தொழி லொழுக்கமும் பூண்டு
நனைய வார்குழ லன்னைய ரெழுவர்பா னண்ணி
இனிய மாதவஞ் செய்தொரு பெண்மக வீன்றார். (௩)

பேருங் கௌரியென் றழைத்தனர் பிராயமோ ரைந்திற்
சாருங் கௌரியும் பிறவிநோய் தணிப்பதற் குறுதி
தேருஞ் சிந்தையா டந்தையை வணங்கியிச் செனனம்
ஈருந் தெய்வத மந்திர மியாதென வினவ. (௪)

அந்த ணாளனு மதிசயித் தரும்பெறன் மகட்குச்
சிந்தை யார்வமோ டிறைவிதன் மனுவினைச் செப்பத்
தந்தை பாலது தெளிந்துநாத் தழும்புறப் பயின்றாள்
முந்தை நாளருந் தவக்குறை முடித்திட வந்தாள். (௫)

தாதை தன்றவக் கொழுந்தினுக் கிசையமா சைவ
மாத வத்தனா யாதியாச் சிரமத்தில் வழங்கும்
வேத வித்துமாய் மரபினான் மேம்படு வானெனப்
போது போதுமென் றுளத்தொடு புகன்றுகொண் டிருந்தான். (௬)

பருவ நாலிரண் டாகமேற் கடிமணப் பருவம்
வருவ தாகவங் கொருபகல் வைணவப் படிவப்
பிரம சாரியாய்க் கடைதொறும் பிச்சைபுக் குண்பான்
ஒருவன் வந்தனன் பலிக்கவ ணயற்புலத் துள்ளான். (௭)

பிச்சை வேண்டினா னவற்குத்தன் பெண்ணினைக் கொடுப்பான்
இச்சை கூர்ந்தருந் தவத்தினால் வருந்தியீன் றெடுத்த
விச்சை வேதியன் மனையொடு சுற்றமும் வினவா
தச்ச மின்றிநீ ரெடுத்தவ னங்கையிற் பெய்தான். (௮)

கலிக்கு நூபுரச் சீறடிக் கன்னிதன் விதியும்
பலிக்கு வந்தவ னல்வினைப் பகுதியுந் துரப்ப
ஒலிக்கு மந்திரச் சிரகநீ ரொழுக்கினான் மூழ்கிச்
சலிக்கு மன்னையுந் தமர்களுங் கேட்டுளந் தளர்வார். (௯)

குலனு மோர்கிலன் கோத்திர மோர்கிலன் குடிமை
நலனு மோர்கில னொழுக்கமுங் கல்வியு நண்ணுந்
தலனு மோர்கிலன் கன்னியைத் தத்தஞ்செய் தானெனப்
புலனு மோர்ந்தவன் விதிவழி மதியெனப் புலந்தார். (௧௦)

மற்றவன்குடி கோத்திரங் குத்திர மற்றும்
உற்ற றிந்துநம் மரபினுக் கொக்குமான் மாயோன்
சொற்ற தந்திர வைணவத் தொடக்குண்டு திரியுங்
குற்ற மொன்றினி மறுப்பதென் கொடுப்பதென் றிசைந்தார். (௧௧)

தாயு மொக்கலு மொத்தபின் றுதையும் வேதத்
தாயு மெண்மணத் தாதியா மறநிலை யாற்றுந்
தேயு நுண்ணிடைக் கன்னியைச் செம்பொனுற் புதைத்துக்
காயு மாரழன் முன்னரக் காளைக்குக் கொடுத்தான். (௧௨)

தெய்வ மங்கல வரிசைகள் செய்துதாள் பயந்த
மௌவ லங்குழற் கன்னியை மணமக னோடுங்
கௌவை யம்புனல் வேலிசூழ் கடிநகர் விடுத்தான்
சைவ மங்கல வேதியத் தாபத னிப்பால். (௧௩)

வேறு.

இல்லார்க்குக் கிழியீடு நேர்பட்டா லெனப்பல்லா ரில்லந் தோறுஞ்
செல்லாகின் றிரந்துண்டு திரிந்தமகன் மணமகனுய்ச் செல்வ நல்க
வல்லாளை மணந்துவரு வான்போற்றம் மனைபுகுத வங்கட் சிலப்
பொல்லாராய் வைணவத்துப் புக்கொழுகு தாய்தந்தை பொருளர்களாகி. (௧௪)

வந்தமண வாட்டிசிவ சிந்தனையுஞ் சைவதவ வடிவு நோக்கி
வெந்தவுடல் போன்மனமும் வெந்தவளை வேறுதுக்கி வேண்டா ராகி
நிந்தனைசெய் தொழுகுவா ரவளையொரு நாணீத்து நீங்கி வேற்றூர்த்
தந்தமர்மங் கலங்காண்பார் தனியேவைத் தகம்பூட்டித் தாங்கள் போனார். (௧௫)

உண்மாசு கழுவுவது நீறென்றே யுபநிடத முரைப்பக் கேட்டும்
மண்மாசு படப்பூசும் வடிவுடையா ரகன்றதற்பின் மனையில் வைகும்
பெண்மாசு கழியவொரு சிவனடியார் தமைக்காணப் பெருமவின்றென்
கண்மாசு படுவதெனக் கனிந்தொழுகு தலையன்பாற் கவலை கூர்வாள். (௧௬)

சிவனடியார்க் கன்பிலாச் சிந்தையே யிரும்பேவல் செய்து நாளும்
அவனடியார் திறத்தொழுகா வாக்கையே மரஞ்செவிகண் ணாதி யைந்தும்
பவனடியா ரிடைச்செலுத்தாப் படிவமே பாவைமறை பரவுஞ் சைவ
தவநெறியல் லாநெறியே பவநெறியென் றனியளாய்த் தளர்வாள் பின்னும். (௧௭)

எனைத்துயிர்க்கு முறுதியிக பரமென்ப வவைகொடுப்பா னெல்லாந் தானாய்
அனைத்துயிர்க்கு முயிராகு மரனென்ப வவனறிவார்க் கங்கம் வாக்கு
மனத்துறுமெய்ப் பத்திவழி வருமென்ப வப்பத்தி வழிநிற் பார்க்கு
வினைத்துயர்தீர்த் திடவெடுத்த வடிவென்ப தவனடியார் வேட மன்றே. (௧௮)

என்னவிருந் தலமருவா ளிருக்குமிடத் தவளுள்ளத் தெண்ணி யாங்கே
தென்னவனு யிருந்தரசு செய்தபிரா னவட்கருளுஞ் செவ்வி நோக்கிக்
கன்னமுரங் கரஞ்சிரந்தோள் கண்டமுநகண் டிகைபூண்டு கையிற் றம்போற்
பன்னெடுநாட் பழகியதோர் தனிப்பெரிய புத்தகமும் பக்கஞ் சேர்த்தி. (௧௯)

கரிந்தநீள் கயன்முள்ளி னரையுமுது திரைகவுளுங் கனைக்கு நெஞ்சுஞ்
சரிந்தகோ வணவுடையுந் தலைப்பணிப்பு முத்தரியந் தாங்கு தோளும்
புரிந்தநூல் கிடந்தலையும் புண்ணியநீ றணிமார்பும் பொலிய நீழல்
விரிந்ததோர் தனிக்குடையந் தண்டூன்றிக் கவிழ்ந்தசையு மெய்யுந் தாங்கி. (௨௦)

ஒருத்தரா யுண்டிபல பகல்கழிந்த பசியினர்போ லுயங்கி வாடி
விருத்தவே தியராய்வந் தகம்புகுதக் கண்டெழுந்து மீதூ ரன்பின்
கருத்தளாய்த் தவிசிருத்திக் கைதொழுது சிவனையிங்குக் காண வென்ன
வருத்தமா தவமுடையே னெனமுனிவர் பசித்துன்பால் வந்தே மென்றார். (௨௧)

இற்பூட்டிப் போயினா ரெமரங்க ளெனக்கௌரி யியம்ப மேரு
விற்பூட்டிப் புரம்பொடித்த வேதியர்நின் கைதொட்டு விடுமுன் யாத்த
கொற்பூட்டு விடுந்திறந்து கடிதடிசில் சமைத்தியெனக் குமரி தாளில்
அற்பூட்டு மடவரலு மவ்வாறே யட்டில் புகுந் தடிசி லாக்கி. (௨௨)

தையன்மா தவக்கொழுந்து புறம்போந்து சிரகநீர் தளிர்க்கை தாங்கி
ஐயனே யமுதுசெய வெழுந்தருளு மெனவெழுந்த வடிகள் பாதச்
செய்யதா மரைவிளக்கி யந்நீர்தன் சென்னியின்மேற் றெளித்துப் பாச
மையன்மா சிருள்கழுவி யகம்புகுவித் தாசனமேல் வைத்துப் பின்னர். (௨௩)

நகைமலரிட் டருச்சித்து நல்லபரி கலந்திருத்தி நறுவீ முல்லை
முகையனைய பாலடிசில் வெள்ளிமலை யெனப்பருப்பு முதுகிற் செம்பொற்
சிகரமெனப் பல்வேறு கருணைபுறந் தழீஇக்கிடந்த சிறுகுன் றீட்ட
வகையெனநெய்யருவியெனப் படைத்தனைய சிற்றுண்டி வகையும்பெய்து. (௨௪)

செய்யவா யிடையிடையே முகமனுரை யின்னமுது செவியி னூட்டத்
தையலாள் வளைக்கையறு சுவையமுது வாயூட்டத் தளர்ந்த யாக்கை
ஐயர்தாந் திருவமுது செய்தமுதுண் டவரெனமூப் பகன்று பூவிற்
கையதே மலர்வாளிக் காளை வடி வாயிருந்தார் கன்னி காண. (௨௫)

பூசியவெண் ணீறுபோய்க் கலவையாய்க் கண்டிகைபோய்ப் பொன்செய் பூணுங்
காசணிபொற் குண்டலமுங் கடகமுமாய் மூப்புப்போய்க் காளை யான
தேசுருவங் கண்டுநடு நடுங்கிவளைக் கரநெரித்துத் திகைத்து வேர்த்துக்
கூசியொரு புறத்தொதுங்கி நின்றாளக் கற்புமலர்க் கொம்ப ரன்னாள். (௨௬)

ஆனபொழு தருங்கடிநன் மணங்குறித்து மனையிற்றீர்ந் தயனூர் புக்க
தேனொழுகு துழாயலங்கற் றீர்த்தனுக்கன் புடையார்போற் றிரியும் வஞ்ச
மானமுடை யார்மீண்டு மனைபுகலும் பதினாறு வயதின் மேய
பானன்மணி கண்டனுதற் காப்பணிந்தோர் பசுங்குழவிப் படிவங் கொண்டான்.

எழுதரிய மறைச்சிலம்பு கிடந்துபுறத் தலம்பவன்ப ரிதய மென்னுஞ்
செழுமலரோ டையின்மலர்ந்து சிவானந்தத் தேன்றதும்பு தெய்வக் கஞ்சத்
தொழுதகுசிற் றடிப்பெரிய விரல்சுவைத்து மைக்கணீர் துளும்ப வாய்விட்
டழுதணையா டையிற்கிடந்தா னனைத்துயிரு மீன்றுகாத் தழிக்கு மப்பன். (௨௮)

தாய்விட்டுப் போனதொரு தனிக்குழவி யெனக்கலங்கித் தாங்கித் தேடி
ஆய்விட்டுப் பிரமனழ மறைகளழ வன்புடையா ளன்பிற் பட்டு
வாய்விட்டுக் கிடந்தழுத மகவினைக்கண் டணங்கனையாண் மாமி யென்னுங்
*காய்விட்டு மதக்கொடியா ளிம்மகவே தெனக்கேட்டாள் கௌரி தன்னை. (௨௯)

---

* மன்மதனுக்குப் பூவில்லும் உண்டென்பதைக் கந்தபுராணத்தில் காமதகனப்படலம் ௬௨-வது செய்யுளானுமுணர்க.

நத்தனயன் றனக்கரிய நாயகனுக் கன்புடையா ணவில்வா டேவ
தத்தனயந் தருமனைவி யொடுபோந்து சிறுபோது தைய லாயீண்
டித்தனயன் றனைப்பார்த்துக் கோடியென வைத்தகன்றா னென்னு முன்னஞ்
சித்தநய னங்கலங்கச் சிறிமனை வாட்டித்தன்மேற் செற்றங் கொண்டாள். (௧0)

என்புபூண் டிடுகொட்டிற் பொடியாடு முருத்திரனுக் கிலைடைய ருத
அன்புபூண் டான்மகவுக் கன்புடையாய் நீயுமெமக் காகா வென்னாத்
துன்புபூண் டயர்வாளை மகவையுங்கொண் டகத்தைவிடத் துரத்தி னார்கள்
வன்புபூண் டொழுகுவைண வம்பூண்டு பொறையிரக்க மான நீத்தார். (௧௧)

தாயிலாப் பிள்ளைமுகந் தனைநோக்கித் தெருவினிடைத் தளர்வா ளுள்ளங்
கோயிலாக் கொண்டுறையுங் கூடனா யகனைமனக் குறிப்பிற் கண்டு
வேயிலாக் கியதடந்தோட் கௌரிதிரு மந்திரத்தை விளம்ப லோடுஞ்
சேயிலாய்க் கிடந்தழுத குழவிவிசும் பிடைவிடைமேற் றெரியக் கண்டாள். (௧௨)

மழவுருநீத் தடலேற்றின் வருவார்தம் மிடத்தணங்கின் மனுவை யோதிப்
பழகியபார்ப் பனமகளைப் பார்ப்பதியின் வடிவாக்கிப் பலருங் கண்டு
தொழவிடைமே லேற்றிவிசும் பாருக மலர்மாரி சுரர்க டூற்ற
அழகரெழுந் தருளினா களிதூங்கி யதிசயித்தா ரவனி மாக்கள். (௧௩)

விருத்தகுமாரபாலரானபடலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௩,௪௯0.

இருபத்துநான்காவது

மாறியாடினபடலம்.

திருத்த ராய்மது ராபுரி மேவிய சித்தரா கியசெல்வர்
விருத்த ராயிளை யவருமாய் மழவுமாய் வேடங்கொண் டடலேற்றின்
ஒருத்த ராய்விளை யாடிய வாடலை யுரைத்தன மினிமன்றுள்
நிருத்த ராயவர் மாறிநின் றாடிய நிலைசிறி துரைசெய்வாம். (௧)

வேந்தன் மீனவன் கொடியவ னாகிய விக்கிர மன்றன்றோள்
ஏந்து மண்பொறை யிராசசே கரன்புயத் திறக்கியைந் தருநாடன்
பூந்தண் மாமலர் வேதியன் மாதவன் புரத்தின்மேற் பொலிந்தோங்குஞ்
சாந்த நீறெனச் சண்ணித்த புண்ணியத் தனிமுத னகர்சார்ந்தான். (௨)

கண்ண கன்புவி யிராசசே கரன்பொதுக் கடிந்துசெங் கோலோச்சி
வண்ண வெண்குடை நிழற்றுவா னணைந்த வடிவமாய்த் தனிமன்றுள்
அண்ண லாடிய திருநடத் தன்பினா லாடனூ லொழித்தேனை
எண்ணு மூவிரு பத்துமுக் கலையுங்கற் றிறைமுறை செயுநாளில். (௩)

சிலம்பி வாயினூ லிழைத்திடு பந்தரிற் செங்கண்மா றொழுவைகும்
அலம்பு தெண்டிரைப் பொன்னியந் தண்டுறை யானைக்கா விறைக்கன்பு
கலந்த சிந்தையான் மூவிரு பத்துநாற் கலைகளும் பயின்றுள்ளம்
மலர்ந்த வண்கரி காற்பெரு வளத்தவன் வையகம் புரக்கின்றான். (௪)

பொன்னி நாடவன் வாயிலுள் ளானொரு புலவன்வந் தலர்வேம்பின்
கன்னி நாடனைக் கண்டுமுன் பரவுவான் கனைகழற் கரிகாலன்
மன்ன வற்கறு பத்துநாற் கலைகளும் வரும்வரா துனக்கொன்று
தென்ன ரேறனை யாயது பரதநூ றெரிந்திலை யெனச்சொன்னான். (௫)

கேட்ட மீனவன் மறுபுல விஞ்சையன் கிளத்துசொல் லிகன்மானம்
மூட்ட வாகுல மூழ்கிய மனத்தனாய் முதுமறைச் சிரமன்றுள்
நாட்ட மூன்றுடை நாயக னடலை நானுமா டுதற்குள்ளும்
வேட்ட தேகொலா மிதுவுமெம் பிரானருள் விதியெனா வதுகற்பான். (சு)

வே று.

ஆடனூல் வரம்பு கண்டவ ராகியெவ்வழி யாடலும் பயின்ற
நாடக நடைதேர் புலவரைத் தருவி நண்ணிய வவர்க்கெலா மகிழ்ச்சி
வீடருஞ் சிறப்பா லறுவையும் பூணும் வெறுக்கையும் வெறுத்திடக் கொடுத்துப்
பாடலவண் டரற்றுந் தாரினான் பரதப் பனுவலுங் கசடறப் பயில்வான். (எ)

பாவமோ டராகந் தாளமிம் மூன்றும் பகர்ந்திடு முறையினாற் பரதம்
ஆவயி னங்க முபாங்கமே பிரத்தி யாங்கமே யலர்முக ராகம்
ஓவறு சீர்சால் கரப்பிர சார முவமையில் சிரக்கர கருமந்
தாவறு கரசேத் திரங்கர கரணந் தானக மேசுத்த சாரி. (அ)

விண்டிடாத் தேசி சாரியே நியாயம் விருத்தியே பிரவிசா ரம்பூ
மண்டல முடனா காசமண் டலமே மாசில்சுத் தக்கர ணஞ்சீர்
கண்டவுற் புலித கரணமே யங்க காரமே யிரேசித மென்னக்
கொண்டநா லைந்து பேதமுங் கற்றுக் கோதறப் பயினறபி னவற்றுள். (கூ)

வருத்தமின் மஞ்சோபா வாதியா மெட்டு வகைநிருத் தங்களிற் சாரி
நிருத்தமா கியதாண் டவமக மார்க்க நிகழ்த்திடுந் தேசியே வடுகே
அருத்தமா கியசிங் களமென மூன்று மதுநிலை யாறுமூ விரண்டு
திருத்தமாம் பதமுந் திகழிரே காதி செப்பிய வங்கமீ ரெட்டும். (க0)

நால்வகைத் தாகுங் கரணமு மேலோர் நாட்டிய விருவகைக் கரமுங்
கால்வகை புரிகை முதற்பதி னாறுங் கவான்மனை யாதியா மிரண்டு
பாலது மடிப்பு வகையெழு நான்கும் பழிப்பறு சுததசா ரியெனும்
ஏலுறு பூசா ரிகள்பதி னாறு மித்துணைக் ககனசா ரிகளும். (கக)

ஏற்றதிக் கிராந்த மாதியா முப்பத் திருவகைத் தேசிசா ரிகளுங்
காற்றினுங் கடுந்தேர்ச் சக்கர முதலாங் ககனசா ரிகைகளே ழைந்தாறு
சாற்றுவித் துவற்பி ராந்தமா தியவாஞ் சாரிபத் தொன்பது மாகப்
போற்றிவை யனைத்து முட்படப் புட்ப புடத்திலக் கணமுதற் பொருள்கள். ()

ஆசவாத் தியமுன் பொருண்முதற் களாச மாதியாம் பாடபே தங்கள்
பேசிய பதினா றெண்பதும் படக பேதமொன் றொழிந்த நாலைந்தும்
மாசறு மளக மாதியாம் பாட வகைகளா லேழுமற் றவற்றிற்
பூசல்வார்த் திகந்தொட் டைவகைச் சச்ச புடாதியாந் தாளமாத் திரையும். (கங)

கிளர்ந்தமாத் திரையின் கதிகளுஞ் சொல்லுங் கீதமும் பாடமு மெழுத்தும்
வளர்தரு மணிபந் தாதிகீ ததநின் வருத்தகட் டளையெழு நான்கும்
அளந்திடு சுரலை யாதிகட் டளையே ழைந்துநன் கமைந்துபா வாதி
விளம்பிய மூன்று கலப்புமீ ரூக விளைத்திடுங் கூத்தக மார்க்கம். (கச)

வே று.

உரைத்தவிக் கூத்துக் கற்கும் போதுதன் னுடம்பிற் சால
வருத்தநோ யெய்தி யிந்த வருத்தநான் மறையுந் தேறா
அருத்தமா யறிவாய் வெள்ளி யம்பலத் தாடி நின்ற
நிருத்தனார் தமக்கு முண்டே யென்பது நினைவிற் கொண்டான். (கரு)

கரியதா மரைக்கண் ணானுங் கமலநான் முகனுங் காண்டற்
கரியதா ளொன்றே நோவ வாற்றநா ணிற்ப தந்தோ
உரியதா மிதனைக் கற்று வருத்தமுற் றோர்ந்து மீது
தெரியநா னிருப்ப தேயோ வறனெனச் சிந்தை நோவான். (௧௬)

வடுப்படு பிறவிப் பௌவ வரம்புகாண் கின்ற நாள்வந்
தடுப்பவர் யாவ ரேனு மவர்க்கெலாம் போகம் வீடு
கொடுப்பவர் செய்யு மிந்தக் கூத்தையெப் படிநான் சென்று
தடுப்பது தகாதன் றேனும் வருந்துமே சரண மென்னா. (௧௭)

இதற்கிது துணிவென் றுன்னி யெழுந்துபோய்ச் சிவனி ராவிற்
கதக்களிற் றொருத்த லேந்துங் கதிர்மணிக் குடுமிக் கோயில்
மதக்கரி யுரியி னாற்கு வரம்பறச் சிறந்த பூசை
விதப்பட யாம நான்கும் விதிவழி யியற்றல் செய்யா. (௧௮)

விண்டக மலர்த்தா ளேத்தி வெள்ளியம் பலத்து ளன்பர்
தொண்டக மலர நின்ற சோதிமெய்ஞ் ஞானக் கூத்தைக்
கண்டக மகிழ்ந்து தாழ்ந்து கட்புனல் சோரச் செங்கை
முண்டக முடிமே லேற்றி முகிழ்த்துநின் றிதனை வேண்டும். (௧௯)

நின்றதா ளெடுத்து வீசி யெடுத்ததா ணிலமீ தூன்றி
இன்றுநான் காண மாறி யாடியென் வருத்த மெல்லாம்
பொன்றுமா செய்தி யன்றேற் பொன்றுவ லென்னா வன்பின்
குன்றனான் சுரிகை வாண்மேற் குப்புற வீழ்வே னென்னா. (௨௰)

நாட்டினான் குறித்துப் பாய நண்ணுமுன் னிடத்தா ளூன்றி
நீட்டினான் வலத்தாள் வீசி நிருமலன் மாறி யாடிக்
காட்டினான் கன்னி நாடன் கவலையும் பாச மூன்றும்
வீட்டினான் பரமா னந்த வேலையுள் வீட்டி னானே. (௨௧)

விளைக்கள்வாய் வீழ்ந்த வண்டின் மெய்யறி வின்ப மென்னும்
அளவிலா முந்நீர் வெள்ளத் தாழ்ந்தவ னெழுந்து பின்னும்
உளமும்வா சகமு மெய்யு முடையவ னதுவே யாகப்
பளகிலா வன்பு தானே படிவமாய்ப் பழிச்ச லுற்றான். (௨௨)

வேறு.

பெரியாய் சரணஞ் சிறியாய் சரணங்
கரியா கியவங் கணனே சரணம்
அரியா யெளியா யடிமா றிநடம்
புரிவாய் சரணம் புனிதா சரணம். (௨௩)

நதியா டியசெஞ் சடையாய் நகைவெண்
மதியாய மதியா தவாதம மதியிற
பதியாய் பதினெண் கணமும் பரவுந்
துதியாய் சரணஞ் சுடரே சரணம். (௨௪)

பழையாய் புதியாய் சரணம் பணிலக்
குழையாய் சரணங் கொடுவெண் மழுவாள்
உழையாய் சரணம் முருகா தவர்பால்
விழையாய் சரணம் விகிர்தா சரணம். (௨௫)

இருளாய் வெளியாய் சரணம் மெனையும்
பொருளாக நினைந்து புரந்தரன் மால்
தெருளாத நடந் தெரிவித் தெனையாள்
அருளாய் சரணம் மழகா சரணம். (உசு)

அவனத் தனைப் பமோ டரவச்
சயனத் தவனைத் தருதத் துவநால்
வயனத் தவவா னவர்வா னவசேல்
நயனத் தவனு யகனே சரணம். (உஎ)

கதவெங் கரியின் னுரியாய் சரணம்
முதலந் தமிலா முதலே சரணென்
றதிர்பைங் கழனூ புரவண் டலறும்
பதபங் கயமுன் புபணிந் தரசன். (உஅ)

வேறு.

என்றுமிப் படியே யிந்தத் திருநடம் யாருங் காண
நின்றருள் செய்ய வேண்டு நிருமல மான வெள்ளி
மன்றவ வடியேன் வேண்டும் வரமிது வென்று தாழ்ந்தான்
அன்றுதொட் டின்று மெங்கோ னந்நட நிலையாய் நின்றான். (உகூ)

மாறியாடின படலமுற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - க,சஅகூ.

இருபத்தைந்தாவது

பழியஞ்சின படலம்.

ஈறிலான் செழிய னன்புக் கெளியவ னாகி மன்றுள்
மாறியா டியகூத் தென்சொல் வரம்பின தாமே கங்கை
ஆறுசேர் சடையான் றானே யரும்பழி யஞ்சித் தென்னன்
தேறலா மனத்தைத் தேற்றுந் திருவிளை யாடல் சொல்வாம். (க)

இனையநாட் சிறிது செல்ல விராசசே கரன்றன் காதற்
றனையனுங் குலோத்துங் கற்குத் தன்னர சிருக்கை நல்கி
வினையெலாம் வென்று ஞான வெள்ளியம் பலத்து ளாடுங்
கனைகழ னிழலிற் பின்னிக் கலந்துபே ரின்ப முற்றான். (உ)

குரவன்செங் கோல்கைக் கொண்ட குலோத்துங்க வழுதி செங்கண்
அரவங்கம் பூண்ட கூட லாதிநா யகனை நித்தம்
பரவன்பின் வழிபா டானுப் பத்திமை நியமம் பூண்டான்
இரவஞ்சுங் கதுப்பி னல்லா ரீரையா யிரவ ருள்ளான். (ங)

வேறு.

அப்பதினா யிரவர்க்கு மொவ்வொருத்திக் கவ்வாறாய்
ஒப்பரிய வறுபதினா யிரங்குமர ருளரவருட்
செப்பரிய வல்லாண்மைச் சிங்கவிள வேறனையான்
வைப்பனையான் முதற்பிறந்த மைந்தன்பே ரனந்தகுணன். (ச)

கலைபயின்று பரிநெடுந்தேர் கரிபயின்று பலகைவாள்
சிலைபயின்று வருகுமரர் திறநோக்கி மகிழ்வேந்தன்
அலைபயின்ற கடலாடை நிலமகளை யடலணிதோள்
மலைபயின்று குளிர்தூங்க மகிழ்வித்து வாழுநாள். (ரு)

செய்யேந்து திருப்புத்தூர் நின்றுமொரு செழுமறையோன்
பையேந்து மரவல்குன் மனைவியொடும் பாலனல்வாய்க்
கையேந்து குழவியொடுங் கடம்புகுந்து மாதுலன்பால்
மையேந்து பொழின்மதுரை நகர்நோக்கி வருகின்றான். (௬)

வருவானுண் ணீர்வேட்டு வருவாளை வழிநிற்கும்
பெருவானந் தடவுமொரு பேராலி னிழலின்கீழ்
ஒருவாத பசுங்குழவி யுடனிருத்தி நீர்தேடித்
தருவான்போய் மீண்டுமனை யிருக்குமிடந் தலைப்படுமுன். (௭)

இலைத்தலைய பழுமரத்தின் மிசைமுன்னா ளெய்ததொரு
கொலைத்தலைய கூர்வாளி கோப்புண்டு கிடந்ததுகால்
அலைத்தலைய வீழ்ந்தும்மை வினையுலப்ப வாங்கிருந்த
வலைத்தலைய மானோக்கி வயிறுருவத் தைத்தன்றால். (௮)

அவ்வாறவ் வணங்கனையா ளுயிரிழந்தா ளவ்வேலைச்
செவ்வாளி யேறிட்ட சிலையுடையா னொருவேடன்
வெவ்வாளி யேறனையான் வெயிற்கொதுங்கு நிழறேடி
அவ்வால நிழலெய்தி யயனின்றா னிளைப்பாற. (௯)

தண்ணீர்க்குப் போயாவி தலைப்பட்ட மறையவனும்
உண்ணீர்கைக் கொண்டுமீண் டொருங்கிருந்த குழவியொடும்
புண்ணீர்வெள் ளத்துக்கா றாழ்ந்துயிரைப் புறங்கொடுத்த
பண்ணீர மழலைமொழிப் பார்ப்பனியைக் கண்ணுற்றான். (௧0)

அயில்போலுங் கணையேறுண் டவ்வழிபுண் ணீர்சோர
மயில்போல வுயிர்போகிக் கிடக்கின்றாண் மருங்கணைந்தென்
உயிர்போல்வா யுனக்கிதுவென் னுற்றதெனா மத்தெறிதண்
டயிர்போலக் கலங்கியறி வழிந்துமனஞ் சாம்பினான். (௧௧)

இனையதோர் பெண்பழியை யாரேற்றா ரெனத்தேர்வான்
அனையதோர் பழுமரத்தின் புறத்தொருசா ரழல்காலும்
முனையதோர் கணையோடு முடக்கியகைச் சிலையேந்தி
வினையதோர்ந் தெதிர்நின்ற விறல்வேடன் றனைக்கண்டான். (௧௨)

வே று.

காப்பணி தாளன் வாளொடு வீக்கிய கச்சாளன்
கூர்ப்பக ழிக்கோ லேறிடு வில்லன் கொலைசெய்வான்
ஏற்பன கைக்கொண் டிவ்விடை நின்றா னிவனேயென்
பார்ப்பனி யைக்கொன் றின்னுயி ருண்டு பழிபூண்டான். (௧௩)

என்ன மதித்தே யேடா வேடா வென்னேழை
தன்னை வதைத்தாய் நீயே யென்னாத் தழல்கால்கண்
மின்ன லெயிற்றுக் கூற்றென வல்வாய் விட்டார்த்து
மன்னவ னாணைப் பாச மெறிந்து வலித்தேகும். (௧௪)

மாண்டவ ளைத்தன் வெந்நிடை யிட்டான் மகவொக்கற்
றாண்டவ னைத்தான் றாய்முலை வேட்டழு தன்சேயைக்
காண்டொறும் விம்மாக் கண்புனல் சோரக் கடிதேகா
ஆண்டகை மாறன் கூட லணைந்தா னளியன்றான். (௧௫)

* ஆவி - குளம்

மட்டவிழ் தாரான் வாயின் மருங்கே வந்தெய்தா
உட்கெ ளில்லா வேடனை முன்விட் டுயிரன்னாள்
சட்டக நேரே யிட்டெதிர் மாறன் றமர்கேட்பக்
கட்டழல் சிந்தா முறையிடு கின்றாள் கையோச்சா. (௧௬)

கோமுறை கோடாக் கொற்றவ ரேறே முறையேயோ
தாமரை யாள்வாழ் தண்கடி மார்பா முறையேயோ
மாமதி வானோன் வழிவரு மைந்தா முறையேயோ
தீமைசெய் தாய்போற் செங்கை குறைத்தாய் முறையேயோ. (௧௭)

பிறங்குங் கோலான் மாறடு கொற்றம் பெறுவேந்தன்
உறங்கும் போதுந் தன்னரு ளாணை யுலகெங்கும்
அறங்குன் றாவாக் காப்பதை யென்ப † வஃதியாதிம்
மறங்குன் றாதான் செய்கொலை காவா வழியென்றான். (௧௮)

வாயிலு ளார்த மன்னவன் முன்போய் மன்னாநங்
கோயிலின் மாடோர் வேதியன் மாதைக் கொலைசெய்தான்
ஆயின னென்றோர் வேடனை முன்விட் டவிந்தாளைத்
தாயினன் வந்திங் கிட்டயர் கின்றாள் றமியென்றார். (௧௯)

இறைமக னஞ்சா வெண்குடை நன்றா லென்காவல்
அறமலி செங்கோ லஞ்சு பயந் ‡ தீர்த் தரசாளும்
முறைமையு நன்றான் மண்கலி மூழ்க முயன்றேந்தும்
பொறைமையு நன்றா லென்று புலந்து புறம்போந்தான். (௨௦)

வேதிய னிற்குந் தன்மை தெரிந்தான் மெலிவுற்றான்
சாதியின் மிக்காய் வந்த துனக்கென் றளர்கின்றாய்
ஓதுதி யென்னக் காவலனைப் பார்த் துரைசான்ற
நீதியு ளாய்கே ளென்றுரை செய்வா னிகழ்செய்தி. (௨௧)

---

* முன்னொருகாலத்திலே மதுரையிலே ஒருநாளிரவில் நகரிசோதனை செய்துவரும் பாண்டியனொருவன் ஒருவீட்டில் அந்தணனொருவன் தன்மனைவியை நோக்கி "யான் காசியாத்திரை சென்று வருவேன்; நீ இங்கு வைகு; நமதரசன் நின்னைப் பாதுகாப்பான்; அஞ்சற்க" என்று தேற்றுவதைக்கேட்டுச் சென்று மறுநாண்முதல் ஒவ்வொருநாளும் நகரிசோதனைக்குச் சென்று அந்த வீட்டினருகில் நின்று பார்ப்பனிக்கு ஓரிடையூறும் நேரிடாமல் விடியுமளவும் காத்துவந்தனன். அவன் ஒருநாள் அவ்வீட்டினுள் பிறருடைய அரவங் கேட்டுச் சந்தேகித்துக் கதவைத்தட்டி அது காசியாத்திரைசென்று திரும்பிய கணவனொலி என்று தெளிந்து, கதவைத்தட்டினவன் சோரபுருஷனென்று அந்தணன் ஐயுறுவண்ணம் அவ்வீதியிலுள்ள கதவுகளெல்லாவற்றையும் தட்டிச் சென்றான். மறுநாள் அவன் அவ்வீதியிலுள்ளாரெல்லாரும் ஒருங்குவந்து முறையிட நீங்கள் கூறிய அபராதம் செய்தது இந்தக்கையேயென்று தன் கையைத் துணித்தனன். கை பொன்னால் முளைத்தமையின் அவனைப் பொற்கைப் பாண்டியன் என்பர். இக்குலோத்துங்கபாண்டியன் அவன் வழித்தோன்றலாதலால் முன்னோன் செய்வினையைப் பின்னோனாகிய இவன்மேலேற்றித் "தீமை செய்தாய்போற் செங்கை குறைத்தாய்" என்று கூறினாரென்க.

† "உறங்கு மாயினு மன்னவன் றன்னொளி—கறங்கு தெண்டிரை வையகங் காக்குமால்" என்றார் சிந்தாமணியில்.

‡ அஞ்சுபயமாவன-அரசனாலும் பரிசனத்தாலும் பகைவராலும் கள்வராலும் ஏனையுயிர்களாலும் வரும் அச்சங்கள்.

இன்றிவ னைக்கொண் டேர்வட மூழ விடைவிட்டுச்
சென்றுத ணீர்கொண் டியான்வரு முன்னிச் சிலைவேடன்
கொன்றய னின்று னென்றுலை யூட்டுங் கொலைவேல்போல்
வன்றிறன் மாறன் செவிநுழை வித்தான் மறையோனால். (௨௨)

அந்தணன் மாற்றந் தன்னையு முட்கொண் டறநோக்குஞ்
சந்தன வெற்பன் மறவனை நோக்கத் தாழ்ந்தன்னான்
எந்தை பிரானே நாயடி யேனின் றெய்ப்பாற
வந்து புகுந்தே னந்த மரத்தின் மருங்கோர்சார். (௨௩)

ஐயே நானுங் கொன்றவ னல்லேன் கொன்றுரைக்
கையேன் வேறுங் கண்டில னென்று னிவளாகத்
தெய்யே றுண்ட வதெவ னென்று ரெதிர்நின்றார்
மெய்யே யையா யானறி யேனிவ் வினையென்றான். (௨௪)

இக்கொலை செய்தான் யானல னென்று துளனென்னத்
தக்கவ னேயோ தறுகண் மறவ னுரைமெய்யோ
சிக்க வொறுத்தா லல்லதை யுண்மை செப்பானென்
றுக்க வுரைத்தார் மந்திர ருள்ளார் பிறரெல்லாம். (௨௫)

மன்னன் றானு மற்றது செய்மின் னெனமள்ளர்
பின்னந் தண்டஞ் செய்தனர் கேட்கப் பிழையில்லான்
முன்னஞ் சொன்ன சொற்பெய ரானும் மொழியாநின்
றின்னந் தீரத் தேருமி னென்று னென்செய்வான். (௨௬)

ஆற்றவொ றுக்குந் தண்டமு மஞ்சா னறைகின்ற
கூற்றமு மொன்றே கொன்ற குறிப்பு முகந்தோற்றான்
மாற்றவ ரேயோ மாவோ புள்ளோ வழிவந்த
கோற்றொடி யைக்கொன் றென்பெற வல்லான் கொலைசெய்வான். (௨௭)

கைதவ னுமிக் கானவ னேயோ பிறரேயோ
செய்தவர் யாரே யிக்கொலை வேட்டஞ் செய்தோர்மா
எய்த விலக்கிற் றப்பிய கோறு னேறுண்டிம்
மைதவழ் கண்ணாண் மாய்ந்தன ளேயோ வறியேனால். (௨௮)

என்று முன்னித் தென்னவ னின்ன மிதுமுன்னூல்
தன்று லாயத் தக்கதை யென்றான் றகவிற்றன்
அன்று ரந்நூ லாய்ந்திது நூலா லமையாதான்
மன்று தெய்வத் தாலே தேறும் வழியென்றார். (௨௯)

வேந்தர்கள் சிங்கம் வேதிய னைப்பார்த் திதுதீர
ஆய்ந்துன துள்ளக் கவலை யொழிப்பே னஞ்சேனின்
ஏந்திழை யீமக் கடனிறு விப்போ தென்றேவித்
தேந்துணர் வேங்கைத் தார்மற வோனைச் சிறைசெய்தான். (௩௦)

மின்னனை யாடன் செய்கடன் முற்று மீண்டோனைத்
தன்னமர் கோயிற் கடைவயின் வைத்துத் தானேகிக்
கொன்னவில் வேலான் றங்கள் குடிக்கோர் குலதெய்வம்
என்ன விருந்தா ரடிகள் பணிந்தா னிதுகூறும். (௩௧)

வேறு.

மன்றாடு மணியேயிம் மறவன்றான் பார்ப்பனியைக்
கொன்றானோ பிறர்பிறிதாற் கொன்றதோ விதுவறநாம்
ஒன்றானு மளப்பரிதாக் கிடந்ததா லுன்னருளால்
என்றாழ்வு கெடத்தேற்று யென்றிரந்தா னவ்வேலை.

திருநகரின் புறம்பொருசார் குலவணிகத் தெருவின்கண்
ஒருமனையின் மணமுளதங் கந்தணனே டொருங்குநீ
வருதியுன துளந்தேற மாற்றமெலாந் தேற்றுதுமென்
றிருவிசும்பி னகடுகிழித் தெழுந்ததா லொருவாக்கு. (கங)

திருவாக்குச் செவிமடுத்துச் செழியன்றன் புறங்கடையிற்
பெருவாக்கு மறையவனே டொருங்கெய்திப் பெரும்பகல்போய்க்
கருவாக்கு மருண்மாலைக் கங்குல்வாய்த் தன்னைவேற்
றுருவாக்கிக் கடிமனைபோ யொருசிறைபுக் கினிதிருந்தான். (கச)

அன்றிறைவ னருளாலங் கவர்கேட்க வம்மனையின்
மன்றன்மகன் றனக்களந்த நாளுலப்ப மறலியிருட்
குன்றமிரண் டெனவிடுத்த கொடும்பாசக் கையினர்வாய்
மென்றுவருஞ் சினத்தவரி லொருவனிது வினவுமால். (கரு)

இன்றேயிங் கிவனுயிரைத் தருதிரெனு மிரும்பகட்டுக்
குன்றேறுங் கோனுரையாற் கொள்வதெவன் பிணியுடம்பின்
ஒன்றேனு மிலனொருகா ரணமின்றி யுயிர்கொள்வ
தன்றேயென் செய்துமென மற்றவனீ தறைகிற்பான். (கசா)

ஆற்றாலே றுண்டகனை யருகொதுங்கும் பார்ப்பனியைக்
காற்றால்வீழ்த் தெவ்வாறு கவர்ந்தேமப் படியிந்தச்
சாற்றார வாரத்திற் றும்பறுத்துப் புறநின்ற
ஈற்றாவை வெருளவிடுத் திவனுவி கவர்கென்றான். (கஎ)

அந்தமொழி கேட்டரச னருமறையோய் கேட்டனையோ
இந்தமொழி யெனப்பனவ னிவனிவ்வா றிறந்தாலென்
பைந்தொடியா ளிறந்ததுமப் படியேயென் மனக்கவலை
சிந்தவிது காண்பேனென் றொருங்கிருந்தான் றென்னனொடும். (கஅ)

ஒட்டியபல் கிளைதுவன்றி யொல்லொலிமங் கலந்தொடங்கக்
கொட்டியபல் லியமுழங்கக் குழுமியவோ சையின்வெருண்டு
கட்டியதாம் பிறப்புனிற்றுக் கற்றாவொன் றதிர்ந்தோடி
முட்டியதான் மணமகனை முடிந்ததா லவனுவி. (க௯)

மணமகனே பிணமகனாய் மணப்பறையே பிணப்பறையாய்
அணியிழையார் வாழ்த்தொலிபோ யழுகையொலி யாய்க்கழியக்
கணமதனிற் பிறந்திறுமிக் காயத்தின் வரும்பயனை
உணர்வுடையார் பெறுவருணர் வொன்றுமிலார்க் கொன்றுமிலை. (உ0)

கண்டானத் தனையென்ன காரியஞ்செய் தேனெனத்தன்
வண்டார்பூங் குழன்மனைவி மாட்சியினுங் கழிதுன்பங்
கொண்டான்மற் றவனொடுந்தன் கோயில்புகுந் தலர்வேப்பந்
தண்டாரா னமைச்சாக்கும் பிறர்க்குமிது சாற்றினான். (உக)

மறையவனை யின்னுமொரு மணமுடித்துக் கோடியென
நிறையவரும் பொருளீந்து நீபோதி யெனவிடுத்துச்
சிறையழுவத் திடைக்கிடந்த செடித்தலைய விடிக்குரல
கறையுடல்வேட் டுனைத்தொடுத்த கால்யாப்புக் கழல்வித்து. (௪௨)

தெளியாதே யாமிழைத்த தீத்தண்டம் பொறுத்தியென
விளியாவின் னருள்சுரந்து வேண்டுவன நனிநல்கி
அளியாறு மனத்தரச னவனையவ னிடைச்செலுத்திக்
களியானை விழவெய்த கௌரியனைப் போய்ப்பணிவான். (௪௩)

வேறு.

ஆதரம் பெருகப் பாவியேன் பொருட்டெம் மடிகணீ ரரும்பழி யஞ்சு
நாதரா யிருந்தீ ரந்தையார்க் குண்டே நான்செயத் தக்கதொன் றென்னாக்
காதலிற் புகழ்ந்து பன்முறை பழிச்சிக் கரையின்மா பூசனை சிறப்பித்
தேதம தகற்றி யுலகினுக் குயிரா யிருந்தன னிறைகுலோத் துங்கன். (௪௪)

பழியஞ்சின படல முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௧,௫௩௩.

இருபத்தாறுவது

மாபாதகந்தீர்த்தபடலம்.

வேத நாயகன் வெம்பழி யஞ்சிய
நாத னான நலனிது நல்கிய
தாதை யைக்கொலை செய்த தனயன்மா
பாத கந்தனைத் தீர்த்தமை பாடுவாம். (௧)

விரைசெய் மாலைக் குலோத்துங்க மீனவன்
திரைசெய் நீர்நிலஞ் செங்கோல் செலுத்தனி
அரசு செய்யுமந் நாளி லவந்தியென்
றுரைசெய் மாநக ராளொரு பூசுரன். (௨)

வெருவுங் காய்சின மாறிய வேதியன்
மருவுங் காதன் மனையெனும் பேரினாள்
திருவுங் காமனற் றேவியு மன்புனை
உருவுங் காமுறு மொப்பில் வனப்பினாள். (௩)

படியி லோவியப் பாவையொப் பாகிய
வடிவி னாளவள் பான்மக னென்றொரு
கொடிய பாவி பிறந்து கொலைமுதற்
கடிய பாவக் கலன்போல் வளருநாள். (௪)

கோடி கோடி யடுஞ்சிலை கோட்டியே
கோடி கோடி கொடுங்கணை பூட்டியே
கோடி கோடி விகாரமுங் கூட்டியே
கோடி கோடி யநங்கரெய் தார்கொலோ. (௫)

இளமைச் செவ்விய யாக்கையன் மையல்கூ
வளமைக் காமமும் வல்வினை யுந்திறைத்
தளைவிட் டீர்த்தலிற் றன்னை வயிற்றிடை
விளைவித் தீன்றவ டன்னை விரும்பினான். (௬)

அன்னை யென்னு மழிதகை யாளகத்
தின்னு யிர்த்துணை யும்மனக் காவலாய்
மன்னு நாண மடமுத னால்வருந்
தன்னை நீங்கலிற் றானுமொத் தாளரோ. (௭)

இன்ப மோசிறி தாகு மிதில்வருந்
துன்ப மோகரை யில்லாத் தொடுகடல்
என்ப தாரு மிவனா லறியவிவ்
வன்ப தான வினையால் வருந்துவான். (௮)

மைய னாக மதியை விழுங்கவக்
கைய னாயைக் கலந்தொழு குஞ்செயல்
ஐயன் றான்குறிப் பாற்கண் டயற்செவிக்
குய்ய லாவண்ண முள்ளத் தடக்கினான். (௯)

வேற்றோர் வைகல் வெளிப்படக் கண்டறஞ்
சாற்று நாவினன் வேறொன் றுஞ் சாற்றிலன்
சீற்ற மேல்கொடு செல்வன்கொல் வேனென
எற்றெ ழுந்தன னீன்றாள் விலக்குவாள். (௧௦)

தாயி வின்ப நுகர்ந்தனை தந்தையைக்
காயி லென்பெறு வாயெனக் காமுகர்க்
காயி லன்னையி லப்பணி லென்பயன்
எயி வின்னரு ளென்னற மென்னென்றான். (௧௧)

மண்டொ டுங்கரு விப்படை வன்கையிற்
கொண்டு தாதை குரவனென் றோர்கிலான்
துண்ட மாகத் துணித்தானாய் வாய்முகந்
துண்ட காம நறவா லுணர்விலான். (௧௨)

மைக்க ருங்கங்குல் வாய்க்கொன்ற தாதைக்குத்
தக்க தீத்தவி சிட்டன்னை தன்னொடுங்
கைக்க டங்கு பொருளொடுங் கன்னெறி
புக்க னன்புடை சூழ்ந்தார் புளிஞரே. (௧௩)

எய்யுங் கோறொடு வில்ல ரிடிக்குநேர்
செய்யுஞ் சொல்வினர் செல்லலை நில்லெனக்
கையி லுள்ளவுங் கைக்கொண்டு காரிகைத்
தைய றன்னையுந் தாங்கொடு போயினார். (௧௪)

சென்று சேணிடைச் சிக்கற வாழலாம்
என்ற வெண்ணமொன் றெய்திய வண்ணமொன்
றொன்று நாமெண்ணத் தெய்வமொன் றெண்ணிய
தென்ற வார்த்தை யிவனிடைப் பட்டதால். (௧௫)

தாதை தன்றனை யற்கினி யார்துணை
மாதர் யாயை மறவர்கைக் கொள்ளவிப்
போது தான்றுணை யென்பவன் போன்றுமா
பாத கத்துரு வாய்வந்து பற்றினன். (கசு)

ஆவ வென்னு மழுஞ்சிவ தாவெனும்
பாவம் பாவம் பழியிது வோவைய
கோவெ னுங்கை குலைத்தெறி யுந்நிழற்
பாவை போல விடாதுபின் பற்றுமால். (கஎ)

வே று.

நல்லதீர்த் தஞ்சிவ தலநலோர் பக்கமுஞ்
செல்லவொட் டாதரன் சீர்த்திநா மஞ்செவிப்
புல்லவொட் டாதுளம் புகுதவொட் டாதுநாச்
சொல்லவொட் டாதுகண் டுயிலவொட் டாதரோ. (கஅ)

சுற்றுமுன் பின்புறச் சூழ்ந்துதன் கொடுக்கினிற்
பற்றிநின் றீர்க்குமா பாதகத் தாலலங்
தெற்றினிச் செய்வதென் றற்றலா திடருழந்
துற்றுவே றுலகெலா மச்சமுற் றுழலுமால். (ககூ)

உறுகணோ யாற்றநா ளுற்றுழன் றுலகெலாம்
மறுகவே திரியுமா பாதகன் வலியெலாஞ்
சிறுகுவான் சிவனருட் செயலினிற் பாதகங்
குறுகுநாள் குறுகுநாள் கூடலைக் குறுகினன். (உ0)

வே று.

அழிதகன் குறுகு வான்முன் னங்கயற் கண்ணி தந்தக்
குழையிரு காதுங் கோத்துக் கொலைகெழு புலிப்பற் றாலி
நுழைமயிர் நெடுநாண் பின்ன னேன்பிட ரலைப்பப் பூண்டோர்
பழிதுகை யாத வேடப் பாவையாய்ப் படிவங் கொள்ள. (உக)

கொலையிரும் பழிக்கன் றஞ்சுங் கூடலெம் பெருமான் கொன்றை
மிலையிருங் குஞ்சி வேங்கை மெல்லிணர்க் கண்ணி வேய்ந்து
கலையிரு மருப்பிற் கோடிக் காதள வோடுந் தாடிச்
சிலையிருந் தடக்கை வேடத் திருவுருக் கொண்டு தோன்றி. (உஉ)

கொண்டல்கண் படுக்கு மாடக் கோபுர மருங்கிற் போந்தின்
கண்டகக் கருக்கு வாய குரைக்குநாய் கதுவிக் காப்பப்
புண்டலை வாளி வில்லோர் புறங்கிடந் திமைப்பத் திங்கட்
டுண்டவா ணுதலா ளோடுஞ் சூதுபோ ராடல் செய்வான். (உங)

வெருவரு வேழ முண்ட வெள்ளில்† போல் வறிய னாகிப்
பருவர லுடனுங் கெய்தும் பாதகன் வரவு நோக்கி
ஒருவரு முள்ளத் தானு முன்னருங் கொடிய பாவி
வருவது காண்டி யென்று மாதரை நோக்கிக் கூறும். (உச)

---

* தாடி - விற்குதை. † வேழம் - ஒருநோய். யானையுண்ட விளாங்கனி என்பாருமுளர். "வெஞ்சின வேழமுண்ட வெள்ளிலின் வெறிய மாக" என்றார் சிந்தாமணியினும்.

அணங்குநோ யெவர்க்குஞ் செய்யு மநங்கனு லலைபபுண் டாவி
உணங்கினு ருள்ளஞ் செல்லு மிடனறிந் தோடிச் செல்லா
குணங்குல னொழுக்கங் குன்றல் கொலைபழி பாவம் பாரா
இணங்குமின் னுயிர்க்கு மாங்கே யிறுதிவந் திறுவ தென்னு. (௨௫)

கள்ளுண்டல் காம மென்ப கருத்தறை போக்குச் செய்வ
எள்ளுண்ட காமம் போல வெண்ணினிற் காணிற் கேட்கிற்
றள்ளுண்ட விடத்தி னஞ்சந் தலைக்கொண்டா லென்ன வாங்கே
உள்ளுண்ட வுணர்வு போக்கா துண்டபோ தழிக்குங் கள்ளுண். (௨௬)

காமமே கொலைகட் கெல்லாங் காரணங் கண்ணோ டாத
காமமே கள்வுக் கெல்லாங் காரணங் கூற்ற மஞ்சுங்
காமமே கள்ளுண் டற்குங் காரண மாத லாலே
காமமே நரக பூமி காணியாக் கொடுப்ப தென்றான். (௨௭)

கொலைப்பழி கோட்பட் டாங்கே குறுகியான் முகங்கண் டேட
அலைப்பட ருழந்து சாம்பி யழிவதென் பார்ப்பா னென்னக்
கலைப்படு திங்கள் வேணிக் கானவ னருட்க ணோக்கந்
தலைப்படச் சிறிது பாவந் தணிந்துதன் னறிவு தோன்ற. (௨௮)

முற்பக லிழைத்த பாவ முதிர்ச்சியாற் பிறந்து தந்தை
தற்பக * னுன வாறுந் தாதையை வதைத்த வாறும்
பிற்பக லந்தப் பாவம் பிடித்தலைத் தெங்குந் தீரா
திப்பதி புகுந்த வாறு மெடுத்துரைத் திரங்கி நின்றான். (௨௯)

மறப்பெரும் படிவங் கொண்டு மனத்தருள் சுரந்து நின்ற
அறப்பெருங் கருணை மூர்த்தி யழிதகை யவனைப் பார்த்துத்
திறப்பழி யாங்குச் சென்று மீங்கன்றித் தீரா தென்றக்
கறைப்பழி தீரும் வண்ணங் கருதியோ ருறுதி கூறும். (௩0)

வருதிநின் னுமஞ் சொன்னோர் வருக்கமு நரகில் வீழக்
கருதிநீ செய்த பாவங் கழிப்பவ ரெவர்யா னோக்கந்
தருதலா லெளிதிற் றீரச் சாற்றுது மையங் கையேற்
றொருபொழு துண்டி யீச னுற்றவ ரேவல் செய்தி. (௩௧)

செங்கதிர்க் கடவுள் வானந் தீண்டுமுன் னெழுந்து தீந்தண்
பைங்கதி ரறுகு கொய்து பசுக்களை யருத்தி யார்வம்
பொங்கமுப் போதுங் கோயிற் புறத்தொட்டித் தீர்த்த மாடிச்
சங்கரன் றனைநூற் றெட்டு மெய்வலஞ் † சாரச் செய்தி. (௩௨)

இத்தவ நெறியி னின்று விப்பழி கழியு மென்னுச்
சித்தவன் புடையவேடத் திருவுருக் கொண்ட கொன்றைக்
கொத்தவ னுரைத்தான் கேட்டுக் கொடிச்சியா யிருந்த வம்மை
மத்தவன் கரித்தோல் போர்த்த மறவனை வினவு கின்றாள். (௩௩)

ஐயவிக் கொடியோன் செய்த பாவத்துக் களவில் காலம்
வெய்யநா லேழு கோடி நரகிடை வீழ்ந்தா னேனும்
உய்வகை யிலாத பாவி யிவனுக்கென் னுய்யுந் தேற்றஞ்
செய்வகை யென்று கேட்பச் செங்கண்மால் விடையோன் செப்பும். (௩௪)

---

* தற்பகன் - சயனத்தையடைந்தவன்; தற்பம் - சயனம்.
† மெய்வலம் - அங்கப்பிரதக்ஷிணம்.

அடுபழி யஞ்சா ரீச ராயினு நினைக்கி னச்சம்
படுபழி யஞ்சான் செய்த பாதகத் தொடக்குண் டெங்கும்
விடுவகை யின்றி வேறு களைகணு மின்றி வீயக்
கடவனைக் காப்ப தன்றோ காப்பென்றான் கருணை மூர்த்தி. (கரு)

நெய்தற்போ தனைய வுண்க ணேரிழை நீயா தொன்று
செய்தற்குஞ் செய்யா மைக்கும் வேறொன்று செயற்கு மாற்றல்
மெய்தக்க கருணை வள்ளல் வேண்டினெவ் வினைஞ ரேனும்
உய்தக்கோ ராதல் செய்கை யுன்னருள் விளையாட் டன்றோ. (கசா)

என்றக மகிழ்ச்சி பொங்க வியம்பினு ளியம்ப லோடுங்
குன்றக நாட்ட வேடக் குழகனு மறைந்து வெள்ளி
மன்றக நிறைந்தான் மேக மறைந்திட மறைந்து செல்லும்
மின்றக விடாது பின்போம் விளங்கிழை மடந்தை யோடும். (கஎ)

ஆததா யியுங் * கண் டானு வற்புத மடைந்து கூடல்
நாதனார் நவின்ற வாற்றா னன்னெறி விரதச் செய்கை
மாதவ வொழுக்கந் தாங்கி வருமுறை மதிய மூன்றிற்
பாதகங் கழிந்து தெய்வப் பார்ப்பன வடிவ மானான். (கஅ)

சொற்பதங் கடந்த வெந்தை சுந்தர நாதன் றாளிற்
பற்பல வடசொன் மாலை பத்தியிற் றொடுத்துச் சாத்தித்
தற்பர வறிவா னந்தத் தனியுரு வுடைய சோதி
பொற்பத மருங்கிற் புக்கான் புண்ணிய மறையோ னம்ம. (ககூ)

அன்னையைப் புணர்ந்து தாதை குரவனு மந்த ணாளன்
றன்னையுங் கொன்ற பாவந் தணித்துவீ டளித்த தென்றாற்
பின்னைநீ ரிழிநோய் குட்டம் பெருவயி றீளை வெப்பென்
றின்னநோய் தீர்க்குந் தீர்த்த மென்பதோ விதற்கு மேன்மை. (உ0)

வேறு.

அழிந்தவே தியன்மா பாதகந் தீர்த்த தறிந்துவேந் தமைச்சரு ருள்ளார்
ஒழிந்தபா ருள்ளார் வானுளார் வியப்ப முற்றுநல் லுரையுணர் வெல்லாங்
கழிந்தபே ரருளிக் கயவன்மேல் வைத்த காரணம் யாதெனக் கண்ணீர்
வழிந்துநான் மாடக் கூடனு யகனை வழுத்தினர் மகிழ்ச்சியுட் டிளைத்தார். (உக)

மாபாதகந்தீர்த்தபடலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - க,0எஉ.

---

* தீக்கொளுவுவார், நஞ்சிடுவார், கருவியிற் கொல்வார், கள்வர், ஆறலைப்பார், சூறைகொள்வார், பிறனில்விழைவார் என்றிவர் முதலாயினோரை வடநூலார் ஆததாயிகள் என்பர்.

இருபத்தேழாவது

அங்கம்வெட்டினபடலம்.

வேதகந் தரத்து* முக்கண் வேதியன் மறையோன் செய்த்
பாதகந் தவிர்த்த வாறு பகர்ந்தனம் விஞ்சை யீந்த
போதகன் மனைக்குத் தீங்கு புந்திமுன் னாகச் செய்த
சாதகன் றனைப்போ ராற்றித் தண்டித்த தண்டஞ் சொல்வாம். (க)

கூர்த்தவெண் கோட்டி யானைக் குலோத்துங்க வழுதி ஞாலங்
காத்தர சளிக்கு நாளிற் கடிமதி லுடுத்த கூடல்
மூத்தனி நகருள் வந்து மறுபுலத் தவனு யாக்கை
மூத்தவ னொருவன் வைகி முனையவாள் பயிற்றி வாழ்வான். (உ)

வாள்வினைக் குரவ னன்னான் வல்லமண் விடுத்த வேழந்
தோள்வினை வலியா லட்ட சுந்தர விடங்கன் றன்னை
ஆள்வினை யன்புந் தானும் வைகலு மடைந்து தாழ்ந்து
மூள்வினை வலியை வெல்லு மூதறி வுடைய னம்ம. (ங)

கைவினை மறவாள் விஞ்சைக் காவல னவனைத் தாழ்ந்து
தெவ்வினை வெல்வான் கற்குஞ் சிங்கவே றனையார் தம்முள்
உய்வினை யுணராப் பாவி சித்தனென் றொருவ னுள்ளான்
அவ்வினை நிரம்பக் கற்று ளாசிரி யற்கு மாறாய்த் (ச)

மானவாள் விஞ்சை யாலே தனைநன்கு மதிக்கத் தக்க
தானதோர் செருக்கி னூற்றன் னாசிரி யற்கு மாறாய்த்
தானுமோர் விஞ்சைக் கூடஞ் சமைத்துவாள் பலருங் கற்க
ஊனுலாம் படைவல் லானி லூதிய மிதப்பக் கொள்வான். (ரு)

ஒருத்தனே யிருவர் வாளின் விருத்தியு மொருங்கு கொள்ளுங்
கருத்தனாய் விருத்த னூரிற் கழிவது கருதி யன்னான்
வருத்துவா ளினையர் தன்பால் வரமனந் திரித்து நாளும்
விருத்தமே செய்வான் றுயை விரும்பினோற் கிளையோ னன்னான். (சு)

தொடத்தொடப் பொறுக்குந் திண்மைத் தொன்னில மனையா னில்லா
இடத்தவன் றேவி பாற்போ யிடனுண்டே யிடனுண் டேயென்
றடுத்தடுத் தஞ்சா தென்றுங் கேட்டுக்கேட் டகல்வா னாக
நடைத்தொழிற் பாவை யன்ன நங்கைவா ளாதி ருந்தாள். (எ)

பின்னொரு பகற்போய்ச் செங்கை பிடித்தனன் வலிப்பத் தள்ளி
வன்னிலைக் கதவ நூக்கித் தாழக்கோல் வலித்து மாண்ட
தன்னிலைக் காப்புச் செய்தா டனிமனக் காவல் பூண்டாள்
அந்நிலை பிழைத்த தீயோ னங்கத்தீ வெதுப்பப் போனான். (அ)

* வேதகந்தரித்த என்றும் பாடம். பிரமன்றலையைத் தரித்த என்பது பொருள்.

அறங்கடை நின்றா ருள்ளு மாற்றவுங் கடைய னாகிப்
புறங்கடை நின்றான் * செய்த புலைமைதன் பதிக்குந் தேற்றான்
மறந்தவிர் கற்பி னாடன் மனம்பொதிந் துயிர்க டோறும்
நிறைந்தநான் மாடக் கூட னிமலனை நினைந்து நொந்தான் (௯)

தாதக நிறைந்த கொன்றைச் சடையவன் புறம்பு செய்த
பாதக மறுக்குங் கூடற் பகவனெவ் வுயிர்க்குந் தானே
போதக னாகித் தேற்றும் புண்ணியன் புலைஞன் செய்த
தீதக முணர்ந்து தண்டஞ் செய்வதற் குள்ளங் கொண்டான் (௧௦)

கோளுடைக் குரவ னேபோற் சித்தனைக் குறுகிச் சித்தா
காளையா நீயுஞ் சாலக் கழியமூப் படைந்த யாமும்
வாளம ராடி நந்தம் வலிகளு மளந்து காண்டும்
நாளைவா வருது நாமு நகர்ப்புறத் தொருசா ரென்றான். (௧௧)

நாதனுங் குரவன் கூற நன்றென வுவந்து நாலாம்
பாதக னதற்கு நேர்ந்தான் படைக்கலக் குரவன் மீண்டு
போதரு மளவில் வையம் புதையிருள் வெள்ளத் தாழ
ஆதவன் வைய முந்நீர் வெள்ளத்து ளாழ்ந்த தம்ம. (௧௨)

ஆசினன் குரவற் கின்னா வாற்றினோன் பாவம் போல
மாசிரு டணிந்த கங்குல் வலிகெட வடிவாள் விஞ்சைத்
தேசிக னொருவ னன்னான் றிணியுடல் சிதைப்பத் தீட்டுங்
காய்சின வாள்போற் கீழைக் கல்லிடை முளைத்தான் வெய்யோன். (௧௩)

நன்றியைக் கொன்று தின்றோ னாயக னாணைக் கஞ்சும்
வன்றிற லரிமா னூர்தித் தெய்வதம் வழிபட் டேத்தி
வென்றிவாள் பரவிக் கச்சு வீக்கிவாள் பலகை யேந்திச்
சென்றுவா ளுழவன் சொன்ன செருக்களங் குறுகி னானே. (௧௪)

மதுகைவா ளமர்க்கு நென்னல் வந்தறை கூவிப் போன
முதுகடும் புலியே றன்ன முடங்குடற் குரவன் றானும்
அதிர்கழல் வீக்கிக் கச்சு மசைத்துவெண் ணீறுஞ் சாத்திக்
கதிர்கொள்வாள் பலகை தாங்கிக் கயவனுக் கெதிரே வந்தான். (௧௫)

மடங்கலே றொன்றும் பைங்க ணரியொன்று மலைந்தா லென்ன
முடங்கல்வான் றிங்க ளொன்று முக்கணு நான்கு தோளும்
விடங்கலுழ் மிடறுந் தோற்றா வென்றிவாள் விஞ்சை வேந்தும்
அடங்கலன் றானு நேரிட் டாடம ராடல் செய்வார். (௧௬)

எதிர்ப்பர்பின் பறிவர் நேர்போ யெழுந்துவா னேறு போல
அதிர்ப்பர்கே டகத்துட் டாழ்வுற் றடங்குவர் முனைப்பர் வாளை
விதிர்ப்பர்சா ரிகைபோய் வீசி வெட்டுவர் விலக்கி மீள்வர்
கொதிப்பர்போய் நகைப்ப ராண்மை கூறுவர் மாறி நேர்வர். (௧௭)

வெந்நிடு வார்போற் போவர் வட்டித்து விளித்து மீள்வர்
கொன்னிடு வாண்மார் பேற்பர் குறிவழி பிழைத்து[illegible]ற்பர்
இந்நிலை நாலைங் கன்ன லெல்லைநின் றாடல் செய்தார்
அந்நிலை யடுபோர் காண்பா ரனைவருங் கேட்க வையன். (௧௮

* "அறன்கடை நின்றாரு ளெல்லாம் பிறன்கடை—நின்றாரில் பேதையா ரில்." என்பது தேவர்குறள்.

குரத்தியை நினைத்த நெஞ்சைக் குறித்துரை நாவைத் தொட்ட
கரத்தினைப் பார்த்த கண்ணைக் காத்தனை கோடி யென்றென்
றுரைத்துரைத் தவற்றுக் கெல்லா முறுமுறை தண்டஞ் செய்து
சிரத்தினைத் தடிந்து வீட்டித் திருவுரு மறைந்து நின்றான். (க௯)

போர்கெழு களங்கண் டாருட் பொருபடைக் கேள்விச் செல்வர்
வார்கெழு கழற்கா லானைக் கண்டிலர் மனையிற் றேடி
ஏர்கெழு கற்பி னாளை யெங்குற்றான் குரவ னென்னக்
கூர்கெழு வடிவேற் கண்ணாள் போயினார் கோயிற் கென்றாள். (௨0)

என்றவப் போதே கோயிற் கேகினான் மீண்டான் றேடிச்
சென்றவர் சித்தன் றன்னைச் செருக்களத் தடுபோர் செய்து
வென்றனை யேபின் னந்த வெங்களத் தெய்குந் தேடி
நின்றனைக் காணா திங்கு நேர்ந்தனம் யாங்க ளென்றார். (௨க)

விரைசெய்தா ரவன்யா னங்கம் வெட்டினே னல்லே னீங்கள்
உரைசெய்வ தெவன்யா ரென்போற் சித்தனை யுடன்று மாய்த்து
வரைசெய்தோள் விந்தைக் கீந்தார் மற்றிது சுற்றும் வைகைத்
திரைசெய்நீர்க் கூட லெந்தை திருவுளச் செயல்கொ லென்றான். (௨௨)

மட்டித்த கலவைக் கொங்கை மனைவியுஞ் சித்தன் றன்னைக்
கிட்டிப்பல் காலும் வந்து கேட்டது நெருநல் வாய்வந்
தொட்டித்தன் கையைப் பற்றி யீர்த்தது முள்ளம் வெந்து
தட்டிப்போய்க் கதவந் தாழிட் டிருந்ததுஞ் சாற்றி னாளே (௨௩)

அம்மனை யருளிச் சொன்ன படியெலா மருளிச் செய்து
தெம்முனை யடுவாள் வீரர் சித்தனை மாய்த்தா ரீது
மெய்ம்மையா மென்று கண்ட மைந்தரும் விளம்பக் கேட்டான்
எம்மையா ளுடைய கூட லிறைவினை யாட்டே யென்றான். (௨௪)

கொடியைநே ரிடையா ளோடுங் கொற்றவா ளிளைய ரோடுங்
கடியநான் மாடக் கூடற் கண்ணுத லடிக்கீழ்த் தாழ்ந்து
நெடியனான் முகனுந் தேறா நெறியது சிறிய வேழை
அடியனே னளவிற் றேநின் னருள்வினை யாட லென்றான். (௨௫)

தண்மதி வழிவந் தோனு நகருளார் தாமும் பாதி
விண்மதி மிலைந்த வேணி விடையவ னாட னோக்கிக்
கண்மலர் வெள்ளத் தாழ்ந்து கனைகழ லடியிற் றாழ்ந்து
பண்மலர் கீதம் பாடி யாடினார் பழிச்சி நின்றார். (௨௬)

வேறு.

அடியவருக் கெளியரிவர் பரதேசி காவலரென் றடிவீழ்ந் தேத்தி
வடியயில்வேற் குலோத்துங்கன் மாணிக்க மாலையெனு மனையா ளோடுந்
தொடியணிதோண் முதுமகனைக் களிறேற்றி நகரைவலஞ் சூழ்வித் திப்பால்
முடியணிவித் தனந்தகுண பாண்டியற்குத் தன்னிறைமை முழுது மீந்தான்.

நிலைநிலையாப் பொருளுணர்ந்து பற்றிகந்து கரணமொரு நெறியே செல்லப்
புலனெறிநீத் தருள்வழிபோய்ப் போதமாந் தன்வலியைப் பொத்தி நின்ற
மலவலிவிட் டகலவரா வுமிழ்ந்தமதி போல்விளங்கி மாறி யாடுந்
தலைவனடி நிழல்பிரியாப் பேரின்பக் கதியடைந்தான் றமிழ்நர் கோமான். (௨௮)

அங்கம்வெட்டினபடல முற்றிற்று.

ஆ. திருவிருத்தம் - க,௬0௨.

இருபத்தெட்டாவது

நாகமெய்த படலம்.

செங்கண்மால்விடை மேல்விடங்கர்செருக்களத்திடை வாளெடுத்
தங்கம்வெட்டிய சேவகத்தை யறைந்தனந்தமிழ் மாறன்மேற்
சங்கையிட்டம ணீசராற்றிய தறுகண்வேள்வி முளைத்ததோர்
வெங்கண்வாளர வைத்துணித்து விளித்தவாறும் விளம்புவாம். (௧)

கோதிலாத குணத்தனந்த குணப்பெருந்தகை மீனவன்
ஆதிநாயக னுருவமாகிய வைந்தெழுத்தொடு கண்டிவெண்
பூதிசாதன மாவதேபொரு ளென்றுபத்திமை பூண்டுதன்
றாதையேமுத லாயமன்னவர் தம்மினுந்தலை யாயினான். (௨)

அத்தகைச்சிவ சாதனந்தனி லன்புமிக்கவ னொழுகலால்
அத்தன்மெய்த்திரு வைந்தெழுத்தொலி யாலுநீற்றொளி யாலுமுட்
பைத்தவல்லிரு ளும்புறத்திரு ளுஞ்சிதைந்து பராபரன்
வித்தகத்திரு வேடமானது மீனவன்றிரு நாடெலாம். (௩)

நாயினுங்கடை யானமாசுட னள்ளிருட்புரை நெஞ்சரெண்
ணாயிரஞ்சமண் வேடரன்ன தறிந்துகொண்டு வெகுண்டழற்
றோயிரும்பென மானவெங்கனல் சுட்டிடத்தரி யார்களாய்
மாயிருந்தமிழ் மாறனைத்தெற வஞ்சவேள்வி யியற்றுவார். (௪)

எல்லைகாத மளந்துசாலை யெடுத்தழற்படு குண்டமுங்
கல்வியாரழ லிட்டெழும்புகை கௌவியெண்டிசை களுமுறச்
செல்லவான வுடுக்களும்பொரி யிற்பொரிந்தன சிதறநீண்
டொல்லைதாவி விசும்புதைவர வோட்டிவெங்கனன் மூட்டினார். (௫)

அத்தழன்றெரி குண்டநின்று மகன்பிலத்தெழு வானெனப்
பைத்ததுஞ்சிருள் வாயும்வாயிரு பாலும்வாலிய பகிர்மதிக்
கொத்துநஞ்சின மொழுகுபற்களு மூழியாரழல் விழிகளும்
வைத்தசைந்தொரு வெற்புவந்தென வந்துளானொரு தானவன். (௬)

உதித்தசெங்க ணரக்கவஞ்ச னுருத்தெழுந்தெரி வடவையிற்
கொதித்தடும்பசி தாகமுங்கொடி தாலெனக்கொடி யோரைநீர்
விதித்திடும்பணி யாதெனக்கென மீனவன்றனை மதுரையோ
டெதிர்த்தெடுத்து விழுங்கிவாவென வேவினாருட னேகினான். (௭)

வேறு.

பாயுடை யவர்விட விடநாகப் படிவுகொ ணிசிசர ணிலனண்டந்
தோயுட லினனுடல் விடமூறிச் சொரிதுளை யெயிறினன் வடவைச்செந்
தீயுடை யனவென வெரிகண்ணன் றிணியிருள் வரைமுழை யெனவிண்ட
வாயுடை யவனெடு நெறிமுன்னி மழைநுழை வரையென வருகின்றான். (௮)

அரவிறை யுறைபிலம் வெளிகாண வரையுடல் புதைபட நிலம்விள்ள
வருவிழி யழலெழ வுயிர்காண்முன் வளியுளர் கிளர்வலி விளிவெய்தப்
பொருசின விழியெதிர் படுபைங்கூழ் புகையெழ வனமரை பொரிபொங்கர்
கருகிட முதுசினை யிறைகொள்ளுங் ககநிரை சிறைசுருள் படவீழ. (௯)

அகனிலம் வெருவுற நிலனேந்து மரவிறை வெருவுற வெயில்காலும்
பகன்மதி வெருவுற விலைகௌவும் பணிகளும் வெருவுற வகறிக்கின்
புகர்மலை வெருவுற வடுதண்டப் புரவலன் வெருவுற வருசெங்கண்
ணகைமதி புரையெயி றவன்மாட நகரெதிர் குடவயின் வருமெல்லை. (௧௦)

கண்டவர் கடிநகர் கடிதோடிக் கௌரிய னடிதொழு தடிகேணங்
கொண்டல்கண் வளர்மதில் வளைகூடற் குடவயி னொருபெரு விடநாகம்
அண்டமு மகிலமு மொருவாயிட் டயிறர வருவதை யெனநீள்வாய்
விண்டுகொ டணைவதை யெனவோடும் வெருவலன் மதிகுல மறவீரன். (கக)

மற்றிது முனமத கரிவிட்டோர் வரவிட வருவதை யெனவெண்ணம்
உற்றிது தனையும் விளித்தற்கெம் முடையவர் விடையவர் விடநாகஞ்
சுற்றிய சடையின ருளரென்னுச் சுரருல கிழிசுட ரெனநிற்குங்
கற்றளி யிடையுறை யிறைமுனபோய்க் கனைகழ லடிதொழு தறைகிற்பான். ()

வழிவழி யடிமைசெய் தொருபோது மறவலன் வழிபடு மடியேனின்
மொழிவழி முறைசெய்து வருவேனிம் முதுமக ரடையவு மமணீசர்
அழிவது கருதினர் விடநாக மடைவது னருள்வழி யதனுவி
கழிவது கருதிய வடியேனைக் கருணைசெய் தருளிது கடனென்முன். (கங)

அனுமதி கொடுதொழு திறைபாத மகமதி கொடுபுற னடைகின்ற
பனிமதி வழிவரு தமிழ்மாறன் பகழியொ டுசிலை யினனேகிக்
குனிமதி தவழ்தரு மதினீடுங் கொடியணி குடகடை குறுகாமுன்
தனிவரை யெனநிகர் தருகோபத் தழல்விழி யரவினை யெதிர்கண்டான். (கச)

வேறு.

பல்பொறிப் பகுவாய்ப் படம்புடை பரப்பிப் பக்கமெண் டிசையொடு விசும்பிற்
செல்கதிர் புதைத்துத் திணியிருள் பரப்பித் திங்களின் பகிர்புரை நஞ்சம்
பில்கெயி றதுக்கிப் பெரிதுயிர்த் தகல்வாய் பிளந்துமா நகரெலா மொருங்கே
ஒல்லெனக் கௌவி விழுங்குவான் சீறி யுருத்தன னுரகவா ளவுணன். (கரு)

அடுத்தன னரச சிங்கவே றிடியே றஞ்சவார்த் தங்கையிற் சாபம்
எடுத்தன னெடுநா ணிருதலை வணக்கி யெரிமுகக் கூர்ங்கணை தொடுத்து
விடுத்தனன் விடுத்த சரமெலா முரகன் வெறுந்துகள் படக்கறித் துமிழ்ந்து
படுத்தனன் பொருது பஞ்சவன் புராரி பங்கயச் சேவடி நினையா. (கசு)

கொடியதோர் பிறைவா யம்பினை விடுத்துக் கோளரா வளையுட றுணித்தான்
இடியதோ வெனவார்த் தெரிநிறக் குருதி யிரங்கிவீ ழுருவியிற் கவிழ
நெடியதோ ருடலம் புரள்படக் கூர்வா னெளிதர விளிபவன் மேலைக்
கடியதோ ராலா கலவெளம் போலக் கக்கினன் கறையிரு ணஞ்சம். (கஎ)

தீவிட முருத்துத் திணியிருள் கடுப்பத் திருநக ரெங்கணுஞ் செறிந்த
காவிடங் கூவல் கயந்தலை சதுக்கங் கழகமா வணமக ழிஞ்சி
கோவிட மாட முபரிகை மேடை கோபுர மரங்கெலாம் பரந்து
தாவிட மயங்கி யுறங்கினர் போலச் சாம்பினர் தனிநகர் மாக்கள். (கஅ)

நிலைதளர்ந் துடலந் திமிர்ந்துவேர் வரும்பி நிறைபுலன் பொறிகர ணங்கள்
தலைதடு மாறி யுரைமொழி குழறித் தழுதழுப் படைந்துநா வுணங்கி
மலைதரு கபமே னிமிர்ந்துணர் வழிந்து மயங்கிமூச் சொடுங்கியுள் ளாவி
அலைதர வூச லாடினர் கிடந்தன ரன்னதொன் னகருளா ரெல்லாம். (ககூ)

தென்னவன் விடங்கண் டஞ்சுமால் போலச் சினகர மடைந்துதாழ்ந் தெந்தாய்
முன்னவ வாதி முதல்வ வித்தின்றி முளைத்தவ முடிவிலா முனிவ
என்னவ வன்பர்க் கெளியவ யார்க்கு மிறையவ விந்நகர்க் கென்றும்
மன்னவ வநாதி மறையவ முக்கண் வானவ நினைச்சர ணடைந்தேன். (உ0)

அடுத்தவந் தலைக்கு மாழியைத் தூரந்து மாழியுண் டேழுமொன் றுகத் [கோ
தொடுத்தவந் தலைக்கும் பெருமழை தடுத்துந் தூளைக்கைவிண் டுழாவவெண்பிறைக்
கெடுத்தவந் தலைக்குங் கனிற்றினை விளித்து மிந்நகர் புரந்தனை யின்று
மடுத்தவந் தலைக்கும் விடததினுன் மயங்கும் வருத்தமுங் களைதியென் றிரந்தான்.

அருட்கடலனைய வாதிநா யகன்ற னவிர்சடை யணிமதிக் கொழுந்தின்
பெருக்கடை யமுதத் தண்டுளி சிறிது பிலிற்றினுன் பிலிற்றிட லோடும்
பொருக்கென வெங்கும் பாலினிற் பிரைபோற் புரையறக் கலந்துபண் டுள்ள
திருக்கிளர் மதுரா நகரமாப் புனிதஞ் செய்ததச் சிறுதுளி யம்ம. (உஉ)

இரவிமுன் னிருள தெனவிறை யருண்முன் னிருண்மல வலியென வெங்கும்
பரவிய வமுதால் விடமகன றவசப் படிவொழிந் தியாவரு மின்பம்
விரவிய களிப்பின் மேவினு ரிருந்தார் மீனவர் பெருந்தகை வேந்தன்
அரவணி சடையார்க் கன்புருத் தானே யாகிமண் காவல்செய் திருந்தான். (உங)

நாகமெய்த படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - க,சஉ௫.

இருபத்தொன்பதாவது

மாயப்பசுவைவதைத்தபடலம்.

சுருதி யின்புறத் தவர்விடு மராவினைச் சுருதி
கருத ரும்பர னருளுடைக் கௌரியன் றுணித்த
பரிசி தங்கது பொருதமண் படிறாபின் விடுப்ப
வருபெ ரும்பசு விடையினுன் மாய்த்ததும் பகர்வாம். (க)

பணப்பெ ரும்பகு வாயுடைப் பாந்தளை யனந்த
குணப்பெ ருந்தகை துணித்தபின் பினவரு குண்டர்
நணப்ப ருங்குழாங் காலினுற் றள்ளுண்டு செல்லுங்
கணப்பெ ரும்புயல் போலுடைந் தோடின கலங்கி. (உ)

உடைந்து போனவ ரனைவரு மோரிடத் திருள்போல்
அடைந்து நாமுன்பு விடுத்தமால யானைபோ வின்று
தொடர்ந்த பாம்பையுந் தொலைத்தனா மேலினிச் சூழ்ச்சி
மிடைந்து செய்வதை யாதென வினயமொன் றோவார். (௩)

ஆவை யூறுசெய் யார்பழி யஞ்சுவா ரதனை
ஏவு வாமிது வேபுணர்ப் பென்றுசூழ்ந் திசைந்து
பாவ காரிகள் பண்டுபோற் பழிததழல் வளர்த்தார்
தாவி லாவுரு வாகியோர் தானவன் மூளைததான். (ச)

குண்ட ழற்கணின் றெழுந்தவக் கொடியவெம் பசுவைப்
பண்டு போலவர் விடுத்தனர் கூடலம் பதிமேல்
உண்டு மில்லையு * மெனத்தடு மாற்றநூ லுரைத்த
பிண்டி யானுரை கொண்டுழல் பேயமண் குண்டர். (௫)

* உண்டும் இல்லையுமெனல் - அஸ்திநாஸ்தி என்னும் கொள்கை.

வேறு.

மாடமலி மாளிகையி லாடுகொடி மானக்
கோடுகளி னேடுமுகில் குத்திமிசை கோத்துச்
சேடன்முடி யுங்கதிர்கொள் சென்னிவரை யுந்தாள்
ஆடவடி யிட்டுலவை யஞ்சிட வுயிர்த்தே. (௬)

விடுத்திடு முயிர்ப்பினெதிர் பூளைநறை வீபோல்
அடுத்திடு சராசர மனைத்துமிரி வெய்தக்
கடுத்திடு சினக்கனலி னுக்குலக மெல்லாம்
மடுத்திடு தழற்கடவுள் வார்புனலை மான. (௭)

உடன்றிறைகொள் புள்ளொடு விலங்கலறி யோட
மிடைந்தபழு வத்தொடு விலங்கலை மருப்பால்
இடந்தெறி மருத்தென வெறிந்தளவி லோரைத்
தொடர்ந்துடல் சிதைத்துயிர் தொலைத்திடியி னார்த்தே. (௮)

மறலிவரு மாறென மறப்பசு வழிக்கொண்
டறலிவர் தடம்பொருநை யாறுடைய மாறன்
திறலிமலர் மங்கையுறை தென்மதுரை முன்னு
விறலி * வரு கின்றதது மீனவ னறிந்தான். (௯)

மீனவனு மாநகருண் மிக்கவரு முக்கண்
வானவனை மாமதுரை மன்னவனை முன்னோர்
தானவனை † யாழிகொடு சாய்த்தவனை யேத்தா
ஆனதுரை செய்துமென வாலய மடைந்தார். (௧௦)

நாதமுறை யோபொதுவின் மாறிநட மாடும்
பாதமுறை யோபல வுயிர்க்குமறி விக்கும்
போதமுறை யோபுனித பூரண புராண
வேதமுறை யோவென விளித்துமுறை யிட்டார். (௧௧)

நின்றுமுறை யிட்டவரை நித்தனரு ளோக்கால்
நன்றருள் சுரந்திடப நந்தியை விளித்துச்
சென்றமண ரேவவரு தீப்பசுவை நீபோய்
வென்றுவரு வாயென விளம்பினன் விடுத்தான். (௧௨)

வேறு.

தண்டங் கெழுகூற் றமுமஞ்சத் தறுகட் செங்கட்
குண்டந் தழன்று கொதிப்பக் கொடுநாக் கெறிந்து
துண்டந் துழாவக் கடைவாய் நுரைசோர்ந்து சென்னி
அண்டந் துழாவ வெழுந்தன் றடலேறு மாதோ. (௧௩)

நெற்றித் தனியோடை நிமிர்ந்து மறிந்த கோட்டிற்
பற்றிச் சுடர்செம் மணிப்பூண்பிறை பைய நாகஞ்
சுற்றிக் கிடந்தா லெனத்தோன்ற வெள்ளாழி யீன்ற
கற்றைக் கதிர்போற் பருமம்புறங் கௌவி மின்ன (௧௪)

கோட்டுப் பிறைகால் குளிர்வெண்கதிர்க் கற்றை போலச்
சூட்டுக் கவரித் தொடைத்தொங்கலு நெற்றி முன்னுப்
பூட்டுத் தரளா முகவட்டம் பொலியப் பின்னல்
மாட்டுச்'சதங்கைத் தொடைகல்லென வாய்விட் டார்ப்ப. (௧௫)

---

* விறலி - விறல் என்னும் பெயரடியாகப்பிறந்த வினையெச்சம்.
† தானவன் என்றது சலந்தரனை.

பணிநா வசைக்கும் படியென்னக் கழுத்தில் வீர
மணிநா வசைப்ப நகை முத்தின் வகுத்த தண்டை
பிணிநாண் சிறுகிங்கிணி பிப்பல மாலைத் தொங்கல்
அணிநீ ணலம்பச் சிலம்பார்ப்ப வடிக ளூன்றும். (கசு)

அடியிட்டு நிலங்கிளைத் தண்ட மெண்டிக்கும பாாபபப
பொடியிட் டுயிர்த்துப் பொருகோட்டினிற் குத்திக் கோத்திட்
டிடியிட் டதிர்கா ரெதிரேற்றெழுந் தாங்கு நோக்கிச்
செடியிட் டிருகண் ணழல்சிந்த நடந்த தன்றே. (கஎ)

வே று.

பால்கொண்ட நிழல்வெண் டிங்கட் பகிர்கொண்ட மருப்பிற் கொண்மூச்
சூல்கொண்ட வயிற்றைக் கீண்டு துளிரியோர் வெள்ளிக் குன்றங்
கால்கொண்டு நடந்தா லென்னக் கடிந்துடன் றுவைச் சீற்றம்
மேல்கொண்டு நாற்றம் பற்றி வீங்குயிர்ப் பெறிந்து கிட்டா. (கஅ)

குடக்கது குணக்க தென்னக் குணக்கது குடக்க தென்ன
வடக்கது தெற்க தென்னத் தெற்கது வடக்க தென்ன
முடுக்குறு மருப்பிற் கோத்து முதுகு கீழாகத் தள்ளும்
எடுக்குறு மலையைக் கால்பேர்த் தெனத்திசைப் புறத்து வீசும். (ககூ)

கொழுமணிச் சிகர கோடி சிதைபடக் குவட்டில் வீசும்
பழுமரச் செறிவில் வான்றோய் பனையிற வெறியும் வானின்
விழுமறப் பசுப்போல் வீழ வேலைவாய் வீசு மிங்ஙன்
செழுமதிக் கோட்டு நந்தித் தேவினை யாடல் செய்து. (உ0)

பூரிய ரெண்ணி யாங்கே பொருதுயி ரூற்றஞ் செய்யா
தாரிய விடைதன் மாண்ட வழகினைக் காட்டக் காமுற்
றீரிய நறும்பூ வாளி யேறுபட் டாவி யோடும்
வீரியம் விடுத்து வீழ்ந்து வெற்புரு வாயிற் றன்றே. (உக)

வாங்கின் புரிசை மாட மாநக ராறு வின்பந்
தூங்கின வரவாய் வேம்பின் றொடவிழ் தாரான் றிண்டோள்
வீங்கின விரவி தோன்ற வீங்கிரு ளுடைந்த தென்ன
நீங்கின நாண மோடு நிரையமண் குழாங்க ளெல்லாம். (உஉ)

உலகறி கரியாத் தன்பே ருருவினை யிடபக் குன்றாக்
குலவுற நிறுவிச் சூக்க வடிவினாற் குறுகிக் கூடற்
றலைவனை வணங்க வீசன் றண்ணருள் சுரந்து பண்டை
இலகுரு வாகி யிங்ங னிருக்கென விருத்தி னானே. (உங)

அந்நிலை நகரு ளாரு மரசனு மகிழ்ச்சி தூங்கிச்
சந்நிதி யிருந்த நந்தி தாளடைந் திறைஞ்சிப் போக
மின்னவிர் சடையா னந்தி வென்றிசால் வீறு நோக்கி
இன்னமு தனையா ளோடுங் களிசிறந் திருக்கு நாளில். (உச)

அவ்விடை வரைமேன் மூந்நீ ரார்கலி யிலங்கைக் கேகுந்
தெவ்வடு சிலையி ராமன் வானர சேனை சூழ
மைவரை யனைய தம்பி மாருதி சுக்கி ரீவன்
இவ்வடல வீர ரோடு மெய்தியங் கிறுத்தான் மன்னோ. (உரு)

---

* செடியிடல - உங்காரமிடல்.

அன்னது தெரிந்து விந்த மடக்கிய முனியங் கெய்தி
மன்னவற் காக்கங் கூறி மழவிடைக் கொடியோன் கூடற்
பன்னரும் புகழ்மை யோது பனுவலை யருளிச் செய்ய
முன்னவன் பெருமை கேட்டு முகிழ்த்தகை முடியோ னாகி. (உசு)

முனியொடு குறுகிச் செம்பொன் முளரியுண் மூழ்கி யாதித்
தனிமுத லடியை வேணி முடியுறத் தாழ்ந்து வேத
மனுமுறை சிவாக மத்தின் வழிவழா தருச்சித் தேத்திக்
கனிவுறு மன்பி லாழ்ந்து முடிமிசைக் கரங்கள் கூப்பி. (உஎ)

புங்கவ சிவன் முத்தி புராதிப புனித போக
மங்கல மெவற்றி னுக்குங் காரண வடிவ மானா
சங்கர நினது தெய்வத் தானங்க ளநந்த மிந்த
அங்கண்மா ஞால வட்டத் துள்ளன வவைக டம்மில். (உஅ)

வேறு.

அற்பு தப்பெரு பதியிந்த மதுரையீ தாற்றப்
பொற்பு டைத்தென்ப தெவன்பல புவனமு நின்பாற்
கற்பு வைத்துய நீசெய்த கருமத்தின் விருத்தம்
வெற்பு ருக்களாய்ப் புடைநின்று விளங்கலான் மன்னோ. (உகூ)

கண்ட வெல்லையிற் றுன்பங்கள் களைதற்கு மளவைக்
கண்ட ரும்பெருஞ் செல்வங்க ளளித்தற்குங் கருணை
கொண்டு நீயுறை சிறப்பினாற் குளிர்மதிக் கண்ணி
அண்ட வாணவிவ் விலிங்கத்துக் கொப்புவே றுமோ. (௩0)

தோய்ந்தி டும்பொழு தீட்டிய தொல்வினைப் படலம்
மாய்ந்தி டும்படி மாய்த்துநின் மங்கல போகம்
ஈந்தி டும்படிக் கிருந்தமா தீர்த்தத்தி னியல்பை
ஆய்ந்தி டும்பொழு ததற்கொரு தீர்த்தமொப் பாமோ. (௩க)

எத்த லத்தினு மொவ்வொன்று விழுமிதா மிந்த
மெய்த்த லத்திலிம் மூவகை விழுப்பமும் விளங்கும்
அத்த வாதலா லித்தல மடைந்தவ ரெவர்க்குஞ்
சித்த சுத்தியும் பலவகைச் சித்தியும் பயக்கும். (௩உ)

அடிய னேனெண்ணுங் கருமமுஞ் சரதமே யாக
முடியு மாவரி தச்செயன் முடியுமெப் படியப்
படிபு ரிந்தருள் கடிதெனப் பணிந்தனன் பரனும்
நெடிய வான்படு மமுதென வெதிர்மொழி நிகழ்த்தும். (௩௩)

வேறு.

இரவிதன் மரபின் வந்த விராமகே ளமக்குத் தென்கீழ்
விரவிய திசையிற் போகி விரிகடற் சேதுக் கட்டிக்
கரவிய வுள்ளக் கள்வன் கதிர்முடி பத்துஞ் சிந்தி
அரவமே கலையி னாளை யருஞ்சிறை யமுவ நீக்கி. (௩௪)

மீண்டுநின் னயோத்தி யெய்தி விரிகட லுலகம் பன்னாள்
ஆண்டினி திருந்து மேனாள் வைகுண்ட மடைவா யாக
ஈண்டுநீ கவலை கொள்ளே லெனுமசரீரி கேட்டு
நீண்டவன் மகிழ்ந்து தாழ்ந்து நிருத்தனை விடைகொண் டேகி. (௩௫)

மறைப்பொரு ளுரைத்தோ... ...ன்ன வண்ணமே யிலங்கை யெய்தி
அறத்தினைத் தின்ற பாவி யாவிதின் றனையான் செல்வத்
திறத்தினை யிளவற் கீந்து திருவிரா மேசங் கண்டு
கறைப்படு மிடற்றி னானை யருச்சித்துக் கருணை வாங்கி. (கசு)

பற்றிய பழியி னீங்கி யிந்திரன் பழியைத் தீர்த்த
வெற்றிகொள் விடையி னானை மீளவும் வந்து போற்றி
அற்றிர ளனைய கோதைக் கற்பினுக் கரசி யோடுஞ்
சுற்றிய சடையி ராமன் றொன்னக ரடைந்தா னிப்பால். (கஎ)

வேறு.

செங்கோ லனந்த குணமீனவன் றேயங் காப்பக்
கொங்கோ டவிழ்தார்க் குலபூடணன் றன்னை யீன்று
பொங்கோத ஞாலப் பொறைமற்றவன் பாலி றக்கி
எங்கோ னருளாற் சிவமாநக ரேறி னானே. (கஅ)

மாயப்பசுவைவதைத்தபடல முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - க,சுசுக.

முப்பதாவது

மெய்க்காட்டிட்டபடலம்.

பாவமென வடிவெடுத்த படிற்றமணர் பழித்தழல்செய்
தேவவரு மறப்பசுவை யேறுயர்த்தோன் விடைநந்திக்
காவலனை விடுத்தழித்த கதையுரைத்து மட்டாலச்
சேவகன்மெய்க் காட்டிட்டு விளையாடுந் திறமுரைப்பாம். (க)

வெவ்விமழும் மதயானை விறற்குலபூ டணன்சமணர்
அவ்வியவஞ் சனைகடந்த வனந்தகுணச் செழியன்பாற்
செவ்வியசெங் கோல்வாங்கித் திகிரிதிசை செலவுருட்டி
வவ்வியவெங் கலிதுரந்து மண்காத்து வருகின்றான். (உ)

சவுந்தரசா மந்தனெனத் தானைகா வலனொருவன்
சிவந்தசடை முடியண்ண லடியவரே சிவமாகக்
கவர்ந்தொழுகி யருச்சிக்குங் கடப்பாட்டி னெறிநின்றோன்
உவந்தரசற் கிருமைக்குந் துணையாகி யொழுகுநாள். (ங)

வல்வேடர்க் கதிபதியாய் வருசேதி ராயனெனும்
வில்வேட னொருவனவன் விறல்வலியான் மேலிட்டுப்
பல்வேறு பரிமான்றேர்ப் பஞ்சவன்மேற் படையெடுத்துச்
செல்வேனென் றுறவலித்தான் றென்னர்பிரா னஃதறிந்தான். (ச)

தன்னதுதா ணிழனின்ற சாமந்தன் றனைப்பார்த்தெம்
பொன்னறைதாழ் திறந்துநிதி முகந்தளித்துப் புதிதாக
இன்னமுநீ சிலசேனை யெடுத்தெழுதிக் கொள்கென்றான்
அன்னதுகேட் டீசனடிக் கன்புள்ளா னென்செய்வான். (ரு)

தென்னவர்கோன் பணித்தபணி பின்றள்ளச் சிந்தையிலன்
புன்னவர னருள்வந்து முன்னீர்ப்ப வோலை போய்ப்
பொன்னறைதாழ் திறந்தறத்தா றீட்டியிடும் பொற்குவையுட்
டன்னதுளத் தவாவமைய் தக்கநிதி கைக்கவரா. (௬)

எண்ணிறந்த களிப்பினொடுந் திருக்கோயி விடத்தணைந்து
சுண்ணிறைந்த பொன்முளரிக் கயந்தலைநீர் படிந்துதன
துண்ணிறைந்த மெய்யன்பி னொளியுருவாய் முளைத்தெழுந்த
பண்ணிறைந்த மறைப்பொருளைப் பணிந்திறைஞ்சி யிதுவேண்டும். (௭)

பண்ணியனுன் மறைவிரித்த பரமேட்டி யெங்கோமான்
எண்ணியகா ரியமுடிப்பா யிவையுனக்கு முன்னடிக்கீழ்
அண்ணியமெய் யடியவர்க்கு மாதக்க வெனவிரந்தப்
புண்ணியமா நிதிமுழுது மவ்வழியே புலப்படுப்பான் (௮)

அண்டமுக டுரிஞ்சிநிமிர் கோபுரமு மாயிரக்கான்
மண்டபமுங் கண்டிகையும் வயிரமணிக் கோளகையுங்
குண்டலமுந் தண்டரளக் குடைநிரையுங் கொடிநிரையுங்
கண்டனன்முன் னவனருளாற் பிறப்பேழுங் கரைகண்டோன். (௯)

வானுடர்க் கவயுணவின் வகைமுந்நூன் மன்றன்முதல்
நானுவாஞ் சிறுவேள்வி நான்மறையோர்க் கறுசுவையின்
ஆறுத பேருண்டி துறவடைந்தோர்க் கருத்துபலி
தானுதி பலவேறு தருமநனி தழைவித்தான். (௧௦)

எவரேனு முருத்திரசா தனங்கண்டா லெதிர்வணங்கி
அவரேநம் பிறப்பறுக்க வடிவெடுத்த வரனென்று
கவராத வன்புள்ளங் கசிந்தொழுக வருச்சித்துச்
சுவையாறி னமுதருத்தி யெஞ்சியவின் சுவைதெரிவான். (௧௧)

இன்றைக்கா யிரநாளைக் கிருமடங்கு வருநாட்கும்
அன்றைக்கன் றிருமடங்கா வரசனருள் பொருளெல்லாங்
கொன்றைச்செஞ் சடையார்க்கு மடியார்க்குங் கொடுப்பதனைத்
தென்றற்கோன் செவிமடுத்தார் சேனைக்கோ னிதுசெய்வான். (௧௨)

வேறு.

காவல னவையத் தெய்திக் காரியஞ் செய்வா ரோடும்
மேவினன் பிறநாட் டுள்ள வீரர்க்கு வெறுக்கை போக்கிச்
சேவகம் பதிய வோலை செலவிடுத் தழைப்பான் போலப்
பாவகஞ் செய்து தீட்டிப் பட்டிமை யோலை யுய்ப்பான். (௧௩)

எழுதுக தெலுங்கர்க் கோலை யெழுதுக கலிங்கர்க் கோலை
எழுதுக விராடர்க் கோலை யெழுதுக மராடர்க் கோலை
எழுதுக கொங்கர்க் கோலை யெழுதுக வங்கர்க் கோலை
எழுதுக துருக்கர்க் கோலை யென்றுபொய் யோலை விட்டான். (௧௪)

எங்குமிப் படியே யோலை செலவிடுத் திருப்ப வாறு
திங்களி னளவு மந்தச் சேவகர் வரவு காணு
தங்கதிர் வேலோன் சேனைக் கரசனை யழைத்து நாளை
வெங்கதிர் படுமுன் சேனை யாவையும் விளித்தி யென்றான். (௧௫)

எனறமன் னவனுக் கேற்கச் சாமந்த னிசைந்து வெள்ளி
மன்றவ னடிக்கீழ் வீழ்ந்து வள்ளலே யரச னீந்த
குன்றுறழ் நிதிய மெல்லாங் கொண்டெனைப் பணிகொண் டாயே
வன்றிறற் சேனை யீட்டும் வண்ணமியா தென்ன நின்றான். (கசு)

அடியவர் குறைவு தீர்த்தாண் டருள்வதே விரதம் பூண்ட
கொடியணி மாடக் கூடற் கோமகன் காமற் காய்ந்த
பொடியணி புராணப் புத்தேட் புண்ணிய னருளி னாலே
இடியதிர் விசும்பு கீறி யெழுந்ததோர் தெய்வ வாக்கு. (கஎ)

சூழ்ந்தெழு சேனை யோடுந் தோற்றுது நாளை நீயும்
வீழ்ந்தர சவையத் தெய்தி மேவுதி யென்னா விண்ணம்
போழ்ந்தெழு மாற்றங் கேட்டுப் பொருநரே றுவகை வெள்ளத்
தாழ்ந்தனன் முந்நீர் வெள்ளத் தலர் கி ரவனு மாழ்ந்தான். (கஅ)

மீனவன் காண மேரு வில்லிதன் றமரை வன்கண்
மானவேன் மறவ ராக்கி வாம்பரி வீர னாகத்
தானுமோர் கூத்துக் கோலஞ் சமைந்துவந் தாட விட்ட
நீனிற வெழினி போலக் காரிரு ணிவந்த தெங்கும். (ககூ)

புண்ணிய மனையிற் போகிப் புலர்வதெப் போழ்தென் றெணணி
அண்ணல்சா மந்தன் றுஞ்சா னடிக்கடி யெழுந்து வானத்
தெண்ணிறை மீனை நோக்கி நாழிகை யெண்ணி யெண்ணிக்
கண்ணுத லெழுச்சி காண்பா னளந்தனன் கங்கு லெல்லாம். (உ0)

தெருட்டரு மறைக டேறாச் சிவபரஞ் சுடரோ ரன்பன்
பொருட்டொரு வடிவங் கொண்டு புரவிமேற் கொண்டு போதும்
அருட்படை யெழுச்சி காண்பான் போலவார் கலியின் மூழ்கி
இருட்டுகள் கழுவித் தூய விரவிவந் துதயஞ் செய்தான். (உக)

பொருநரே றனையா னோர்ந்து போந்துநான் மாடக் கூடற்
கருணைநா யகனைத் தாழ்ந்து கைதொழு திரந்து வேண்டிப்
பரவிமீண் டொளிவெண் டிங்கட் பன்மணிக் குடைக்கீ ழேகிக்
குருமதி மருமான் கோயில் குறுகுவான் குறுகு மெல்லை. (உஉ)

கரைமதி யெயிற்றுச் சங்கு கன்னன்மு னனைய வென்றிப்
பிரமத கணமுங் குண்டப் பெருவயிற் றுருவ னாதி
வரைபுரை குறுந்தாட் பூத மறவருங் குழுமி வீக்கு
குரைகழல் வலிய னோனாட் கோளுடை வயவ ராகி. (உங)

நெட்டிலை வடிவாள் குந்தந் தோமர நேமி நெய்த்தோர்
ஒட்டிய கணிச்சி சாப முடம்பிடி முதலா வெண்ணப்
பட்டவெம் படைமூ வாறும் பரித்தசெங் கையர் காலிற்
கட்டிய கழலர் காலிற் கடியராய்ப் புறம்பு காப்ப. (உச)

வார்கெழு கழற்கா னந்தி மாகாளன் பிருங்கி வென்றித்
தார்கெழு நிகும்பன் கும்போ தரன்முதற் றலைவர் யாருப்
போர்கெழு கவசந் தொட்டுப் புண்டர நுதலிற் றீட்டிக்
கூர்கெழு வடிவா ளேந்திக் குதிரைச்சே வகராய்ச் சூழ. (உரு)

கற்றைச்சா மரைகள் பிச்சங் கவிகைபூங் கொடிக்கா டெங்கும்
துற்றக்கா ரொலியு நாணத் தூரிய முழுது மேங்கக்
கொற்றப்போர் விடையைத் தானே குரங்குளைப் பரியா மேற்கொண்
டொற்றைச்சே வகராய் மாறி யாடிய வொருவர் வந்தார். (உசு)

பல்லிய மொலிக்கு மார்ப்பும் பாய்பரி கலிக்கு மார்ப்புஞ்
செலலொலி மழுங்க மள்ளர் தெழித்திடு மார்ப்பு மொன்றிக்
கல்லெனுஞ் சும்மைத் தாகிக் கலந்தெழு சேனை மேனாள்
மல்லன்மா நகர்மேற் சீறி வருகடல் போன்ற தன்றே. (உஎ)

சேனையின் வரவு நோக்கித் திருமகன் றிருமுன் னேகுந்
தானையந் தலைவன் றென்னன் றுணிழல் குறுகிக் கூற
மீனவ னுவகை பூத்து வெயின்மணிக் கடையிற் போந்தங்
கானமண் டபத்திற் செம்பொ னரியணை மீது வைகி. (உஅ)

தெவ்வடு மகிழ்சசி பொங்கச் சேனையின் செல்வ நோக்கி
வ்வெவ தேயத் துள்ளா ரிவரென வெதிரே நின்று
களவையின் மனச்சா மந்தன் கையிற்பொற் பிரம்பு நீட்டி
அவ்வவர் தொகுதி யெல்லா மணியணி நிறுவிக் கூறும். (உகூ)

வேறு.

கொங்கரிவ ரையகுரு நாடரிவ ரைய
கங்கரிவ ரையகரு நாடரிவ ரைய
அங்கரிவ ரையவிவ ராரியர்க ளைய
வங்கரிவ ரையவிவர் மாளவர்க ளைய. (௩0)

குலிங்கரிவ ரையவிவர் கொங்கணர்க ளைய
தெலுங்கரிவ ரையவிவர் சிங்களர்க ளைய
கலிங்கரிவ ரையகவு டத்தரிவ ரைய
உலங்கெழு புயத்திவர்க ளொட்டியர்க ளைய. (௩௧)

கொல்லரிவ ரையவிவர் கூர்ச்சரர்க ளைய
பல்லரிவ ரையவிவர் பப்பரர்க ளைய
வில்லரிவ ரையநல் விதேகரிவ ரைய
கல்லொலி கழற்புனை கடாரரிவ ரைய. (௩௨)

கேகயர்க ளாவிவர்கள் கேழ்கிளர் மணிப்பூண்
மாகதர்க ளாவிவர் மராடரிவர் காஞ்சி
நாகரிக ராவிவர்க ணம்முடைய நாட்டோர்
ஆகுமிவர் தாமெனமெய்க் காட்டியறி வித்தான். (௩௩)

இத்தகைய சேட்புல னுளாரையிவ னுய்த்த
வித்தகமை யென்னென வினவியருள் செய்யேல்
அத்தகி னரும்பொரு ளனைத்தும்வரை யாதே
உய்த்தலி னடைந்தனர் களாவென வுரைத்தான். (௩௪)

வேறு.

அந்நெடுஞ் சேனை தன்னுட் சேணிடை யடன்மா வூர்ந்து
பின்னுற நிற்கு மொற்றைச் சேவகப் பிரானை நோக்கி
மன்னவ னிவர்யாரென்னச் சாமந்தன் வணங்கி யைய
இன்னவர் சேனை வெள்ளத் தியாரையென் றறிவ தென்றான். (௩௫)

அவரையிங் கழைத்தி யென்று னரசன்றன் வழிச்செல் வார்போற்
கவயமிட் டவரும் போர்த்தார் காவலன் களிகூர்ந் தம்பொன்
நவமணிக் கலன்பொன் னுடை நல்கினு னுள்ளத் தன்பு
தவறிலான் பொருட்டு வாங்கித் தரித்துத்தன் றமர்க்கு மீந்தார். (௧௬)

ஆய்ந்தவெம் பரிமாத் தூண்டி யைங்கதி நடத்திக் காட்டி
ஏய்ந்ததஞ் சேனை வெள்ளத் தெய்தினு ரெய்து மெல்லை
வேய்ந்ததார்ச் சேதி ராயன் வேட்டைபோய்ப் புலிகோட் பட்டு
மாய்ந்தன னென்றே ரொற்றன் வேந்தன்முன் வந்து சொன்னான். (௧௭)

முரசதி ரனிக நோக்கி முகமலர்ந் துவகை பூத்த
அரசனு மனிக வேந்தற் களவில்சீர்த் தலைமை யோடும்
வரிசைகண் மிதப்ப நல்கி வந்துமெய்க் காட்டுத் தந்து
பரசிய பதாதி தத்தம் பதிபுகச் செலுத்து கென்றான். (௧௮)

அறைந்தவார் கழற்காற் சேனை காவல னனிகந் தத்தஞ்
சிறந்தசே ணாட்டிற் செல்லச் செலுத்துவான் போன்று நிற்ப
நிறைந்தநான் மாடக் கூட னிருத்தனந் நிலைநின் றுங்கே
மறைந்தனன் மனித வேடங் காட்டிய மறவ ரோடும். (௧௯)

கண்டனன் பொருநை நாடன் வியந்தனன் கருத்தா சங்கை
கொண்டனன் குறித்து நோக்கி யீதுநங் கூடன் மேய
அண்டர்தம் பெருமான் செய்த வாடலென் றெண்ணிக் கண்ணீர்
விண்டனன் புளகம் போர்ப்ப மெய்யன்பு வடிவ மானான். (௨௦)

தனக்குயிர்த் துணையா நின்ற சாமந்தன் றன்னை நோக்கி
உனக்கெளி வந்தார் கூட லுடையநா யகரே யென்றால்
எனக்கவ ராவார் நீயே யென்றவற் கியாவு நல்கி
மனக்கவல் பினறி வாழ்ந்தான் மதிவழி வந்த மைந்தன். (௨௧)

மெய்க்காட்டிட்டபடல முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௧,௭0௪.

முப்பத்தேழாவது

உலவாக்கிழியருளியபடலம்.

அடியார் பொருட்டுப் பரிவயவ ராகிச் செழியன் காணவிடைக்
கொடியார் வந்து மெய்க்காட்டுக் கொடுத்த வண்ண மெடுத்துரைத்தும்
கடியார் கொன்றை முடியாரக் கன்னி நாடன் றனக்கிசைந்த
படியா லுலவாக் கிழிகொடுத்த படியை யறிந்த படிபகர்வாம். (௧)

வள்ளல் குலபூ டணன்றிங்கள் வாரந் தொடுத்துச் சிவதருமம்
உள்ள வெல்லாம் வழாதுநோற் றொழுகும் வலியாற் றன்னாட்டில்
எள்ள லில்லா வேதியரை யிகழ்ந்தா னதனான் மழைமறுத்து
வெள்ள மருக வளங்குன்றி வினைவஃ கியது நாடெல்லாம் (௨)

அறவோ ரெல்லா நிரப்பெய்தி யாகங் கிடந்த நூலன்றி
மறைநூ லிழந்து முனிவேள்வி வானோர் வேள்வி தென்புலத்தின்
உறைவோர் வேள்வி யிழந்திழிந்த தொழில்செய் தாற்று துயிர்வளர்ப்பான்
புறநா டணைந்தார் பசியாலே புழுங்கி யொழிந்த குடியெல்லாம். (௩)

எந்நா டணைவோ மெனவிரங்க விரங்கி மதிக்கோன் மதிநாளிற்
பொன்னாண் முளரித் தடங்குடைந்து சித்திக் களிற்றைப் பூசித்துத்
தன்னா தரவாற் கயற்கண்ணி தலைவன் றன்னை யருச்சித்து
முன்னா வீழ்ந்து கரமுகிழ்த்துப் பழிச்சி மகிழ்ந்து மொழிகின்றான். (௪)

அத்த வுலகி லுயிர்க்குயிர்நீ யல்லை யோவவ் வுயிர்பசியால்
எய்த்த வருத்த மடியேனை வருத்து மாறென் யானீட்டி
வைத்த பொருளுந் தருமத்தின் வழியே சென்ற தினியடிகள்
சித்த மலர்ந்தென் னிடும்பைவினை தீர வருட்கண் செய்கவென. (௫)

கோளா டரவ மரைக்க சைத்த கூடற் பெருமான் குறையிரக்கும்
ஆளா மரசன் றவறுசிறி தகங்கொண் டதனைத் திருச்செவியிற்
கேளார் போல வாளாதே யிருப்ப மனையிற் கிடைத்தமலன்
றாளா தரவு பெறநினைந்து தரையிற் கிடந்து துயில்கின்றான். (௬)

அங்கண் வெள்ளி யம்பலத்து ளாடு மடிக ளவன்கனவிற்
சங்கக் குழையும் வெண்ணீறுஞ் சரிகோ வணமுந் தயங்கவுரன்
சிங்க நாதங் கிடந்தசையச் சித்த வடிவா யெழுந்தருளி
வெங்கண் யானைத் தென்னவர்கோன் முன்னின் றிதனை விளம்புவார். (௭)

ஏடா ரலங்கல் வரைமார்ப வெம்பா லென்று மன்புடைமை
வாடா விரத விழுச்செல்வ முடையாய் வைய மறங்கடிந்து
கோடா தளிக்குஞ் செங்கோன்மை யுடையா யுனக்கோர் குறையுளதுன்
வீடா வளஞ்சேர் நாட்டிந்நாள் வேள்விச் செல்வ மருகியதால். (௮)

மறையே நமது பீடிகையா மறையே நமது பாதுகையாம்
மறையே நமது வாகனமா மறையே நமது நூபுரமாம்
மறையே நமது கோவணமா மறையே நமது விழியாகும்
மறையே நமது மொழியாகு மறையே நமது வடிவாகும். (௯)

வேதந் தானே நமதாணைச் சத்தி வடிவாய் விதிவி லக்காய்ப்
போதங் கொளுத்தி நிலைநிறுத்திப் போகங் கொடுத்துப் பல்லுயிர்க்கும்
பேதஞ் செய்யும் பிணியவிழ்த்தெம் பிரியா வீடு தருவதுதேன்
நாதஞ் செய்யுந் தார்வேந்தே நமது செங்கோ லதுவாகும். (௧௦)

அந்த மறைக டமக்குறுதி யாவா ரந்நூல் வழிகலிநோய்
சிந்த மகத்தீ வளர்த்தெம்பாற் சிந்தை செலுத்து மந்தணரால்
இந்த மறையோர் வேள்விமழைக் கேது வாகு மிவர்தம்மை
மைந்த விகழ்ந்து கைவிட்டா யதனான் மாரி மறுத்தன்றால். (௧௧)

மும்மைப் புவனங் களுமுய்ய முத்தீ வேட்கு மிவர்தம்மை
நம்மைப் போலக் கண்டொழுகி நாளு நாளு மறம்பெருக்கிச்
செம்மைத் தருமக் கோலோச்சித் திகிரி யுருட்டி வாழ்தியென
உம்மைப் பயன்போ லெளிவந்தா ருலவாக் கிழியொன் றுதவுவார். (௧௨)

இந்தக் கிழியி லெத்துணைப்பொன் னெடுத்து வழங்குந் தொறுநாங்கள்*
தந்த வளவிற் குறையாத தன்மைத் தாகு மிதுகொண்டு
வந்த விலம்பா டகற்றென்று கொடுத்து வேந்தன் மனக்கவலை
சிந்தத் திருநீ றதுசாத்தி மறைந்தா ரையர் திருவுருவம். (௧௩)

---

* நாங்கள் என்பதில் கள் பகுதிப்பொருள் விகுதி.

கண்ட கனவு நனவாகத் தொழுதா மனமுந்து கௌரியர்கோன்
அண்டர் பெருமான் றிருவடிபோ லம்பொற் கிழியை முடித்தலைமேற்
கொண்டு மகிழ்ச்சி தலைசிறப்ப நின்றோர் முகூர்த்தங் கூத்தாடித்
தண்டா வமைச்சர் படைத்தலைவர் தமக்குங் காட்டி பரிலித்தான். (கச)

செங்க ணரிமான் பிடர்சுமந்த தெய்வ மணிப்பூந் தவிசேற்றிச்
சங்க முழங்க மறைமுழங்கச் சாந்தந் திமிர்ந்து தாதொழுகத்
தொங்க லணிந்து தசாங்கவிரைத் தூப நறுநெய்ச் சுடர்வளைத்துக்
கங்கை மிலைந்த கடவுளெனக் கருதிப் பூசை வினைமுடித்தான். (கரு)

அடுத்து வணங்கி வலஞ்செய்திட் டம்பொற் கிழியைப் பொதிநீக்கி
எடுத்து முத்தீ வினைஞர்க்கும் யாகங் களுக்கும் யாவர்க்கும்
அடுத்து நாளும் வரையாது வழங்க வழங்க வடியார்க்குக்
கொடுக்கக் குறையா வீட்டின்ப மாயிற் றையர் கொடுத்தகிழி. (கசு)

ஆய பொதியில் விளைபொன்னா லசும்பு செய்து விசும்பிழிந்த
கோயி லதனை யகம்புறமுங் குயின்று ஞானக் கொழுந்தனைய
தாயி லறுகாற் பீடிகைவான் றடவு கொடிய நெடியபெரு
வாயில் பிறவு மழகெறிப்ப வேய்ந்தான் மறையின் வரம்பறிந்தான். (கஎ)

முந்திக் குறையா நிதிக்கடலை முகந்து முகந்து நாடோறுஞ்
சிந்திக் குலபூ டணக்கொண்ட றெய்வ தருமப் பயிர்வளர்ப்பப்
பந்தித் திரைமுந் நீர்மேகம் பருகிச் சொரியப் பலவளனும்
நந்திக் கன்னி நாடளகை நகர்போற் செல்வந் தழைத்தன்றே. (கஅ)

வேறு.

வையா கரணர்க ளையா யிகர்மறை வல்லோர் மறைமுடி சொல்லாய்வோர்
மெய்யா மிருதிகள் பொய்யா விரதிகள் வேள்வித் தழல்களை வாழ்விப்போர்
பையா டரவணி யையா னனனுரை பகர்வோ ருலகிய லகல்வோர்கள்
எய்யா துறைதவி னையா தளகைய தென்னப் பொலிவது தென்னாடு. (ககூ)

உலவாக்கிழியருளியபடல முற்றிற்று.

ஆக திருவிருத்தம் - க,எஉரு.

முப்பத்திரண்டாவது

வளையல்விற்றபடலம்.

வேதந் தனது வடிவென்று விண்ணின் றிழிந்த விமானமறைக்
கீதன் செழியன் றனக்குலவாக் கிழிதந் தளித்த வழியிதுவப்
போதங் கடந்த பொருள்வணிகப் புத்தேண் மாட மணிமறுகு
பாதந் தடவ நடந்துவளை பகர்ந்த பரிசு பகர்கிற்பாம். (க)

இறைவன் குலபூ டணன்றிகிரி யிவ்வா றுருட்டு நாண்முன்னாட்
சிறைவண் டறையுந் தாருவன தெய்வ முனிவர் பன்னியர்தந்
நிறைவன் றளர்ந்து காட்டுகென நெடியோன் மகனைப் பொடியாக்கும்
அறவன் றுறோர் காபாலி யாகிப் பலிக்கு வருகின்றான். (உ)

* காட்டுகு - தன்மையொருமைமுற்று.

வேத மசைக்குங் கோவணமு மெய்யி னீறு முள்ளாளக்
கீத மிசைக்குங் கனிவாயு முள்ளே நகையுங் கிங்கிணிசூழ்
பாத மலரும் பாதுகையும் பலிகொள் கலனுங் கொண்டிரதி
மாதர் கணவன் றவவேட மெடுத்தா லொத்து வருமெல்லை. (௩)

விள்ளுங் கமலச் சேவடிசூழ் சிலம்பி னொலியு மிடறதிரத்
துள்ளுங் கீத வொலியுங்கைத் துடியி னொலியுந் துளைச்செவிகீண்
டுள்ளம் பிளந்து நிறைகளைந்தீர்த் தொல்லை வருமுன் வல்லியர்கள்
பள்ளங் கண்டு வருபுனல்போற் பலிகொண் டில்லின் புறம்போந்தார். (௪)

வேறு.

ஐயங்கொண் டணைவா ரையர் பரிகலத் தைய மன்றிக்
கையம்பொன் வளையும் பெய்வார் கருத்துநா ணன்றிக் காசு
செய்யும்பொன் மருங்கு ளுறு மிழப்பர்வேள் சிலையம் பன்றிக்
கொய்யுந்தண் மலர்க்க ணம்புங் கொங்கையிற் சொரியச் சோர்வார். (௫)

மடமயி லனையா ரெங்கள் வளையினைத் தருதி ரென்றார்
கடல்விட மயின்றா னுங்கள் கந்தரத் துள்ள தென்றான்
தடம்திக் கொம்ப னாரெங் கலையினைத் தருதி ரென்றார்
முடமதி மிலைந்தா னுங்கண் முகமதி யிடத்த தென்றான். (௬)

இடையறிந் தெம்மைச் சேர்மி னென்றன ரிளைய ரெங்கோன்
கடலமு தனையீர் நுங்கட் கிடையினிக் காணா தென்றான்
மடநலா ரஃதேற் பண்டை வண்ணமீந் தில்லிற் செல்ல
விடையளித் தருண்மி னென்றார் வேலைபுக் குறங்கு மென்றான். (௭)

நங்கையர் கபாலிக் கென்று நடுவிலை போலு மென்றார்
அங்கண னடுவி லாமை நும்மனோர்க் கடுத்த தென்றான்
மங்கைய ரடிக ணெஞ்சம் வலியகற் போலு மென்றார்
கொங்கலர் கொன்றை யானுங் கொங்கையே வன்க லென்றான். (௮)

காதுவே லன்ன கண்ணார் கங்கைநீர் சுமந்த தேதுக்
கோதுமி னென்றார் நம்பா லுண்பலி யேற்க வென்றான்
ஏதுபோ லிருந்த தைய னிசைத்த செப்பென்றா ரீசன்
கோதறா வமுதன் னீர்நுங் கொங்கைபோ லிருந்த தென்றான். (௯)

கறுத்ததை யெவன்கொ லைய கந்தர மென்றார் வேளை
வெறுத்தவன் மாரி பெய்தற் கென்றனன் விழியால் வேலை
ஒறுத்தவர் யாவ தென்றீ ருத்தர மென்றார் கூற்றைச்
செறுத்தவன் றென்பா னின்று நோக்கினாற் றெரிவ தென்றான். (௧௦)

செக்கரஞ் சடையான் கண்ணிற் றம்முருத் தெரிய நோக்கி
இக்கொடி யார்போற் கண்ணு ளெம்மையு மிருத்தி ரென்றார்
நக்கனுந் தனையனார்கண் ணிடைக்கண்டு நகைத்து நம்மின்
மிக்கவர் நுங்க ளுள்ளார் விழித்தவர்க் காண்மி னென்றான். (௧௧)

அஞ்சலிப் போது பெய்வார் சரணமென் றடியில் வீழ்வார்
தஞ்செனத் தளிர்க்கை நீட்டித் தழுவிய கிடைக்குந் தோறும்
எஞ்சுவா னெஞ்சா தேத்தி யெதிர்மறை யெட்டுந் தோறும்
வஞ்சனா யகல்வான் மையல் வஞ்சியர்க் கணிய னாமோ. (௧௨)

அடுத்தெமைத் தழாதி ரேனீ ரவிழ்த்தபூங் கலையை மீள
உடுத்துமி னும்பால் யாங்கண் மையனோ யுழப்ப நோக்கிக்
கடுத்தெமர் முனியா முன்னுங் கழற்றிய வளையுங் கையில்
எடுத்திடு மென்றார் நாளை யிடுதுமென் றேகி னானே. (௧௩)

பிள்ளைவெண் டிங்கள் வேய்ந்த பிரான்கொண்டு போன நாளும்
உள்ளமு மீட்க லாற்றா துயங்கினார் கலையுஞ் சங்குந்
துள்ளவைங் கணையான் வாளி துளைப்பவெம் பசலை யாகங்
கொள்ளைகொண் டுண்ண நின்றா ரங்கிலை கொழுநர் கண்டார். (௧௪)

பொய்தவ வடிவாய் வந்து நம்மனைப் பொன்னி னன்னார்
மெய்தழை கற்பை நாணை வேரொடுங் களைந்து போன
கைதவன் மாடக் கூடற் கடவுளென் றெண்ணித் தேர்ந்தார்
செய்தவ வலியாற் கால மூன்றையுந் தெரிய வல்லார். (௧௫)

வேறு.

கற்புத் திரிந்தார் தமைநோக்கிக் கருத்துத் திரிந்தீர் நீளாழி
வெற்புத் திரிந்த மதிற்கூடன் மேய வணிகர் கன்னியராய்ப்
பொற்புத் திரியா தவதரிப்பீர் போமென் றிட்ட சாபங்கேட்
டற்புத் திரிந்தா ரெங்களுக்கீ தகல்வ தெப்போ தெனமுனிவர். (௧௬)

அந்த மாட மதுரைநகர்க் கரசா கியசுந் தரக்கடவுள்
வந்து நும்மைக் கைதீண்டும் வழியிச் சாபங் கழியுமெனச்
சிந்தை தளர்ந்த பன்னியருந் தென்னர் மதுரைத் தொன்னகரிற்
கந்த முல்லைத் தார்வணிகர் காதன் மகளி ராய்ப்பிறந்தார். (௧௭)

வளர்ந்து பே [illegible] பருவ மாறி யல்குல் புடையகன்று
தளர்ந்து காஞ்சி மருங்கொசியத் ததும்பி யண்ணாந் தரும்புமுலை
கிளர்ந்து செல்லும் பருவத்திற் கிடைத்தா ராக விப்பான்மண்
அளந்த விடையான் வந்துவளை பகரும் வண்ண மறைகிற்பாம். (௧௮)

கங் [illegible] ணிகண்டங் கரந்து நுதற்கண் கரந்தொருபால்
மங்கை வடிவுங் கரந்துழையு மழுவுங் கரந்து மழவிடையூர்
அங்க ணழகர் வளைவணிக ராகி யேன மளந்தறியாச்
செங்க மலச்சே வடியிரண்டுந் திரைநீர் ஞால மகள்சூட. (௧௯)

பண்டு முனிவர் பன்னியர்பாற் கவர்ந்த வளையே பட்டுவடங்
கொண்டு தொடுத்து மீண்டவர்க்கே யிடுவே மெனுமுட் கோளினர்போற்
றொண்டர் தொடுத்த வைவண்ணத் துணர்த்தார் போலத் தோள்சுமந்து
மண்டு வளையை விலைபகர்ந்து வணிக மறுகில் வருகின்றார். (௨௦)

மன்னு மறையின் பொருளுரைத்த மணிவாய் திறந்து வளைகொண்மின்
என்னு மளவிற் பருவமுகி லிமிழின் னிசைகேட் டெழு மயில்போற்
றுன்னு மணிமே கலைமிழற்றத் தூய வணிகர் குலமகளிர்
மின்னு மணிமா ளிகைநின்றும் வீதி வாயிற் புறப்பட்டார். (௨௧)

வளைக ளிடுவா ரெனத்தங்கண் மனமெல் லாந்தம் புடையொதுங்கத்
தளைக ளிடுவார் வருகின்றார் தம்மைக் கொம்மை வெம்முலையார்
துளைக ளிடுதீங் குழலிசையோற் சுரும்பு பாடக் கருங்குழன்மேல
விளைக ளொழுக நுடங்கிவரு மின்போ லடைந்து கண்டார்கள். (௨௨)

கண்ட வடிவாற் றிளைப்பதற்குக் கழிபே ரன்பு காதல்வழிக்
கொண்டு செல்ல வொருசார்தங் குணனு நாண முதனான்கும்
மண்டி யொருசார் மறுதலைப்ப மனமு முழன்று தடுமாற
அண்டர் பெருமான் விளையாடற் கமையச் சூழ்ந்தா ரமுதனையார். (உங)

வேறு.

இரங்குமே கலைசிலம் பன்றி யேனைய
விரும்பிய குழைதொடி மின்செய் கண்டிகை
மருங்கிறச் சுமப்பினும் வளைகைக் கில்லெனின்
அரும்பிய முலையினார்க் கழகுண் டாகுமோ. (உச)

செல்வநல் வணிகிரெஞ் செங்கைக் கேற்பன
நல்வளை தெரிந்திடு மென்று நாய்கர்முன்
வல்வள ரிளமுலை மகளிர் மின்னுமிழ்
கல்வளர் கடகமென் காந்த ணீட்டினார். (உரு)

பண்டரு கிளவியங் கயற்கட் பாவைகைத்
தண்டளிர் பற்றிய தடக்கை மாதர்கைம்
முண்டகம் பற்றியே முகிழ்த்துப் பல்வரி
வண்டுக ளேற்றுவார் மைய லேற்றுவார். (உசு)

புங்கவ னிடுவளை புடைத்து மீளவந்
தெங்களுக் கிடவிலை யிடுதி ராலெனக்
கொங்கவிழ் பைங்குழ லெருத்தங் கோட்டிநின்
றங்கர நீட்டுவா ராசை நீட்டுவார். (உஎ)

எமக்கிடு மெமக்கிடு மெனப்பின் பற்றியே
அமைத்தடந் தோளினா ரனங்கன் பூங்கணை
தமைத்துளை படுத்தவோர் சார்பி லாமையாற்
கமைப்புறு நாண்முதற் காப்பு நீங்கினார். (உஅ)

முன்னிடு வளையெலாங் கழல முன்புசூழ்ந்
தின்னவை பெரியவே றிடுமென் றிட்டபின்
அன்னவு மனையவே யாக மீளவந்
தின்னமுஞ் சிறியவா விடுமென் றேந்துவார். (உகூ)

பின்னிடும் வளைகளுஞ் சரியப் பேதுறு
முன்னெதிர் குறுகிநீர் செறித்த மொய்வளை
தன்னொடு கலைகளுஞ் சரிவ தேயென
மின்னென நுடங்கினார் வேனெ டுங்கணார். (௩௦)

இவ்வளை போல்வன யாமுன் கண்டிலேம்
மெய்வளை வணிகிரிவ் வரிய வெள்வளை
எவ்வயி னுள்ளவின் றினிய வாகியெம்
மெய்வளர் பொடிப்பெழ வீக்கஞ் செய்தவே. (௩க)

நாளையும் வளையிட நண்ணு மிங்கென்பார்
கோள்வளை விலையிது கொண்டு போமென்பார்
வாள்விழி யீர்பினுள் வாங்கிக் கோடுமென்
றுளரி யேறனு ராடிப் போயினார். (௩உ)

போயின வணிகாதம புடையின் மின்னெனப்
பாயின மகளிரும் பலருங் காணமுன்
மேயின விண்ணிழி விமானத் துள்ளொளி
ஆயின திருவுரு வாகித் தோன்றினர். (கங)

வேறு.

மட்டலம்பு கோதையார்முன் வளைபகர்ந்த வணிகர்தாம்
பட்டிசைந்த வல்குனங்கை பாகராகு மெனவியந்
துட்டதும்பு முவகைவெள்ள முற்றெழுந்த குமிழிபோற்
கட்டதும்பு புனலிலாழ்ந்து களியடைந்த நகரெலாம். (கச)

உருவிலாளி யுடல்பொடித்த வொருவர்கூட விருவரான்
மருவிலார் திருக்கைதொட்டு வளைசெறித்த நீர்மையாற்
கருவின்மாத ராகிநாய்கர் கன்னிமார்கண் மின்னுமேற்
பொருவில்காளை யெனவரம்பில் புதல்வரைப் பயந்தனர். (கரு)

பிறந்தமைந்த ரளவிறந்த பெருமைகொண்ட பெருமிதஞ்
சிறந்தவீர மாற்றலேற்ற திறல்புனைந்து வைகினார்
மறந்ததும்பு வேனெடுங்கண் வணிகமாதர் சிறிதுநாள்
துறந்தரன்ற னருளடைந்து துணையடிக்கண் வைகினார். (கசு)

வளையல்விற்றபடலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - க,எருகூ.

முப்பத்துமூன்றாவது

அட்டமாசித்தியுபதேசித்தபடலம்.

கொத்திலங்கு கொன்றைவேய்ந்த கூடலாதி மாடநீள்
பத்தியம்பொன் மறுகணைந்து வளைபகர்ந்த பரிசுமுன்
வைத்தியம்பி னுமியக்க மாதர்வேண்ட வட்டமா
சித்திதந்த திறமினித் தெரிந்தவாறு செப்புவாம். (க)

மின்னலங்கல் வாகைவேல் விழுப்பெருங் குலத்தினிற்
றென்னவன்ற னாணைநேமி திசையெலா முருட்டுநாள்
முன்னைவைக ளூழிதோறு மோங்குமொய் வரைக்கணே
மன்னுதண் பராரையால நிழன்மருங்கு மறைமுதல். (உ)

அடுப்பமாசில் வெள்ளிவெற்பி னருகிருக்கு மரகதங்
கடுப்பவாம மிசையிருந்து கனகவெற்பன் மகளெனும்
வடுப்படாத கற்பினாண் மடித்துவெள்ளி லைச்சுருள்
கொடுப்பநேச மூறுபோக குரவனாகி வைகினான். (ங)

பிருங்கிநந்தி யேமுதற் பெருந்தகைக் கணத்தருய
மருங்கிருந்த சனகனாதி மாதவத்தர் நால்வரும்
ஒருங்கிறைஞ்சி யுண்ணவுண்ண வமுதமூறு சிவகதைக்
கரும்பருந்த வாய்மலர்ந்து கருணைசெய்யு மெல்லைவாய். (ச)

பௌவமூழ்கு சூர்தடிந்த பாலனுக்கு மூலைகொடுத்
தெவ்வமாய வினைகடை ரியக்கமாத ரறுவருந்
தெய்வநீறு முழுதணிந்து செய்யவேணி கண்டிகை
சைவவேட மாதவந் தரித்துவந்து தோன்றினார். (௫)

மந்திரச்சி லம்பலம்பு மலரடிக்கண் வந்திசெய்
தெந்தையட்ட சித்திவேண்டு மெங்களுக்கெ ன[illegible]
அந்தளிர்க்கை யவரிரப்ப வண்ணறன் மடித்தலந்
தந்திருக்கு மாதையங்கை சுட்டியீது சாற்றுமால். (௬)

வேறு.

அலர்பசும் பொலங்கொம் பன்ன வணங்கிவ ணிறைவா லெங்கும்
மலர்பரா சததி யாகி மகேசையா யணிமா வாதிப்
பலர்புகழ் சித்தி யெட்டும் பணிந்துகுற் றேவல் செய்யுஞ்
சிலதிய ராகிச் சூழ்ந்து சேவகஞ் செய்ய வைகும். (௭)

இவளைநீர் சிந்தித்தான்முன் னீட்டிய வினையை நீக்கித்
தவலருஞ் சித்தி யெட்டுந் தருமெனக் கருணை பூத்துச்
சிவபரஞ் சோதி யெட்டுச் சித்தியுந் தெளித்தல் செய்தான்
அவரது மறந்தா ரும்மை யாழ்வினை வலத்தான் மன்னோ. (௮)

செழுமதிப் பிளவு வேய்ந்த தேவுமக் குற்ற நோக்கி
முழுமதி முகத்தி னாரை முனிந்துநீர் பட்ட மங்கைப்
பழுமர முதலஞ் ஞானப் பாறையாய்க் கிடமி னென்னக்
கழுமலுற் றவர்தாழ்ந் தென்று கழிவதிச் சாப மென்றார். (௯)

இப்படிக் கருங்கலாகிக் கிடத்திரா யிரம்யாண் டெல்லைக்
கப்புற மதுரை நின்று மடுத்துமைத் தொடுத்த சாபத்
துப்பற நோக்கி நுங்க டொல்லுரு நல்கிச் சித்தி
கைப்படு கனிபோற் காணக் காட்டுதும் போதி ரென்றான். (௧௦)

வேறு.

கொடியனார்க ளறுவரும், நெடியவானி மிர்ந்துகார்
படியும்பட்ட மங்கையால், அடியிற்பாறை யாயினார். (௧௧)

கதிர்கலம் பெய் காட்சிபோல், உதிர்பழத்தி னுடலெலாம்
புதைபடக்கி டந்தனர், மதரரித் தடங்கணார். (௧௨)

பருவமா யிரங்கழிந், தொருவமாட மதுரையெங்
குரவனெண் குணத்தினான், றிருவுளந் திரும்பினான். (௧௩)

தன்னதிச்சை கொண்டதோர், இன்னருட் குரவனாய்
அந்நெடுங்க லாயினார், முன்னர்வந்து தோன்றினான். (௧௪)

இருட்டதும்பு கோதையார், மருட்டதும்பு வினைகெட
அருட்டதும்பு கண்ணினாற், றெருட்டதும்ப நோக்கினான். (௧௫)

அடிகணோக்க வம்புயங், கடிகொணெய்தல் காந்தள்பைங்
கொடிகொண்முல்லைகுமுதமேற், படியப்பூத்த பாறையே. (௧௬)

தாக்கவேத கத்திரும், பாக்கமுற்ற பொன்னென
நீக்கமற்ற விருண்மல, வீக்கமற்று விட்டதே. (௧௭)

* கலம் - ஈண்டுப் புதுமட்பாண்டம். "புதுக்கலம் போலும் பூங்கனி ஆல்" என்றார் சிந்தாமணியினும்.

நிறையுமன்பெ னுந்நதி, பொறையெனுங் கரைகட
திறைவனின்ன ருட்கடற், றுறையின்வாய் மடுப்பவே. (கஅ)

எழுந்திறை யடிக்கணே, அழுந்துநேச மொடுதலைக்
கொழுந்தனார்க ளறுவரும், விழுந்திறைஞ்சி னாரரோ. (ககூ)

குமரற்கூட்டு மிளமுலை, உமையொப்பார்கள் சென்னிமேல்
அமலச்சோதி யங்கையாங், கமலப்போது சூட்டினான். (உ0)

சித்தியெட்டு மங்கலார், புத்தியிற்கொ ளுந்தவே
கைத்தலத்தில வைத்ததோர், முத்தெனத்தெ ருட்டுவான். (உக)

வேறு.

அணிமா மகிமா விலகிமா வரிய கரிமாப் பிராத்திமலப்
பிணிமா சுடையோர்க் கடைவரிய பிராகா மியமீ சத்துவமெய்
துணிமா யோகர்க் கெளியவசித் துவமென் றெட்டா மிவையுளக்கண்
மணிமா சறுத்தோர் விளையாட்டின் வகையா மவற்றின் மரபுரைப்பாம். (உஉ)

அறவுஞ் சிறிய வுயிர்தொறுந்தான் பரம காட்டை யணுவாய்ச்சென்
றுறையுஞ் சிறுமை யணிமாவா முவரிஞால முதன் மேலென்
றறையுஞ் சிவாந்த மாறுறு முள்ளும் புறனு மகலாதே
நிறையும் பெருமை தனையன்றே மகிமா வென்னு நிரம்பியநூல். (உங)

இலகு மேரு பாரம்போ லருகரும் யோகி தனையெடுத்தால்
இலகு வான *தூல மென விருப்ப திலகி மாவாகும்
இலகு வான பரவணுப்போ லிருக்கும் யோகி தனையெடுத்தால்
இலகு மேரு பாரமென விருப்ப தன்றே கரிமாவாம். (உச)

பிலத்தி லிருந்தோ னயனுலகிற் புகுதன் மீண்டும் பிலமடைதல்
பலத்தின் மிகுந்த பிராத்தியதாம் பரகா யத்தி னண்ணுதல்வான்
புலத்தி னியங்க லிச்சித்த போக மனைத்துந் தானிருக்குந்
தலத்தி னிணைந்த படிவருதல் பிராகா மியமாந் தவக்கொடியீர். (உரு)

விண்ணி லிரவி தன்னுடம்பின் வெயிலா லனைத்தும் விளக்குதல்போன்
மண்ணி லுளவாம் பொருள்பலவுங் கால மூன்றும் வானத்தின்
கண்ணி லுளவாம் பொருளுந்தன காயத் தொளியா லிருந்தறிதல்
எண்ணி லிதுவு மறையொருசார் பிராகா மியமென் றியம்புமால். (உசு)

னனமுத் தொழிலுந்தன் னிச்சை வழிசெய் தெழுபுரவித்
தேசன் முதற்கோள் பணிகேட்பத் திகழ்வ தீசத் துவமாகும்
பூச லவுணர் புள்விலங்கு பூத மனிதர் முதலுலகும்
வாச வாதி யெண்மருந்தன் வசமாக் கொள்கை வசித்துவமாம். (உஎ)

எம்மை யுணர்ந்த யோகியர்க ளிவற்றை விரும்பா ரேனுமவர்
தம்மை நிழல்போ லடைந்துலகர்க் கனையார் பெருமை தனையுணர்த்துஞ்
செம்மை யுடைய விவையென்னச் சித்தி யெட்டுந் தெளிவெய்தக்
கொம்மை முலையா ரறுவருக்குங் கொளுத்தி னனெண் குணச்செல்வன். (உஅ)

---

* தூலம் - பஞ்சு.

வேறு.

தேவதே வுபதே சித்த சித்தியைச் சிலம்பன் செல்வி
பாவனை வலத்தா னன்கு பயின்றுவான் வழிக்கொண் டேகிப்
பூவலர் கதுப்பி னல்லா ரறுவரும் புரமூன் றட்ட
காவல னிரம்பி வைகுங் கயிலைமால் வரையிற் புக்கார். (௨௧)

அட்டமாசித்தியுபதேசித்தபடலமுற்றிற்று.

ஆ. திருவிருத்தம் - ௧,௭௮௮.

முப்பத்துநான்காவது

விடையிலச்சினையிட்டபடலம்.

சந்துசூழ்மல யச்சிலம்பர் தவம்புரிந்த வியக்கிமார்க்
கந்தநாலிரு சித்திதந்த தறைந்தனந்தன தடிதொழா
வந்துமீள்வள வன்பொருட்டு வடாதுவாயி றிறந்தழைத்
திந்துசேகரன் விடையிலச்சினை யிட்டவாறு விளம்புவாம். (௧)

தோடுவெட்டி மலைத்துவாள்விதிர் துணைவிழிக்குயி லிளமுலைக்
கோடுவெட்டிய குறிகொண்மேனியர் குடிகொண்மாநகர் கடிகொள்பைங்
காடுவெட்டிய காரணக்குறி காடுவெட்டிய சோழனென்
றேடுவெட்டிய வண்டுசூழ்பொழி லெயில்கொள்கச்சியு ளானவன். (௨)

உத்தமச்சிவ பத்தரிற்பெரி துத்தமன்புது விரைகலன்
மித்தையென்றுவெ ணீறுகண்டிகை யாரமென்றணி மெய்யினான்
நித்தவேத புராணமாதி நிகழ்த்திடும்பொருள் கண்ணுதல்
அத்தனேபர தத்துவப்பொரு ளென்றளந்தறி கேள்வியான். (௩)

அங்கமாறொடு வேதநான்கு மறிந்துமெய்ப்பொரு ளாய்ந்துளஞ்
சங்கைகொண்டனு தினமரன்புகழ் சாற்றுசைவ புராணநூல்
பொங்குமின்சுவை யமுதுதன்செவி வாய்திறந்து புகட்டியுண்
டெங்கணாயக னடியிணைக்க ணிருத்துமன்பு கருத்துளான். (௪)

முக்கணாயகன் முப்புரத்தை முனிந்தநாயகன் மங்கையோர்
பக்கநாயகன் மிக்கவானவர் பரவுநாயக னரவணிச்
சொக்கநாயக னுடலுஞ்செவி யான்முகந்து சுவைத்தருந்
தக்கபாலொடு தேன்கலந்து தருக்கியுண்பவ னாயினான். (௫)

அங்கயற்கண் மடந்தைபாக னடித்தலந்தொழு மாசைமேற்
பொங்கிமிக்கெழ மன்பனாய்மது ரேசன்மின்னு பொலங்கழற்
பங்கயப்பத மென்றுநான்பணி வேனெனப்பரி வெய்தியே
கங்குலிற்றுயில் வான்கயற்புரை கண்ணிபங்கனை யுன்னியே. (௬)

அன்றுசெம்பியா கோமகன்கன வின்கணேயருள் வெள்ளிமா
மன்றுணின்றவர் சித்தராயெதிர் வந்துமன்னவ நின்னுளத்
தோன்றுமஞ்ச லொருத்தனாகி யுருத்திரிந்து தனித்துவந்
தின்றுவந்தனை செய்துபோதி யெனப்புகன்றன ரேகினார். (௭)

கேட்டுவேந்தன் விழித்துணர்ந்து உளாந்தவற்புத னாகியே
ஈட்டுசேனை யமைச்சுளார்பிறர் யாருமின்றி வழிக்கொளீஇ
நாட்டமூன்றவ னுமைவாள்கொடு நல்லருட்டுணை யாய்வழி
காட்டவன்பெனு மிவுளிமேல்கொடு கீங்குல்வாய்வரு வானரோ. (௮)

கல்லுமாரமூலத்தமும்பல கலுழியுங்குண கனைகடற்
செல்லுமாநதி பலவும்வானிமிர் கன்னலுஞ்செறி செந்நெலும
புல்லுமாநில னுங்கழிந்து புறங்கிடக்க நடந்துபோய்
வல்லுமாமுனி யரர்கணம்பயில் வைகையந்துறை யெய்தினான். (௯)

குறுகுமுன்ன ரதிர்ந்துவைகை கொதித்தகன்கரை குத்திவேர்
பறியவன்சினை முறியவிண்டொடு பைந்தருக்களை யுந்தியே
மறுகிவெள்ள மெடுத்துலைத்தர மன்னவன்கரை தன்னினின்
றிறுதியில்லவ னைத்தொழற்கிடை யூறிதென்றஞ ரெய்துவான். (௧௦)

இழுதொடுஞ்சுவை யமுதுபொற்கல னிட்டுணாதிரு கண்கணீர்
வழியவந்து விலக்குவாரின் வளைந்ததாறு பகற்செயும்
பொழுதெழும்பொழு தோமறுக்கம் விளைக்குமேயிகல் பூழியன்
வழுதியன்றியும் வைகையும்பகை யானதென்று வருந்தினான். (௧௧)

வெள்ளநோக்கி யழுங்குசெம்பியன் மெலிவுநோக்கி விரைந்தெழீஇக்
கள்ளநோக்கி லகப்படாதவர் கனவுபோலவ னனவில்வந்
துள்ளநோக்குடை யன்பருக்கரு ளுருவமாகிய சித்தர்தாம்
பள்ளநோக்கி வரும்பெரும்புனல் வற்றநோக்கினர் பார்த்தரோ. (௧௨)

வறந்தவாறு கடந்துவந்து வடக்குவாயி றிறந்துபோய்
நிறைந்தகாவல் கடந்துவீதிக ணீந்திநேரியர் வேந்தனைச்
சிறந்தவாடக புனிதபங்கய திப்பியப்புன லாடுவித்
தறந்தவாசுறை சாமகண்டர்த மாலயம்புகு வித்தரோ. (௧௩)

வேறு.

வெம்மைசெய் கதிர்கால் செம்பொன் விமானசே கரத்தின் மேய
தம்மையும் பணிவித் தெண்ணில் சராசர மனைத்து மீன்ற
அம்மையங் கயற்க ணாளா மணங்கையும் பணிவித் துள்ளஞ்
செம்மைசெய் தின்ப வெள்ளத் தழுத்தினார் சித்த சாமி. (௧௪)

எண்ணிய வெண்ணி யாங்கே யான்பெற முடித்தாய் போற்றி
பண்ணியன் மறைக டேறாப் பான்மொழி மணாள போற்றி
புண்ணியர் தமக்கு வேதப் பொருளுரை பொருளே போற்றி
விண்ணிழி விமான மேய சுந்தர விடங்க போற்றி. (௧௫)

எவ்வுட லெடுத்தேன் மேனா ளெண்ணிலாப் பிறவி தோறும்
அவ்வுட லெல்லாம் பாவ மறம்பொருட் டாக வன்றோ
தெவ்வுடல் பொடித்தா யுன்றன் சேவடிக் கடிமை பூண்ட
இவ்வுட லொன்றே யன்றோ வெனக்குட லான தையா. (௧௬)

இன்னன பலவு மேத்தி யிறைஞ்சிப்பல் வரமும் வேண்டும்
மின்னகு வேலி னானை வேந்தநீ போந்த வண்ணந்
தென்னவ னறிந்தா லேதஞ் செய்யுமென் றார்த்தார்க் கண்ணி
மன்னனைச் சித்தசாமி யுத்தர வழிக்கொண் டேகா. (௧௭)

மண்ணினை வளர்க்கும் வைகை வடகரை யளவு நண்ணிப்
புண்ணிய நீற்றுக் காப்புப் புண்டர நுதலிற் சாத்தி
உண்ணிறை கருத்துக் கேற்ப வுறுதுணை யுனக்குண் டாகி
நண்ணுக வென்று பொன்னி நாடனை விடுத்து மீண்டு. (கஅ)

வேறு.

காப்புச் செய்து கதவில் விடைக்குறி
யாப்புச் செய்தமைத் தீர்ஞ்சடைச் சித்தர்போய்த்
தூப்புக் கைவரை சூழ்வட மேருவிற்
கோப்புச் செய்தபொற் கோயிலின் மேயினார். (கசு)

கங்கு லின்கருங் கைகுறைப் பானெனச்
செங்கை நீட்டித் தினகரன் றோன்றலும்
எங்க ளுயக னிட்ட குறியறிந்
தங்கண் வாயி றிறப்பவ ரையுறா. (உ0)

மற்றை வாயில்கண் மூன்றினும் வல்லைபோய்
உற்று நோக்கினர் தாநென்ன லொற்றிய
கொற்ற மீனக் குறிபிழை யாமைகண்
டெற்றி தாங்கொலென் றேந்தன்மு னெய்தினார். (உக)

போற்றி மன்னநம் பொன்னங் கயற்குறி
மாற்றி யுத்தர வாயிற் கதவதில்
ஏற்றி லச்சினை யிட்டனர் யாரையென்
றாற்றல் வேந்த வறிகிலம் யாமென்றார். (உஉ)

வையை நாடனும் வந்தது நோக்குறீஇ
யைய வின்னதோ ரற்புத மாயையைச்
செய்ய வல்லவர் யாரெனத் தேர்கிலான்
ஐய மெய்தி யகன்மனை நண்ணினான். (உங)

மறுத்த வுண்டியன் மாமலர்ப் பாயலை
வெறுத்த கன்றரை மேற்பள்ளி கொள்ளவும்
பொறுத்த னன்றுயின் றானிருட் போழ்தினிற்
கறுத்த கண்டர் கனவினிற் கூறுவார். (உச)

மட்ட லம்பிய தாதகி மாலையான்
உட்ட தும்பி யொழுகிய வன்பினாற்
கட்டி லங்கெயிற் கச்சியிற் காடெலாம்
வெட்டி நம்புடை வித்திய பத்தியான். (உரு)

வந்து நம்மை வழிபட வேண்டினான்
இந்த வாயி றிறந்தழைத் தின்னருள்
தந்து மீள விடுத்துப்பின் றாட்கொளீஇ
நந்த மால்விடை நாம்பொறித் தேமென. (உசு)

அருளி னானையந் தேற்றி யகன்றபின்
மருளி னீங்கி மலர்க்கண் விழித்தெழீஇ
வெருளி னான்வெயர்த் தான்விம்மி னான்பல
பொருளி னாற்றுதித் தான்குல பூடணன். (உஎ)

வள்ள லன்புக் கெளிவந்த மாண்புகண்
டுள்ள வுள்ளநின் றூற்றெழு மற்புத
வெள்ள மும்பர மானந்த வெள்ளமும்
கொள்ளை கொண்டுதன் கோமனை நீங்கினான். (உ௮)

அரிய ருமனத் தன்புடை யன்பருக்
கெளிய ராடலை யார்க்கும் வெளிப்படத்
தெளியு மாறு தெளிவித்துத் தன்னைப்போல்
விளிவி லாவின்ப வெள்ளத் தழுத்தினான். (உ௯)

வேறு.

கோடாத செங்கோலும் வெண்குடையுங் கோமுடியும்
ஏடா ரலங்க லிராசேந் திரற்களித்துத்
தோடா ரிதழியான் றாட்கமலஞ் சூடிவா
ழூடா ளரசுரிமை பெற்று னரபதியே. (௩0)

விடையிலச்சினையிட்டபடல முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௧,௮௩௯.

முப்பத்தைந்தாவது

தண்ணீர்ப்பந்தல்வைத்தபடலம்.

சம்பு மதுரைப் பரனிரவு தனியே வந்து தனைப்பணிந்த
வெம்பு கதிரோன் மருமானை விடுத்து மீண்டு தாழிறுக்கி
அம்பொற் கதவின் விடைபொறித்த தறைந்துந் தென்ன னடுபடைக்கு
வம்பு மலர்தோய் புனற்பந்தர் வைத்துக் காத்த வகைசொல்வாம். (௧)

தென்ன னரச புரந்தரன்கோல் செலுத்து நாளிற் காடெறிந்த
மன்னன் பின்னர் வெளிப்படையாப் போந்து போந்து மதுரேசன்
பொன்னங் கமலத் தாள்வணங்கிப் போவான் முன்னிப் பொரும்பொருநைக்
கன்னி நாடன் கேண்மைபெற விடுத்தான் வரிசைக் கையுறையே. (உ)

பொன்னி நாடன் வரவிடுத்த பொலம்பூ ணுடை முதற்பிறவுங்
கன்னி நாடன் கைகவர்ந்து தானுங் கலக்குந் தொடாபினால்
உன்னி வேறு கையுறையுய்த் துறவு செய்ய வுவப்பெய்திச்
சென்னி காதன் மகட்கொடுப்பா னிசைந்தா னந்தச் செழியற்கு. (௩)

செழியன் றனக்கு வரையறுத்த செய்தி கேட்டுச் செம்பியர்கோன்
கழியன் புடைய குலமகளைத் தான்போய்க் கொள்வான் கருதிமதி
வழிவந் தவற்குத் தம்பியென வந்த வரச சிங்கமெனும்
பழியஞ் சாதான் வஞ்சித்துப் பழனக் காஞ்சிப் பொருதுவான். (௪)

காஞ்சிப் பதிமுன் குறுகுமிளங் காவ லோனைக் கடற்சேனை
தாஞ்சுற் றியவந் தெதிர்கொடுபோய்த் தம்முன் றனக்கென் றிருந்தமகள்
ஆஞ்சிற் றிடையை மணம்புணர்த்தி யந்த மருகற் கரசுநிலை
வாஞ்சித் தரச புரந்தரனைப் பிடிக்க மதித்தான் வனமெறிந்தான். (௫)

வேறு.

மருமகன்ற னுடனெழுந்து மாமனுன வளவர்கோன்
பொருமகன்ற சேனையானை புடைநெருக்க புதிவழித்
திருமகன்றன் மேலமர்த் திறங்குறித்து முரசறைந்
துருமகன்ற பல்லியம் மொலிப்பவந்து ளானரோ. (௬)

திரண்டெழுந்து வந்த சென்னிசேனை தன்னகர்க்
கிரண்டியோ சனைப்புறத் திறுக்குமுன்ன ரொற்றராற்
றெருண்டு தென்னன் மாடநீடு கூடன்மேய சிவனதாள்
ரண்புகுந்து வேண்டுகென்று சார்ந்துதாழ்ந்து கூறுவான். (௭)

அன்றுபாதி யிரவில்வந்து னடிபணிந்து தமியனுய்ச்
சென்றசென்னி யென்னுகின்ன திருவடிக்க ணன்பிறன்
இன்றுமங் கிலையனு யெனக்குவேண்டு வனவிடுத்
தொன்றுகேண்மை புரிகுவா னுளத்திலொன்றை யுன்னினுன். (௮)

அறத்திறுக்கு ளாகியன்று நின்றநீ யவன்செயும்
மறத்திறுக்கு ளாகியின்று வன்மைசெய்வ தேயறப்
புறத்தினுர் புரம்பொடித்த புண்ணியா வெனக்கரைந்
துறைத்துவேண்டி னுனவேலை யும்பர்நாத னருளினல். (௯)

மெய்துறந்த வாய்மையொன்று விண்ணினின்று மண்ணலே
ஐதுறுங்கள் சேனையேனு மாகவத்து நாளைநீ
எய்திவந்த தெவ்வரோ டெதிர்ந்துருத்து நின்றுபோர்
செய்திவென்றி நின்னதாதல் செய்துமென் றெழுந்ததால். (௧0)

காயவாணி செவிநுழைந்த காலவேந்த நிந்திரன்
நாயனு ரடிக்கணே நயந்தவன்பு முவகையும்
ஆயவேலை வீழ்ந்துதாழ்ந் தகன்றுதன் னிருக்கைபோய்
மேயினு னியிர்ந்தகங்குல் விடியுமெல்லை நோக்குவான். (௧௧)

கழித்தகங்கு விறவிசும்பு கண்விழிக்கு முன்னரே
விழித்தெழுந்து சந்தியாதி வினைமுடித்து வானநீர்
சுழித்தலம்பு வேணியண்ண றாயபூசை செய்தெழீஇத்
தெழித்தெழுந்த சேனையோடு செருநிலத்தை நண்ணினுன். (௧௨)

அலைசிறந்த சலதிமீதொ ராறுசெல்லு மாறுபோல்
மலைசிறந்த நேரிவெற்பன் மள்ளர்சேனை வெள்ளமேற்
கலைசிறந்த மதிநிறைந்த கன்னிநாடு காவலான்
சிலைசிறந்த சிறியசேனை சென்றலைத்து நின்றதே. (௧௩)

உருமுவன்ன குரலினு ருலவையன்ன செலவினுர்
வெருவுதீயின் வெகுளியார் வெடித்தவீர நகையினுர்
செருவின்மான வணியினுர் சினைஇமடித்த வாயினுர்
இருவர்சேனை மள்ளரும் மெதிர்ந்துகை கலந்தனர். (௧௪)

மன்றலந் தெரியனேரி மலயவன் றமர்க்கெலாந்
தென்றலம் பொருப்பினுன் றிரண்டநான்கு கருவியும்
மின்றயங்கு செய்யவேணி விடையவன்ற னருளினல்
ஒன்றனந்த மாகவந் துருத்தெதிர்ந்து தோன்றுமால். (௧௫)

தேரிணைதை கந்துகஞ் சிரிக்குமமாதை சொரிமதக்
காரிணைதை பேரியங் கறங்குமோதை மறவர்தம்
போரிணைதை வீரர்தோள் புடைக்குமோதை யோடுமுந்
நீரிணைதை யொன்றெனக் கலந்தொடுங்கி நின்றதே. (௧௬)

சிலைபயின்ற வீரரோடு சிலைபயின்ற வீரரே
கலைபயின்ற வாளரோடு கலைபயின்ற வாளரே
கொலைபயின்ற வேலரோடு கொலைபயின்ற வேலரே
மலைபயின்ற மல்லரோடு மலைபயின்ற மல்லரே. (௧௭)

கரியுகைத்த பாகரோடு கரியுகைத்த பாகரே
பரியுகைத்த மறவரோடு பரியுகைத்த மறவர்தேர்க்
கிரியுகைத்த வலவரோடு கிரியுகைத்த வலவரே
எரியுகைத் தெதிர்ந்தகா லெனக்கலந்து மலைவரால். (௧௮)

விடுக்கும்வாளி யெதிர்பிழைப்பர் வெய்யவாளி யெய்துபின்
தொடுக்கும்வாளி வில்லொடுந் துணிப்பர்பின் கணிப்பற
மடுக்கும்வாளி மார்புதைப்ப வாங்கிமற்றவ் வாளிகொண்
டடுக்குமேவ லாரையெய் தடர்ப்பர்கிள்ளி மள்ளரே. (௧௯)

சோணைமாரி யிற்சரஞ் சொரிந்துநின்று துள்ளுவார்
ஆனவாளி யெதிர்பிழைத தொதுங்கிநின் றழற்சரங்
கூனல்வாளி சிலையிறத் தொடுத்தெறிந்து கூவுவார்
மீனகேத னத்துவேந்தன் வீரர்சென்னி வீரர்மேல். (௨௦)

தறிந்ததா டகர்ந்தசென்னி தரையுருண்ட வரையெனச்
செறிந்ததோள் சரிந்ததேர் சிதைந்தயல் படைக்கலம்
முறிந்தயானை கையிரு முழங்கிவீழ்ந்த செம்புனற்
பறிந்தபாறு பாரிடங்கள் பைத்தகூளி மொய்த்தவே. (௨௧)

மடலினீடு தாரலங்கன் மன்னர்சேனை யின்னவா
றுடலினீழ லடியகத் தொடுங்கவும்ப ருச்சியிற்
கடலினீடு கதிரபரப்பு கடவுளெய்து மளவுநின்
றடலினீடி யிடைவிடாம லமருழந்த தாலரோ. (௨௨)

அந்தணா ளனைத்தையும் மழிக்கநின்ற வரனுதற்
சிந்துதீ யெனககனன் றுருத்துநின்று தெறுதலால்
எந்தயாறு மறவறப்ப விம்பரன்றி யும்பரும்
வெந்துவான யாறும்வற்ற வேனில்வந் திறுத்ததால். (௨௩)

மண்பிளந்து பிலநுழைந்து வரைபிளந்து நிரையவாய்
எண்பிளந்து நிறைபொஙக ரிலையுகப் பிளந்துமேல்
விண்பிளந்து பரிதிவீடு வெங்கரங்கள் யாரையுங்
கண்பிளந் தழன்றுவீசு கானலெங்கு மானதே. (௨௪)

வேறு.

ஆயிடை யலகைத் தேரு மடைந்தவர் வெயர்வு மன்றித்
தூயநீர் வறந்த வந்தச் சுடுபுலந் தோய்ந்த காலும்
மீயுயர் மதிகி லாவும் வெய்யவாய்ச் சுடுநல் லோருந்
தீயவர் தம்மைச் சேர்ந்தாற் றீயவ ராவ ரன்றோ. (௨௫)

விளைமத வூற்று மாறி வெருளியுஞ் செருக்கு மாறித்
துளையுடைக் கைம்மான் றூங்கு நடையவாய்ச் சாம்பிச் சோர்ந்த
உளர்தரு மூழிக் காலி னோடுவாம் புரவி யெய்த்துத்
தளர்நடை யுடைய வாகித் தைவரு தென்றல் போன்ற. (உசு)

கானலந் தேர்மேற் சூறைக் காலெனும் பாகன் றூண்ட
வேனில்வேந் தேறிச் சீறி வெப்பமாம் படைகள் வீச
மானிலங் காவல் பூண்ட மன்னவ ரிருவர் தங்கள்
தானையு முடைந்து தண்ணீர் நசைசுடச் சாம்பிற் றன்றே. (உஎ)

இரக்கமில் கொடிய செல்வர் மருங்குபோ யிரப்பார் போல
உருப்பமொண் டிறைக்குங் கள்ளி நீழல்புக் கொதுங்கு வாருந்
தருக்கற நிரப்பா லெய்த்தோர் தம்மினும் வறியர் பாற்சென்
றிரப்பபோ லிலைதீந் துக்க மரநிழ லெய்து வாரும். (உஅ)

கொல்லியம் பரிமான் றேரின் குறுநிழ லொதுங்கு வாரும்
அல்லிருள் வட்டத் தோல்வெண் கவிகையு ளடங்கு வாருஞ்
செலவிடம் பிறிது காணார் வீரவான் சென்றோர் நின்ற
கல்லுட னிழல்சேர் வாரு மாயினார் களம ரெல்லாம். (உகூ)

ஆயதோ ரமையந் தன்னி லளவிலா வுயிர்க்கு மீன்ற
தாயனார் துலைபோல் யார்க்குஞ் சமநிலை யாய கூடல்
நாயனார் செழியன் றானை நனந்தலை வேத நாற்காற்
பாயதோர் தண்ணீர்ப் பந்தர் பரப்பியப் பந்தர் நாப்பண். (௩0)

புண்டர நுதலுங் காதின் புறத்தணி மலரும் பாத
முண்டக மலர்மே லொற்றைக் கிங்கிணி முழக்குங் கச்சியாப்
புண்டதோ லுடையுங் கண்டோ ருள்ளமுங் கண்ணுங் கொள்ளை
கொண்டபுன் னகையு முள்ளக் கருணையின் குறிப்புந் தோன்ற. (௩க)

அருமறை யகத்து ணின்றுங் கருந்தவ ராகி வேணிப்
பொருபுனல் பூரித் தாங்கோர் புண்ணியச் சிரகந் தாங்கி
ஒருவருக் கொன்றே யாகி யிலக்கருக் கிலக்க மாகித்
தருகுறும் புழையால் வாக்கித் தணித்தனர் தண்ணீர்த் தாகம். (௩உ)

சுந்தரப் புத்தேள் வைத்த துறுமலர் வாசத் தெண்ணீர்ப்
பந்தர்புக் கடைந்து நன்னீர் பருகியெய்ப் பகல வாற்றல்
வந்தபின் செழியன் றன்னோர் வளவன்மே லேறிச் சீறி
அந்தமி லனிகஞ் சிந்தித் தும்பைவேய்ந் தடுபோர் செய்தார். (௩௩)

கடலுடைந் தென்னப் பொன்னி காவலன் றானைசாய
மடலுடை வாகை வேய்ந்து வளவனை மருக னோடும்
மிடலுடைத் தறுகட் சேனை வீரர்வெங் கையாற் பற்றி
அடலுடைக் கன்னி நாடர்க் கரசன்முன் கொண்டு போந்தார். (௩ச)

கொடுவந்த வளவன் றன்னைக் கோப்பெருஞ் செழியர் கோமான்
வடுவந்த தம்பி யோடு மாடநீள் கூடன் மேய
கடுவந்த மிடற்றார் முன்போய் விடுத்தெந்தை கருத்தியா தென்
நடுவந்த நிலையான் கேட்ப நாயக னிகழ்த்து மன்னோ. (௩ரு)

---

* கல்லாவது - போர்க்களத்திலே புறங்கொடாது உயிர்விட்ட வீரரது போர்த்திறத்தையெழுதி அவர்பேரால் அங்கே நாட்டப்பட்டகல். "கன்னின்றானெந்தை" என்னும் புறப்பொருள் வாகைப்படலத்தானுமுணர்க.

அறவனீ யல்லை யோவுன் னகத்தினுக் கிசைந்த செய்கென்
றிறைவன தருளால வானின் றெழுமொழி கேட்டு வைகைத்
துறைவனு மறத்தி னூற்றுற் சோழனைச் சிலமால் யானை
மறவயப் பரிபூண் மற்றும் வழங்கினான் விடுத்தான் பின்னர். (௬௬)

வள்ளறன் றம்பி யென்று மன்னவர் சிங்கந் தன்னைத்
தள்ளருந் தறுக ணாண்மைத் தருக்கறத் தானாள் செல்வம்
உள்ளன சிறிது மாற்றி யொதுக்கியெவ் வுயிர்களுந் தாயாய்ப்
பள்ளநீ ரகலங் காத்துப் பலவளம் பழுக்க வாழ்ந்தான். (௬௭)

தண்ணீர்ப்பந்தல்வைத்தபடலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௧,௮௫௫.

முப்பத்தாறுவது

இரசவாதஞ்செய்தபடலம்.

வரதன் மீனவன் படையிடை வந்துநீர்ப் பந்தர்
விரத னாகிநீ ரருத்திய வினையுரை செய்தும்
பரத நூலிய னாடகப் பாவையா ளொருத்திக்
கிரத வாதஞ்செய் தருளிய வாடலை யிசைப்பாம். (௧)

பருங்கை மால்வரைப் பூழியன் பைந்தமிழ் நாட்டின்
இரங்கு தெண்டிரைக் கரங்களா லீர்ம்புனல் வைகை
மருங்கி னந்தன மலர்ந்தபன் மலர்கடூஉய்ப் பணியப்
புரங்க டந்தவ னிருப்பது பூவண நகரம். (௨)

ஒண்ணி லங்குறை சராசர மிலிங்கமென் றெண்ணி
விண்ணி னாள்களுங் கோள்களும் விலங்குவ தியாக்கைக்
கண்ணி னான்கதிர் முதற்பல கடவுளர் பூசை
நல்வர மடைந்ததப் பதியில். (௩)

இளியு ளார்பொழிற் பூவணக் கிழவர்தங் கோயிற்
றளியு ளார்தவப் பேறனா டாதுகு பூந்தார்
அளியு ளார்குழ லணங்கனா ளந்தரத் தவர்க்குங்
களியு ளார்தர மயக்குறூஉங் கடலமு தனையாள். (௪)

நரம்பி னேழிசை யாழிசைப் பாடலு நடநூல்
நிரம்பு மாடலும் பெண்ணல நீர்மையும் பிறவும்
அரம்பை மாதரை யொத்தன ளறனெறி யொழுகும்
வரம்பி னாலவர் தமக்குமே லாயினாண் மன்னோ. (௫)

ஆய மாதர்பேர் பொன்னனை யாளென்ப வவடன்
நேய வாயமோ டரனிரு ணீங்குமு னெழுந்து
தூய நீர்குடைந் துயிர்ப்புரை சுடர்மதிக் கண்ணி
நாய னாரடி யருச்சனை நியமமு நடாத்தி.

திருத்தர் பூவணை வாணரைச் சேவித்துச் சுத்த
நிருத்த மாடிவந் தடியரைப் பொருளென நினையுங்
கருத்த ராயருச் சித்தவர் களிப்பவின் சுவையூண்
அருத்தி யெஞ்சிய தருந்துவா ளஃதவ ணியமம். (எ)

மாதரிந்நெறி வழங்குநாண் மற்றவ ளன்பைப்
பூத லத்திடைத் தெருட்டுவான் பொன்மலை வல்லி
காத னாயகன் றிருவுருக் காணிய வுள்ளத்
தாத ரங்கொடுத் தருளினார் பூவணத் தையர். (அ)

ஐயர் தந்தபே ரன்புரு வாயினாண் மழுமான்
கையர் தந்திரு வுருவினைக் கருவினாற் கண்டு
மைய கண்ணினாள் வைகலும் வருபொரு ளெல்லாம்
பொய்யி லன்புகொண் டன்பர்தம் பூசையி னேர்வாள். (கூ)

அடியர் பூசனைக் கன்றியெஞ் சாமையா லடிகள்
வடிவு காண்பதெப் படியென்று மடியிலச் செழியற்
கொடியில் பொற்கிழி நல்கிய வள்ளலை யுன்னிப்
பிடிய னாளிருந் தாளஃ தறிந்தனன் பெருமான் (க0)

துய்ய நீறணி மெய்யினர் கட்டங்கந் தொட்ட
கையர் யோகபட் டத்திடைக் கட்டினர் பூதிப்
பையர் கோவண மிசையசை யுடையினர் பவளச்
செய்ய வேணிய ரங்கொரு சித்தராய் வருவார். (கக)

வந்து பொன்னனை யாண்மணி மாளிகை குறுகி
அந்த மின்றிவந் தமுதுசெய் வாரொடு மணுகிச்
சிந்தை வேறுகொண் டடைந்தவர் திருவமு தருந்தா
துந்து மாளிகைப் புறங்கடை யொருசிறை யிருந்தார். (கஉ)

அமுது செய்தருந் தவரெலா மகலவே றிருந்த
அமுத வாரியை யடிபணிந் தடிச்சிய ரைய
அமுது செய்வதற் குள்ளெழுந் தருள்கென வுங்கள்
அமுத னாளையிங் கழைமினென் றருளலு மனையார். (கங)

முத்த ராமுகிழ் வாணகை யல்குலாய் மூக்கண்
அத்த ரானவர் தமரெலா மமுதுசெய் தகன்றார்
சித்த ராயொரு தம்பிரான் சிறுநகை யினராய்
இத்த ராதலத் தரியரா யிருக்கின்றா ரென்றார். (கச)

நவம ணிக்கலன் பூத்தபூங் கொம்பரி னடந்து
துவரி தழ்க்கனி வாயினாள் சுவாகதங் கில * வென்
றுவமை யற்றவர்க் கருக்கிய மாசன முதவிப்
பவம கற்றிய வடிமலர் முடியுறப் பணிந்தாள். (கரு)

எத்த வஞ்செய்தே னிங்கெழுந் தருளுதற் கென்னாச்
சித்தர் மேனியும் படிவெழிற் செல்வமு நோக்கி
முத்த வாணகை யரும்பநின் றஞ்சலி முகிழ்ப்ப
அத்தர் நோக்கினா ரருட்கணா லருள்வலைப் பட்டாள். (கசு)

---

* சுவாகதங்கில - நல்வரவல்லவா.

ஐய ருள்ளொழுந் தருளுக வடிகணீ ரடியேன்
உய்ய வேண்டிய பணிதிரு வுளத்தினுக் கிசையச்
செய்ய வல்லனென் றஞ்சலி செய்யவுண் ணகையா
மைய னோக்கியை நோக்கிமீ னோக்கிதன் மணாளன். (௧௭)

வடிவை நேர்விழி யாய்பெரு வணப்பினை சிறிதுன்
கொடியை நேரிடை யெனவிளைத் தனையெனக் கொன்றை
முடியி னனடி யாரமென் முகிழ்முலைக் கொடிதாழ்ந்
தடிய னேற்குவே றுயொரு மெலிவிலை யையா. (௧௮)

எங்க ணயகர் திருவுருக் காண்பதற் கிதயந்
தங்கு மாசையாற் கருவுருச் சமைத்தனன் முடிப்பேற்
றிங்கு நாடொறு மென்கையில் வரும்பொரு ளெல்லாம்
உங்கள் பூசைக்கே யல்லதை யொழிந்தில வென்றாள். (௧௯)

அருந்து நல்லமு தனையவ ளன்புதித் திக்கத்
திருந்து தேனென விரங்குசொற் செவிமடுத் தையர்
முருந்து மூரலாய் செல்வமெய் யிளமைநீர் மொக்குள்
இருந்த வெல்லையு நிலையில வென்பது துணிந்தாய். (௨௦)

அதிக நல்லற நிற்பதென் றறிந்தனை யறத்துள்
அதிக மாஞ்சிவ புண்ணியஞ் சிவார்ச்சனை யவற்றுள்
அதிக மாஞ்சிவ பூசையு ளடியவர் பூசை
அதிக மென்றறிந் தன்பரை யருச்சனை செய்வாய். (௨௧)

உறுதி யெய்தினை யிருமையு முன்பெயர்க் கேற்ப
இறுதி யில்லவன் றிருவுரு வீகையாற் காணப்
பெறுதி யாகநின் மனைக்கிடைப் பித்தளை யீயம்
ஈறுதி யானபல் கலன்களுங் கொணர்தியென் றறைந்தார். (௨௨)

ஈயஞ் செம்பிரும் பிரசத மென்பவும் புணர்ப்பாற்
றோயும் பித்தளை வெண்கலந் தராமுதற் றொடக்கத்
தாயும் பல்வகை யுலோகமுங் கல்லென வலம்பத்
தேயுஞ் சிற்றிடை கொண்டுபோய்ச் சித்தர்முன் வைத்தாள். (௨௩)

வைத்த வேறுவே றுலோகமு மழுவுழை கரந்த
சித்த சாமிக ணீற்றினைச் சிதறினர் பாவித்
தித்தை நீயிரா வெரியிலிட் டெடுக்கினன் பொன்னும்
அத்தை நாயகன் றிருவுருக் கொள்கென வறைந்தார். (௨௪)

மங்கை பாகரை மடந்தையு மிங்குநீர் வதிந்து
கங்குல் வாயமு தருந்தியிக் காரிய முடித்துப்
பொங்கு காரிருள் புலருமுன் போமெனப் புகன்றாள்
அங்க யற்கண டனைப்பிரி யாரதற் கிசையார். (௨௫)

சிறந்த மாடநீண் மதுரையிற் சித்தர்யா மென்று
மறைந்து போயினர் மறைந்தபின் சித்தராய் வந்தார்
அறைந்த வார்கழ லலம்பிட வெள்ளிமன் றாடி
நிறைந்த பேரொளி யாயுறை நிருத்தரென் றறிந்தாள். (௨௬)

மறைந்து போயினு ரெனச்சிறி தயர்ச்சியு மனத்தில்
நிறைந்த தோர்பெருங் கவற்சியை நீக்கினு ரென்னச்
சிறந்த தோர்பெரு மகிழ்ச்சியு முடையளாய்ச் சித்தர்
அறைந்த வாறுநீப் பெய்தன ளுலோகங்க ளனைத்தும். (உஎ)

அழல டைந்தபின் னிருண்மல வலிதிரிந் தரன்றாள்
நிழல டைந்தவர் காட்சிபோ னீப்பருங் களங்கங்
கழல வாடக மானதா லதுகொண்டு கனிந்த
மழலை யீர்ஞ்சொலாள் கண்டனள் வடிவிலான் வடிவம். (உஅ)

வேறு.

மழவிடை யுடையான் மேனி வனப்பினை நோக்கி யச்சோ
அழகிய பிரானே யென்று வள்ளிமுத் தங்கொண் டன்பிற்
பழகிய பரனை யானுப் பரிவினுற் பதிட்டை செய்து
விழவுதேர் நடாத்திச் சின்னுள் கழிந்தபின் வீடு பெற்றுள். (உகூ)

நையுநுண் ணிடையி ளுளங் நாயகன் கபோலத் திட்ட
கையுகிக் குறியுஞ் சொன்ன காரணக் குறியுங் கொண்டு
வெயயவெங் கதிர்கால் செம்பொன் மேனிவே ருகி நாலாம்
பொய்யுகத் தவாக்குத் தக்க பொருநதுரு வாகி மன்னும். (௩0)

இரசவாதஞ்செய்தபடலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - க,அஅடு.

முப்பத்தேழாவது

சோழனைமடுவில்வீட்டியபடலம்.

மின்னனை யார்பூங் கொன்றை வேணிய ரிரத வாதம்
பொன்னனை யாண்முன் செய்து போந்தது புகன்றே மார்த்தார்
மன்னனை மடுவில் வீட்டி மலரடிக் கன்ப னனை
தென்னனை யமரிற் காத்த திருவிளை யாடல் சொல்வாம். (க)

பொன்னெடுந் தேரி ராச புரந்தரன் புரந்த ராதி
பன்னெடுந் தேவ ரேத்தப் பரனுல கடைந்தா னிப்பால்
அந்நெடுந் தகையோன் மைந்த னடலிரா சேச னென்போன்
இந்நெடுந் தகையோன் மைந்த னிராசகம் பீர னென்போன். (உ)

மற்றிவன் குமரன் பாண்டி வங்கிய தீப னன்னுன்
பொற்றிணி தடந்தோண் மைந்தன் புரந்தர சித்தா மன்னுன்
வெற்றிகொள் குமரன் பாண்டி வங்கிய பதாகன் வீரம்
பற்றிய சுந்த ரேச பாதசே கரன வன்சேய். (௩)

பலர்புகழ் சுந்த ரேச பாதசே கரனுந் தென்னன்
அலைபுன லுடுத்த கூட லடிகளுக் கன்ப னுகிக்
கொலைபுணர் வேலால் வெங்கோற் குறும்பெனுங் களைக டீர்த்து
மலர்தலை யுலக மென்னும் வான்பயிர் வளாக்கு நாளில. (௪)

பத்துமான் றடந்தேர் நூறு பணைக்கைமா நூற்றுப் பத்துத்
தத்துமா னயுத மள்ளர் தானையிவ் வளவே யீட்டி
இத்துணைக் கேற்ப நல்கி யெஞ்சிய பொருள்க ளெல்லாஞ்
சித்துரு வான கூடற் சிவனுக்கே செலுத்து மன்னோ. (ரு)

கண்டிகை மகுட மாதிக் கலனிரை குயின்றுந் திங்கள்
மண்டல மிடறுஞ் சென்னிக் கோபுர மாட மாதி
எண்டிசை யிருள்கால் சீப்ப வெரிமணி யிழைத்து வேய்ந்துந்
திண்டிற லுடையா னின்ன திருப்பணி பிறவுஞ் செய்தான். (சு)

கல்லுமா றகன்ற மார்பன் கருவியின் சிறுமை நோக்கி
மல்லுமா றாத திண்டோள் வளவர்கோ னொருவன் காவிற்
செல்லுமா யிரம்ப ரிக்கோர் சேவக னென்போன் றானே
வெல்லுமா றெண்ணி வஞ்சி வேய்ந்துகொண் டெழுந்து போந்தான். (எ)

பல்வகைக் கருவி யீட்டப் படையொடும் பரவை சீறிச்
செல்வது போலக் கன்னித் தீம்புன னாடு நோக்கி
மல்வரை யாத தோளான் வரவறிந் தெழுந்து மேருக்
கல்வரி சிலையான் முன்போய்க் கைதவன் றாழ்ந்து கூறும். (அ)

பொன்னது வனைய வேணிப் புனிதவிப் பூமி நேமி
உன்னது வலத்தி னாலே யுருட்டுமென் வலத்தை நோக்கான்
தன்னது வலத்தி னாலென் றானையின் சிறுமை நோக்கி
என்னது தேயங் கொள்வா னெண்ணினான் போலு மன்னோ. (கூ)

காவிரி நாடன் சேனைக் கடலிடை யெரிபோன் மூண்டு
மேவின னென்று கூறி மீனவன் வேண்ட வானிற்
பூவிரி வாகை நீயே புனையநாம் பொருது மென்னா
நாவிரி யாத மாற்ற நாயகன் கூறக் கேட்டான். (க0)

எல்லியங் கமலச் செவ்வி யெனமுக மலர்ந்து நாதன்
அல்லியங் கமலச் செந்தா ளகந்தழீஇப் புறம்பு போந்து
பல்லியந் துவைப்பத் தானைப் பரவையுட் பரிமா வூர்ந்து
கொல்லியம் பொருப்பன் சேனைக் கடலெதிர் குறுகி னானே. (கக)

பண்ணுத லிசைவண் டார்க்கும் பசுந்தொடைச் செழியன் றானை
எண்ணுத லிலவாஞ் சென்னி யிரும்படைக் கடனே ராறாய்
நண்ணுத லெனப்போய்ப் பொன்னி நாடவன் றமர்கட் கெல்லாங்
கண்ணுத லருளா லங்கோர் கடலெனத் தோன்றிற் றம்ம. (கஉ)

கடலென வருமா வூர்ந்து கைதவன் சேனை முன்போய்
அடலணி மேருக் கோட்டி யாலவாய் நெடுநாண் பூட்டி
மடலவிழ் துழாய்க்கோ னாட்டி வாயெரி புரத்தி லூட்டி
மிடலணி கூடற் கோமான் வேடுரு வாகி நின்றான். (கந)

கங்குல்வாய்த் திங்கள் போலக் காதணி தந்தத் தோடுங்
கங்குல்வாய் முளைத்த மீன்போற் கதிர்முத்த வடமுங் குஞ்சிக்
கங்குல்வாய்ச் சிலைபோல் வெட்சிக் கண்ணிசூழ் கலாபச் சூட்டு
கங்குல்வாய் கிழிக்குந் தந்தக் கடகமு மின்னுக் கால. (கச)

அண்டத்தா ரமரர் நாம மன்றுதொட் டடையத் தோற்று
கண்டத்தா ரிருளே யெங்குங் கலந்தெனக் கறுத்த மேனி
கொண்டத்தா ராரி னுற்கோர் கூற்றெனக் கொல்வே லேந்திச்
சண்டத்தீ யென்ன நின்றான் காவிரித் தலைவன் காணு. (கரு)

சிறியா யிரம்ப ரிக்கோர் சேவகன் வந்தே னென்னக்
கூறினு னெதிர்த்தான் வெள்ளிக் குன்றவன் பத்து நூறு
மாறிலாப் பரிக்கு மட்டோர் வயவனீ யன்றோ வெண்ணில்
ஈறிலாப் பரிக்கு மொற்றைச் சேவகன் யானே யென்றான். (கசு)

என்றசொல் விடியே றென்ன விருசெவி துளைப்பக் கேட்டு
நின்றவ னெதிரே மின்னு நீட்டிச்சென் மேகம் போலச்
சென்றுவேல் வலந்தி ரித்துச் செயிர்த்தன னதிர்த்துச் சீற
வன்றிற லூற்றுப் பத்து வயப்பரிக் கொருவ னஞ்சா. (கஎ)

யாமினி யிந்த வேலா விறப்பதற் கைய மில்லை
யாமென வகன்றான் மாவோ டாயிரம் பரிக்கோர் மள்ளன்
காமனை வெகுண்ட வேடன் மறைந்தனன் கங்குற் சோதி
மாமக னதுகண் டோடும் வளவனைத் துரந்து சென்றான். (கஅ)

துரந்திடு மளவி லோடுஞ் சோழனுந் திரும்பி நோக்கிக்
கருந்தடங் கண்ணி பாகங் கரந்தவே டுவனைக் காணான்
வருந்துய ரச்சந் தீர்ந்தான் மதுரையி னளவும் பற்றிப்
புரந்தரற் புறங்கண் டானைப் புறங்கண்டு முடுக்கிப் போவான். (ககூ)

காலொன்று முடுக்கப் பட்ட கனலொன்று நடந்தா லொத்து
வேலொன்று தடக்கை நேரி வேந்தனுன் முடுக்குண் டோடுஞ்
சேலொன்று கொடியி னுன்றன் செழுநகர் விரைந்து செல்வான்
மாலொன்று களிற்றி னுங்கோர் மதுமலர்க் கிடங்கில் வீழ்ந்தான். (உ0)

மீனவன் மதுரை மூதூர் மேற்றிசைக் கிடங்கில் வீழ
மானவெம் புரவி யோடும் வளவனும் வீழ்ந்தான் கூடற்
கோனவ னருளால் வானோர் குரைகடல் கடையத் தோன்றும்
ஆனையி னெழுந்தான் றென்னன் கோழிவேந் தாழ்ந்து போனான். (உக)

வேறு.

பிலத்தள வாழ்ந்த கடிமலர்க் கிடங்கிற் பெருந்தகை யவிந்தவன் றுகில்பூண்
கலத்தரும் பேழை படைபரி மான்றேர் கரியெலாங் கவர்ந்துதன் பொருநைத்
தலத்தவன் றங்க ளுயக ரணியத் தக்கது சணிகல னல்கி
நலத்தகை யவர்பே ரருட்கடற் கன்பு நதியெனப் பெருகிவீற் றிருந்தான். (உஉ)

சோழனைமடுவில்வீட்டியபடல முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - க,கூ0எ.

முப்பத்தெட்டாவது

உலவாக்கோட்டையருளியபடலம்

மின்பணிக்கதிர் வேணிவானவன் மீனவன்றனை மானவேல்
முன்பணிக்க வலந்திரித்து முடுக்கிநேரி யடுக்கலான்
பின்பணிக்கம லத்தடத்திற விட்டவாறிது பெருமைசால்
அன்பனுக்குல வாதகோட்டை யளித்தவாறு கிளத்துவாம். (௧)

வேறு.

பொடியார்க்கு மேனிப் புனிதர்க்குப் புனித வேற்றுக்
கொடியார்க்கு வேதக் குடுமிக்கிணை யான கூடற்
படியார்க்குஞ் சீர்த்திப் பதியேருழ வோரு ணல்லான்
அடியார்க்கு நல்லா னறத்திற்கும் புகழ்க்கு நல்லான். (௨)

அனையா னறத்திற் கருள்போன்றவ ளான்ற கற்பின்
மனையாண் மரபின் வழுவாத தருமசீலை
எனையாரு நன்கு மதிக்க விருக்கு நீராள்
தனையாள் பதிக்குக் கதிக்குத்தனிச் சார்பு போல்வாள். (௩)

பல்லே ருழவின் றொழில்பூண்டு பயன்கள் கொள்வான்
வில்லே ருழவர் கடன்கொண்டு மிகுந்த வெல்லாம்
இல்லே ருழத்தி மடைச்செல்வ மியற்றி யேந்த
அல்லேறு கண்ட னடியாரை யருத்து நீரான். (௪)

தொகைமாண்ட தொண்டர் சுவையாறு தழீஇய நான்கு
வகைமாண்ட மாறு படுமுண்டி மறுத்த ருந்த
நகைமாண்ட வன்பின் றலையாயவ னல்க நல்கப்
பகைமாண்ட செல்வ மணற்கேணியிற் பல்கு நாளின். (௫)

இந்நீர வாய வளங்குன்றினு மின்மை கூறாத்
தன்னீர்மை குன்றா னெனுந்தன்மை பிறாக்குத் தேற்ற
நன்னீர் வயலின் விளைவஃகி நலிவு செய்ய
மின்னீர வேணி மதுரேசர் விலக்கி னாரே. (௬)

குன்றா விருத்திக் கடன்கொண்டுகொண் டன்பர் பூசை
நன்றா நடாத்தத் தொடுத்தான்கட னாளுங் கிட்டா
தொன்றாலுங் கொண்ட விரதத்துக் குறுதி யின்றி
நின்றா னுடம்பை யொறுக்கின்ற நியமம் பூண்டான். (௭)

கொடுப்பா ரவரே விளைவுங்கடன் கோளு மாற்றித்
தடுப்பா ரெனின்மற் றதையாவர் தடுக்க வல்லார்
அடுப்பார் விழுமங் களைவாரடி யார்க்கு நல்லூண்
மடுப்பா னியமந் தடைபட்டு வருந்து கின்றான். (௮)

விண்ணாறு சூடும் விடையான்றமர்க் கூட்டி யன்றி
உண்ணாத வன்றன் னுயிர்க்குத்துணை யாய கற்பிற்
பண்ணார்மொழி தன்னொடும் பட்டினி விட்டு நெஞ்சம்
புண்ணாக வாகம் பசித்தீயிற் புழுங்கப் பட்டான். (௯)

இறக்கும் முடம்பாற் பெறும்பேறினி யாவ தென்னா
அறக்குன் றனையான் மனையோடு மடைந்திச் செய்தி
நிறக்கின்ற செம்பொற் சிலையார்க்கு நிகழ்த்தி யாவி
துறக்கின் றதுவே துணிவென்று துணிந்து போனான். (௧0)

ஐயன் றிருமுன்ன ரடைந்தடி தாழ்ந்து வானோர்
உய்யும் படிநஞ் சமுதுண்ட வொருவ வுன்றன்
மெய்யன்பர் பூசைக் கிடையூறு விளைய வின்றென்
செய்யும் புலமும் விளைவின்றிச் சிதைந்த வென்னா. (கக)

விடனல்கு சூலப் படையாய்கடன் வேறு காணேன்
கடனல்க வல்லார் தமைக்காட்டுதி காட்டி லாயேல்
மடனல்கு மிந்த வுடம்பின்சுமை மாற்று வேனென்
றுடனல்கு கற்புக் குரியாளொடும் வேண்டு மெல்லை. (கஉ)

பஞ்சாதி வேதப் பொருள்சொன்ன பரமன் வாக்கொன்
றஞ்சாதி வேளாண் டலைவாவு னகத்தி லின்றோர்
செஞ்சாதி யாய செழுவாலரிக் கோட்டை யுய்த்தேம்
எஞ்சா திருக்கு மெடுக்குந்தொறு மென்று மாதோ. (கங)

நீநாளும் பூசித் ததில்வேண்டிய கொண்டு நித்தம்
மானாத வன்பர்க் கமுதூட்டி யெவர்க்கு மன்ன
தானாதி நானா தருமங்களுஞ் செய்தி வீடு
மேனா ளளிக்கின் றனமென்று விசும்பிற் கூற. (கச)

கேட்டின்ப மெய்திக் கிளர்விம்மித னாகி வேதப்
பாட்டின் பயனைப் பணிந்தில்ல மடைந்து பண்டை
ஈட்டுந் தவப்பே றெனக்கண்டனன் றொண்டர்க் கெந்தை
கூட்டுங் கதிபோ லுலவாமற் கொடுத்த கோட்டை. (கரு)

வானாறு சூடி தருகோட்டையை வைக றோறும்
பூநாறு சாந்தம் புகையொண்சுடர் கொண்ட ருச்சித்
தானாத செவ்வி யடிசிற்கு மதற்கு வேண்டும்
நானா கருவி விலைக்கும்மது நல்க வாங்கா. (கசு)

மின்னார் சடையான் றமராய்ந்தவர் வேதச் செல்வர்
தென்னாடர் தெய்வம் விருந்தொர்க்கல் செறிந்து நட்டோர்
முன்னா மெவர்க்கும் முகில்போல் வரையாம னல்கி
எந்நாளு நோயின் றளகாதிப னென்ன வாழ்ந்தான். (கஎ)

வேறு.

அன்பன் னடியார்க் கினியா னனிநா ளளந்தல்கித்
தன்பன் னியொடு மயலார் சுற்றந் தமரோடும்
பின்பந் நிலையே யிமவான் மகளைப் பிரியாத
இன்பன் னுருவாய்ச் சிவமா நகர்சென் றிறைகொண்டான். (கஅ)

உலவாக்கோட்டையருளியபடல முற்றிற்று.

ஆ. திருவிருத்தம் - க,கஉரு.

முப்பத்தொன்பதாவது

மாமனாகவந்துவழக்குரைத்தபடலம்

தாமநா றிதழி யார்தந் தமர்க்கன்பன் வறுமைப் பட்டோன்
ஆமநா ளாலவாக் கோட்டை யருளிய முறையீ தையன்
தேமூனுண் முல்லைத் தீந்தார்ச் சிறுதகை வணிகற் காக
மாமனாம் படிவங் கொண்டு வழக்குரை வண்ணஞ் சொல்வாம். (௧)

கன்னிநான் மாடக் கூடற் கடிநகர் வணிக மாக்க
டன்னின்மா நிதிக்கோ னன்னான் றனபதி யென்னும் பேரான்
மன்னினா னனையான் கற்பின் மடவரல் சுசீலை யென்பாள்
பொன்னினாண் முளரிச் சேக்கைப் புண்ணியத் திருவி னன்னாள். (௨)

எனவிவர் தமக்கு மைந்தற் பேறின்றி யிரங்கு நாளிற்
றனபதி மருகன் றன்னைத் தகவுசான் மகவாக் கொண்டு
மனமகிழ் சிறப்பா னல்க மனைவியுந் தொழுது வாங்கிப்
புனைவன புனைந்து போற்றிப் பொலிவுற வளர்த்துக் கொண்டாள். (௩)

தனபதி மகப்பே றற்றா னாயினுந் தணவாக் காதன்
மனைவிமேல் வைத்த வாசை மயக்கினால் வருந்தி யீன்ற
தனையனை மகவாத் தந்த தங்கைமேற் நீராப் பூசல்
வினைவிளைத் தொழுக வோர்நா ளிளையளும் வெகுண்டு சொல்வாள். (௪)

பெருமித முனக்கேன் பிள்ளைப் பேறற்ற பாவி நீயென்
அருமைநன் மகனா லன்றோ விருமையு மடைவா யென்னப்
பெரிதுநா ணடைந்து மேலைக் காயினும் பிள்ளைப் பேறு
தருதவம் புரிவே னென்னாத் தனபதி தவமேற் செல்வான். (௫)

தன்பெருஞ் செல்வ மெல்லா மருமகன் றனக்கே யாக்கி
அன்புகொண் மனைவி யோடு மருந்தவ நெறியிற் சென்றான்
பின்பவன் வரவு தாழ்ப்ப மருமகன் பெற்ற வெல்லாம்
வன்பினால் வழக்குப் பேசி வௌவினார் தாய மாக்கள். (௬)

விளைநில னடிமை பைம்பூண் வெறுக்கைநன் பசுக்க ளேனை
வளனுமாற் றவர்கைக் கொள்ள வன்சிறை யிழந்த புட்போற்
றளர்வுறு மகனுந் தாயுஞ் சார்பிலாத் தம்ம னோர்க்கோர்
களைகணா யிருக்குங் கூடற் கடவுளே சரண மென்னா. (௭)

வந்துவா னகடு போழ்ந்த மணிமுடி விமானக் கோயிற்
சுந்தர நாதன் பாதத் துணைதொழு திறைஞ்சி யார்க்குந்
தந்தையுந் தாயு மாகுந் தம்பிரா னீரே யெங்கட்
கெந்தையும் யாயு மென்னா விரங்கிநின் றினைய சொல்வாள். (௮)

என்மகன் றன்னை மைந்த னின்மையா லெவருங் காணத்
தன்மக னாகக் கொண்டு தகுதியா லன்றே காணி
பொன்மனை பிறவு நல்கிப் போயினா னெம்மு னிப்பால்
வன்மையாற் றாயத் தார்க ளவையெலாம் வௌவிக் கொண்டார். (௯)

ஒருத்திநா னொருத்திக் கிந்த வொருமக னிவனுந் தேறாக்
கருத்திலாச் சிறியன் வேறு களைகணுங் காணே னைய
அருத்திசா லறவோர் தேறு மருட்பெருங் கடலே யென்றா
இருத்திநீ யறியாய் கொல்லோ வென்றுபார் படிய வீழ்ந்தாள். (௧௦)

---

* சார்பிலார் என்றும் பாடம்.

மாறுகொள் வழக்குத் தீர்க்க வல்லவ ரருளி னாலே
சிறுகொள் வடிவேற் கண்ணாள் சிறுதுயி லடைந்தாண் மெய்யில்
ஊறுகொள் கரண மைந்து முற்றறி கனவிற் கங்கை
யாறுகொள் சடையார் வேதச் செல்வரா யடுத்துச் சொல்வார். (கக)

புலர்ந்தபின் றாயத் தோரைப் புரவல னாணை யாற்றால்
வலந்தரு மன்றத் தேற்றி மறித்தனை யிருத்தி யாம்போந்
தலந்தரு மறிவான் மூத்தோ ரனைவரு மிசைய வந்தச்
சலந்தரு வழக்குத் தீர்த்துத் தருகுவம் போதி யென்றார். (கஉ)

வேரியங் குவளை யுண்கண் விழித்தனள் வியந்து கெட்டேன்
ஆருமில் லார்க்குத் தெய்வந் துணையென்ப தறிந்தே னென்னாக்
காரிருங் கயலுண் கண்ணாள் கணவனைத் தொழுது வாழ்த்திச்
சீரிளங் குமர னோடுந் தெரிவைதன் மனையிற் சென்றாள். (கங)

சென்றவள் கங்கு லெல்லை தெரிந்தபி னெழுந்து வெள்ளி
மன்றவன் கோயில் வாயில் வந்துவந் தனைசெய் தம்பொற்
குன்றவ னுரைத்த வாற்றாற் கொடுமைசால் வழக்குப் பூட்டி
வென்றவ ரிருக்கை யெய்தி விளம்புவாள் பலருங் கேட்ப. (கச)

அட்டில்வாய் நெருப்பி டேலோ ரடியிடே லறத்தா றன்றிப்
பட்டிமை வழக்கால் வென்று போகொட்டேன் பலருங் கேட்க
இட்டன னரச னாணை யறத்தவி சேறி யான்றோர்
ஒட்டிய படிகேட் டெங்க ளுரிப்பொரு டந்து போமின். (கரு)

என்றனண் மறித்த லோடு மிழுக்குரை யாடி வைது
வன்றிறல் வலியார் தள்ளி யடித்தனர் மைந்த னோடுஞ்
சென்றனண் முறையோ வென்னாத் திருந்தறத் தவிசி னோர்முன்
நின்றுரை யாடி னாள்கேட் டறிந்தனர் நீதி நூலோர். (கசு)

அறத்தவி சிருப்போ ரேவ லாடவ ரோடும் போந்து
மறித்தலைக் களத்திற் கூட்டி வந்தனள் வந்தவெல்லை
அறக்கொடி பாகர் வெள்ளி யம்பல வாணர் தாமத்
திறத்தன பதியே யென்னத் திருவுருக் கொண்டு செல்வார். (கஎ)

வேறு.

பெருவிலைக் குண்டலம் பிடரிற் பத்திபாய்ந்
தெரிகதிர் கவிழ்ப்பவா ளெறிக்கு மங்கதம்
அருவரைத் தோள்கிடந் திமைப்ப வாகமேற்
குருமணிக் கண்டிகை குலாய்ப்பின் கோட்டவே. (கஅ)

முரலளி புறவிதழ் மொய்ப்பச் செய்யதா
மரைசிறி தலர்ந்தென மணிசெய் மோதிரக்
கரதலம் வீசியோர் கடுங்க ணேறெனப்
பெருமித நடைகொடு நடக்கும் பெற்றியார். (க௯)

வாடிய முளரிபோன் மாறிட் டாரிடத்
தூடியு டலர்ந்தபோ தொப்ப மைந்தன்மேல்
நாடிய தண்ணளி நயந்து முட்கிடை
டிய முகத்தினர் குறுகு வாரவை. (உ௦)

வே று.

அரசனிங் கில்லை கொல்லோ வான்றவ ரில்லை கொல்லோ
குரைகடல் வேந்தன் செங்கோல் கொடியதோ கோதினூல்கள்
உரைசெயுந தெய்வந் தானு மில்லைகொ லுறுதியான
தருமமெங் கொளித்த தேகொ லென்றறத் தவிசிற் சார்வார் (உக)

தனபதி வரவு நோக்கி வஞ்சனைத் தாயத் தார்கள்
இனைவுறு மனத்த ராகி விம்மித மெய்தி வெல்லும்
மனவலி யிழந்து பண்டு வழக்கலா வழக்கால் வென்ற
வினைநினைந் துள்ள மச்ச நாணினால் விழுங்கப் பட்டார். (உஉ)

மாதுல ராகி வந்தோர் மருகனைத் தம்பின் வந்த
தாதுல ராத கோதை தன்னொடுந் தழீஇத்தங் கண்ட
மீதுல ராத சாம வேதமார்ப் பவர்போல் வாய்விட்
டாதுல ராகி ரந்தோ வையவென் றழுது நைந்தார். (உ௩)

குடங்கையி னெடுங்க ணாளுங் குமரனும் வணிகர் தாளிற்
றடங்கணீ ராட்ட வீழ்ந்தார் தடக்கையா லெடுத்துப் புல்லி
மடங்கலே றனையார் தாமு மற்றவர் தமைத்தங் கண்ணீர்
நெடுங்கடல் வெள்ளத் தாழ்த்திக் குமரனை நோர்ந்து நைவார். (உ௪)

ஐம்படை* யார்பிற் காணேன் சிறுசிலம் படியிற் காணேன்
மொய்ம்பிடை மதாணி காணேன் முகத்தசை சுட்டி காணேன்
மின்படு குழைகள் காணேன் வெற்றுடல் கண்டே னப்பா
என்பெறு மென்று பிள்ளைப் பணிகளுங் கவர்ந்தா ரென்னு. (உ௫)

அனைவரு மிரங்க வாய்விட் டழுதவ ரிளையா டன்னைத்
தனையனைக் கண்ணீர் மாற்றித் தடக்கையான் முதுகு தைவந்
தினையன்மி னென்முன் வேறொன் றெண்ணன்மி னெண்ணு வஞ்ச
வினைஞர்வல் வழக்குச் சோர்ந்து விடுவது காண்மி னென்னு. (உ௬)

நட்பிடை வஞ்சஞ் செய்தும் நம்பினார்க் கூன்மா றுட்டத்
துட்படக் கவர்ந்து மேற்றோர்க் கிம்மியு முதவா ராயும்
வட்டியின் மிதப்பக் கூறி வாங்கியுஞ் சிலர்போ லீட்டப்
பட்டதோ வறத்தா றீட்டு நம்பொருள் படுமோ வென்னு. (உஎ)

மங்கல மாட மோங்கு மதுரைநா யகனை நோக்கிச்
செங்கரஞ் சிரமேற் கூப்பி மாணிக்கந் தேற்றி விற்கும்
எங்குல வணிக ரேறே யெம்மனோர் வழக்கை யிந்தப்
புங்கவ ரிடுக்குத் தீர்த்துத் தருகெனப் புலம்பி யார்த்தார். (உஅ)

ஆவலித் தழுத கள்வர் வஞ்சரை வெகுண்டு நோக்கிக்
காவலன் செங்கோ னுண்ணூல் கட்டிய தருமத் தட்டில்
நாவெனுந் துலைநா விட்டெம் வழக்கையு நமராய் வந்த
மேலவர் வழக்குந் தூக்கித் தெரிகென விதந்து சொன்னார். (உகூ)

நரைமுது புலியன் னான்சொற் கேட்டலு நடுங்கிச் சான்றோர்
இருவர்சொல் வழக்கு மேற்கொண் டறுவகித் திரண்டு நோக்கித்
தெரிவழி யிழுக்கு ஞாதி வழக்கெனச் செப்பக் கேட்டு
வெருவினர் தாயத் தார்கள் வலியரின் வேறு சொல்வார். (௩0)

* ஐம்படை - திருமாவின் பஞ்சாயுதவடிவமைத்துச்செய்யும் ஓராபரணம்.

தவலருஞ் சிறப்பி ஞன்ற தனபதி வணிக ரல்லர்
இவரென வவையங் கேட்ப விருகையும் புடைத்து நக்குக்
கவளமா னுரித்துப் போர்த்த கண்ணுதல் வணிகர் கோமான்
அவரவர் குடிப்பேர் பட்டங் காணிமற் றனைத்துங் கூறும் (கூக)

தந்தைதாய் மாமன் மாமி தாயத்தா ரிவரை யீன்ருர்
மைந்தர்க ளுடன்பி றந்தார் மனைவியர் கிளைஞர் மற்றும்
அந்தமில் குணங்கள் செய்கை யாதிய வடையா ளங்கள்
முந்தையின் வழுவா வண்ண முறையினுன் மொழிந்தான் முன்னோன். ()

அனையது கேட்ட வாள்ரு ரனைவரு நோக்கி யந்தத்
தனபதி வணிகர் தாமே யிவரெனச் சாற்ற லோடும்
மனவலித் தாயத் தார்தம் வழக்கிழுக் கடைந்த தீது
நனைவழி வேம்பன் றேரிற் றண்டிக்கு நம்மை யென்ரு. (கூக)

இல்லினுக் கேகி மீள்வன் யானென்றுங் குளத்திற் கேகி
ஒல்லையில் வருவே னென்று மொவ்வொரு வார்த்தை யிட்டு
வல்லெழு வனைய தோளா ரனைவரும் வன்கா றள்ளச்
செல்லெழு முகில்போற் கூட்டஞ் சிதைந்தன ரொளித்துப் போனுர். ()

அனையவர் போக நின்ற வறனவின் மன்றத் துள்ளோர்
தனபதி வணிகர் தந்த தனமெலாந் தத்த மைந்தற்
கெனமனை யெழுதி வாங்கி யீந்தன ரீந்த வெல்லை
மனமொழி கடந்த நாய்கர் மறைந்துதங் கோயில் புக்கார். (கூரு)

இம்மெனப் பலருங் காண மறைந்தவ ரிருந்தண் கூடற்
செம்மலென் றறிந்து நாய்கச் சிறுவனுக் குவகை தூங்க
விம்மித மடைந்து வேந்தன் வரிசையுள் வெறுப்ப நல்கிக்
கைம்மறி வணிகர் கோயில் புதுக்கினுன் கனகங் கொண்டு. (கூசு)

வேறு.

பூத நாயகன் பூரண சுந்தரப் புத்தேள்
பாத சேகரன் வரகுண பாண்டியன் புயத்தில்
ஓத நீருல கின்பொறை சுமக்கவைத் தும்பர்
நாதர் சேவடித் தாமரை நகைநிழ லடைந்தான். (கூஎ)

மாமனுகவந்துவழக்குரைத்த படலமுற்றிற்று.

ஆக திருவிருத்தம் - க,கூசுஉ.

நாற்பதாவது

வரகுணனுக்குச்

சிவலோகங்காட்டியபடலம்.

பண்கொண்ட வேதமுத விடையீறு நாடரிய பரன்மாம னுகியொரு வணிகன், எண்கொண்ட காணிபொருள் கவர்ஞாதி மாதுலரை யெதிரேறி வென்றபடி யிதுவாந், தீங்கொண்ட நேமிவர குணதேவ னெய்துபழி தன்னைத் துடைத்தனைய மனவன், கண்கொண்டு காணவுயர் சிவலோக மதுரைதனில் வருவித்த காதையினி மொழிவாம். (க)

இயமான னிந்திரவி யெரிவா னிலஞ்சலில மெறிகா லெனும்பகுதி யருநான், மயமான சுந்தரனை மனவாய்மெய் யன்பினிறை வழிபா டடைந்தவர குணனுப், சயவேலை வென்றவடி வினனீறில் வென்றிபெறு சதவேள்வி யிந்திரனை நிகர்வோன், இயன்மேனி கொண்டவொளி யினிலேழ் பசும்புரவி யினதேசு வென்றவர குணனே. (௨)

மறையாதி கலைபலவு மகமாதி பலவினையும் வழுவாது நிறுவுதலின் மலர்மேல், இறையாகி மலர்வனிதை பிறிவான திருமகளி ரிகபோகம் விளையமுறை செயலாற், கறையாழி வளைகளணி கரனாகி யிகல்செய்பொறி கரணாதி பகைகளையு நெறியால், அறைவாய்மை யுரையின்முழு துணர்வாலெவ் வுயிருநிறை யரனாகி யுலகுமுறை செயுநாள். (௩)

வேட்டஞ்செய் காதலொரு நாட்டங்க வேகிவன மேட்டெங்கு மாதடவி யெரியா, நாட்டஞ்செய் காயுழுவை நீட்டுங்கை யானைமுக நாட்டும்ப லேனமிவை முதலா, ஓட்டஞ்செய் தேரிரவி கோட்டின்க ணேறியிரு ளோட்டந்தி மாலைவருமளவாக், கோட்டஞ்செய் வார்சிலையின் மாட்டம்பி னூறியுயிர் கூட்டுண்டு மாநகரில் வருவான். (௪)

காலிற் கடும்புரவி மேலிற் கடிந்துவரு காலக் கடந்தனிலொர் மறையோன்
மாலுற் றயர்ந்துமுகம் வேர்வைக் குறுந்திவலை வாரக் கிடந்துவிழி துயில்வோன்
மேலக் கடும்புரவி கால்வைப்ப வந்தணனும் வீவுற் றவிந்தனன தறியான்
கோலிற் செலும்பரியின் மீனத்த னுந்தனது கோயிற் புகுந்தனன வளவே. (௫)

வேறு.

கனவட்டத் † தடியிடறப் பொறிவிட்டுப் புலனவியக் கரணத்துட் பொதியுயிர்விட் டவனுகந், தனையொக்கற் பனவரெடுத் தனர்கிட்டிக் குரிசில்கடைத் தலையிட்டத் திறமொழியத் தமிழ்மாறன், இனைவுற்றுப் பனவர்கையிற் கனகக்குப் பைகணிறைவித் தெமதிக்குற் றவனையெடுத் தெரிமாலை, புனைவித்தக் கடன்முடிவித் தனன்மற்றப் பழிபடரிற் புதையப்பற் றியதிடைவிட் டகலாதே. (௬)

வேறு.

பற்றிய பழிக்குத் தீர்வு பழமறைக் கிழவர் சொன்ன
பெற்றியி னைவே றுண்டி ‡ நதிக்கரைப் பெருநூற் கேள்வி
முற்றிய மறையோர்க் கீந்து மூவராந் தாரு வேந்தைச்
சுற்றியுந் தூர்வை கொய்து சுரபிகள் சுவைக்க வீந்தும். (௭)

அகமரு டணத்தா லோம மாற்றியு மானைந் தாவின்
நகைமணிக் கோடு தோய்த்த நளிர்புனல் குடித்துந் தான
வகைபல கொடுத்து நீங்கா வலியதா யிழுது பெய்த
புகையழ லெனமே விட்டுப் புலப்பட வளைந்த தன்றே. (௮)

வேறு.

எங்கும் பெருமூச் செறியுங்கை யெறியுங் குன்றின்
ஓங்குஞ் சிறுகு முடன்முூர்த்திடு முன்னும் பின்னும்
பாங்குந் தொடருஞ் சிரிக்கும் பகுவாயை மெல்லும்
நீங்குங் குறுகும் பழிதாவென நேர்ந்து பறறும். (௯)

* இனதேசு எனபது வடமொழிச்சந்தி; இனனுடைய தேசு என்பது பொருள். † கனவட்டம் - பாண்டியன் குதிரை.

‡ ஐவேறுண்டி - உண்ணப்படுவது, தின்னப்படுவது, நக்கப்படுவது, ப(
கப்படுவது, சுவைக்கப்படுவது என்னும் ஐவகை உணவு.

மாசுண்ட தெய்வ மணிபோற்பணி வாயிற் பட்ட
தேசுண்ட தீந்தண் மதிபோலொளி தேம்பி வண்டு
மூசுண்ட தான முகமாவுண்ட வெள்ளில் போலக்
காசுண்ட பூணு னறைபோய கருத்த ஞானன். (௧௦)

மறையோர்கள் யாரு மப்பழிமேவிடு வண்ண நோக்கி
இறையோ யிதுநான் முகன்சென்னி யிறுத்த கூடல்
அறவே தியனைத் தினமாயிரத் தெண்காற் சூழல்
உறவே யொழிக்கப் படுமின்ன முரைப்பக் கேட்டி. (௧௧)

ஆறு விரத நெறியாலிரண் டைந்து வைகல்
வாறு டனையம் முறையால்வலஞ் செய்து வந்தா
யாறு லதற்கு வழிகாட்டுமென் றையர் கூறப்
போனா னரசன் பனிதன்றிருக் கோயில் புக்கான். (௧௨)

விழியா யிரத் [illegible] பழிதீர்த்தனை வேதி யன்றன்
கழியாத மாபா தகந்தீர்த்தனை கௌவைக் கங்கைச்
சுழியா றலைக்குஞ் சடையாயெனைத் தொட்ட லைக்கும்
பழியா னதுந்தீர்த் தருளென்று பணிந்து வீழ்ந்தான். (௧௩)

எண்ணும் படியம் முறையால்வலனந் தேத்த வையன்
விண்ணின் றியம்பு மரசேபரி மேத வேள்வி
நண்ணும் பயனே ரடிவைப்பினி னன்ன ரெம்மைப்
பண்ணும் வலத்தான் மகிழ்ந்தேம்பழி யஞ்சன் மன்னே (௧௪)

பொன்னோடு முத்தங் கொழிக்குந்துறைப் பொன்னி நாடன்
நின்னோ டமராற்ற நினைந்தெழு நீயு நேர்வாய்
அன்னோ னுனக்குப் புறகிட்டகன் றோடுநீயும்
பின்னோடி யெட்டிப் பிடிப்பாரிற் றுரத்து மெல்லை. (௧௫)

எமையா மருச்சித் திருக்குந்தலத் தெய்து வாயால்
அமையாத வன்கட் பழியாற்றுது மென்னச் சேற்கண்
உமையாள் மணாள னருள்வாழ்த்தி யுரக னுச்சிச்
சுமையாறு தோளான் றொழுதான்ற னிருக்கை புக்கான். (௧௬)

ஆர்த்தார் முடியோன் சிலநாள்கழித் தாற்ற லேற்ற
போர்த்தாவு வேங்கைக் கொடித்தானை புடவி போர்ப்பப்
பேர்த்தார் கலிவந் தெனப்பேரிய மார்ப்பக் கன்னிப்
பார்த்தாம வேன்மீ னவனாட்டிற் படர்ந்த வெல்லை. (௧௭)

மிடைந்தேறு நேரிப் பொருப்பன்படை வேலை மேற்சென்
றடைந்தேறி மீனக் கொடியோனம ராட வாழி
கடைந்தேறு வெற்பிற் கலங்கிற்றெனக் கிள்ளி சேனை
உடைந்தேக வெந்நிட் டுடைந்தோடின னுள்ளம் வெள்கா. (௧௮)

சுறவக் கொடியன் னனுரந்துபின் பற்றிச் செல்வோன்
புறவக் கிடிமுல் லையுந்தாமரைப் போது மேந்தி
நறவக் கழிநெய் தலங்கானலின் ஞாங்கர் மொய்த்த
இறவப் புலவு கமழ்வீர்ந்துறைப் பொன்னி சேர்ந்தான். (௧௯)

பூசத் துறையிற் புகுந்தாடியப் பொன்னித் தென்சார்
வாசத் திடைமா மருதைப்பணி தற்கு வைகைத்
தேசத் தவன்கீழ்த் திசைவாயில் கடந்து செல்லப்
பாசத் துளையும் பழியும்புற நின்ற வன்றே. (உ0)

கருதிச் சுரும்பு புறஞ்சூழ்ந்து குழறத் தெய்வ
மருதிற் சிறந்த பெருந்தேனைக்கண் வாயங் காதூ
பருகிப் படிந்து தழல்வாய்வெண்ணெய்ப் பாவை யொப்ப
உருகிச் செயலற் றுரையற்றுணர் வாகி நின்றான். (உக)

வேறு.

நிராமய பரமா னந்த நிருத்தநான் மாடக் கூடற்
பராபர விமையா முக்கட் பகவ பார்ப்பதி மணாள
புராதன வகில நாத புண்ணிய மருத வாண
அராவணி சடையா வென்றென் றளவிலாத் துதிகள் செய்தான். (உஉ)

சொற்பதங் கடந்த சோதி துதித்தடி பணிந்த வேந்தை
மற்பெருந் தோளாய் கீழை வாயிலிற பிரமச் சாயை
நிற்பதங் நெறியாற் செல்லே னிழன்மதி யுரிஞ்சு மேலைப்
பொற்பெரு வாயி னீங்கிப் போதிநம் மதுரைக் கென்றான். (உங)

வரகுண னதுகேட் டையன மருதினை வலங்கொண் டிறைஞ்சிக்
கருமையால் வாயி றோறு மடிக்கடி வீழ்ந்து வீழ்ந்து
வரைதுளைத் தன்ன மேலை வாயிலாற் போவா னன்ன
திருமணிக் கோபு ரநதன் பெயரினாற் செய்து சென்றான். (உச)

திருப்பணி பலவுஞ் செய்து தென்றிசை வழிக்கொண் டேகிச்
சுருப்பணி நெடுநாண் பூட்டுஞ் சுவைத்தண்டச் சிலையாற் காய்ந்த
மருப்பணி சடையான் கோயில் வழிதொறுந் தொழுது போற்றிப்
பொருப்பணி மாடக் கூடற் பொன்னக ரடைந்தான் மன்னோ. (உரு)

தொடுபழி தொலைவித் தாண்ட சுந்தரத் தோன்றல் பாதக்
கடிமல ரடைந்து நாளுங் கைதொழு துலக மெல்லாம்
வடுவறு செங்கோ லோச்சும் வரகுண னறவோர் நாவால்
அடுசுவை யமுத மன்ன வரன்புகழ் செவிம டுப்பான். (உசு)

வேதமா கமம்பு ராண மிருதிகண் முதலா நாலும்
ஓதுவ துலகின் மிக்க துருத்திர வுலக மென்னும்
போதம தகங்கொண் டந்தப் பொற்பதி காண வேண்டுங்
காதல்செல் வழியே யீசன் கங்குலிற் கோயி லெய்தா. (உஎ)

வேறு.

மாழை மான்மட நோக்கிதன் மணாளனை வணங்கிப்
பீழை யேழ்பவங் கடந்துநின் னடிநிழல் பெற்றோர்
சூழ நீசிவ புரத்தில்வீற் றிருப்பது தொழுதற்
கேழை யேற்கொரு கருத்துவந் தெய்திய தெந்தாய். (உஅ)

என்ற காவல னன்பினுக் கெளியராய் வெள்ளி
மன்ற வாணரவ் வுலகையிவ் வுலகிடை வருவித்
தின்று காட்டுது மீதற்கெனத் திருவுளத் தெண்ணம்
ஒன்றி னாரஃ துணர்ந்ததா லுருத்திர வுலகம். (உகூ)

கோடி மாமதிக் கடவுளர் குழூஉச்சுடர் பரப்பி
நீடி யோரிடத் துதித்தென மின்மினி நிகர்த்து
வாடி வானிரு சுடரொளி மழுங்கவா னிழிந்து
தேடி னூர்க்கரி யானுறை சிவபுரந் தோன்ற. (௧௦)

ஆண்ட நாயக னந்தியை யழைத்தெமக் கன்பு
மாண்ட காதலான் வரகுண வழுதிநம் முலகங்
காண்டல் வேண்டினன் காட்டெனக் கருணையா னேவல்
பூண்ட வேத்திரப் படையினான் றொழுதனன் போந்தான் (௧௧)

வருதி யாலெனப் பணிந்தெழு வரகுணற் கொடுபோய்க்
கருதி யாயிரம் பெயருடைக் கடவுளன் முகத்தோன்
சுருதி யாதியீ றளப்பருஞ் சொயம்பிர காசப்
பரிதி யாள்சிவ புரமிது பாரெனப் பணித்தான். (௧௨)

கருப்பு ரங்கமழ்ந் துளர்பசுங் கால்களா லுதையுண்
டருப்பி னஞ்சிதைந் தாயிரப் பத்தியோ சனைபோய்
மருக்க மழ்ந்துநா றாயிரம் வாலிதழ்க் கமலம்
இருக்கு மோடைகள் புடைதொறுந் தழுவிய யாறும். (௧௩)

வரம்பின் மாதரார் மதுரவாய் திறந்துதேன் வாக்கும்
நரம்பி னேழிசை யாழிசை நகைமலர்த் தருவின்
சுரும்பி னேரிசை நாரத தும்புரு விசைக்கும்
இரும்பு நீர்மெழு காக்கிய வின்னிசை யெங்கும். (௧௪)

அமுத வாவியும் பொன்மல ரம்புயத் தடமுங்
குமுத வாயர மாதராங் குயிலினம் பயிலும்
நிமிர வாள்விடு மரகத நெடியபைங் காவுந்
திமிர மாசறக் கழுவிய தேவர்வாழ் பதமும். (௧௫)

அலம்பு பாற்கடல் போற்புறத் தமுதநீ ரகழும்
பொலஞ்செய் ஞாயில்சூழ் புரிசையும் பொன்செய்கோ புரமும்
நலங்கொள் பூவியல் வீதியு நவமணி குயின்ற
துலங்கு மாளிகைப் பந்தியுஞ் சூளிகை நிரையும். (௧௬)

ஐம்பு லங்களும் வைகலும் விருந்ததா வருந்த
வெம்பு நால்வகை யுண்டியும் வீணையுஞ் சாந்துஞ்
செம்பொ னாரமு மாடலின் செல்வமுந் தெய்வப்
பைம்பொன் மேகலை யோவியப் பாவையொப் பாரும். (௧௭)

படர்ந்த வார்சடை யுருத்திரர் பணைத்திரு மாந்த
வடங்கொள் பூண்முலை யுருத்திர மகளிரொ டமரும்
இடங்கொண் மாளிகைப் பந்தியு மிகல்வினை துன்பங்
கடந்த செல்வமுங் கவலையில் போகமுங் காட்டி. (௧௮)

முண்ட காசனன் பதமிது மூவுல களந்த
தண்டு ழாயவன் புரமிது தனிமுதல் வடிவங்
கொண்டு வீறுசா லுருத்திரர் கோப்பதி யின்ன
எண்டி சாமுகங் காவல ருறைவிட மிவைகாண். (௧௯)

புலரு முன்புன லாடிநீ றுடிநம் புனிதன்
இலகு மாலயம் விளக்கிநந் தனப்பணி யியற்றி
மலர்கொய் தாய்ந்தனர் தொடுத்தரன் புகழ்செவி மடுத்திவ்
வுலக வீணரொய்ப் போகமுற் றுறைகுந ரிவர்காண். (௩௦)

தூய ராகியைஞ் சுத்திசெய் தகம்புற மிரண்டி
னேய ராய்விதி நெறியினுன் மூகமணி ரெட்டாற்
காயம் வாய்மன மொருமையா லர்ச்சித்துக் கடவுள்
நாய னாரரு குறைபத நண்ணினு ரிவர்காண். (௩௧)

கிளர்ந்த காவினு லங்கியை நிமிர்த்துமேற் கிடைத்து
வளர்ந்த பிங்கலை யிடைநடு வழியுகு மதியின்
விளைந்த விண்ணமு துண்டுநம் விடையவன் வடிவங்
குளர்ந்த னிற்குறித் தவனுருக் கொண்டவ ரிவர்காண். (௩௨)

முக்க ணுயகன் பொருட்டென வேள்விகண் முடித்துத்
தொக்க வேதிய ரிவர்புனற் சாலையித் தொடக்கத்
தக்க பேரறம் புகழ்பயன் றமைநன்கு மதிக்கும்
பொக்க மாறிய நிராசையாற் புரிந்தவ ரிவர்காண். (௩௩)

மறையி னுற்றினுற் றந்திர மரபினுன் மெய்யின்
நிறையு நீற்றினர் நிராமய னிருத்தனை ந் தெழுத்தும்
அறையு நாவினர் பூத்தரா யரன்புகழ் கேட்கும்
முறையி னுவிவர் வினைவலி முருக்கினுர் கண்டாய். (௩௪)

மறைக ளின்சத வுருத்திர மந்திர நவின்றோர்
நிறைகொள் கண்டிகை நீறணி நீரரியா ரேனுங்
குறிகு ணங்குலன் குறித்திடா தன்பரைச் சிவனென்
றறியு மன்பினுற் பிறவிவே ரறுத்தவ ரிவர்காண். (௩௫)

ஆனஞ் சாடிய பரஞ்சுட ரிறைசிவ ஞான
தானஞ் செய்தவர் தருப்பணஞ் செய்தவர் சாம
கானஞ் செய்தவற் காலயங் கண்டுதா பித்தோர்
ஊனஞ் சேர்பிறப் பறுத்துவா ழுத்தம ரிவர்காண். (௩௬)

சிவனை யர்ச்சனை செய்பவர்க் கிசைவன செய்தோர்
அவனெ னக்குறித் தடியரைப் பூசைசெய் தாறு
சுவைய வின்னமு தருத்தினோர் தொண்டர்தம் பணியே
தவமெ னப்புரிந் துயர்ச்சியைச் சார்ந்தவ ரிவர்காண். (௩௭)

ஆதி சுந்தரக் கடவுளுக் காலயம் பிறவும்
நீதி யாலருச் சனைபிற பணிகளு நிரப்பிப்
பூதி சாதன வழிநிலம் புரந்திவ ணடைந்த
கோதி லாதநின் குடிவழிக் கொற்றவ ரிவர்காண். ௩௮)

என்று வேத்திரங் கொடுகுறித் தெம்மிறை நந்தி
கொன்றை வேணிய னடியர்தங் குழாத்தினைத் தேற்றி
நின்று வீழ்ந்துவீழ்ந் தஞ்சலி முகிழ்த்திட நெறியே
சென்று வானவர் நாயகன் றிருமுன்பு விடுத்தான். ௩௯)

மறைக ளாகமம் வடிவெடுத் திருபுடை வாழ்த்த
நறைகொள் யாழ்தழீஇத் தும்புரு நாரதர் பாட
அறைகொள் வண்டிமிர் கொம்பரி னரம்பைய ராடக்
குறைகொள் வானவர் பதங்கிடை யாதிறை கொள்ள. (௩0)

மதங்க விழ்க்குமால் வரைமுக மைந்தனுஞ் சூரன்
கதங்க விழ்த்தவேற் கந்தனுங் கருதலன் வேள்வி
விதங்க விழ்த்தவாள் வீரனும் வெயின்முடித் தார்தேன்
பதங்க விழ்ப்பவீழ்ந் தேயின பணிவழி நிற்ப. (௩௧)

தூங்கு தானையை யொதுக்கிவாய் துணைக்கரம் பொத்தி
ஓங்கு மாலயன் றங்குறை யொதுங்கிநின் றுரைப்ப
வாங்கு வான்சிலை யிந்திரன் முதற்றிசை வாணர்
தாங்க டாம்புரி காரியக் குறைநின்று சாற்ற. (௩௨)

எழுவி னொடுதண் டேந்திவாய் மென்றெயி றதுக்கி
குழுமு பாரிடத் தலைவருங் கோடிகூற் றொதுங்கி
விழும மூழ்கிமெய் பனித்திட விதிர்க்குமுக் குடுமிக்
கழுமு ளேந்திய கணத்தவர் கடைதொறுங் காப்ப. (௩௩)

சித்தர் வானவர் தானவர் சாரணர் திணிதோள்
வைத்த யாழினர் கின்னரர் மாதவ ரியக்கர்
பைத்த பாரிடர் காருடர் பாதல வாணர்
சுத்த யோகியர் முதற்கணத் தொகையெலாம் பரவ. (௩௪)

இனிவ ரும்பிறப் பறுத்தெம்மைக் காத்தியா லெனத்தங்
கனிவ ரும்பிய வன்பெழு கருணையா ரமுதைப்
பனிவ ருந்தடங் கண்களாற் பருகிமெய் பனிப்ப
முனிவர் சங்கர சிவசிவ வெனமுறை முழங்க. (௩௫)

வரந்த வாதன யாவர்க்கும் வரன்முறை வழங்கி
முருந்த வாணகை மலைக்கொடி முகிழ்நகை யரும்பத்
திருந்த வாயிரங் கதிர்விடு சிங்கமெல் லணைமேல்
இருந்த நாயக னிருக்கைகண் டிறைஞ்சின னிறைவன். (௩௬)

உரைக ளுந்தடு மாறமெய் யுரோமமுஞ் சிலிர்ப்பக்
கரையி றந்தவின் னருட்பெருங் கடலிலன் பென்னுந்
திரையி றந்தவா றீர்த்திட மிதந்துபோய்ச் செப்பின்
வரையி றந்தவா னந்தவா ரமுதைவாய் மடுத்தான். (௩௭)

தன்பு லன்களுங் கரணமுந் தன்னவே யாக்கி
அன்பு டம்புகொண் டவனெதி ரருட்சிவ லோகம்
பின்பு பண்டுபோன் மதுரையாப் பிராட்டியுந் தானும்
முன்பி ருந்தவா றிருந்தனன் சுந்தர மூர்த்தி. (௩௮)

வேந்தர் சேகரன் வரகுணன் விண்ணிழி கோயில்
ஏந்தல் சேவடி யிறைஞ்சிநின் றிறையருட் பெருமை
ஆய்ந்த வாவுதன் னகம்புக வின்பமோ டன்பு
தோய்ந்து தாரைநீர் துளும்பநாக் குழறிடத் துதிப்பான். (௩௯)

வேறு.

நாயினே னென்னை நடுக்கும் பழியகற்றித்
தாயினே ராகித் தலையளித்தாய் தாள்சரணஞ்
சேயினேன் காணச் சிவலோகங் காட்டிப்பின்
கோயினேர் நின்றவருட் குன்றேநின் றாள்சரணம். (௬௦)

மாழாந்து செய்யும் வினைவழிபோய் வன்னரகிற்
றாழா தடியனேற் கன்புதந்தாய் தாள்சரணம்
ஏழாகி நான்கு வகையா யெழுபிறப்பும்
பாழாக வென்னைப் பணிகொண்டாய் தாள்சரணம். (௬௧)

வெங்கட் பழியின் வினையேனை வேறாக்கித்
திங்கட் குலக்களங்கந் தீர்த்தாய்நின் றாள்சரணம்
அங்கட் சிவபுரமுண் டன்புடையார்க் கென்பதையின்
றெங்கட்குக் காட்டி யிசைவித்தாய் தாள்சரணம். (௬௨)

வேறு.

என்ன வேத்தியின் னருண்முகந் திறிலா வன்பாற்
பின்னர் வேறுபல் பூசையும் பிறக்குவித் திருந்தான்
மன்ன ரேறனை யாக்கொரு மடங்கலே றடல்வேற்
றென்ன ரேறெனத் தோன்றிய வரகுண தேவன். (௬௩)

என்ற தெனமலை முனிவனை யிருடிக ணோக்கி
அன்று வாசவன் பழிகரி சாபமந் தணனைக்
கொன்று தாயொடுங் கூடிய கொடுவினை முதலாத்
துன்று பாவமு மதுரையிற் றொலைத்தன னன்றோ. (௬௪)

பரம னெண்குணன் பசுபதி வரகுணற் பற்றும்
பிரம வன்பழி யிடைமரு திடைவிட்டுப் பெயர
வரம ளித்தவா றென்னைகொல் வள்ளலே யிதனைத்
திரமு றப்புக லெமக்கென முனிவர்கோன் செப்பும். (௬௫)

பூத நாயகன் சுந்தரன் புண்ணிய மூர்த்தி
யாத லாலன்ன தலத்துறை யடியவ ரஞ்சிப்
பாத கஞ்செயா தொழுகுறூஉம் படிநினைந் தினைய
தீது றாஉம்பழி தனையிடை மருதினிற் றீர்த்தான். (௬௬)

என்ற கத்திய முனியிறை யிறைகொடுத் தியம்ப
நன்றெ னச்சிரம் பணித்து மெய்ஞ் ஞானவா னந்தந்
துன்றி நற்றவர் சுந்தரச் சோதிசே வடிக்கீழ்
ஒன்று மற்புத வானந்த வுததியுட் களித்தார். (௬௭)

வேறு.

அன்னதனித் தொன்மதுரை யன்றுதொடுத் தின்றெல்லை
தன்னனைய தாயகில தலங்கள்சிகா மணியாகிப்
பொன்னகரின் வளஞ்சிறந்து பூவுலகிற் சிவலோகம்
என்னவிசை படப்பொலிந்த தேழிரண்டு புவனத்தும். (௬௮)

வரகுணனுக்குச்சிவலோகங்காட்டியபடல முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௨,0௩0.

* பணித்து என்றும்பாடம்.

நாற்பத்தோராவது

விறகுவிற்றபடலம்.

நெடியவன் பிரமன் றேட நீண்டவன் றென்னற் கேழின்
முடியதாஞ் சிவலோ கத்தைக் காட்டிய முறையீ தையன்
படிமிசை நடந்து பாடிப் பாணன்றன் விறகா ளாகி
அடிமையென் றடிமை கொண்ட வருட்டிற மெடுத்துச் சொல்வாம். (௧)

மன்றலந் தெரியன் மார்பன் வரகுணன் செங்கோ லோச்சிப்
பொன்றலங் காவ லானிற் பொலியுநா ளேமநாதன்
என்றொரு விறல்யாழ்ப் பாணன் வடபுலத் திருந்தும் போந்து
வென்றிகொள் விருதி னோடும் விஞ்சைசூழ் மதுரை சார்ந்தான். (௨)

பூழியர் பெருமான் கோயில் புகுந்துவேத் தவையத் தெய்திச்
சூழிமால் யானை யானைத் தொழுதுபல் புகழ்கொண் டாடி
ஏழிசை மழலை வீணை யிடந்தழீஇச் சுருதி கூட்டி
வாழியின் னிசைத்தேன் மன்ன னஞ்செவி வழியப் பெய்தான். (௩)

முகையுடைந் தவிழ்ந்த மாலை முடித்தலை துளக்கித் தூசு
பகலவிர் மணிப்பூ ணல்கிப் பல்லுணாக் கருவி நல்கி
அகன்மனை வேறு காட்டி யரசர்கோன் வரிசை செய்ய
இகலறு களிப்பி னோடு மிசைவல்லா னில்லிற் புக்கான். (௪)

மீனவன் வரிசை பெற்ற செருக்கினும் விருதி னாலும்
மானமேல் கொண்டு தன்னோ டின்னிசை பாடவல்ல
தானயாழ்ப் புலவர் வேறிங் கில்லெனத் தருக்குஞ் செய்தி
கோனறிந் துழையர்க் கூவிப் பத்திரற் கொணர்தி ரென்றான். (௫)

உழையரால் விடுக்கப் பட்ட பத்திர னுவரி வென்றான்
கழல்பணிந் தருகு நிற்பக் கௌரிய னோக்கிப் பாணி
பழகிசை வல்லா னோடும் பாடுதி கொல்லோ வென்ன
மழலையா ழிடந்தோ ளிட்ட பாணர்கோன் வணங்கிச் சொல்வான். (௬)

தென்னவர் பெரும யானுன் றிருவுள வலனுங் கூடல்
முன்னவ னருளு மூட்டு முயற்சியான் முயன்று பாடி
அன்னவன் விருது வாங்கி யவனைவீ றழிப்ப னென்றான்
மன்னவ னாளைப் பாடு போகென வரைந்து சொன்னான். (௭)

இற்கண்ணே யிசைவல் லான்போ யிருந்துழி யனையான் பாங்கர்
கற்கும்பாண் மக்கண் மல்ல லாவணங் கவலை மன்றம்
பொற்குன்ற மனைய மாட மறுகெங்கும் போகிப் போகிச்
சொற்குன்றா வகையாற் பாடித் திரிந்தனர் வீறு தோன்ற. (௮)

இவ்விசை கேட்டு நன்றென் றதிசயித் திசைவல் லான்பால்
வவ்விசை மைந்தர் பாடும் வண்ணமீ தென்னை கெட்டேன்
அவ்விசை வல்லான் பாடு முறையெற்றோ வவனை நாளைச்
செவ்விசை பாடி வெல்வ தெவனெனத் திவவுக் † கோலான். (௯)

*. பாணி - பண். † திவவு - நரம்புகளை வலிபெறக்கட்டும் வார்க்கட்டு.

மையணி மிடற்றி னானை மதுரைநா யகனை வந்தித்
தையனே யடியேற் கின்று னருட்டுணை செய்யல் வேண்டும்
மெய்யனே யென்று போற்றி வேண்டுகொண் டன்பு தோய்ந்த
பொய்யறுமனத்தா னில்லம் புக்கினி திருந்தா னிப்பால். (கo)

வேறு.

வருத்த னாகிவந் திரந்தவ னிசைப்பகை மாற்ற
விருத்த னாம்விற காளென விண்ணிழி விமான
தொருத்த னாரறி வாகிய வுண்மையா னந்தத்
திருத்த னார்தம திச்சையாற் றிருவுருக் கொள்வார். (கக)

அழுக்கு மூழ்கிய சிதரசைத் தவிர்சடை யமுதம்
ஒழுக்கு வான்மதி வாங்கியே செருகிய தொப்ப
மழுக்கு கூனல்வெள் வாய்க்குயம் வலம்படச் செருகி
இழுக்கு தேய்செருப் பருமறை கடந்ததா ளேற்றி. (கஉ)

பழைய தோர்பொல்லம் பொத்திய பத்தர்யாழ்க் கோறுள்
உழைய தாகவிட் டெருத்தலைத் தூசலா டியவொண்
குழைய காதினிற் களவிணர்க் குறியகாய் தூக்கித்
தழையும் வார்சிகை சரிந்திடச் சுமையடை தாங்கி. (கரு)

தறிந்த விந்தனந் தினந்தொறுந் தாங்கிநீள் பங்கி
பறிந்து தேய்ந்தழுந் தியதலை யுடையராய்ப் பரிந்து
மறிந்த கங்கையும் பலகுறை மங்கையுங் காணு
தெறிந்த விந்தனச் சுமைதிரு முடியின்மே லேற்றி. (கச)

என்பு தோன்றியூ னின்றியே யிளைத்தயாக் கையராய்
அன்பு தோன்றியே கண்டவ ரகங்களீந் திரங்க
வன்பு தோன்றிய மனமொழி கடந்ததாண் மலர்பார்
முன்பு தோன்றிய தவத்தினன் முடிமிசைச் சூட. (கரு)

திருமு கத்துவேர் வரும்பவாய் குவிந்தொலி செய்ய
வருவர் கற்சுமை தாங்கிமேற் சார்த்துவர் மடிநீர்
பருகு வாரெடுப் பார்தலை வெம்மைவேர் பறிய
இருகை யாலடிக் கடியெடுத் தேந்தியூர் புகுவார். (கசு)

நடந்து கொள்ளுநர்க் கருவிலை பகர்ந்துநான் மாடம்
மிடைந்த வீதியுங் கவலையு முடுக்கரு மிடைந்து
தொடர்ந்த வேதமும் பிரமனமால் சூழ்ச்சியும் பகலுங்
கடந்து போகியவ் விசைவலான் கடைத்தலைச் செல்வார். (கஎ)

வரவு நேர்ந்தழைப் பவரென வாம்பல்வாய் மலர
இரவு கான்றுவெண் மதிநகைத் தெழவுயிரத் துணைவன்
பிரிவு நோக்கினு ரெனக்கணீர் பில்குதா மரையின்
நிரைகள் கூம்பிடக் கதிரவன் குடகட னீந்த. (கஅ)

பறவை வாயடைத் தருகணை பார்ப்பொடும் பெடைக்
சிறக ராலணைத் திரும்பொழிற் குடம்பையுட் செறிய
நறவ வாயப்பெடை யுண்டதே னக்கிவண் டோடைப்
பொறைகொ டாமரைப் பள்ளியுட் புகுந்துகண் படுக்க. (கக)

புல்லெ னீணிலைக் குரங்கினம் பொதும்பர்புக் குறங்க
முல்லை யாய்மகா ருய்த்தரக் கன்றுள்ளி முந்திக்
கொல்லை யானிரை மனைதொறுங் குறுகிடச் சிறுபுன்
கல்வி மாணவச் சிறார்பயில் கணக்கொலி யடங்க. (உ0)

புனைந்த வாழ்கடற் றும்படா முடம்பெலாம் போர்த்து
வனைந்த பூண்முலை நிலமக டுயில்வது மானக்
கனைந்த காரிருண் மெல்லெனக் கவிதரப் பிரிவால்
இனைந்த காதலர் நெஞ்சில்வே ளெரிகணை நாட்ட. (உக)

திங்கள் வாணுதன் முயற்கறைத் திலகமுஞ் சிவந்த
மங்கு லாடையு மயங்கிரு ளோதியும் வான்மீன்
பொங்கு மாரமும் பொலிந்துதன் கொண்கனைப் பொருப்பின்
மங்கை தேடிவந் தாளென வந்தது மாலை. (உஉ)

எடுத்த வீந்தன மொருபுறத் திறக்கியிட் டேன்றி
அடுத்த வன்புறந் திண்ணைமீ தமர்ந்திளைப் பாறித்
தொடுத்த வின்னிசை சிறிதெழீஇப் பாடினர் சுருதி
மடுத்தி யாரவன் பாடுவா னென்றிசை வல்லான். (உங)

வேறு.

வண்டறை கொன்றை யான்முன் வந்துநீ யாரை யென்றான்
பண்டரு விபஞ்சி பாண பத்திர னடிமை யென்றான்
முண்டக மலரோன் மாயோன் புரந்தரன் முதன்மற் றேனை
அண்டருந் தன்குற் றேவ லடிமையாக் கொண்ட வம்மான். (உச)

கனியிசைக் கிழவன் றன்கீழ்க் கற்பவ ரனேகர் தம்முள்
நனியிசைக் கிழமை வேட்டு நானுமவ் வினைஞ னானேன்
தனியிசைக் கிழவ னோக்கித் தசையெலா மொடுங்க மூத்தாய்
இனியிசைக் கிழமைக் காகா யென்றெனைத் தள்ளி விட்டான். (உரு)

வெவ்விற கெறிந்து கட்டி விலைபகர்ந் தேனு மைய
இவ்வயி றோம்பு கேனென் றித்தொழில் பூண்டே னென்ன
நைவளந் * தெரிந்த வேம நாதனும் விறகு மள்ளா
அவ்விசை யொருகா லின்னும் பாடென வையன் பாடும். (உசா)

குண்டுநீர் வறந்திட் டன்ன நெடுங்கொடிக் குறுங்காய்ப் பத்தர்த்
தண்டுநீ ணிறத்த நல்யா ழிடந்தழீஇத் தெறித்துத் தாக்கிக்
கண்டமா டகந்தி ரித்துக் கௌவிய திவவிற் பாவ
விண்டுதே னொழுகிற் றென்ன வீக்கிமென் சுருதி கூட்டி. (உஎ)

விசையொடு தானந் தோறும் விரனடந் தூச லாட
இசைமுத லேழிற் பல்வே றின்னிசை யெழுஞ்சா தாரி
அசையொடு வீதிப் போக்கு முடுகிய லராகம் யார்க்கும்
நசைதரு நரம்பு கண்ட மொற்றுமை நயங்கொண் டார்ப்ப. (உஅ)

வயிறது குழிய வாங்க லழுமுகங் காட்டல் வாங்குஞ்
செயிரறு புருவ மேறல் சிரநடுக் குறல்கண் ணாடல்
பயிறரு மிடறு வீங்கல் பையென வாயங் காத்தல்
எயிறது காட்ட லின்ன வுடற்றொழிற் குற்ற மென்ப. (உகூ)

* நைவளம் - ஒருபண்.

வெள்ளைகா குளிகீழோசை *வெடிகுர லுசி யின்ன
எள்ளிய வெழாவின் குற்ற மெறிந்துநின் றிரட்ட லெல்லை
தள்ளிய கழிபோக் கோசை யிளைத்தனெட் டுயிர்ப்புத் தள்ளித்
துள்ளலின் றின்ன பாடற் றொழிற்குற்றம் பிறவுந் தீர்ந்தே. (௧௦)

எழுதுசித் திரம்போன் மன்னி யிழுமெனு மருவ லியாதை
முழவொலி கஞ்ச நாதம் வலம்புரி முரலு மோசை
கொழுதிசை வண்டின் றாரி யெனவிசைக் குணனும் வேரல்
விழுமிலை சிரன்மீன் மேல்வீழ் வீழ்ச்சிபோற் பாடற் பண்பும். (௧௧)

பொருந்தமந் தரத்தி னோடு மத்திமதாரம் போக்கித்
திருந்திய துள்ள றூங்கன் மெலிவது சிறப்பச் செய்து
மருந்தன செய்யு ளோசை யிசையோசை வழாமல் யார்க்கும்
விருந்தெனச் செவியின் மாந்தப் பாடினார் வேதகீதர்.

வேறு.

விரைசா மலரோ னறியா விகிர்தன்
அரசாய் மதுரை யமர்ந்தா னென்னே
அரசாய் மதுரை யமர்ந்தா னவனென்
புரைசார் மனனும் புகுந்தா னென்னே. (௧௩)

பாடன் மறையுந் தெளியாப் பரமன்
கூடல் கோயில் கொண்டா னென்னே
கூடல் போலக் கொடியே னகமும்
ஆட லரங்கா வமர்ந்தா னென்னே. (௧௪)

நீல வண்ணன் றேறா நிமலன்
ஆல வாயி லமர்ந்தா னென்னே
ஆல வாயா னலரில் வாசம்
போலென் னுளமும் புகுந்தா னென்னே. (௧௫)

வேறு.

பாணர்தம் பிரானைக் காப்பான் பருந்தொடு நிழல் போக் கென்ன
யாணரம் பிசைபின செலல விசைத்தவின் னிசைத்தே னண்ட
வாணர்தஞ் செவிக்கா லோடி மயிர்த்துளை வழியத் தேக்கி
யாணரின் னமுத யாக்கை யிசைமய மாக்கிற் றன்றே. (௧௬)

தருக்களுஞ் சலியா முந்நீர்ச் சலதியுங் கலியா நீண்ட
பொருப்பிழி யருவிக் கானு நதிகளும் புரண்டு துள்ளா
அருட்கடல் விளைத்த கீத வின்னிசை யமுத மாந்தி
மருட்கெட வறிவன் றீட்டி வைத்தசித் திரமே யொத்த. (௧௭)

வீணைகை வழுக்கிச் சோர்வார் சிலர்சிலர் விரண டத்தும்
யாணரம் பெழாலுங் கண்டத் தெழாலும்வே றுகவேர்ப்பார்
நாணமோ டுவகை தள்ள நாத்தல நடுங்கித் தங்கள்
மாணிழை யவர்மேல் வீழ்வார் விஞ்சையர் மயங்கிச் சில்லோர். (௧௮)

---

* பருந்து பறக்கின்றவிடத்து முறையே உயர்ந்து தன்னிலத்தின்கணின்று யர்ந்து பினனும் அம்முறையே மேன்மேலுயாகின்றாற்போலப் பாடவேண்டுதலின மிடற்றிசைக்குப் பருந்தினியக்கமும், அம்மிடற்றிசையின்பின் அகலாது செல்ல வேண்டுதலின் யாழிசைக்குப் பருந்தினிழலியக்கமும் உவமையாயின.

போதுளான் பரமன் பாதப் போதுளர் ஞானன் வேலை
மீதுளான் பரமா னந்த வேலைமீ துள்ளா ஞானன்
தாதுளாங் கமலக் கண்போற் சதமக னுடல மெல்லாங்
காதுளா னல்லே னென்றான் கண்ணுளான்* கானங் கேட்டு. (௩௯)

முனிவருந் தவத்த ராதி முத்தர்மா சித்த ரன்பின்
துனிவரும் பழங்கண் டாப்பான் சுந்தரத் தோன்றல் கீதங்
கனிவருங் கருணை யென்னுங் கடலிலன் பென்னு மாற்றிற்
பனிவருங் கண்ணீர் வெள்ளம் பாய்ந்திட வின்பத் தாழ்ந்தார். (௪௦)

ஊடிவே றொதுங்கித் துன்ப வுவரியுட் குளித்தார் தம்மிற்
கூடிவே றற்ற வின்பக் குளிர்கடல் வெள்ளத் தாழ்ந்தார்
நாடிவே றிடைட்பி ரிந்தார் மேன்மன நடாத்தி மேனி
வாடிவே றலைப்பச் சோர்ந்து மம்மர்நோ யுழந்தா மண்ணோர். (௪௧)

பைத்தலை விடவாய் நாகம் பல்பொறி மஞ்ஞை நால்வாய்
மத்தமா னரிமான் புல்வாய் வல்லிய மருட்கை யெய்தித்
தத்தமா றறியா வாகித் தலைத்தலை மயங்கிச் சோர
இத்தகை மாவும் புள்ளு மிசைவலைப் பட்ட வம்மா. (௪௨)

வன்றரை கிழிய வீழ்போய் வான்சினை கரிந்து நின்ற
ஒன்றறி மரங்க ளெல்லாஞ் செவியறி வுடைய வாகி
மென்றளி ரீன்று போது விரிந்துகண் ணீருஞ் சோர
நன்றறி மாந்தர் போல நகைமுக மலர்ந்த மாதோ. (௪௩)

வாழிய வுலகின் வானோர் மனிதர்புள் விலங்கு மற்றும்
ஆழிய கரண மெல்லா மசைவற வடங்க வையன்
ஏழிசை மயமே யாகி யிருந்தன வுணர்ந்தோ ருள்ளம்
ஊழியி லொருவன் றாள்புக் கொடுங்கிய தன்மை யொத்த. (௪௪)

கண்ணிறை நுதலோன் சாம கண்டத்தி னெழுந்த முல்லைப்
பண்ணிறை தேவ கீதஞ் சராசர வுயிரும் பாரும்
விண்ணிறை திசைக ளெட்டும் விழுங்கித்தன் மயமே யாக்கி
உண்ணிறை யுயிரு மெய்யு முருக்கிய திசைவல் லானை. (௪௫)

வேறு.

சிந்தை தோயுமைம் பொறிகளுஞ் செவிகளாய்ப் புலன்கள்
ஐந்து மோசையா விசைவலா னிருந்தன னாகப்
பந்த நான்மறை நாவினாற் பத்திர னாளாய்
வந்து பாடினா ரிந்தனச் சுமையொடு மறைந்தார். (௪௬)

யான றிந்தசா தாரியன் றிம்பரு ளிதனை
நான றிந்தனெ னொருவரு நவின்றிலர் தேவ
கான மீதிவற் குணர்த்தினோன் கடவுளே யன்றி
ஏனை மானுடர் வலலரோ விதுவியப் பெனா. (௪௭)

இழுக்கி விட்டவிக் கிழமக னிசையிதே லந்த
வழுக்கில் பத்திரன் பாடலெற் றோவென மதியா
அழுக்க முற்றெழுந் திசைவலா னடுத்ததன் பண்டர்
குழுக்க ளுங்குலை குலைந்திட விருள்வழுக் கொண்டான். (௪௮)

---

* கண்ணுளான் - கூத்தன். கண்ணுள் - கூத்து.

மடக்கு பல்கலைப் பேழையு மணிக்கலம் பிறவும்
அடக்கு பேழையுங் கருவியாழ்க் கோலுமாங் காங்கே
கிடக்க மானமு மச்சமுங் கிளர்ந்துமுன் னீர்த்து
நடக்க வுத்தர திசைக்கணே நாடினு னடந்தான். (௪௯)

சிவிகை யோர்வழி விறலிய ரோர்வழி செல்லக்
கவிகை யோர்வழி கற்பவ ரோர்வழி கடுகக்
குவிகை யேவல ரொருவழி கூடநா ணுள்ளத்
தவிகை யோவரு மொருவழி யகன்றிட வகன்றான். (௫0)

அன்று பத்திரன் கனவில்வந் தாடலேற் றழகர்
இன்று பத்திர விசைவலா னிடைவிற காளாய்ச்
சென்று பத்திர னடிமையா மென்றுபாண் செய்து
வென்று பத்திரஞ் செய்துநின் வேண்டுகோ ளென்றார். (௫௧)

குஞ்சி நாண்மலர்க் கொன்றையா ரங்ஙனங் கூறும
நெஞ்சி றுனிலைப் பரியசொற் கேட்டலு நெஞ்சம்
அஞ்சி றுனிது செய்யவோ வடியனேன் மறைகட்
கெஞ்சி றுரையின் றிரந்தவா றென்றுகண் விழித்தான். (௫௨)

கண்ம லர்ந்தெழு பத்திரன் கரையிலா வுவகை
உண்ம லர்ந்தெழு மன்புகொண் டேக்கவெங் கதிரோன்
விண்ம லர்ந்தெழு முன்புபோய் விசும்பிழி கோயிற்
பண்ம லர்ந்தநான் மறைப்பொரு ளடித்தலம் பணிந்தான். (௫௩)

கடிய கானகம் புகுதவோ கட்டிய விறகை
முடியி லேற்றவோ முண்டகத் தாள்கணொந் திடவந்
தடிய னேன்பொருட் டடாதசொற் பகரவோ வஞ்சக்
கொடிய னேன்குறை யிரந்தவா விளைந்ததே குற்றம். (௫௪)

நெடிய னேமுதல் வானவர் நெஞ்சமுஞ் சுருதி
முடிய னேகமுங் கடந்தநின் முண்டகப் பாதஞ்
செடிய னேனபொருட் டாகவிச் சேணிலந் தோய்ந்த
அடிய னேற்கெளி தாயதோ வையநின பெருமை. (௫௫)

நாத வந்தமுங் கடந்தமெய்ஞ் ஞானவா னந்த
போத மென்பரம் தின்றொரு புடவிமா னுடமாய்
ஆத பந்தெறத் தறிந்தவிந் தனஞ்சுமந் தடியேன்
பேதை யன்பளா வாயதோ பெருமநின் னுருவம். (௫௬)

மறிந்த தெண்டிரை கிடந்தவ னுந்தியில் வந்தோன்
அறிந்த தன்றரும் பொருள்வரம் பகன்றெழு விசும்புஞ்
செறிந்த வண்டமுங் கடந்தது சிறியனேன் பொருட்டாத்
தறிந்த விந்தனஞ் சுமந்ததோ தம்பிரான் முடியே. (௫௭)

என்ன வந்தனை செய்துநின் றேத்தியங் கயற்கண்
மின்ன மர்ந்தபங் கொருவனை வலங்கொடு மீண்டு
மன்னர் தம்பிரா னாகிய வரகுண தேவன்
றன்னை வந்தடி பணிந்தனன் றந்திரிக் கிழவோன் (௫௮)

வந்த வேழிசைத் தலைமகன் வரவறிந் தரசன்
அந்த வேழிசைக் கிழவனை யழையென வுழையோர்
பந்த யாழ்மக னிருக்கைபோய்ப் பார்த்தனர் காணார்
சிந்தை யாகுல மடைந்தவன் போனவா தெரியார். (௫௯)

எங்கு ளானெனத் தேடுவா ரிவரெதி ரயல்வாய்
அங்கு ளார்சில ரறிந்தவா றறைகுவா ரவனேற்
றிங்கு ளான்விற கெடுத்தொரு முதுமக னிவன்பாற்
பொங்கு மேழிசைப் பத்திர னடிமையாய்ப் போந்தான். (௬௰)

பாடி னான்பின்பு பட்டது தெரிகிலேம் பாணன்
ஓடி னானெனக் கேட்டலு மொற்றர்போய்க் கொற்றஞ்
சூடி னானவை யடைந்தவர் சொல்லிய வாறே
ஆடி னார்வியப் படைந்தனு மானமுற் றரசன். (௬௧)

தன்ன டைந்தவத் தந்திரித் தலைவனை நோக்கி
என்ன வாறவன் போனவா றிங்கினும் போன
பின்னை யாதுநீ செய்தனை யெனவிசைப் பெருமான்
தென்னர் கோனடி தொழுதுதன் செய்தியை மொழிவான். (௬௨)

நென்னல் வாயடி யேனின தாணிழ னீங்கிப்
பின்னல் வார்சடை மௌலியெம் பிரானடி பணிந்தேன்
இன்ன லார்குறை யிரந்துமீண் டிருக்கைபுக் கிருந்தேன்
கன்ன லார்மொழி பங்கரென் கனாவில்வந் தருளி. (௬௩)

ஓடி யுன்பொருட் டாகநாம் விறகெடுத் துழன்று
வாடி நின்பகைப் புறங்கடை வந்துசா தாரி
பாடி வென்றுநின் பகைவனைத் துரந்தன மெனச்சொல்
லாடி னார்விழித் தேனிது நிகழ்ந்ததென் றறைந்தான். (௬௪)

ஏவன் மைந்தர்போய் விளங்கிவந் திசைத்ததும் வீணைக்
காவ லன்கனா நிகழ்ச்சியு மொத்தலிற் கைக்கும்
பூவ லங்கலா னிஃதுநம் பொன்னகர்க் கூடற்
றேவர் தம்பிரான் றிருவிளை யாட்டெனத் தெளிந்தான். (௬௫)

இகழ்ந்த கூற்றெறி சேவடிக் கிடையறா நேசந்
திகழ்ந்த பத்திர னன்பையுந் தேவரைக் காப்பான்
அகழ்ந்த வாழிநஞ் சுண்டவ னருளையும் வியந்து
புகழ்ந்து போய்மது ராபுரிப் புனிதனைப் பணியா. (௬௬)

பத்தர் யாழிசைக் கிழவனைப் பனைக்கைமா னெருத்தில்
வைத்து மாடநீ ணகர்வலஞ் செய்வித்து மலர்ந்த
சித்த மாழ்ந்திட வரிசைகண் மிதப்புறச் செய்து
தத்து மான்றொடைத் தேரினான் றன்மனை புகுவான். (௬௭)

தேவ ருந்தவ முனிவருந் தேவரிற் சிறந்தோர்
யாவ ருந்தமக் காட்செய விருப்பவ ரிருதாள்
நோவ வந்துமக் காட்செய்து நுங்குறை முடித்தா
ராவ ரேனுமக் கனைவரு மேவல ரன்றோ. (௬௮)

ஆத லாலெனக் குடையர்சீ ருமக்குநா னடியேன்
ஈத லாலெனக் கும்மொடு வழக்குவே றிலைநான்
ஓத லாவதோர் குறையுள தின்றுதொட் டுமக்கு
வேத நாதனைப் பாட்டிலே கடனென விடுத்தான். (௬௯)

அரச னல்கிய வெறுக்கைபூ ணுடைகள் பிறவும்
பரிசு நாவலர் மாணவர் யாவாக்கும் பகிர்ந்து
வரிசை யாலிசைக் கிளையொடு மனையில்வந் தெய்திக்
கரைசெ யாமகிழ் சிறந்திசைக் காவல னிருந்தான். (௭௰)

விறகுவிற்றபடலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௨,௪௦௦.

நாற்பத்திரண்டாவது

திருமுகங்கொடுத்தபடலம்.

முன்னவன் மதுரை மூதூர் முழுமுத லிசைவ லானை
இன்னிசை பாடி வென்ற தென்னுரை செய்கே னந்தத்
தென்னவன் சேரன் மாடே திருமுகங் கொடுத்துப் பாணர்
மன்னவன் றனக்குச் செம்பொன் வழங்கிய வழக்குஞ் சொல்வாம். (௧)

இனிமதி யெமக்கீ தென்றே யாழ்வல்லோ னன்று தொட்டுப்
பனிமதி மருமான் கோயிற் பாணிசைக் கிழமை நீத்துக்
குனிமதி மிலைந்த நாதன் கோயின்முப் போது மெய்திக்
கனிமதி யன்பிற் பாடுங் கடப்படு நியமம் பூண்டான். (௨)

இத்தொழி லன்றி வேறு தொழிலிவற் கின்மை யாலே
பத்திர னிலம்பா டெய்தப் பொறுப்பரோ பழனக் கூடற்
சித்தவெம் மடிகள் வேந்தன் பொன்னறைச் செல்வம் வெளவிப்
பத்தர்யா ழிடத்தோ ளேந்திப் பாடுவான் காண வைப்பார்.

சிலபொலங் காசு சின்னாண் மணிக்கலன் சின்னாள் செம்பொற்
கலைவகை சின்னா ளம்பொற் சாமரைக் காம்பு சின்னாள்
அலர்கதி ரரிமான் சேக்கை யாடகத் தகடு சின்னாள்
குலமணி வருக்கஞ் சின்னாள் கொடுத்திடக் கொண்டுபோவான்.

கைவரும் பொருளைத் தந்த கள்வருந் தானு மன்றி
எவ்வெவர் தமக்குந் தோற்றா தெரியிலிட் டழித்துஞ் சின்னஞ்
செய்வன செய்துந் தன்னைச் சேர்ந்தவ ரிரந்தோர் கைபார்த்
துய்பவர் பிறர்க்கு மாறா துதவியுட் கவலை தீர்ப்பான். (௫)

வைகலுங் கொடுப்போர் பின்னாண் மறுத்தன ராகப் போய்ப்போய்க்
கைதொழு திறைஞ்சி வாளா வருமவன் கலியின் மூழ்கி
உய்வகை வேறு காணா தொக்கலு மொக்க வாடிக்
கையற வடைய நோனா துறங்கினான் கனவி னெல்லை.

சித்தவெம் பெருமான் வந்து செப்புவா னப்பா நிம்பத்
தொத்தவன் கோசந் தன்னிற் றும்பியுண் கனியின் வெளவி
இத்தன மின்று காறு மீத்தன மெம்பா லன்பு
வைத்தவ னறிந்தாற் சங்கை மனத்தனாய் விகற்பங் கொள்வான். (௭)

மயலறக் கற்புக் காக்கு மகளிர்போற றுறவு காக்க
முயலும் யோகரி லுட்காப்பு முரசெறி புறஞ்சூழ் காப்பும்
கயவிலச் சினையு நிற்கக் கவர்ந்ததற் புதமிக் கள்வன்
உயிர்தொறு மொளித்த கள்வ னொருவனே வறியே னென்பான். (௮)

கோமக னிளைய செய்தி யறியுமேற் கோசங் காப்போர்க்
காமுறு தண்ட நின்போ லன்பகத் தெம்மை வைத்த
சேமரு போந்தின் கண்ணிச் சேரமான் றனக்கிப் போது
நாமொரு முடங்க றீட்டி நல்குவம் போதி யென்னா. (௯)

மன்றக்குரை செய்த வாக்கான் மதிமலி புரிசை யென்னுஞ்
சிறப்பியற் சீர்சால் செய்யுட் பாசுரஞ் செப்பித் தீட்டிப்
பிறைச்சடைப் பெருமா னல்கி மறைந்தனன் பெரும்பாண் செல்வன்
உறக்கநீத் தாடிப் பாடி யுவகைமா கடலி லாழ்ந்தான். (௧௦)

வேறு.

வாங்கிய திருமுக மணிப்பட் டாடையிட்
டாங்கிறை யடிபணிந் தகன்று பத்திரன்
ஓங்கிய கோயிலை வலங்கொண் டொல்லென
நீங்கிமேல் வரைப்புல நெறிக்கொண் டேகுவான். (௧௧)

கொல்லையுங் குறிஞ்சியுங் கொதிக்கும் வெம்பரற்
கல்லத ரத்தமுங் கடந்து முட்புறப்
பல்சுளைக் கனியடி யிடறப் பைப்பைய
நல்வளங் கெழுமலை நாடு நண்ணினான். (௧௨)

அலைகட னெடுந்துகி லந்த நாடெனுந்
தலைமக டனக்குவான் றடவு குன்றுபூண்
முலையென விளங்கின முகத்திற் றீட்டிய
திலகமே யானது திருவஞ் சைக்களம். (௧௩)

அறமக ளாக்கமு மலரின் மேயசெந்
திறமக ளாக்கமு நீதி சான்றபோர்
மறமக ளாக்கமும் வடசொற் றென்கலைத்
திறமக ளாக்கமுஞ் சிறந்த தந்நகர். (௧௪)

மண்புக ழந்நகர் மறுகின் மாடொரு
தண்புனற் சாலையிற் சார்ந்து ளானிப்பால்
விண்புகழ் நீதியவ் வேந்தற் கன்றிராக்
கண்புனை நுதலினார் கனவிற் றோன்றினார். (௧௫)

தென்னவன் மதுரையி லிருக்குஞ் சித்தர்யாம்
நின்னிடை வந்துளே நின்னைக் கண்டுதான்
நன்னிதி வேண்டநம் மோலை கொண்டுநம்
இன்னிசைப் பாணபத் திரனிங் கெய்தினான். (௧௬)

மற்றவற் கருநிதி கொடுத்து மன்னநீ
தெற்றென வரவிடு கென்று சித்தர்தாஞ்
சொற்றனர் போயினார் சுரக்குந் தண்ணளி
ஒற்றைவெண் குடையினா னுறக்க நீங்கினான். (௧௭)

கங்குல்வாய்க் கண்டவக் கனவைப் பெண்ணையந்
தொங்கலான் றமரொடு சொல்லிச் சேற்கணாள்
பங்கினான் றிருமுகங் கொணர்ந்த பத்திரன்
எங்குளான் கொல்லெனத் தேட வெண்ணுவான். (கஅ)

மற்றவர் தமைத்துரீஇ வருக தில்லெனக்
கொற்றவ னேவலோர் குறுகி மாடமுந்
தெற்றியு நிகமமு மன்றுஞ் சென்றுசென்
றெற்றிகழ் மணிநக ரெங்குந் தேடுவார். (கசு)

தருமநீர்ப் பந்தரி விருக்குந் தந்திரி
வருமிசைக் கிழவனைக் கண்டு வல்லைபோய்த்
திருமகற் குணர்த்தினார் சேனை யோடெழீஇப்
பெருமகன் பாணர்தம் பிரானை நண்ணினான். (உ0)

கண்டனன் முகிழ்த்தகைக் கமலஞ் சென்னிமேற்
கொண்டனன் பாடினன் கூத்து மாடினன்
தண்டென வீழ்ந்தன னன்பிற் றண்ணறு
வண்டென மகிழ்ந்தனன் மன்னர் மன்னனே. (உக)

வாங்கினன் றிருமுக மலர்க்க ணொற்றினன்
தாங்கினன் முடிமிசைத் தாமம் போன்மகிழ்
தூங்கினன் றடங்கணீர் துளிப்ப மெய்யெலாம்
வீங்கினன் பொடிப்பெழ வேந்தர் வேந்தனே. (உஉ)

வேறு.

மின்னவிருஞ் செம்பொன்மணி மாடக் கூடன் மேயசிவன் யாமெழுதி விடு
க்கு மாற்றம், நன்னர்முகி லெனப்புலவர்க் குதவுஞ் சேர நரபாலன் காண்க
தன்போ னம்பா லன்பன்,இன்னிசையாழ்ப் பத்திரன்றன் மாடே போந்தா னிரு
நிதியங் கொடுத்துவர விடுப்ப தென்னத், தென்னர்பிரான் றிருமுகத்தின் செய்தி
நோக்கிச் சேரர்பிரான் களிப்பெல்லை தெரியா னாகி. (உங)

வேறு.

பொன்னின்* றளிகை மிசைவைத்துப் புழைக்கை மதமான் றலையேற்றி
மன்னுங் கொளையாழ்ப் புலவனைமுன் வைத்துப் பின்னே தானிருந்து
மின்னுங் கதிர்கா லிணைக்கவரி வீசிப் பலவே றியங்கலிப்பத்
தென்னென் றளியா ரிசைத்தாரான் றிருமா நகரை வலஞ்செய்யா. (உச)

பஞ்சு தடவுஞ் சீறடியார் பலமங் கலங்கொண் டெதிர்போத
மஞ்சு தடவு நீள்குடுமி மாட மனையிற் கொடுபோகி
நஞ்சு தடவு மணிகண்ட னன்பன் றனைநன் னீராட்டி
அஞ்சு தடவி யோவியஞ்செய் தமைத்த மணிமண் டபத்தேற்றி. (உரு)

அம்பொற் றவிசிட் டருச்சனைசெய் தாறு சுவையி னமுதருத்திச்
செம்பொற் கலவை நறுஞ்சாந்தந் தீம்பூ வாதி முகவாசம்
பைம்பொற் கலத்து வெள்ளிலைதீம் பழுக்காய் பிறவு முறைநல்கி
உம்பர்க் கிறைவன் றிருமுகத்தி லுய்ப்ப தெனலா லுய்த்துமென. (உசு)

செம்பொ னறையைத் திறந்தழைத்துக் காட்டி யினைய திருவெல்லாம்
உம்பர் பெருமா னடியீர்நீ ருடையீர் கவர்ந்து கொண்மி னென
இம்பர் நிழற்றும் வெண்குடையா னிசைப்ப வெதிர்தாழ்ந் திசைக்கிழவன்
நம்ப னருளுக் குரியீர்நீர் நல்கிற் றமையு மெனக் கென்ன. (உஎ)

---

* பொன்னின்றளிகை - பொற்கலம்.

மன்னன் றானென் ணியவாற்றால் வழங்க வீழங்க மறுத்துமறுத்
தின்ன நீரு மிசைக்கிழவ னிலங்கும் பொலம்பூ ணிருநிதியம்
பொன்னஞ் சிவிகை கரிபரிமான் பொற்பட் டாடை பலபிறவுந்
தன்ன தென்று மளவாற்றாற் றானே கொள்ளத் தீர்வேந்தன். (௨௮)

பின்னே நூடியோ சேட்சென்று பெருமை சான்ற வரிசையினாற்
றன்னே ரிசையான் றனைவிடுத்து மீண்டா ணாகத் தமிழ்மதுரை
மின்னேர் சடையா ரிசைத்தொண்டன் றானு மீண்டு வெயில்விரிக்
பொன்னேர் மௌலி நிதிக்கிழவன் போல மதுரை நகர்புக்கான். (௨௯)

வந்து மதுரைப் பெருமானை வணங்கிக் கொணர்ந்த நிதியெல்லாம்
இந்து மருமா ணகருள்ளார் யாரு மறிய யாவர்க்கும்
முந்தை வேத முதல்வர்க்கும் புலவோர் தமக்கு முறைநல்கி
சந்த யாழி னிசைப்பாணர் தரும மனையான் வைகினான். (௩0)

திருமுகங்கொடுத்தபடலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௨,௧௩௧.

நாற்பத்துமூன்றாவது

பலகையிட்டபடலம்.

கருந்துழாய் முகிலொருபாற் கலந்தவர்பத் திரற்குநிதி
திருந்துதா ருதியனிடைத் திருமுகமீந் தளித்ததிது
வருந்தியா ழவனிசைப்ப மழைதூங்கு நள்ளிரவில்
இருந்துபா டெனப்பலகை யிட்டதூஉ மினிப்பகர்வாம். (௧)

முன்புடைய நாயகனை முப்போதும் புகுந்திறைஞ்சி
இன்புறுமே ழிசைக்கிழவ னிருநிதிய மருளியபின்
அன்புசிறந் தரையிரவு மடைந்துபணிந் தடல்விடையின்
பின்புறநின் றேழிசையும் பாடிவரும் பேறடைவான். (௨)

தொழுந்தகையன் பருந்தேவர் தொகுதிகளுந் தொழத்திங்கட்
கொழுந்தலைய நதியலையக் குனிக்கின்ற தனிக்கடவுள்
செழுந்தரளச் சிவிகையின்மேற் றேவிதிருப் பள்ளியறைக்
கெழுந்தருளும் போதுபணிந் தேத்துவா னோரிரவில். (௩)

இன்னிசையாழ்ப் பெரும்பாண னெவ்விடையூ றடுத்தாலுந்
தன்னியம நெறியொழுக்கந் தவானென்ப துலகறியப்
பொன்னியலுஞ் சடைமௌலிப் புராணர்திரு விளையாட்டால்
அன்னிலையிற் கருங்கொண்மூ வார்த்தெழுந்த திசையெல்லாம். (௪)

தடிதநுரை புடைபரப்பித் தமோறித் திசைமயங்கத்
துடித்துவிட வாயரவஞ் சோர்ந்துசுருண் டளையொதுங்க
இடித்துடுவின் கணம்புதைப்ப விருள்கான்று சலபதிமுன்
முடித்திடுவான் வரவிடுத்த முகிலேழும் வளைந்தவென்ன. (௫)

கருங்கடலை விசும்பெடுத்துக் கவிழ்ப்பதென வெண்டாரை
நெருங்கிருளி னிருப்புக்கோ னிரைத்ததென நிறங்கருக
ஒருங்குசொரிந் துள்ளுணரா ருள்ளம்போ லுட்புறம்பு
மருங்கொடுகீழ் மேலென்று தெரியாத மயக்கிருள்வாய். (சு)

மாமாரி யிடைநனைந்து வருவானம் மாரிதனைப்
பூமாரி யெனநினைந்து திருக்கோயில் புகுந்தெய்திக்
காமாரி தனைப்பணிந்து கருணைமா ரியினனைந்து
தேமாரி பொழிவதெனத் தெள்விளியாழ் வாசிப்பான். (எ)

விடைக்கடவுள் பின்னின்று வீணையிடத் தோள்கிடத்திப்
புடைத்துரம் பெறிந்துமிடற் றெழுவிபோக்கிப் பொலங்கொன்றைச்
சடைக்கடவுள் செவிவழிபோ யருட்பைங்கூழ் தலையெடுப்பத்
தொடைத்தமிழி னிசைப்பாணிச் சுவையமுத மடைதிறந்து. (அ)

நரம்புநனைந் திசைமழுங்க நனைந்துடலம் பனிப்பவிசை
வரம்பொழுகு விரன்மிறைத்து வலிவாங்க மயிர்சிலும்ப
நிரம்பியசே றடிபுதைப்ப நின்றுநிறை யன்பிசையாய்
அரும்புதல்போ லென்புருக்கு மமுதவிசை பாடுமால். (க)

வேறு.

மாதர் நகையாய் மதுரேச ருண்பலிக்கெம் மனைவாய் வந்து
காதன் முகத்தரும்பிக் காட்டியென் சிந்தை கவர்ந்தார் போலுங்
காதன் முகத்தரும்பக் கையறவு தீரக் கலப்பேன் பாதி
பேதையுரு வாயிருந்தார் நாணிவிழித் தாவி பிழைத்தேன் போலும். (கo)

ஒண்ணுதலாய் வெண்டலைகொண் டுண்பலிக்கு நம்மனையி னூடே கூடற்
கண்ணுதலா ருள்ளாளக் கானமிசைத் தென்னுள்ளங் கவர்ந்தார் போலுங்
கண்ணுதலார் பாடு மவிநயங்கண் டாகங் கலப்பேன் பாதி
பெண்ணுருவ மாயிருந்தார் வெள்கிவிழித் தாவி பெற்றேன் போலும். (கக)

ஐயரியுண் கண்ணாய் திருவால வாயுடையா ரையங் கொள்வான்
மையனகை செய்தென் வனமுலையின் மேற்செங்கை வைத்தார் போலும்
மையனகை செய்தென் வனமுலைமேற் கைவைப்ப மாழ்கிச் சோர்வேன்
தையலிடங் கண்டு நடுநடுங்கி விழித்தாவி தரித்தேன் போலும். (கஉ)

வேறு.

பாடுவா ரிருவர்க் கன்று பரிசிலாக் கொடுத்த சங்கத்
தோடுவார் செவியி னாட்டுந் தொண்டுகண் டிதன்மே னின்று
பாடுவா யுனக்கே யிந்தப் பலகையென் றூழ்ந்த வன்பின்
நாடுவார் விசும்பிற் கூறி நகைமணிப் பலகை யிட்டார். (கங)

இறையரு ளாணை யஞ்சி யிட்டபொற் பலகை யேறி
நறைகெழு மதுர கீதம் பாடிநான் மறைகள் சூடும்
அறைகழ லகத்துட் கொண்டு பலகையு மங்கைகொண்டு
மறைவழி யாழ்வல் லோன்றன் மனைவயிற் செல்லுமெல்லை. (கச)

மின்னுமா மேக நீங்கி விசும்புவாய் விளங்கித் தென்றல்
மன்னுமா மலையின் மேய மாதவன் குடித்த வைகற்
பொன்னுமா மணியு முத்தும் புலப்படக் கிடந்த வேலை
என்னமீன் விளங்கித் தோன்ற வேகியில் புகுந்தா னிப்பால். (கரு)

பாயிருட் படலங் கீண்டு பரிதிகண் விழித்துச் செங்கை
ஆயிரம் பரப்பி முந்நீ ரலைகட னீந்து மெல்லை
மாயிரு ஞாலங் காக்கும் வரகுண னிரவு தங்கள்
நாயகன் பாடற் கீந்த நல்லருட் பரிசில் கேட்டான். (கசு)

இன்னிசைக் கரசை யிட்ட பலகைமீ திருத்தி மன்னர்
மன்னவ னிவனே யெங்கண் மதுரைநா யகனென் றுன்னி
மின்னிவர் மணிப்பூ ணல்கி விளைநில மிகவு நல்கி
நன்னிதி வெறுப்ப நல்கி வரிசையா னடத்தி வந்தான். (கஎ)

வேறு.

இறைய்ருள் வரிசை பெற்றபத் திரனு மேறுயர்த் தவரைநாற் போதும்
முறையினால் வழிபட் டொழுகுவா னாக முடிகெழு வரகுண வேந்து
மறைமுத லடிகள் வந்துவந் தனையால வழுத்துவான் சில்பகல் கழிய
நிறைபெருஞ் சுடரோன் றிருவுரு வடைந்து நெறியினாற் சிவபுர மடைந்தான். ()

பலகையிட்ட படலமுற்றிற்று.

ஆக திருவிருத்தம் - உ,கசஅ.

நாற்பத்துநான்காவது

இசைவாதுவென்றபடலம்.

கூட லம்பதியி லாடக மேருக் கொடிய விற்குரிசி லடியவ னுக்குப்
பாட லின்பரிசி லாகிய செம்பொற் பலகை யிட்டபடி பாடின மன்னான்
வீட ரும்பொருவில் கற்புடை யாளோர் விறலி யைப்பரம னிறையருள் பற்றி
மாட கஞ்செறியும் யாழ்வழி பாடி வாது வென்றவர லாறு மிசைப்பாம். (க)

வரகு ணன்கதி யடைந்தபி னம்பொன் மௌலி சூடிய விராச விராசப்
புரவ லன்புவி மடந்தையை வேட்டுப் புயந்த ழீஇக்கொடு நயந்தரு நாளிற்
பரவு மன்பதை புரந்தொழு கந்தப் பஞ்ச வற்குரிய ரஞ்சன வுண்கண்
மரபின் வந்தமட வார்பல ரேனை மையல் செய்யுமட வார்பலர் மாதோ. (உ)

அன்ன போகமட வாரு ளொருத்தி யரச னுக்கமுது மாவியு மாகும்
மின்ன னாண்மதுர கீத மிசைக்கும் விஞ்சை யின றுறைவ லாளவ ளுக்கும்
பன்ன காபரண னின்னிசை பாடும் பத்தி ரன்பொருவில் கற்புடை யாட்கும்
மன்னு கீதவினை யாலிகன் மூள வழுதி காதன்மட மாது பொருளாய். (ங)

பாடி னிக்கெதிரொர் பாடினி தன்னைப் பாட விட்டிவள் படைத்த செருக்கை
ஈட ழிப்பலென வெண்ணி யெழீஇத்தன் னிறைம கற்கஃ திசைத்தலு மந்தத்
தோடி றப்பொரு கயற்கணி னாடான சொன்ன வாறொழுகு மன்னவர் மன்னன்
நாடி யத்தகைய விறலியை யீழ நாட்டி னும்வர வழைத்து விடுத்தான். (ச)

பந்த யாழமுதுகு தைவர விட்டுப் பாட லாயமிரு பக்கமு மொய்ப்ப
வந்த பாடினி மடந்தையு மன்னர் மன்ன னைத்தொழுதொர் கின்னர மாதிற்
சந்த வேழிசை மிழற்றின ளின்று டன்னை நோக்கியொரு மின்னிடை யாண்மேற்
சிந்தை போக்கிவரு தீப்பழி நோக்காத் தென்ன ருக்கரச னின்னது செப்பும். ()

பத்தி ரன்மனைவி தன்னையெம் முன்னர்ப் பாடுதற்கழை யதற்கவ ளாற்று
தூத்த ரஞ்சொலினும் யாமவள் சார்பா யுனைவி லக்கினும் விடாது தொடர்ந்தே,
சித்த நாணமுற வஞ்சின மிட்டுச் செல்ல னில்லென வளைந்துகொ ளென்று
எய்த்த நுண்ணிடையி னாளை யிருக்கைக் கேகி நாளைவரு கென்று விடுத்தான். ()

வேறு.

மின்ன ரின்னிசைப் பத்திரன் பெருந்தகை விறலி
தன்னை யங்கழைத் துளத்தொன்று புறத்தொன்று சாற்றும
என்னொ டின்னிசை பாடுவா ருளர்கொலோ விங்கென்
றுன்னி வந்திருக் கின்றன ளிசைவலா ளொருத்தி. (எ)

ஆட மைத்தடந் தோளினா யவளொடுங் கூடப்
பாட வல்லையோ பகரெனப் பாடினி பகர்வாள்
கோட ருந்தகைக் கற்புமிக் கூடலெம் பெருமான்
வீட ருங்கரு ணையுமெனக் கிருக்கையால் வேந்தே. (அ)

பாடி வெல்வதே யன்றிநான் பரிபவ முழந்து
வாடு வேனலே னென்றுரை வழங்கலு மதுக்கால்
ஏடு வார்குழ லவளையு மிருக்கையுய்த் திருந்தான்
நீடு வார்திரைப் பொருநையந் தண்டுறை நிருபன். (கூ)

மற்றை வைகலவ் விருவரைப் பஞ்சவன் மதுரைக்
கொற்ற வன்றன தவையிடை யழைத்துநேர் கூட்டிக்
கற்ற வேழிசை கேட்குமுன் கலத்தினும் போந்த
வெற்றி வேன்மதர் நெடுங்கணாள் விறலியை வைதாள். (க0)

குற்ற மெத்தனை யெத்தனை குணங்கள்யாழ்க் கோலுக்
குற்ற தெய்வமே திசைப்பதெவ் வுயிருடம் புயிர்மெய்
பெற்ற வோசையெவ் வளவவைக் குத்தரம் பேசி
மற்றெ னோடுபா டில்லையேல் வசையுனக் கென்றாள். (கக)

இருமை யும்பெறு கற்பினா ளியம்புவாள் கலத்தின்
வரும ரும்பெறற் கல்வியும் வாதின்மே லூக்கப்
பெருமை யும்பலர் விரும்புறு பெண்மையின் செருக்குந்
திரும கன்சவை யறியவாய் திறக்கவேண் டாவோ. (கஉ)

நெய்யுண் பூங்குழன் மடவரா னின்னொடும் வாது
செய்யும் பூசலுக கெதிரலாற் றீயவாய் திறந்து
வையும் பூசலுக் கெதிரலேன் மானம்விற் றுன்போல்
உய்யும் பாவைய ரேயதற் கெதிரென வுரைத்தாள். (கங)

வென்றி மீனவன் விலக்குவான் போலெதிர் விலக்கித்
துன்று தார்க்குழன் மடந்தைமீர் பாடுமின் றோற்றோர்
வென்ற மாதரார்க் கடிமையாய் விடுவதே சபதம்
என்று மானமுண் டாக்கலு மீழநாட் டரிவை. (கச)

முந்தி யாழிடந் தழீஇக்குரல் வழிமுகிழ் விரல்போய
உந்த வேபெரு மிதநகை யுட்கிடந் தரும்பச்
சந்த வேழிசை யிறைமகன் றாழ்செவிக் கன்பு
வந்த காதலான் மழலையி னமுதென வார்த்தாள். (கரு)

வீணை வாங்கினன் மாடக முறுக்கினள் விசித்து
வாணரம்பெறிந் திருசெவி மடுத்தன ரியக்கர்
நாண மெல்விர னடைவழி நாவிளை யமுதம்
பாணர் கோமகன் விறலியும் பலர்செவி நிறைந்தாள். (௧௬)

அரச னுட்கிடை யறிந்தில ரவைக்களத் துள்ளார்
விரைசெய் வார்குழற் பாடினி பாடலை வியந்தார்
புரசை மானிரைப் பூழிய னிலங்கையிற் போந்த
வரைசெய் குங்குமக் கொங்கையாள் பாடலை மகிழ்ந்தான். (௧௭)

வேறு.

தென்னவ னுட்கோ ளெல்லை தெரிந்தன ரவையத் துள்ளார்
அன்னவன் புகழ்ந்த வாறே புகழ்ந்தன ரவளைத் தானே
முன்னவ னருளைப் பெற்று மும்மையுந் துறந்தோ ரேனும்
மன்னவன் சொன்ன வாறே சொல்வது வழக்கா றன்றே. (௧௮)

பொன்றளி ரனையாண் மையற் புதுமது நுகர்ந்து தீது
நன்றறி யாத கன்னி நாடவ னவையை நோக்கி
இன்றொரு நாளிற் றேரத் தக்கதோ விதுவென் றந்த
வென்றடு வேற்க ணாரைப் போமென விடுத்தான் மன்னோ. (௧௯)

மருவிய வாய மேத்த விருந்தினுண் மனைவந் தெய்திப்
புரவலன் றனது பாட்டைப் புகழ்ந்ததே புகழ்ந்த தாகப்
பெருமிதந் தலைக்கொண் டாளப் பெருங்களிப் படைந்து மஞ்சத்
திருமல ரணைமே லார்வந் திளைத்தினி திருந்தா ளிப்பால். (௨௦)

வணங்குறு மருங்கிற் கற்பின் மடவரன் மதங்கி தானும்
அணங்கிறை கொண்ட நெஞ்ச ளங்கயற் கண்ணி பாகக்
குணங்குறி கடந்த சோதி குரைகழ லடிக்கீ ழெய்தி
உணங்கினள் கலுழ்கண் ணீர ளொதுங்கிநின் றிதனைச் சொன்னாள். (௨௧)

தென்னவ னாகி வையஞ் செய்யகோல் செலுத்திக் காத்த
மன்னவ வழுதி வார வழிவழக் குரைப்ப தானான்
அன்னவன் கருத்துக் கேற்ப வவையரு மனைய ரானார்
பின்னடு நிலைமை தூக்கிப் பேசுவார் யாவ ரையா. (௨௨)

உன்னருட் டுணைசெய் தென்பா லுறுகணோய் துடைப்ப தென்ன
மின்னனாய் நீயே நாளை வெல்லுமா செய்து மஞ்சேல்
என்னவா காய வாணி யீறிலா னருளாற் கேட்டு
மன்னருங் கற்பி னுடன் மனைபுகுந் திருந்தாண் மன்னோ. (௨௩)

அன்றுபோன் மற்றை ஞான்று மழைத்தனன் பாடல் கேட்டுக்
குன்றுபோற் புயத்தா னென்னற் கூறிய வாறே கூற
மன்றுளார் பலரு மன்ன வண்ணமே சொன்னார் கேட்டு
நின்றபாண் மடந்தை பாண்டி நிருபனை நோக்கிச் சொல்வாள். (௨௪)

தென்னரே றனையாய் ஞால மனுவழிச் செங்கோ லோச்சும்
மன்னரே றனையாய் வார வழக்கினை யாத லானீ
சொன்னவா றவையுஞ் சொல்லத் துணிந்தது துலைநா வன்ன
பன்னகா பரணர் முன்போய்ப் பாடுகேம் பாடு மெல்லை. (௨௫)

இருவரேம் பாட்டுங் கேட்டுத் துணிந்திவள் வென்றா ளென்று
ஒருவர்சந் நிதியிற் சொன்னாற் போதுமென் றுரைத்தாள் பாண்டித்
திருமக னனைய வாறே [illegible]னீர்செய்மி னென்ன
மருவளர் குழலி னூர்த மனைபுகுந் திருந்தார் பின்னாள். (உசு)

வே று.

தென்ற னாடனு மந்திரச் செல்வரும்
நன்று நீதுணர் நால்வகைக் கேள்வியே
ஒன்ற வேகி யொளிவிடு வெள்ளிமா
மன்ற வாணர்மா மண்டபத் தெய்தினார். (உஎ)

எய்தி யம்மட மாதரை யிங்குறச்
செய்தி ரென்னத் திருமக னேவலோர்
நொய்தி னோடி நொடித்தழைத் தாரொடு
மைதி கழ்ந்த விழியார் வருவரால். (உஅ)

படிமை யார்தவப் பாடினி வந்தெனக்
கடிமை யாவளின் றையமின் றெலனக்
கொடுமை யார்மனக் கோட்டச் செருக்கொடுங்
கடுமை யாகவந் தாள்கலத் தின்வந்தாள். (உகூ)

கற்பு மிக்கெழு கற்புங் கருத்தினிற்
சிற்ப ரஞ்சுடர் சேவடி மேல்வைத்த
அற்பு மிக்கெழு மெல்லவந் தாளரோ
பொற்பு மிக்குள பத்திரன் பொன்னனாள். (௩0)

அலங்கு மாரமோ டங்கத மாதிபல்
கலன்க டாங்கிக் கலைஞர் குழாத்திடை
இலங்கு மாட மதுரைக் கிறைவரும்
புலங்கொ ளுவலர் போல்வந்து வைகினார். (௩௧)

அந்த வேத்தவை தன்னி லருங்கலம்
வந்த வேய்த்தடந் தோளிசை மாதராள்
முந்த வேத்திசை பாடினன் முந்தையோர்
சிந்தை வேட்டொன்றுஞ் செப்பின ரில்லையால். (௩உ)

வீணை தோளிட னேந்திய வெண்மலர்
வாணி பாட விருக்கையின் வைகியே
யாண ரம்பெறிந் தின்னிசை யோர்ந்தெழீஇப்
பாணர் கோமகன் பன்னியும் பாடுமால். (௩௩)

வே று.

குடங்கை நீரும் பச்சிலையு மிடுவார்க் கிமையாக் குஞ்சரமும்
படங்கொள் பாயும் பூவணையுந் தருவாய் மதுரைப் பரமேட்டீ
படங்கொள் பாயும் பூவணையுந் தருவாய் கையிற் படுதலைகொண்
டிடங்க டோறு மிரப்பாயென் றேசு வார்க்கென் பேசுவனே. (௩௪)

தேனார் மொழியார் விழிவழியே செல்லா தவர்க்கே வீடென்று
நானா வேதப் பொருளுரைத்தாய் நீயே மதுரை நம்பரனே
நானா வேதப் பொருளுரைத்தாய் நீயே பாதி நாரியுரு
ஆனா யென்று பிறர்பழித்தா லடியேன் விடையே தறைவேனே. (௩௫)

* நால்வகைக்கேள்வி - கீதஞானம், இலயஞானம், சுருதிஞானம், காள ஞானம்.

வாத ஞகி யெவ்வுயிர்க்கு மாயா விருத்தி வலியடக்கிச்
சரத மான வீட்டின்பந் தருவாய் மதுரைத் தனிமுதலே
சரத மான வீட்டின்பந் தருவாய் வீடு பெறுவார்போல்
விரத யோக நிலையடைந்தா யென்பார்க் கென்னுன் விளம்புவனே. (கசு)

வேறு.

கண்ணுதனை மதுரைப் பிரானையிவ் வாறு கருதிய பாணியாற் கனிந்து
பண்ணுதல் பரிவட் டணைமுத லிசைநூல் பகர்முதற் ஞெழிலிரு நான்கும்
எண்ணுறு வார்தல் வடித்திடன் முதலா மெட்டிசைக் கரணமும் பயப்ப
மண்ணவர் செவிக்கோ வானவர் செவிக்கும் வாக்கினு ஞவிளை யமுதம். (கஎ)

இடையினே டேனைப் பிங்கலை யியக்க மிகந்நுமூ லந்தொடுத் தியக்கி
நடுவுறு தொழிலாற் பிரமரந் திராந்த நடைபெற விசைக்கு முள்ளாளம்
மிடறுவீங் காள்கண் ணிமைத்திடா ளெயிறு வெளிப்படாள் புருவமே னிமிராள்
கொடிறது துடியாள் பாடலு மதுகேட் டனைவருங் குதூகல மடைந்தார். (கஅ)

கன்னிநா டுடையான் கைதவ னெனும்பேர்க் காரணந் தேற்றுவா னெனத்தான்
இன்னிசை யறிஞ ஞகிய முன்போ லியம்புவா ஞெருப்படு கின்முன்
முன்னவ னருளாற் றன்மனக் கோட்ட முரண்கெடப் பொதுமையா ஞேக்கி
இன்னவ டானே வென்றன ளென்று ணினையவா றனைவரு மொழிந்தார். (கக)

கரியுரை மொழிந்த கைதவ னிலங்கைக் கைதவப் பாடினி கழுத்திற்
புரிகுழன் மாதை யிருத்தென விருத்தும் போதுமை யிடங்கரந் திருந்த
அரியநா வலீ தற்புத மீதற் புதமென வறைந்தவை காண
விரிகதிர் மின்போன் மறைந்தனர் யாரும் வியந்தனர் பயந்தனன் வேந்தன்.

செங்கனே றழக ராடலீ தென்றே யாவருந் தெளிந்தன ரேத்தி
அங்கணு யகர்தங் கருணையின் றிறனு மடியவ ரன்பையுந் தூக்கித்
தங்கணு ரருவி பெருகவா னந்தத் தனிப்பெருஞ் சலதியி லாழ்ந்தார்
வங்கமேல் வந்தாள் பிடர்மிசை யிருந்த மாணிழை விறலியை மன்னன். (சக)

இறக்குவித் தவட்கு முந்தமுத் தார மெரிமணிக் கலன்றுகில் வரிசை
பெறக்கொடுத் தேனையவட்குமுண் மகிழ்ச்சி பெறச்சில வரிசைதந் தவையிற்
சிறக்கவந் தொருங்கு வைகிவா னிழிந்த தெய்வதக் கோயில்புக் கிருந்த
அறக்கொடி யிடஞ்சேர் பெரும்புல வோர்க்கு மருங்கல ஞதிக னல்கா. (சஉ)

வேறு.

மன்னவர் வலிக ளெல்லாந் தெய்வத்தின் வலிமுன் னில்லா
அன்னமா தெய்வஞ் செய்யும் வலியெலா மரண்மூன் றட்ட
முன்னவன் வலிமுன் னில்லா வெனப்பலர் மொழிவ தெல்லாம்
இன்னபாண் மகளிற் காணப் பட்டதென் றிறும்பூ தெய்தா. (சங)

மின்னியல் சடையி ஞனை விடைகொடு வலஞ்செய் தேகி
இன்னிய மியக்கஞ் செய்ய வெழில்கொடன் கோயி லெய்தித்
தொன்னிதி பெற்முன் போலச் சுகுணபாண் டியனைப் பெற்று
மன்னிய மகிழ்ச்சி வீங்க வைகினு னிராச ராசன். (சச)

இசைவாதுவென்றபடல முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - உ,கசுஉ.

நாற்பத்தைந்தாவது

பன்றிக்குட்டிக்குமுலைகொடுத்தபடலம்.

இருளைக்கந் தரத்தில் வைத்தோன் றன்னிடத் தென்று மன்பின்
தெருளைத்தந் தவட்கு மாறுந் தெரிவையை யிசையால் வெல்ல
அருளைத்தந் தளித்த வண்ண மறைந்தனந் தாயாய்ப் பன்றிக்
குருளைக்கு முலைதந் தாவி கொடுத்தவா றெடுத்துச் சொல்வாம். (௧)

முறையென விமையோர் வேண்ட முளைத்தநஞ் சயின்று சான்றாய்
உறையென மிடற்றில் வைத்த வும்பரான் மதுரைக் காரந்
திறையென வெறிநீர் வைகைத் தெற்கது குருவி ருந்த
துறையென வுளதோர் செல்வத் தொன்மணி மாட மூதூர். (௨)

தருநாத னாதி வா[illegible] குரு விருந்து நோற்பக்
குருநாத னெனப்பேர் பெற்றுக் கோதிலா வரந்தந் தேற்றில்
வருநாதன் சித்தி ரத்தேர் வலவனா ருடனே கஞ்சத்
திருநாதன் பரவ வைகி யிருக்குமச் சிறந்த வூரில். (௩)

சுகலனென் றொருவே ளாள னவன்மனை சுகலை யென்பாள்
இகலருங் கற்பி னாள்பன் னிருமகப் பெற்றாள் செல்வப்
புகலருஞ் செருக்கா லன்ன புதல்வரைக் கடியா ராகி
அகலருங் களிப்பு மீதூ ரன்பினால் வளர்க்கு நாளில். (௪)

தந்தையுந் தாயு மாயத் தறுகண்மிக் குடைய ராகி
மைந்தரும் வேட ரோடு கூடிவெங் கானில் வந்து
வெந்தொழில் வேட்டஞ் செய்வார் வெயில்புகாப் புதற்கீ ழெய்தி
ஐந்தவித் திருந்து நோற்குங் குரவனை யங்குக் கண்டார். (௫)

கைத்தலம் புடைத்து நக்குக் கல்லும்வெம் பரலும் வாரி
மெய்த்தவன் மெய்யிற் றாக்க வீசினார் வினையை வெல்லும்
உத்தமன் *விக்கஞ் செய்தார் தவத்தினுக் குவரென் றுன்னிச்
சித்தநொந் தினைய வஞ்சத் தீயரைச் செயிர்த்து நோக்கா. (௬)

தொழுந்தொழின் மறந்து வேடத் தொழிலுழந் துழல்வீர் நீர்மண்
உழுந்தொழி லுடைய நீரறு பன்றியி னுதரத் தெய்திக்
கொழுந்தழ லனைய வேனக் குருளையாய்த் தந்தை தாயை
தல முறுமி னென்னா விட்டனன் கடிய சாபம். (௭)

பாவத்தை யனைய மைந்தர் பன்னிரு பேரு மஞ்சிச்
சாவத்தை யேற்றெப் போது தணிவதிச் சாப மென்ன
ஆவத்தை யகற்று மீச னருட்கழ னினைந்து வந்த
கோவத்தை முனிவு செய்தக் கடவுளர் குரவன் கூறும். (௮)

என்னையா ளுடைய கூட லேகநா யகனே யுங்கட்
கன்னையாய் முலைதந் தாவி யளித்துமே லமைச்ச ராக்கிப்
பின்னையா னந்த வீடு தருமெனப் பெண்ணோர் பாகன்
றன்னையா தரித்தோன் [illegible]ன்னான் பன்னிரு தனயர் தாமும்.

* விக்கினம் என்பது விக்கம் என்றாயிற்று.

தொன்மைசால் குருவி ருந்த துறையதன் புறத்த வான
பன்மைசால் கான வாழ்க்கைப் பன்றிகட் கரசாய் வைகுந்
தன்மைசா றணியே னத்தின் றன்பெடை வயிற்றிற் சென்று
வன்மைசால் குருளை யாகிப் பிறந்தனர் வழக்கான் மன்றோ. (௧௦)

ஆனநா ளொருநா ளெல்லை யரசருக் கரச னான
மீனவன் மதுரை நீங்கி மேற்றிசைக் கான நோக்கி
மானமா வேட்டஞ் செய்வான் மத்தமா வுகைத்துத் தண்டாச்
சேனைதன் புறம்பே மொய்ப்பச் செல்கின்றான் செலவு மெல்லை. (௧௧)

மாவழங் கிடங்க டேர வல்லதோல் வன்கா லொற்றர்
பாவடிச் சுவடு பற்றிப் படர்ந்துநா றழல் புலால்வாய்த்
தீவிழி யுழுவை யேனந் திரிமருப் பிரலை புல்வாய்
மேவிட னறிந்து வல்லே விரைந்துவந் தெதிரே சொன்னார். (௧௨)

மறத்துறை வேட்ட மாக்கள் வல்லைபோ யொடியெ றிந்து*
புறத்துவார் வலைகள் போக்கி நாயதன் புறம்பு போர்ப்ப
நிறைத்துமா வொதுக்கி நீட்டும் படைஞராய் நிரைசூழ் நிற்ப
அறத்துறை மாறாக் கோலா னானைமேல் கொண்டு நிற்ப. (௧௩)

சில்லரித் துடிகோ டெங்குஞ் செவிடுறச் சிலையா நிற்பப்
பல்வகைப் பார்வை காட்டிப் பயில்விளி யிசையா நிற்பர்
வல்லிய மிரலை மையன் மானினம் வெருளா நிற்ப
வில்லிற வலித்து வாங்கி மீளிவெங் கணைக டேர்த்தார். (௧௪)

வேறு.

செறிந்தமான் முறிந்ததாள் சிதைந்தசென்னி செம்புனற்
பறிந்தவாறு வெண்ணிணம் பரிந்துவீசு கையிரு
மறிந்தவே முயர்ந்தவேழ மாண்டவெண்கு வலலியம்
பிறிந்தவாவி யோடும்வாய் பிளந்தவாய் விழுந்தவே. (௧௫)

தொட்டபுற் கிழங்குவாடை தொடவிரைந்து கண்ணியுட்
பட்டவும் பொறித்துவைத்த பார்வைவீழ்ந் தடுத்தவுங்
கட்டியிட்ட வலைபிழைத்து ஞமலிகௌவ நின்றவும்
மட்டிலாத வொட்டிநின்ற மள்ளர்வேலின் மாய்ந்தவே. (௧௬)

பட்டமா வொழிந்துநின்ற மறவிலங்கு பல்சில
வட்டமா வளைந்துடுத்த வலையினுந்தி யப்புறத்
தெட்டிநின்ற கொலைஞர்மே லெதிர்ந்துமீள்வ வெயில்வளைந்
தொட்டிஞரை மலையுமாப் பொறிக்கணங்க ளொத்தவே. (௧௭)

வல்லியந் துளைத்தகன்று மான்பு
கல்லியங்கு மெண்கினைத் துளைத்தகன்று கயவுவாய்
வெல்லிபந் துளைத்துமள்ளர் விட்டவாளி யிங்ஙனஞ்
சொல்லினுங் கடிந்துபோய்த் துணித்தமா வளப்பில. (௧௮)

மடுத்தவாளி யிற்பிழைத்து வலையைமுட்டி யப்புறத்
தடுத்தமானை வௌவிநா யலைத்துநின்ற வாதிநாள்
உடுத்தபாச விண்ணினின்று முய்குவாரை யொய்யெனத்
தடுத்தவா விளைத்துநின்ற தையலாரை யொத்தவே. (௧௯)

---

* ஒடியவெறிந்தென்பது ஒடியெறிந்தெனவிகாரமாயிற்று; காட்டைவெட்டிச் சரித்தென்பது பொருள்.

மதியைநேர் வகிர்ந்துகௌவி யனையவான் மருப்புவெங்
கதியவேழ மீதுதாது காலுநீல முகையினீள்
நுதியவே னுழைந்தசெம்பு ணூழில்வீழு முதிரநீர்
முதியகான வரையின்மீது மொய்த்ததீயை யொத்தவே. (உ0)

மள்ளரோதை துடியினோதை வரியினோதை வாளிபோய்
தள்ளவீழ் விலங்கினோதை தப்பியோடு மானின்மேற்
றுள்ளுநாய் குரைக்குமோதை கானமூடு தொக்குவான்
உள்ளுலா யுடன்றொலிக்கு முருமினோதை புரையுமால். (உக)

இன்னவேறு பல்விலங் கெலாமலைத் திலங்குவேன்
மன்னரேறு தென்னர்கோ மகன்குடாக்கி னேகுவான்
அன்னபோதொ ரேனமேன வரசிருக்கு மடவிவாய்
முன்னரோடி வந்துநின்று வந்தசெய்தி மொழியுமால். (உஉ)

வேறு.

எங்களுக் கரச கேட்டி யிங்குள விருக மெல்லா
இங்களுக் கரசன் கொன்று வருகின்றா னென்று செப்ப
வெங்களிப் படைந்து பன்றி வேந்தனு மடுபோ ராற்றச்
சங்கையுற் றெழுந்து போவான் றனதுயிர்ப் பெடையை நோக்கா. (உங)

இன்றுபாண் டியனை நேரிட் டிருஞ்சம ராடி வென்று
வன்றிறல் வாகையோடு வருகுவ னேயோ வன்றிப்
பொன்றுவ னேயோ நீயுன் புதல்வரைப் பாது காத்து
நன்றிவ ணிருத்தி யென்ன நங்கைப்பே டின்ன கூறும். (உச)

ஆவியங் கேக விந்த வாகமிங் கிருப்ப தேயிப்
பாவியோ மேனு ளிந்தப் பறழினை வகுத்த தெய்வம்
மாவம ராடி வென்று வருதியேல் வருவே னன்றி
நீவிளிந் திடத்து மாய்வே னிழலுக்குஞ் செயல்வே றுண்டோ. (உரு)

போதுக மெழுக வென்னாப் பொருக்கென வெழுந்து நீலத்
தாதுற ழேனப் பாட்டி * தன்புடை தழுவிச் செல்லும்
பேதுறு பறழை நூக்கிப் பின்றொடர்ந் தணைந்து செல்லக்
காதெயிற் றெறுழி வேந்தன் காலென நடந்தா னன்றே. (உசு)

பல்வகைச் சாதி யுள்ள பன்றியின் கணங்க ளெல்லாம்
வெல்படைத் தறுகட் சேனை வீரராய் முன்பு செல்லச்
செல்லெனத் தெழித்துச் செங்கட் டீயுக மான மென்னும்
மல்லல்வாம் புரவி மேல்கொண் டெழுந்தனன் வராக வீரன். (உஎ)

முற்படு தூசி யாக நடக்கின்ற முரட்காற் பன்றி
மற்படு சேனை நேரே வருகின்ற மன்னர் மன்னன்
வெற்படு தடந்தோள் வன்றாள் வீரர்மேற் சீறிச் செல்லப்
பிற்பட வொதுங்கி வீரர் பெய்தன ரப்பு மாரி. (உஅ)

சொரிந்தன சோரி வெள்ளஞ் சொரிந்தன வீழ்ந்த யாக்கை
சரிந்தன குடர்க ளென்பு தகர்ந்தன வழும்பு மூளை
பரிந்தன சேனங் காகம் படர்ந்தன வுயிரு மெய்யும்
பிரிந்தன வேன நின்ற பிறைமருப் பேன வீரர். (உகூ)

---

* ஏனப்பாட்டி - பெண்பன்றி; "பாட்டி யென்பது பன்றியு நாயும்" தொல். பொருள். மரபு. சுஅ.

பதைத்தன ரெரியிற் சீறிப் பஞ்சவன் படைமேற் பாய்ந்து
சிதைத்தனர் சிலரைத் தள்ளிச் செம்புனல் வாயிற் சோர
உதைத்தனர் சிலரை வீட்டி யுரம்புதை படக்கோ டூன்றி
வதைத்தனர் சிலரை நேரே வகிர்ந்தனர் சிலரை மாதோ. (௯0)

தாள்சிதைந் தாருஞ் சில்லோர் தலைசிதைந் தாருஞ் சில்லோர்
தோள்சிதைந் தாருஞ் சில்லோர் தொடைசிதைந் தாருஞ் சில்லோர்
வாள்சிதைந் தாருஞ் சில்லோர் வரையறுத் தலரோன் றீட்டும்
நாள்சிதைந் தாருஞ் சில்லோர் நராதிபன் சேனை வீரர். (௯௧)

கண்டனர் கன்னி நாடு காவல னமைச்சர் சீற்றங்
கொண்டனர் முசல நேமி கூற்றென வீசி யார்த்தார்
விண்டனர் மாண்டார் சேனை வீரரு மனைய வெல்லைப்
புண்டவ ழெயிற்று வேங்கைப் புடைநின்ற பேடை நோக்கா. (௯௨)

ஏவிய சேனை யெல்லா மிறந்தன வினிநாஞ் செய்ய
லாவதென் வாளா நாமு மழிவதிங் கென்னை தப்பிப்
போவதே கருமமென்று புகன்றதத் துணையை நோக்கிச்
சாவதை யஞ்சா வேனத் தனியர சொன்று சாற்றும். (௯௩)

நுண்ணறி வுடைய ராகி நூலொடு பழகி னாலும்
பெண்ணறி வென்ப தெல்லாம் பேதைமைத் தாத லாலுன்
கண்ணறி வுடைமைக் கேற்ற காரிய முரைத்தாய் மானம்
எண்ணறி வுடையோர்க் கெல்லா மிழுக்குடைத் தன்றோ வீதால். (௯௪)

தூங்கிருள் வறுவாய்ச் சிங்க மிரண்டுறை துறையின் மாட்டோர்
வாங்கிரு மருப்புக் கேழல் வந்துநீர் பருகி மீளும்
வீங்கிரு ளுடற்கா ரேன மொன்றுறை துறையில் வீரந்
தாங்கிரு மடங்க னீர்க்குத் தலைப்பட வஞ்சு மன்றே. (௯௫)

அத்திட மரபின் வந்து பிறந்துளே னாத லாலே
கைத்திடு தாரான் வீரங் கவர்ந்திசை திசையும் வானும்
வைத்திட வல்லே னன்றி மடிந்திட வல்லே னாகிற்
பொய்த்திடு முடம்பே யன்றிப் புகழுடம் பழிவ துண்டோ. (௯௬)

வேறு.

நீநில் லெனத்தன் பெடைதன்னை நிறுத்தி நீத்தென்
கானில் லெனவாழ் கருமாவின் கணங்க ளெல்லாம்
ஊனில் லுயிருண் டனமென்றினி யோடல் கூடற்
கோனில் லெனவார்ப் பவனபோலக் கொதித்து நேர்ந்தான். (௯௭)

நிலத்தைக் கிளைத்துப் பிலங்காட்டி நிமிர்ந்த தூள்வான்
றலத்தைப் புதைப்பத் தனியேன வரவு நோக்கி
வலத்தைப் புகழ்ந்தான் வியந்தான் சிலைவாங்கி வாளிக்
குலத்தைச் சொரிந்தான் பொருனைத்துறைக் கொற்கை வேந்தன். (௯௮)

குறித்துச் செழியன் விடுவாளியைக் கோல வேந்தன்
பறித்துச் சிலவாளியை வாய்கொடு பைம்பு லென்னக்
கறித்துச் சிலவாளியைக் கால்கொடு தேய்த்துத் தேய்த்து
முறித்துச் சிலவாளியை வாலின் முறித்து நின்றான். (௯௯)

மானம் பொருது மதியின்வழி வந்த வேந்தன்
தானம் பொருது கவிழ்க்கும்புகர்த் தந்தி கையில்
ஊனம் பொருத முசலங்கொடுத் தேறி யுய்த்தான்
ஏனம் பொருதார்த் திடியேற்றி னெழுந்த தன்றே. (௪0)

தந்திப் பொருப்பைத் துணிக்கென்று தழன்று சீற்றம்
உந்திக் கதலிக் கொழுந்தண்டென வூசற் கையைச்
சிந்திப் பிறைவா ளெயிறோச்சிச் சிதைத்து வீட்ட
முந்திக் கடுந்தேர் மிசைப்பாய்ந்தனன் மூரித் தாரான். (௪௧)

திண்டேர் மிசைநின் றடனேமி திரித்து விட்டான்
கண்டேன வேந்தன் விலக்கிக்கடுங்காலிற் பாய்ந்து
தண்டே ரு[illegible]த் தகர்த்தான்பரி தன்னிற் பாய்ந்து
வண்டேறு [illegible]ன் விடவேலை வலந்தி ரித்தான். (௪௨)

சத்திப் படைமேல் விடுமுன்னர்த் தறுகண் வீரன்
பத்திச் சுடர்மா மணித்தார்ப்பரி மாவின் பின்போய்
மொத்திக் குடர்செம் புனல்சோர முடுகிக் கோட்டாற்
குத்திச் செருத்தான் பொறுத்தானலன் கூடல் வேந்தன். (௪௩)

மண்ணிற் குதித்து வலிகண்டு வராக வேந்தை
எண்ணித் தலையிற் புடைத்தான்கை யிருப்புத் தண்டாற்
புண்ணிற் படுசெம் புனலாறு புடவி போர்ப்ப
விண்ணிற் புகுந்தான் சுடர்கீறி விமான மேலால். (௪௪)

வேனிற் கிழவோனில் விளங்கி வியந்து வானோர்
தேனிற் பொழிபூ மழைபெய்ய நனைந்து தெய்வக்
கானத் தமுதுண் டருகாது களித்து வீர
வானத் தமுதுண் டரமங்கையர் கொங்கை சேர்ந்தான். (௪௫)

வேறு.

பின்றுணை யாய பெடைத்தனி யேனம்
என்றுணை மாய விருப்பது கற்போ
வென்றில னேனும் விசும்படை வேனால்
என்றிகல் வேந்தை யெதிர்த்த துருத்தே. (௪௬)

விறனவில் பேட்டை விளிப்பது வேந்தர்க்
கறனல வென்றவ னுள்வினை மள்ளர்க்
கிறைமக னான சருச்சர னென்றோர்
மறமக னேர்ந்தம ராட வணைந்தான் (௪௭)

நனிபொழு தாடம ராடின னஞ்சிற்
கனிசின வன்பெடை காய்சின வேடத்
தனிமக னைத்தரை வீட்டின தாற்றல்
இனியிலை யென்ன விளைத்துயிர் சோர்வான். (௪௮)

இரும்புசெய் தண்டினை யிம்மென வோங்கிப்
பொரும்பெடை சென்னி புடைத்து விளிந்தான்
விருந்தின ராயிரு வோரும் விமானத்
தருந்திறல் வான மடைந்தன ரன்றே. (௪௯)

வன்றிறன் மன்னவர் மன்னவ னுந்தன்
பொன்றிகழ் மாநகர் புக்கன னிப்பாற்
பன்றி விழுந்து பருப்பத மாகா,
நின்றது பன்றி நெடுங்கிரி யென்ன. (ரு0)

அன்று தொடுத்தத னுக்கது பேராய்
இன்றும் வழங்குவ திம்பரி லந்தக்
குன்றி லருந்தவர் விஞ்சையர் கோபம்
வென்றவ ரெண்ணிலர் வீடுற நோற்பார். (ருக)

வேறு.

என்று கூறிய வருந்தமிழ்க் கிறைவனை நோக்கித்
துன்று மாதவ ரறிவிலாச் சூகர வுருவக்
குன்றின் மீதருந் தவரெலாங் கோதற நோற்று
நின்ற காரணம் யாதெனக் குறுமுனி நிகழ்த்தும் (ருஉ)

வேனில் வேளென விளங்குவிச் சாதர னென்னு
தான யாழ்மகன் புலத்தியன றவத்தினுக் கிடையூ
றான பாண்செயப் பன்றியாச் சபித்தன னறவோன்
ஏன மாகுவோ னுய்வதென் றெனக்கென முனிவன். (ருங)

மன்னர் மன்னனுந் தென்னவன் வந்துநின் வனத்திற்
றுன்னு பல்வகை விலங்கெலாந் தொலைத்துனை மாய்க்கும்
பின்ன ரிவ்வுருப் பெறுகெனப் பணித்தன னியக்கன்
அன்ன வாறுவந் திறந்துபின் பழவுரு வடைந்தான். (ருச)

ஆய புண்ணிய விஞ்சைய னுகமாய்க் கிடந்த
தூய நீரதா லவ்வரை மீமிசைத் துறந்த
பாய கேள்விய ரிறைகொளப் பட்டதெவ் வுயிர்க்கும்
நாய னார்மது ரேசரு நயந்தவ ணுறைவார். (ருரு)

என்ற கத்தியன் விடைகொடுத் தியம்பின னிப்பாற்
பன்றி யேற்றையும் ாட்டியும் பைம்புனத திட்டுச்
சென்ற விந்தபின் பனனிரு குருளையுந் திகைப்புற்
றன்ற லக்கணே யுழந்தமை யாரளந் துரைப்பார். (ருசு)

ஓடு கின்றன தெருமர லுறுவன நிழலைத்
தேடு கின்றன தாய்முலைத் தீயபால் வேட்டு
வாடு கின்றன தாகவெம் பசிநனி வருத்த
வீடு கின்றன வெயில்சுட வெதும்புகின் றனவால். (ருஎ)

இன்ன வாறிவை யணங்குறு மெல்லைவேல் வல்ல
தென்ன ராகிய தேவர்க டேவரங் கயற்கண்
மின்ன ளோடு மின்னவிர் விமானமீ தேறி
அன்ன கானகத் திச்சையா லாடல்செய் திருந்தார். (ருஅ)

ஏன மென்பற ழுறுகணேய்க் கிரங்கின ரிச்சை
ஆன வன்பிதந் தத்துய ரகற்றுவா னின்ற
மான வன்புடைப் பேடையின் வடிவெடுத் தயருங்
கான வன்பறழ் கலங்கனர் கலங்கநேர் வந்தார். (ருகூ)

* பன்றி ஏற்றை-ஆண்பன்றி. "ஏறு மேற்றையு மொருத்தலுங் களிறும் *** யாத்த வாண்பாற் பெயரென மொழிப." தொல். பொருள். மரபு. உ.

கிட்டு கின்றதந் தாயெதிர் குடடியுங் கிட்டி
முட்டு கின்றன மொய்ப்பன முதுகுறத் தாவி
எட்டு கின்றன கால்விசைத் தெறிவன நிலத்தை
வெட்டு கின்றன குதிப்பன வோடுவ மீள்வ. (௬0)

ஏனை மின்னமுங் காண்பரி தாகிய வேனம்
ஆன மெய்ம்மயிர் முகிழ்த்திடத் தழுவிமோந் தருளின்
மான மென்முலை யருத்திமா வலனும்வன் றிறனும்
ஞான மும்பெருந் தகையுநற் குணங்களு நல்கா. (௬௧)

துங்க மாமுக மொன்றுமே சூகர முகமா
அங்கம் யாவையு மானுட யாக்கைய வாக்கிக்
கங்கை நாயகன் கடவுளர் நாயகன் கயற்கண்
மங்கை நாயகன் கருணையாந் திருவுரு மறைந்தான். (௬௨)

இம்மை யிப்பவத் தன்னையா யினிவரு பவமுஞ்
செம்மை செய்தசே தனத்தையுஞ் சேதனஞ் செய்தார்
எம்மை யெப்பவத் தாயினு மெனைப்பல வுயிர்க்கும்
அம்மை யப்பராய்க் காப்பவ ரவரலா லெவரே. (௬௩)

பன்றிக்குட்டிக்குமுலைகொடுத்தபடலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - உ,உ௫௫.

நாற்பத்தாறுவது

பன்றிக்குட்டிகளைமந்திரிகளாக்கியபடலம்.

தந்தை தாயிழந் தலமரு குருளையைத் தாயாய்
வந்து நாயகன் முலைகொடுத் தருளிய வகையீ
தந்த வாறிரு மைந்தரு மந்திர ராகி
எந்தை யார்சிவ புரம்புகுந் திருந்தவா றிசைப்பாம். (௧)

ஆதி நாயகன் றிருவுரு மறைந்தபி னனைய
கோதி லாறிரண் டேனமாக் குமரருங் காலைச்
சோதி யாறிரண் டருக்கர்போற் றோன்றியப் பொருப்பில்
ஓதி யாய்ந்தபல் கலைஞரா யொருங்குவீற் றிருந்தார். (௨)

அனைய ராயவர் வைகுநா ளறைபுனற் கூடற்
புனித நாயக னருட்டிற முயிர்க்கெலாம் பொதுவாய்
இனிய வாவன வென்பதை யாவருந் தேற
வனிதை பான்மொழி மங்கைதன் மணாளனை வினாவும். (௩)

வெவ்வி லங்கினும் வெய்யவா யசேதன விலங்காம்
இவ்வி லங்கெயிற் றேனமென் குருளைகட் கிரங்கிக்
கைவி லங்கினை யெய்தநீ கருணையாய் முலைதந்
திவ்வி லங்கறி வகற்றிய தியாதென விறைவன். (௪)

அகில வேதமு மாகம பேதமு நமமைச
சகலசிவத யாபர னென்றுரை சால்பால்
இகலில் சேதன மசேதன மாகிய விரண்டும்
புகலில் வேறல வெமக்கவை பொதுமைய வீதனால். (௫)

தாயி ழந்துவெம் பசித்தழ லகஞ்சுடத் தழன்று
காயு மாதபம் புறஞ்சுடக் கானிடைக் கிடந்து
தீயு மேனமென் குருளைக டெருமர விரங்கி
ஆயு மாய்முலை யளித்துயி ரளித்தன மதனால். (௬)

அளவி லாற்றலுந் திறனுநல் லரும்பெறற் கல்வி
விளைவு ஞானமுங் கிடைத்தனர் மீனவற் கினிமேல்
வளைவி லாதகோ லமைச்சராய் வலம்பல பெருக்கிக்
களைவில் பாசநீத் தெம்பெருங் கணத்தவ ராவார். (௭)

என்று நாயக னுயகிக் கிறைகொடுத் தியம்பி
அன்று மீனவன் கனவில்வந் தரசகேள் பன்றிக்
குன்றி லேனமா முகத்தராய்ப் பன்னிரு குமரர்
வென்றி வீரராய் வைகுநர் மிக்கறி வுடையார். (௮)

அவரை நின்கடைக் கமைச்சராக் கோடியென் றளவில்
சிவப ரஞ்சுட ரருள்செயச் செழியர்கோ வேந்தன்
கவல ருங்களிப் புடையனாய்க் கண்மலர்ந் தெழுமான்
தவழ் நெடுந்திரைக் கருங்கட றத்திநீந் தெல்லை. (௯)

மாண்ட கேள்விசான் மந்திரர்க் குணர்த்தியம் மலைமேற்
காண்ட கேனமா வீரரைக் கொணர்கெனக் கருணை
பூண்ட காவல னமைச்சரும் போயவர்க் கண்டு
வேண்ட வீரரு மீண்டினார் மீனவன் திருமுன். (௧௦)

வந்தி றைஞ்சிய வராகமா மைந்தரை நேர்கண்
டந்த மில்களிப் படைந்துவேந் தமைச்சியற் கிழமை
தந்து வேறுபல் வரிசையுந் தக்கவா நல்கிக்
கந்து சீறிய கடகரிக் கைதவன் பின்னர். (௧௧)

பழைய மந்திரக் கிழார்மடப் பாவைபோல் வாரை
விழவு சால்கடி மங்கலம் விதியினாற் புணர்த்தி
அழகி தாமென நடத்தினா னனையரும் வீரக்
கழலி னாற்கொரு கவயமுங் கண்ணுமாய் நடப்பார். (௧௨)

வேறு.

உடம்பா திரண்டிற் குயிரொன்றென வொன்றி யைவாய்
விடம்பா யரவம் விழுங்கும்மிரை யொத்து நெஞ்சந்
திடம்பாடு கொள்ள வினைவாங்கிச் செழியன் கல்வி
இடம்பாடு நல்கும் பயன்போன்மகிழ் வெய்த நின்றார். (௧௩)

நல்லாவின் பால னறுந்தேன்கலந் தென்னப் பன்னூல்
வல்லாரு மாகி மதிநுட்பரு மாகிச் சோர்வில்
சொல்லா லுடையார் மனமுங்களி தூங்கச் சொல்லிப்
பல்லார் பிறர்சொற் பயனாய்ந்து கவர வல்லார். (௧௪)

பழையே மிறையுட் கொளப்பட்டமென் றேமாப் பெய்தார்
உழையேவல் செய்யுஞ் சிறுர்போல வொதுங்கி வேந்தன்
விழைவே ததனை விடம்போல வெறுத்து வெஃகார்
அழல்போ லணுகா தகலார்நிழ லன்ன நீரார். (௧௫)

மறுக்குஞ் செயனீத்து நடக்கையின் வையத் தோரை
ஒறுக்கும் பொருளும் பணிகேட்கையி னென்ன லாரைச்
செறுக்கும் பொருளுங் கவரார்வினை செல்வ மாக்கள்
இறுக்கும் பொருளே யிறைவற்கிவ ரீட்டுஞ் செல்வம். (௧௬)

மறத்தாம வேலான் மனக்கொள்கைதந் நெஞ்சுள் வான
நிறத்தாடி நீழ லெனத்தோற்ற நிறுத்து மற்ற
தறத்தா றெனி லாற்றுவ ரன்றெனி லாக்க மாவி
இறத்தான் வரினு மனத்தானு மிழைக்க வெண்ணார். (௧௭)

வேறு.

இன்னவா றொழுகும் பன்னிரு வோரு மீகையுந் தருமமும் புகழுந்
தென்னர்கோ மகற்கு வைகலும் பெருகத் திசையெலாம் விசயமுண் டாக்கிப்
பன்னகா பரணன் சிவபுர மடைந்து பரன்கண நாதருட் கலந்து
மன்னிவீற் றிருந்தார் மன்னர்மன் னவனும் வான்பத மடைந்துவீற் றிருந்தான்.,

பன்றிக்குட்டிகளை மந்திரிகளாக்கியபடலம் முற்றிற்று.

ஆ. திருவிருத்தம் - உ,உ௭௩.

நாற்பத்தேழாவது

கரிக்குருவிக்குபதேசஞ்செய்தபடலம்.

வரிக்குருகிப் பத்திரற்குப் பலகையிட்ட மணிகண்டன்
அரிக்குருளை வடிவான வடல்வீரர்க் கரசன்பார்
பரிக்குமமைச் சியலளித்த பரிசுரைத்தாம் பசுபதிபாற்
கரிக்குருவி குருமொழிகேட் டருளடைந்த கதைபகர்வாம். (௧)

வேறு.

மன்னவ னிராச ராசன் வானவர்க் கரச னான
பின்னவன் குமர னான பெருவலி மடங்க லன்னான்
துன்னல ரடுபோர் சாய்க்குஞ் சுகுணபாண் டியனீர் ஞாலம்
இன்னறீர்த் தறக்கோ லோச்சி யீர்ங்குடை நிழற்று நாளில். (௨)

ஆற்றல்சா லொருவன் மேனா ளாற்றவு மறனே யாற்றி
மாற்றமில் சிறிது பாவஞ் செய்தந்த வலத்தால் வந்து
தேற்றமில் கயவா யாகிச் செனித்தலாற் காக மாதி
கூற்றென வூற்றஞ் செய்யக் குருதிசோர் தலையதாகி. (௩)

புட்கெலா மெளிதா யூறு பாடஞ்சிப் புரத்துள் வைகி
உட்கிநீள் வனத்துட் போகி வழிமருங் கொருசார் நிற்கும்
கட்கவிழ்ந் தொழுகப் பூத்த கவிழிணர் மரமேல் வைகி
வெட்கமீ தூரச் சாம்பி வெய்துயிர்த் திருக்கு மெல்லை.

விடையவனீறு பூசு மெய்யவன் பூண்டகண்டித்
தொடையவன் புறம்பு முள்ளூர் தூயவன் குடையுங் கையில்
உடையவன் றரும தீர்த்த யாத்திரை யொழுக்கம் பூண்ட
நடையவ னொருவ னந்த நறுந்தரு நிழலிற் சார்ந்தான். (௫)

இருந்தவன் சிலரை நோக்கி யியம்புவா னெவர்க்கும் பேறு
தருந்தலந் தீர்த்த மூர்த்தித் தன்மையிற் சிறந்த வன்பு
வருந்தமிழ் மதுரை பொற்று மரைத்தடஞ் சுந்த ரேசப்
பெருந்தகை யென்று சான்றோர் பேசுவ ராத லாலே. (சு)

ஓரிடத் தனைய மூன்று விழுப்பமு முள்ள தாகப்
பாரிடத் தில்லை யேனைப் பதியிடத் தோன்றே யென்றுஞ்
சீருடைத் தாகுங் கூடற் செழுநக ரிடத்தம் மூன்றும்
பேருடைத் தாகு மென்றூற் பிறிதொரு பதியா தென்றான். (எ)

இம்மது ரேசன் சேவித் தேத்துவோர்க் கெளிய னாகிக்
கைம்மலர் நெல்லி போலக் கருதிய வரங்க ளெல்லாம்
இம்மையி னுடனே நல்கு மேனைய தலத்து வானோர்
அம்மையி னன்றி நல்கா ராதலா லதிக னென்றான். (அ)

மற்றது கேட்டுக் கொம்பர் வைகிய கயவாய் ஞானம்
பெற்றது பறவை யாகிப் பிறந்ததும் பிறவுந் தேற்றம்
உற்றது நாமிச் சன்ம மொழிப்பதற் கறவோ னிங்ஙன்
சொற்றதே யுறுதி யென்று துணிவுகொண் டெழுந்த தன்றே. (கூ)

ஆய்மலர்க் கான நீங்கி யாடக மாடக் கூடற்
போய்மலர்க் கனக கஞ்சப் புண்ணியப் புனறோய்ந் தாம்பல்
வாய்மலர்க் கயலுண் கண்ணாண் மணாளனை வலஞ்செய் தன்பிற்
றோய்மலர்க் கழலி னானை யகத்தினாற் றொழுதர்ச் சித்தே. (கo)

இன்னண மூன்று வைகல் கழிந்தபி னெம்பி ராட்டி
தன்னமர் காத லானைத் தாழ்ந்தெதிர் நோக்கி யைய
என்னையிக் கயவாய் செய்யுஞ் செயலிதன் வரவியா தென்ன
முன்னவ னதன்றன் செய்தி வரலெலா முறையாற் கூறா. (கக)

பத்திமை நியமம் பூண்ட பறவைமேற் கருணை நாட்டம்
வைத்திமை யாத முக்கண் மறைமுத லொருசேய்க் கன்று
நித்திய நிலைமை நல்கி நேர்ந்தவெங் கூற்றைக் காய்ந்த
சத்திய ஞான மித்தின் சயத்தினை யுபதே சித்தான். (கஉ)

வேறு.

உவமை யற்றவ னுரைத்த மந்திரஞ்
செவிம டுத்தலுஞ் சிற்று ணர்ச்சிபோய்ப்
பவம கற்றிடப் படுகை ரிக்குரீஇ
கவலை விட்டரன் கழல்வ ழுத்துமால். (கங)

எண்ணி லாவுயிர்க் கிறைவ போற்றிவான்
றண்ணி லாமதிச் சடில போற்றியென்
புண்ணி யப்பயன் போற்றி யங்கயற்
கண்ணி நாதநின் கருணை போற்றியா (கச)

தெளித லின்றியே செய்த தீமையால்
விளியு மென்னையு மாளல் வேண்டுமோ
எளிய ரெங்குளா ரென்று தேர்ந்துதேர்ந்
தளியை யாங்குதன் னருளின் வண்ணமே. (௧௫)

உம்மை நல்லற முடைய நீர்மையால்
இம்மை யிம்மனு வியம்பி னுயிது
அம்மை நன்னெறிக் கேது வாதலான்
மும்மை யுந்நல முடைய மொய்ம்பினேன். (௧௬)

ஆயி னும்மெனக் கைய வோர்குறை
தீய புள்ளெலா மூறு செய்தெனைக்
காயு மானமுங் கழியக் கண்டபேர்
ஏயெ னும்படிக் கெளிய னுயினேன். (௧௭)

என்ன வக்குரீஇ யியம்ப வெம்பிரான்
அன்ன புட்கெலாம் வலியை யாகெனப்
பின்னு மக்குரீஇ தாழ்ந்து பேதையேற்
கின்னு மோர்வரந் தருதி யென்றதால். (௧௮)

வலியை யென்பதென் மரபி னுக்கெலாம்
பொலிய வேண்டுமெப் போது நீசொன
ஒலிய மந்திர மோதி யோதிநாங்
கலியை வெல்லவுங் கருணை செய்கென. (௧௯)

ஆவ தாகவென் றமரர் நாயகன்
மூவெ ழூத்தினுன் முடிந்த வம்மனு
தாவி றெய்வத மிருடி சந்தமோ
டோவி லோசைமூன் றுடுதெ ருட்டினுன். (௨௦)

வேறு.

குருமொழி பயின்று முள்வாய்க் குருவிதன் குலனுந் தன்போல்
அருமறை முதல்வ ளீந்த வாற்றலாற் பறவைக் கெல்லாம்
பெருமைசால் வலியா னென்னும் பெயரவா யுலகின் மன்னக்
கருமணி கண்டன் செம்பொற் கனைகழ லடிசேர்ந் தன்றே. (௨௧)

இக்கரிக் குருவி தானேற் றெய்திய வரத்தைத் தன்போல்
ஒக்கவு மெளிதா வெய்தப் பெற்றதா லுலகின் மேன்மை
தக்கவ னொருவன் வாழத் தன்கிளை வாழ்வ தென்ன
மிக்கவ ரெடுத்துக் கூறும் பழமொழி விளக்கிற் றன்றே. (௨௨)

வேறு.

ஈச னடிக்கன் பில்லார்போ லெளியா ரில்லை யாவர்க்கும்
ஈச னடிக்கன் புடையார்போல் வலியா ரில்லை யாவர்க்கும்
ஈச னடிக்கன் பின்மையினு லெளிதாய்த் திரிந்த விக்கயவாய்
ஈச னடிக்கன் புடைமையினுல் வலிதா யிற்றே யெவ்வுயிர்க்கும். (௨௩)

கரிக்குருவிக்குபதேசஞ்செய்தபடல முற்றிற்று.

ஆ. திருவிருத்தம் - உ,உ௯௬.

நாற்பத்தெட்டாவது

நாரைக்குமுத்திகொடுத்தபடலம்.

அத்தி தீர்ந்த விமான மழகியார்
பத்தி தந்த பறவைக்கு மந்திர
சித்தி தந்த திறனிது நாரைக்கு
முத்தி தந்த கருணை மொழிகுவாம். (௧)

தேக்கு நீர்வையை நாட்டொரு தென்புலத்
தாக்கு மாடவைப் பொன்றுள தவ்வயின்
வீக்கும் யாழ்செயும் வண்டுக்கு வீழ்நற
வாக்கு தாமரை வாவியொன் றுள்ளதால். (௨)

ஆழ மிக்க கயந்தலை யத்தலை
வாழு மீன மனைத்தையும் வாய்ப்பெய்து
சூழ நந்துமுத் தீனுந் துறைக்கணே
தாழ்வ தோர்செய்ய தாண்மட நாரையே. (௩)

சிறிய நாண்மழை யின்றியச் சேயிதழ்
வெறிய தாமரை யோடை வியன்கரை
இறைகொ ளுறை யிருவினைப் பௌவமும்
வறிய தாகி வறப்ப வறந்ததால். (௪)

நுரைசெ றித்தன நோன்சிறை நாரையும்
இரைவி ரும்பியவ் வாவி யிகந்தொரீஇ
விரைய வந்தொரு காணிடை வீழ்ந்ததாற்
புரையி லோர்க்கிட னாகுமப் பொங்கர்வாய். (௫)

முத்த ரான முனிவர் குழாத்தொடுஞ்
சுத்த வானந்த வாரியுட் டோய்ந்துதன்
சித்த மாசு கழீஇச்சிவ மாகிய
சத்தி யத்தவ மாமுனி தங்குமால். (௬)

கூப்பி டெல்லை குணித்துச் சதுரமா
யாப்ப மைந்துசுற் றெங்கும் படித்துறைக்
கோப்ப மைந்து குளிர்சந்தி யாமடங்
காப்ப மைந்தோர் கயந்தலை யுள்ளதால். (௭)

விரைசெய் சண்பகம் பாதிரி வேங்கைதேன்
இரைசெய் வஞ்சி யிலஞ்சி குராமரா
நிரைசெய் கிஞ்சுக நீண்மரு தாதியா
உரைசெய் பன்மர மும்புறத் துள்ளவால். (௮)

அந்த வாவியின் பேரதோ தீர்த்தமென்
றிந்த ஞால மியம்புவ தாலிரை
முந்த வாவு முடுக்க வெழுந்துமுன்
வந்த நாரை யதன்கரை வைகுமால். (௯)

ஆய்ந்த மாதவ ரப்புனி தத்தடந்
தோய்ந்து தோய்ந்தங் கெழுந்தொறுந் தோட்புறஞ்
சாய்ந்த வார்சடைக் கற்றையிற் றத்துமீன்
பாய்ந்து பாய்ந்து புரள்வன பார்த்தரோ. *(க0)

ஈண்டை யித்தவத் தோர்திரு மேனியைத்
தீண்ட வெத்தவஞ் செய்தன வேகொலென
ரூண்டை மீனமக் காகா வெனவிரை
வேண்டு நாரை வெறுத்தங் கிறுத்ததால். (கக)

வேறு.

தன்னிகர் தவத்தோர் யாருந் தடம்படிந் தேறி நித்த
மன்னிய கரும முற்றிச் சந்நிதி மடத்தில் வைகி
மின்னிய மகுடஞ் சூடி வேந்தனு யுலகங் காதத
பொன்னியற் சடையான் கூடற் புராணநூ லோது கின்றார். (கஉ)

அண்ணலெம பெருமான் செய்த வருள்விளை யாட்டு மாதிப்
பண்ணவன் சிறப்புங் கூடற் பழம்பதிச் சிறப்புந் தீர்த்தத்
தெண்ணருஞ் சிறப்புஞ் சேர்ந்தோர்க் கெளிவரு மிறைவ னென்னும்
வண்ணமு மெடுத்துக் கூறக் கேட்டஙகு வதியு நாரை. (கரு)

மடம்படு மறிவு நீங்கி வல்வினைப் பாசம் வீசித்
திடம்படு மறிவு கூர்ந்து சிவபரஞ் சோதி பாதத்
திடம்படு மன்பு வாவென் றீர்த்தெழ வெழுந்து நாரை
தடம்படு மாடக் கூடற் றனிநக ரடைந்து மாதோ. (கச)

வாங்கிய துரைசூழ் பொற்று மரைபடிந் திமையா வேழந்
தாங்கிய விமான மேய தலைவனைத் தாழ்ந்து சூழ்ந்து
தேங்கிய வருட்க ணோக்கத் தெரிசித்துத் திருமுன் வைகி
ஓங்கிய கருணை மேனி யுள்ளுறத் தியானஞ் செய்து. (கரு)

இங்கிலை நியம மூவைந் தெல்லைஞான் றியன்று பின்னுள்
அங்கிலை யொழுகு நாரை யாடக கமலந் தோய்வான்
வன்னிலை மதில்சூழ் ஞாங்கர் வந்துழிப் பசியால் வெந்து
மின்னிலை வேல்போற் றுள்ளு மீன்கவர்ந் துணரு மென்னு. (கசு)

சிறிதுளத் துள்ளி நாதன் றிருவருள் வலத்தாற் பின்னர்
அறிவுவந் தச்சோ விந்த வறப்பெருந் தீர்த்தத் துள்ளே
எறியுமீ னருந்த வாசை யெழுந்ததே யெனக்கிப் போதிப்
பிறவியென் றொழிவ தென்னுப் பேரஞ ரடைந்து பின்னும். (கள)

சுந்தரச் செம்மல் பாதத் துணைமல ரன்பிற் றோய்ந்து
சிந்தைவைத் திருக்கு மெல்லை தேவரு மறையுஞ் செய்யும்
வந்தனைக் கரியா னுரை மணநினை வடிவாய்த் தோன்றி
எந்தமக் கினியாய் வேண்டும் வரமென்கொ லியம்பு கென்றான். (கஅ)

வேறு.

செய்ய கான்மட நாரையுஞ் சென்றுதாழ்ந்
தைய னேயிப் பிறவி யறுத்துநின்
மெய்யர் வாழ்சிவ லோகத்தின் மேவிநான்
உய்ய வேண்டுமொன் றின்னமு முண்டரோ. (கக)

வள்ள லென்மர புள்ளவு மற்றைய
புள்ளு மிந்தப் புனித மலர்த்தடத்
துள்ள மீனுயி ருண்ணினெக் காலமுந்
தள்ளொ ணாத பழிவந்து சாருமே. (௨0)

என்று மித்திட மீனில வாகநீ
நன்று சால்வர நல்கென வெள்ளிமா
மன்று ளானும் வரந்தந்து போயினான்
சென்று நாரை சிவலோகஞ் சேர்ந்ததால். (௨௧)

இயங்க ளோந்து மியம்ப விமானமேற்
புயங்க ளான்குழுக் கண்களும் பொற்பவான்
வியங்கொள் பூமழை வெள்ளத்து ளாழ்ந்துபோய்
வயங்கொ ணந்தி கணத்துள் வதிந்ததே. (௨௨)

அன்று தொட்டின நளவும்பொற் றாமரை
என்று ரைக்கு மெழின்மல ரோடையிற்
சென்று கைத்துத் திரிகின்ற மீனலால்
ஒன்று மற்றன நீர்வா ழுயிர்களும். (௨௩)

வேறு.

தன்கிளை யன்றி வேற்றுப் பறவைக ளாமுந் தன்போல்
நன்கதி யடைய வேண்டிற் றேகொலிந் நாரை செய்த
அன்பினில் வியப்போ வீச னருளினில் வியப்போ வன்பர்க்
கின்புரு வான வீச னன்பருக் கெளிதே தைய. (௨௪)

வேறு.

மறக்கு றும்புக் களைகட்டு மண்ணின்மேல்
அறப்பெ ரும்பயி ராக்கிய தன்பயன்
சிறக்க நல்கிட வுண்டு செருக்குவான்
துறக்க மெய்தி யிருந்தான் சுகுணனும். (௨௫)

நாரைக்குமுத்திகொடுத்தபடல முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௨,௩௨௧.

கூடற்காண்டமுற்றிற்று.

மூன்றாவது

திருவாலவாய்க்காண்டம்.

நாற்பத்தொன்பதாவது

திருவாலவாயானபடலம்.

பாயுடையார் விடுத்தபழி யழல்வழுதி யுடல்குளிப்பப் பதிக மோதுஞ்
சேயுடையா ரணந்திளைக்குஞ் செவியுடையா ரளவிறந்த திசைக ளெட்டுந்
தோயுடையார் பொன்னிதழித் தொடையுடையார் விடவரவஞ் சுற்று மால
வாயுடையார் புகழ்பாடப் பெறுவேமேல் வேண்டுவதிம் மனித யாக்கை. (௧)

வேதனெடு மாலாதி விண்ணாடர் மண்ணாடர் விரத யோகர்
மாதவர்யா வருங்காண மணிமுறுவல் சிறிதரும்பி மாடக் கூடல்
நாதனிரு திருக்கரந்தொட் டும்மியின்மேல் வைத்தகய னாட்டச் செல்வி
பாதமல ரெழுபிறவிக் கடலீர்தும் புணையென்பர் பற்றி லாதோர். (௨)

வேறு.

ஓலவாய மறைக டேறு வொருவன்றன் னுலகந் தன்னைச்
சேலவா யுழலு நாரைக் கருளிய செயலீ தம்ம
லவாய் மணிநேர் கண்ட னெடியநான் மாடக் கூடல்
அலவா யாகச் செய்த வருட்டிற மெடுத்துச் சொல்வாம். (௩)

சித்திர மேரு வென்ற திரண்டதோட் சுகுணன் பின்பு
சித்திர விரதன் சித்ர பூடணன் றிண்டோர் வல்ல
சித்திர துவசன் வென்றிச் சித்திர வருமன் வன்றோட்
சித்திர சேனன் சீர்சால் சித்ரவிக் கிரம னென்போன். (௪)

மணிகெழு தேரி ராச மார்த்தாண்ட னிராச சூடா
மணியணி முடியி ராச சார்த்தூல வழுதி சிந்தா
மணிநிகர் துவிச ராச குலோத்தமன் மடங்கா வென்றி
மணிதிகழ் பொலம்பூ ணாயோ தனப்பிர வீணன் மன்றோ. (௫)

இயம்பருந் திறலி ராச குஞ்சரன் பரவி ராச
பயங்கரன் கைக்கும் பைந்தா ருக்கிர சேனன் பாரைச்
சயங்கெழு தோண்மே லேந்து சத்துருஞ் சயன்வீ மத்தேர்
வயங்கெழு மன்னன் வீம பராக்ரம வழுதி மாதோ. (௬)

பெய்வளை விந்தை சேர்ந்த பிரதாப மார்த்தாண் டப்பேர்த்
தெவ்வடு சிலையான் றேர்விக் கிரமகஞ் சுகன்றே ரார்போர்
வெளவிய சமர கோலா கலனெனும் வாகை வேலான்
அவ்விய மவித்த சிந்தை யதுலவிக் கிரம னென்போன். (௭)

எழில்புனை யதுல கீர்த்தி யெனவிரு பத்தி ரண்டு
வழிவழி மைந்த ராகி வையகங் காத்த வேந்தர்
பழிதவி ரதுல கீர்த்தி பாண்டியன் றன்பா லின்பம்
'பொழிதர வுதித்த கீர்த்தி பூடணன் புரக்கு நாளில். (அ)

கருங்கட' லேழுஞ் ஞாயிற் கரைகடந் தார்த்துப் பொங்கி
ஒருங்கெழுந் துருத்துச் சீறி யும்பரோ டிம்ப ரெட்டுப்
பொருங்கட கரியு மெட்டுப் பொன்னெடுங் கிரியு நேமிப்
பெருங்கடி வரையும் பேரப் பிரளயங் கோத்த தன்றே. (கூ)

அப்பெருஞ் சலதி வெள்ளத் தழிந்தன வழிவி லாத
எப்பெரும் பொழிலு மேழு தீபமு மிவற்றுட் டங்கி
நிற்பன செல்வ வாளா திணைகளு நீண்ட சென்னிப்
பர்ப்பத வகையு மீறு பட்டன வாக வங்கண். (க0)

தேனிழி குதலைத் தீஞ்சொற் சேனெடுங் கண்ணி கோயில
வானிழி விமானம் பொற்றா மரைவிளை யாட்டின் வந்த
தானிழி யிடபக் குன்றங் கரிவரை நாகக் குன்றம்
மானிழி வரைவ ராக வரைமுத லழிவி லாத. (கக)

வெள்ளநீர் வறப்ப வாதி வேதியன் ஞால முன்போல்
உள்ளவா றுதிப்ப நல்கி யும்பரோ டிம்ப ரேனைப்
புள்ளொடு விலங்கு நல்கிக் கதிருடற் புத்தேண் மூவர்
தள்ளரு மரபின் முன்போற் றமிழ்வேந்தர் தமையுந் தந்தான். (கஉ)

வேறு.

அங்கியை மதிமர பென்னு மாழியுட்
டங்கிய கலையனான் கிரட்டி தன்னொடும்
பொங்கிய நிலாமதி போலத் தோன்றினான்
வங்கிய சேகர வழுதி மன்னனே. (கங)

தாளணி கழலினான் றங்க னாயகன்
கோளணி புரிசைசூழ் கோயில் சூழவோர்
வாளணி கடிநகர் சிறிது வைகவைத்
தாளரி யேறென வவனி காக்குநாள். (கச)

செய்யகோன் மனுவழி செலுத்து நீர்மையாற்
பொய்கெழு கலிப்பகை புறந்தந் தோடத்தன்
வையகம் பல்வளஞ் சுரப்ப வைகலும்
மெய்கெழு மன்பதை மிக்க வாலரோ. (கரு)

பல்குறு மானுடப் பரப்பெ லாமொருங்
கல்குற விடங்குறை வாக வாய்மதுப்
பில்குறு தாரினான் பிறைமு டித்தவன்
மல்குறு கோயிலின் மருங்க ரெய்தினான். (கசு)

கறையணி கண்டனைத் தாழ்ந்து கைதொழு
திறையவ நின்னருள் வலியி னிந்நிலப்
பொறையது வாற்றுவேற் கீண்டிப் போதொரு
குறையதுண் டாயின தென்று கூறுவான். (கஎ)

இத்தனை மாக்களு மிருக்கத் தக்கதாப்
பத்தனங் காணவிப் பதிக்க ணுதியே
வைத்தறை செய்திடும் வரம்பு காண்கிலேன்
அத்தீமற் றதனைநின் றறியக் காட்டென்றான். (௧௮)

நண்ணிய பொருளினு நண்ணிதா யவர்
விண்ணிழி விமானநின் றெழுந்து மீனவன்
றிண்ணிய வன்பினுக் கெளிய சித்தராய்ப்
புண்ணிய வருட்கட லாகிப் போதுவார். (௧௯)

வே று.

பாம்பி னற்கடி சூத்திரங் கோவணம் பசுந்தாட்
பாம்பி னற்புரி நூல்சன்ன வீரம் † வெம் பகுவாய்ப்
பாம்பி னற்* குண்டலம் பாதகிங் கிணிநாண்
பாம்பி னற்கர கங்கணம் பரித்தனர் வந்தார். (௨௰)

வந்த யோகர்மா மண்டப மருங்குநின் றங்கைப்
பந்த வாலவா யரவினைப் பார்த்துநீ யிவனுக்
கிந்த மாநக ரெல்லையை யளந்துகாட் டென்றார்
அந்த வாளரா வடிபணிந் தடிகளை வேண்டும். (௨௧)

பெரும விந்நக ரடியனேன் பெயரினால் விளங்கக்
கருணை செய்தியென் றிரந்திடக் கருணையங் கடலும்
அருண யீந்துநேர்ந் தீனையதே யாகெனப் பணித்தான்
உருகெ ழுஞ்செல வுரகமு மொல்லெனச் செல்லா. (௨௨)

கிட்டி சைத்தலைச் சென்றுதன் கேழ்கிளர் வாலை
நீட்டி மாநகர் வலம்பட நிலம்படிந் துடலைக்
கோட்டி வாலைவாய் வைத்துவேற் கொற்றவற் கெல்லை
காட்டி மீண்டரன் கங்கண மானது கரத்தில். (௨௩)

சித்தர் தஞ்சின கரத்தெழுந் தருளினார் செழியன்
பைத்த வாலவாய் கோலிய படிசுவ டெடுத்துச்
சுத்த நேமிமால் வரையினைத் தொட்டகழ்ந் தெடுத்து
வைத்த தாமென வகுத்தனன் மஞ்சுசூ ழிஞ்சி. (௨௪)

தென்றி சைப்பரங் குன்றமும் வடதிசை யிடபக்
குன்ற முங்குடக் கேடக நகரமுங் குணபாற்
பொன்ற லங்கிழித் தெழுபொழிற் பூவண நகரும்
என்று நாற்பெரு வாயில்கட் கெல்லையா வகுத்தான். (௨௫)

அனைய நீண்மதி லாலவாய் மதிலென வறைவர்
வனைய வார்பொழி னகரமு மாலவாய் நாமம்
புனைய லாயதெப் போதுமப் பொன்னகர் தன்னைக்
கனைய வார்கழற் காவினன் பண்டுபோற் கண்டான். (௨௬)

---

* பசுமை - இன்மை. இதனை "பச்சைத்தாளரவாட்டீ" என்னும் திருவாசகத்தானுமுணர்க.

† சன்னவீரம் - முத்தினாலும் ஏனைமணிகளினாலும் தொடுக்கப்பட்டு மாறி அணிவது.

கொடிகொ ணீண்மதின் மண்டபங் கோபுரம் வீதி
கடிகொள் பூம்பொழி லின்னவும் புதியவாக் கண்டு
நெடிய கோளகை கிரீடம்வா ணிழன்மணி யாற்செய்
தடிகள் சாத்திய கலன்களும் வேறுவே றமைத்தான். (௨௭)

பல்வு கைப்பெருங் குடிகளும் பரிப்பெலா நிரப்பிச்
செல்வ வானவர் புரந்தரன் புரத்தினுஞ் சிறப்ப
மல்லன் மாநகர் பெருவளந் துளும்பிட வளர்த்தான்
தொல்லை நாட்குல சேகரன் போல்வரு தோன்றல். (௨௮)

திருவாலவாயானபடல முற்றிற்று.

ஆக திருவிருத்தம் - ௨,௩௪௧.

ா வது

சுந்தரப்பெயரம்பெய்தபடலம்.

அங்கண ருரக மணிந்தருள் வடிவ மடைந்தர சகமகிழக்
கங்கண விடவர வங்கொடு கடிநகர் கண்டருண் முறையிதுவாஞ்
சங்கணி குழையினர் பஞ்சவன் வழிபடு தம்பெய ரெழுதியகூர்
வெங்கணை கொடுவள வன்படை முடுகிய வென்றியை யினிமொழிவாம். (௧)

வெங்கய னீள்கொடி வங்கிய சேகரன் வெண்குடை நீழலின்வாய்
வங்கமு லாவிய தெண்கடன் ஞால மடந்தையு மாசறுசீர்ச்
செங்கம லாலய மங்கையும் வாலிய திண்பது மாலயமேல்
நங்கையு மோவற மங்கல மான நயம்பெற வாழ்வுறுநாள். (௨)

வேழ மறப்படை சூழ வெதிர்த்தவர் வீறு கெடுத்தடியிற்
றாழ வடர்த்திகல் வாகை தொடுத்தலர் தார்புனை விக்கிரமச்
சோழன் மதிக்குல நாயக னைப்பொரு சூள்கரு தித்தொலையா
ஆழ்கட லுக்கிணை யாமணி கத்தொடு மாடம ருக்கெழுவான். (௩)

கயபதி காய்சின நரபதி பாய்துர கதபதி யேமுதலா
வயமிகு தோள்வட திசையின ராதிபர் வலிகெழு சேனையினோ
டியமிடி யேறிமி ழிசையென வாய்விட விரதம தேறிநடாஅய்ப்
பயன்மலி காவிரி நதியரு கேயுறை பதிகொடு மேயினனால். (௪)

சிலைத்தெழு செம்பியன் வெம்படை மள்ளர் செயிர்த்து மதிக்கடவுட்
குலத்தவ னாட்டினி ருந்தெழி லானிரை கொண்டு குறும்புசெய்து
மலர்த்தட மேரி யுடைத்து நகர்க்கு வரும்பல பண்டமுமா
றலைத்து முடுக்கி நடுக்கம் விளைத்து மமர்க்கடி யிட்டனரால். (௫)

மாற னறிந்தினி யென்செய்து நேரியன் வன்படை யோவளவின்
றேறி யெதிர்ந்தம ராடி னெனக்கரி திக்குறையைப் பிறையோ
டாறணி பூரண சுந்தர னெந்தை யடித்தல முன்குறுகாக்
[illegible]றியி ரந்து வரம்பெறு கென்றிறை கோயி லடைந்தனனால். (௬)

---

* சாத்திய - வினையெச்சம்.

அடைந்து பணிந்தரு ணாயக னேயடியே னொடு விக்கிரமன்
தொடர்ந்தம ராட வயற்புல மன்னவர் தொகையொடு பாசறைவாய்ப்
படர்ந்திறை கொண்டன னேபொர வார்த்த பதாதி யெனக்கிலையே
மிடைந்து வருமிபடை மிக்க விடத்தவன் வேறுள தோவிறைவா. (எ)

என்னை யினிச்செயு மாறென மாற னிரந்து மொழிந்திடலும்
முன்னவன் வானிடை நின்றச ரீரி மொழிந்தருள் வான்முதனீ
அன்னவ னோடம ராடபி னாமு மடைந்தத வித்துணையாய்
நின்னது வாகை யெனப்பொரு கின்றன நீயினி யஞ்சலெனா. (அ)

சிந்தை களித்திரு கண்க டுளித்திரு செங்கை குவித்திறைவன்
அந்தி மதிச்சடை யந்தண னைத்தொழு தன்று புறப்படமுன்
வந்தன னொற்றுவ னுந்தி வரைக்கயல் வந்தது விக்கிரமன்
வெந்தறு கட்படை யென்றர சற்கு விளம்பின னப்பொழுதே. (கூ)

அரச னியம்பல வதிர வலம்புரி யலற வலங்குழைமான்
இரத மணைந்திட விசைகொடு சிந்தையி னிடவல வன்கடவப்
புரசை நெடுங்கரி திரையெறி யுங்கடல் பொருபரி விண்டொடுதேர்
விரைசெய் நறுந்தொடை விருதர்க ணம்புடை விரவ நடந்தனனால். (கo)

வேறு.

அளந்து சூழ்திரு வால வாய்மதி லின்பு றத்தக ழாழிபோல்
வளைந்த சோழ னெடும்ப டைக்கெதிர் வஞ்சி வேய்ந்தெழு பஞ்சவன்
கிளர்ந்த சேனை யுதிர்ந்து கிட்டின கிட்டி யவ்விரு படைஞரும்
களஞ்சி றந்திட வஞ்சி னங்கொடு கைவ குத்தமர் செய்வரால். (கக)

சைய மொத்தெழு தேரி னாரொடு சைய மொத்தெழு தேரரும்
மையன் மைக்கரி வீர ரோடெதிர் மையன் மைக்கரி வீரருங்
கொய்யு ளைப்பரி வயவ ரோடிகல் கொய்யு ளைப்பரி வயவருங்
கைய முற்படை வீசி மின்விடு காரெ னப்பொரு வாரரோ. (கஉ)

முடங்கு வெஞ்சிலை வில்ல ரோடு முடங்கு வெஞ்சிலை வில்லரும்
விடங்க லுழ்ந்திடு வேல ரோடு விடங்க லுழ்ந்திடு வேலரும்
இடங்கை தோல்வல வாள ரோடு மிடங்கை தோல்வல வாளரும்
மடங்க லேறு மடங்க லேறு மலைப்ப தென்ன மலைப்பரால். (கங)

அரவி னன்னில மம்பு யம்பொறை யாற்று மீனவ னாற்றல்கூர்
புரவி யின்னிரை வைய மேல்கொடு போந்த நேரியர் வேந்தனோர்
விரவி மின்னிய முரசி யம்ப மிடைந்து வெஞ்சம ராடுமா
றிரவி தன்னொடு மதிய வன்பொர வேகி னானிக ராகுமால். (கச)

துள்ளு மாவொலி தான யாறு துளும்பு மாவொலி தூண்டுதேர்
தள்ளு மாவொலி படையொ டும்படை தாக்கு மாவொலி பொருநரார்த்
தெள்ளு மாவொலி மள்ளர் பைங்கழ லேங்கு மாவொலி வீங்கியத்
தெள்ளு மாவொலி வேறு பாடு திரிந்து கல்லென லாயதே. (கரு)

அடித்த வாளர வென்ன வீசிய தூங்கு கையின வீங்குநீர்
குடித்த காரொடு கார்ம லைந்திடு கொள்கை போல வுடன்றுடன்
றிடித்த வாயின வசனி யேறி னிருப்பு லக்கை யெடுத்தெறிந்
தடித்த சோரியொ டாவி சோர விழுந்த வெஞ்சின வானையே. (கசா)

எய்த வாளி விலக்கு வார்பிறி தெய்யும் வாளித மார்புதோள்
செய்த போதவ ராண்மை கண்டு சிரித்து வென்றி வியப்பரால
வைத வாவடி வேலெ றிந்திட வருவ தைக்குறி வழியினூற்
கொய்த தார்மற வாளெ றிந்து குறைத்து வேறு படுத்துவார். (௧௭)

பின்னி டாதிரு படையு மொத்தம ராடு மெல்லை பெரும்படைச்
சென்னி தன்றுணை யான் வுத்தர தேய மன்னவர் படையொடுந்
துன்னி ஞால முடிக்கு நாளெழு சூறை தள்ள வதிர்ந்தெழும்
வன்னி யென்ன வுடன்றெ திர்ந்தனன் வழுதி சேனை யுடைந்ததே. (௧௮)

மின்ன லங்கிலை வாளொ டுஞ்சிலை வில்வி ழுந்தனர் வீரரே
பன்ன லம்புனை தேரொ டுங்கரி பரியி ழுந்தனர் பாகரே
தென்ன வன்பொரு வலி யிழந்தன னென்று செம்பியன் வாகையுந்
தன்ன தென்று தருக்கு மேல்கொடு சங்கெ டுத்து முழக்கினான். (௧௯)

அந்த வேலையின் முன்ன ருந்தம தருளெ னக்குளிர் கடிபுனற்
பந்தர் நீழ லளித்து மோடை படுத்தி யும்பகை சாயவே
வந்த வேடர வண்ண மேயொரு மான வேடர சாய்வலஞ்
சிந்த வாகுல மூழ்கு மீனவர் சேனை காவல ராயினார். (௨0)

வேறு.

குன்றவில் வேடன் சாபங் குழைவித்துச் சுந்த ரேசன்
என்றதன் னாமந் தீட்டி யிட்டகூர்ங் கணைக டேண்டி
வென்றன மென்று வாகை மிலைந்துவெண் சங்க மார்த்து
நின்றவன் சேனை மீது நெறிப்படச் செலுத்தா நின்றான். (௨௧)

அம்முனை வாளி யொவ்வொன் றடல்புனை நூறு நூறு
தெம்முனை வீரர் தம்மைச் செகுத்துயி ருண்ண நோக்கி
இம்முனை வாளி யொன்றுக் கித்துணை வலியா தென்னா
வெம்முனை மறவேற் சென்னி வியந்தநு மான மெய்தா. (௨௨)

அன்னகூர் வாளி தன்னைக் கொணர்கென வதனை வாசித்
தின்னது சுந்த ரேச னெனவரைந் திருப்ப தீது
தென்னவற் கால வாயான் றுணைசெய்த செயலென் றஞ்சிப்
பொன்னிநா டுடையான் மீண்டு போகுவான் போகு வானை. (௨௩)

செருத்துணை யாகி வந்த வுத்தர தேயத் துள்ளார்
தருக்கரொட் டியர்வே றுள்ளார் யாவருஞ் சூழ்ந்து நில்லென்
றுருத்தனர் வைது நீபோர்க் குடைந்தனை போதி யீதுன்
கருத்தெனி னாண்மை யாவர் கண்ணது மான மென்னும். (௨௪)

செல்லலை வருதி யென்னாச் செயிர்த்தெழுந் திடியி னார்த்துக்
கல்லெழு வனைய திண்டோட் கௌரியன படைமேற் சென்று
வில்லிற வலித்து வாங்கி வேறுவே றாகிநின் று
சொல்லினுங் கடிய வாளி தொடுத்தனர் விடுத்தார் தூர்த்தார். (௨௫)

வடுத்தவா மருமச் செம்புண் மறமக னாகி நின்ற
கடுத்தவா மிடற்று முக்கட் கண்ணுதற் சாமி தான்முன்
எடுத்தவா டகவி லன்ன விருஞ்சிலை வாளி யொன்று
தொடுத்தவா டவர்தாம் விட்ட சுடுசரந் தொலைத்துப் பின்னும். (௨௬)

---

* தோள் - முதனிலைத் தொழிற்பெயர்; துளைத்தல் என்பது பொருள்.

பத்தம்பு தொடுத்து நூற்றுப் பத்துமான் றேரைச் சாய்த்தான்
பத்தம்பு தொடுத்து நூற்றுப் பத்துவெங் களிற்றை மாய்த்தான்
பத்தம்பு தொடுத்து நூற்றுப் பத்துவரும் பரியைக் கொன்றான்
பத்தம்பு தொடுத்து நூற்றுப் பத்துமா னுடரை வென்றான். (௨௭)

நூறம்பு தொடுத்து நூறு நூறுவெம் பரிமே லெய்தான்
நூறம்பு தொடுத்து நூறு நூறுவெங் கரிமேற் பெய்தான்
நூறம்பு தொடுத்து நூறு நூறுதேர் சிதைய விட்டான்
நூறம்பு தொடுத்து நூறு நூறுசே வகரை யட்டான். (௨௮)

ஆயிரம் வாளி யானா றாயிரம் பரியைக் கொன்றான்
ஆயிரம் வாளி யானா றாயிரங் கரியை வென்றான்
ஆயிரம் வாளி யானா றாயிரந் தேரைச் சாய்த்தான்
ஆயிரம் வாளி யானா றாயிரம் பேரைத் தேய்த்தான். (௨௯)

தடிந்தன தோளுந் தாளுந் தகர்ந்தன சென்னி மண்ணே
படிந்தன மடிந்தோர் யாக்கை பரிந்தன தும்பைத் தாமம்
மடிந்தன மையல் யானை மாண்டன தாண்டும் பாய்மான்
ஒடிந்தன கொடிஞ்சி மான்றே ரொதுங்கின வொழிந்த சேனை. (௩0)

ஆவிமுன் னேகத் தாமு மருக்கமண் டலத்தா றேகத்
தாவுவ தென்ன வாடுந் தலைபல சிலைவாள் பட்டுக்
கூவிளி யெடுத்து வீழுங் குறைத்தலை யாடப் பாதிச்
சாவுட னின்று கைகள் கொட்டுவ தாள மென்ன. (௩௧)

தறைவிழத் தனது சென்னி வீட்டினார் தம்மை நின்ற
குறையுடற் கைவேல் குத்தி நூக்குவ குரவை பாடி
எறிபடு தலைகள் வாய்மென் றெயிறது கறித்து வீழ்ந்து
கறுவின மார்பந் தட்டி நிற்பன கவந்த யாக்கை. (௩௨)

ஒருவழிப் பட்டு வீழ் மிருதலை யொன்றற் கொன்று
மருவிய கேண்மைத் தாகி வாலெயி றிலங்க நக்குப்
பிரிவற வந்தாய் நீயு மென்றெதிர் பேசிப் பேசிப்
பரிவுற மொழிந்து மோந்து பாடிநின் றாடல் செய்த. (௩௩)

மாகவா றியங்கு சேனம் வல்லிருட் குவையி னன்ன
காகம்வன் கழுகு வெம்போர்க் களனிடை யவிந்து வீழ்ந்தோர்
ஆகமேற் சிறக டிக்கொண் டசைவன வேடை நீக்கப்
பாகநின் றால வட்டம் பணிப்பன போன்ற வன்றே. (௩௪)

வெள்ளமாச் சோரி யீர்ப்ப மிதக்கின்ற தேர்கள் வெம்பேய்ப்
பிள்ளைகண் மூழ்கிக் கீழ்போய் மறித்தெனப் பெயர்ந்து வீழ்வ
தெள்ளுநீர்க் கடலின் மீதூர் சிதைக்கல நிரையுந் தாக்கித்
துள்ளிமற் றவற்றைச் சாய்க்குஞ் சுறவமும் போன்ற வன்றே (௩௫)

கத்திநின் றுருபா லீர்ப்பக் கருங்கொடி சேனந் தீண்டங்
கொத்திநின் றுருபா லீர்ப்பக் குடவயிற் றழல்கட் பூதப்
பத்திநின் றுருபா லீர்ப்பப் பட்டவ ராகங் கூளி
பொத்திநின் றுருபா லீர்ப்ப வைம்பொறி போல மன்றே. (௩௬)

துடிவைவான் முறங்கா றள்ளுந் துணைச்செவி யரிசி கோட்டின்
உடிவைநேர் மணியின் குப்பை யுரலடி யுலக்கை திண்கோ
டடிகலங் கடந்தீச் சோரி மத்தக மடுப்பெண் றியானைப்
படுகளம் விசயச் செல்வி யடுமடைப் பள்ளி மாறும். (௩எ)

பிணத்திணைக் கோலிப் புண்ணீ ராற்றினைப் பெருக்கி யுண்பேய்க்
கணத்தினை யுதைத்து நூக்கிக் கரையுடைத் தொருவன் பூதம்
நிணத்தொடும் வருமந் நீத்த நேர்பட விருந்து கையால்
அணைத்துவாய் மடுக்கும் வைகை யருந்திய பூத மென்ன. (௩அ)

புரத்தினு ளுயர்ந்த கூடற் புண்ணிய னெழுதி யெய்த
சரத்தினி லவிந்தார் சென்னிக் குற்றுழிச் சார்வாய் வந்த
அரத்தினை யறுக்கும் வைவே லயற்புல வேந்தர் நச்சு
மரத்தினை யடுத்த சந்துங் கதழெரி மடுத்த தென்ன. (௩௯)

மாசறு காட்சி யான்றன் வாளியா லவிந்தோர் தம்மை
மூசுவண் டென்னச் சூழ்ந்து மொய்த்தன பைத்த கூளி
காய்சினச் சேனங் காகங் கழுகினம் பற்றி யீர்த்துப்
பூசலிட் டொன்றோ டொன்று போர்செய்வான் றொடங்கிற் றம்ம. (௪0)

வெஞ்சின மறக்கோ னம்பி விடுகணை வெள்ளத் தாழ்ந்து
வஞ்சின முறுதன் சேனை மடிந்தது கண்டு மாழாந்
தெஞ்சின படையுஞ் சூழ வேதிலார் நகையுஞ் சூழத்
துஞ்சின மறமுஞ் சூழச் சோழனு முடைந்து போனான். (௪௧)

வில்லொடு மேக மன்ன வெண்சிலை வேட வேந்தன்
மல்லொடு பயின்ற தென்னன் மலர்முகச் செவ்வி நோக்கி
அல்லொடு மதிவந் தென்ன வருணகை சிறிது பூத்துச்
செல்லொடு பகைபோற் கொண்ட திருவுரு மறைந்து போனான். (௪௨)

பாடுவா யளிதே னூட்டும் பைந்தொடைச் செழியன் வென்றிக்
கோடுவாய் வைத்திட் டார்த்துக் குஞ்சர முகட்டி லேறித்
தோடுவாய் கிழிக்குங் கண்ணார் மங்கலந் துவன்றி யேந்த
நீடுவார் திரைநீர் வேலி நீண்மதி னகரிற் புக்கான். (௪௩)

வேறு.

சிலைவிற்சே வகஞ்செய்து வாகை வாங்கித் திருவளித்த சேவகற்குச் சிறந்த பூசை, நிலைவித்தாய் மணிப்பொலம்பூ ணிறுவிச் சாத்தி நிழல்விரிக்கும் வெயின்மணியா னெடிய மேரு, மலைவிற்றா னென்னவரி சிலையு நாமம் வரைந்தகடுங் கூர்ங்கணையும் வனைந்து சாத்தி, அலைவித்தாழ் கடலுலகுக் ககலச் செங்கோ லறம்பெருக்கும் வங்கியசே கரனு மண்ணல். (௪௪)

சுந்தரப்பெயரம்பெய்தபடலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - உ,௩௬௩.

ஐம்பத்தொராவது

சங்கப்பலகைதந்தபடலம்.

வேடுரு வாகி மேரு வில்லிதன் மருமக் கோலெய்
தாடம ராடித் தென்ன னடுபகை துரந்த வண்ணம்
பாடினஞ் சங்கத் தார்க்குப் பலகைதந் தவரோ டொப்பக்
கூடிமுத் தமிழின் செல்வம் விளக்கிய கொள்கை சொல்வாம்.

வங்கிய சேக ரன்கோல் வாழுநாண் மேலோர் வைகற்
கங்கையந் துறைசூழ் கன்னிக் கடிமதிற் காசி தன்னிற்
பங்கய முளரிப் புத்தேள் பத்துவாம் பரிமா வேள்வி
புங்கவர் மகிழ்ச்சி தூங்க மறைவழி போற்றிச் செய்தான். (௨)

நிரப்பிய வழிநா ணன்னீ ராடுவா னீண்ட வீலை..
நரப்பிசை வாணி சாவித் திரியெனு நங்கை வேத
வரப்பிசை யணுவாங் காயத் திரியெனு மடவா ரோடும்
பரப்பிசைக் கங்கை நோக்கிப் படருவான் படரு மெல்லை. ௩)

நானவார் குழலி னாரம் மூவரு னாவின் செல்வி
வானவா றியங்கும் விஞ்சை மாதரா ளொருத்தி பாடுங்
கானவா றுள்ளம் போக்கி நின்றனள் கமல யோனி
யானவா லறிவ னேகி யந்நதிக் கரையைச் சேர்ந்தான். (௪)

நாமகள் வரவு தாழ்ப்ப நங்கைய ரிருவ ரோடுந்
தாமரைக் கிழவன் மூழ்கித் தடங்கரை யேறு மெல்லைப்
பாமகள் குறுகி யென்னை யன்றிநீ படிந்த வாறென்
னாமென வெகுண்டாள் கேட்ட வம்புயத் தண்ணல் சொல்வான். (௫)

குற்றநின் மேல தாக நம்மைநீ கோபங் கொள்வ
தெற்றென வினைய தீங்கை யெண்ணறு மாக்க டோற்றம்
உற்றனை யொழித்தி யென்னா வுரைத்தனன் சாப மேற்கும்
பொற்றொடி மடந்தை யஞ்சிப் புலம்புகொண் டவலம் பூண்டாள். (௬)

ஊனிட ரகன்றே யுன்னா ருயிர்த்துணை யாவே னிந்த
மானிட யோனிப்பட்டு மயங்குகேர் வென்ன வண்டு
தேனிடை யழுந்தி வேதஞ் செப்பும்வெண் கமலச் செல்வி
தானிட ரகல நோக்கிச் சதுர்முகத் தலைவன் சாற்றும். (௭)

முகிழ்தரு முலைநின் மெய்யா முதலெழுத் தைம்பத் தொன்றிற்
றிகழ்தரும் ஆகா ராதி ஹாகார மீறாச் செப்பிப்
புகழ்தரு நாற்பத் தெட்டு நாற்பத்தெண் புலவ ராகி
அகழ்தரு கடல்சூழ் ஞாலத் தவதரித் திடுவ வாக. (௮)

அத்தகு வருண மெல்லா மேறிநின் றவற்ற வற்றின்
மெய்த்தகு தன்மை யெய்தி வேறுவே றியக்கந் தோன்ற
உய்த்திடும் அகாரத் திற்கு முதன்மையா யொழுகு நாதர்
முத்தமி ழால வாயெம் முதல்வரம் முறையான் மன்னோ. (௯)

தாமொரு புலவ ராகித் திருவுருத் தரித்துச் சங்க
மாமணிப் பீடத் தேறி வைகியே நாற்பத் தொன்ப
தாமவ ராகி யுண்ணின் றவரவர்க் கறிவு தோற்றி
ஏமுறப் புலமை காப்பா ரென்றனன் கமலப் புத்தேள் (௧௦)

அக்கர நாற்பத் தெட்டு மவ்வழி வேறு வேறு
மக்களாய்ப் பிறந்து பன்மாண் கலைகளின் வகைமை தேர்ந்து
தொக்கவா ரியமு மேனைச் சொற்பதி னெட்டு மாய்ந்து
தக்கதென் கலைநுண் டேர்ச்சிப் புலமையிற் றலைமை சார்ந்தார். (கக)

கழுமணி வயிரம் வேய்ந்த கலன்பல வின்றிக் கண்டிக்
கொழுமணிக் கலனும் பூணுங் குளிர்நிலா நீற்று மெய்யர்
வழுவறத் தெரிந்த செஞ்சொன் மாலையா லன்றி யாய்ந்த
செழுமலர் மாலை யானுஞ் சிவார்ச்சனை செய்யு நீரார். (கஉ)

புலந்தொறும் போகிப் போகிப் புலமையால் வென்று வென்று
மலர்ந்ததண் பொருநை நீத்த வளங்கெழு நாட்டில் வந்து
நிலந்தரு திருவி னுன்ற நிறைநிதிச் செழியன் செங்கோல்
நலந்தரு மதுரை நோக்கி நண்ணுவார் நண்ணு மெல்லை. (கஙு)

பற்பல கலைமாண் டேர்ச்சிப் பனுவலின் பயனாய் நின்ற
அற்புத மூர்த்தி யெந்தை யாலவா யடிக ளங்கோர்
கற்பமை கேள்வி சான்ற கல்வியின் செல்வ ராகிச்
சொற்பதங் கடந்த பாத மிருநிலந் தோய வந்தார். (கச)

அவ்விடை வருகின் றுரை நோக்கிநீ ராரை நீவிர்
எவ்விடை நின்றும் போது கின்றனி ரென்ன வன்னோர்
வெவ்விடை யனையீர் யாங்கள் விஞ்சைய ரடைந்தோர் பாவம்
வெளவிடு பொருநை நாட்டின் வருகின்றே மென்ன லோடும். (கரு)

தனிவரு புலவர் நீவிர் தண்டமி ழால வாயெங்
கனிவரு கருணை மூர்த்தி கனைகழ லிறைஞ்சல் வேண்டும்
இனிவரு கென்ன நீரே யெங்களுக் களவில் கோடி
துனிவரு வினைக டீர்க்குஞ் சுந்தரக் கடவு ளென்றார். (கசு)

மறையினு ளுருழுகும் பன்மாண் கலைகள்போன் மாண்ட கேள்வித
துறையினு ளுருழுகுஞ் சான்றோர் சூழமீண் டேகிக் கூடற்
கறையினர் கண்டத் தாரைப் பணிவித்துக் கரந்தா ரொற்றைப்
பிறையினர் மகுடந் தோற்று தறிஞராய் வந்த பெம்மான். (கஎ)

விம்மித மடைந்து சான்றோர் விண்ணிழி விமான மேய
செம்மலை வேறு வேறு செய்யுளாற் பரவி யேத்திக்
கைம்மலை யுரியி னார்தங் காலுழு திறைஞ்சி மீண்டு
கொய்ம்மலர் வாகைச் செவ்வேற் செழியனைக் குறுகிக் கண்டார். (கஅ)

மறமலி நேமிச் செங்கோன் மன்னவன் வந்த சான்றோர்
அறமலி கேள்வி நோக்கி யவைக்களக் கிழமை நோக்கித்
திறமலி யொழுக்க நோக்கிச் சீரியர் போலு மென்னா
நிறைமலி யுவகை பூத்த நெஞ்சினு னிதனைச் செய்தான். (ககூ)

திங்களங் கண்ணி வேய்ந்த செக்கரஞ் சடில நாதன்
மங்கலம் பெருகு கோயில் வடகுட புலத்தின் மாடோர்
சங்கமண் டபமுண் டாக்கித் தகைமைசால் சிறப்பு நல்கி
அங்கமர்ந் திருத்தி ரென்ன விருத்தினு னறிஞர் தம்மை. (உ0)

வண்டமிழ் நாவி னார்க்கு மன்னவன வரிசை நல்கக்
கண்டுளம் புழுங்கி முன்னைப் புலவரக் கழகத் தோரை
மண்டினர் மூண்டு மூண்டு வாதுசெய் தாற்றன் முட்டிப்
பண்டைய புலனுந் தோற்றுப் படருழந் தெய்த்துப் போனார். (௨௧)

இனையர்போல் வந்து வந்து மறுபுலத் திருக்குங் கேள்வி
வினைஞரு மதமேற் கொண்டு வினாய்வினாய் வாதஞ் செய்து
மனவலி யிளைப்ப வென்று வைகுவோ ரொன்றை வேண்டிப்
புனையிழை பாக நீங்காப் புலவர்மு னண்ணி னாரே. (௨௨)

முந்துநான் மொழிந்தார் தம்மை முறைமையால் வணங்கி யெம்மை
வந்துவந் தெவரும் வாதஞ் செய்கின்றார் வரிசை யாக
அந்தமில் புலமை தூக்கி யளப்பதா வெம்ம னோர்க்குத்
தந்தருள் செய்தி சங்கப் பலகையொன் றென்று தாழ்ந்தார். (௨௩)

பாடிய பாணற கன்று வலியவே பலகை யிட்டார
பாடிய புலவர் வேண்டிற் பலகைதந் தருளார் கொல்லோ
பாடிய புலவ ராகும் படியொரு படிவங் கொண்டு
பாடிய புலவர் காணத் தோன்றினார் பலகை யோடும். (௨௪)

சதுரமா யளவி ரண்டு சாணதிப் பலகை யம்ம
மதியினும் வாலி தாகு மந்திர வலிய தாகும்
முதியநும் போல்வார்க் கெல்லா முழம்வளர்ந் திருக்கை நல்கும்
இதுநுமக் களவு கோலா யிருக்குமென் றியம்பி யீந்தார். (௨௫)

நாமக ளுருவாய் வந்த நாவலர் தமக்கு வெள்ளைத்
தாமரை யமளி தன்னைப் பலகையாத் தருவ தென்னக்
காமனை முனிந்தார் நல்கக் கைக்கொடு களிறு தாங்கும்
மாமணிக் கோயி றன்னை வளைந்துதங் கழகம் புக்கார். (௨௬)

நாறுநீர் தாம நாற்றி நறும்பனி தோய்ந்த சாந்தச்
சேறுவண் மலர்வண் டூசு செழும்புகை தீப மாதி
வேறுபல் வகையாற் பூசை வினைமுடித் திறைஞ்சிக் கீரன்
ஏறினான் கபில னோடு பரணனு மேறி னானே. (௨௭)

இருங்கலை வல்லோ ரெல்லா மம்முறை யேறி யேறி
ஒருங்கினி திருந்தார் யார்க்கு மொத்திடங் கொடுத்து நாதன்
தருஞ்சிறு பலகை யொன்றே தன்னுரை செய்வோர்க் கெல்லாஞ்
சுருங்கிநின் றகலங் காட்டித் தோன்றுநூல் போன்ற தன்றே. (௨௮)

மேதகு சான்றோர் நூலின் விளைபொருள் விளங்கத் தம்மில்
ஏதுவு மெடுத்துக் காட்டு மெழுவகை மதமுங் கூறும்
போதவை தெளிந்த கிள்ளை பூவையே புறம்பு போந்து
வாதுசெய் வார்கள் வந்தான் மறுத்துநேர் நிறுத்து மன்றே. (௨௯)

வேறு.

ஆய வாறெண் புலவரு மாய்ந்துணர்
பாய கேள்விப் பயன்பெற மாட்சியாற்
றூய பாட லொருங்கினர் செய்துகொண்
டேய வாறிருந் தாரந்த வெல்லைவாய். (௩௰)

பலருஞ் செய்த பனுவலு மாண்பொருண்
மலருஞ் செல்வமுஞ் சொல்லின் வளமையுங்
குலவுஞ் செய்யுட் குறிப்புமொத் தொன்றியே
தலைம யங்கிக் கிடந்தவத் தன்மையால். க

வேறு பாடறி யாது வியந்துநீர்
கூறு பாட்டிது வென்றுங் கோதிலென்
தேறு பாட லிதுவென் றுஞ் செஞ்சவே
மாறு பாடுகொண் டார்சங்க வாணரே. (கஉ)

மருளு மாறு மயக்கற வான்பொருள்
தெருளு மாறுஞ் செயவல்ல கள்வர்சொற்
பொருளு மாமது ரேசர் புலவர்முன்
அருளு நாவல ராய்வந்து தோன்றினர். (கங)

வந்த நாவலர் வந்திக்கு நாவலர்
சிந்தை யாகுலஞ் செய்ய மயக்குறும்
பந்த யாப்பைக் கொணர்கெனப் பாவலர்
எந்தை யீங்கிவை யென்றுமுன் னிட்டனர். (கச)

தூய சொல்லின் பொருளின் றொடர்ச்சியும்
ஆய நாவல ரவ்வவர் தம்முது
வாய பாடல் வகைதெரிந் தவ்வவர்க்
கேய வேயெடுத் தீந்தன ரென்பவே. (கரு)

வாங்கு சங்கப் புலவர் மனங்களித்
தீங்கு நீரெம ரோடு மொருத்தராய்
ஓங்கி வாழ்திரென் றோல்லெனத் தங்களைத்
தாங்கு செம்பொற் றவிசி லிருத்தினர். (கசு)

பொன்னின் பீடிகை யென்னும்பொன் னூரமேல்
துன்னு நாவலர் சூழ்மணி யாகவே
மன்னி னூர்நடு நாயக மாமணி
என்ன வீற்றிருந் தார்மது ரேசரே. (கஎ)

நதிய ணிந்தவர் தம்மொடு நாற்பத்தொன்
பதின்ம ரென்னப் படும்புல வோரெல்லாம்
முதிய வான்றமிழ் பின்னு முறைமுறை
மதிவி ளங்கத் தொடுத்தவண் வாழுநாள். (கஅ)

வேறு.

வங்கிய சேகரன் வங்கிய சூடா மணி * தன்னைப்
பொங்கிய தேசார் முடிபுனை வித்துப் புவிநல்கி
இங்கியல் பாச வினைப்பகை சாய விருந்தாங்கே
சங்கியல் வார்குழை யானடி யொன்றிய சார்புற்றான். (கசு)

சங்கப்பலகைதந்தபடலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - உ,சகஉ.

* வம்சசேகரன வம்சசூடாமணி என்பன, வங்கியசேகரன் வங்கியசூடாமணி என்றாயின.

ஐம்பத்திரண்டாவது

தருமிக்குப்பொற்கிழியளித்தபடலம்.

சொற்குவை தேரும் பாவலர் மேவத் தொகுபீடம்
அற்குவை கண்டத் தண்ணல ளித்த தறைந்தேமால்
தற்குவை தந்தா னுய்குவ னென்னுந் தருமிக்குப்
பொற்குவை நல்கும் வண்ணமெ டுத்துப் புகலகிற்பாம். (௧)

மன்னவர் மன்னன் வங்கிய சூடா மணிமாறன்
தென்னவ ராகித் திகிரியு ருட்டுந் தென்கூடல்
முன்னவ ரன்னங் கண்டறி யாத முடிக்கேறப்
பன்மலர் நல்கு நந்தனம் வைக்கும் பணிபூண்டான். (௨)

மாதவி பாதிரி தாதகி கூவிள மந்தாரந்
தாதவிழ் மல்லிகை முல்லையி லஞ்சி தடங்கோங்கம்
வீதவழ் கொன்றை கரந்தைசெ ழுங்கர வீரந்தண்
போதவிழ் நந்தி செருந்திகு ருந்தம் புன்னாகம். (௩)

முண்டக மென்கடி நீலமு தற்பல முப்போதும்
எண்டிசை யுங்கம ழும்படி நந்தன மெங்குந்தேன்
உண்டிசை வண்டு படிந்துமு ரன்றிட வுண்டாக்கி
வண்டிமிர் சண்பக நந்தன முந்தனி வைத்தானால். (௪)

பொய்த்திடு நுண்ணிடை மங்கல மங்கையர் பொன்பூண்டார்
ஒத்தெழு சண்பக மொய்த்தவ ரும்ப ருடைந்தெங்கும்
வைத்திடு நந்தன வாசம்வி ழுங்கி மணங்கான்று
பைத்து மலர்ந்தன கண்டும கிழ்ந்து பரித்தேரான். (௫)

செருக்கிய வண்டு விழாமலர் கொய்து தெரிந்தாய்ந்து
நெருக்கிய விண்டை நிரைத்தொடை தொங்க னெடுந்தாமம்
மருக்கிளர் கண்ணி தொடுத்தணி வித்து வணங்காரூர்
கருக்கிய கண்ணுத லார்திரு மேனி கவினசெய்தான். (௬)

அனனவ யன்பொழின் மாமது ரேச ரடித்தாழ்வோன்
பொன்னவிர் சண்பக மாலைபு னைந்த புதுக்கோலந்
தன்னைவி யந்திவர் சண்பக சுந்தரர் தாமென்று
முன்னரி றைஞ்சின னிம்பம ணிந்த முடித்தென்னன். (௭)

அன்னதொர் நாமம் பெற்றன ரின்று மணிக்கூடன்
முன்னவ ரந்தத் தாமம வர்க்கு முடிக்கேற்றும்
இன்னதொ ரீராற் சண்பக மாற னென்றேபேர்
மன்னிவி ளங்கினன் வங்கிய சூடா மணிதானும். (௮)

சண்பக மாறன் சண்பக சுந்தரர் தம்மாடே
நண்பக மாறு நன்பணி செய்யு நன்னாளிற்
பண்பகர் சொல்லார் தம்புடை மாறன் படுபோர்மூண்
டெண்பக வெய்வா னாகிய வந்தன் றிளவேனில். (௯)

வேறு.

மனிதர்வெங் கோடை தீர்க்கும் வசந்தமென் கீனும் வேறு
துனிதவி ரிளங்கால் வேண்டுஞ் சோலையுஞ் சோலை வேண்டும்
புனிதநீர்த் தடமும் வேறு புதுமல ரோடை வேண்டும்
பனிதரு மதியும் வேறு பான்மதி வேண்டுங் காலம். (௧௦)

அண்டவான் றருமேற் சீறிச் சிவந்தெழுந் தாங்குத் தேமாத்
தண்டளி ரீன்று வானந் தைவர நிவந்த காசு
கொண்டிடை யழுத்திச் செய்த குழையணி மகளிர் போல
வண்டிறை கொள்ளப் பூத்து மலர்ந்தன செருந்தி யெல்லாம். (௧௧)

செங்கதிர் மேனி யானபோ லவிழ்ந்தன செழும்ப லாசம்
மங்குலூர் செல்வன் போல மலர்ந்தன காஞ்சி திங்கட்
புங்கவன் போலப் பூத்த பூஞ்சினை மரவஞ் செங்கை
அங்கதி ராழி யான்போ லலர்ந்தன விரிந்த காயா. (௧௨)

தரைகழித் தெழுநீர் வைகைத் தடங்கரை யெக்க ரல்குல்
அரவமே கலைசூழ்ந் தென்ன வலர்ந்துதா துகுப்ப ஞாழல்
மரகதந் தழைத்து வெண்முத் தரும்பிப்பொன் மலர்ந்து வாங்குந்
திரைகடற் பவளக் காடு செய்வன கன்னிப் புன்னை. (௧௩)

ஊடினார் போல வேம்பி யிலையுதிர்ந் துயிரன் னாரைக்
கூடினார் போல வேங்குங் குழைவரத் தழைத்து நீங்கி
வாடினார் போலக் கண்ணீர் வாரமெய் பசந்து மையல்
நீடினா ரலர்போற் பூத்து நெருங்கின மரங்க ளெல்லாம். (௧௪)

விழைதரு காத லார்தா மெலிவுற மெலிந்து நெஞ்சங்
குழைவுறக் குழைந்து நிற்குங் கோதிலாக் கற்பி னார்போல்
மழையறுங் கோடை தீப்ப மரந்தலை வாட வாடித்
தழைவுறத் தழைத்து நின்ற தழீஇயபைங் கொடிக ளெல்லாம். (௧௫)

சேட்டிகைத் தென்கா றள்ளத் தெண்மதுச் சிதறத் தும்பி
நீட்டிசை முரலச் சாயா நின்றுபூங் கொம்ப ராடல்
நாட்டியப் புலவ னோட்ட நகைமுகம் வெயர்வை சிந்தப்
பாட்டிசைத் தாடா நின்ற பாவைமார் போன்ற வன்றே. (௧௬)

மலர்ந்தசெவ் வந்திப் போதும் வகுளமு முதிர்ந்து வாடி
உலர்ந்துமொய்த் தளிதே னக்கக் கிடப்பன வுள்ள மிக்க
குலந்தரு நல்லோர் செல்வங் குன்றினுந் தம்பா லில்லென்
றலந்தவர்க் குயிரை மாறி யாயினுங் கொடுப்ப ரன்றே. (௧௭)

நாறிய தண்ணந் தேமா நறுந்தளிர் கோதிக் கூவி
ஊறிய காமப் பேட்டை யுருக்குவ குயின்மென் சேவல்
வீறிய செங்கோல் வேந்தன் வெளிப்படத் தேயங் காவல்
மாறிய வேந்தன் போல வொடுங்கிய மயில்க ளெல்லாம். (௧௮)

பொங்கரி னுழைந்து வாவி புகுந்துபங் கயந்து ழாவிப்
பைங்கடி மயிலை முல்லை மல்லிகைப் பந்தர் தாவிக்
கொங்கலர் மணங்கூட் டுண்டு குளிர்ந்துமெல் லென்று தென்றல்
அங்குமிங் கே க[illegible]ரு மறிவன்போ லியங்கு மன்றே. (௧௯)

தாமரை களாஞ்சி தாங்கத் தண்குயின் முழவ [illegible]
மாமரு தமருங் கிள்ளை மங்கல மியம்பத் தும்பி
காமர மிசைப்ப முள்வாய்க் கைதைவா ளெடுப்ப வேனிற்
கோமகன் மகுடஞ் சூடி யிருப்பதக் குளிர்பூஞ் சோலை. (௨௦)

கலையினு னிறைந்த விந்து காந்தமண் டபத்துஞ் செய்த
மலையினு மெழுது மாட மருங்கினு நெருங்கு சோலைத்
தலையினுங் கமல வாவித் தடத்தினுந் தண்முத் தார
முலையினு மன்றிக் கோடை முடிவிடங் காணார் மாந்தர். (௨௧)

நிலந்தரு திருவி னொன்ற நிழன்மணி மாடக் கூடல்
வலந்தரு தடந்தோண் மைந்தர் வானமும் வீழும் போக
நலந்தரு மகளி ரோடு நாகநா டவர்தஞ் செல்வப்
பொலந்தரு வனைய காட்சிப் பூம்பொழி னுகர்வான் போவார். (௨௨)

வேறு.

மாத்தாண் மதமா னெருத்தின் மடங்க லெனச் செல்வாரும்
பூத்தா ரொலிவாம் பரிமேற் புகர்மா வெனப்போ வாரும்
பாத்தார் பரிதீ யெனவாம் பரித்தே ருகைத்தூர் வாருந்
தேத்தா ருளர்வண் டலம்பச் சிலம்பி னடக்கின் றாரும். (௨௩)

நீலப் பிடிமேற் பிடிபோ னெறிக்கொள் வாருந் தாள
மாலைச் சிவிகை மிசைவெண் மலரா னெனச்செல் வாரும்
ஆலைக் கரும்பன் றுணைபோ லளித்தார்ப் பரியூர் வாருங்
கோலத் தடக்கை பற்றிக் கொழுந ருடன்போ வாரும். (௨௪)

சுருப்புக் கமழ்தேங் கண்ணித் தொடுபைங் கழலா டவருங்
கருப்புச் சிலைமன் னவனுற் கருவிப் படையன் னவரும்
விருப்புற் றெறிநீர் வைகை வெள்ளைத் தரளந் தெள்ளிப்
பொருப்பிற் குவிக்கும் புளினம் புறஞ்சூழ் சோலை புகுவார். (௨௫)

கூந்தற் பிடியும் பரியு மூர்வார் கொழுநர் தடந்தோள்
ஏந்தச் சயமா தென்னத் தழுவா விழிந்து பொழில்வாய்ப்
பூந்தொத் தலர்பொற் கொடிதா துகுமா றென்னப் புனைந்த
சாந்தக் கலவை யுகப்போய் வனமங் கையர்போற் சார்ந்தார். (௨௬)

ஏமா சலமென் முலையார் நடையோ வியமே யென்னப்
பூமா தவிசேர் வாரும் புன்னை நிழல்சேர் வாருந்
தேமா நிழல்சேர் வாருஞ் செருந்தி நிழல்சேர் வாருங்
காமா யுதசா லைகள்போற் கைதை நிழல்சேர் வாரும். (௨௭)

கோடும் பிறைவா ணுதலார் குழலைக் கருவிக் காரென்
றோடுந் தோகை யவர்கண் ணோக்கிக் கணையென் றஞ்சி
ஓடுங் கொடியி னன்னோ ருருமாந் தளிரென் றயில்வான்
நாடுங் குயிலன் னவர்பண் ணிசைகேட் டொதுங்கி நாணும். (௨௮)

நீடுந் தரங்க மிரங்கு நிறைநீர் நிலையே யன்றிப்
பாடுஞ் சுரும்புண் கழுநீர் பைந்தாட் குமுதம் பதுமங்
கோடும் பூத்த வென்னக் கொடியே ரிடையார் குழையுந்
தோடுங் கிடந்த வதனத் தொகையாற் பொலிவ சோலை. (௨௯)

பிடிக ளென்ன நடந்தா ருடன்போய்க் கொழுநர் பெருந்தண்
கொடிகண் மிடைந்த வில்லி லியக்கர் போலக் குறுகிக்
கடிகொள் பனிநீர் தெளித்து வேடை தணித்துங் கன்றும்
அடிகள் பிடித்துஞ் சேடி யவர்கைக் குதவி யாவார். (௩0)

மைவார் தடங்கண் மடவார் வளைப்பார் கொம்பின் மலரைக்
கொய்வார் குமிழ்மோந் துயிர்ப்பார் குழையுஞ் செவியுங் குழலும்
பெய்வார் மகிழ்ச்சி செய்வார் பேரா மையல் கூர
எய்வார் கணைபோற் றைப்பக் கொழுநர் மார்பத் தெறிவார். (௧௧)

முத்தேர் நகையார் வளைப்ப முகைவிண் டலர்பூங் கொம்பர்ப்
புத்தேள் வண்டும் பெடையும் புலம்பிக் குழலிற் புகுந்து
தெத்தே யெனப்பாண் செய்து தீந்தே னருந்துந் துணையோ
டொத்தே ழிசைபா டிக்க ளுண்ணும் பாண ரொத்தே. (௧௨)

வேறு.

இம்பரீ டளிக்குந் தெய்வ மகளிரே யென்பார் கூற்றம்
வம்பல மெய்யே போலும் வளைக்கையார் வளைப்பத் தாழ்ந்து
கம்பமுற் றடிப்பூச் சிந்தி மலர்முகங் கண்ணீர் சோரக்
கொம்பரும் பணிந்த தென்றா லுலகியல் கூறற் பாற்றே. (௧௩)

மைக்கணா ளொருத்தி யெட்டா நிமிர்கொம்பை வளைக்குந் தோறுங்
கைக்குநேர் படாமை வாடுங் கடிமலர்க் கொடிபோ னிற்பத்
தைக்கும்பூங் கணைவே ளன்னா னொருமகன் றலைப்பட் டென்னை
எய்க்கின்றாய் தோண்மே லேறிப் பறியென வேந்தி நின்றான். (௧௪)

தையலா ளொருத்தி யெட்டா மலர்க்கொம்பைத் தளிர்க்கை நீட்டி
ஐயநுண் மருங்கு லேவ வருந்தலு மாற்றாக் கேள்வன்
ஒய்யென வீதவ் வென்னை யூடிய மகளி ரேயோ
கொய்யென வளைத்து நின்றான் கண்முத்தங் கொழிப்ப நின்றாள். (௧௫)

மைக்குழ லொருத்தி காதில் வட்டப்பொன் றோலை யூடே
திக்கய மனையான் கொய்த செருந்திப்பூச் செருகி நோக்கி
இக்குழை யழகி தென்றா னிடமெங்கைக் கிடுதி யென்னா
அக்குழை யோடும் வீசி யன்பனுக் கலக்கண் செய்தாள். (௧௬)

மயிலிளம் பெடையன் னாளோர் மாதர்மாங் குடம்பை செல்லுங்
குயிலிளம் பெடைதன் னாவிச் சேவலைக் கூவ நோக்கி
அயிலிளங் களிறன் னானைக் கடைக்கணித் தளியுந் தேனும்
பயிலிளஞ் சோலை மாடோர் மாதவிப் பந்தர் சேர்ந்தாள். (௧௭)

பாசிழை யொருத்தி யாற்றாப் புலவியாள் பைந்தா ரான்முன்
பூசகில் வாசங் காலிற் போக்கியும் புனைபூண் காஞ்சி
ஓசையைச் செவியி லுய்த்துங் கலவியி னுருவந் தீட்டுந்
தூசினை யுடுத்தும் போர்த்துந் தூதுவிட் டவள்போ னின்றாள். (௧௮)

வாய்ந்தநாண் மலர்கொய் தீவான் மெய்யிலம் மலர்த்தேந் தாது
சாந்தமான மதம்போற் சிந்திக் கிடப்பவோர் தையல் யாரைத்
தோய்ந்தசாந் தென்றா னுள்ளத் துன்னையுஞ் சுமந்து கொய்த
ஆய்ந்தசண் பகத்தா தென்றா னெய்சொரி யழலி னின்றாள். (௧௯)

பிணியவிழ் கோதை யாளோர் பேதைதன் பதிதன் னூடல்
தணியவந் தடியில் வீழத் தன்னிழ லனையான் சென்னி
மணியிடைக் கண்டு கங்கை மணாளனை யொப்பீ ரெம்மைப்
பணிவதென் னென்று நக்குப் பரிவுமேற் பரிவு செய்தாள். (௨௦)

மதுகைவா ளொருவ னங்கோர் மங்கைதன் வடிவை நோக்கிப்
பதுமமே யடிகை காந்தள் பயோதரங் கோங்கு காவிப்
புதுமலர் விழிவா யாம்பற் போதுநும் மூர லெப்போ
ததனைவரீய் திறந்து காட்டிப் போமினென் றடுத்து நின்றான. (௪௧)

விடைத்தனி யேறன் னானோர் விடலையோர் வேந்தனாண்முன்
இடைத்துநும் மிடத்தென் னெஞ்சங் கெட்டுவந் தொளித்த தல்குற்
றடத்திடை யொளித்த தேயோ தனத்திடை யொளித்த தோபூம்
படத்தினைத் திறந்து காட்டிப் போகெனப் பற்றிச் சென்றான். (௪௨)

மாந்தளி ரடியார் சாய்ப்ப வளைந்தபூஞ் சினைவண் டன்னார்
கூந்தலிற் கிடந்த செம்மற் கோதைமேல் வீழ்ந்த கற்பின்
ஏந்திழை யவரை நீத்துப் பலர்நுகர்ந் தெச்சி லாக்கும்
பூந்தொடி யவரைத் துய்க்கும் பேதையர் போன்ற தன்றே. (௪௩)

வேறு.

புல்லி மைந்தர் பொருள்கவர்ந் தாரென
வல்லி யன்ன மடந்தையர் கொய்தலின்
அல்லி நாண்மல ரற்றபின் கைப்பொருள்
இல்லி யென்ன விளைத்தன காவெலாம். (௪௪)

மையுண் கண்ணியர் மைந்தரொ டம்மலர்
கொய்யுஞ் செல்வ நுகர்ந்து கொழுங்கணும்
மெய்யுந் தோயிற் கொழுநரின் வேற்றுமை
செய்யும் பொய்கை இளைப்பச்சென் றாரரோ. (௪௫)

அன்ன மன்னவ ராடுங் கயந்தலை
நன்னர் நீல நளினங் குமுதமென்
றின்ன வன்றி யெழின்முலலை சண்பகம்
பொன்னங் கோங்கமும் பூத்தது போன்றதே. (௪௬)

வேறு.

குர்வ வோதியர் கயந்தலை குறுகுமுன் கயலும்
அரவும் யாமையு மலவனு மன்னமு மகன்ற
பருவ ரால்களு மிரிந்தன பகைஞர்மே லிட்டு
வருவ ரேலெதிர் நிற்பரோ வலியிழந் தவரே. (௪௭)

பண்ணெ னுஞ்சொலார் குடைதொறும் பன்மலர் வீழ்ந்த
தண்ணெ னுந்திரை யலைதொறு நிரைநிரை தாக்கல்
கண்ணு நீலமு முகங்களுங் கமலமும் வாயும்
வண்ண வாம்பலுந் தத்தமின் மலைவன வனைய. (௪௮)

கூழை யாசியின் விரிந்திட மலர்ந்துநீர் குடையும்
மாழை யுண்கணார் கொங்கையு முகங்களு மருங்கர்
சூழ ரும்பொடு மலர்ந்தசெந் தாமரைத் தொகுதி
ஆழ்த ரங்கநீ ரிடைக்கிடந் தலைவன வனைய. (௪௯)

தூய நீர்குடைந் தேறுந்தன் றுணைவியைத் துணைவன்
வாயுங் கண்களும் வேறுற்ற வண்ணங்கண் டென்கண்
ஏய வின்னுயி ரனையவ ளெங்குளா ளென்றான்
காயும் வேற்கணாள் முலைகுளிப் பாட்டினாள் கண்ணீர். (௫0)

மங்கை நல்லவ ளொருத்திநீ ராடுவான் முகிழ்நன்
அங்கை பற்றின ளேகுவா ளவன்குடைந் தேறும்
பங்க யக்கணு ளொருத்தியைப் பார்த்தலுஞ் சீசீ
எங்கை யெச்சிலீ ராடலே னெனக்கரை நின்றாள். (௫௧)

வனைந்த பைங்கழ லோன்புன லாடலின் மார்பின்
நனைந்த குங்குமத் தலையெறி நளினமொட் டழுந்தப்
புனைந்த கொங்கையால் வடுப்படப் பொறித்தவள் யாரென்
றினைந்த ழுங்கினு ணெய்சொரி யெரியென வொருத்தி. (௫௨)

வீழ்ந்த காதலன் செய்ததீங் காகிய வேலாற்
போழ்ந்த நெஞ்சினள் புலவிநோய் பொருளிவன் காண
ஆழ்ந்த நீரிடை யமிழ்ந்துவாள் போன்றயர்ந் தயலே
தாழ்ந்த வன்னத்தை நோக்கிக்கை தாவென விரந்தாள். (௫௩)

கரும்பு போன்மொழி யாளொரு காரிகை வதனஞ்
சுரும்பு சூழ்கம லங்களுட் கமலமாய்த் தோன்ற
விரும்பு காதல னையுற்று மெலிந்தனன் மெல்ல
அரும்பு முல்லைகண் டையத்தி னீங்கிச்சென் றணைந்தான். (௫௪)

களித்த காதலன் மொக்குள்வாய்த் தன்னிழல் கண்டு
தெளித்து வாணகை செய்யமாற் றொளொன்று சீறித்
தளிர்க்கை நீட்டினள் கண்டில டவினள் சலத்துள்
ஒளித்தி யோவெனு வுதைத்தனள் பேதைமா தொருத்தி. (௫௫)

நாறு சுண்ணமென் கலவையு நானமுந் தம்மின்
மாறி வீசினின் றுடுவார் மாலைதா ழகலத்
தூறு பாடற வந்தரத் தளிகவர்ந் துண்ப
ஆறு செல்பவர் பொருள்வெளவு மரட்டரே போல. (௫௬)

கொய்யு நீலமுங் கமலமுங் கொண்டுகொண் டநங்கன்
எய்யும் வாளியி னெறிவரா லெறிந்திடு மலரைக்
கையி னேற்புடைத் தெறிந்தவர் கதிர்முகம் படக்கண்
டைது வாணகை செய்தக மகிழ்ச்சியு ளாழ்வார். (௫௭)

வாச மென்பனி நீரொடு சுண்ணமும் வாரி
வீசு வாரிளம் பிடியொடு வேழமா நிரைபோற்
காசு லார்தொடி வில்விடக் கைகளா லள்ளிப்
பூசு சாந்தவை யழிந்திடப் புனிதநீ ரிறைப்பார். (௫௮)

அப்பெ ரும்புனற் றடங்குடைந் தாடுவா ராயத்
தொப் பருந்தனி யொருமக ளொருவன்றன் முகத்துத்
துப்பை வென்றசெந் துவரிதழ்ச் செய்யவாய்த் தூநீர்
கொப்ப ளித்தன ளாம்பலந் தேனெனக் குடித்தான். (௫௯)

சூழ மல்லிடைச் செல்லலை நில்லென வடுத்தோர்
வேழ மன்னிரவன் விலக்குவான் போலொரு வேற்கண்
ஏழை தன்னைக்கை யால்வளைத் தேந்திவண் டுறைதார்
சூழு மார்பனைத் திரதிதோ டோய்ந்தவ னொத்தான். (௬0)

மாசி றணமுஞ் சூடிய மாலையு மெய்யிற்
பூசு சாந்தமு மாரமும் பொய்கைக்குக் கொடுத்து
வாச மெய்யினி லம்புய வாசமு மயங்க
ஆசை மைந்தரோ டிளையவ ரகன்கரை யடைவார். (௬௧)

தையலார்சிலர் நனைந்தறுண் டானையுட் பொதிந்து
மெய்யெ லாம்வெளிப் படக்கரை யேறுவான் வெள்கி
ஐய தாபொலந் துகிலென வன்பரைக் கூய்க்கண்
செய்ய மாயனைக் கேட்குமாய்ச் சிறுமிய ரொத்தார். (௬௨)

உலத்தை வென்றதோ ளாடவ ருச்சிமேற் பொழித்த
அலத்த கத்தொடு குங்கும மளைந்துசெம் புனலாய்
மலர்த்த டந்துறைந் தவர்க்குநீ ராசன வட்டக்
கலத்தை யொத்தன சுற்றநின் றுறொத்த கடிகா. (௬௩)

பட்டும் பன்னிறக் கலிங்கமும் பன்மணிக் கலனுங்
கொட்டுஞ் சாந்தமு நானமுங் குங்குமச் சேறுங்
கட்டுந் தாமமு நமதுகட் டழகெலாங் கவர
மட்டுண் கோதைய ராடவர் மணமெலாங் கவர்ந்தார். (௬௪)

வேறு.

காவியுங் கமலப் போதுங் கள்ளொழு காம்பற் போதும்
ஆவியுட் பூத்த போல வாடியுட் பூப்ப நோக்கி
ஏவிரண் டன்ன கண்ணு லநங்கனை யேவல கொள்ளும்
பூவிரி பொலங்கொம் பன்னார் புதுமது நுகரப் புக்கார். (௬௫)

பொன்னினும் வெள்ளி யாலும் பளிங்கினும் புலவன் செய்த
நன்னிறக் கலத்திற் கூர்வா ணட்டென வாக்கிச் சேடி
மின்னனா ரளித்த தேறற் சிறுதுளி விரலிற் றெள்ளித்
துன்னிவீழ் களிவண் டோச்சித் தொண்டையங் கனிவாய் வைப்பார்.

வள்ளதது வாள்போல் வாக்கு மதுக்குடந் தன்பாற் பெய்த
கொள்ளைததெண் மதுவைக் கொள்ளை கொளவந்த வள்ள மீதென்
றுள்ளத்து வெகுண்டு வைவா ளுன்றிமார் பிடப்ப தொத்த
கள்ளைச்சூழ் காளை வண்டு செருச்செயல் காணப வொத்த. (௬௭)

தணியலுண் டுள்ளஞ் சோரு மொருமக டணிய லுண்பான்
பிணியவிழ் கோதை யாளோர் பெண்மகள் கலத்தில் வாக்குந்
துணிமதுத் தாரை தன்னை வாளெனத் துணிந்து பேதாய்
திணிகதிர் வாளால் வள்ளஞ் சிதைத்தியோ வென்று நக்காள். (௬௮)

மலர்தொறுஞ் சிறுதே னக்கித் திரிவண்டு மடவார் தங்கைத்
தலனெடுத் தோச்ச வோடா தழீஇத்தடஞ் சாடி மொய்ப்ப
இலமெனப் பல்லோர் மாட்டு மிரந்திரந் தின்மை நீங்கா
தலமரும் வறியோர் வைத்த நிதிகண்டா லகலவ ரேயோ. (௬௯)

உண்டவ ளொருத்தி கள்வா யுதிக்குந்தன் முகமுங் கணனுங்
கண்டுதா மரைகள் வேலை முளைத்ததக் கள்ளை யார
மொண்டுணுப் பேதைக் காபி யம்மது முளரி வார்தேனை
நுண்டுளி செறிவ தென்று மொநாடித் துக்கை புடைத்து நக்காள். (௭௦)

மங்கையா ளொருத்தி தானுண் டெஞ்சிய மதுவுட் டோன்றும்
திங்களை நோக்கி யென்னைப் பிரிவின்கட் டையாய்ச் சுட்டாய்
இங்குவந் தகப்பட் டாயே யினிவிடேன் கிடத்தி யென்று
அங்கொரு வள்ளங் கொண்டு சேமித்தா ளருந்தல் செய்யாள். (௭௧)

வெவ்விய் நறவ முண்ட விளங்கிழை யொருத்தி கையிற்
கௌவிய வாடி தன்னிற் கருங்கய னெடுங்கட் சேப்புங்
கொவ்வைவாய் விளர்ப்பு நோக்கி யென்னலங் கூட்டுண் டேகும்
ஒளவிய மனத்தான் யாரென் றயர்கின்று ளயலா ரெள்ள. (௭௨)

ஒருத்திகள் ளுண்கின் றுடன் றுருவமந் நறவுட் டோன்ற
ஒருத்தியென் னுடன்வந் துண்பாள் கர்வெனு வுண்ட தோழி
ஒருத்திவந் தென்செய் வாடன் னுருவமு நோக்கிப் பேதாய்
ஒருத்தியோ விருவ ரென்று ளெச்சிலென் றுருத்து நக்காள். (௭௩)

சாடியு ணறவ முண்டா டன்னுரு வேறு பாட்டை
ஆடியு ணோக்கி நானோ வல்லனோ வெனைத்தான் கைக்கொண்
டோடினர் பிறரு முண்டோ வுயிரன்னான் வந்திங் கென்னைத்
தேடினென் செய்கே னென்னைத் தேடித்தா சேடி யென்றாள். (௭௪)

களித்தவ ளொருத்தி நின்ற வாடியுட் கணவன் றன்பின்
ஒளித்தவ னுருவுந் தானு நேர்பட வுருத்து நோக்கித்
துளித்தகண் ணீர ளாகி யேதிலா டோடோய்க் கின்பங்
குளித்தனை யிருத்தி யோவென் றுதைத்தனள் கோப மூண்டாள். (௭௫)

இளம்புளிந் தயிர்வி ராய வின்சுவை பொதிந்த சோறு
வளம்பட விருந்தி னோடு மருந்துவார் வசந்த வீணை
களம்படு மெழாலி னோடு கைவிர ணடாத்திக் காமன்
உளம்புகுந் தலைப்ப வெண்ணெய்ப் பாவைபோ லுருகிச் சோர்வார். (௭௬)

இவ்விள வேனிற் காலத் தின்னுயிர்த் துணைவி யோடும்
செவ்விய செங்கோ னேமிச் செண்பக மாற னோர்நாள்
கைவினை வல்லோன் செய்த கதிர்விடு காந்தக் குன்றில்
வெவ்விய வேடை நீப்பா னிருந்தனன் வேறு வைகி. (௭௭)

மாந்தளி ரீன்று கோங்கு வண்டளை வரும்பித் தண்டேங்
காந்தள்செங் கமல மாம்பல் சண்பகங் கழுநீர் பூத்துச்
சாய்ந்தமென் கொடியுந் தானுந் தனியிடத் திருப்பா னேரே
வாய்ந்ததோர் நாற்றந் தோன்ற வசைந்தது வசந்தத் தென்றல். (௭௮)

வெவ்விய வேலான் வீசும் வாசமோந் தீது வேறு
திவ்விய வாச மாக விருந்தது தென்றல் காவில்
வௌவிய வாச மன்று காலுக்கும் வாச மில்லை
எவ்வியல் வாச மேயோ விதுவென வெண்ணங் கொள்வான். (௭௯)

திரும்பித்தன் றேவி தன்னை நோக்கினான் றேவி யைம்பால்
இரும்பித்தை வாச மாகி யிருந்தது கண்டிவ் வாசஞ்
சுரும்பிற்குந் தெரியா தென்னாச் சூழ்ந்திறும் பூது கொண்டீ
தரும்பித்தைக் கியல்போ செய்கை யோவென வையங் கொண்டான். (௮௦)

ஐயுறு கருத்தை யாவ ராயினு மறிந்து பாடல்
செய்யுந ரவர்க்கே யின்ன வாயிரஞ் செம்பொ னென்றுக்,
கையுறை வேலா னீந்த பொற்கிழி கைக்கொண் டேகி
மெய்யுணர் புலவர் முன்னாத் தூக்கினார் வினைசெய் மாக்கள். *(௮௧)

வங்கத்தார் பொருள்போல் வேறு வகையமை கேள்வி நோக்கிச்
சங்கத்தா ரெல்லாந் தம்மிற் றனித்தனி தேர்ந்து தேர்ந்து
துங்கத்தார் வேம்ப னுள்ளஞ் சூழ்பொரு டொழாவி யுற்ற
பங்கத்தா ராகி யெய்த்துப் படருறு மனத்த ரானார். (௮௨)

வேறு.

அந்த வேலையி லாதி சைவரில்
வந்த மாணவன் மணஞ்செய் வேட்கையான்
முந்தை யாச்சிம முயலும் பெற்றியான்*
தந்தை தாயிலான் றருமி யென்றுளான். (௮௩)

ஒரு— னான்முகத் தொருவன் மார்புறை
திருவ னாடருந் தேவ னாலுரு
அருவ நாலகன் றனைத் தன்கவி
வெருவ நாடிமுன் வீழ்ந்து வேண்டுவான். (௮௪)

தந்தை தாயிலேன் றனிய னாகிய
மைந்த னேன்புது வதுவை வேட்கையேன்
சிந்தை நோய்செயுஞ் செல்ல றீர்ப்பதற்
கெந்தை யேயிது பதமென் றேத்தியே. (௮௫)

நெடிய வேதநா னிறைய வாகமம்
முடிய வோதிய முறையி னிற்கெனும் †
வடிவி லில்லற வாழ்க்கை யின்றிநின்
அடிய ருச்சனைக் கருக னாவனோ. (௮௬)

ஐய யாவையு மறிதி யேகொலாம்
வையை நாடவன் மனக்க ருத்துணர்ந்
துய்ய வோர்கவி யுரைத்தெ னக்கருள்
செய்ய வேண்டுமென் றிரந்து செப்பினான். (௮௭)

தென்ன வன்குல தெய்வ மாகிய
மன்னர் கொங்குதேர் வாழ்க்கை யின்றமிழ் ‡
சொன்ன லம்பெறச் சொல்லி நல்கினார்
இன்ன றீர்ந்தவ னிறைஞ்சி வாங்கினான். (௮௮)

பொற்ற னிர்ச்சடைப் புவன நாயகன்
சொற்ற பாடல்கைக் கொண்டு தொன்னிதி
பெற்றெ டுத்தவன் போன்று பீடுறக்
கற்ற நாவலர் கழக நண்ணினான். (௮௯)

---

* ஆச்சிரமம் - ஆச்சிமம் என்றாயிற்று.

† நிற்கெனும் - நிற்பேனாயினும். நிற்கினும் என்றும் பாடம்.

‡ தருமிக்குக் கொடுத்தருளிய பாடல் வருமாறு:—"கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி—காமஞ் செப்பாது கண்டது மொழிமோ—பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்—செறியெயிற் றரிவை கூந்தலி—னறியவு முளவோநீ யறியும் பூவே." குறுந்தொகை. ௨.

கல்வி யாளர்தங் கையி னீட்டினான்
வல்லை யாவரும் வாங்கி வாசியாச்
சொல்லின் செல்வமும் பொருளுந் தூக்கியே
நல்ல நல்லவென் றுவகை நண்ணினார். (௬0)

அளக்கில் கேள்வியா ரரசன் முன்புபோய
விளக்கி யக்கவி விளம்பி னார்கடன்
உளக்க ருத்துநே ரொத்த லாற்சிரந்
துளக்கி மீனவன் மகிழ்ச்சி தூங்கினான். (௬௧)

உணர்ந்த கேள்வியா ரிவரொ டொல்லைபோய்ப்
புணர்ந்த வாயிரம் பொன்னு மின்றமிழ்
கொணர்ந்த வேதியன் கொள்க வென்றென
மணந்த தாரினான் மகிழ்ந்து நல்கினான். (௬௨)

வேந்த னேவலால் விபுதர் தம்மொடும்
போந்து மீண்டவைப் புறம்பு தூங்கிய
ஆய்ந்த பொற்கிழி யறுக்கு நம்பியை
நேர்ந்து கீரனில லெனவி லக்கினான். (௬௩)

குற்ற மிக்கவிக் கென்று கூறலுங்
கற்றி லானெடுங் காலம் வெம்பசி
உற்ற வன்கலத் துண்ணு மெலலைகைப்
பற்ற யாடினான் பண்பு பற்றினான். (௬௪)

உலர்ந்த நெஞ்சுகொண் டொதுங்கி நாயகன்
நலந்த ருங்கழ னண்ணி னானவன்
மலர்ந்த பாடலகொண் டறிஞா வைகிடத்
தலர்ந்த சிந்தைகொண் டடைந்த மைந்தனே. (௬௫)

செயயுள் கொண்டுபோய்த் திருமுன் வைத்துளப்
பையுள் கொண்டவப் பனவ னெனனைநீ
மையுள் கண்டவிவ் வழுவு பாடலைக்
கையு ணல்கினாய் கதியி லேற்கெனா. (௬௬)

வேறு.

வறுமைநோய் பிணிப்பப் பன்னாள் வழிபடு மடியே னின்பாற்
பெறுபொரு ளிழந்தே னென்று பேசிலேன் யார்க்கு மேலாங்
கறைகெழு மிடற்றோய் நின்றன் கவிக்குற்றஞ் சில்வாழ் நாட்சிற்
றறிவுடைப் புலவர் சொன்னா லாருனை மதிக்க வல்லார். (௬௭)

எந்தையிவ் விகழ்ச்சி நின்ன தல்லதை யெனக்கியா தென்னாச்
சிந்தைநோ யுழந்து சைவச் சிறுவனின் றிரங்க யார்க்கும்
பந்தமும் வீடும் வேதப் பனுவலும் பயனு மான
சுந்தர விடங்க னங்கோர் புலவனாய்த் தோற்றஞ் செய்தான். (௬௮)

கண்டிகை பூந்தாணி யாழி கதிர்முடி வயிரம் வேய்ந்த
குண்டலங் குடிகொண் டாகத் தழகெலாங் கொள்ளை கொள்ளத
தண்டமிழ் மூன்றும் வல்லோன் றானெனக் குறியிட் டாங்கே
புண்டர நுதலிற் பூத்துப் பொய்யிருள் கிழித்துத் தள்ள. (௬௯)

விரிகதிர்ப் படாத்திற் போர்த்த மெய்ப்பையு ளடங்கிப் பக்கத்
தெரிமணிக் கடகத் திண்டோ ளிளையவ ரடைப்பை யோடுங்
குருமணிக் களாஞ்சி யம்பொற் கோடிகந் தாங்க முத்தாற்
புரிமதிக் குடைக்கீழ்ப் பொற்காற் கவரிபால் புரண்டு துள்ள. (௧௦௦)

சொல்வரம் பிகந்த பாத மென்பது தோன்ற வேத
நல்லபா துகையாய்ச் சூட நவின்றன கற்றுப் பாட
வல்லவர் மறையி னாறு மனுமுதற் கலைபோற் பின்பு
செல்லநூ லாய்ந்தோர் வைகுந் திருந்தவைக் களத்தைச் சேர்ந்தான். (௧௦௧)

ஆரவை குறுகி நேர்நின் றங்கிருந் தவரை நோக்கி
யாரைநங் கவிக்குக் குற்ற மியம்பினா ரென்னா முன்னங்
கீரனஞ் சாது நானே கிளத்தினே னென்றா னின்ற
சீரணி புலவன் குற்றம் யாதெனத் தேராக் கீரன் (௧௦௨)

சொற்குற்ற மின்று வேறு பொருட்குற்ற மெ[illegible] றூய
பொற்குற்ற வேணி யண்ணல் பொருட்குற்ற மென்னை யென்றான்
தற்குற்றம் வருவ தோரான் புனைமலர்ச் சார்பா லன்றி
அற்குற்ற குழற்கு நாற்ற மில்லையே யென்றா னையன். (௧௦௩)

பங்கய முகமென் கொங்கைப் பதுமினி குழலோ வென்ன
அங்கது மனைத்தே யென்றா னாலவா யுடையான் றெய்வ
மங்கையர் குழலோ வென்ன வன்னது மந்தா ரத்தின்
கொங்கல ரளைந்து நாறுங் கொள்கையாற் செய்கைத் தென்றான். (௧௦௪)

பரவிநீ வழிபட் டேத்தும் பரஞ்சுடர் திருக்கா ளத்தி
அரவுநீர்ச் சடையார் பாகத் தமர்ந்தஞா னப்பூங் கோதை
இரவினீர்ங் குழலு மற்றோ வெனவஃது மற்றே யென்னா
வெருவிலான் சலமே முற்றச் சாதித்தான் விளைவு நோக்கான். (௧௦௫)

கறைவார் சடையா னெற்றிக் கண்ணினைச் சிறிதே காட்டப்
பற்றுவா னின்னு மஞ்சா னும்பரார் பதிபோ லாகம்
முற்றுநீர் கண்ணா னாலு மொழிந்தநும் பாடல் குற்றங்
குற்றமே யென்றா னன்பா லாகிய குற்றந் தேரான். (௧௦௬)

வேறு.

தேய்ந்த நாண்மதிக் கண்ணியா னுதல்விழிச் செந்தீப்
பாய்ந்த வெம்மையிற் பொறாதுபொற் பங்கயத் தடத்துள்
ஆய்ந்த நாவலன் போய்விழுந் தாழ்ந்தன னவனைக்
காய்ந்த நாவல னிம்மெனத் திருவுருக் கரந்தான். (௧௦௭)

தருமிக்குப்பொற்கிழியளித்தபடலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௨,௫௯௯.

ஐம்பத்துமூன்றாவது

கீரனைக்கரையேற்றியபடலம்.

மார னைப்பொடி கண்டவ னந்தண மைந்தனூ
கார நற்கன கக்கிழி யீந்த தறைந்தனம்
ஏர னத்திரள் சூழ்மல ரோடை யிடத்தினுங்
கீர னைக்கரை யேற்றிய வாறு கிளத்துவாம். (க)

தாழ்ந்த வேணிய னெற்றி முளைத்த தழற்கணாற்
போழ்ந்த நாவல னுடக பங்கயப் பொய்கைவாய்
வீழ்ந்த ரும்படர் வேலையில் வீழ்ந்தனன் விம்முறச்
சூழ்ந்த நாவலர் கண்டு பொருது துளங்குவார். (உ)

ஏன்ற வேந்த னிலாக்குடி யீட்டமு மின்கதிர்
கான்ற நாயக மாமணி போகிய கண்டியும்
ஆன்ற ஞான மிலாதவர் கல்வியு மானதே
சான்ற கீர னிலாதவை கூடிய சங்கமே. (ங)

ஐய சொற்பொரு டன்வடி வானவ ராலவாய்
மைத ழைத்த மிடற்றினர் தம்மொடும் வாதுதான்
செய்த விப்பிழை யோபெரி தெப்படி தீருமோ
உய்வ தற்புத மேயென யாவரு முன்னினார். (ச)

எய்தி வெள்ளி மலைபெயர்த் தானு மிறுத்ததன்
கையில் வீணைதொட் டின்னிசை பாடக் கனிந்தவன்
செய்த தீங்கு பொறுத்தது மன்றித்தின் டேரொடும்
மொய்கொள் வாளுங் கொடுத்தனன் புண்ணிய மூர்த்தியே.

யாவ ராலு மகற்றரி திப்பிழை யாவர்க்குந்
தேவ ராமவ ரேதிரு வுள்ளந் திரும்பினாற்
போவ தேயிது வேதுணி பென்று புகன்றுபோய்ப்
பாவ லோர்பரன் றாணிழ லிற்பணிந் தேத்துவார். (சு)

திருத்த னேசர ணஞ்சர ணம்மறைச் சென்னிமேல்
நிருத்த னேசர ணஞ்சர ணந்நிறை வேதநூல்
அருத்த னேசர ணஞ்சர ணந்திரு வாலவாய்
ஒருத்த னேசர ணஞ்சர ணங்க ளுனக்குநாம். (எ)

பாயு மால்விடை மேல்வரு வோய்பல் லுயிர்க்கெலாந்
தாயுந் தந்தையு மாகுநின் றண்ணளி தாமரைக்
கேயு மாதவன் போனல்ல தீய வியற்றினார்க்
காயு மின்பமுந் துன்பமு மாக்குவ தாதலால். (அ)

அத்த கற்ற செருக்கி னறிவழி கீரனின்
வித்த கக்கவி யைப்பழு தென்ற விதண்டையான்
மத்த கக்கணை விழித்து வெதுப்பின் மலர்ந்தபொன்
முத்த கக்கம லத்திடை வீழ முடுக்கினாய். (கூ)

இருணி றைந்த மிடற்றடி கேளினி யிப்பிழை
கருணை செய்து பொறுத்தரு ளென்று கபிலனும்
பரண னும்முத லாகிய பாவலர் யாவருஞ்
சரண மென்று விழுந்திரந் தாரடி சாரவே. (௧௦)

வேறு.

அக்கீர வேலை யால மயின்றவெங் கருணை வள்ளல்
இக்கீர மழலைத் தீஞ்சொ லிறைவியோ டெழுந்து போந்து
நக்கீரன் கிடந்த செம்பொ னளினப்பூந் தடத்து ஞாங்கர்ப்
புக்கீர மதுரத் தீஞ்சொற் புலவர்தங் குழாத்து ணின்றான். (௧௧)

அனற்கணா னோக்கி னான்பின் னருட்கணா னோக்க வாழ்ந்த
புனற்கணே கிடந்த கீரன் பொறிபுலன் கரண மெல்லாங்
கனற்கணார் தமவே யாகக் கருணைமா கடலி லாழ்ந்து
வினைக்கணே யெடுத்த யாக்கை வேறிலன் புருவ மானான். (௧௨)

போதை யாருலக மீன்ற புனிதையார் பராஞா னபூங்
கோதையார் குழற்குத் தீங்கு கூறிய கொடிய நாவின்
றீதையார் பொறுப்பா ரேயோ வவரன்றித் திருக்கா ளத்திக்
காதையார் குழையி னாரைக் காளத்தி கயிலை யென்னா. (௧௩)

எடுத்தசொன் மாறி மாறி யிசையநே ரிசைவெண் பாவாற்
றொடுத்தவந் தாதி சாத்தத் துணைச்செவி மடுத்து நேர்வந்
தடுத்தவன் கையைப் பற்றி யகன்கரை யேற்றி னார்தாள்
கொடுத்தெழு பிறவி வேலைக் கொடுங்கரை யேற்ற வல்லார். (௧௪)

கைதந்து கரையே றிட்ட கருணையங் கடலைத் தாழ்ந்து
மைதந்த கயற்க ணாளை வந்தித்துத் தீங்கு நன்கு
செய்தந்தோர்க் கிகலு மன்புஞ் செய்தமை பொருளாச் செய்யுட்
பெய்தந்து பாடுகின்றான் பிரானரு ணாடு கின்றான். (௧௫)

அறனிலா னிழைத்த வேள்வி யழித்தபே ராண்மை போற்றி
மறனிலாச் சண்டிக் கீந்த மாண்பெருங் கருணை போற்றி
கறுவிவீழ் கூற்றைக் காய்ந்த கனைகழற் கமலம் போற்றி
சிறுவனுக் கழியா வாழ்நா ளளித்தருள் செய்தி போற்றி. (௧௬)

சலந்தர னுடலங் கீண்ட சக்கரப் படையாய் போற்றி
வலந்தரு மதனை மாயோன் வழிபடக் கொடுத்தாய் போற்றி
அலர்ந்தசெங் கமலப் புத்தே ளடுச்சிர மரிந்தாய் போற்றி
சிலந்தியை மகுடஞ் சூட்டி யரசருள் செல்வம் போற்றி. (௧௭)

திரிபுரம் பொரிய நக்க சேவகம் போற்றி மூவர்க்
கருளிய தலைமை போற்றி யநங்கனை யாகந் தீய
எரியிடு நயனம் போற்றி யிரதிவந் திரப்ப மீளக்
க்ரியவன் மகனுக் காவி யுதவிய கருணை போற்றி. (௧௮)

நகைத்திட வந்த வந்த நகுசிரந் திருகி வாங்கிச்
சிகைத்திரு முடிமேல் வைத்த திண்டிறல் போற்றி கோயில்
அகத்தவி சுடரைத் தூண்டு மெலிக்கர சாள மூன்று
சகத்தையு மளித்த தேவர் தம்பிரான் சரணம் போற்றி. (௧௯)

பொருப்பகழ்ந் தெடுத்தோன் சென்னி புயமிற மிதித்தாய் போற்றி
இருக்கிசைத் தவனே பாட விரங்கிவாள் கொடுத்தாய் போற்றி
தருக்கொடு மிருவர் தேடத் தழற்பிழம் பானாய் போற்றி
செருக்குவிட் டவரே பூசை செய்யநேர் நின்றாய் போற்றி. (உ0)

பருங்கைமா லயானை யேனம் பாய்புலி யரிமான் மீனம்
இருங்குறள் யாமை கொண்ட விகல்வலி கடந்தாய் போற்றி
குரங்குபாம் பெறும்பு நாரை கோழியா னலவன் றேரை
கருங்குரீஇ கழுகி னன்புக் கிரங்கிய கருணை போற்றி. (உக)

சாலநா ளிழைத்த தீங்குக் கென்னையுந் தண்டஞ் செய்த
கோலமே போற்றி யஞ்சிக் கொடியனேன் றொடுத்த புன்சொன்
மாலைகேட் டென்னை யாண்ட மலைமகண் மணாள போற்றி
ஆலவா யடிகள் போற்றி யம்மைநின் னடிகள் போற்றி. (உஉ)

வேறு.

ஆய லந்தனே னடியனேற் கருளரு ளென்றுக்
கோவ மும்பிர சாதமுங் குறித்துரை பனுவற்
பாவ லங்கலாற் பரனையும் பங்கிலங் கயற்கட்
பூவை தன்னையு முறைமுறை போற்றியென் றேத்தா. (உங)

தேவ தேவனைப் பின்பெருந் தேவபா ணியொடுந்
தாவி லேழிசை யேழுகூற் றிருக்கையுஞ் சாத்திப்
பூவர் * சேவடி சென்னிமேற் பூப்பவீழ்ந் தெழுந்தான்
பாவ லோர்களுந் தனித்தனி துதித்தனர் பணிந்தார். (உச)

துதித்த கீரனுக் கின்னருள் சுரந்துநீ முன்போன்
மதித்த நாவலர் குழாத்திடை வதியென மறைநூல்
உதித்த நாவினார் கருணைசெய் துருக்கரந் தயன்சேய்
விதித்த கோயில்புக் கமர்ந்தனர் விளங்கிழை யோடும். (உரு)

கற்ற கீரனுங் கலைஞருங் கழகமண் டபத்தில்
உற்ற வாடகக் கிழியறுத் தந்தணற் குதவிக்
கொற்ற வேந்தனும் வரிசைகள் சிலசெயக் கொடுப்பித்
தற்ற நீங்கிய கல்வியின் செல்வரா யமர்ந்தார். (உசு)

வேறு.

சம்பக மாற னென்னுந் தமிழ்நர்தம் பெருமான் கூடல்
அம்பக நுதலி னானை யங்கயற் கண்ணி னானை
வம்பக நிறைந்த செந்தா மரையடி வந்து தாழ்ந்து
நம்பக நிறைந்த வன்பாற் பல்பணி நடாத்தி வைகும். (உஎ)

கீரனைக்கரையேற்றியபடலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - உ,ருசுசு.

பூவரு என்பது பூவர் என விகாரமாயிற்று; வரு உவமச்சொல.

ஐம்பத்துநான்காவது

கீரனுக்கிலக்கணமுபதேசித்தபடலம்.

கொன்றையந் தெரியல் வேய்ந்த கூடலெம் பெருமான் செம்பொன்
மன்றலங் கமலத் தாழ்ந்து வழிபடு நாவலோனை
அன்றகன் கரையே றிட்ட வருளுரை செய்தே மிப்பாற்
றென்றமி ழனையான் றேறத் தெருட்டிய திறனுஞ் சொல்வாம். (௧)

முன்புநாள் மாடக் கூடன் முழுமுத லாணை யாற்போய்
இன்புற வறிஞ ரீட்டத் தெய்தியாங் குறையுங் கீரன்
வன்புறு கோட்டந் தீர்ந்து மதுரையெம் பெருமான் றாளில்
அன்புறு மனத்த னாகி யாய்ந்துமற் றிதனைச் செய்வான். (௨)

ட்டவிழ் கடுக்கை யணணல் கண்ணிற லவிந்த காலை
பட்டவிழ் மலரோ னானு மாயவ னானுங் காக்கப்
பட்டவ னல்ல னன்ற னுதல்விழிப் படுதீ நம்மைச்
சுட்டபோ தருப்பந் தீர்த்துக் காத்ததிச் சுவண கஞ்சம். (௩)

இப்பெருந் தடமே யெம்மை யெம்மையுங் காப்ப தென்னாக்
கப்பிலா மனத்தான் மூன்று காலமு மூழ்கி மூழ்கி
அப்பனை யால வாயெம் மடிகளை யடியா ரேம
வைப்பினை யிறைஞ்சி நித்தம் வழிபடு நியமம் பூண்டான். (௪)

மையறு மனத்தான் வந்து வழிபடு நியம நோக்கிப்
பையர வாரம் பூண்ட பரஞ்சுடர் மாடக் கூடல்
ஐயனு மணிய னாகி யகமகிழ்ந் தவனுக் கொன்று
செய்யநன் கருணை பூத்துத் திருவுளத் திதனைத் தேர்வான். (௫)

இலக்கண மிவனுக் கின்னுந் தெளிகில வீதன லாய்ந்த
நலத்தசொல் வழூஉச்சொ லென்ப தறிகில னவைதீர் கேள்விப்
புலத்தவர் யாரைக் கொண்டு போதித்து மிவனுக் கென்ற
மலைத்தனு வளைத்த முக்கண் மன்னவ னுன்னு மெல்லை. (௬)

பங்கயச் செங்கை கூப்பிப் பாலின்னேர் மொழியாள் சொல்வாள்
அங்கண வங்கை நெல்லிக் கனியென வனைத்துங் கண்ட
புங்கவா நினது சங்கைக் குத்தரம் புகல வல்லார்
எங்குளா ரேனு மென்னெஞ் சுதிப்பதொன் றிசைப்பே னையா. (௭)

பண்டொரு போது வெள்ளிப் பனிவரை யிடத்துன் பாங்கர்ப்
புண்டவழ் குலிசக் கோமான பூமகன் மாயப் புத்தேள்
அண்டருஞ் சனக னாதி யருந்தவர் பிறரு மீண்டிக்
கொண்டன ரிருந்தா ரிந்தக் குவலயம் பொறு மாதோ. (௮)

தாழ்ந்தது வடகீழெல்லை யுயர்ந்தது தென்மேற் கெல்லை
சூழ்ந்தது கண்டு வானோர் தொழுதுனைப் பரவி யைய
ஊழ்ந்திடு மரவம் பூண்டோ யொருவனின் னொப்பா னங்கே
வாழ்ந்திட விடுத்தா லிந்த வையநேர் நிற்கு மென்றார். (௯)

பைத்தலை புரட்டு முந்நீர்ப் பௌவமுண் டவனே யெம்மை
ஒத்தவ னனையான் வாழ்க்கைக் குரியளா கியவு லோபா
முத்திரை யிமவான் பெற்ற முகிழ்முலைக் கொடியொப் பாளென்
றத்திரு முனியை நோக்கி யாயிடை விடுத்தா யன்றே (௧௰)

விடைகொடு போவா னொன்றை வேண்டினா னேகுந் தேயந்
தொடைபெறு தமிழ்நா டென்று சொல்லுப வந்த நாட்டின்
இடைபயின் மனித்த ரெல்லா மின்றமி ழாய்ந்து கேள்வி
உடையவ ரென்ப கேட்டார்க் குத்தர முரைத்தல் வேண்டும். (கக)

சித்தமா சகல வந்தச் செந்தமி ழியலா றன்னை
அத்தனே யருளிச் செய்தி யென்றன னனையான் றேற
வைத்தனை முதலா றன்னை மற்றது தெளிந்த பின்னும்
நித்தனே யடியே னென்று நின்னடி காண்பே னென்றான். (கஉ)

கடம்பமா வனத்தி லெம்மைக் கண்டனை யிறைஞ்சி யுள்ளத்
திடம்பெற யாது வேட்டா யவையெலா மெம்பாற் பெற்றுத்
திடம்பெற மலயந் தெய்தி யிருக்கென விடுத்தாய் சென்று
குடம்பெறு முனியு மாங்கே யிருக்கின்றான் கொடியி னோடும். (கங)

இனையதுன் றிருவுள் ளத்துக் கிசைந்ததே லிவற்குக் கேள்வி
அனையமா தவனைக் கூவி யுணர்தென வணங்கு கூற
இனையநா ணிகழ்ச்சி யெல்லா மறந்திடா இன்று சொன்னாய்
அனையதே செய்து மென்னா வறிவனை நினைந்தா னையன். (கச)

வேறு.

உடைய நாயகன் றிருவுள முணர்ந்தனன் முடிமேல்
அடைய வஞ்சலி முகிழ்த்தன னருந்தவ விமானத்
திடைபு குந்தனன் பன்னியோ டெழுந்தன னகல்வான்
நடைய னாகிவந் தடைந்தன னற்றமிழ் முனிவன். (கரு)

இயங்கு மாதவத் தேரினும் பன்னியோ டிழிந்து
புயங்க னாலயம் புகுந்துநாற் புயம்புடை கிளைத்துத்
தயங்கு செம்பவ ளாசலந் தன்னையு மதன்பால
வயங்கு மிந்திர நீலமால் வரையையும் பணியா. (கசு)

பெருகு மன்புளந் துளும்பமெய் யானந்தம் பெருக
அருகி ருந்தன னாவயிற் கீரனு மம்பொன்
முருக விழ்ந்ததா மரைபடிந் திறைவனை முன்போல்
உருகு மன்பினா லிறைஞ்சுவா னொல்லைவந் தடைந்தான். (கஎ)

இருந்த மாதவச் செல்வனை யெதிர்வர நோக்கி
அருந்த வாவிவற் கியற்றமி ழமைந்தில வெம்பாற்
றெரிந்த நீயதை யரிறபத் தெருட்டெனப் பிணியும்
மருந்து மாகிய பெருந்தகை செய்யவாய் மலர்ந்தான். (கஅ)

வெள்ளை மாமதிப் பிளவணி வேணியங் கருணை
வள்ள லார்பணி சிரத்தினு மனத்தினுந் தாங்கிப்
பள்ள மேழையும் பருகினோன் பணியுநக் கீரன
உள்ள மாசற வியாகர ணத்தினை யுணர்த்தும். (ககூ)

இருவ கைப்புற வுரை தழீஇ யெழுமத மொடுநாற்
பொருபொ டும்புணர்ந் தையிரு குற்றமும் போக்கி
ஒருவி லையிரண் டழகொடு முத்தியெண் ணான்கும்
மருவு மாதிநூ லினைத்தொகை வகைவிரி முறையால். (உ0)

கருத்துக் கண்ணழி வாதிய காண்டிகை யானும்
விருத்தி யானுநூற் கிடைப்பொருளெக்கற விளக்கித்
தெரித்து ரைத்தன னுரைத்திடு திறங்கண்டு நூலின்
அருத்த மேவடி வாகிய வாதியா சிரியன். (உ௧)

தருக்கு மின்பமுங் கருணையுந் தழையமா தவனைத்
திருக்க ரங்களான் மகிழ்ச்சியுட் டிளைத்திடத் தடவிப்
பெருக்க வேண்டிய பேறெலாம் பெறுக நல்கி
இருக்கை யிற்செல விடுத்தன னலவா யிறைவன். (உஉ)

பொன்ன னாளொடுங் குறுமுனி விடைகொடு போன
பின்னை யாருயிர்க் கிழுத்திதன் பிரானைநேர் நோக்கி
என்னை நீயிவற் குணர்த்திடா தித்தவப் பொதியின்
மன்ன னுணர்த்த தியதென மதுரைநா யகனும். (உ௩)

தன்னை நீத்தலும் வழிபடுந் தகுதியோர் சாலப்
பொன்ன ளிப்பவர் தொடுத்தமற் சரமிலாப் புலை
சொன்ன சொற்கட வாதவர் துகடவிர் நெஞ்சத்
தின்ன வர்க்குநூல் கொளுத்துவ தறனென விசைப்ப. (உ௪)

இவனெ டுத்தமற் சரத்திறல் யாமுணர்த் தாதத்
தவனை விட்டுணர்த் தினமெனச் சாற்றினான் கேட்டுக்
கவலை விட்டக மகிழ்ச்சிகொண் டிருந்தனள் கதிர்கால
நவம ணிக்கலம் பூத்ததோர் கொடிபுரை நங்கை. (உ௫)

கற்ற கீரனும் பின்புதான் முன்செய்த கவிகண்
முற்று மாய்ந்துசொல் வழுக்களும் வழாநிலை முடியும்
உற்று நோக்கின னறிவின்றி முழுதொருங் குணர்ந்தோன்
சொற்ற பாடலிற் பொருள்வழுச் சொல்லினே னென்று. (உ௬)

மறையி னந்தமுந் தொடாததா ணிலந்தொட வந்த
நிறைப ரஞ்சுடர் நிராமய நிருத்தற்குப் பிழைத்தேன
சிறிய கேள்வியோர் கழியவுஞ் செருக்குடை யோரென்
றறிஞர் கூறிய பழஞ்சொலென் னளவிற்றே யம்ம. (உஎ)

அட்ட மூர்த்திதன் றிருவடிக் கடியனேன் பிழைக்கப்
பட்ட தீங்கினு லெனையுவ னுதல்விழிப் படுதீச்
சுட்ட தன்றியென் னெஞ்சமுஞ் சுடுவதே யென்றென்
றுட்ட தும்பிய விழுமநோ யுவரியு ளாழ்ந்தான். (உஅ)

மகவை யீன்றதாய் கைத்திடு மருந்துவாய் மடுத்துப்
பகைப டும்பிணி யகற்றிடும் பான்மைபோ லென்னை
இகவி ழைத்தறி வுறுத்தினற் கேழையேன் செய்யத்
தகுவ தியாதென வரம்பிலா மகிழ்ச்சியுட் டாழ்ந்தான். (உகூ)

மாத வன்றனக் காலவாய் மன்னவ னருளாற்
போத கஞ்செய்த நூலினைப் புலவரே னோர்க்கும்
ஆத ரஞ்செயக் கொளுத்தியிட் டிருந்தன னமலன்
பாத பங்கய மூழ்கிய பத்திமைக் கீரன். (௩0)

கீரனுக்கிலக்கணமுபதேசித்தபடல முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - உ,ருகூசு.

ஐம்பத்தைந்தாவது

சங்கத்தார்கலகந்தீர்த்தபடலம்.

காமனைப் பொடிபாய்க் கண்ட கண்ணுத றென்னூல் கீர
நாமநற் புலவற் கீந்த நலமிது பொலம்பூங் கொன்றைத்
தாமனச் சங்கத் துள்ளார் தலைதடு மாற்றந் தேற
வூமனைக் கொண்டு பாட லுணர்த்திய வொழுக்கஞ் சொல்வாம். (க)

அந்தமில் கேள்வி யோரெண் ணறுவரும் வேறுவேறு
செந்தமிழ் செய்து தம்மிற் செருக்குறு பெருமை கூறித்
தந்தமின் மாறுய்த் தத்தந் தராதர மளக்க வல்ல
முந்தைநூன் மொழிந்த வாசான் முன்னர்வந் தெய்தினாரே. (உ)

தொழுதன ரடிகள் யாங்க டொடுத்தவிப் பாட றம்முள்
விழுமிதுந் தீதுந் தூக்கி வேறுபா டளந்து காட்டிப்
பழுதறுத் தையந் தீரப் பணிக்கெனப் பணிந்தார் கேட்டு
முழுதொருங் குணர்ந்த வேத முதல்வனு முக்கண் மூர்த்தி. (௩)

இருவருந் தருவ நீண்ட வெரியழற் றூணிற் றோன்றும்
உருவென வறிவா னந்த வுண்மையா யுலகுக் கெல்லாங்
கருவென முளைத்த மூல விலிங்கத்து ணின்றுங் காண்டற்
கரியதோர் புலவ னாகித் தோன்றியொன் றருளிச் செய்வான். (ச)

வேறு.

இம்மாநக ருள்ளானொரு வணிகன்றன பதியென்
றம்மாநிதிக கிழவோன்மனை குணசாலினி யனையார்
தம்மாதவப் பொருட்டால்வெளிற் றறிவாளரைத் தழுவும்
பொய்ம்மாசற வினன்போலவ தரித்தானொரு புத்தேள். (ரு)

ஓயாவிறன் மதனுக்கிணை யொப்பானவ னூமச்
சேயாமவ னிடைநீருரை செய்யுட்கவி யெல்லாம்
போயாடுமி னனையானது புந்திக்கிசைந் தானன்
றுயாவரு மதிக்குந்தமி ழதுவேயென வறைந்தான். (சு)

வன்றண்மழ விடையாயவன் மணிவாணிக னூமன்
என்றலவன் கேட்டெங்ஙன மிப்பாடலிற் கிடக்கும்
நன்றானவுந் தீதானவு நயந்தாய்ந்ததன் றன்மை
குன்றாவகை யறைவானென மன்றாடிய கூத்தன். (எ)

மல்லார்தடம் புயவாணிக மைந்தன்றனக் கிசையச்
சொல்லாழமும் பொருளாழமுங் கண்டான்முடி துளக்காக்
கல்லார்புயம் புளகித்துளங் களிதூங்குவன் கலகம்
எல்லாமகன் றிடுமுங்களுக் கென்றாலயஞ் சென்றான். (அ)

பின்பாவல ரெல்லாம்பெரு வணிகக்குல மணியை
அன்பாலழைத் தேகித்தம தவையத்திடை யிருத்தா
நன்பான்மலர் நறுஞ்சாந்துகொண் டருச்சித்தனர் நயந்தே
முன்பாவிரிக் கருங்கீந்தமிழ் மொழிந்தாரவை கேளா. (கூ)

மகிழ்ந்தான்சிலர் சொல்லாழசசியை மகிழ்ந்தான்சிலர் பொருளை
இகழ்ந்தான்சிலர் சொல்வைப்பினை யிகழ்ந்தான்சிலர் பொருளைப
புகழ்ந்தான்சிலர் சொல்லின்பமும் பொருளின்பமு மொருங்கே
திகழ்ந்தான்சிலர் சொற்றிண்மையும் பொருட்டிண்மையுந் தேர்ந்தே. ()

இத்தன்மைய னுகிக்கலை வல்லோர்தமி ழெல்லாஞ்
சித்தங்கொடு தெருட்டுஞ்சிறு வணிகன்றெருள் கீரன்
முத்தண்டமிழ் கபிலன்றமிழ் பரணன்றமிழ் மூன்றும்
அத்தன்மைய னறியுந்தொறு மறியுந்தொறு மெல்லாம். (௧௧)

நுழைந்தான்பொரு டொறுஞ்சொற்றொறு நுண்டீஞ்சுவை யுண்டே
தழைந்தானுடல புலனைந்தினுந் தணித்தான்சிரம் பணித்தான்
குழைந்தான்விழி வழிவேலையுட் குளித்தான்றனை யளித்தான்
விழைந்தான்புரி தவப்பேற்றினை விளைத்தான்களி திளைத்தான். (௧௨)

பல்காரொடு கடலிற்படு பவளஞ்சுடர் தரளம்
எல்லாநிறுத் தளப்பானென வியல்வாணிகக் குமரன்
சொல்லாழமும் பொருளாழமுந் துலைநாவெனத் தூக்க
நல்லாறறி புலவோர்களு நட்டாரிகல் விட்டார். (௧௩)

வே று.

உலகினுட் பெருகி யந்த வொண்டமிழ் மூன்றும் பாடற்
றிலகமாய்ச் சிறந்த வாய்ந்த தெய்வநா வலருந் தங்கள்
கலகமர் நவையிற் றீர்ந்து காசறு பனுவ லாய்ந்து
புலமிகு கோட்டி செய்து பொலிந்தன ரிருந்தார் போலும். (௧௪)

சங்கத்தார்கலகந்தீர்த்தபடல முற்றிற்று.

ஆக திருவிருத்தம் - ௨,௬௧௦.

ஐம்பத்தாறாவது

இடைக்காடன்பிணக்குத்தீர்த்தபடலம்.

குடைக்காடன் பசிக்கன்னக் குழியருத்தி வேட்கையறக் கொடுத்தகங்கைச்
சடைக்காடன் புலவரிக றணிவித்த முறையிதுமேற் றன்னைப் பாடுந் [போன
தொடைக்காடன் பகன்றிகழ்ந்த தென்னவனை முனிந்துதன்னைத் தொழுது
இடைக்காட னுடன்போய்ப்பின்பெழுந்தருளிப்பிணக்கறுத்தவியல்புசொல்வாம்.

இந்திரன்றன் பழிதுரத்தி யரசளித்துப் பின்புகதி யின்ப மீந்த
சுந்தரன்பொன் னடிக்கன்பு தொடுத்துநறுஞ் சண்பகத்தார் தொடுத்துச் சாத்தி
வந்தனைசெய் திருத்தொண்டின் வழிகசேற்பச் சண்பகப்பூ மாற வேந்தன்
அந்தரசூ டாமணியாஞ் சிவபுரத்து ணிறைசெல்வ மடைந்தா னிப்பால். (௨)

ஆற்றன்மிகு பிரதாப சூரியன்வங் கிசத்துவச னளிவில் சேர்த்து
சாற்றரிய விரிபுமருத் தனன்சோழ வங்கிசாந் தகன்றன் வென்றி
மாற்றரிய புகழ்ச்சேர வங்கிசாந் தகன்பாண்டி வங்கி சேசன்
தோற்றமுறு பரித்தேர்வங் கிசசிரோ மணிபாண்டீச் சுரன்றன் மன்றே. (௩)

துணிவுடைய குலத்துவசன் வங்கிசபூ டணமாறன் சோம சூடா
மணிகுலசூ டாமணியே யிராசசூ டாமணியே மாற்றார் போற்றிப்
பணியவரும் பூபசூ டாமணியே குலேசபாண் டியனே யென்னக்
கணிதமுறு பதினைவர் வழிவழிவந் துதித்துநிலங் காவல் பூண்டோர். (௪)

அத்தகைய பாண்டியருட் குலேசபாண் டியனென்னு மரசன் றேண்மேல்
வைத்தவனி தலம்புரப்பா னிலக்கணமு மிலக்கியமும் வரம்பு கண்டோன்
எத்தகைய பெருநூலு மெல்லைகண்டோ னுதவினு விவனுக் கேற
முத்தமிழோர் பயில்சங்க மிடங்கொடுத்த தனையமணி முழவுத் தோளான். (௫)

கழிந்தபெருங் கேள்வியினு னெனக்கேட்டு முழுதுணர்ந்த கபிலன் றன்பாற்
பொழிந்தபெருங் காதன்மிகு கேண்மையினு னிடைக்காட்டுப்புலவன் றென்சொன்
மொழிந்தரசன் றனைக்கண்டு மெனத்தொடுத்த பனுவலொன் றூரித் தீந்தேன்
வழிந்தொழுகு தாரானைக் கண்டுதொடுத் துரைப்பனுவல் வாசித் தானால். (௬)

வழுக்காத சொற்சுவையும் பொருட்சுவையும் பகிர்ந்தருந்த வல்லோ னுள்ளத்
தழுக்காற்றாற் றிரந்துளக்கா னகமகிழ்ச்சி சிறிதுமுகத் தலர்ந்து காட்டான்
எழுக்காயுந் திணிதோளா னென்றுமுறை யான்வாளா விருந்தா னுய்ந்த
குழுக்காத னண்புடையான் றனைமானம் புறந்தள்ளக் கோயில் புக்கான். (௭)

சந்நிதியில் வீழ்ந்தெழுந்து தமிழறியும் பெருமானே தன்னைச் சேர்ந்தார்
நன்னிதியே திருவால வாயுடைய நாயகனே நகுதார் வேம்பன்
பொன்னிதிபோ லளவிறந்த கல்வியுமிக் குளனென்று புகலக் கேட்டுச்
சொன்னிறையுங் கவிதொடுத்தே னவமதித்தான் சிறிதுமுடி துளக்கா னாகி. (௮)

பரிவாயின் மொழிதொடுத்து வருணித்தோர்க் ககமகிழ்ந்தோர் பயனு நல்கா
விரிவாய தடங்கடலே நெடுங்கழியே யடுங்கான விலங்கே புள்ளே
பொரிவாய பராரைமர நிரையேவான் றொடுகுடுமிப் பொருப்பே வெம்பும்
எரிவாய கொடுஞ்சுரமே யெனவிவற்றோ ரஃறிணையொத் திருந்தா னெங்காய். ()

என்னையிகழ்ந் தனனோசொல் வடிவாய்நின் னிடம்பிரியா விமையப் பாவை
தன்னையுஞ்சொற் பொருளான வுன்னையுமேயிகழ்ந்தனனென் றனக்கியாதென்று
முன்னைமொழிந் திடைக்காடன் றணியாத முனிவீர்ப்ப முந்திச் சென்றான்
அன்னவுரை திருச்செவியி னூற்றுபா டெனவுறைப்ப வருளின் மூர்த்தி. (௧0)

போனவிடைக் காடனுக்குங் கபிலனுக்கு மகத்துவகை பொலியு மாற்றான்
ஞானமய மாகியதன் னிலிங்கவுரு மறைத்துமையா நங்கை யோடும்
வானவர்தம் பிரானெழுந்து புறம்போய்த்தன் கோயிலினோர் வடபால் வைகை
ஆனநதித் தென்பாலோ ராலயங்கண் டங்கணினி தமர்ந்தான் மன்னோ. (௧௧)

சங்கவான் றமிழ்த்தெய்வப் புலவோரு முடனெழுந்து சைலவேந்தன்
மங்கைநா யகன்போன வழிபோயங் கிருந்தாரவ் வழிநாள் வைகற்
கங்குல்வாய் புலரவரும் வைகறையிற் பள்ளியுணர் காலத் தெய்தி
அங்கணா யகனடியார் சேவிப்பா ரிலிங்கவுரு வங்குக் காணார். (௧௨)

என்னவதி சயமோவீ தென்றயிர்த்தா ரிரங்கினா ரிதனை யோடி
மன்னவனுக் கறிவிப்பான் வேண்டுமெனப் புறப்பட்டு வருவா ராவி
அன்னவரைப் பிரிந்துறையு மணங்கனையா ரெனவுபல ரணங்கு நீத்த
பொன்னவிர்தா மரையெனவும் புலம்படைந்து பொலிவழிந்த புரமுங் கண்டார்.

அரசனிடைப் புகுந்துள்ள நடுநடுங்கி நாவுணங்கி யரசே யாமொன்
றுரைசெயவஞ் சுதுமெங்க ணாயகனைத் திருப்பள்ளி யுணர்ச்சி நோக்கி
மரைமலர்ச்சே வடிபணியப் புகுந்தனமின் றங்கவன்றன் வடிவங் காணேம்
புரமுநனி புலம்படைந்த தெனறழல்வே லெனச்செவியிற் புகுத்த லோடும். (௧௫)

வழுதியரி யணையிலிருந் தடியிறவீழ் பழுமரம்போன் மண்மேல் யாக்கை
பழுதிறவீழ்ந் துயிரொடுங்க வறிவொடுங்கி மட்பாவை படிந்தாங் கொல்லைப்
பொழுதுகிடந் தறிவுசிறி தியங்கவெழுந் தஞ்சலிக்கைப் போது கூப்பி
அழுதிருகண் ணீர்வெள்ளத் தாழ்ந்தடியே னெனபிழைத்தே னண்ணா லண்ணால்.

கொலையினையோ ரவுணர்புர நொடிவரையிற் பொடியாகக் குனித்த மேருச்
சிலையினையோ பழையசிவ புரத்தினையோ வருவிமணி தெறிகரும் வெள்ளி
மலையினையோ தம்மைமறந் துனைநினைப்பார் மனத்தினையோ வாழ்த்தும் வேதத்
தலையினையோ வெங்குற்றா யெங்குற்றா யென்றென்று தளருமெல்லை. (௧௬)

சிலர்வந்து மன்னவோ ரதிசயங்கண் டனம்வைகைத் தென்சா ராக
அலர்வந்தோன் படைத்தநாண் முதலொருகா லமுங்கண்ட தன்று கேள்வித்
தலைவந்த புலவரொடு மாலவா யுடையபிரா னானே செம்பொன்
மலைவந்த வல்லியொடும் வந்திறைகொண் டுறைகின்றான் மாதோ வென்றார். ()

அவ்வுரைதன் செவிநுழைந்து புகுந்தீர்ப்ப வெழுந்தரச னச்சத் தாழ்ந்து
தெவ்வாமுடித் தொகையிடறுங் கழற்காலா னடந்தேகிச் செழுநீர் வைகை
கௌவைநெடுந் திரைக்கரத்தாற் கடிமலர்தூஉய்ப் பணியத்தென்கரைமேல்வந்து
மௌவலிள முகைமூரன் மாதினொடு மிருக்கின்ற மணியைக் கண்டான். (௧௮)

படர்ந்துபணிந் தன்புகுக்குங் கண்ணீர்சோர்ந் தானந்தப் பௌவத் தாழ்ந்து
கிடந்தெழுந்து நாக்குழறித் தடுமாறி நின்றிதனைக் கிளக்கும் வேதந்
தொடர்ந்தறியா வடிசிவப்ப நகர்புலம்ப வுலகீன்ற தோகை யோடிங்
கடைந்தருளுங் காரணமென் னடியேனாற் பிழையுளதோ வையா வையா. (௧௯)

அல்லதையென் றமராலென் பகைஞராற் கள்வரா லரிய கானத்
தெல்லைவிலங் காதிகளா லிடையூறின் றமிழ்நாட்டி லெய்திற் றாலோ
தொல்லைமறை யவரொழுக்கங் குன்றினரோ தவந்தருமஞ் சுருங்கிற் றாலோ
இல்லறனுந் துறவறனும் பிழைத்தனவோ யானறியே னெந்தா யெந்தாய். (௨௦)

கள்ளேறு கடுக்கைநறுஞ் சடையானே போற்றிபெருங் கருணை போற்றி
வெள்ளேறு கொடியுயர்த்த விடையானே போற்றியருள் விகிர்தா போற்றி
புள்ளேறு கொடியுயர்த்த புனிதனயன் றேறாத புனிதா போற்றி
வள்ளேறு சிறுகுழவி மதிநுதலங் கயற்கண்ணி மணாள போற்றி. (௨௧)

பாதமல ரிணைபோற்றி பன்னிரண்டு கையானைப் பயந்தாய் போற்றி
வேதமுடி கடந்தபர ஞானத்தி லானந்த விளைவே போற்றி
போதவடி வாய்நாலவர்க் கசைவிறந்து நிறைந்தபரம் பொருளே போற்றி
மாதவள நீறணிந்த மன்னவங் கயற்கண்ணி மணாள போற்றி. (௨௨)

பொக்கமுடை யார்செய்யும் பூசைதவங் கண்டுநகும் புராண போற்றி
தக்கன்மகம் பொடியாகத் திருப்புருவ நெரித்தகொடுந் தழலே போற்றி
செக்கமலக் கண்ணிடந்த கண்ணனுக்குத் திகிரியருள் செல்வா போற்றி
மைக்குவளை யனையமணி கண்டாவங் கயற்கண்ணி மணாள போற்றி. (௨௩)

வேறு.

தென்னவ னின்னா வண்ண மேத்தினான் செம்பொற் கூடன்
மன்னவன் கேட்டா காய வாணியால் வைகை நாட
உன்னது சோத்த நாங்கேட் டுவந்தன மினிய தாயிற்
றின்னமொன் றுளது கேட்டி யென்றன னருளிச் செய்வான். (௨௪)

இயம்பரும் பதிக டம்மு ளாலவா யேற்ற மீங்குச்
சயம்புவா யனந்த முள்ள தானவ ரியக்கர் சித்தர்
வயம்புரி யரக்கர் வானோர் முனிவரர் மனித ருள்ளார்
நயம்பெற விதியாற் கண்ட நங்குறி யனந்த முண்டால். (௨௫)

அக்குறி களின்மேம் பட்ட குறியறு பத்து நான்காம்
இக்குறி களின்மேம் பட்ட குறிகளெட் டிணையு வெட்டுத்
திக்குறை வானோர் பூசை செய்தன விவற்றியாம் வந்து
புக்குறை குறிநந் தோழன் பூசித்த குறிய தாகும். (௨௬)

அறைந்தவித் தெய்வத் தான மனைத்துமோ ரூழிக் காலத்
திறந்தநந் தோழன் கண்ட விலிங்கமா மதனா லிங்கே
உறைந்தன முறைத லாலே யுத்தர வால வாயாய்ச்
சிறந்திடத் தகுவ தின்று முதலிந்தத் தெய்வத் தானம். (௨௭)

ஓங்குதண் பணைசூழ் நீப வனத்தைநீத் தொருபோ தேனும்
நீங்குவ மல்லேங் கண்டா யாயினு நீயும் வேறு
தீங்குளை யல்லை காடன் செய்யுளை யிகழ்த லாலே
ஆங்கவ னிடத்தியாம் வைத்த வருளினால் வந்தே மென்றான். (௨௮)

பெண்ணிணைப் பாகங் கொண்ட பெருந்தகைப் பரம யோகி
விண்ணிடை மொழிந்த மாற்ற மீனவன் கேட்டு வானோர்
புண்ணிய சிறியோர் குற்றம் பொறுப்பது பெருமை யன்றோ
எண்ணிய பெரியோர்க் கென்னா வேத்தினா னிறைஞ்சி னானே. (௨௯)

அடிபணிந் தேத்தி னானை யருள்சுரந் தசையு மின்னுக்
கொடியணி மனையிற் போக்கிக் கோமள வல்லி யோடும்
உடனுறை புலவ ரோடு மொல்லைதன் கோயில் புக்கான்
வடதிரு வால வாயில் வந்துவீற் றிருந்த வள்ளல். (௩0)

மின்மதிச் சடையி னான்பி னடந்துபோய் விடைகொண் டேகும்
மன்னவன் றன்னைப் பாடி வந்தவன் றன்னை மாட்சித்
தன்மைசால் சங்க வாணர் தம்மொடுங் கொடுபோ யென்றும்
பொன்மகள் காணி கொண்ட புரிசைசூழ் கோயில் புக்கான். (௩௧)

விதிமுறை கதலி பூகங் கவரிவால் விதானந் தீபம்
புதியதார் நிறைநீர்க் கும்பங் கதலிகை புனைந்த மன்றற்
கதிர்மணி மாடத் தம்பொற் சேக்கைமேற் கற்றோர் சூழ
மதிபுனை காடன் றன்னை மங்கல வணிசெய் தேற்றி. (௩௨)

சிங்கமான் சுமந்த பொன்னஞ் சேக்கைமே லிருந்து வெள்ளைக்
கொங்கவிழ் தாமந் தூசு குளிர்மணி யாரந் தாங்கி
மங்கல முழவ மார்ப்ப மறையவ ராக்கங் கூற
நங்கையர் பல்லாண் டேத்த நன்மொழிப் பனுவல் கேட்டு. (௩௩)

சோத்தம் - இழிந்தார் செய்யும் அஞ்சலி; அது ஈண்டுத் தோத்திரத்தை உணர்த்திற்று.

அறிவுடைக் காட னுக்கு மருமையூண் புலமை யோர்க்கும்
முறைமையா லாரந் தூசு முகிழ்முலைக் கொடியி னன்னோர்
நிறைநிதி வேழம் பாய்மான் விளைநிலநிரம்ப நல்கி
அறைகழற் காலிற் பின்னே முடிநடந் திதனை வேண்டும். (கரு)

புண்ணியப் புலவீர் யானிப் பொழிலிடைக் காட னூர்க்குப்
பண்ணிய குற்ற மெல்லாம் பொறுக்கெனப் பரவித் தாழ்ந்தான்
நுண்ணிய கேள்வி யோரு மன்னநீ நுவன்ற சொல்லாந்
தண்ணிய வமுதா லெங்கள் கோபத்தீத் தணிந்த தென்றார். (கசு)

இன்னமு மால வாயெம் மிறையவன் கருணை நோக்காற்
பன்னரும் புகழ்மை குன்றாப் பாக்கிய முனக்குண் டாக
என்னநல் லாக்கங் கூறி யேகினா ரா்க வந்தத்
தென்னவன் குலேசன் செய்த தவமுருத் திரிந்தா லென்ன. (கசு)

எரிமருத் தவனி முனனு மெண்வகை மூர்த்தி யன்பு
புரிமருத் துவனைச் சூழ்ந்த பொருபழி துடைத்தோன் சோதி
விரிமருத் துடல்வான றிங்கண் மிலைந்தவ னருளின் வந்தான்
அரிமருத் தனனுந் தென்ன னடலரிக் குருளை யன்னான். (கஎ)

வேறு.

பரிசிலைப் புலவருக் கருள்குலே சன்பல பகல்கழீஇத்
திரிமருப் பிரலைவெம் மழுவெடுத் தவன்மதிச் சென்னிமேல்
வரிசிலைப் படைபொறித் தவனெனப் பெறுவா மைந்தனும்
அரிமருத் தனனிட்த் தவனிவைத் தரனடி யெய்தினான். (கஅ)

இடைக்காடன்பிணக்குத்தீர்த்தபடல முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - உ,சுசுஅ.

ஐம்பத்தேழாவது

வலைவீசினபடலம்.

மின்றிரித் தன்ன வேணி வேதிய னிடைக்கா டனபின்
சென்றுமீண் டனையான் கொண்ட பிணக்கினைத் தீர்த்த வண்ணம்
இன்றுரை செய்து முந்நீ ரெறிவலை வீசி னாழன்
மன்றலங் குழலி னாளை மணந்துமீள் வண்ணஞ் சொல்வாம். (க)

அந்தமி லழகன் கூட லாலவா யமர்ந்த நீல
கந்தர னுலக மீன்ற கன்னியங் கயற்க ணாளாங்
கொந்தவி ழலங்கற் கூந்தற் கொடிக்குவே றிடத்து வைகி
மந்தண மான வேத மறைப்பொரு ளுணர்த்து மாதோ. (உ)

நாதனின் னருளாற் கூறு நான்மறைப் பொருளை யெல்லாம்
யாதுகா ரணத்தான் மன்றோ வறிகிலே மெம்பி ராட்டி
காதர * மடைந்தாள் போலக் கவலையுஞ் சிறிது தோன்ற
ஆதர மிலளாய்க் கேட்டா ளஃதறிந் தமலச் சோதி. (௩)

* காதரம் அச்சம்.

அராமுக மனைய வல்கு லணங்கினை நோக்கி யேனை
இராமுக மீளைய வுள்ளத் தேழையார் போல வெம்பாற்
பராமுகை யாகி வேதப் பயனொருப் பா-ாது கேட்டாய்
நராமுகை யவிழ்ந்த கோதா யுற்றவிக் குற்றந் தன்னால். (ரு)

விரதமு மறனு மின்றி மீன்படுத் திழிஞ ரான
பரதவர் மகளா கென்று பணித்தனன் பணித்த லோடும்
அரதன வாரந் தாழ்ந்த வாரமென் முலையா ளஞ்சி
வரதநிற் பிரிந்து வாழ வல்லனோ வென்று தாழ்ந்தாள். (௬)

வீங்குநீர்ச் சடையா னீங்கு மெல்லியல் பரிவு நோக்கி
வாங்குநீர்க் கானல் வாழ்க்கை வலைஞர்கோன் மகளாய் வைகி
ஆங்குநீ வளர்நாள் யாம்போந் தருங்கடி முடித்து மெண்ணுத்
தேங்குநீ ரமுதன் னாளைச் செலவிடுத் திருந்தா னிப்பால். (எ)

அன்னது தெரிந்து நால்வா யைங்கரக் கடவு டாதை
முன்னர்வந் திதனு லன்றோ மூண்டதிச் செய்தி யெல்லாம்
என்னவீர்ங் கவளம் போலாங் கிருந்தபுத் தகங்க ளெல்லாந்
தன்னெடுங் கரத்தால் வாரி யெறிந்தனன் சலதி மீதால். (அ)

வரைபக வெறிந்த கூர்வேன் மைந்தனுந் தந்தை கையில்
உரைபெறு போத நூலை யொல்லெனப் பறித்து வல்லே
திரைபுக வெறிந்தா னுகச் செல்வநான் மாடக் கூடல்
நரைவிடை யுடைய நாத னந்தியை வெகுண்டு நோக்கா. (௯)

அடுத்துநா மிருக்குஞ் செவ்வி யறிந்திடா திவரை வாயில்
விடுத்துநீ யிருந்தாய் நீங்கு விளைந்ததுன் றனக்கு மிந்தத்
தொடுத்ததீங் கொழிய வின்றோர் சுறவுரு வாகி வையம்
உடுத்தகா ரோத நீர்புக் குழல்கெனப் பணித்தான் மன்னோ. (க)

வெருவரு செலவின் வேழ முகத்தனை விதித்த சாபப்
பெருவலி தன்னைச் சாரும் பெற்றியாற் சாபங் கூறான்
அருவரை நெஞ்சு போழ்ந்த வள்ளிலை வடிவேற் செங்கை
முருகனை வணிகர் தம்மின் மூங்கையா கென்று னிப்பால். (க0)

நாயக னேவ லாலே நாயகி வலைஞர் மாதர்
ஆயது நந்திப் புத்தே ளடுசுற வாகி முந்நீர்
மேயதுங் கருணை வள்ளன் மீன்படுத் தணங்கை வேட்டுப்
போயது மவட்குக் கேள்வி புகன்றது முறையிற் சொல்வாம். (கக)

வே று.

சூழும் வார்திரை வைகையந் துறைகெழு நாட்டுட்
கீழை யார்கலி முகத்தது நெய்தலங் கீழ்நீர்
ஆழ நீள்கருங் கழியகழ் வளைந்துகா ரளைந்து
தாழை மூடியெயி லுடுத்ததோர் தண்டுறைப் பாக்கம். (கஉ)

முடங்கு முள்ளிலை யாறபுதைத் தெதிரெதிர் மொய்த்து
நுடங்கு கைதைபோ தொடுவெளி நாக்கின் றசைவ
மடங்கு மெய்யராய்க் கையிருங் கேடக வட்டத்
தடங்கி வாள்பணித் தாடம ராற்றுவா ரனைய. (கங)

புலவு மீனுணக் கோசையும் புட்களோப் பிசையும்
விலைப கர்ந்திடு மமலையு மீன்கொள்கம் பலையும்
வலையெ றிந்திடு மரவமும் வரூங்குமா ரவமும்
அலையெ றிந்திடு புரவைவா யடைப்பன மாதோ. (௧௪)

வாட்டு நுண்ணிடை நுளைச்சியர் வண்டலம் பாவைக்
கூட்டு கின்றசோ றருகிருந் துடைந்தபூங் கைதை
பூட்டு கின்றன நித்திலம் பொருகடற் றரங்கஞ்
சூட்டு கின்றன கடிமலர் சூழல்சூழ் ஞாழல். (௧௫)

நிறைந்த தெண்கட லாடிநீ ணெறியிடைச் செல்வோர்க்
கறந்தெ ரிந்தபோற் பொதிந்தசோ றவிழ்ப்பன தாழை
சிறந்த முத்தொடு பசும்பொனும் பவளமுந் திரட்டிப்
புறந்தெ ரிந்திடக் கொடுப்பன மலர்ந்தபூம் புன்னை. (௧௬

கொன்று மீன்பகர் பரதவர் குரம்பைக டோறுஞ்
சென்று தாவிமேற் படர்வன திரைபடு பவளம்
மன்றல் வார்குழ னுளைச்சியர் மனையின்மீ னுணக்கும்
முன்றில் சிப்பன கடலிடு முழுமணிக் குப்பை. (௧௭)

கூற்றம் போன்றகண் ணுளைச்சியர் குமுதவாய் திறந்து
மாற்றம் போக்கினர் பகர்தருங் கயற்குநேர் மாறுந்
தோற்றம் போக்குவ வவர்விழித் துணைகளக் கயன்மீன்
நாற்றம் போக்குவ தவர்குழ னகைமலர்க் கைதை. (௧௮)

அலர்ந்த வெண்டிரைக் கருங்கழிக் கிடங்கரி னரும்பர்
குலைந்த விழ்ந்துதேன் றுளும்பிய குமுதமே யல்ல
கலந்த ருங்கட லெறிகருங காற்பணங் கள்வாய்
மலர்ந்த ருந்திய குமுதமு மொய்ப்பன வண்டு. (௧௯)

ஆய பட்டினத் தொருவன்மே லாற்றிய தவத்தாற்
றூய வானவர் தம்மினுந் தூயனாய்ச் சிறிது
தீய தீவினைச் செய்தியாற் றிண்டிமில் வாணர்
மேய சாதியிற் பிறந்துளான் மேம்படு மனையான். (௨௦)

செடிய காருடற் பரதவர் துணைடிம னடத்தா
நெடிய வாழியிற் படுத்தமீன் றிறைகொடு நிறைக்குங்
கடிய வாயிலோ னவர்க்கெலாங் காவலோ னேற்றுக்
கொடிய வானவ னடிக்குமெய் யன்புசால் குணத்தோன். (௨௧)

மகவி லாமையா லாற்றநாண் மறுமையோ டிம்மைப்
புகவி லானென வருந்துவா னொருபகற் போது
தகவு சால்பெருங் கிளையொடுஞ் சலதிமீன் படுப்பான்
அகல வார்கலிக் கேகுவா னதன்கரை யொருசார். (௨௨)

தக்க மேருமா மலைமக ளேனுடையிற் றவத்தான்
மிக்க மீனவன் வேள்வியில் விரும்பிய மகவாய்ப்
புக்க நாயகி தன்பதி யானையாற் புலவு
தொக்க மீன்விலை வலைஞன்மேற் றவப்பயன் றுரப்ப. (௨௩)

இச்சை யாலவ னன்பினுக் கிரங்குவாள் போலச்
செச்சை வாய்திறந் தழுதொரு திருமக வாகி
நெய்ச்ச பாசிலைப் புன்னைநன் னீழலிற் கிடந்தாள்
மைச்ச காருடற் கொடுந்தொழில் வலைஞர்கோன் கண்டான். (உ௪)

கார்கோ ணீர்த்திரு மாதுகொல் கரந்துநீ ருறையும்
வார்கொள் பூண்முலை மடந்தைகொல் வனத்துறை வாழ்க்கைத
தார்கொள் பூங்குழ லணங்குகொ றடங்கணு மிமைப்ப
ஆர்கொ லோமக வாகியீண் டிருந்தவ ளென்று. உ௫)

பிள்ளை யின்மையேற் கிரங்கியெம் பிரான்றமிழ்க் கூடல
வள்ள லல்கிய மகவிது வேயென வலத்தோள்
துள்ள வன்புகூர்ந் தெடுத்திரு தோளுறப் புல்லித்
தள்ள ருந்தகைக் கற்பினா டனதுகைக் கொடுத்தான் (உ௬)

பிறவி யந்தகன் றெரிந்துகண் பெற்றெனக் கழிந்த
வறிய னீணிதி பெற்றென வாங்கினாள் வலைஞர்
எறியும் வேலையி னார்த்தனர் கையெறிந் திரட்டிக்
குறிய வாணகை வலைச்சியர் குழறினா குரவை. (உ௭)

பிழையில கற்புடை மனைவியும் பெருதுபெற் றெடுத்த
குழவி யைத்தடங் கொங்கையுங் கண்களுங் குளிரத்
தழுவி முத்தமிட் டுச்சிமோந் தன்புளந் ததும்ப
அழகி தாகிய மணிவிளக் காமென வளர்ப்பாள். (உ௮)

புலவு மீன்விலைப் பசும்பொனாற் செய்தபல் பூணும்
இலகு மாரமும் பாசியுங் * காசிடை யிட்டுக்
குலவு கோவையுஞ் சங்கமுங் குலத்தினுக் கிசைய
அலகி லாதபே ரழகினுக் கழகுசெய் தணிந்தாள். (உ௯)

தொண்டை வாய்வலைச் சிறுமியர் தொகையொடுந் துறைபோய்
வண்ட லாடியு நித்தில மாமணி கொழித்துங்
கண்டன ஞாழலசூழ் கானலங் கடிமலர் கொய்துங்
கொண்ட லோதிபின ருழ்தரக் குரைகடல் குளித்தும். (௩0)

தளர்ந்த பைங்கொடி மருங்குலிந் தன்னுயிர்த் தலைவன்
அளந்த வைகலுங் குறைபட வவனிடத் தார்வங்
கிளர்ந்த வன்புமொண் கொங்கையுங் கிளரநாட் சிறிதில்
வளர்ந்து வைகினாள் வைகலு முயிரெலாம் வளர்ப்பாள். (௩௧)

ஆல வாயுடை நாயக னேவிய வாறே
மாலை தாழிள மதிச்சடை மகுடமுங் கரங்கள்
நாலு மாகிய வடிவுடை நந்தியுஞ் சுறவக்
கோல மாகிவெண் டிரைக்கடல் குளித்தினி திருந்தான். (௩௨)

குன்றெ றிந்தவேற் குழகனுங் கரிமுகக் கோவும்
அன்றெ றிந்ததந் திருமெலாஞ் சிரமிசை யடக்காக்
கன்றெ றிந்தவ னறிவருங் கழன்மனத் தடக்கா
நின்றெ றிந்தவன் மத்தென வுழக்கிடா நிற்கும். (௩௩)

---

* பாசி - கருமணி.

இட்டுந் தோணியைப் படகினைக் கழிபட விசைபோய்த்
தட்டுஞ் சோங்கினை மேலிடு சரக்கொடுங் கவிழ
முட்டுஞ் சிறிமேல வரும்பரச் சுறவெலா முடுக்கி
வெட்டுங் கோடுகோட் டேனைய மீனெலாம் வீசும். (௧௪)

தரங்க வாரிநீர் கலககலாற் றந்திரங் கொடுமேல்
இரங்கு வான்புல வோரக்கமு தீகையா லெண்ணார்
புரங்கண் மூன்றையும் பொடித்தவ னாணையாற் புனலிற்
கரங்க ணான்கையுங் கரந்தமீன் மந்தரங் கடுக்கும். (௧௫)

தள்ளு நீர்த்திரை போய்நுளைச் சேரிகள் சாய்ப்பத்
துள்ளு நீர்குடித் தெழுமழைச் சூலிறப் பாயும்
முள்ளு நீண்மருப் புடையமீன் மொய்கல மந்தத்
தெள்ளு நீர்த்துறை நடையற வின்னணந் திரியும். (௧௬)

எற்றி த் துறைமகன் யாமிது பிடிக்கும்
பெற்றி யாதெனக் கிளையொடும் பெருவலைப் பாசம்
பற்றி யாழியூர் படகுகைத் தெறிந்தனன் படகைச்
சுற்றி வாய்கிழித் தெயிற்றிறப் பாய்ந்தது சுறவம். (௧௭)

படவு டைப்பவோர் தோணிமேற் பாய்ந்துமத் தோணி
விடவு றத்தெறித் தெறிந்திட விசைத்தொரு சோங்கின்
இடைபு குந்துநீள் வலையெறிந் திங்ஙனம் வெவ்வே
றுடலபு குந்துழ லுயிரெனப் பரதனு முழல்வான். (௧௮)

முன்னர் வீசினாற் பின்னுற முளைத்தெழு முயன்று
பின்னர் வீசினான் முன்னுறப் பெயர்ந்தெழும் வலத்தில்
உன்னி வீசினா விடம்பட வுருத்தெழு மிடத்தின
மன்னி வீசினால் வலத்தெழு மகரவே றதுதான். (௧௯)

ற்றிவ லைப்படு மகமலர்ந் தீர்ப்பவ னுள்ளம்
மறுத லைப்பட வலையினும் வழீஇப்பொரு ளாசை
நெறிம லர்க்குழ ணலலவர் நினைவென நினைவுற்
றறிப வாக்கரி தாம்பரம் பொருளென வுகளும. (௨௦)

ஏவ லாளரோ டின்னவா றின்னமீன் படுத்தற்
காவ தாந்தொழி லியற்றவு மகப்படா தாக
யாவ ரேயிது படுப்பவ ரென்றிருங் கானற்
காவ லாளனும பரதருங் கலங்கனா ருழந்தார். (௨௧)

சங்க லம்புதண் டுறைகெழு நாடனிச் சலதித்
துங்க மந்தர மெனக்கிடந் தலமருஞ் சுறவை
இங்க ணைந்தெவன் பிடிப்பவ னவனியா னீன்ற
மங்கை மங்கலக் கிழானென மனம்வலித் திருந்தான். (௨௨)

நந்தி நாதனு மினையனா யங்கய னாட்டத்
திந்து வாணுத லாளுமங் கனையளா யிருப்பத்
தந்தி நாவிரண் டேந்திய தபனிய விமானத்
துந்து நீர்ச்சடை யார்மண முன்னினார் மனனே. (௨௩)

உயர்ந்த சாதியுந் தம்மினு மிழிந்தவென் றுன்னிக்
கயந்த நெஞ்சுடை வலைக்குலக் கன்னியை வேட்பான்
வியந்து கேட்பதெவ் வாறவர் வெருக்குமுன் னவருக்
கியைந்த மீன்வலை யுருவெடுத் தேகுது மென்று. (௪௪)

வேறு.

கருகிருண் முதிர்ந்தா லன்ன கச்சினன் கச்சோ டார்த்த
சுரிகையன் றோண்மே லிட்ட துகிலினன் குஞ்சி சூட்டும்
முருகுகொப் பளிக்கு நெய்தற் கண்ணியன் மூத்த வானோர்
இருவரு மறையுந் தேடி யிளைப்பவோர் வலைஞ னானான். (௪௫)

முழுதுல கீன்ற சேற்கண் முதல்வியை யருளி லார்போல்
இழிதொழில் வலைமா தாகச் சபித்தவா றென்னே யென்றும்
பழிபடு சாப மேற்றார் பரதராய் வரவும் வேண்டிற்
றழகிது நன்று நன்றெம் மாலவா யடிகள் செய்கை. (௪௬)

தன்பெருங் கணத்து ளானோர் தலைவனுஞ் சலதி வாணன்
என்பது தோன்ற வேட மெடுத்தெறி வலைதோ ளிட்டு
வெண்புற மலைப்பக் காவி மீனிடு குடம்பை தாங்கிப்
பின்புற நடந்து செல்லப் பெருந்துறைப் பாக்கம் புக்கான். (௪௭)

கழித்தலைக் கண்டற் காடுங் கைதையங் கானு நெய்தற்
சுழித்தலைக் கிடங்கு நீத்துச் சுஃறெனுந் தோட்டுப் பெண்ணை
வழித்தலை சுமந்து வார்கள் வார்ப்பவா யங்காந் தாம்பல
குழித்தலை மலர்பூங் கானற் கொடுவலைச் சேரி சேர்ந்தான். (௪௮)

பெருந்தகை யமுதன் னாளைப் பெறுதுபெற் றெடுப்பா னேற்ற
அருந்தவ வலைஞர் வேந்த னதிசய மகத்துட் டோன்ற
வருந்தகை யுடைய காளை வலைமகன் வரவு நோக்கித்
திருந்தழ குடைய நம்பி யாரைநீ செப்பு கென்றான். (௪௯)

சந்தநான் மறைக டேறாத் தனியொரு வடிவாய்த் தோன்றி
வந்தமீன் கொலைஞன் கூறு மதுரையில் வலைஞர்க் கெல்லாந்
தந்தைபோற் சிறந்து ளானோர் தனிவலை யுழவ னல்ல
மைந்தன்யான் படைத்துக் காத்துத் துடைக்கவும் வல்ல னுவேன். (௫0)

அல்லது வான்மீ னெல்லா மகப்பட வலைகொண் டோச்ச
வல்லவ னுவே னென்ன மற்றிவன் வலைஞன் கோலம்
புல்லிய மகன்கொன் முன்னம் புகன்றசொல் லொன்றிப் போது
சொல்லிய தொன்றி ரண்டுஞ் சோதனை காண்டு மென்னா. (௫௧)

தொண்டுறை மனத்துக் கானற் றுறைமக னஃதே லிந்தத்
தண்டுறை யிடத்தோர் வன்மீன் றழலெனக் கரந்து சீற்றங்
கொண்டுறை கின்ற தைய குறித்தது பிடித்தி யேலென்
வண்டுறை கோதை மாதை மணஞ்செய்து தருவே னென்றான். (௫௨)

சிங்கவே றனையான் காலிற் சென்னடைப் படகிற் பாய்ந்து
சங்கெறி தரங்கந் தட்பத் தடங்கடல் கிழித்துப் போகிப்
பிங்கர னன காளை வரையெனக் கிளைத்த தோண்மேற்
றொங்கலிற் கிடந்து ளான்ற தொகுமணி வலையை வாங்கி (௫௩)

செவ்விதி னோக்கி யாகந் திருகநின் றெறிந்தான் பக்கங்
கௌவிய மணிவில் வீச விசையொலி கறங்கிப் பாயப்
பைவிரித் துயிர்த்து நாகம் விழுங்கவாய்ப் பட்ட மீன்போல்
வெவ்வினைச் சுறவே றையன் விடுவலைப் பட்ட தன்றே. (௫௪)

மாசறு கேளி ரன்பின் வலைப்படும் வலைஞர் கோன்றாய்,
வீசிய வலையிற் பட்ட மீனினைச் சுருக்கி வாங்கிக்
காசெறி தரங்க முந்நீர்க் கரையிடை யிட்டான் கள்வாய்
மூசுதே னென்ன வார்த்து மொய்த்தன பரதச் சாதி. (௫௫)

இளையநங் கோனும் வீசு வலைஞராய்க் கிளர்தோ ளாற்றல்
விளைவொடு முயன்று பன்னாள் வினைசெயப் படாத மீனிவ்
விளையவ னொருவன் றானே யொருவிசை யெறிந்தா னீர்த்தான்
அளியநங் குலத்தோர் தெய்வ மகனிவ னாகு மென்றார். (௫௬)

கைதைசூழ் துறைவ னோகை கைமிகப் பம்பை யேங்க
நொய்தெனு நுசுப்பிற் கள்வாய் நுளைச்சியர் குரவை தூங்கப்
பைதழை பகுவாய்க் கச்சைப் பரதவற் கலங்கன் ஞாழல்
செய்தபூங் கோதை மாதைத் திருமணம் புணர்த்தி னானே. (௫௭)

அந்நிலை யதுவைக் கோல மாயின மருக னாரும்
மின்னிலை வேற்க ணாளும் விண்ணிடை விடைமேற் கொண்டு
தந்நிலை வடிவாய்த் தோன்றத் தடங்கரை மீனந் தானும்
நன்னிலை வடிவே போன்று நந்தியாய் முந்தித் தோன்ற. (௫௮)

கொற்றவெள் விடைமேற் காட்சி கொடுத்தவர் கருணை நாட்டம்
பெற்றவின் மேலைச் சார்பாற் பிணித்தவிப் பிறவி யாக்கைச்
சிற்றறி வொழிந்து முந்நீர்ச் சேர்ப்பன லறிவு தோன்றப்
பொற்றனு மேரு வீரன் பூங்கழ லடிக்கீழ்த் தாழ்ந்தான். (௫௯)

இரக்கமி லிழிந்த யாக்கை யெடுத்துழ லேழை யேனைப்
புரக்கவின் றென்போல் வந்த புண்ணிய வடிவம் போற்றி
அரக்கெறி பவளச் செவ்வா யணங்கினை மணந்தென் பாசங்
கரக்கவெள் விடைமே னின்ற கருணையே போற்றி யென்றான். (௬௦)

அகவிலான் பரவி நின்ற வன்பனை நோக்கிப் பன்னாள்
மகவிலா வருத்த நோக்கி யுமையைநா மகளாத் தந்து
தகவினன் மணந்தே நீயித் தரணியிற் றனத னென்ன
நகவிலாப் போக மூழ்கி நம்முல கடைவா யென்ன. (௬௧)

பெண்ணினை யதுவைக் கீந்த பெருந்துறைச் சேர்ப்பற் கன்று
தண்ணளி சுரந்து நல்கித் தருமமால் விடைமேற் றோன்றி
விண்ணிடை நின்றான் சென்றான் வேத்திரப் படையா னோடும்
உண்ணிறை யன்ப ரோடு முத்தர கோச மங்கை. (௬௨)

அங்கிருந் தநாதி மூர்த்தி யாதிநான் மறைக ளோத்துங்
கொங்கிருங் கமலச் செவ்விக் குரைகழல் வணங்கிக் கேட்பப்
பங்கிருந் தவட்கு வேதப் பயனெலாந் திரட்டி முந்நீர்ப்
பொங்கிருஞ் சுதைபோ லட்டிப் புகட்டினன் செவிகளார. (௬௩)

வேறு.

அவ்வேலை யன்புடையா ரறுபதினா யிரவர்க்கு * மளித்துப் பாச
வெவ்வேலை கடப்பித்து வீடாத பரானந்த வீடு நல்கி
மைவ்வேலை யனையவிழி யங்கயற்க ணங்கையொடு மதுரை சார்ந்தான்
இவ்வேலை நிலம்புரக்க முடிகவித்துப் பாண்டியனென் றிருந்த மூர்த்தி. (சுச)

வலைவீசின படலமுற்றிற்று.

ஆ. திருவிருத்தம் - உ,எகஉ.

ஐம்பத்தெட்டாவது

வாதவூரடிகளுக்கு

உபதேசஞ்செய்தபடலம்.

கலைவீசு மதிச்சடையோன் கடற்றுறைவன் றலைச்சென்று
வலைவீசி யவன்பாச வலைவீசும் பரிசினுமேல்
அலைவீசும் புனல்வாத வூரரைவந் தவிச்சைவலி
நிலைவீசிப் பணிகொண்ட நெறியறிந்த படிமொழிவாம். (க)

தொடுத்தவறுமையும்பயனுந் தூக்கிவழங் குநர்போல
அடுத்தவயல் குளநிரப்பி யறம்பெருக்கி யவனியெலாம்
உடுத்தகட லொருவர்க்கு முதவாத வுவரியென
மடுத்தறியாப் புனல்வைகைக் கரையுளது வாதவூர். (உ)

விழவறா நகரெங்கும் விருந்தறா மனையெங்கும்
மழவறா மகிழ்வெங்கு மறையறா இடையெங்கும்
முழவறா வரங்கெங்கு முகிலறா பொழிலெங்கும்
உழவறா வயலெங்கு முடம்பறா வுயிரென்ன. (ங)

ஆயவளம் பதியதனி னமாத்தியரி லருமறையின்
றூயசிவா கமநெறியின் றுறைவிளங்க வஞ்சனையான்
மாயனிடும் புத்தவிரு ளுடைந்தோட வந்தொருவர்
சேயவிளம் பரிதியெனச் சிவனருளா லவதரித்தார். (ச)

பேர்வாத வூரரெனப் பெற்றுத்தம் பிறங்குமறைச்
சார்வாய நூல்வழியாற் சடங்கெல்லா நிறைவெய்தி
நீர்வாய விளமதிபோ னிரம்புவார் வேதமுதற்
பார்வாயெண் ணெண்கலையும் பதினாறாண் டினிற்பயின்றார். (ரு)

இத்தகையோர் நிகழ்செய்தி யறிந்தவர்சென் றியம்பவரி
மர்த்தனபாண் டியன்கேட்டு வரவழைத்து மற்றவரைச்
சித்தமகிழ் வரிசையினாற் சிறப்பளித்துத் தன்கோயில்
வித்தகநன் மதியமைச்சின் றொழில்பூட்டி மேம்படுத்தான். (சு)

* அறுபதினாயிரவராவார் ஞானோபதேசம்பெற் றிருந்த கௌதமமுனிவர் முதலியோர்.

செற்றமிகுங் கருவிகளின் றிறநூலு மனுவேந்தன்
சொற்றபெருந் தொன்னூலுந் துளக்கமற விளக்கமுறக்
கற்றறிந்தோ ராதலினாற் காவலற்குக் கண்போன்ற
முற்றுணர்ந்த வமைச்சரினு முதலமைச்ச ராய்நிகழ்வார். (௭)

புல்லாதார் முரணடக்கிப் பொருள்கவர்வா ரென்புதெவர்
செல்லாத பல்வேறு தீபத்துச் செங்கோன்மை
வல்லாருந் தத்தமதேத் தரியபொருள் வரவிடுத்து
நல்லாரா யொப்புரவு நட்படைய நடக்கின்றார். (௮)

அண்ணலரி மருத்தனனுக் கடல்வாத வூரமைச்சர்
கண்ணுமிடு கவசமும்போற் காரியஞ்செய் தொழுகுவார்
தண்ணளிசெய் தவனியெலாந் தங்கிளைபோற் குளிர்தூங்க
வண்ணமதிக் குடைநிழற்றி முறைசெய்து வாழுநாள். (௯)

வேறு.

மெய்ம்மை யாம்பொருள் விவேகமும் வேறுபா டாய
பொய்ம்மை யாம்பொருள் விவேகமும் புந்தியுட் டோன்ற
இம்மை யாசையு மறுமையி லாசையு மிகந்து
செம்மை யாகிய கருத்தராய்ப் பரகதி தேர்வார். (௧௦)

புத்த ராதியோர் புறவுரை நெறிகளும் பொய்யா
நித்த வேதநூ றழுவிய வகவுரை நெறியுஞ்
சித்த மாசறுத் தரனரு டெளிவியா வதனான்
மித்தை யாணவத் தொடக்கற திலையாம் வீடும். (௧௧)

பத்தி செய்தர னருள்பெறும் பத்தருக் கன்றி
முத்தி யெய்தரி தெனமறை மொழிவதப் பொதுநூற்
சத்தி யப்பொருட் டெளிவெலாஞ் சத்திநி பாதர்க்
குய்த்து ணர்த்துவ தாகம மென்பர்மெய் யுணர்ந்தோர். (௧௨)

வேத வாகமச் சென்னியில் விளைபொரு ளபேதம்
பேத மாகிய பிணக்கறுத் திருட்பிணி யவிழ்த்து
நாத னாகிய தன்னையு மென்னையு நல்கும்
போத னாகிய குருபரன் வருவகைப் பொழுதால். (௧௩)

கரவி லாதபே ரன்பினுக் கெளிவருங் கருணைக்
குரவ னாரரு ளன்றியிக் கொடியவெம் பாசம்
புரையில் கேள்வியாற் கடப்பது புணையினா லன்றி
உரவு நீர்க்கடல் கரங்கொடு நீந்துவ தொக்கும். (௧௪)

என்றிவ் வாதவூர் மறையவ ரின்பவீ டெய்தத்
துன்று மாசையாற் றொடக்குண்டு சுருதியா கமநூல்
ஒன்று கேள்வியோர் வருந்தொறு முணர்ந்தவ ரிடைத்தாஞ்
சென்று காண்டொறு மளவளாய்த் தேர்குவா ரானார். (௧௫)

எண்ணி லாரிடத் தளந்தளந் தறிபொரு ளெல்லாம்
உண்ணு நீர்விடாய்க் குவரிநீ ருண்டவ ரொப்ப
அண்ண லாரகத் தமைவுறா தாசனுக் குயிருங்
கண்ணு மாயவமைச் சிரிமையுங் கைவிடா தியல்வார். (௧௬)

கள்ளக் காதல னிடத்தன்பு கலந்துவைத் தொழுகும்
உள்ளக் காரிகை மடந்தைபோ லும்பரைக் காப்பான்
பள்ளக் கீரியுண் டவனிடத் துள்ளன்பு பதிந்து
கொள்ளக் காவல னிடைப்புறத் தொழிலுமுட் கொண்டார். (கஎ)

இன்ன செய்கையி னொழுகுவா ரொருபொழு தேகித்
தென்னர் தம்பிரா னவையிடைச் சென்றெதிர் நின்றார்
அன்ன போதடு பரிநிரை காப்பவ ரரசன்
முன்னர் வந்துதாழ்ந் தொருசிறை நின்றிது மொழிவார். (கஅ)

மறந்த வாதவேல் வலவநம் வயப்பரி வெள்ளத்
திறந்த வாம்பரி போகநின் றெஞ்சிய வெல்லாம்
நிறைந்த நோயவு நெடிதுழப் புடையவு மன்றிச்
சிறந்த வாம்பரி யொன்றிலை தேர்ந்திடி னென்றார். (க௯)

மன்றல் வேம்பனும் வாதவூர் வள்ளலை நோக்கி
இன்று நீர்நம தறைதிறந் திருநிதி யெடுத்துச்
சென்று வேலையந் துறையிலவர் இறங்குவ தெரிந்து
வென்றி வாம்பரி கொடுவரப் போமென்று விடுத்தான். (உ0).

உள்ளம் வேறுபட் டமைச்சிய னெறியினின் றொழுகும்
வள்ள லார்நிதி யறைதிறந் தரும்பெறல் வயமான்
கொள்ள வேண்டிய பொருளெலாங் கொண்டுதா ழிறுக்கி
வெள்ளை மாமதி வேந்தனை விடைகொடு போனார். (உக)

எடுத்த பொற்சுமை யொட்டகத் திட்டுமுன் னேக
விடுத்து விண்டொடு திண்டிமில் விடையவன் கோயில்
அடுத்த விழ்ந்தபொன் னம்புயத் தடம்படிந் தனைய
மடுத்த டங்கரைச் சித்தியைங் கரத்தனை வணங்கா. (உஉ)

கருணை நாயகி யங்கயற் கண்ணியெம் பிராட்டி
அருண நாண்மலர்ச் செய்யசீ றடித்தல மிறைஞ்சி
வருண னார்பெரு வயிற்றுநோய் வலிகெடுத் தாண்ட
தருண நாண்மதிச் சடையுடை யடிகண்முன் றொழா. (உங)

ஒன்று வேண்டுமிப் பொருளெலா முனக்குமைம் பொறியும்
வென்று வேண்டுநின் னன்பர்க்கு மாக்குக வெள்ளி
மன்று வேண்டிநின் றுடிய வள்ளலென் குறையீ
தென்று வேண்டிநின் றேத்துவார்க் கிறைவனின் னருள்போல். (உச)

ஆதி சைவனு மருச்சக னொருவனே ரணைந்து
பூதி யீந்தன னமக்கிது போலிலை நிமித்தம
ஈது நன்னெறிக் கேதுவென் றிருகையேற் றணிந்து
வேத நாதனை யிறைஞ்சினார் விடைகொடு மீண்டார். (உரு)

வேறு.

இன்னிய முதிர்ந்தன வெழுந்தன பதாதி
துன்னிய விணைக்கவரி துள்ளின துகிர்க்காற்
பொன்னியன் மதிக்குடை நிழன்றன பொலங்கொண்
மின்னிய மணிச்சிவிகை மேற்கொடு நடந்தார். (உசு)

மற்றிவர் வழிப்படுமுன் மாறிநட மாடும்
வெற்றிவிடை யாரிவர் வினைத்தொகையி னொப்பும்
பற்றிய விருட்டுமல பக்குவமு நோக்கா
உற்றடிமை கொண்டுபணி கொண்டருள வுன்னா. (௨௭)

சந்தமறை தீண்டரிய தங்கருணை யாலோர்
அந்தணர் குலக்குரவ னாகியடி நீங்கா
மைந்தர்பலர் தம்மொடு பெருந்துறையில் வந்தோர்
கொந்தலர் நெருங்கிய குருந்தடி யிருந்தார். (௨௮)

பொருங்கட லணிகமொடு போய்ப்புற வடுத்த
இருங்கட மளப்பில கடந்தெழு பிறப்பாங்
கருங்கடல் கடக்கவரு வார்கருணை வெள்ளப்
பெருங்கட னிறைந்துறை பெருந்துறை யடைந்தார். (௨௯)

அடுத்திட வயத்திட வகத்துவகை வெள்ளம்
மடுத்திட முகிழ்த்தகைம் மலர்க்கமல முச்சி
தொடுத்திட விழிப்புன றுளித்திட வினைகள்
விடுத்திடு மனத்தருள் விளைந்திட நடந்தார். (௩௦)

பித்திது வெனப்பிறர் நகைக்கவரு நாலாஞ்
சத்திபதி யத்தமது சத்தறிவு தன்னைப்
பொத்திய மலத்தினும் வெரீஇச்சுமை பொறாதோன்
ஒத்திழி பிணிப்புறு மொருத்தனையு மொத்தார். (௩௧)

நெருப்பிலிடு வெண்ணெயென நெஞ்சுருக வென்னை
உருக்குமித னாலெனை யொளித்தமல வாற்றல்
கருக்குமவ னாகியெனை யாள்கருணை வெள்ளம்
இருக்குமிட னேயிதென வெண்ணிநகர் புக்கார். (௩௨)

ஞாயிலை யடைந்தகழு முட்படை வலத்தார்
கோயிலை யடைந்துகுளி ரான்புனல் குடைந்து
வாயிலை யடைந்துடல மண்ணுற விழுந்து
வேயிலை யடைந்தவரை மெய்ப்புகழ் வழுத்தா. (௩௩)

ஆலய மருங்குவல மாகவரு வார்முன்
மூலமறை யோதிமுடி யாதபொரு டன்னைச்
சீலமுனி வோர்தெளிய மோனவழி தேற்றுங்
கோலமுறை கின்றதொர் குருந்தையெதிர் கண்டார். (௩௪)

வேறு.

வேத நூலொரு மருங்கினு மெய்வழிச் சைவப்
போத நூலொரு மருங்கினும் புராணத்துட் கிடந்த
கீத நூலொரு மருங்கினுங் கிளைகெழு சமய
பேத நூலொரு மருங்கினும் வாய்விட்டுப் பிறங்க. (௩௫)

சுருதி கூறிய வறமுத னான்குமத் தொன்னூற்
கரிய தாங்கதிக் கேதுவென் றுகமங் காட்டுஞ்
சரியை யாதிநாற் பாதமுந் தலைதெரிந் துணர்ந்த
பெரிய மாணவர் கழகமும் வினவிடை பேச. (௩௬)

சரியை வல்லமெய்த் தொண்டருஞ் சம்புவுக் கினிய
கிரியை செய்யுநன் மைந்தருங் கிளர்சிவ யோகந்
தெரியுஞ் சாதகக் கேளிருந் தேசிகந் தன்மை
புரியும் போதகச் செல்வரு மளவிலர் பொலிய. (௧௭)

ஒழித்த நோன்பின ராடலர் பாடல ருலகம்
பழித்த செய்கைய ரழுகையர் நகையினர் பாசங்
கழித்த கண்களா லரனுருக் கண்டுகொண் டுலகில்
விழித்த கண்குரு டாத்திரி வீரரும் பலரால். (௧௮)

கரவி லுள்ளமாம் விசும்பிடைக் காசற விளங்கும்
பரசி லாச்சுடர்க் குதயமீ றின்மையாற் பகலும்
இரவு நேர்படக் கண்டில ரியன்றுசெய் நித்த
விரத மாதிநோன் பிழந்துறை விஞ்சையர் பலரால். (௧௯)

உடையுங் கோவண முண்டியுங் கைப்பலி யுறவென்
றடையுங் கேளிரு மரனடி யார்கண்டி கலன்கண்
படையும் பாரிட மாயினும் பகலிரா முதலீ
றிடையின் றுமிடத் துறங்குவ திஃதவர் வாழ்க்கை. (௨௦)

இத்த கைப்பல தொண்டர்தங் குழாத்திடை யாலம்
ஒத்த பைங்குருந் தடியினில் யோகவா சனத்திற்
புத்த கத்தெழு தியசிவ ஞானமெய்ப் போதங்
கைத்த லந்தரித் திருப்பதோர் கருணையைக் கண்டார். (௨௧)

மன்று ளாடிய வானந்த வடிவமும் வடவால்
ஒன்றி நால்வருக் கசைவற வுணர்த்திய வுருவும்
இன்று நாயினேற் கெளிவந்த விவ்வுரு வென்று
அன்று நாயகன் குறிப்புளத் துணர்த்திட வறிந்தார். (௨௨)

முன்ப ணிந்தன ரணிந்தன ரஞ்சலி முடிமேல்
என்பு நெக்கிட வுருகின ரினியரா யெளிவந்
தனைபெ ரும்வலைப் பட்டவ ரருள்வலைப் பட்டார்
துன்ப வெம்பவ வலையறுத் திடவந்த தொண்டர். (௨௩)

கால முங்களுக் காட்சியு நிமித்தமுங் கடிந்தார்
சீல மாணவர் செவ்விதேர் தேசிக னென்ன
மூல வாகம மோதினன் முறுக்கவிழ் கழுநீர்
மாலை சாந்தணிந் தடியின்மேல் வன்கழல் வீக்கி. (௨௪)

அண்ணல் வேதிய ரொழுக்கமு மன்புங்கண் டியாக்கை
உணணி லாவுயிர் பொருள்புன லுடன்கவர்ந் துள்ளக்
கண்ணி னுன்மலங் கழீஇப்பத கமலமுஞ் சூட்டி
வண்ண மாமலாச் செங்கரஞ் சென்னிமேல் வையா. (௨௫)

சூக்க மாகுமைந் தெழுத்தினிற் சுற்றிய பாச
வீக்க நீக்கிமெய் யானந்தம் விளைநிலத் துய்த்துப்
போக்கு மீட்சியுட் புறம்பிலாப் பூரண வடிவம்
ஆக்கி னொருதீபகம் * போல்வரு மண்ணல். (௨௬)

* - பார்வைமிருகம்.

பார்த்த பார்வையா லிரும்புண்ட நீரெனப் பருகுந்
தீர்த்தன் றன்னையுங் குருமொழி செய்ததுந் தம்மைப்
போர்த்த பாசமுந் தம்மையு மறந்துமெய்ப் போத
மூர்த்தி யாயொன்று மறிந்திலர் வாதவூர் முனிவர். (௪௭)

தேனும் பாலுந்தீங் கன்னலு மமுதுமாய்த் தித்தித்
தூனு முள்ளமு முருக்கவுள் ளொளியுணர்ந் தின்பம்
ஆன வாறுதேக் கிப்புறங் கசிவதொத் தழியா
ஞான வாணிவந் திறுக்சன ளன்பர்தந் நாவில். (௪௮)

தொழுத கையினர் துளங்கிய முடியினர் துளும்ப
அழுத கண்ணினர் பொடிப்புறு மியாக்கையர் நாக்குத்
தழுத ழுத்தவன் புரையினர் தமையிழந் தழல்வாய்
இழுதை யன்னமெய் யினர்பணிந் தேத்துவா ராணர். (௪௯)

பழுதி லாதசொன் மணியினைப் பத்திசெய் தன்பு
முழுது மாகிய வடத்தினுன் முறைதொடுத் தலங்கல்
அழுது சாத்துமெய் யன்பருக் ககமகிழ்ந் தையர்
வழுவி லாதபேர் மாணிக்க வாசக னென்றார். (௫0)

பாட்டிற் கின்புறு குருபரன் பாதமேற் கண்ணீர்
ஆட்டிச் சொன்மல ரணிந்துதற் போதவின் னமுதை
ஊட்டித் தற்பர ஞானமா மோமவெங் கனலை
மூட்டிச் சம்புவின் பூசைமேன் முயற்சிய ராணர். (௫௧)

ஆசை வெம்பவ வாசனை யற்றுமா ணிக்க
வாச கப்பிரான் றேசிகன் மாணவ ரோதும்
ஓசை யாகம வுபநிடப் பொருளெலாங் கேட்டு
நேச மங்குவைத் திருந்தன ரதுகண்டு நிருத்தன். (௫௨)

வேறு.

இத்திக்கு மணிவார்த்தை யின்னஞ் சின்னுட் டிருச்செவியி லருந்தவுங்கைச் செம்பொ னெல்லாம், பத்திப்பே ரன்பளித்துக் கவர்ந்து வேண்டும் பணிகொடு பாண் டியனையிவர் பண்பு தேற்றி, முத்திக்கே விடுத்திடவும் புத்தை வாது முடித்திடவுந் திருவுள்ள முன்ன மெய்தி, எத்தித்தொண் டரைக்கருமஞ் சிறிதுண் டிங்கே யிருத்தியென வுருக்கரந்தா னடிய ரோடும். (௫௩)

கனவில்வருங் காட்சியெனக் கருணை மூர்த்தி காட்டிமறைத் தலுமன்பர் கலக்கத் தாழ்ந்து, நனவுகொல்லோ கனவுகொல்லோ வின்று நாதன் ஞமலிக்குத் தவிசிட்ட நலம்போ லென்னை, நினைவரிய திருமேனி காட்டி யாண்டு நீத்ததையென் னையுற்று நெஞ்சந் தேறி, இனவடியா ருடன்கூட்டா தேகி னையோ வென்னையுமென் வினையையுமிங் கிருத்தி யெந்தாய். (௫௪)

வஞ்சவினைக் கொள்கலனு முடலைத் தீவாய் மடுக்கிலேன் வரையுருண்டு மாய்ப்பே னல்லேன், நஞ்சொழுகு வாளாலுங் குறைப்பே னல்லே னுதனே யதுவுநின துடைமை யென்றே, அஞ்சினேன் றனேயு மழியா தாவி யையனே நினைப்பிரிந்து மாற்ற கில்லேன், என்செய்கோ வெந்தாயோ வெந்தா யோவென் றிரங்கினர் புரண்டழுதா ரினைய சொல்வார். (௫௫)

வறியவனா மொருபிறவிக் குருடன் கையில் வந்தபெரு விலைமணிபோன்
மழலை தேறாச், சிறியவனா மொருமதலை கையிற் கொண்ட செம்பொன்மணி வள்
ளம்போற் றேவர் யார்க்கும், அறிவரியாய் சிறியேனை யெளிவந் தாண்ட வருமை
யறியேன்றுன்பத் தழுவத் தாழப், பிறிவறியா வன்பரொடு மகன்றாய் கல்லாப்
பேதையேன் குறையலதெம் பிரானா லென்னே. (௫௬)

வே று.

மண்ணாதி யாறாறு மனந்துழாவித் தடுமாறிப்
புண்ணாகி யெனைக்காணா தழல்கின்றேனைப் போதவருட்
கண்ணாலவைமுழுதுங் கரையநோக்கி யான்யாரென
றெண்ணா வெனைத்தந்தா யெங்குற்றாயோ வெந்தாயே. (௫௭)

வானாதி யைந்துமுதல் வகுத்தவோசை முதலைந்தும்
ஆனாதி யங்குமன மாதிநான்கும் வழியடைப்பத்
தேனாதி யறுசுவையுங் கழியவூறுந் தெள்ளமுதம்
யானார நல்கினையா லெங்குற்றாயோ வெந்தாயே. (௫௮)

மாசாய் மறைக்குமல வலியும்நாணும் வேறின்றி
ஆசா விகாரமய மாயினேனைப் * பொருட்படுத்திப்
பேசாத வின்புருவி னின்னொடென்னைப் பின்வைத்த
ஈசா வெனையிங்கிட் டெங்குற்றாயோ வெந்தாயே. (௫௯)

வே று.

என்று வாய்திறந் தரற்றினா ரிரங்கினார் புனிற்றுக்
கன்று நீங்கிய வானெனக் கரைந்தநெஞ் சினராய்ச்
சென்று கோபுர வாயிலின் புறம்புபோய்த் திண்டு
நின்ற காவலன் றமர்களை நேர்ந்தனா நோக்கா. (௬௰)

துங்க வாரியிற் கடும்பரித் தொகையெலா மாடித்
திங்க ளின்றலை வருமென முன்புபோய்த் தென்னர்
புங்க வன்றனக் குணர்த்துமின் போமென விடுத்தார்
அங்க ணாயகன் பெருந்துறை நாயக னன்பர். (௬௧)

புரசை மாவயப் புரவிதேர்ப் பொருநர்போய்ப் பொறிவண்
டிரைசெய் தார்முடி வேந்தன்மு னிறைஞ்சினா ருள்ள
துரைசெய் தாரது கேட்டொன்று முரைத்தில னிருந்தான்
நிரைசெய் தார்ப்பரி வரவினை நோக்கிய நிருபன். (௬௨)

வள்ளல் வாதவூர் முனிகளு மன்னவன் பரிமாக்
கொள்ள நல்கிய பொருளெலாங் குருந்தில்வந் தாண்ட
பிள்ளை வாண்மதிச் சடைமுடிப் பெருந்துறை மறையோர்க்
குள்ள வாதரம் பெருகமுன் வேண்டியாங் குயப்பார். (௬௩)

சிறந்த பூசைக்குந் திருவிழாச் சிறப்புக்குஞ் செல்வம்
நிறைந்த வாலயத் திருப்பணித் திறத்துக்கு நிரப்பி
அறந்த வாதபே ரன்பர்க்குஞ் செலுத்தியத் தலத்தே
உறைந்த வாவற வின்னண மொழுகுநாள் கழிப்பார். (௬௪)

எல்லை கூறிய குளிர்மதி யடுக்கவந் தெய்த
மல்லல் யானையா னின்னமும் வயப்பரி வந்த
தில்லை யாலிது வென்னென வோலையு மெழுதிச்
செல்ல வுய்த்தனன் வாதவூ ரமைச்சர்தந் திருமுன். (௬௫)

* மலமாயினேனை என்றும் பாடம்.

மன்ன வன்றிரு முகங்கண்டு முறைமையால் வாங்கி
அன்ன வாசகந் தெரிந்துகொண் டாதியீ றில்லா
முன்ன வன்றிரு வருட்கடன் மூழ்கிய முனிவர்
என்னை வேறினிச் செய்யுமா றென்றுநின் றயர்வார். (௬௬)

சிந்தை யாகிய செறுவினுட் டிவமுத லோங்கப்
பந்த பாசம்வே ரறக்களைந் தருட்புனல் பாய்ச்சி
அந்த மாதியின் றாகிய வானந்த போகந்
தந்த தேசிக வுழவன்றன் கோயிலைச் சார்ந்தார். (௬௭)

வேறு.

என்னா யகனே பொன்னாட ரேறே யேறு கொடியுயர்த்த
மன்னா தென்னா பெருந்துறையெம் மணியே வழுதி பொருளெல்லாம்
நின்னா லயத்து நின்னடியா ரிடத்துஞ் செலுத்து நெறியளித்தாய்
பின்னா னவனுக் கென்கொண்டு பரிமாச் செலுத்தப் பெறுமாறே. (௬௮)

என்னா விறைஞ்சி யெழுந்தேத்தி யிரந்தா ரெதிரே பெருந்துறையின்
மின்னார் சடைமேற் பிறைமுடித்தோன் விசும்பி னிறைந்த திருவாக்கின்
மன்னா னவற்குப் பரியெல்லாம் வருமென் றோலை விடுதியெனச்
சொன்னா னதுகேட் டகத்துவகை துளும்பி வரைந்து சுருள்விடுத்தார். (௬௯)

அந்த வோலைப் பாசுரமு மறையக் கேட்டு நின்றாங்கோர்
சிந்தை யானா மகிழ்சிறப்ப விருந்தான் புரவித் தேரோடும்
வந்த வாதிச் செங்கதிரோன் மறைந்தா னவனால் வையமெலாம்
வெந்த வேடை தணிப்பான்போன் முளைத்தா னாழி வெண்கதிரோன். (௭௰)

அன்று துயிலும் வாதவூ ரடிகள் கனவிற் சுடர்வெள்ளி
மன்று கிழவர் குருந்தடியில் வடிவங் காட்டி யெழுந்தருளி
வென்றி வேந்தன் மனங்கவரும் விசயப் பரிகொண் டணைகின்றேம்
இன்று நீமுன் னேகுதியென் றருளிச் செய்ய வெழுந்திருந்தார். (௭௧)

கனவி னிடத்துந் தேவர்க்குங் காண்டற் கரிய கருணையுரு
நனவி னிடத்துங் கனவிடத்து மெளிதே யன்றோ நமக்கென்ன
நினைவி னிடைக்கொண் டிருக்கின்றார் திருத்தா னந்தச் சுடருள்ளத்
தினவி ருளைத்தின் றெழுவதென வெழுந்தா னிரவி யிரவொதுங்க. (௭௨)

எழுந்தா ருடைய பெருந்துறையா ரிருதாள் பணிந்தா ரினிப்பிறப்பில்
அழுந்தார் வழிக்கொண் டாரடைந்தா ரகன்றார் நெறிக ளவிர்திங்கட்
கொழுந்தார் சடையா விடையார்தென் கூட லணைந்தார் பாடளிவண்
டுழுந்தார் வேந்தன் பொற்கோயி லுற்றார் காணப் பெற்றாரால். (௭௩)

மன்னர் பெருமா னெதிர்வந்த மறையோர் பெருமான் வழிபாடு
முன்னர் முறையாற் செய்தொழுகி முன்னே நிற்ப முகநோக்கித்
தென்னர் பெருமா னெவ்வளவு செம்பொன் கொடுபோ யெவ்வளவு
நன்னீ வுளி கொண்ட தெனக் கேட்டான் கேட்ட நான்மறையோர். (௭௪)

பொன்னு மளவோ விலைகொண்ட புரவித் தொகையு மனைத்தவைதாம
பின்னர் வரக்கண் டருளுதியெம் பெருமா னிதனாற் றுரங்கபதி
என்னு நாமம் பெறுதிமதி யென்றா ரென்ற மந்திரர்க்குத்
தென்னன் சிறந்த வரிசைவளஞ் செய்து விடுப்பச் செல்கின்றார். (௭௫)

பொன்னனைய கமலத் தடம்படிந்து புழைக்கை மதமா முகக்கடவு
ளன்னங் கமல சரணிறைஞ்சித் தனியே முளைத்த சிவக்கொழுந்தை
மின்னங் கயற்கட் கொடிமருங்கில் விளைந்த தேனை முகந்துண்டு
முன்னங் கருத்து மொழியுடம்பு மூன்று மன்பாய்த் தோன்றினார். (௭௬)

மன்னே யென்னை யாட்கொண்ட மணியே வெள்ளி மன்றாடும்
அன்னே யடியேன் வேண்டியவா றரச னீந்த நிதியெல்லாம்
முன்னே கொண்டென் பணிகொண்டாய் முனியா தரச னனிமகிழ
என்னே புரவி வரும்வண்ண மென்று வேண்டி நின்றிடலும். (௭௭)

மெய்யன் புடையா யஞ்சலைநீ வேட்ட வண்ணம் விண்ணிரவி
வையம் பரிக்கும் பரியனைய வயமாக் கொண்டு வருதுமென
ஐயன் றிருவாக் ககல்விசும்பா றெழுந்த தாக வதுகேட்டுப்
பொய்யன் பகன்றார் சிவன்கருணை போற்றி மனையிற் போயினார். (௭௮)

வேறு.

கடிமனை யடைந்த வெல்லை வாதவூர்க் காவ லோரை
மடிமையில் சுற்றத் தோருங் கேளிரு மாண்ட காதல்
அடிமையு ளாரு மேதி லாளரும் பிறரு மீண்டி
இடிமழை வாய்விட் டென்னப் புந்திக ளினைய சொல்வார். (௭௯)

மந்திரக் கிழமை பூண்டு மன்னவர் கருமஞ் செய்வ
தந்தணர்க் கறனே யல்ல வமைச்சிய லறத்து நின்றால்
வெந்திற லரசர்க் கேற்ற செய்வதே வேண்டு மென்னத்
தந்திர மநுநூல் வல்லோர் சாற்றுவா ரன்றோ வையா. (௮௦)

அரசிய லமைச்சு நீதி யாய்ந்தநுங் கட்கு நாங்கள்
உரைசெய்வ தெவனீர் செய்வ தொன்றுநன் றுவ தில்லை
விரைசெறி தாராற் கின்று வெம்பரி வருவ தாக
வரைமுறை செய்தீர் நாளை யென்சொல வல்லீ ரையா. (௮௧)

தழுவிய கிளைஞர் நட்டோர் சார்வுளோர் தக்க சான்றோர்
குழுவினைக் காக்க வேண்டுங் குறிப்பிலீர் போலு நீவிர்
ஒழுகுறு செயலி னாலே யுஞ்செய லுமக்கே சால
அழகிது போலு மென்னக் கழறினா ரதுகேட் டையன். (௮௨)

சுற்றமுந் தொடர்பு நீத்தேந் துன்பமு மின்பு மற்றேம்
வெற்றுடன் மானந் தீர்ந்தேம் வெறுக்கைமேல் வெறுக்கை வைத்தேஞ்
செற்றமுஞ் செருக்குங் காய்ந்தேந் தீவினை யிரண்டுந் தீர்ந்தேங்
கற்றைவார் சடையான் கோலங் காட்டியாட் கொண்ட வன்றே. (௮௩)

தந்தைதாய் குரவ னாசான் சங்கர னிராசை பெண்டிர்
மைந்தர்பல் லுயிருஞ் சுற்ற மாசிலா வீச னன்பர்
அந்தமில் பிறவி யேழு மடுபகை யென்ப தோர்ந்தேம்
எந்தையார் கருணை காட்டி யெம்மையாட் கொண்ட வன்றே. (௮௪)

ஊரெலா மிட்ட சோறு நம்மதே யுவரி சூழ்ந்த
பாரெலாம் பாய றுன்னற் கோவணம் பரிக்கு மாடை
சீரெலாஞ் சிறந்த சாந்தந் தெய்வநீ றணிபூண் கண்டி
நீரெலாஞ் சுமந்த வேணி நிருத்தனாட் கொண்ட வன்றே. (௮௫)

வேறு.

இறக்கினு மின்றே யிறக்குக வென்று மிருக்கினு மிருக்குக வேந்தன்
ஒறுக்கினு மொறுக்க வுலகையு முடனே யூட்டினு மூட்டுக வானிற்
சிறக்கினுஞ் சிறக்க கொடியதீ நரகஞ் சேரினுஞ் சேருக சிவனை
மறக்கிலம் பண்டைப் பழவினை விளைந்தான் மாற்றுவார் யாரெண மறுத்தார். ()

வாதவூரடிகளுக்குபதேசித்தபடலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௨,௭௬௮.

ஐம்பத்தொன்பதாவது

நரிபரியாக்கியபடலம்.

அரிகணை தொடுத்தது மேவழ மட்டவன் செழியன் வாயிற்
றெரிகலை யமைச்ச ரேற்றைத் தேசிக வடிவத் தீண்டி
வரிகழல் சூட்டி யாண்ட வண்ணமிவ் வண்ண மையன்
நரிகளைப் பரிக ளாக்கி நடத்திய வாறுஞ் சொல்வாம். (௧)

சுற்றமாம் பாச நீவித் துகளறுத் திருந்தார் தம்மை
மற்றைநா ளழைத்து வேந்தன் வந்தில போலு மின்னங்
கொற்றவாம் பரிக ளென்னக் குறுமதி முடித்தா னன்பர்
இற்றைநாண் முதனாண் மூன்றி லீண்டுவ விறைவ வென்றா (௨)

சிந்துர நுதன்மால் யானைச் செல்வவப் பரிக்கு வேறு
மந்துரை யகன்ற வாக வகுக்கசூழ் தண்ணீ ரூட்ட
நந்துறை தடங்கள் வேறு தொடுகநீ ணகர மெங்கும்
இந்துறை மாட மெல்லா மழகுசெய் திடுக வென்றார். (௩)

காவலன் றருமஞ் செய்வோர் கந்துகப் பந்தி யாற்றி
ஓவற நகர மெங்கு மொளிபெற வழகு செய்யத்
தாவுதெண் கடலேழ் கண்ட சகரர்போல் வைகன் மூன்றில்
வாவியுங் குளனுந் தொட்டார் மண்டொடு கருவி மாக்கள். (௪)

வரையறை செய்த மூன்று வைகலுங் கழிந்த பின்னாட்
கரையறு பரிமா வீண்டக் கண்டில மின்ன மென்றே
விரையறை வண்டார் தண்டார் வேம்பனும் விளித்து வந்த
உரையறை நாவி னரை யொறுப்பவ னெத்துச் சீறா. (௫)

என்னிவன் பாமாக் கொண்ட தென்றவை வருவ தென்றாத்
தன்னெதிர் நின்ற வஞ்சத் தறுகணார் சிலரை நோக்கிக்
கொன்னுமிக் கள்வன் றன்னைக் கொண்டுபோய்த் தண்டஞ் செய்தெம்
பொன்னெலா மறுவு கொண்டு வாங்குமின் போமி னென்றான். (௬)

கற்றிணி தோளான் சீற்றங் கண்டெதிர் நில்லா தஞ்சிச்
சுற்றிய பாசம் போலத் தொடாந்துகொண் டேகி மள்ளர்
எற்றிணி வகைதான் பொன்னுக் கியம்புமென் றதிரத்துச் சீறிச்
செற்றமில ரிதைதை யாமேற் செறிந்தகல மேற்றி னாரே. (௭)

பொன்னெடுஞ் சயிலங் கோட்டிப் புரம்பொடி படுத்த வீரர்
சொன்னெடுந் தாளை யுள்கி நின்றனர் சுமந்த பாரம்
அந்நெடுந் தகையார் தாங்கி யாற்றினா ரடைந்த வன்பர்
தந்நெடும் பார மெல்லாந் தாங்குவா ரவரே யன்றோ. (அ)

சிலையது பொறைதோற் றீர்த்து சிவனடி நிழலி னின்றார்
நிலையது நோக்கி மாய நெறியிது போலு மென்னாக்
கொலையது வஞ்சா வஞ்சர் கொடுஞ்சினந் திருகி வேதத்
தலையது தெரிந்தார் கையுந் தாள்களுங் கிட்டி யார்த்தார். (கூ)

அக்கொடுந் தொழிலு மஞ்சா திருந்தன ரரனை யுள்கி
இக்கொடுந் தொழிலி னார்தா மினிநனி யொறுப்ப ரென்னாப்
புக்கது காண்டற் குள்ளம் பொறாதென விரவிப் புத்தேள்
மிக்கதன் றொளிகண் மாழ்கி விரிகட லழுவத் தாழ்ந்தான். (க0)

சுந்தர விடங்க ரன்பர் சூழ்துய ரகற்ற நேரே
வந்தெழு காட்சிபோல வந்தது செக்கர் வானம்
இந்தவர் மார்பந் தூங்கு மேனவெண் கோடு போன்ற
தந்தர வுடுக்க ளெல்லா மயன்றலை மாலை யொத்த. (கக)

சுழிபடு பிறவித் துன்பத் தொடுகட லழுவத் தாழ்ந்து
கழிபடு தனையுங் காப்பான் கண்ணுதன் மூர்த்தி பாதம்
வழிபடு மவரைத் தேரான் வன்சிறைப் படுத்த தென்னன்
பழிபடு புகழ்போ லெங்கும் பரந்தது கங்கு லீட்டம். (க௨)

கங்குல்வந் திறுத்த லோடுங் கருஞ்சிறை யறையிற் போக்கிச்
சங்கிலி நிகளம் பூட்டித் தவத்தினைச் சிறையிட் டென்னச்
செங்கனல் சிதற நோக்குஞ் சினங்கெழு காவ லாளர்
மங்குலி னிருண்ட கண்டர் தொண்டரை மறுக்கஞ் செய்தார். (க௩)

மிடைந்தவர் தண்டஞ் செய்ய வெஞ்சிறை வெள்ளத் தாழ்ந்து
கிடந்தவர் கிடந்தோன் பூமே லிருந்தவன் றேடக் கீழ்மேல்
நடந்தவர் செம்பொற் பாத நகைமலர் புணையாப் பற்றிக்
கடந்தனர் துன்ப வேலை புலர்ந்தது கங்குல் வேலை. (க௪)

அந்தமி லழகன் றன்னை யங்கயற் கண்ணி யோடுஞ்
சுந்தர வமளிப் பள்ளி யுணர்த்துவான் றொண்டர் சூழ
வந்தனை செய்யு மார்ப்பு மங்கல சங்க வார்ப்பும்
பந்தநான் மறையி னார்ப்பும் பருகினார் செவிக ளார. (க௫)

போதவா னந்தச் சோதி புனிதமெய்த் தொண்டர்க் காக
நாதமா முரச மார்ப்ப நரிப்பரி வயவர் சூழ
வேதவாம் பரிமேற் கொண்டு வீதியில் வரவு காணுங்
காதலான் போலத் தேர்மேற் கதிரவ னுதயஞ் செய்தான். (க௬)

கயனெடுங் கண்ணி யோடுங் கட்டவிழ் கடிப்பூஞ் சேக்கைத்
துயிலுணர்ந் திருந்த சோம சுந்தரக் கருணை வெள்ளம்
பயினெடுஞ் சிகர நோக்கிப் பங்கயச் செங்கை கூப்பி
நயனபங் கயநீர் சோர நாதனைப் பாட லுற்றார். (க௭)

வேறு.

எந்தா யனைத்துலகு மானாயெத் தேவர்க்குந்
தந்தாய் செழுங்குவளைத் தாராய் பெருந்துறைய
வந்தாய் மதுரைத் திருவால வாயுறையுஞ்
சிந்தா மணியே சிறியேற் கிரங்காயோ. (கஅ)

மூவா முதலாய் முதுமறையா யம்மறையுந்
தாவாத சோதித் தனிஞான பூரணமாய்த்
தேவாதி தேவாய்த் திருவால வாயுறையும்
ஆவார் கொடியா யடியேற் கிரங்காயோ. (க௯)

முன்னா முதுபொருட்கு முன்னா முதுபொருளாய்ப்
பின்னாம் புதுமைக்கும் பின்னாகும் பேரொளியாய்த்
தென்னா மதுரைத் திருவால வாயுறையும்
என்னா யகனே யெளியேற் கிரங்காயோ. (உ0)

மண்ணாய்ப் புனலாய்க் கனலாய் வளியாகி
விண்ணா யிருசுடரா யித்தனையும் வேறாகிப்
பண்ணா யிசையாய்ப் பனுவலா யெங்கண்ணுங்
கண்ணா யென்னுறுகண் காணாவா றென்கொலோ. (உக)

பொங்குஞ் சினமடங்கல் போன்றுருத்து வெங்கூற்றம்
அங்கும் புரியா வருந்துன்பத் தாழ்ந்துநான்
மங்கும் படியறிந்தும் வந்தஞ்ச லென்கிலையால்
எங்குஞ் செவியுடையாய் கேளாயோ வென்னுரையே. (உஉ)

பூட்டியருட் பாசமிரு பாதம் பொறித்துடலிற்
கூட்டி யடியாரு ளகப்படுத்தாட் கொண்டருமை
காட்டியவோ வின்றென்னைக் கைவிட்டாய் வெய்யவரை
ஆட்டி யொறுக்குமிடத் தாரேன்று கொள்வாரே. (உங)

ஊரா ருனைச்சிரிப்ப தோராயென் றன்னடிமைக்
காரா யடியே னயர்வே னஃதறிந்தும்
வாரா யரசன் றமரிழைக்கும் வன்கண்ணோய்
பாரா யுன்றன்மை யிதுவோ பரமேட்டி. (உச)

வேறு.

என்றி ரங்குவோ ரிரங்கொலி யிளஞ்சிறா ரழுகை
சென்று தாயாதஞ் செவித்துளை நுழைந்தெனச் செல்லக்
குன்றி ருஞ்சிலை கோட்டிய கூடனா யகன்கேட்
டன்று வன்சிறை நீக்குவான் றிருவுளத் தமைத்தான். (உரு)

நந்தி யாதியாம் பெருங்கண நாதரை விளித்தான்
வந்தி யாவரும் பணிந்தனர் மன்னவற் கின்று
முந்தி யாவணி மூலநாள் வந்தது முனிவு
சிந்தி யாமுனம் பரியெலாஞ் செலுத்துவான் வேண்டும். (உசு)

யாவ ரும்புனத் தியங்குறு நரியெலா மீட்டித்
தாவ ரும்பரி யாக்கியத் தாம்பரி நடாத்துஞ்
சேவ கஞ்செய்வோ ராகிமுன் செல்லுமின் யாமும்
பாவ கம்பட வருதுமப் படியெனப் பணித்தான். (உஎ)

ஏக நாயக ஞூணைபூண் டெழுகணைத் தவரும்
நாக நாடரும் வியப்புற நரியெலாந் திரட்டி
வேக வாம்பரி யாக்கியவ் வெம்பரி நடாத்தும்
பாக ராயின ரவர்வரும் பரிசது பகர்வாம். (உஅ)

தூக்கி யார்த்தசெழி பட்டினர் சுரிகையர் தொடுதோல்
வீக்கு காலின ரிருப்புடற் காப்பினர் வெருளின்
நோக்கு பார்வையர் புண்டர நுதலின ரிடியிற்
றூக்கி யார்ப்பெழு நகையினர் தழன்றெழு சினத்தோர். (உ௯)

வட்டத் தோல்வரி புறங்கிடந் தசையவை வடிவாள்
தொட்ட கையினர் சிலர்நெடுந் தோமரஞ் சுழல
விட்ட கையினர் சிலர்வெரி நிடைநெடு விசிகப்
புட்டில் வீக்கிவிற் றூக்கிய புயத்தினர் சிலரால். (௩0)

செம்ப டாஞ்செய்த போர்வையர் சிலாபசும் படத்தான்
மொய்ம்பு வீக்கிய கவயத்தர் சிலர்கரு முகில்போல்
அம்பு யம்புதை காப்பினர் சிலர்சில ரவிரும்
பைம்பொன் வாணிறப் படாஞ்செய்குப் பாயத்தர் சிலரால். (௩க)

பிச்ச வொண்குடை யார்பலர் கவரிவால் பிறங்கத்
தைச்ச தண்குடை யார்பலர் சலலிசூழ் நாற்றி
வைச்ச வண்குடை யார்பலர் வாணிலா முத்தம்
மொய்ச்ச வெண்குடை யார்பலர் மொய்ம்பினி ரிவருள். (௩உ)

தரும மாதிநாற் பொருளௌனுந் தாளது ஞான
கரும காண்டமாஞ் செவியது காட்சியைக் கடந்த
ஒருமை யாம்பர மபரமா முணர்வெனுங் கண்ண
தருமை யாம்விதி முகத்தது நிடேதவா லதுவால். (௩௩)

தந்தி ரங்களாற் புறவணி தரித்தது விரித்த
மந்தி ரங்களாற் சதங்கைதார் மணிச்சிலம் பணிந்த
தந்த ரஞ்சுழல் சோமனு மருக்கனு மிதிக்குஞ்
சுந்த ரப்பதம் பொறைகொளத் தூங்கிரு புடைத்தால். (௩௪)

மாண்ட தாரகப் பிரமமாங் கவினம்வாய் கிழியப்
பூண்ட தாற்புறச் சமயமாம் பொருபடை முரிய
மூண்டு போரெதிர் விளைத்திகன் முடிப்பது முளரி
ஆண்ட கோமுக மந்துரை யாகமே வியதால். (௩௫)

அண்ட கோடிக ளனைத்துமோர் பிண்டமா வடுக்கி
உண்ட மீரதா முதுகின்மே லுபநிடக் கலனை
கொண்ட வாவிய வைதிகப் புரவிமேற் கொண்டான்
தொண்டா பாசவன் றொடரவிழ்த் திடவருஞ் சோதி. (௩௬)

ஆன மந்திரக் கிழார்பொருட் டன்றியும் வென்றி
மீன வன்பிறப் பறுக்கவும் வார்கழல் வீக்கி
வான நாயக னேந்திய மறையுறை கழித்த
ஞான வாள்புற விருளையு நக்கிவா ளெறிப்ப. (௩௭)

சாய்ந்த கொண்டையுந் திருமுடிச் சாத்தும்வாள் வைரம்
வேய்ந்த கண்டியந் தொடிகளுங் குழைகளும் வினையைக்
காய்ந்த புண்ட ரதலும்வெண் கலிங்கமுங் காப்பும்
ஆய்ந்த தொண்டர்த மகம்பிரி யாதழ கெறிப்ப. (௩௮)

பிறக்கு மாசையோர் மறந்துமிங் கணுகன்மின் பிறப்பை
மறக்கு மாசையோ ரிம்மென வம்மினன் பரைவேந்
தொறுக்கு நோய்களை வானென வொருவனும் பிறவி
அறுக்க வந்தன னென்பபோற் பரிச்சிலம் பலம்ப. (௩௯)

கங்கை யைச்சடை முடியின்மேற் கரந்தனை யவள்போல
எங்க டம்மையுங் கரந்திடென் றிரந்து காவேரி
துங்க பத்திரை யாதியா நதிகளுஞ் சூழப்
பொங்கி வீழ்வபோ லொலியலுங் கவரியும் புரள. (௪௦)

வாவி நாறிய வாலிதழ்த் தாமரை மலரோன்
நாவி னுளுமை நாயக னுன்மறை பரியா
மேவி னுனெனத் தானொரு வெண்குடை யாகிப்
பாவி னுலென முடியின்மேற் பானிலாக் கால. (௪௧)

முறையி னேதிய புராணமூ வாறுநா மொழியும்
இறைவ னுமிவன் படைத்தளித் தழிப்பவ னிவனே
மறையெ லாமுறை யிடுபரம் பொருளென வாய்விட்
டறைய மாறுபோ லியங்களீ ரொன்பது மார்ப்ப. (௪௨)

மிடைந்த மாயவாம் பரித்திரண் மேற்றிசை நோக்கி
நடந்த நாயக னுன்மறைப் புரவியு நாப்பண்
அடைந்த தாலெழுந் தூளிக ளண்டமுந் திசையும்
படர்ந்த போம்வழி யாதென மயங்கினன் பரிதி. (௪௩)

பள்ள மாக்குவ திடரினைப் பள்ளத்தை மேடு
கொள்ள வாக்குவ பாரெலாம் விலாழிகொப் பளித்து
வெள்ள மாக்குவ தூளியால் வெள்ளத்தை வெறிதாய்
உள்ள தாக்குவ புள்ளுவ வுருக்கொண்ட பரிமா. (௪௪)

கொய்யு ளைப்பரி யெழுந்ததூள் கோப்பவான் கங்கை
வையை யொத்ததேழ் பசும்பரி செம்பரி மாவாச்
செய்த தொத்தது சிந்துரந் திசைக்கய முகத்துப்
பெய்த தொத்ததா லொத்தது பெரும்பகன் மாலை. (௪௫)

விளம்பு கின்றவச் சம்புவெம் பரித்திரண் மிதிக்குங்
குளம்பு கிண்டிய வெழுந்ததூள் குன்றிற கரிந்தோன்
வளம்புகுந் தடை வார்குர வழிபுரி வேள்விக்
களம்பு கைந்தெழு தோற்றமே யல்லது கடாதால். (௪௬)

மட்பு லந்திசை வான்புதை பூழியுண் மறைந்து
கொட்பு றும்பரி சதங்கைதா ரொலியினுங் குளிர்வன்
பெட்பு றுங்குர லொலியினுஞ் செவியினிற் பிறிது
கட்பு லங்களாந் கண்டிலர் வழிவரக் கண்டோர். (௪௭)

வேறு.

சரங்கமெறி சூத்திவை விலாழியல் தார்மா
ஓரங்குமொலி யல்லதிரை யேங்குமொலி யின்ன
தூரங்கமல மற்றிவை சுரர்க்கரச னின்றும்
புரங்கொல விடுத்திட வரும்புணரி யென்பார். (௪௮)

இம்பருல குள்ளவல பண்டினைய பாயமா
உம்பருல காளியரி யேகொலது வொன்றே
வெம்பரிதி வெம்பரிகொ லேழவைக ளேழும்
பைம்பரிகள் யாவினைய பாய்பரிக ளென்பார். (௪௯)

வெம்பணிக ளைப்பொர வெகுண்டெழுவ தேயோ
பைம்புன லுடுத்தமுழு பார்முதுகு கீறும்
உம்பருல கைப்பொர வுருத்தெழுவ தேயோ
அம்பர முகட்டள வடிக்குர மழுத்தும். (௫0)

உத்தர திசைப்புரவி தெற்கடையு மாறும்
அத்தகைய தெற்குள வடக்கடையு மாறும்
இத்தகை குடக்கொடு குணக்கடையு மாறுஞ்
சித்தர்வினை யாடலின் வெளிப்படுதல் செய்யா. (௫௧)

மறைமரபு சாலவரும் வன்னியிவை பொன்னித்
துறைவனுள முஞ்சுடு மிரும்பனை தொடுக்கும்
அறவனுள முஞ்சுடு மமைச்சரை யொறுக்கும்
இறைவழுதி யுள்ளமு மினிச்சுடுவ தென்பார். (௫௨)

முந்தையொரு மந்திரி * பொருட்டரசன் முன்னு
அந்தமி லனீகமொ டரும்பரியில் வந்தாங்
கிந்தமறை மந்திரி யிடும்பைதணி விப்பான்
வந்தனர்கொ லிப்பரி வரும்பொருந ரென்பார். (௫௩)

காமனிவ னேகொலறு காலுழு கடப்பந்
தாமனிவ னேகொல்பொரு தாரகனை வென்றோன்
மாமனிவ னேகொன்மலை வன்சிற கரிந்த
நாமனிவ னேகொலென நாரிய ரயிர்த்தார். (௫௪)

அடுத்திடுவர் கண்ணிறைய வண்ணலழ கெல்லாம்
மடுத்திடுவர் கைவளையை மாலைவிலை யென்னக்
கொடுத்திடுவர் மாலைகள் கொடுத்திடுதி யன்றேல்
எடுத்திடுதி யெங்கள்வளை யெங்கள்கையி லென்பார். (௫௫)

வேந்தன்முடி மாலைமலர் சிந்தினவெ டுத்துக்
கூந்தலின்மி லைந்துமதன் வாகைமலர் கொள்வார்
சாந்தனைய சிந்தின தனந்தடவி யண்ணற்
றேய்ந்தளவி லாமகிழ் துளும்பினவ ரீவார். (௫௬)

பொட்டழகன் மார்பிலிடு போர்வைகவ சப்பேர்
இட்டதுமெய் நம்முயிர்த டுத்தமையி னென்பார்
கட்டழகன் மாலையது கண்ணியென வோதப்
பட்டதுமெய் நம்முயிர் படுத்தமையி னென்பார். (௫௭)

* மந்திரி - சௌந்தரசாமந்தன்.

வேறு.

இச்சை யால்வடி வெடுப்பவ னிந்திர சால
விச்சை காட்டுவா னெனப்பரி வீரனி லுலகைப்
பிச்ச தேற்றிட மயக்கியுங் காமனிற் பெரிது
நச்சு மாதரை மயக்கியு மிங்ஙன நடந்தான். (௫௮)

தாவு கந்துக மிந்திய மொததனை சயமா
வாவு திண்கண மள்ளர்கண் மனங்களை யொத்தார்
மேவி யம்மனந் தொறுமிடை விடாதுநின் றியக்கும்
ஆவி யொத்தது நடுவரு மருமறைப் பரியே. (௫௯)

துன்னு மின்னிய முழக்கமுந் துரகத வொலியும்
அன்ன வீரர்வா யரவமுந் திசைசெவி டடைப்பக்
கன்னி மாமதில் சூழ்கடி நகர்க்கரைக் காதம்
என்ன வெய்தின மறைப்பரிப் பாகனவ் வெல்லை. (௬0)

வேறு.

கண்டவர் கடிதோடிக் கடிநகர் குறுகிக்கார்
விண்டவழ் மணிமாடத் தடுசிறை மிடைகின்ற
கொண்டலி னனையார்முன் குறுகினர் மலர்செவ்வி
முண்டக வதனத்தார் முகிழ்நகை யினர்சொல்வார். (௬௧)

மன்னவ னெறிகோடா மந்திர ரடலேறே
பன்னிற வெழுமுந்நீர்ப் பரவைகள் வருமாபோற்
றுன்னின வருகின்ற துரகத முளவெல்லாம்
பொன்னெயின் மணிவாயில் புகுவன விதுபோதில். (௬௨)

ஒல்லையி லதுமன்னற் குரையுமி னெனமேரு
வில்லவ னருள்பெற்ற வேதியர் பெருமான்போய்ச்
செல்லது தலையிட்ட திருமக னருகெய்தி
மல்லணி திணிதோளாய் வருவன பரியென்றார். (௬௩)

மருத்தென வருகின்ற மாக்கட லெனமன்னன்
திருத்தணி கடகப்பூண் டெறித்திட வுடல்வீங்கப்
பெருத்தெழு மகிழ்தூங்கிப் பெருவிலை மணியாரம்
அருத்திகொள் கலைநல்கி யமைச்சரை மகிழ்வித்தான். (௬௪)

ஏந்தரி யணைநீங்கி யெழுதிய தலைவாயிற்
போந்தரு கொளிர்மாடம் புகுந்தரி யணைமேவிக்
காந்தளின் விரனல்லார் கவரிகள் புடைவீச
ஆய்ந்தவர் புறஞ்சூழ வடுபரி வரவேற்பான். (௬௫)

பரனருள் விளையாடல் காட்டிய பரிவெள்ளம்
வருவன சிறுகாலந் தாழ்த்தலு மதிவேந்தர்
புரவலன் மனம்வெள்கிப் பொய்யிது வெனவுள்கி
அருகணை யுழையோரைக் குறித்தன னழல்கண்ணான். (௬௬)

மன்னவ னினைவாற்றுன் மந்திரர் பெருமானைத்
துன்னினர் கொடுபோயத் தோள்வலி மறமள்ள
உன்னரி தெனவஞ்சா தொறுத்தன ருரவோர்த
தென்னவ தலையுள்கிச் சேவடி துதிசெய்வார். (௬௭)

வேறு.

பூவார் முளரிப் புத்தே ளறியா நெறிதந்தாய
பாவார் தென்சொற் பனுவன் மாலைப் பணிகொண்டாய்
தேவா தேவர்க் கரசே சிறியே னுறுதுன்பம்
ஆவா வென்ன யஞ்சே லென்ன யாரனேயோ. (௬௮)

நெஞ்சே யுரையே செயலே யெல்லா நினவென்றாய்
வஞ்சே போலு மஃதே யின்று வாராயோ
பஞ்சே ரடியாள் பாகா கூடற் பரமேட்டி
அஞ்சே லென்ன யிதுவோ வருளுக் கழகையா. (௬௯)

காவி நேருங் கண்டா நாயிற் கடையான
பாவி யேனைப் பொருளாக் கொண்டென் பணிகொண்டாய்
ஆவி யோடிவ் வுடலு நினதே யன்றோவின்
றேவி வாளா திருந்தால் யாரென் னுடையானே. (௭0)

வேறு.

என்றிரந் திரங்கு மன்ப ரிருசெவி யூடே யேங்குங்
கன்றிளஞ் செவியி னல்லான் கனைகுர லோசை போல
ஒன்றிய சின்னங் காளங் காகள மொலிக்கு மோசை
வென்றிகொள் புரவிச் செந்தூ டிசையெலாம் விழுங்கக் கண்டார். (௭௧)

வழுதியு மறிந்து வாத வூரரை விளித்து வந்த
தொழுகுல வமைச்சர் தம்பாற் றுகடவி ரன்பு கூர்ந்தெம்
பழுதறு கரும நும்போற் பரிக்குநர் யாரை யென்னு
எழுதரு மகிழ்ச்சி மேற்கொண் டளவளா யிருக்கு மெல்லை. (௭௨)

பாயிருட் படலங் கீறிப் பல்கதிர் பரப்பித் தோன்றுஞ்
சேயிளம் பரிதி வானோ ரனையராய்ச் சிறந்த காட்சி
மேயின பாக ரோடும் விலாழியாற் பரவை செய்யும்
வாயின வாகி வந்த மாயவாம் பரிக ளெல்லாம். (௭௩)

வண்டுழு தாரி னான்றன் மரபின்மன் னவரு முன்னாட்
கண்டறி யாத காட்சிக் கவனவாம் பரியை நோக்கி
அண்டர்நா யகன்போ னூழு மாயிரங் கண்பெற் றாலும்
உண்டமை யாவென் றுள்ளக் குறிப்பொடு முவகை பூத்தான். (௭௪)

தானென மகிழ்ச்சி யென்னத் தலைதடு மாறி வேந்தன்
மானவெம் பரிமேல் வந்த வயவரை வியந்து மிக்கார்
ஆனவ ரிவருள் யாரென் றமைச்சரை வினவ வையா
யானது வறியே னென்றார் யாவையு மறிய வல்லார். (௭௫)

வேறு.

அண்டமெலா மாகார் மாகத்தாங்கு மானந்தத் தனிச்சோதி யண்டர் தாங்குஞ், சண்டமறைப் பரிதனக்கா தார மாகித் தரிக்கவொரு காலத்து மசைவிலாத, புண்டரிகத் தாளசையப் பாச நீக்கும் புனைகரத்தாற் பரிபூண்ட பாசம் பற்றிக், கொண்டரச னென்றிபோந்து மன்னு வெங்கள் குதிரையேற் றஞ்சிறிது காண்டி யென்றா. (௭௬)

வேறு.

இசைத்தலைவங் கதியுஞ் சாரி யென்பதிற் றிரட்டி யாதி
விசித்திர விகற்புந் தோன்ற வேந்தனு மலையு மன்றித்
திசைப்புலத் தவரு மேலைத் தேவரு மருள மேற்கொண்
டசைத்தன ரசைவற் றெல்லா வுலகமு மசைக்க வல்லார். (௭௭)

ஆண்டகை யவர்போ னின்ற வடுகணத் தவருந் தத்தங்
காண்டகு புரவி யெல்லா நடத்தினர் காட்டக் கண்டு
பாண்டிய னவரை நோக்கி நுங்களிற் பதியாந் தன்மை
பூண்டவர் யாவ ரென்றா னிவனென்றார் புரவி வீரர். (௭௮)

சுட்டுதற் கரிய சோதி சுருதிவாம் புரவி யோடு
மட்டவிழ் தாரினான்முன் வருதலுங் கருணை நாட்டம்
பட்டுள மயங்கித் தன்னை மறந்தெழீஇப் பாண்டி வேந்தன்
தட்டவிழ் கமலச் செங்கை தலைமிசைக் கூப்பி நின்றான். (௭௯)

பின்னவ னாணை யாலே மறைப்புண்ட பெருநீர்க் கூடன்
மன்னவ னறிவு தோன்ற வின்றொரு வயமா வீரன்
றன்னைநாங் கண்டெ ழுந்து தடங்கரங் கூப்பி நின்ற
தென்னெனத் தவிசின் மீள விருந்திட நாணி நின்றான். (௮௦)

நிற்கின்றான் முகத்தை நோக்கி நேர்நின்ற மறைமா வீரர்
பொற்குன்றாம் புயத்தா யுன்றன் பொருளெலாங் கொண்டு போந்தான்
சொற்குன்றா வமைச்சன் றானே நமக்குநஞ் சூழ னீங்கா
மற்குன்றா நமர்க்கு மார வழங்கினான் வழங்க லாலே. (௮௧)

வானவர் தமக்கே யன்றி மனிதருக் கிசையத் தக்க
வானவன் றறிஞ ரிட்ட விலைவரம் பகன்ற நூலின்
மானமுள் ளனவாய் நல்ல வாசிக ளுனக்கு வந்த
ஊனமில் பரிமா விற்கும் வாணிக முரைப்பக் கேட்டி. (௮௨)

இன்னவாம் பரிக ளென்பா வின்றுநீ கயிறு மாறி
நின்னவர்க் கொள்ளு நீரா னின்னவாம் பரியே நாளை
என்னவா யிருந்த வேனு மெனக்குமுன் றனக்குங் கொண்டு
மன்னவர் கரும மில்லை பரிவிலை வழக்கீ தென்றார். (௮௩)

அப்பொழு தரசன் றானு மகமகிழ்ந் ததற்கு நேர்ந்தெம்
மெய்ப்புக ழமைச்சர் தம்மின் மேம்படு வாத வூரர்
ஒப்பருந் திறத்த ராகி யும்மிடை நட்பான் மிக்க
துப்புர வுடைய ரானா ரெனநனி சொல்லி னானே. (௮௪)

உரகத வாரந் தோற்றா துயர்மறைப் பரிமேல் வந்தார்
மரகத நிறத்து நிம்ப மாலைதாழ் மார்பி னாற்குக்
குரகதங் கயிறு மாறிக் கொடுப்பவர் பொதுமை யாய
துரகத விலக்க ணங்கள் சொல்லுவான் றொடங்கி னாரே. (௮௫)

காயும்வேன் மன்ன வோரிக் கடும்பரி யமையம் வந்தான்,
ஞாயிலுந் தாண்டிச் செல்லு நாட்டமு நுழையாச் சால
வாயிலு நுழையுங் கண்ட வெளியெலாம் வழியாச் செல்லுந்
தீயவெம் பசிவந் துற்றாற் றின்னாத வெனினுந் தின்னும். (௮௬)

---

* இது என ஒருசொல் வருவித்து இதுகொண்டு எனமுடிக்க.

வே று.

பொருவில்சீ ரிலக்கணப் புரவி யொன்றுதான்
ஒருவன திடைவதிந் துறையி னுவ்லென
மருவுறுந் திருமகண் மல்லற் செல்வமும்
பெருகுறுஞ் சீர்த்திகள் பல்கும் பெற்றியால் (௮௭)

நெய்த்திடு மாந்தளிர் நிறத்த நாவின
வைத்திடு குளம்புக ளுயர்ந்த வார்ந்துநேர்
ஒத்திடு மெயிற்றின வுரமுங் கண்டமும்
பைத்திடு மராப்படம் போன்ற பாடலம், (௮௮)

அகலிய நுதலின வாய்ந்த குஞ்சிபோல்
நிகரறு கொப்புளை நிறமொன் றுயின
புகரறு கோண்மூன் றுகிப் பொற்புறு
முகமுடை யனவய மொய்கொள் கோடம் (௮௯)

முட்டிய சமரிடை முகத்தில் வாளினல்
வெட்டினு மெதிர்ப்பதாய்க் குரங்கு வேங்கை தோல்
பட்டிமை நரியரி சரபம் பாய்முயல்
எட்டிய கதியின விவுளி யென்பவே. (௯௦)

உன்னத நீளமுண் டாகிச் சங்குவெண்
கன்னலின் வாலிய விலாழி கால்வதாய்ப்
பின்னமா கியதன்னி வன்னம் பெற்றுமை
வன்னமு முடையது வன்னி யாவதே. (௯௧)

திணிதரு கழுத்தினிற் சிறந்த தெய்வத
மணியுள தாகியெண் மங்க லத்ததாய்
அணிதரு பஞ்சகல் யாண முள்ளதாய்க்
குணிதரு நீரது குதிரை யாவதே. (௯௨)

குங்குமங் கருப்புரங் கொழுந்திண் காரகிற்
பங்கமான் மதமெனக் கமழும் பாலதாய்ச்
சங்கமு மேகமுஞ் சரப முங்கொடுஞ்
சிங்கமும் போலொலி செய்வ தாம்பரி. (௯௩)

நாலுகால் களுங்கடைந் தெடுத்து நாட்டினுற்
போல்வதாய்க் கொட்புறும் போது சுற்றுநீக்
கோலையொப் பாகிமேற் கொண்ட சேவகன்
காலினு ளடங்குவ தாகுங் கந்துகம். (௯௪)

அரணமுந் துருக்கமு மாறுந் தாண்டிடும்
முரணது வாகியிம் முற்றி லக்கணப்
புரணமெல் லாநிறை புரவி போந்தன
இரணவே லாய்வய கெட்டுச் சென்றவால். (௯௫)

பகைத்திற முருக்குமிப் பரிகண் மன்னநீ
உகைத்திடத் தக்கவென் றோதி வேதநூற்
சிகைத்தனிச் சேவகர் திரும்பித் தம்மனே
முகத்தினை நோக்கினர் மொய்த்த வீரரும் (௯௬)

வாம்பரி மறைக்கெலாம் வரம்பு காட்டுவ
தாம்படி கண்டவ ரறிவும் பிற்படப்
போம்படி முடுக்கினார் புரவி யாவையும்
வேம்பணி தோளினான் வியப்ப மெய்தியே. (௯௭)

ஆத்தராய் மருங்குறை யமைச்சர் யாரையும்
பார்த்தசை யாமுடி யசைத்துப் பைப்பயப்
பூத்தவா ணகையொடு மகிழ்ச்சி பொங்கினான்
றீர்த்தனு நடத்தினான் றெய்வ மாவினை. (௯௮)

இருவகைச் சாரியு மெதிர்ந்து வட்டமாய்
வருவழி னெகிழ்விடேபூன் மற்றுகெ லாமொரு
துரகத மேநிலை நின்ற தோற்றமொத்
தொருவற நடத்தினா ரொருக ணத்தினே. (௯௯)

இந்நிலை யலமரு மிவுளி மேலொரு
மின்னிலை வேலினான் வினவத் தங்கையின்
மன்னிய கங்கணம் விதித்து மாநகர்
தன்னிலை காட்டிய தன்மை யொத்தவே. (௧௦௦)

பன்னிற முடையவாம் பரியும் வீதியுட்
பின்னிய வாவெனப் பின்னி வட்டமாய்த்
தன்னிகர் மதுரையாந் தையல் கையணி
துன்னிய பன்மணித் தொடியும் போன்றவே. (௧௦௧)

இந்திய னுதலினா ரிடித்த பொற்சுணஞ்
சிந்திய மறுகிடை நடக்குந் திண்பரிப்
பந்தியி னெழுந்ததூள் சுவணப் பாரின்மா
உந்திய வெழுந்தபொற் பூழி யொத்ததே. (௧௦௨)

தேவரு மனிதருந் திருந்து கூடலார்
யாவரு முவப்புற விவுளி விட்டுமண்
காவலன் முன்குறீஇக் கருணை மாக்கடல்
மாவரு திறனெலாம் வகுத்துத் தேற்றுமால். (௧௦௩)

வேறு.

வளங்கொள் காம்போச மிப்பிரி யிம்பா மந்தர மந்தவாம் புரவி
விளங்கு காந்தார மிக்குரங் குலிவான் மீகமிக் கந்துகஞ் சிந்து
துளங்கில் பாஞ்சால மிக்கன வட்டந் துளுவமிக் குதிரையித் துரகங்
களங்கமி லிமயம் பருப்பத மிந்தக் கற்கியிம் மண்டிலங் * கலிங்கம். (௧௦௪)

ஆரிய மிந்தப் பாடல மிந்த வச்சுவங் கூர்ச்சர மிந்தச்
சீரிய துரங்கங் கேகய மிந்தத் திறலுறு கொய்யுளை யவனம்
வேரியம் பணைசூழ் மக்கமிக் கொக்கு விரிபொழில் வனயுச மிந்தப்
போரிய விவுளி பல்லவ மிந்தப் பொலம்புனை தார்கெடும் பாய்மா. (௧௦௫)

கற்றவர் புகழ்சவ் வீரமிக் கோரங் கன்னிமா ராட்டமிவ் வன்னி
கொற்றவர் பயில்வா சந்திக மிந்தக் கோடகங் காடகங் கன்னல்
உற்றகான் மீர மிவ்வய மிந்த வுத்தம கோணமா ளவமிவ்
வெற்றிசேர் குந்தங் கந்தர மிந்த விறல்புனை யரிசவு ராட்டம். (௧௦௬)

---

* மண்டிலம் - குதிரை.

விரிபொழிற் சாலி வேய்மிகு கிள்ளை வேறுநீ வாரந்தர மிந்தத்
தாரகத மிந்தக் குரகதங் கொண்டல் சூழ்குருக் கேத்திர மின்ன
பரவுபுல் வேறு தேயமு முள்ள பரியெலா மிவணறரு பொருளின்,
விரவிய நசையாற் கொணர்ந்திவர் வந்தார் வேந்தகே ளிந்தவாம் பரியுள். (௧௦௭)

வெண்ணிறஞ் சிவப்புப் பொன்னிறங் கறுப்பும் வேறற விரவிய நான்கு
வண்ணமுள் ளனவும் வேறுவே றுய மரபுமை வண்ணமும் வந்த
எண்ணிய விவற்றின் சிறப்பிலக் கணத்தை யியம்புதுங் கேளென விகல்காய்
அண்ணலங் களிற்குற் கருமறைப் பரிமே லழகியா ரடைவுற விரிப்பார்.

வெள்ளிநித் திலம்பால் சந்திரன் சங்கு வெண்பனி போல்வது வெள்ளைத்
துள்ளிய புரவி மாதுளம் போது சுகிர்ந்த * செம் பஞ்சியின் குழம்பிற்
றெள்ளிய நிறத்த செம்பரி மாமை சிறைக்குயில் வண்டுகார் முகிலபோல்
ஒள்ளிய கரிய பரியெயா யழலா னுரோசனை † நிறத்தபொற் பரியே. (௧௦௯)

தெரிதர வகுத்த விந்நிற நான்குஞ் செறிந்தது மிச்சிர மிதன்பேர்
உரைசெய்வர் முகமார் புச்சிவால் காலென வுரைத்தவெட் டுறுப்பினும் வெண்
விரவியு தட்ட மஙகலந் தலைவால் வியனுர மென்றவிம் மூன்றும் [மை
ஒருவிய வுறுப்போ ரைந்திலும் வெள்ளை யுள்ளது பஞ்சகல் யாணி. (௧௧௦)

அணிகிளர் கழுத்தில் வலஞ்சுழித் திருந்தா லறிந்தவ ரதனையே தெய்வ
மணியென விசைப்பர் முகந்தலை நாசி மார்பமிந் நான்குமிவ் விரண்டு
பணிதரு சுழியு நுதனடுப பின்னைப் பக்கமு மொவ்வொரு சுழியுந்
துணிதர விருப்ப தில்க்கண முளதிச் சுழியில திலக்கண வழுவே. (௧௧௧)

பிரிவுற வுரத்தி லைஞ்சுழி யுளது பேர்சிரீ வற்சமா நுதலில்
இருசுழி யாதன் முச்சுழி யாத விருக்கினு நன்றது வன்றேல்
ஒருவற நான்கு சுழிவலம் புரியா வுள்ளது நல்லது வன்றி
இருசுழி முனணங் கால்களின் மூலத் திருக்கினு நல்லதென் றிசைப்பார். (௧௧௨)

களநடு விரட்டைச் சுழியுடைப் பரிநன் கருத்தனுக் கறமிடி காட்டும்
அளவறு துனப மரணமுண் டாக்கு மவைகணைக் காலுள வாகில்
உளபயந் துன்ப நிகளபந் தனமே லுதடுமுற் காலடி கபோலம்
வளர்முழந் தாளிந் நான்கினுஞ் சுழிகண் மன்னினுந் தலைவனை வதைக்கும். ()

இச்சுழி யுடைய புரவிபந் தியில்யாத் திருக்கினும் பழுதிவை கிடக்க
அச்சமில் பரிக்குப் பிராயநா லெட்டா மவத்தைபத் தாகுமொவ் வொன்றில்
வைச்சது மூன்று வருடமு மிரண்டு மதியமும் பன்னிரு நாளும்
நிச்சயித் தளந்தா ரின்னமு மொருசார் நிகழ்த்திடு மிலக்கண மதுகேள். (௧௧௪)

வேறு.

எவ்வண்ண பேதமிகுந் திருந்தாலும் வெள்ளைகலந் திருந்த தாலை
அவ்வண்ணப் பரிநன்று கரும்புரவிக் ககட்டேனு மகணமார் பேனுஞ்
செவ்வண்ண மிருக்கினது சயமுளதப் படிவெண்மை சேர்ந்தா லந்த
மைவ்வண்ணப் பரியின்பேர் வாருணமாஞ் சயங்கொடுக்கு மாற்றுர் போரில். ()

மகவளிக்கும் பிடர்வெளுப்பு மகிழ்வளிக்கு முரவெளுப்பு மணித்தார்க் கண்டத்
தகவெளுப்புப் பொருள்கொடுக்கு முகவெளுப்புச் சயங்கொடுக்கு மதனபின் ப
தகவெளுப்புச் சுகம்பயக்கு மிடவெளுப்புச் சந்தானந் தழைக்குஞ் செல்வம் [கத்
மிகவளர்க்குந் தனம்பலதா னியநல்கும் வலப்புறத்து வெள்ளை மாதோ. (௧௧௬)

---

† சுகிர்தல் - சிக்கறுத்தல். ‡ அனுரோசனை - கோரோசனை.

நற்புறம்வான் முகமூன்றும் வெளுத்தபரி வென்றிதரு நாபி தொட்டு
முற்புறமெ லாம்பரிதி யெனச்சிவந்து மதியெனப்பின் முழுதும் வெளுக்கும்
பொற்புடைய வயப்பரிக்குப் பகல்விசய மதியெனமுற் புறமும் வெளுப்ப்
பிற்புறமெல் லாங்கதிர்போற் சிவந்தபரிக் கிராவிசயம் பெருகு மன்றே. (௧௧௭)

வந்தனவா லிவ்விரண்டு வகைப்பரியும் புரவியடி னிலத்தா லொத்த
பந்தெனவு நின்றுலோ மலையெனவு மொலித்தாலோ பகடு சீறும்
வெந்தறுக ணரியெனவும் வேகத்தாற் காற்றெனவு மிதிக்குங் கூத்தாற்
சந்தநட மகனெனவு நடக்கிலரி களிறெனவுந் தகைய தாகி. (௧௧௮)

குலமகள்போற் கவிழ்முகமுங் கருநெய்த லெனக்கண்ணுங் கொண்டு காற்போல
நிலவியசீர் வண்ணமுங்கார் நெய்தலெனக் கடிமணமு நிறைந்து நாற்ற
மலரகிலச் தெரிமணிப்பூ ணலங்கரிக்கி லானுத மகிழ்ச்சி யெய்தி
இலகுவதுத் தமவாசி யென்றுரைப்பர் பரிநூலி னெல்லை கண்டோர். (௧௧௯)

நாறுவிர லுத்தமவாம் பரிக்குப்பர் வீரெட்டுவிர னூறு நீக்கிக்
கூறுவிரன் மத்திமவாம் பரிக்கறுபத் தொன்றதமக் குதிரைக் கென்ப
ஏறிலபுக ழாயபொருந ரிப்பரியைப் பூசனைசெய் திறைஞ்சிப் பாசம்
மாறுவரா னெணமணித்தார் சதங்கைசிலம் பணிவித்து மதிக்கோ மாறன். (௧௨0)

கொத்தவிழ்தார் நறுஞ்சாந்தங் கொண்டுசெழும் புகைதீபங் கொடுத்துப் பூசை
பத்திமையாற் செய்திறைஞ்சி யெதிர்நிற்ப வாலவாயப் பரனை நோக்கிக்
கைத்தலந்தன் சிரமுகிழ்த்து வாழியெனப் பரிகொடுத்தான் கயிறு மாறி
முத்தொழிலின் மூவராய் மூவர்க்குந் தெரியாத முக்க ணாதி. (௧௨௧)

வேறு.

உவந்திடக் கலனை வாசி யொன்றலா னின்ற மாயக்
கவனவாம் புரவி யெல்லாங் கொடுத்திடக் கவர்ந்து வீறு
தவனனில் விளங்குந் தென்னன் றன்பெருங் கோயி லுய்ப்பப்
பவனமுங் கடலும் போலக் கொண்டுபோய்ப் பந்தி சேர்த்தார். (௧௨௨)

வாசிவீர் ணிகர்க்குத் தென்னன் வெண்டுகில் வரிசை யாக
வீசினன் பாணற் கேவல் செய்தவா வெளகு வாரோ
கூசலர் நேசாக காப்பான் குதிரையி னிழிந்தேற் றந்தத்
தூசினை யிரண்டாங் கங்கை யெனமுடி சூடி னன்றால். (௧௨௩)

இனையதூ சிவன்பா லாதி யிழிந்துநின் றேற்றுச் சென்னி
புனைவதென் னிவாகை யோடும் புனைந்திதக் கூடையும் பூண்ட
கனலராப் பூணு மன்னன் கவருமோ வென்று தம்மில்
வினவினா வெகுண்டு சொன்னா கணத்தனி வீர ரெல்லாம். (௧௨௪)

அறந்தரு கோலான் வெவ்வே றடுபரி வயவா யார்க்கும்
நிறந்தரு கலிங்க மீந்தா னோந்தலை வாங்கி யன்பிற்
சிறந்தருள் வடிவாய் வந்தார் செழுமறைப் புரவி யோடு
மறைந்தனர் மறைந்தா ரொக்க மாயவாம் பரிமேல் வந்தார். (௧௨௫)

இருமைக்குந் துணையாய் நின்ற விருபிறப் பாளர்க் கேற்ப
அருமைத்தாஞ் சிறப்பு நல்கி யவரிடத் தவரை யுய்த்துப்
பருமத்த யானை வேந்தன் பகற்கதிர் வானத் துச்சி
வருமப்போ தெழுந்து செம்பொன் மாடநீள் கோயில் புக்கான். (௧௨௬)

ஏனைமந் திரருந் தத்த மில்புகப் புரவி பார்த்த
மாநக ராருந் தத்த மனைபுகப் பரியின் பாக
ரானவர் தாமுங் கோயி லடைந்துதம் வினையாட் டெல்லாம்
மீனெடுங் கண்ணிநாட்கு விளம்பினா ரிருந்தா ரன்றே. (௧௨௭)

நரிபரியாக்கியபடல முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௨,௬௨௫.

அறுபதாவது

பரிநரியாக்கிவைகையழைத்தபடலம்.

ஞான நாயக னுனையா னரிபரி வெள்ள
மான வாறுரை செய்துமீண் டப்பரி நரியாய்ப்
போன வாறுகண் டமைச்சரைப் புரவலன் கறுப்ப
வான வாறுபோல் வைகைநீர் வந்தவா றுரைப்பாம். (௧)

நெருங்கு தூரிய முழக்கமுந் தானையு நிமிர
மருங்கி லாதவர் வந்தெதிர் மங்கல மேந்த
அரங்கொல் வேலினு னருளிய வரிசையோ டணைந்து
புரங்கொல் வேதியர்க் கன்பர்தந் திருமனை புகுந்தார். (௨)

உடுத்த சுற்றமுங் கழகமு மொட்டிய நட்பும்
அடுத்த கேண்மையால் வினவுவா ரவரவர்க் கிசைய
எடுத்த வாய்மையான் முகமனு மகிழ்ச்சியு மீந்து
விடுத்த வாதவூ ராளிகள் வேறிடத் திருந்து. (௩)

கரந்தை சூடிய வாலவாய்க் கண்ணுத லுமன்
நிரந்த வண்ணமே யாங்கொடு போகிய வெல்லாம்
பரந்த வன்பருந் தானுங்கொண் டெம்மையும் பணிகொண்
டரந்தை தீர்த்தன னன்றியு மரசனுக் கிசைய. (௪)

நல்ல வாம்பரி செலுத்தின னமக்கினிக் கவலை
இல்ல வாம்படி யாக்கின னின்னமொன் றுலகை
வெல்ல வாம்படி தன்னருள் விளக்குமா னந்தம்
புல்ல வாம்படி யெமைத்தவம் பூட்டுவான் வேண்டும். (௫)

என்ற வாதரந் தலைக்கொள விகபரத் தாசை
ஒன்று மின்றியே யுணர்வினுக் குள்ளுணர் வாகத்
துன்று பூரண மாகிய சுந்தரச் சோதி
மன்று ளாடிய சேவடி மனம்புதைத் திருந்தார். (௬)

நாளை யுந்திரு வால்வாய் நாயகன் றமரை
மூளை மண்சுமந் தருளுமென் றதனையுங் காண்பான்
வளை வெம்பரித் தூளிபோர்ப் புண்டமெய் கழுவி
நீள வேண்டுவான் போற்கடல் குளித்தனன் வெய்யோன். (௭)

ஈச னுடல்வெம் பரிக்குழாத் தெழுந்தசெந் தூளான்
மாசு மூழ்கிய வண்டத்தை வானிலா வென்னுந்
தூசி னாலறத் துடைப்பவ னெனமணித் தொகுதி
வீசு மாழியுண் முளைத்தனன் வெண்மதிக் கடவுள். (௮)

நேசய தாரகை வருணமாத் தீட்டிய வானம்
ஆய வேட்டினை யிருளெனு மஞ்சனந் தடவித்
தூய வாணிலா வென்னும்வெண் டேசினாற் றுடைப்பான்
பாய வேலையின் முளைத்தனன் பனிமதிக் கடவுள். (௯)

கள்ளொ ழுக்குதார் மீனவன் கடிமனை புகுந்த
புள்ளு வப்பரி நள்ளிருட் போதுவந் தெய்தப்
பிள்ளை யாகிய மதிமுடிப் பிரான்விளை யாட்டில்
உள்ள வாறுதம் வடிவெடுத் தொன்றொடொன் றுசாவும். (௧௦)

சங்கி னோசையும் பிணப்பறை யோசையுஞ் சரிந்த
மங்கு லோதிய ரழுகுர லோசையும் வடந்தாழ்
கொங்கை சேப்புறக் கையெறி யோசையுங் குயிர
எங்கு நாஞ்செவி பருகுவ மின்னமு தென்ன. (௧௧)

வாம்ப ரித்திர ளாகிநா மனித்தரைச் சுமந்து
தாம்பு சங்கிலி தொடக்குண்டு மத்திகை தாக்க
ஏம்ப லுற்றனம் பகலெலா மிப்பொழு தீண்டு
நாம்ப லடைத்தன நம்முரு நம்விதி வலத்தால். (௧௨)

கான கந்தனி லொழுகுநாண் முதலிந்தக் கவலை
யான துன்பநா மறிந்தில மின்னமு மார்த்த
மான வன்றொடர் வடுக்களு மத்திகைத் தழும்பும்
போன வன்றினிப் புலருமுன் போவதே கருமம். (௧௩)

ஊன்ற மாரநாந் தின்பதற் கூன்சரிந் தொழுகும்
நொள்ளை நாகில நந்தில நுழைந்தளை யொதுங்கும்
கள்ள நீள்கவைக் கான்றொண்டு மிலவினிக் கடலை
கொள்ளி னோடுபைம் பயறுபுற் கொள்வகை யடாதால. (௧௪)

நாடிக் காவலன் நமருள்ளார் நகருளார் கண்டாற்
சாடிக் காய்வரே புலருமுன் சங்கிலித் தொடர்நீத்
தோடிப் போவதே சூழ்ச்சியென் றாக்கமுற் றொருங்கே
கூடிப் பேசின வூளைவாய்க் குறுநரிக் குழாங்கள். (௧௫)

வெறுத்த கானமுங் கடலையும் விரும்பின கோளுன்
துறுத்து நாகுநந் தலவனைச் சங்கிலித் தொடரை
முறித்த கால்களிற் கட்டிய கயிற்றொடு முளையைப்
பறித்த வூளையிட் டெழுந்தன போம்வழி பார்ப்ப. (௧௬)

நின்ற நீணிலைப் பந்தியு னொருங்குமா நிரையைச்
சென்று தாவிவா ளெயிறுறச் சிதைபடக் கடித்து,
மென்று சோரியைக் குடிப்பன வீக்கிய முளையோ
டொன்ற வேரொடே யண்டத்தி லூறுசெய் வனவா. (௧௭)

ஊளை யோசைகேட் டிம்மென வுறக்கநீத் தெழுந்து
காளை வீரராய் மந்துரை காப்பவர் நெருநல்
ஆளி போல்வரு பரியெலா நரிகளாய் மற்றை
ஓளி மாணிரை குடர்பறித் துண்பன கண்டார். (௧௮)

காண்ட லுஞ்சில யஞ்சியுள கடியமுள்ளரணந்
தாண்டி யோடின சிலநரி சாளர முழையைத்
தூண்டி யோடின சிலநரி சுருங்கையின் வழியால்
ஈண்டி யோடின நூழில்புக் கேகின சிலவே. (௧௯)

முடங்கு காலுடைச் சம்புவு மூப்படைந் தாற்றல்
அடங்கு மோரியுங் கண்குரு டாகிய நரியும்
ஒடுங்கு நோயுழந் தசைமரு மிகலனு மோடும்
இடங்கள் கண்டில பந்தியிற் கிடந்தன வேங்கி. (௨௰)

கிட்டி யோடினர் வெருட்டுவோர் கீழ்விழக் கடித்துத்
தட்டி யோடுவ சிலவெதிர் தடுப்பவ ரடிக்கீழ்
ஒட்டி யோடுவ சிலகிடங் தூளையிட் டிரங்குங்
குட்டி யோடணைத் தெயிலிறக் குதிப்பன சிலவே. (௨௧)

மறம்பு னைந்தவேல் மீனவன் மாளிகை தள்ளிப்
புறம்ப டைந்தவிந் நரியெலாம் பொய்கையுய் யானம்
அறம்ப யினறநீண் மனைமறு காலயங் கவலைத்
திறம்ப டர்ந்தபன் மாடநீ ணகரெலாஞ் செறிந்த. (௨௨)

மன்றுஞ் சித்திர கூடமு மாடமு மணிசெய்
குன்றுந் தெற்றியு முற்றமு நாளோடு கோள்வந்
தென்றுஞ் சுற்றிய பொங்கரு மெங்கணு நிரம்பி
ஒன்றுஞ் சுற்றமோ டுளையிட் டுழல்வன நரிகள். (௨௩)

கரியி னோசையும் பல்லிய வோசையுங் கடுந்தேர்ப்
பரியி னோசையு மின்றமி ழோசையும் பாணர்
வரியி னோசையு நிரம்பிய மணிநக ரெங்கும்
நரியி னோசையாயக் கிடந்தது விழித்தது நகரம். (௨௪)

விழித்த ஞாளிகள் விழித்தன கேகயம் வெருவி
விழித்த கோழிகள் விழித்தன மதுகரம் வெருண்டு
விழித்த வோதிமம் விழித்தன குருகினம் விரைய
விழித்த வாரணம் விழித்தன கருங்கொடி வெள்ளம். (௨௫)

அட்டில் புக்கன நிணத்தினை யழற்பசி யுருக்கப்
பட்ட டுக்கிய கருங்கல முருட்டுவ பாகு
சுட்ட சோறுபல் லுணவுவாய் மடுப்பன சூழ்ந்த
குட்டி யுண்ணவுங் கொடுப்பன கூவிளி கொள்வ. (௨௬)

புறவு பூவைபைங் கிள்ளைகள் பூத்தலைச் சேவல்
பிறவும் வாருவ வுறங்கிய பிள்ளையைக் கொடுபோய்
நறவு நாறிய குமுதவாய் நகையெழ நக்கி
உறவு போல்விளை யாடுவ வூறுசெய் யாவால். (௨௭)

றிப்ப வேரொடு முன்றிலவாய்ப் படர்பசுங் கொடியைக்
றிப்ப நாகிளங் காயெலாங் கருயபுதேன் கவிழ
முறிப்ப வாயிட்டுக் குதட்டுவ வண்டுவாய் மொய்ப்பத
தெறிப்ப வூனையிட் டாடுவ திரிவன பலவே. (௨௮)

ஆயி ரம்பொறி திரிமருப் படல்கெழு மேடம்
ஆயி ரங்கருந் தாதுநே ராக்கைய வேணம்
ஆயி ரங்கவி ரனையசூட் டவிர்தலைக் கோழி
ஆயி ரங்குறும் பார்ப்பொடு மாருயிர் செகுப்ப. (௨௯)

பின்னொ டர்ந்துநாய் குரையவொடு துரந்திடப் பெயர்ந்து
முன்னொ டர்ந்துயிர் செகுப்பன வெஞ்சினை மூட்டி
வன்ற டம்புப மள்ளர்போய் வலிசெயப் பொறாது
கன்றி வந்துசெம் புனலுகக் கடிப்பன வனந்தம். (௩௦)

பன்றி வாய்விடு மிரக்கமும் பல்பொறி முள்வாய்
வென்றி வாரணச் சும்மையு மேழகத் தொலியும்
அன்றி நாய்குரைப் போசையு மாடவ ரார்ப்பும்
ஒன்றி யூளைவாய் நரிக்குரற் கொப்பதுண் டொருசார். (௩௧)

கங்கு லெல்லைகா ணியநகர் கண்விழித் தாங்கு
மங்கு ரேய்பெரு வாயில்கூ டிறத்தலு மாறு
தெங்கு நீண்டிய நரியெலா மிம்மென வோடிப்
பொங்கு காரிருட் டிணியெனப் போயின கானம். (௩௨)

ஈறி லாச்சிவ பரஞ்சுட ரிரவிவந் தெறிப்பத்
தேறு வாரிடைத் தோன்றிய சிறுதெய்வம் போல
மாறி லாதபன் செங்கதிர் மலர்ந்துவா ளெறிப்ப
வீறு போயொளி மழுங்கின மீன்கண மெல்லாம். (௩௩)

அண்ட ருக்கரி தாகிய மறைப்பொரு ளழகைத்
தொண்ட ருக்கெளி தாகிமீண் சுமந்தருள் வருத்தங்
கண்ட ருட்கழல் வருடுவான் கைகளா யிரமுங்
கொண்ட ருக்கவெங் கடவுளுங் குணகட லுதித்தான். (௩௪)

கவன வெம்பரி செலுத்திமேற் கவலைதீர்ந் துள்ளே
சிவமு ணர்ந்தவர் சிந்தைபோன் மலர்ந்தசெங் கமலம்
உவமை யில்பரம் பொருளுணர்ந் துரையிறந் திருந்தோர்
மவுன வாயென வடங்கின மலர்ந்தபைங் குமுதம். (௩௫)

பந்தி யாளர்கள் யாதெனப் பகர்துமென் றச்சஞ்
சிந்தி யாவெழுந் தொல்லைபோய்த் திரண்மதங் கவிழ்க்குந்
தந்தி யானர சிறைகொளு மிருக்கையைச் சார்ந்து
வந்தி யாவுடல் பனிப்புற வந்தது மொழிவார்: (௩௬)

காற்றி னுங்கடுங் கதியவாய்க் கட்டினி யனவாய்
நேற்று வந்தவாம் பரியெலா நின்றவாம் பரிக்குக்
கூற்றெ னும்படி நரிகளாய் நகரெலாங் குழுமி
ஊற்றஞ் செயதுபோய்க் காட்டகத் தோடிய வென்றா (௩௭)

கருத்து ருதவிச் சொல்லெனுங் கடியகால் செவியாந்
துருத்தி யூடுபோய்க் கோபமாஞ் சுடுதழன் மூட்டி
எரித்த தீப்பொறி சிதறிடக் கண்சிவந் திறைவன்
உருத்த வாறுகண் டமைச்சரும் வெருவினு ரொதுங்கி. (௪௮)

அமுத முண்டவ னஞ்சமுண் டாலென முதனுட்
சமர வெம்பரி மகிழ்ச்சியுட் டாழ்ந்தவ னவையே
திமிர வெங்குறு நரிகளாய்ச் சென்றவே யென்று
அமர ரஞ்சிய வாணையா னரசு ராழ்ந்தான். (௪௯)

வேறு.

அருகிருக்கு தொல்லமைச்சர் தமைநோக்கி வாதவூ ராளி யென்னுங்
கருகிருட்டு மனக்கள்வ னம்முடைய பொருண்முழுதுங் கவர்ந்து காட்டிற்
குருதிநிணக் குடர்பீடுங்கித் தின்றுதிரி நரிகளெல்லாங் குதிரை யாக்கி
வரவிடுத்தா னிவன்செய்த மாயமிது கண்டீரே மதிநூல் வல்லீர். (௫0)

இம்மாயஞ் செய்தானை யென்செய்வ தெனவுலகி லெமருக் கெல்லாம்
வெம்மாசு படுபாவம் பழியிரண்டும் படவிழுக்கு விளைத்துத் தீய
கைம்மாறு கொன்றான்றன் பொருட்டினியா மேதுரைக்கக் கடவே மென்று
சும்மாது சிரந்தூக்கி யெதிராடா திருந்தாரச் சூழ்வல் லோர்கள். (௫௧)

அவ்வேலை மனக்கினிய பரிசெலுத்தி யரசகா ரியநன் றாக்கி
வெவ்வேலை மனக்கவலை விடுத்தனமென் றகமகிழ்ச்சி விளைவு கூர
மைவ்வேலை விடமுண்ட வானவனை நினைந்தறிவு மயமா மின்ப
மெய்வேலை யிடைவீழ்ந்தார் விளைந்ததறி யார்வந்தார் வேந்தன் மாடே. (௫௨)

வந்தவரைச் சிவந்தவிழிப் பொறிசிதறக் கடுகடுத்து மறவோ னோக்கி
அந்தமிலாப் பொருள்கொடுபோய் நல்லவயப் பரிகொடுவந் தழகி தாகத்
தந்தனையன் றேவரச கருமமுடித் திசைநிறுத்தத் தக்கோர் நின்போல்
எந்துவல குளரேயோ வெனவெகுண்டா னதுகேட்ட வீசன் றொண்டர். (௫௩)

குற்றமே தப்புரவிக் கெனக்கேட்டார் கோமகனுங் குற்ற மேதும்
அற்றதா லரையிரவி னரியாகி யயனின்ற புரவி யெல்லாஞ்
செற்றுவார் குருதியுக நிணஞ்சிதறக் குடர்பிடுங்கித் தின்று நேர்வந்
துற்றபேர்க் கூற்றமிழைத் தூர்கலங்கக் காட்டகத்தி லோடிற் றன்றே. (௫௪)

கண்ணுமிடு கவசமும்போற் காரியஞ்செய் தொழுகியது வகாலம் பார்த்தெம்
எண்ணரிய நிதியீட்டங் கவர்வதற்கோ நின்னமைச்சி னியற்கை நன்றாற்
புண்ணியவே தியர்மரபிற் பிறந்தனமென் றொருபெருமை பூண்டா யேநீ
பண்ணியகா ரியம்பழுது பிறராகிற் றண்டிக்கப் படுவ ரென்றான். (௫௫)

தண்டலா ளர்களிவனைக் கொடுபோய்நம் பொருண்முழுதுந் தடுத்து மீர்த்தும்
மிண்டினுல் வலிசெய்தும் வாங்குமென வெகுண்டரசன் விளம்பக் கூற்று
மண்டுமேன் மறஞ்செய்யும் வலியுடையார் கதிரையிரு ளடுத்துப் பற்றிக்
கொண்டுபோ னலென்னக் கொடுபுறம்போ யறவோரைக் கொடுமை செயவார்.()

கதிர்நோக்கக் கன்னமூட்டுங் கடும்பகலுச் சியிலிரவிக் கடவு ளோர்நின்
றெதிர்நோக்க நிலைநிறுத்திக் கரங்களினு நுதலினுங்கல் லேற்றிச் செந்தீப்
பிதிர்நோக்கத் தவரொறுப்ப வாற்றாராய் வீழ்ந்திருளைப் பிளப்போன் செந்தீ
மதிநோக்கத் தனிச்சுடரை யழைத்தழுது துதிசெய்வார் வாத வூரர். (௫௭)

வேறு.

நாதவோ நாத முடிவிறந்த நாடகஞ்செய்
பாதவோ பாதகனு மென்னைப் பணிகொண்ட
வேதவோ வேத முடிவின் விளைந்ததனிப்
போதவோ போத நெறிகடந்த பூரணவோ (௪௮)

ஐயவோ வென்னுடைய வன்பவோ வன்பர்க்கு
மெய்யவோ மெய்யில் வினையேன் றலைவைத்த
கையவோ செய்யகழற் காலவோ காலனைக்காய்
செய்யவோ வேதப் பரியேறுஞ் சேவகவோ. (௪௯)

அத்தவோ கல்லாக் கடையேனை யாட்கொண்ட
பித்தவோ பொய்யுலகை மெய்யாகப் பேதிக்குஞ்
சித்தவோ சித்தந் தெளிவித் தெனைத்தந்த
முத்தவோ மோன மயமான மூர்த்தியவோ. (௫௦)

வேறு.

என்றேறிய புகழ்வேதிய ரிரங்குந்துதி செவியிற்
சென்றேறலும் விடையேறுசுந் தரன்மற்றிவர் செயலை
மன்றேறவு முடிமேனதி மண்ணேறவு முதியாள்
அன்றேறிய தேரோடும்விண் ணடைந்தேறவு நினைந்தான். (௫௧)

கங்கைப்புனல் வடிவாகிய கவ்வைத்திரை வைகைச்
சங்கச்சரி யறலாமலர்த் தாரோதியை நோக்கா
வங்கக்கடல் பேரூழியில் வருமாறென வெவரும்
இங்கற்புத மடையப்பெரு கென்றானருள் குன்றான். (௫௨)

தும்பைச்சடை முடியானொரு சொல்லாடவு முன்னாள்
வம்பைப்பொரு முலையால்வரி வளையால்வடு வழுத்துங்
கொம்பைத்தவங் குலைப்பான்கடுங் கோபங்கொடு நடக்குங்
கம்பைப்பெரு நதியிற்கடுங் கதியால்வரும் வைகை. (௫௩)

பத்திக்குளிர் கமுகின்குலை பரியக்கரை மூரியக்
குத்திப்பழஞ் சிதறச்செறி கோட்டங்களை வீட்டி
முத்திக்கொடு கதலிப்புதன் முதுசாலிகள் பரித்துத்
தத்திப்பல தருவேரொடுந் தள்ளிக்கடு கியதே. (௫௪)

பல்லாயிரஞ் செந்தாமரை பரப்பிக்கொடு வரலால்
நல்லாயிரங் கண்ணனெழி னயக்குங்குளிர் நளினங்
கல்லாரமுங் கடிமுல்லையுங் கரும்புங்கொடு வரலால்
வில்லாயிரங் கொடுபோர்செயும் வேள்வீரனு மானும். (௫௫)

மணிமாலையு மலர்மாலையுஞ் சிதறாவிறு மருங்கே
அணிகாஞ்சியு மொளிர்சங்கமு மலறப்புடை யெறியாக்
கணியாவெழின் முகதாமரை கண்ணீரொடுங் கவிழாத்
தணியாமுனி வுடனோடிய தடங்கண்ணியர் போலும். (௫௬)

வரையுந்திய மதுமுல்லையி னெய்பாறயிர் மருதத்
தரையுந்திய கரும்பின்குறை சாறோடுவ ராறே
இரையுந்தெழு தூநீர்வைகை யிந்நன்னகர் வைகுந்
திரையுந்தெழு கடறீம்மிடஞ் சென்றாலவை போலும். (௫௭)

கல்லென்றதிர் சும்மைப்புனல் கடிமாமதிற் புறம்போய்
இல்லங்களுஞ் சிறிதுச்சிலு மறித்திட்டிருங் கடல்வாய்ச்
செல்லுங்கல னாவாய்பல திமில்போற்சுமந் தேகிப்
புல்லும்புரி சையுந்தள்ளியுள் புகுகின்றதை யன்றே. (௫௮)

மறுகும்பல பொற்சூளாவண மணிவீதியு மன்றுஞ்
சிறுகுங்கண மதமாநிரை சேருந்தெரு வும்போய்
முறுகுஞ்சின மொடுதெண்டிரை மூரிப்புன ருவிக்
குறுகும்படி கண்டஞ்சினர் கொடிமாநக ருள்ளார். (௫௯)

சிலர்மைந்தரை யெடுப்பார்களுஞ் சிலர்மைந்தரைக் காணா
தலமந்தழு வாருஞ்சில ரங்கைத்தளிர் பற்றிக்
குலமங்கையர் தமைக்கொண்டுயப் போவார்களுங் குறுகுந்
தலமெங்கெனத் திகைப்பார்களுந் தடுமாறுகின் றாரும். (௬௰)

பொன்னுள்ளன பணியுள்ளன பொருள்பேணல்செய் வாரும்
மன்னுஞ்சில பொருள்கைக்கொள மறப்பார்களு மாடம்
மின்னுங்கொடி நெடுமாளிகை மேலேறுகின் றாரும்
இந்நன்னகர் துயர்மூழ்குதற் கேதேதுவென் பாரும். (௬௧)

நேற்றும்பரி நரியாயின நெடுமாநக ரெங்கும்
ஊற்றஞ்செய்த வென்பார்களு மொருகாலமு மிந்த
ஆற்றின்பெருக் கிலையென்றயர் வாருங்கட லரசன்
சீற்றங்கொடு முன்போல்வருஞ் செயலேகொ லென்பாரும். (௬௨)

நங்கோமகன் செங்கோல்பிழைத் தனனோவென நவில்வார்
அங்கோல்வளை பங்கன்விளை யாட்டோவென வறைவார்
இங்காரிது தணிப்பாரென விசைப்பாரிது தணிப்பான்
பொங்காலமுண் டருள்சுந்தர னலதியாரெனப் புகல்வார். (௬௩)

அடுத்தாயிரங் குண்டோதர ரெதிரேற்றிருந் தகல்வாய்
மடுத்தாலுமி தடங்காதென மதிப்பாரிது தனையும்
எடுத்தாயிர முககங்கையி னிறைவன்சடை யேறக்
கொடுத்தாலல தடங்காதிதன் கொடுங்கோபம தென்பார். (௬௪)

வானாறிழி நதியாயிர முகத்தால்வரு வதுபோல்
ஆறுதெழு நீத்தந்தணி யாவாறுகண் டன்பு
தானாகிய சிவனன்பரை யொறுக்குந்தறு கண்ணர்
போனார்தம தகத்தேயுள பொருள்பேணுதல் கருதா. (௬௫)

வேறு.

வழுதிதன் றமர்விட் டேக மதுரைநா யகன்பா லேகி
அழுதிசை பாடுந் தொண்டி லகப்படும் பாதம் போற்றித்
தொழுதுகொண் டமிவா யூறுஞ் சுகப்பெருங் கடலின் மூழ்கி
எழுதுசித் திரம்போன் மன்னி யிருந்தனர் வாதவூரர். (௬௬)

பரிநரியாக்கினவைகையழைத்தபடலமுற்றிற்று.

ஆக திருவிருத்தம் - ௨,௯௯௧.

அறுபத்தொராவது

மண் சுமந்த படலம்.

பண்சு மந்தமறை நாட ரும்பொருள் பதஞ்சு மந்தமுடி யார்மனம்
புண்சு மந்ததுயர் தீர வந்தபரி நரிக ளாயடவி போனபின்
விண்சு மந்தசுர நதியெ னப்பெருகு வித்த வைகையி[illegible]
மண்சு மந்துதிரு மேனி மேலடி வடுச்சு மந்தகதை யோதுவாம். (௧)

கருங்க டற்றிரை யிடைக்கி டந்துசுழல் கலமெ னக்ககன முகடளாய்
வரும்பு னற்பரவை யுட்கி டந்துநகர் மறுகி யுட்கமற வேலினன்
ஒருங்க மைச்சரை விளித்து நீர்கரை சுமந்தொ துக்கிவரு மோதநீர்ப்
பொருங்க தத்தினை யடக்கு வீரென வமைச்ச ருந்தொழுது போயினர். (௨)

வெறித்த டக்கைமத யானை மந்திரிகள் வேறு வேறுபல குடிகளுங்
குறித்தெ டுத்தெழுதி யெல்லை யிட்டளவு கோல்கி டத்திவரை கீறியே
அறுத்து விட்டுநக ரெங்க ளும்பறை யறைந்த ழைத்துவிடு மாளொ[illegible]
செறித்து விட்டவ ரவர்க்க ளந்தபடி செய்மி னென்றுவரு வித்தன

மண்டொ டுங்கருவி கூடை யாளரு மரஞ்சு மந்துவரு வார்களும்
விண்டொ டும்படி நிமிர்ந்து வண்டுபடு விரிபசுந் தழைப லாலமுங்
கொண்ட திர்த்துவரு வாரும் வேறுபல கோடி கூடிய குழாமுநீர்
மொண்ட ருந்தவரு மேக சாலமென வருபு னற்கரையின் மொய்த்தனர். (௪)

கிட்டு வார்பரி * நிறுத்து• வாரரவு † ருட்டுவா ரடி கிடத்துவார்
இட்டு வார்தழை நிரப்பு வார்விளி யெழுப்பு வார்பறை யிரட்டுவார்
வெட்டு வார்மண லெடுத்து வார்செல வெருட்டு வார்கடிது தூடுமெனக்
கொட்டு வார்கரை பரப்பு வாருவகை கூரு வார்குரவை குழறுவார். (௫)

கட்டு வார்கரை யுடைப்ப நீர்கடுகல் கண்டு நெஞ்சது கலங்குவார்
மட்டி லாதமுனி வென்னை யன்னையினி யாறு கென்றெதிர் வணங்குவ
கொட்டு• வார்மண லுடைப்ப டங்கமகிழ் கொள்ளு வார்குரவை துள்ளுவார்
எட்டு மாதிரமு மெட்ட வாயொலி யெழுப்பு வார்பறையி ரட்டுவார். (௬)

வேறு.

இந்நிலை யூரி லுள்ளார் யாவர்க்குங் கூலி யாளர்
துன்னிமுன் னளந்த வெல்லைத் தொழின்முறை மூண்டு செய்வார்
அந்நிலை நகரின் றென்கீழ்த் திசையுளா ளளவி லாண்டு
மன்னிய நரைமூ தாட்டி யொருத்திபேர் வந்தி யென்பாள். (௭)

செவியுணா வான வேத சிரப்பொரு ளுணர்ந்து செந்தீ
அவியுண வூட்டு மீச னன்பரி னூற்ற நோற்ற
தவநிறை பேறுதுய்ப்பா டாயிலார்க் கன்னை யொப்பாள்
சுவையுறு பிட்டு விற்றுண் டொழிவிலு டமிய ளாவாள். (௮)

வைகலு மவித்த செவ்விப் பிட்டினை மருங்கு நான்கு
கைகளாய் முளைத்த முக்கட் கரும்பினை யரும்பு மூரற்
செய்கதிர் முகத்தா னந்தத் தேறலை யால வாயெம்
ஐயனை யகத்தா னோக்கி யன்பினு லருத்தி விற்பாள். (௯)

* பரி - குதிரைமரம். • † அரவு - பாம்புபோலுருட்டிய வைக்கோற்பழுதை.

வளைந்தமெய் யுடைய வந்த மாதவ னரைமூ தாட்டிக்
களைந்தபங் கடைப்பூரான் கூலி யாள்கிடை யாம லாற்றத்
தளர்ந்தினி யென்னை மன்னன் றண்டிக்கி னென்செய் கேனென்
றுளைந்தபு மாறிக் கூட லுடையநா யகனை யுன்னா. (௧0)

பிட்டுவிற் றுண்டு வாழும் பேதையே னிடும்பை யென்ப
தெட்டுணை யேனு மின்றி யிரவியெங் கெழுகென் றின்னுண்
மட்டுநின் னருளா லிங்கு வைகினேற் கின்று வந்து
விட்டதோ ரிடையூ றைய மீனவ னாணை யாலே. (௧௧)

துணையின்றி மக்க ளின்றித் தமரின்றிச் சுற்ற மற்றும்
பணையின்றி யென்று கொள்வார் பிறரின்றிப் பற்றுக் கோடாம்
புணையின்றித் துன்பத் தாழ்ந்து புலம்புறு பாவி யேற்கின்
றிணையின்றி யிந்தத் துன்ப மெய்துவ தறனோ வெந்தாய். (௧௨)

தேவர்க்கு மரிய னாகுந் தேவனே யன்ப ராவார்
யாவர்க்கு மெளிய னாகு மீசனே வேந்த னாணைக்
காவற்செங் கோலார் சீற்றங் கடுகுமுன் கூலி யாளாய்
ஏவற்செய் வாரைக் காணே னேழையே னினியென் செய்கேன். (௧௩)

கூலியாள் வருவ துண்டோ வென்றுதன் கொங்கை முற்றத்
தாலிபோற் கண்ணீர் சோர்வாள் குறித்தமுன் பருத்தும் பிட்டை
வேலைநீர் ஞாலங் காண மிசைந்தவ ளிடும்பை தீர்ப்பான்
பாலினேர் மொழியாள் பாக மறைத்தருட் படிவங் கொள்வான். (௧௪)

குறட்குநீ ரருத்தி வைகைக் குடிஞையா யொழுகுங் கங்கை
அறற்குழல் பிரிவி னாற்று தன்பினா லவளைக் காண்பான்
மறக்கய னெடுங்க ணாளை வஞ்சித்து வடிவ மாறிப்
புறப்படு வானைப் போலப் போதுவான் போத மூர்த்தி. (௧௫)

வேறு.

அழுக்கடைந்த பழந்துணியொர் றரைக்கசைத்து விழுத்தொண்டர்
குழுக்கடந்த விண்டைநிகர் சுமையடைமேற் கூடைகவிழ்த்
தெழுக்கடந்து திசைகடந்திட் டிணைகடந்த திருத்தோண்மேன்
மழுக்கடைந்து விளங்கியவாய் மண்வெட்டிண் படையேந்தி. (௧௬)

திடங்காதல் கொண்டறவோர் திருவேள்வி தருமமுதும்
இடங்காவல் கொண்டுறைவா ளருத்தமுது மினிதுண்டும்
அடங்காத பசியினர்போ லன்னைமுலைப் பாலருந்த
மடங்காத பெருவேட்கை மகவுபோற் புறப்பட்டார். (௧௭)

ஆலுமறைச் சிரமுடியா ரடிக்கமல நிலஞ்சூடக்
கூலிகொடுத் தெனைவேலை கொள்வாருண் டோவென்றென்
றோலமறைத் திருமொழிபோ லுரைபரப்பிக் கலுழ்கண்ணீர்
வேலையிடைப் படிந்தயர்வாள் வீதியிடத் தணைகின்றார். (௧௮)

தந்தைதாய் பிறரின்றி வருகின்ற தனிக்கூலி
மைந்தனார் வாய்மலரும் குரல்கேட்டு வந்தியுந்தன்
சிந்தையா குலமிழந்து நல்கூர்ந்தார் செல்வமகத் *
தந்தபோ தெழுமகிழ்ச்சி தலைக்கொள்ளப் புறம்போந்தாள். (௧௯)

* செல்வமிகவென்றும் பாடம்.

அன்னையெனத் தன்பாலின் னருள்சுரந்து வருகாலை
தன்னையழைத் தெனக்களந்த கிரையடைத்துத் தருவாயேல்
என்னவிசைத் தனளாக வடைக்கின்றே னெனக்கன்னை
பின்னையதற் கிடுங்கூலியா தென்றார் பெருமுதியாள். (௨0)

பிட்டிடுவே னுனக்கென்று ளதற்கிசைந்து பெரும்பசியூற்
சுட்டிடநான் மிகமெலிந்தேன் சுவைப்பிட்டி லுதிர்ந்தவெலாம்
இட்டிடுவா யதுமுந்தத் தின்றுநா னிளைப்பாறிக்
கட்டிடுவே னின்னுடைய கரையென்றார் கரையில்லார். (௨௧

தெள்ளியடு சிற்றுண்டி சிக்கடைந்த பொதிநீக்கி
அள்ளியெடுத் தருந்தப்பா வென்றிட்டா ளரைக்கசைத்த
புள்ளியுடைத் துகினீத்தார் புறத்தானை விரித்தேந்தி
ஒள்ளியதென் றவளன்பு முடன்கூட்டி யமுதுசெய்வார். (௨௨)

அன்னைமுலைத் தீம்பாலி னரியசுவைத் திஃதந்தத்
தென்னவனா யுலகாண்ட திருவால வாயுடைய
மன்னர்பிரான் றனக்கேயா மென்றென்று வாய்ப்பெய்து
சென்னியசைத் தமுதுசெய்தார் தீவாய்நஞ் சமுதுசெய்தார். (௨௩)

தந்தையொடு தாயின்றித் தனிக்கூலி யாளாக
வந்தவெனக் கொருதாயா யருள்சுரந்து மாறாத
இந்தவிளைப் பொழித்தனையே யினிவேலைத் தலைச்சென்றுன்
சிந்தைகளிப் பப்பழுவேலை செய்வேனென் றிசைத்தெழுந்தார். (௨௪)

தந்திவாய் மருப்பிடறி வருங்குடிஞைத் தடங்கரையில்
வந்தியான் வந்தியா ளென்றேட்டில் வரைவித்துப்
புந்தியா லுரையானூற் பொருளினா லளப்பரிய
அந்திவான் மதிச்சடையார் கரையடைப்பா ராயினார். (௨௫)

வெட்டுவார் மண்ணைமுடி மேல்வைப்பார் பாரமெனக்
கொட்டுவார் குறைத்தெடுத்துக் கொடுபோவார் சுமடுவிழத்
தட்டுவார் சுமையிறக்கி யெடுத்ததனைத் தலைபடியக்
கட்டுவா ருடன்சுமந்து கொடுபோவார் கரைசொரிவார். (௨௬)

இவ்வண்ண மிவரொருகா லிருகான்மண் சுமந்திளைத்துக்
கைவண்ண மலர்கன்றக் கதிர்முடிமேல் வடுவழுந்த
மைவண்ண னறியாத மலரடிசெம் புனல்சுரந்து
செவ்வண்ணம் படைப்பவொரு செழுந்தருவின் மருங்கணைந்தார். (௨௭)

தருமேவு மலைமகளுஞ் சலமகளு மறியாமற்
றிருமேனி முழுதுகில மகடீண்டித் திளைப்பெய்தக்
குருமேவு மதிமுடியைக் கூடையணை மேற்கிடத்தி
வருமேரு வனையார்தம் வடிவுணர்ந்து துயில்கின்றார். (௨௮)

அத்தருவே யாலநெடுந் தருவாக வலைபுரட்டித்
தத்திவரும் புனலடைப்பார் சனகாதி முழுதுணர்ந்த
மெய்த்தவராய்க் கண்களிப்ப மெய்யுணர்ச்சி மோனமயச்
சுத்தவுருத் தெளிவிப்பா ரெனத்துயிலுந் துயிலுணர்ந்தார். (௨௯)

ஆடுவார் சாமமெனத் தித்திக்கு மமுதவிசை
பாடுவார் நகைசெய்வார் தொழில்செய்வார் பராக்கடையக்
கோடுவார் மணல்குவிப்பார் குதிப்பார்தூ ளெழவடிபாய்ந்
தோடுவா ருடன்மீள்வா ருன்மத்த ரெனவிருப்பார். (௬0)

வேலையினு லறவருந்தி யிளைத்தார்போன் மெய்வேர்வை
காலமிசை மூச்செறிந்து வாயொலியாற் காற்றழைத்துச்
சாலநெடும் பசியினர்போற் றளர்ந்தடியா ளிடும்பிட்டின்
மேலடைந்த விருப்பினராய் மீண்டுமவள் பாலணைவார். (௬௧)

வேறு.

இடும்பைநோய் வெள்ள நீந்தி யின்பநீர் வெள்ளத் தாழ்ந்த
கொடும்புற முதியாண் முன்போய்க் கூறுவார் கோலுக்கே
டுடம்படு கரைக ளெல்லா முடைபடு கின்ற வின்னங்
கடும்பசி யுடையே னென்னே பிட்டிடு கடிதி னென்றார். (௬௨)

ஆங்கவ ளப்போ தட்ட சிற்றுண வளித்தா ளையன்
வாங்கியங் கையு நாவுங் கனலெழ வாயிற் பெய்து
பாங்கிரு கொடிறு மொற்றிப் பதமுறப் பருகிக் கொண்டு
நீங்கிமுன் போலப் போந்து நெடுங்கரை யடைக்க லுற்றார். (௬௩)

பிட்டுவாய் மிதப்ப வுண்பார் பெருவலி யுடையார் போல
வெட்டுவா ரெடுத்த மண்ணைக் கொண்டுபோய் வேற்றுப் பங்கிற்
கொட்டுவா ருடைப்பு மாறுங் கொள்கைகண் டார்த்துத் திண்டோள்
தட்டுவா ரயனின் றாரைத் தழுவுவார் களிப்புத் தாங்கி. (௬௪)

எடுத்தமண் கூடை யோடு மிடறிவீழ் வார்போ லாற்றின்
மடுத்திட வீழ்வர் நீந்தி வல்லைபோய்க் கூடை தள்ளி
எடுத்தகன் கரைமே லேறி யடித்தடித் தீரம் போக்கித்
தொடுத்தகட் டவிழ்ப்பர் மீளத் துன்னுவர் * தொடுவர் மண்ணை. (௬௫)

கொட்டுமண் சுமந்து செல்வர் கூடையை யுடைப்பில் வீழத்
தட்டுவ ரெடுப்பார் போலத் தாவிவீழ்ந் தலையி லோட
விட்டொரு மரத்தைப் பற்றி மிதப்பர்திண் கரையி லேற
முட்டுவர் சுழியி லாழ்வர் சேட்சென்று முளைப்பர் மீள்வர். (௬௬)

கொட்டினைக் கழலப் பார்ப்பர் கோப்பர்கோ லிடையாப் பிட்டுத்
தட்டுவ ருயிர்ப்பு வீங்கித் தள்ளநின் றிளைப்பர் கச்சிற்
பிட்டினை நுகர்வர் வேலை வினைகெடப் பிறர்க்கு மள்ளி
இட்டுமா றேச்ச நோக்கி நகைப்பர்கை யிரண்டுந் தாக்கி. (௬௭)

வானத்தின் மண்ணிற் பெண்ணின் மைந்தரிற் பொருளி லாசை
தானற்றுத் தன்மயு நீத்துத் தத்துவ முணர்ந்த யோகர்
ஞானக்கண் கொண்டே யன்றி நாடருஞ் சோதி மண்ணோர்
ஊனக்கண் கொண்டுங் காண வுடன்விளை யாடல் செய்வார். (௬௮)

அருளினு லுலக மெல்லா மாக்கியு மளித்து நீத்தும்
பெருவிளை யாடல் செய்யும் பிறைமுடிப் பெருமா னிங்ஙன்
ஒருவிளை யாடல் செய்ய வோச்சுகோற் கைய ராகி
அருகுநின் றேவல் கொள்வா ரடைகரை நோக்கப் புக்கார். (௬௯)

* துன்னுவர் - கட்டுவர்.

நெட்டலை யொதுங்கி யோட நிவப்புற வரைபோ லிட்டுக்
கட்டிய கரைக ளெல்லாங் கண்டுகண் டொப்பு நோக்கி
அட்டமே செல்வார் திங்க ளாயிரந் தொழுதாள் பேரால்
விட்டபங் கடைப டாமை கண்டனர் வெகுளி மூண்டார். (௬0)

வந்திக்குக் கூலி யாளாய் வந்தவன் யாரென் றோடிக்
கந்தர்ப்ப னெனநேர் நின்ற காளையை நோக்கி யேட
அந்தப்பங் குள்ள வெல்லா மடைபட்ட தேவனீ யின்னம்
இந்தப்பங் கடையாய் வாளா திருத்தியா றம்பீ யென்றார். (௬௧)

வேறுரை யாது தம்மை யுணர்ந்தவர் வீறு தோன்ற
ஈறிலா னிறுமாப் பெய்தி யிருந்தன னாக மேலிட்
டாறுவந் தடுத்த பூங்கி லடைகரை கல்லிச் செல்ல
மாறுகொண் டோச்ச வஞ்சி மயங்கினார் வலிய கோலார். (௬௨)

பித்தனோ விவன்றா னென்பா ரல்லது பேய்கோட் பட்ட
மத்தனோ விவன்றா னென்பார் வந்தியை யலைப்பான் வந்த
எத்தனோ விவன்றா னென்பா ரிந்திர சாலங் காட்டுஞ்
சித்தனோ விவன்றா னென்பா ராரென்றுந் தெளியோ மென்பார் (௬௩)

பாடல்விஞ் சையனோ வென்பார் பண்ணினாற் பாணிக் கேற
ஆடல்விஞ் சையனோ வென்பா ரரும்பெறற் செல்வத் தாழ்ந்து
வாடிய மகனோ வென்பா ரிசைபட வாழ்ந்து கெட்ட
ஏடவிழ் தாரி னாருள் யார்மக னிவன்கொ லென்பார். (௬௪)

கரும்பனும் விரும்ப நின்ற கட்டழ குடைய னென்பார்
அரும்பெற விவன்றான் கூலிக் காட்செய்த தேவனோ வென்பார்
இரும்பெருங் குரவ ரற்ற தமியனோ வென்பார் வேலை
புரிந்தவ னல்ல னென்பா ரதுமேனி புகலு மென்பார். (௬௫)

கூலியுங் கொண்டான் றானே கணக்கிலுங் குறிக்கச் சொன்னான்
வேலையுஞ் செய்யா னின்சொல் விளம்பினுங் கேளான் கல்லின்
பாலனை முளையே யாகிப் பராமுகம் பண்ணி நின்றான்
ஏலநா மிதனை வேந்தற் குணர்த்துது மென்று போனார். (௬௬)

தலைமகன் றிருமுன் றாழ்ந்து சாற்றுவா ரடிகே ளிந்த
அலைபுன னகரார் தத்தம் பங்கெலா மளந்த வாற்றான்
மலையினும் வலிய வாகச் சுமந்தனர் வளைந்த சிற்றாண்
விலைநரை யாட்டி தன்பங் கடைத்திலள் வென்றி வேலோய். (௬௭)

வேளையும் வனப்பி னாலே வென்றவ னொருவன் வந்தி
ஆளென வங்கே வந்து பதிந்தன னரசர் செல்வக்
காளைபோற் களிப்பன் பாடு மாடுவன் காலம் போக்கி
நீளுவன் வேலை யொன்று நெஞ்சினு நினைதல் செய்யான். (௬௮)

ஆண்டகை வனப்பை நோக்கி யடிக்கவுங் கில்லே மஞ்சி
ஈண்டினே மென்று கூற விம்மென வமைச்ச ரோடும்
பாண்டிய னெழுந்து நாம்போய்ப் பங்கடை பட்ட வெல்லாங்
காண்டுமென் றெறிநீர் வைகைக் குடிஞையங் கரையைச் சார்ந்தான். (௬௯)

எடுத்ததிண் கரைக ளெல்லா மிறைமக னுள்ளத் தோகை
மடுத்தன னோக்கிச் செல்வான் வந்திபங் கடைப்பா ரின்றி
அடுத்தநோன் கரையுங் கல்வி யழித்தெழு வெள்ள நோக்கிக்
கடுத்துநின் றெங்குற் றானிக் கரைசுமந் தடைப்பா னென்றான். (௫௦)

வள்ளறன் கோபங் கண்டு மாறுகோற் கைய ரஞ்சித்
தள்ளருஞ் சினத்த ராகித் தடக்கைதொட் டீர்த்துப் பற்றி
உள்ளொடு புறங்கீழ் மேலா யுயிர்தொறு மொளித்து நின்ற
கள்வனை யிவன்றான் வந்தி யாளெனக் காட்டி நின்றார். (௫௧)

கண்டனன் கனன்று வேந்தன் கையிற்பொற் பிரம்பு வாங்கி
அண்டமு மளவி லாத வுயிர்களு மாக மாகக்
கொண்டவன் முதுகில் வீசிப் புடைத்தனன் கூடை யோடு
மண்டனை யுடைப்பிற் கொட்டி மறைந்தன னிறைந்த சோதி. (௫௨)

வேறு.

பாண்டியன் முதுகிற் பட்டது செழியன் பன்னிய ருடம்பினிற் பட்ட
தாண்டகை யமைச்சர் மேனிமேற் பட்ட தரசிளங் குமரர்மேற் பட்ட
தீண்டிய கழற்கால் வீரர்மேற் பட்ட திவுளிமேற் பட்டது பருமம்
பூண்டவெங் கரிமேற் பட்டதெவ் வுயிர்க்கும் போதன்மேற் பட்டவத் தழும்பு.()

பரிதியு மதியும் பாம்புமைங் கோளும் பன்னிறம் படைத்தநாண் மீனும்
இருநிலம் புனல்கா லெரிகடுங் கனல்வா னென்னுமைம் பூதமுங் காருஞ்
சுருதியு மாறு சமயவா னவருஞ் சுரர்களு முனிவருந் தொண்டின்
மருவிய முனிவர் கணங்களும் பட்ட மதுரைநா யகனடித் தழும்பு. (௫௪)

வானவர் மனிதர் நரகர்புள் விலங்கு மாசுணஞ் சிதலெறும் பாதி
ஆனபல் சரமு மலைமரங் கொடிபுல் லாதியா மசரமும் பட்ட
வூனடை கருவும் பட்டன தழும்போ டுதித்தன வுயிரிலோ வியமுந்
தானடி பட்ட சராசர சடங்க டமக்குயி ராயினோன் றழும்பு. (௫௫)

துண்ணென மாயோன் விழித்தனன் கமலச் சோதியும் யாதென வியந்தான்
விண்ணவர் பெருமான் வெருவினன் வானோர் வேறுளார்மெய்ப்பனிப்படைந்தார்
வண்ணயா ழியக்கர் சித்தர்சா ரணர்தம் வடுப்படா வுடம்பினிற் பட்ட
புண்ணையா தென்று தத்தமிற் காட்டி மயங்கினார் புகுந்தவா றறியார். (௫௬)

ஏகநா யகனெவ் வுயிர்களுந் தானே யென்பது மன்பினுக் கெளியன்
ஆகிய திறனுங் காட்டுவா னடிபட் டங்கொரு கூடைமண் கொட்டி
வேகநீர் சுருங்கக் கரையினை யுயர்த்தி மிகுத்துடன் வேலைநீத் தொளித்துப்
போகிய வாறு கண்டுகோற் கையர் போய்நரை யாட்டியைத் தொடர்ந்தார். (௫௭)

வன்புதாழ் மனத்தோர் வலிசெய வின்ன மன்னனான் மறுக்கமுண் டேயோ
முன்புபோ லியவா ளென்செய்தா னென்னாய் முடியுமோ வினியெனத் திரங்கி
என்புபோல் வெளுத்த குழலினாள் கூட விறைவனை நோக்கிநின் றிரங்க
அன்புதே னாக வருத்திய சிற்றா ணமுதுசெய் தருளினா ரருளால். (௫௮)

கண்ணுத னந்தி கணத்தவா விசும்பிற் கதிர்விடு திப்பிய விமானம
மண்ணிடை யிழிச்சி யன்னைவா வென்று வல்லைவைத் தமரர்பூ மழையும்
பண்ணிறை கீத வோதையும் வேதப் பனுவலுந் துந்துபி யைந்தும்
விண்ணிடை நிமிரச் சிவனரு ளடைந்தோர் மேவிய சிவபுரத் துய்த்தார். (௫௯)

மன்றுடை யானோர் கூடைமண் கொட்டி மறைந்தது மடைகரை நீண்ட
குன்றென வுயர்ந்த தன்மையுந் தம்மேற் கோலடி பட்டது நோக்கி
என்றன்மேற் பட்ட தென்றன்மேற் பட்ட திதுவென வதுவென வமைச்சர்
நின்றவ ருணர்த்து நிகழ்ச்சியும் பிறர்பா னிகழ்ச்சியு நோக்கியந் நிருபன். (௬0)

வேறு.

உள்ளத்தா சங்கை பூண்டா னாகமண் ணுடைப்பிற் கொட்டிக்
கள்ளத்தா ராகிப் போனார் ககனத்தா ராகிச் சேனை
வெள்ளத்தார் பிறருங் கேட்ப மீனவற் குவகை வெள்ளங்
கொள்ளத்தா மழைத்தா காய வாணியாற் கூற லுற்றார். (௬௧)

மறத்தாறு கடந்த செங்கோல் வழுதிநின் பொருள்க ளெல்லாம்
அறத்தாற்றி னீட்டப் பட்ட வனையவை புனித மான
திறத்தாலே நமக்கு நம்மைச் சேர்ந்தவர் தமக்கு மார்வம்
உறத்தாவில் வாத வூர னுதவினா னாத லாலே. (௬௨)

அனையனை மறுக்கஞ் செய்தா யரும்பிணைப் புலவுத் தீவாய்
வனநரித் திரளை யீட்டி வாம்பரி யாக்கித் தந்தேங்
கனையிருட் கங்குற் போதிற் கழிந்தன பின்னுந் தண்ட
வினையர்பால் விடுத்துத் துன்பம் விளைத்தனை யதுபொ றுத்தேம் (௬௩)

வருபுனல் பெருகப் பார்த்தேம் வந்திகைப் பிட்டு வாங்கிப்
பருகிவந் தாளாய் மாறு பட்டன மண்போ கட்டுப்
பொருகரை யுயரச் செய்து போகியவ் வன்னை போல்வாள்
பெருகிய விடும்பை தீர்த்தேம் பேருல கடையச் செய்தேம். (௬௪)

இத்தனை யெலலாஞ் செய்த திவன்பொருட் டிந்த வேத
வித்தகன் றன்மை யொன்று மறிந்திலை வேட்கை யெம்பால்
வைத்தனக் கிம்மை யோடு மறுமையுந் தேடித் தந்த
உத்தமன் றொடைசந் தாதிப் புறப்பற்று மொழிந்த நீரான். (௬௫)

நிறையுண்ட யிவனை யிச்சை வழியினா னிறுத்தி யான்ற
மறைவழி நின்று நீதி மன்னவர்க் களந்த வாழ்நாள்
குறைபடா தானாச் செல்வ வாரியுட் குளித்து வாழ்கென்
றிறையவன் மொழிந்த மாற்ற மிருசெவி நிரப்பித் தென்னன். (௬௬)

அச்சமுற் றுவகை யீர்ப்ப வதிசய வெள்ளத் தாழ்ந்து
பொச்சமி லன்பு ரெங்குற் றொரணப் புகுந்து தேடி
நச்சர வசைத்த கூட னாயகன் கோயி னண்ணி
இச்சையி லிருக்கின் றாரைக் கண்டுபோ யிறைஞ்சி வீழ்ந்தான். (௬௭)

தொல்லைநீ ருலக மாண்டு சுடுதுயர் நரகத் தாழ
வல்லவென் னறிவுக் கேற்ற வண்ணமே செய்தே னீரென்
எல்லைதீர் தவப்பே றுய்வந் திகபர வேந்து வாகி
அல்லல்வெம் பிறவி நோய்க்கு மருமருந் தானீ ரையா. (௬௮)

செறுத்துநா னும்மை யெண்ணா திழைத்தவித் தீங்கு தன்னைப்
பொறுத்துநீர் முன்போ னுங்கள் புவியெலாங் காவல் பூண்டு
மறுத்துடைத் தாள்வ தாகென் றிரந்தனன் மண்ணி லாசை
வெறுத்தவர் நகையுட் டோன்ற வேந்தனை நோக்கிச் சொல்வார். (௬௯)

பாய்திரை புரளு முந்நீர்ப் படுகட லுலகுக் கெல்லாம்
ஆயிரஞ் செங்க ணானும்போ லரசுவீற் றிருப்பீ ருங்கள்
நாயக னருளிச் செய்த வண்ணமே நயந்து செய்வீர்
தூயவ ரன்றோ நுங்கள் சூழல்சேர் தொழுக வல்லார் (௭௦)

உம்மைநா னடுத்தீ நீரா லுலகியல் வேத நீதி
செம்மையா விரண்டு நன்றாத் தெளிந்தது தெளிந்த நீரான்
மெய்ம்மையாஞ் சித்த சுத்தி விளைந்தது விளைந்த நீராற்
பொய்ம்மைவா னவரி னீங்கிப் போந்தது சிவன்பாற் பத்தி. (௭௧)

வந்தவிப் பத்தி யாலே மாயையின் விருத்தி யான
பந்தமாம் பவஞ்ச * வாழ்க்கை விளைவினுட பட்ட துன்பம
வெந்தது கருணை யாகி மெய்யுணர் வின்பந் தன்னைத்
தந்தது பாதஞ் சூட்டித் தன்மய மாக்கிற் றன்றே. (௭௨)

சச்சிதா னந்த மாமத் தனிப்பர சிவனே தன்ன
இச்சையா லகில மெல்லாம் படைத்தளித் தீறு செய்யும்
விச்சைவா னவரைத் தந்த மேலவன் பிறவித் துன்பத்
தச்சமுற் றடைந்தோர்க் காணு வின்பவீ டளிக்கு மன்னோன். (௭௩)

மந்தரங் கயிலை மேருப் பருப்பதம் † வார ணாசி
இந்தநல் லிடங்க டோறு மிகபர போகம் யார்க்குந்
தந்தருள் செய்தெம் போல்வார் தம்மனம் புறம்போ காமற்
சிந்தனை திருத்தி ஞானத் திருவுரு வாகி மன்னும். (௭௪)

ஒப்பவர் மிக்கோர் வேறற் றொருவனு மெங்குந் தங்கும்
அப்பரஞ் சுடரே யிந்த வாலவா யுறையுஞ் சோதி
கைப்படி கனிபோன் மேனாட் கண்ணுவ னாதி யோர்க்கு
மெய்ப்பொருள் விளங்கித் தோன்ற வேதத்தை விருத்தி செய்தான். (௭௫)

தன்னரு ளான ஞானத் தபனிய மாகுந் தில்லைப்
பொன்னக ரிடத்தி லென்னைப் போகெனப் பணித்தா னீரும்
அன்னதற் கிசைதி ராகென் றாலவா யடிக டம்மைப்
பன்னருந் துதியா லேத்தி விடைகொடு பணிந்து போவார். (௭௬)

தன்றொடக் கறுத்த நாதன் றாட்டொடர் பூண்டு போவார்
பின்றொடர்ந் தரசன் செல்லப் பெருந்தவர் நின்மி னின்மின்
என்றனர் செலவுங் கூப்பி டெல்லைசென் றணிய னாகிச்
சென்றடி பணிந்து தென்னன் விடைகொடு திரும்பி னானே. (௭௭)

துறந்தவர் போக மீண்டு தொன்னக ரடைந்து தென்னன்
அறந்தரு பங்கி னாரை யடைந்துதான் பிரம்பு நீட்டப்
புறந்தரு கருணை வெள்ளம் பூரிப்பத் தாழ்ந்து நெஞ்ச
நிறைந்தது வாய்கொள் ளாம னின்றெதிர் துதிப்ப தானான். (௭௮)

வேறு.

அடையாளம் படவொருவ னடித்தகொடுஞ் சிலைத்தழும்புந்
தொடையாக வொருதொண்டன் றொடுத்தெறிந்த கல்லும்போற்
கடையானேன் வெகுண்டடித்த கைப்பிரம்பு முலகமெலாம்
உடையானை பொறுத்ததோ வுன்னருமைத் திருமேனி. (௭௯)

* பிரபஞ்சமென்பது பவஞ்சமென்றாயிற்று
† மேருபருப்பதம் - என்றும் பாடம்.

கடியேறு மலர்மகன்மான் முதலாய கடவுளரும்
படியேழு மளவிறந்த பல்லுயிரு நீயேயோ
முடியேற மண்சுமந்தாய் முதுகிலடி வடுப்பட்ட
தடியேனும் பட்டேனின் றிருமேனி யானேனோ. (௮0)

கைக்குமருந் தின்சுவையின் காட்டுமா றெனவினைக்கும்
பெரிக்குமருங் கலனாகி மண்ணுண்டு புலைநரகந்
துய்க்குமருந் துயர்களைவான் மாறாய்நின் றுணையடிக்கே
உய்க்குமருந் தவரிவரென் றறியாமை யொறுத்தேனே. (௮௧)

பாதியுமை யுருவான பரமேட்டீ யெனக்கிம்மை
ஊதியமும் பரகதியு முறுதிபெற விளைவிக்கும்
நீதியினான் மந்திரியாய் நின்னருளே யவதரித்த
வேதியரை யறியாதே வெறுத்துநா னொறுத்தேனே (௮௨)

மாயா விருத்தியினான் மாழாந்து மாதவரை
ஆயா தொறுத்தே னருநரகத் தாழ்ந்துநான்
வீயாம லின்றனையார் மெய்ம்மையெலாந் தேற்றியவென்
றாயானாய் தண்ணளிக்கென் றமியேன்செய் கைம்மாறே. (௮௩)

நின்னையுணர்ந் தவர்வேத நெறிவேள்வி செய்தூட்டும்
இன்னமுதிற் கழிசுவைத்தோ விவளிடும்பிட் டெவ்வுயிர்க்கும்
மன்னவனே செந்துவர்வாய் மலர்ந்தமுது செய்தனையால்
அன்னையிலா யுனக்கிவளோ ரன்னையாய் வந்தாளோ. (௮௪)

அன்றுசிறுத் தொண்டரிடும் * பிள்ளைக் கறியமுதும்
மென்று சுவைதெரிந்த வேடனிட்ட வூனும்போல்
நன்றுநரை யாட்டியிடு பிட்டு நயந்தருந்தி
என்று மடியார்க் கெளிவந்தா யெந்தாயே. (௮௫)

நரியாவும் பரியாக்கி நடத்தியுமம் பரமன்றித்
தரியாயான் றருதுகிலைத் திருமுடிமேற் றரித்துமறைக்
கரியாய்நீ யென்பாச மறுக்கவருந் திருமேனி
தெரியாதே பரியாசை யிளைத்திறுமாந் திருந்தேனே. (௮௬)

விண்சுமக்கும் புள்ளாய் விலங்காய்ச் சுழன்றுமனம்
புண்சுமக்குஞ் சூழ்ச்சி வலியுடைய புத்தேளிர்
மண்சுமக்கு மள்ளராய் வந்திலரே வந்தக்காற்
பண்சுமக்குஞ் சொல்லிபங்கன் பாதமுடி காண்பாரே. (௮௭)

வேறு.

என்றுபல முறையாலே துதித்தடைந்தோர்க் கன்பரிவ ரிவரைத் தேறின்
நன்றுமிக பரிபாகம் வீடுபெற லெளிதென்று நகைத்தார் வேந்தன்
அன்றுதிருப் பணிபூசை பிறவுநனி வளம்பெருக்கி யழகார் வெள்ளி
மன்றுடையா னடிக்கன்பு முயிர்க்கன்புஞ் சுரந்தொழுகி வாழுநாளில். (௮௮)

---

* சிறுத்தொண்டநாயனார் திருவவதாரஞ் செய்தற்கு முன்னரே அவர் சரித்திரம் பரமேதிகாசமாகிய சிவரகசியத்திலே சொல்லப்பட்டிருத்தலால், அதனை அறிந்த அரிமர்த்தனபாண்டியன் அவர் சரித்திரத்தை அன்று சிறுத்தொண்டரிடும் பிள்ளைக்கறியமுது என எதிர்காலத்தாற் கூறினான். இங்கே அன்று என்பதற்கு, இனி வருங்காலத்தில் எனப் பொருள்கொள்க.

முன்புபெருந் துறையார்க்கு மடியார்க்கு மறநதெரிந்த முறையா லீட்டுந்
தன்பொருள்போ யுடன்பலவாய்த் தழைத்துவரு பயனேபோற் றலையுவாவின்
நன்பணிகான் மதிகண்ட வுவரியெனப் பலசெல்வ நாளு மோங்க
இன்புறுவான் சகநாத னெனுமகப்பெற் றின்பத்து ளின்பத் தாழ்ந்தான். (௮௧)

அம்மகனை முடிசூட்டி யரசாக்கி வாதவூ ரமைச்சர் சார்பான்
மெய்ம்மைநெறி விளங்கியிரு வினையொப்பி லரன்கருணை விளைந்தநோக்கான்
மும்மைமலத் தொடர்நீந்திச் சிவானந்தக் கடற்படிந்து முக்கண் மூர்த்தி
செம்மலர்த்தா ணிழலடைந்தான் றிறலரிமர்த் தனனென்னுந் தென்னர் வேந்தன்

வே று.

வழுதியால் விடுக்கப் பட்ட வாதவூர் முனிக டம்மைப்
பழுதிலாப் பாடல் கொள்வார் பதிபல பணிந்து போந்து
முழுதுணர் மறையோர் வேள்விப் புகையண்ட முடிகீண் டேழு
எழுவட வரைபோற் றோன்று மெழிற்றில்லை மூதூர் சேர்ந்தார். (௯௧)

வே று.

வீதிதொறும் வீழ்ந்துவீழ்ந் திறைஞ்சியா லயத்தெய்தி மெய்ம்மை யான
சோதியறி வானந்தச் சுடருருவாஞ் சிவகங்கை தோய்ந்து மேனி
பாதிபகிர்ந் தவள்காணப் பரானந்தத் தனிக்கூத்துப் பயிலா நிற்கும்
ஆதியரு ளாகியவம் பலங்கண்டு காந்தநே ரயம்போற் சார்ந்தார். (௯௨)

அன்றுகுருந் தடியிலடி வைத்தாண்ட கோலமே யருளா னந்த
மன்றினிடத் தெதிர்தோற்றி வாவென்பா ரெனமூரன் மணிவாய் தோற்றி
நின்றதனிப் பெருங்கூத்தர் நிலைகண்டா ரஞ்சலித்தார் சிலமேல் வீழ்ந்தார்
ஒன்றரிய புலன்கரண வழிநீந்தி மெய்யன்பி னுருவ மானார். (௯௩)

வண்டுபோற் புண்டரிக மலரில்விளை சிவானந்த மதுவை வாரி
உண்டுவா சகம்பாடி யாடியழல் வெண்ணெயென வுருகுந் தொண்டர்
விண்டுழா வியகுடுமி மன்றுடையான் றிருவாக்கான் மிகுந்த நேயங்
கொண்டுபோய்க் குணதிசையி லருந்தவர்வாழ் தபோவனத்தைக் குறுகி யங்கண்.

குறிகுணங்கள் கடந்ததனிக் கூத்தனுரு வெழுத்தைந்தின் கொடுவா ளோச்சிப்
பொறிகரணக் காடெறிந்து வீசிமனப் புலந்திருத்திப் புனிதஞ் செய்து
நிறைசிவமாம் விதைவிதைத்துப் பசுபோதங் களைந்தருணன் னீர்கால் பாய
அறிவுருவாய் விளைந்ததனிப் பரானந்த வமுதருந்தா தருந்தி நின்றார். (௯௫)

மானிரையுங் குயவரியும் வந்தொருங்கு நின்றுறிஞ்ச மயங்கு கானத்
தானிரைகன் றெனவிரங்கி மோந்துநக்க வான்ந்த வருட்கண் ணீரைக்
கானிறைபுள் ளினம்பருகக் கருணைநெடுங் கடலிருக்குங் காட்சி போலப்
பானிறவெண் ணீற்றன்ப ரசைவின்றிச் சிவயோகம் பயிலு நாளில். ௯௬)

புத்தர்சில ரிலங்கையினும் போந்துமூ வாயிரமெய்ப் போத வேத
வித்தகரோ டேழுநாள் வரையறுத்துச் சூளொட்டி விவாதஞ் செய்வார்
இத்தகைய நாளேழில் யாமிவரை வேறுமெனு மெண்ணம் பூண்ட
சித்தமுடை யவராக வவர்கனவி லெழுந்தருளித் தேவ தேவர். (௯௭)

வாதவூ ரனைவிடுத்து வாதுசெய்வீ ரெனவிழித்து மறையோ ரந்தப்
போதுவே தியரைவகும் புகுந்தழைத்தா ரப்போது பொதுவி லாடும்
வேதநா யகன்பணித்த வழிநின்று றெதிர்மறுப்ப மீண்டு போந்து
காதரா குலமூழ்கி யிருந்தார்முத் தழனிமிர்த்துக் கலியைக் காய்வார். (௯௮)

பின்னுமவர் கனவின்கண் மன்றுண்டம் பிரியாத பெருமான் வந்து
முன்னவனைப் பெருந்துறையிற் குருந்தடியி லாட்கொண்ட முறையி னாலும்
இன்னிசைவண் டமிழ்மணிபோற் பரவுங்கா ரணத்தாலும் யாமன் றிட்ட
மன்னியபேர் மாணிக்க வாசகனென் றழைமின்கள் வருவ னென்றார். ௯௯)

உறக்கமொழிந் தறவோர்சென் றவர்நாம மொழிந்தழைப்ப வுணர்ந்து நாதன்
அறக்கருணை யிதுவோவென் றவரோடு மெழுந்துநக ரடைந்து மண்ணுந்
துறக்கமுநீத் தருவருத்தார் மன்றாடுந் துணைக்கமலந் தொழுது மீண்டோர்
நிறக்கனக மண்டபத்திற் புக்கிருந்தா ரறிஞர்குழா நெருங்கிச் சூழ. (௧௦௦,

வேறு.

தத்துநீர்க் கலத்திற் போந்த சீவரப் போர்வை தாங்கும்
புத்தரை வேறு வைத்துப் புகன்மினும் மிறையு நூலும்
அத்தலை நின்றோ ரெய்துங் கதியுமென் றாழ்ந்த கேள்வி
மெய்த்தவ நெறிமா ணிக்க வாசகர் வினவி னாரே. (௧௦௧)

கனவினு ஈறு காணாக் கைதவர் காட்சி யானும்
மனவனு மானத் தானும் வாசகப் பெருமான் றம்மை
வினவிய மூன்று முத்தே சாதியின் விரித்தார் வேதம்
அனையவர் கேட்டம் மூன்று மனுவாதஞ் செய்துட் கொள்ளா. ௧௦௨)

இன்றிவர்க் கனுமா னாதி யெடுப்பதென் னென்று காட்சி
ஒன்றுகொண் டவர்க டாமே யுடம்படன் மறுத்தார் காட்சி
அன்றியே இன்மை யாலே யனுமான வளவை யாலும்,
நின்றவன் றாங்கோ ளாதி நிறுத்திய மூன்று மென்றார். (௧௦௩)

பொன்றுதன் முத்தி யென்பார் பூசுரர் பிரானை நோக்கி
இன்றெமைக் காட்சி யொன்றால் வென்றன மென்றீ ரானால்
நன்றுநுங் கடவு டன்னை யளவையா னாட்டி யெம்மை
வென்றிடு மென்றா ரைந்தும் வென்றவர் முறுவல் செய்யா. (௧௦௪)

பிறவியந் தகர்க்கு வெய்யோன் பேரொளி காட்ட லாமோ
மறைகளா லளவை தன்னாற் றேவரான் மனத்தால் வாக்கால்
அறிவருஞ் சோதி யெங்கோ னவன்றிரு நீற்றுத் தொண்டின்
குறிவழி யன்றிக் காணுங் கொள்கையா னல்ல னென்றார். (௧௦௫)

தேற்றமில் லாதா ருங்கள் சிவனுக்குந் திருநீற் றுக்குந்
தோற்றமெய்ப் படிதிட் டாந்தஞ் சொல்லுமி னென்றார் தூயோர்
வேற்றுமை யறநா மின்னே விளக்குது மதனை நீங்கள்
தோற்றபி னுமக்குத் தண்டம் யாதுகொல் சொன்மி னென்றார். (௧௦௬)

செக்குர விடையிட் டெம்மைத் திரிப்பது தண்ட மென்னா
எக்கராம் புத்தர் தாமே யிசைந்தன ரெரிவாய் நாகந்
தொக்கிற கணிந்தா ரன்ப ருலர்ந்தகோ மயத்தை வாங்கிச்
செக்கரந் தழல்வாய்ப் பெய்து சிவந்திட வெதுப்பி வூங்கி. (௧௦௭)

இவ்வண்ண மிருக்கு மெங்க ளிறைவண்ண வடிவு மந்தச்
செவ்வண்ண மேனி பூத்த திருவெண்ணீ றதுவு மென்னா
மெய்வ்வண்ண முணர்ந்த வேத வித்தக ரவைமுன் காட்ட
உய்வ்வண்ண மறியா மூட ருள்ளமு முயிருந் தோற்றார்.. (௧௦௮)

இங்கிவர் தோற்ற வண்ணங் கேட்டவ ரிறப்ப தின்பந்
தங்குவீ டென்று தேற்றுஞ் சமயத்தி லாழ்ந்த வாத்திக்
கொங்கிவர் தாரான் மூங்கைக் குயிற்பெடை யெனத்தா னீன்ற
மங்கையைக் கொண்டு தில்லை மல்லன்மா நகரில் வந்தான். (௧0௯)

யாவரே யாக வின்றிங் கென்மகண் மூங்கை தீர்த்தோர்
ஆவரே வென்றோ ரென்று ளற்றவு மானம் பூண்டு
சாவதே முத்தி யென்பரிர் மணிமுதன் மூன்றுந் தங்கள்
தேவரே யென்றென் றுள்கிச் செய்யவுந் தீரா தாக. (௧௧0)

அந்தணர் பெருமான் முன்போ யரசன்றன் மகளைப் போகட்
டிந்தநோய் தீரே தீர்க்க வேண்டுமென் றிரந்தா னையன்
சுந்தர நாதன் மன்று ளாடிய துணைத்தா டன்னைச்
சிந்தைசெய் தருட்க ணோக்காற் றிருந்திழை யவளை நோக்கா. (௧௧௧)

வேறுவே றிறைவன் கீர்த்தி வினாவுரை யாகப் பாடி
ஈறிலா னன்பர் கேட்ப விறைமொழி கொடுத்து மூங்கை
மாறினாள் வளவன் கன்னி மடவரல் வளவன் கண்டு
தேறினான் சிவனே யெல்லாத் தேவர்க்குந் தேவ னென்னா. (௧௧௨)

பின்பர வாரம் பூண்ட பிரானருள் விளையப் பாடும்
அன்பரை முனிவர் மூவா யிரவரை யடியிற் றாழ்ந்து
முன்பவர் சொன்ன வாறே மூர்க்கரைத் தடிந்து மன்றுள்
இன்பரை நடங்கண் டேத்தி யிறைமகன் சைவ னானான். (௧௧௩)

மாசறு மணிபோற் பன்னாள் வாசக மாலை சாத்திப்
பூசனை செய்து பன்னாட் புண்ணிய மன்று ளாடும்
ஈசன தடிக்கீ ழெய்தி யீறிலா வறிவா னந்தத்
தேசொடு கலந்து நின்றார் சிவனருள் விளக்க வந்தார். (௧௧௪)

மண்சுமந்த படலமுற்றிற்று.

ஆக திருவிருத்தம் - ௩,௧0௫.

பாண்டியன்சுரந்தீர்த்தபடலம்.

வான லமுத மதிமுடிமேன் மதுரைப் பெருமான் மண்சுமந்து
தேன லமுத வாசகரைக் கதியில் விடுத்த திறமிதுமேற்
பானன் மணிவாய்க் கவுணியனை விடுத்துச் சமணர் படிற்றொழுக்கு
கூனல் வழுதி சுரந்தணித்தாட் கொண்ட கொள்கை கூறுவாம். (௧)

வாகு வலத்தான சுகநாத வழுதி வேந்தன் மகன்வீர
வாகு வவன்சேய் விக்கிரம வாகு வவன்சேய் பராக்கிரம
வாகு வனையான் மகன்சுரபி மாற னனையான் றிருமைந்தன்
வாகு வலத்தான் மறங்கடிந்து மண்ணா ளுங்குங் குமத்தென்னன். (௨)

அன்னான் குமரன் கருப்புரபாண் டியனா மவன்சேய் காருணிய
மன்னா மவன்றன் மகன்புருடோத் தமனா மவன்றன் மகனாகும்
மின்னார் மௌலிச் சத்துருசா தனபாண் டியனாம் விறல்வேந்தன்
இன்னான் மகன்கூன் பாண்டியனா மிவன்றோள் வலியா விசைமிக்கான் (௩)

திண்டோ நடநாடர் செம்ம றனையு மாரலங்கல்
வண்டோ விடுதா ரிரவிகுல மருமான் றனையு மலைந்துபுறங்
கண்டோர் குடைக்கீழ் நிலமூன்றுங் காவல் புரிந்து கோலோச்சிப்
புண்டோய் குருதி மறக்கன்னிப் புகழ்வேல் வழுதி நிகழ்நாளில். (௪)

விண்டு மாவுங் கைம்மாவும் வெறுக்கைக் குவையு மணிக்குவையும்
வண்டு வீழுந் தாரளக வல்லியாய மொடு நல்கிக்
கண்டு கூடற் கோமகனைக் காலில் வீழ்ந்து தன்னாடு
பண்டு போலக் கைக்கொண்டு போனான் றேனார் பணங்காரான். (௫)

சென்னிக் கோனுந் தானீன்ற திலகப் பிடியை யுலகமெலாம்
மின்னிக் கோதில் புகழொளியால் விளக்குஞ் சைவ மணிவிளக்கைக்
கன்னிக் கோல மங்கையருக் கரசி தன்னைக் கௌரியற்கு
வன்னிக் கோமுன் மணம்புணர்த்தி வாங்கி னான்றன் வளநாடு. (௬)

வேறு.

வளவர்கோன் செழியன் கற்பின் மங்கையர்க் கரசி யாருக்
களவறு நிதியுஞ் செம்பொற் கலிங்கமு மணியும் போகம்
விளைநில மனையு வாய வெள்ளமும் பிறவுந் தென்னன்
உளமகிழ் சிறப்ப வேந்தர் வரிசையா லுதவிப் பின்னர். (௭)

கோதறு குணத்தின் மிக்க குலச்சிறை யென்பா னங்கோர்
மேதகு கேள்வி யானை விடுத்தனன் மீண்டு தென்னன்
காதலி யோடு மாயக் கடவுள்செம் பதுமக் கோயின்
மாதரை மணந்து செல்வான் போல்வந்து மதுரை சேர்ந்தான். (௮)

மலர்மகண மார்பன் பொன்னி மன்னவன் பயந்த தெய்வக்
குலமக ளுடனே வந்த குலச்சிறை குணனுங் கேள்வித்
தலைமையு மதியின் மிக்க தன்மையுந் தூக்கி நோக்கி
நலமலி யமைச்ச னாக்கி நானிலம் புரக்கு நாளில். (௯)

வல்வினை வலியான் மெய்யில் வலியுகூ னடைந்தான் போலக்
கொல்வினை யிலராய் வஞ்சங் கொண்டுழன் றுடுத்த பாசம்
வெல்வினை யறியா நக்க வேடர்சொல் வலையிற் பட்டு
நல்வினை யுதவாத் தென்ன னான்மறை யொழுக்க நீத்தான். (௧௦)

போதவிழ் தாரா னக்கர் புன்னெறி யொழுக்கம் பூண்டோ
னாதலிற் கன்னி நாடு மமணிருண் மூழ்கிப் பூதி
சாதன நெறியாஞ் சைவ சமயமு முத்திச் செல்வ
மாதவ நெறியுங் குன்ற மறைந்தது வேத நீதி. (௧௧)

பறிபடு தலையும் பாயி னுடுக்கையும் பாசிப் பல்லும்
உறிபொதி கலனு மத்தி நாத்தியென் றுரைக்கு நாவும்
அறிவழி யுளம்போ னாணற் றழிந்தவெற் றரையுங் கொண்டு
குறிகெடு மணங்கு சூழ்ந்தாங் கமணிறை கொண்ட தெங்கும். (௧௨)

அருந்தமிழ்ப் பாண்டி வேந்தற் குறுதியா யாக்கஞ் செய்யும்
மருந்தினிற் சிறந்த கற்பின் மங்கையர்க் கரசி யாரும்
பெருந்தகை யமைச்சு ரீரிற் குழைத்தன்றிப் பிறங்கப் பேறு
தருந்திரு நீறிடா ராய்ச் * சிவனடிச் சார்பி னின்றார். (௧௩)

பொய்யுரை பிதற்று மிந்தப் புன்சமண் கலைகட் டண்டு
மெய்யுரை வேத நீதி வியன்பயிர் தலைச்செய் தோங்கச்
செய்யுந ரெவரே யென்று சிந்தையிற் கவலை பூண்டு
ஐயுந ராகிக் கூட லாதனை வணங்கப் போனார். (௧௪)

பேதுற்ற முனிவர்க் கன்று பெருமறை விளக்கஞ் செய்த
வேதத்தின் பொருளே யிந்த வெஞ்சமண் வலையிற் பட்டுப்
போதத்தை யிழந்த வேந்தன் புந்தியை மீட்டிப் போதன்
பாதத்தி லடிமை கொள்வா யென்றடி பணியு மெல்லை. (௧௫)

வேதிய னொருவன் கண்டி வேடமும் பூண்டோன் மெய்யிற்
பூதியன் புண்டரீக புரத்தினும் போந்தோன் கூடல்
ஆதியைப் பணிவான் வந்தான் மங்கையர்க் கரசி யாரும்
நீதிய வமைச்ச ரேறு நேர்பட வவனை நோக்கா. (௧௬)

எங்கிருந் தந்த ணீர் வந்தனி ரென்றா ராய்ந்த
புங்கவன் சென்னி பொன்னி நாட்டினும் போந்தே னென்றான்
அங்கவ ரங்குண் டான புதுமையா தறைதி ரென்றார்
சங்கரற் கன்பு பூண்டோ னுண்டென்று சாற்று கின்றான். (௧௭)

ஏழிசை மறைவல் லாளர் சிவபாத விதய ரென்னக்
காழியி லொருவ ருள்ளார் காரமண் கங்குல் சீப்ப
ஆழியி லிரவி யென்ன வொருமக வளித்தி யென்ன
ஊழியி லொருவன் றனை யுள்கிநோற் றொழுகி நின்றார். (௧௮)

ஆயமா தவர்பா லீச னருளினா லுலக முய்யச்
சேயிளங் கதிர்போல் வந்தான செல்வனுக் கிரண்டாண் டெல்லை
போயபின் மூன்றா மாண்டிற் பொருகடன் மிதந்த தோணி
நாயகன் பிராட்டி யோடும் விடையின்மே னடந்து நங்கை. (௧௯)

திருமுலைப் பாலி னோடு ஞானமுந் திரட்டிச் செம்பொற்
குருமணி வள்ளத் தேந்திக் கொடுப்பவப் பாலன் வாங்கிப்
பருகியெண் ணிறந்த வேதா கமமிவை பற்றிச் சார்வாய்
விரிகலை பிறவு மோதா துணர்ந்தனன் விளைந்த ஞானம். (௨௦)

நம்பந்த மறுப்போன் ஞான நாயகன் ஞானத் தோடு
சம்பந்தஞ் செய்து ஞான சம்பந்த னாகி நாவில்
வம்பந்த முலைமெய்ஞ் ஞான வாணியுங் காணி கொள்ள
அம்பந்த மறைக ளெல்லா மருந்தமி ழாகக் கூறும். (௨௧)

கரும்பினிற் கோது நீத்துச் சாறடு கட்டி யேபோல்
வரம்பிலா மறையின் மாண்ட பொருளெலா மாணத் தெள்ளிச்
சுரும்பிவர் கொன்றை வேணிப் பிரானிடந் தோறும் போகி
விரும்பிய தென்சொன் மாலை சிவமணம் விளையச் சாத்தி. (௨௨)

* நீறிட்டாராய என்றும் பாடம்.

பருமுத்த முலையாள் பங்க னருளினாற் பசும்பொற் றாளந்
திருமுத்தின் சிவிகை காளந் தெண்முத்தின் பந்த ரின்ன
நிருமித்த வகைபோற் பெற்றுப் பாலையை நெய்த லாக்கிப்
பொருமுத்த நதிசூழ் வீழிப் பொற்படிக் காசு பெற்று. (உ௩)

அருமறை வணங்குங் கோயிற் கதவினை யடைக்கப் பாடிப்
பரனுறை பதிக ளெங்குந் தொழுதனர் பாடிப் பாடி
வருமவர் நுங்க ணாட்டு வணங்கவும் வருவ ரென்னத்
தருமநூ லணிந்த தெய்வத் தாபதன் சாற்ற லோடும். (உ௪)

கற்பலர் கொடியன் னாருந் தென்னவன் கண்போல் வாரும்
அற்புரை யமண்பே யோட்டி யன்றுதங் கோமான் மெய்யிற்
பொற்புறு நீறு கண்டு பூதிசா தனத்தா லெய்துஞ்
சிற்பர வீடு கண்ட மகிழ்ச்சியுட் டிளைத்தோ ரானார். (உ௫)

தங்கள்பேர் தீட்டி யோலை விண்ணப்பஞ் சண்பை நாடர்
புங்கவர்க் குணர்த்த வந்தப் பூசுரன் கையிற் போக்கி
மங்கையர்க் கரசி யாரு மரசற்கு மருந்த னானும்
அங்கயற் கண்ணி கோனைப் பணிந்துதம் மகத்திற் புக்கார். (உசு)

பண்படு வேதச் செல்வன் வல்லைபோய்ப் பழன வேலிச்
சண்பையர் பிரானைக் கண்டு பறியுண்டு தலைக ளெல்லாம்
புண்படத் திரியுங் கையர் பொய்யிருள் கடந்தார் தந்த
எண்படு மோலை காட்டிப் பாசுர மெடுத்துச் சொன்னான். (உஎ)

வேறு.

வெங்குரு வேந்த ரடிபணிந் தடியேன் குலச்சிறை விளம்புவிண் ணப்பம்
இங்கெழுந் தருளிச் சமணிரு ளொதுக்கி யெம்மிறை மகற்குநீ றளித்துப்
பொங்கிரும் பணைசூழ் தென்றமிழ் நாட்டைப் பூதிசா தனவழி நிறுத்தி
எங்களைக் காக்க வென்றபா சுரங்கேட் டெழுந்தனர் கவுணியர்க் கிறைவர். (உஅ)

ஆதகா திதுவென் றோதுவார் நாவுக் கரையர்நீர் சிறியவ ரவரோ
பாதக மஞ்சார் தம்மொடும் பன்னாட் பழகிய வெனையவர் செய்த
வேதனை யளந்து கூறுவ தென்னை விடுகில் லம்மவோ வுமக்கிப்
போதுநாள் கோள்கள் வலியில வென்னப் புகலியர் வேந்தரும் புகல்வார். (உகூ)

எந்தையெம் பெருமா னருளிலார் போல வின்னண மிசைப்பதென் னவர்செய்
வெந்தவே தனையி னுய்ந்தநீர் நாள்கோள் விலங்குபுள் ளவுணர்பேய் பூதம்
அந்தமில் பலவு மம்மையோ டப்ப னாணையா னடப்பன வவர்நஞ்
சிந்தையே கோயில் கொண்டுவீற் றிருப்பத் தீங்கிழை யாவென வெழுந்தார்.

வேறு.

மாமுர சொலிப்பச் சங்கங் காகளம் வாய்விட் டேங்கச்
சாமரை பனிப்ப முத்தின் பந்தரிற் றரளத் தெய்வக்
காமரு சிவிகை மேற்கொண் டமணிருள் கழுவுஞ் சோதி
யாமென நெறிக்கொண் டீச னிடந்தொறு மடைந்து பாடி. (௩க)

செம்பிய னாடு நீந்தித் தென்னவ னாடு நண்ணி
வெம்பிய சுரமு முல்லைப் புறவமு மேக வில்லைத்
தும்பிகை நீட்டி வாங்கு மலைகளுந் துறந்து பாகத்
தம்பிகை யுடையான் கூட னகர்ப்புற னணுகச் செல்வார். (௩உ)

புண்ணிய நீற்றுத் தொண்டர் குழாத்தினுட் புகலி வேந்தர்
நண்ணிய சிவிகை மீது நகைவிடு தரளப் பந்தர்
கண்ணிய ரேற்றந் தீம்பாற் கடல்வயி றுதித்துத் தீர்ந்து
விண்ணையின் முழுவெண் டிங்கள் விளக்கமே யொத்த தன்றே. (௧௩)

தேம்படு குமுதச் செவ்வாய்ச் சிரபுரச் செல்வர் முன்னம
போம்பரி சனத்தோர் தம்மிற் பொன்னெடுஞ் சின்ன மார்ப்போர்
தாம்பர சமய சிங்கஞ் சமணிருள் கிழியப் பானு
வாம்படி வந்தா னென்றென் றார்த்தெழு மோசை கேளா. (௧௪)

நின்றுண்டு திரியுங் கைய ரெதிர்வந்து நீவிர் நுங்கள்
கொன்றறஞ் சொன்ன தேவைக் கும்பிட வந்தா லிந்த
வென்றிகொள் சின்ன மென்கொல் வீறென்கொல் யாரை வென்றீர்
என்றனர் தடுத்தா ரென்று மீறிலா னடியார் தம்மை. (௧௫)

மாமத மொழுகச் செல்லுந் திண்டிறன் மத்த வேழந்
தாமரை நூலாற் கட்டத் தடைபட வற்றே கொற்றக்
காமனை முனிந்தார் மைந்தர் கயவர்தந் தடையை நீத்துக்
கோமணி மாட மூதூ ரடைந்தரன் கோயில் புக்கார். (௧௬)

கைம்மலைச் சாபந் தீர்த்த கருணையங் கடலைத் தாழ்ந்து
மும்முறை வலந்து ஞான முகிழ்முலைப் பாலி னோடு
செம்மணி வள்ளத் தீந்த திருவொடுந் தொழுதா னந்த
மெய்ம்மய வெள்ளத் தாழ்ந்து நின்றனர் வேதச் செல்வர். (௧௭)

மறைவழி நின்று நின்னை வந்திசெய் துய்ய மாட்டா
நிறைவழி வஞ்ச நெஞ்சச் சமணரை நெறிக ளெல்லாஞ்
சிறைபட வாது செய்யத் திருவுளஞ் செய்தி கூற்றைக்
குறைபட வுதைத்தோ யென்று குறித்துரை பதிகம் பாடி. (௧௮)

வேண்டுகொண் டருளைப் பெற்று மீளுமப் போது கண்டு
மூண்டவைம் பொறியும் வென்ற வாகீச முனிக ளென்ன
ஆண்டொளா ரொருவர் வேண்ட வவர்திரு மடத்தி லன்பு
பூண்டெழு காத லோடும் போயினர் புகலி வேந்தர். (௧௯)

அங்கெழுந் தருளி யெல்லி னமுதுசெய் திருப்ப வற்றைக்
கங்குல்வா யமணர் செய்யுங் கருதருஞ் செயலுந் தங்கண்
மங்கல மரபின் வந்தாள் வருத்தமுங் காண வஞ்சிச்
செங்கதி ரவன்போய் மேலைச் செழுங்கடல் வெள்ளத் தாழ்ந்தான். (௨௦)

மாறுகொ ளமணர் செய்யும் வஞ்சனைக் கிடனா யொத்து
வேறற நட்புச் செய்வான் வந்தென விரிந்த கங்குல்
ஈறற முளைத்த வான்மீ னினமவர் பறித்த சென்னி
ஊறுபட் டெழுந்த மொக்கு ளொத்தவக் கங்கு லெல்லை. (௨௧)

வேறு.

வைதி கத்தினி யிளஞ்சிறு மடங்கலே நடைந்த
செய்தி யைத்தெரிந் தயன்மலை யிடங்களிற் றிரண்ட
கைத வத்தவெண் ணாயிரங் கயவரு மொருங்கே
எய்தி முத்தமிழ் விரகர்மேற் பழித்தழ லிழைத்தார். (௨௨)

மெய்யில் சிந்தையா ரத்தழற் கடவுளை விளித்தாங்
கெய்தி யெம்பகை யாயினோ ரிருக்கையை யழுது
செய்து வாவெனப் பணித்தனர் சிறுவிதி மகத்துக்
கையி ழந்தவன் செல்லுமோ வஞ்சினன் கலங்கி. (௪௩)

ஈனர் தாஞ்சடத் தீயினை யெடுத்தன ரேகி
ஞான போனகர் மடத்தினிற் செருகினார் நந்தா
தான தீப்புகை யெழுவதை யடியவர் கண்டு
வான நாயகன் மைந்தருக் குணர்த்தினார் வல்லை. (௪௪)

சிட்டர் நோக்கியத் தீயினைத் தென்றமிழ்க் கூடல்
அட்ட மூர்த்தியை யங்கிருந் தருமறைப் பதிகந்
துட்டர் பொய்யுரை மேற்கொண்டு தொன்முறை துறந்து
விட்ட வேந்தனைப் பற்றெனப் பாடினார் விடுத்தார். (௪௫)

அடுத்த தக்கணத் தரசனை வெப்புநோ யாகி,
தொடுத்த திட்டபல் கலன்களுந் துகளெழப் பனிநீர்
மடுத்த சாந்தமுங் கலவையு மாலையுங் கருகப்
படுத்த பாயலுஞ் சருகெழப் புரவலன் பதைத்தான். (௪௬)

வளவர் கோன்றிரு மடந்தையு மந்திர ரேறுந்
தளர்வ டைந்துநன் மருத்துநூல் விஞ்சையர் தமைக்கூஉய்ப்
பளகில் பன்மருந் தருத்தவும் பார்வையி னாலும்
விளைவி தேயன்றி வெஞ்சுரந் தணிவது காணார். (௪௭)

சவலை நோன்புழந் திம்மையு மறுமையுஞ் சாரர்
அவல மாசரை விடுத்தன ரனைவரும் பார்த்துத்
தவவ லத்தினு மருந்தினுந் தணிந்தில தாகக்
கவலை யெய்தினா ரிருந்தனர் விடிந்தது கங்குல். (௪௮)

வட்ட வாழியொன் றுடையதேர்ப் பரிதிதன் மருமான்
பெட்ட காதல்கூர் மருகனைப் பற்றிய பிணிகேட்
டிட்ட காரிரு ளெழினியை யெடுத்தெடுத் தங்கை
தொட்டு நோக்குவான் வந்தெனத் தொடுகடன் முளைத்தான். (௪௯)

வாலி தாகிய சைவவான் பயிரினை வளர்ப்பான்
வேலி யாகியோ ரிருவரும் வேந்தனை நோக்கிக்
கால பாசமுஞ் சுடுமிந்நோ யருமறைக் காழிப்
பால ராலன்றித் தீர்த்திடப் படாதெனப் பகர்ந்தார். (௫௰)

பொய்யர் சார்பினை விடாதவ னீங்குநீர் புகன்ற
சைவர் நீறிட்டுப் பார்ப்பது தகுவதோ வென்ன
ஐய நீயெனைத் திறத்தினா லாயினு நோய்தீர்ந்
துய்ய வேண்டுமே யிதனில்யா துறுதியென் றுரைத்தா (௫௧)

அழைமி னீண்டென வரசனு மிசைத்தன னார்வந்
தழையு மந்திரத் தலைமகன் றனிநக ரெங்கும்
விழவு தூங்குநன் மங்கல வினைகளால் விளக்கி
மழலை யின்றமிழ் விரகர்தம் மடத்தில்வந் தெய்தா. (௫௨)

அன்று கேள்வியா லருந்திய ஞானவா ரமுதை
இன்று கண்களா லுண்டுகண் பெற்றபே றெய்திச்
சென்றி றைஞ்சினு னெழுந்திருந் தியமண் சூழ்ச்சி
வென்ற சிந்தையி ரென்றனர் பூந்தராய் வேந்தர். (௫௩)

நன்றி ருந்தனி ரேயென நகைமலர்த் தடந்தார்
வென்றி மீனவன் கற்பினர் தம்மையும் வினவ
என்று நம்மரு ளுடையவர்க் கெவன்குறை யென்னு
ஒன்று கேண்மைகூ ரன்பினு ரிதனையு முரைப்பார். (௫௪)

கையர் மாளவு நீற்றினுற் கவுரியன் றேயும்
உய்வ தாகவு மின்றுநும் மருளினு லொலிநீர்
வைகை நாடன்மேல் வெப்புநோய் வந்ததா லதனை
ஐய தீர்த்திடல் வேண்டுமென் றடியில்வீழ்ந் திரந்தார். (௫௫)

இரந்த வன்பருக் கன்னதா கென்றருள் சுரந்து
பரந்த நித்தில யானமேற் பனிக்கதிர் மருமான்
சுரந்த ணிப்பவென் றேகுவா னுத்துமெய்ச் சுருதி
புரந்த ளிப்பவர் பாண்டியன் கோயிலிற் புகுவார். (௫௬)

வாயி லெங்கணுந் தூபமு மங்கல விளக்குந்
தோய கும்பமுங் கொடிகளுஞ் சுண்ணமுந் துவன்றச்
சேய காகள வொலிமன்னன் செவிப்புலன் சுவைப்பக்
கோயி லெய்தினு ரமணர்தங் கோளரி யனையார். (௫௭)

காவ லோன்மருங் கிட்டதோர் கதிர்மணித் தவிசின்
மேவி னுரவர் நோக்கினுன் மீனவன் றெளிந்து
வாவி தாழ்செழுந் தாமரை யெனமுக மலர்ந்து
பாவி யேன்பிணி தணித்தெனைப் பணிகொண்மி னென்றான். (௫௮)

புலைத்தொ ழிற்குவித் தாயினேர் கேட்டுளம் புழுங்கிக்
கலைத்த டங்கட லீந்திய காவலோ யுன்றன்
வலப்பு றத்துநோ யிவரையு மற்றைநோ யெமையுந்
தொலைத்தி டப்பணி யென்றனர் கைதவன் சொல்வான். (௫௯)

அனைய செய்திரென் றிசையுமுன் சமணரு மஞ்சாகன
றனைநி னைந்துகைப் பீலியாற் றடவியுங் கரத்துக்
கனைகொ ளாலிநீர் சிதறியு நெய்சொரி கனல்போற்
சினவி மேலிடக் கண்டனர் தீர்ந்திடக் காணூர். (௬0)

தீயர் மானமிக் குடையராய்ச் செருக்கழிந் திருப்ப
பாய கேள்வியோர் புண்ணியப் பையுணீ றள்ளிக்
காயு நோயது தணித்திடக் கருதினு ரதனை
மாய நீறென விலக்கினூர் மாயைசெய் தழிவார். (௬௧)

அண்ட நாயகன் றிருமடைப் பள்ளிநீ றள்ளிக்
கொண்டு வாருமென் றருமறைக் கவுணியர் கூறக்
கண்டு காவல னேவலர் கைக்கொடு வந்தார்
வண்டு லாவுதார் வழுதிநோய் தணிப்பவர் வாங்கி. (௬௨)

மருந்து மந்திரம் யாவையு மறையுரைப் பதுவுந்
பொருந்து மின்பவீ டளிப்பதும் போகமும் பொருளுந்
திருந்து மாலவா யான்றிரு நீறெனச் சிறப்பித்
தருந்து மின்னமு தனையசொற் பதிகம தறைந்து. (௬௩)

மெய்யி விட்டனர் வருடலும் வெஞ்சுரந் துறந்த
மையில் சிந்தையோர் வெகுளியிற் றணிந்தது வாசஞ்
செய்த தண்பனி நீர்விரைச் சந்தனந் திமிர்ந்தால்
எய்து தண்மைய தாயின திறைவலப் பாகம். (௬௪)

பொழிந்த தண்மதுத் தார்புனை பூழியர் கோனுக்
கிழிந்த செய்கையர் கைதொட வெரியிடு சுரத்தாற்
கழிந்த துன்பமுங் கவுணியர் கைதொடச் சுரந்தீர்ந்
தொழிந்த வின்பமு மிருவினை யொத்தபோ லொத்த. (௬௫)

ஐய விச்சுர மாற்றரி தாற்றரி தென்று
வையை நாடவன் வல்லமண் மாசுதீர்ந் தடியேன்
உய்ய வேண்டுமே லதனையு மடிகளே யொழித்தல்
செய்ய வேண்டுமென் றிரந்தனன் சிரபுரக் கோனை. (௬௬)

பிள்ளை யாரிடப் பாகமும் பண்டுபோற் பெருமான்
வெள்ளை நீறுதொட் டங்கையா னீவுமுன் மேனாள்
உள்ள கூனொடு வெப்புநோ யொழிந்துமீ னுயர்த்த
வள்ளன் மாசறக் கடைந்தவிண் மணியெனப் பொலிந்தான். (௬௭)

வேறு.

அன்னதொரு காரணத்தாற் சவுந்தரிய பாண்டியனென் றாகி யன்ன
தென்னவர்கோன் கவுணியர்கோன் றிருநோக்காற்பரிசத்தாற்றெருட்டும்வாக்காற்
பொன்னடிதாழ்ந் தைந்தெழுத்து முபதேசப் பேறடைந்த பொலிவால் வஞ்சந்
துன்னமணர் நெறியிகழ்ந்து தொல்வேத நெறியடைந்து தூய னானான். (௬௮)

பாண்டியன்சுரந்தீர்த்தபடல முற்றிற்று.

ஆக திருவிருத்தம் - ௩,௧௭௩.

அறுபத்துமூன்றாவது

சமணரைக்கழுவேற்றியபடலம்.

பஞ்சவ னடைந்த நோயைப் பாலரு வாயர் தீர்த்து
நஞ்சணி கண்ட னீறு நல்கிய வண்ணஞ் சொன்னேம்
அஞ்சல ராகிப் பின்னும் வாதுசெய் தடங்கத் தோற்ற
வஞ்சரைக் கழுவே றிட்ட வண்ணமுஞ் சிறிது சொல்வாம். (௧)

தென்னவன் றேவி யாரு மமைச்சருஞ் சிறந்த சிங்கம்
அன்னவன் றானுங் காழி யந்தண ரடியில் வீழ்ந்தெழும்
மன்னவன் வெப்புங் கூனும் பாசமு மாற்றி னீரே
இன்னமு மடியேம் வேண்டுங் குறைசெயத் தக்க தென்றார். (௨)

கன்னிநா டெங்கு மிந்தக் காரமண் காடு மூடித்
துன்னின விதனை யின்னே துணித்திடல் வேண்டு மென்றார்
அன்னவ ராலவாயார் திருவுள்ள மறிவே னென்று
உன்னிய மனத்த ராகி யொய்யெனக் கோயில் புக்கார். (௩)

அவ்விரு வோருங் கூட வடைந்துபொற் கமலம் பூத்த
திவ்விய தீர்த்தந் தோய்ந்து சேனொடுங் கண்ணி பாக
நவ்வியங் கமலச் செங்கை நாதனைத் தாழ்ந்து வேந்தன்
வெவ்விய வெப்பு நீத்தார் தொழுதிது வினவு கின்றார். (௪)

காய்மே யொறுத்து நாளுங் கைதவம் பெருக நோற்கும்
பேயரை யிம்மை போடு மறுமையும் பேறற் றுரை
நீயுரை செய்த வேத வேள்வியை நிந்தை செய்யுந்
தீயரை யொறுத்தல் செய்யத் திருவுளஞ் செய்தி யென்றார். (௫)

வெம்மத வேழங் காய்ந்த விடையவர் விசும்பிற் சொல்வார்
எம்மனோ ராவீர் நுங்கட் கிசைந்ததே யெமக்கும் வேண்டுஞ்
சம்மத மதனால் வெல்லத் தக்கவ ராக நீரே
அம்மத முடையார் தோற்கத் தக்கவ ராக வென்றே. (௬)

எம்மொழி தேறி னீர்போ யிறைமக னவையத் தெய்திச்
செம்மையி லாரை வாது செய்திர்நீ ரனையார் தோற்று
வெம்முனைக் கழுவி லேறி விளிகுவ ரென்னக் கேட்டு
மைம்மலி களத்தான் மைந்தர் தொழுதுதம் மடத்திற் போனார். (௭)

இருவரு மீண்டு தத்த மிருக்கையிற் போகி யற்றைப்
பருவமங் ககலப் பின்னாட் பாண்டிமா தேவி யாரும்
பெருமதி யமைச்ச ரேறும் பிள்ளையார் மடத்திற் போகி
அருகரை வெல்லுஞ் சூழ்ச்சி யாதென வளந்து தேர்வார். (௮)

பேரரு ணிறைந்த காழிப் பெருந்தகை யுடன்போய்த் தங்கோன்
சீரவை குறுகி யீது செப்புவார் செய்ய கோலாய்
காரமண் காடே யெங்குங் கழியவு மிடைந்த வின்ன
வேரொடுங் களைந்தாற் சைவ விளைபயி ரோங்கு மென்றார். (௯)

அவ்வண்ணஞ் செய்வ தேயென் றரசனு மனுச்சை செய்யச்
செவவண்ண வெண்ணீற் றண்ண லனுச்சையுந் தெரிந்து தேயம்
உய்வ்வண்ண மிதுவென் றங்க னுண்மகிழ்ந் திருந்தார் நீண்ட
பைவ்வண்ண வாரம் பூண்டார் புகழெங்கும் பரப்ப வல்லார். (௧௦)

வேறு.

அந்த வேலை யருகந்தக் கையரைக்
குந்த வேற்கட் குலமட மாதரும்
மைந்த ராகிய மக்களுங் கண்ணழல்
சிந்த நோக்கி யிகழ்ந்திவை செப்புவார். (௧௧)

பூசமுயர் கோமகன் மூழ்கிய தீப்பிணி
கழிய மாற்றும் வலியின் றிக் கற்றிலா
மழலை வாயொரு மைந்தற்குத் தோற்றுவெம்
பழிவி ளைத்தீர் பகவன் றமர்க்கெலாம். (௧௨)

சாம்ப ராடுஞ் சமயம் புகுந்துவெம்
பாம்ப ணிந்தவ னேபக வானென
வேம்ப னுங்கள் விரத நெறியெலாஞ்
சோம்ப லெய்தத் துறந்தா னிகழ்ந்தரோ. (கங)

ஏது மக்கு நிலையினி யென்றவப்
போது மற்றவர் தம்மைப் புறவிட
வாது செய்தற் கெழுந்தனர் வஞ்சகர்
போது மென்னத் தடுத்தனர் பூவைமார் (கச)

செல்லன் மின்க ளுமக்கிது செவ்வியன்
றல்லல் கூர வருந்துன்மத் தாமநாம்
எல்வி கண்ட கனவுண் டிதனையாஞ்
சொல்லு கேமின்று கேண்மெனச் சொல்லுவார். (கரு)

வேறு.

இடைய றாதுநம் பாழியும் பள்ளியு மெங்குஞ்
சடையர் முஞ்சியர் சாம்பலர் தாங்கிய சூலப்
படையர் தீவிழிப் புலவுவாய்ப் பாய்பெரும் புலித்தோல்
உடைய ராய்ச்சிலர் வந்துவந் துலாவுதல் கண்டேம். (கசா)

கன்னி யிற்றுற வன்னங்கள் கணவரிற் றுறவின்
மன்னு மாரியாங் கனைகளால் வாங்குமக் குழைகள்
என்ன மூவகைப் பெண்டவப் பள்ளிக ளெல்லாஞ்
சின்ன வெண்பிறைக் கோட்டுமா சிதைக்கவுங் கண்டேம். (கஎ)

முண்டி தஞ்செய்த தலையராய் முறுக்குறி தூங்கு
குண்டி கைத்தடக் கையராய்க் கோவணம் பிணித்த
தண்டு தாங்கிய சுவலராய்ச் சடையன்பேர் நாவிற்
கொண்ட சைத்தன ராயெங்குந் றுலாவவுங் கண்டேம். (கஅ)

காந்து வெங்கத முடையதோர் கயந்தலை வந்து
சூழ்ந்து கொண்டெம் மடிகண்மார் கணமெலாந் துரத்தி
ஏந்து பூஞ்சினை யலைந்திட விரங்கிவண் டிரியப்
பாய்ந்து பிண்டியை வேரொடும் பறிக்கவுங் கண்டேம். (ககூ)

அந்த மூவிலை வேலினு மயின்முனைக் கழுவின்
பந்தி மீதுநீ ரேறவுங் கண்டுளம் பனிப்பச்
சந்த மார்பகஞ் சேப்பவ டிர்க்கரம் புடைத்துக்
கந்த வார்குழல் சோரவுங் கலுழவுங் கண்டேம். (உ0)

தள்ள ருந்திற லிந்திர சாலமோ காதி
உள்ள விஞ்சையில் வல்லவந் துதவில வொன்றுங்
கள்ள ராற்பறி பட்டவோ கனலில்வெந் தனவோ
வெள்ளங் கொண்டவோ சேமத்திற் கிடப்பவோ விளம்பீர். (உக)

தாவு தீவளர்த் தெழுகரி தன்னையா டரவை
ஆவை யேவிமுன் னம்மனோர் பட்டது மறிந்தி
காவ லன்பிணி தணித்திலீ ரினிச்செயுங் கருமம்
யாவ தாகுமோ வதனையு மெண்ணுமி னென்றார் (உஉ)

இற்றை வைகலுக் கேகன்மி னென்றன் ரறத்தைச்
செற்ற வஞ்சகர் செல்லுவார் திரும்பவுங் கையைப்
பற்றி யீர்த்தனர் பெண்டிர்சொற கேட்பது பழுதென்
றுற்ற தீவினை வழிச்செல்வா ரொளித்தனர் செல்வார். (௨௩)

கொங்க லர்க்குழல் சரிந்திடக் குரத்தியர் பின்னும்
எங்கள் சொற்கொளா தேகுவீர் பரிபவ மெய்தி
உங்க ளுக்கிடை யூறுவந் துறுகெனச் சபித்தார்
அங்க தற்குமஞ் சார்செல்வா ரழியுநா ளடுத்தார் (௨௪)

புட்க ளும்பல விரிச்சியும் போகலென் றெதிரே
தட்க வுங்கடந் தேகுவார் தடங்கய லுகைப்பக்
கட்க விழ்ந்தலர் கிடங்கர்சூழ் கடிநகர்ப் புறம்போய்
உட்கு நெஞ்சரா யாவரு மோரிடத் தீண்டி. (௨௫)

யாது சூழ்ச்சியென் றெண்ணுவா ரிறைவனைக் கண்டீ
தோதி நாமவ னனுமதி யுறுதிகொண் டனைய
ஏதி லாளனை வாதினால் வேறுமென் றிசைந்து
போது வார்நகர் புகுந்துவேத் தவைக்களம் புகுவார். (௨௬)

ஆய போதிளங் காலையிற் கவுணி யரால
வாயர் சேவடி பணிந்துதம் மடத்தினிற் செல்லக்
காயு மாதவச் செல்வனைக் கங்குல்சூழ்ந் தாங்கு
மாய வஞ்சகர் வந்திடை வழித்தலை மறித்தார். (௨௭)

மறித்த கையர்பின் செல்லமுன் மன்னவை குறுகிக்
குறித்த வாளரித் தவிசின்மேற் கொச்சையர் பெருமான்
எறித்த சேயிளம் பரிதியி னேறிவீற் றிருந்தார்
பறித்த சித்தலைப் புலையர்கள் பொருதிவை பகர்வார். (௨௮)

மழலை யின்னமுந் தெளிகிலா மைந்தகண் மணியொன்
றுழல்க ருங்கொடி யிருந்திடக் கனியுதிர்ந் தாங்குன்
சுழல்கொள் விஞ்சையி னன்மையான் மன்னனைத் தொடுத்த
தழல வித்தன மென்றுநீ தருக்குறத் தகுமோ. (௨௯)

நந்து நாகுநீர் வண்டுசென் னடைவழி யெழுத்தாய்
வந்து வீழினும் வீழுமவ் வழக்கினின் உகயிற்
சிந்து சாம்பருஞ் சிறுசொலு மருந்துமந் திரம்போற்
சந்து சூழ்மலை யான்சுரந் தணித்தன கண்டாய். (௩௦)

உங்கண் மந்திர மேடொன்றிற் றீட்டுக வோரேட்
டெங்கண் மந்திரந் தன்னையுந் தீட்டுக விரண்டும்
அங்கி வாயிடின் வெந்தது தோற்றதவ் வங்கி
நுங்கி டாதது வென்றதென் றுருட்டி யேநுவலா. (௩௧)

செக்க ரஞ்சடை யானுறை பதிகளிற் செய்யத்
தக்க தன்றவ னடுகிலை பிழைத்துநுஞ் சார்வாய்
விக்க மெம்மனோர்க் கியற்றுவான் வேறொரு தலத்திற்
புக்க மர்ந்துவா தஞ்செயப் போதுக மென்று. (௩௨)

வென்றி மாமுர சறங்கிடா வியனகர்ப் புறம்போய்
மன்றல் வேம்பன்முன் கதழெரி மடுத்திடிற் பிழைப்ப
தொன்று வேவதொன் றீதுகொண் டெமர்களு மெம்மீரும்
இன்று வெல்வதுந் தோற்பதுங் காண்டுமென் றெழுந்தார் (௩௩)

வேறு.

ஈட்டுவஞ்ச நெஞ்சரே யெழீஇநகர்ப் புறம்புபோய்க்
கீட்டிசைக்க ணோரழற் கிடங்குதொட் டெழுந்துவான்
நீட்டுகோ டரங்குறைத்து நிறையவிட்டு நெட்டெரி
மூட்டினார்த மாதரார் வயிற்றுமிட்டு மூட்டினார். (௩௪)

ஞானமுண்ட முனிவர்தம்மை யெள்ளியெள்ளி நாயினும்
ஈனரங்கி யைத்தடுத் திருப்பவெண் ணிராயிரர்
ஆனதொண்ட ருடனெழுந்து சண்பைவேந்து மரசனும்
மானனாரு மந்திரக் கிழானும்வந்து வைகினார். (௩௫)

உள்ளவிழ்ந்த முலைசுரந் தொழுக்குபா லருந்தியே
துள்ளியோடு கன்றுபின் றொடர்ந்துசெல்லு மானென
வெள்ளியம்ப லத்துளாடும் வேதகீதர் காதல்கூர்
பிள்ளைபோன வாறுதம் பிராட்டியோடு மெய்தினார். (௩௬)

ஆறினோ டிரண்டடுத்த வாயிரஞ் சமணரும்
வேறுவேறு தாமுயன்ற மந்திரங்கள் வேறுவே
றூறுநீர் சுரந்தவோலை யிற்பொறித் தொருங்குபோய்ச்
சீறிவா னிமிர்ந்தெழுந்த தீயின்வாய் நிரப்பினார். (௩௭)

அக்கிவாய் மடுத்தவே டனைத்துமக் கணத்தினே
இக்குவா யுலர்ந்ததோ டெனக்கரிந்து சாம்பராய்
உக்கவாறு கண்டுநீச ருட்கிடந்து பொங்கவே
திக்குளார்கள் கண்டபேர் சிரித்துளார்க ளாயினார். (௩௮)

விரிந்தவேத ...... தாம் விரித்தவேத மெய்ப்பொருள்
வரைந்தபுத்த கத்தைவண் கயிற்றினால வகிர்ந்துதாம்
அருந்தஞான வமுதளித்த வம்மைபேர கப்படத்
தெரிந்தவே * டெடுத்தடுத்த தீயின்வாயி லிட்டனர். (௩௯)

மறைபுலப் படுத்தநூல் வரைந்தவே டணைந்தநாள்
அறைபுனற் கிடந்ததூர மெனப்பசந்த தரசனும்
நிறையமைச்ச மரசியாரு நின்றபேரு மந்தணர்க்
கிறைவரைப் புகழ்ந்தளப்பி லின்பவெள்ள மூழ்கினார். (௪0)

வெந்தசிந்தை யமணர்வாது வெல்வதற்கு வேறிடம்
புந்திசெய்து வந்தவப் பொதுத்தலம் பொதுக்கடிந்
தந்தணாளர் வாதுவென்ற வன்றுதொட்டு ஞானசம்
பந்தனென்ற நாமமே படைத்துயர்ந்த தின்றுமே. (௪௧)

அன்னவேடு முறையினோ டிறுக்கியந்த ணாளர்கோன்
மன்னைநோக்க வினையினோடு பாயுடுத்த மாசர்தாஞ்
சொன்னசூழ் புலப்படத் துணிந்தும்வாய்மை நாணினாரிக்
கன்னிநாட னவைசிரிக்க வாற்றலாது கத்துவார். (௪௨)

* அம்மைபேரகப்படத்தெரிந்தவேடு - "போகமார்த்த பூணமுலையாள்" என்னும் திருநள்ளாற்றுத் தேவாரம் எழுதிய திருவேடு.

ஏடநாங்க ளெழுதியிட்ட பச்சையேடெ ணாயிரம்
வீடவந்த நீவரைந்து விட்டவேடலை யொன்றுமென்
வாடலின்றி நீரிலிட்ட வண்ணமான தாலிதுன்
பாடவஞ்செய் விஞ்சைகொண்டு பாவகப் பிணித்ததே. (௪௩)

உங்களேடு மெங்களேடு மும்பர்வான ளாய்விரைஇப்
பொங்கியோடும் வைகைநீரி லிடுகவிட்ட போதுதான்
அங்குநீ ரெதிர்க்குமோலை வெல்லுமோலை யன்றியே
தங்கவேலை செல்லுமோலை தோற்குமோலை யாவதே. (௪௪)

வென்றுவீ றடைந்தவர்க்கு வீறழிந்து தோற்றபேர்
என்றுமேவ லடிமையாவ தென்றிசைந்து கைதவக்
குன்றுபோலு நின்றகுண்டர் கூறலோடு மீறிலா
மன்றுளாடு மடிகண்மைந்தர் வாய்மலர்ந்து பேசுவார். (௪௫)

வேறு.

அடியார் பதினா றுயிரவ ருள்ளார் சிவனை யவமதித்த
கொடியார் நீவி ருமக்கேற்ற தண்ட மிதுவோ கொன்றைமதி
முடியா ரருளா லுங்களைநாம் வென்றே மாயின் மூவிலைவேல்
வடிவா லிரைத்த கழுமுனையி லிடுவே மதுவே வழக்கென்றார். (௪௬)

ஊழின் வலியா லமணாதர் றுடன்பட் டார்க ளஃதறிந்து
சூழி யானைக் குலச்சிறையுந் தக்கர் பலரைத் தொகுவித்துக்
காழி னெடிய பழுமரத்திற் சூல வடிவாக் கழுநிறுவிப்
பாழி நெடிய தோள்வேந்தன் முன்னே கொடுபோய்ப் பரப்பினார். (௪௭)

தேற லாதார் தமைக் காழிச் செம்ம னோக்கி யினிவம்மின்
நீறு பூசிக் கண்டிகையும் பூண்டு நிருத்த ரெழுத்தைந்தும்
ஊற வோதிப் பாசமொழித் துய்மி னென்று வறநோக்கிக்
கூறி னார்மற் றதுகேட்டே குண்ட ரெரியிற் கொதித்துரைப்பார். (௪௮

முன்பு தீயில் வென்றனமே நீரில் யாதாய் முடியுமென
அன்பு பேசி யெமையிணக்கி யகல நினைந்தா யல்லதைநீ
பின்பு வாது செயத்துணியும் பெற்றி யுரைத்தா யல்லைபுலால்
என்பு பூணி யடியடைந்த வேழாய் போதி யெனமறுத்தார். (௪௯)

ஊகந் தவழும் பழுமரத்தை யுதைத்துக் கரைமா றிடவொதுக்கிப்
பூகந் தடவி வேர்கீண்டு பொருப்பைப் பறித்துப் புடைபரப்பி
மாகந் துழாவிக் கடுகிவரும் வைகைப் புனலை மந்திரத்தால்
வேகந் தணிவித் தேடெழுதி விடுத்தார் முன்போல் வெள்காதார். (௫௦)

சிறையேய் புனல்சூழ் வேணுபுரச் செல்வர் யாருந் தெளிவெய்த
மறையே வாய்மை யுரையாகின் மறைகண் முழுதுந் துணிபொருடான்
பிறையேய் வேணிப் பிரானாகிற் பெருநீ ரெதிரே செல்கவென
முறையே பதிக மெடுத்தெழுதி விட்டார் முழங்கி வருபுனலில். (௫௧)

தேசம் பரவுங் கவுணியர்கோன் விடுத்த வேடு செழுமதுரை
ஈச னருளாங் கயிறுபிணித் தீர்ப்ப நதியி லெதிரேற
நாசஞ் செய்யும் பொறிவழியே நடக்கு முள்ள மெனச்சென்று
நீச ரேடெண் ணாயிரமு நீத்த வழியே யொழுகியவால். (௫௨)

சிங்க மனையா ரெழுதுமுறை யெதிராற் றேறத் தெரிந்தமரர்
அங்க ணறும்பூ மழைபொழிந்தா ரறவோர் துகில்விண் ணெறிந்தார்த்தார்
கங்கை யணிந்தார் திருத்தொண்டர் கண்ணீர்க் கடலி லமிழ்ந்தினர்
வெங்க ணமணர் நடுங்கியுடல் வெயர்வைக் கடலி லமிழ்ந்தினர். (௫௩)

வேமே யென்ப தறியாதே வெல்வே மென்றே சூளோட்டி
நாமே யிட்ட வேடெரியில் வேவக் கண்டு நதிக்கெதிரே
போமே யின்னம் வெல்வேமென் றிட்ட வேடும் புணரிபுகத்
தாமே தம்மைச் சுடநாணி நின்றா ரமணர் தலைதூக்கி. (௫௪)

பொருப்பே சிலையாய்ப் புரங்கடந்த புனித னேயெத் தேவர்க்கும்
விருப்பேய் போகம் வீடெரு மேலாங் கடவு ளெனநான்கு
மருப்பேய் களிற்றான் முடதகர்த்தான் மருமா னறியக் குருமொழிபோ
நெருப்பே யன்றி வேகவதி நீரும் பின்னர்த் தேற்றியதால. (௫௫)

பொய்யின் மறையின் புறத்தமணர் புத்தர்க் கன்றி வாய்மையுரை
செய்யு மறைநூல் பலதெரிந்துஞ் சிவனே பரமென் றறியாதே
கையில் விளக்கி னுடுங்கிடங்கில் வீழ்வார் போலக் கலங்கிமனம்,
ஐய மடைந்த பேதையர்க்கு மறிவித் தனவே யவையன்றே. (௫௬)

கண்டு கூடற் கோமகனுங் கற்பு நிறைந்த பொற்புடைய
வண்டு சூடுந் தாரளக வளவன் மகளு மந்திரியுந்
தொண்டு கூடு மடியாருங் காழிக் கரசைத் தொழுதுதுதி
விண்டு கூடற் கசியமெய்ம் வெள்ளத் தழுந்தி வியந்தனரால். (௫௭)

நன்றி தேறார் பின்புள்ள மான மிழந்து நாணழிந்து
குன்று போலுந் தோணிபுரக் கோமா னெதிரே யாங்களுமக்
கின்று தோற்றே மெமையீண்டு நீரே வெற்றி ரெனநேர்ந்து
நின்று கூறக் கவுணியர்கோ னெனையா ருய்யு நெறிநோக்கா. (௫௮)

இன்ன மறத்தா றிசைக்கின்றே மிரேன் வாளா விறக்கின்றீர்
அன்னை யனைய னெம்மிறைவ னுலவனுக் காளா யுய்மின்கள்
என்ன வேட சிறியாய்நீ யெவ்வா றெங்கட் கடாதமொழி
சொன்ன தென்று மானமுளார் கழுவி லேறத் தொடங்கினர். (௫௯)

வேறு.

மதத்தினின் மான மிக்கார் தாங்களே வலிய வேறிப்
பதைத்திட விருந்தா ரேனைப் பழிதலை யவரைச் சைவ
விதத்தினு லொழுக்கம் பூண்ட வேடத்தார் பற்றிப் பற்றிச்
சிதைத்திடச் செய்தே யிட்டார் திரிதலைக் கழுக்கோ டன்னில். (௬0)

வழிவழி வருமா னுக்கர் சாதற்கு வருந்தி நெஞ்சம்
அழிபவர் திருநீ றிட்டா ரதுகிட்டா தயர்வா ராவின்
இழிவில்கோ மயத்தை யள்ளிப் பூசின ரிதுவுங் கிட்டா
தொழிபவ ராவின் கன்றைத் தோளிலிட் டுயிரைப் பெற்றார். (௬௧)

கூறிட்ட மூன்றுங் கிட்டா தயர்பவர் குற்றந் தீர
நீறிட்டார் நெற்றி யோடு நிருமல கோம யத்தின்
சேறிட்டார் நெற்றி யோடு நெற்றியைச் செறியத் தாக்கி
மாறிட்ட பாசந் தன்னை மறித்திட்டுப் பிறப்பை வெல்வார். (௬௨)

மற்றிவர் தம்மை யூற்றஞ் செய்திலர் மடிந்தோர் யாருஞ்
சுற்றிய சேனங் காக நரிகளுய் தொடர்ந்து கௌவிப்
பற்றிநின் றீர்த்துத் தின்னக் கிடந்தனர் பரும யானை
வெற்றிகொள் வேந்தன் காழி வேந்தரைத் தொழுதுநோக்கா (௬௩)

இன்றுநீ ரிட்ட வேடிதழ் கியாவருங் காண நேரே
சென்றதே யெங்கே யென்று னதனையாஞ் செம்பொற் கூடன்
மன்றவ ரருளா லின்னே வருவிப்ப மென்று வாது
வென்றவர் நதியின் மாடே மேற்றிசை நோக்கிச் செல்வார். (௬௪)

செல்லுநர் காண வோலை காவதஞ் செல்வ தப்பால்
ஒல்லையங் கொளித்த லோடும் வியந்தவ ரொருங்கு கூடிக்
கொல்லையான் மேய்த்து நின்றார் சிலர்தமைக் குறித்து நீரிவ்
வெல்லையுள் விசேட முண்டோ விவண்கண்ட திசைமி னென்றார். (௬௫)

அவ்விடைச் சிறார்கள் யாங்க ளொன்றையு மறியேமென்ன
இவ்விடை விசேடங் காணல் வேண்டுமேற் றிறத்து மென்னத்
தெவ்விடை வாது செய்யத் திருவுளக் கருணை செய்த
வெவ்விடைக் கொடியி னாரைப் பாடினார் வேத நாவார். (௬௬)

பாட்டின்மேற் கருணை வைத்தார் சயம்புவாய்ப் பரரை யில்லக்
காட்டினு ளிருப்ப நேரே கண்டுதாழ்ந் தெழுந்து சண்பை
நாட்டினார் வலங்கொண் டேத்தி யெதிர்நின்றார் நகைத்தார் நிம்பத்
தோட்டினு னதுகேட் டங்கே தோன்றினன் றானை யோடும். (௬௭)

அந்தமா விலிங்கத் தீச னுயிர மதியங் கண்ட
மூந்தைவே தியராய்த் தோன்றி முத்தமிழ்க் கரசை நீயென்
மைந்தனு மினையோ னொப்பாய் வருகென நீறு சாத்திச்
சிந்தைநீ ளார்வங் கூரத் திருவருள் சுரந்து நின்றார். (௬௮)

நின்றவர் தனைரை யன்று நிருமல ஞான மீந்தார்
என்றுகண் டிறைஞ்சி யைய நீரில்யா னிட்ட வேடு
சென்றதிங் கெடுத்தீர் நீரே யஃதுநுஞ் செல்வர்க் கேற்ற
தன்றதைத் தருதி ரென்று ரறுமுகச் செம்ம லன்னார். (௬௯)

இன்னமும் பன்னு ணம்மை யிடந்தொறும் பாடி யெஞ்சும்
புனனெறி யொழுகு வாரை வென்றுநம் புனித வீடு
பின்னாநீ பெறுதி யென்று வேடுதந் தாசி பேசி
மின்னென மறைந்து நின்றார் வேதிய ராய வேடர். (௭௦)

ாதையார் கவர்ந்து மீளத் தந்தவே டதனை வாங்கிப்
போதையா ஞான முண்டார் புரிசடைப் பிரானூர் வௌவ்
தையா மிரந்து வேண்டத் தந்தன ரென்று கூறிக்
கோதையார் வேலி னூற்குக் காட்டவக் கொற்கை வேந்தன் (௭௧)

ச்சான வரவ மார்த்த கருணையங் கடலிற் றோன்றும்
விச்சான ஞான முண்டோ ராற்றலின் விளைவு தேறு
நச்சான * வஞ்சா னும்மை யளந்தன னடியே னிந்தத்
துச்சான பிழைதீர்த் தாள்கென் றிறைஞ்சினன் றுணர்த்தார் வேம்பன். ()

* அஞ்ஞானம் என்பது அச்சானம்

அங்நெடு மேரு வாகு மாடகச் சிலையி னார்க்குப்
பொன்னெடுஞ் சிகரக் கோயின் மண்டபம் புயலைத் தீண்டு
மின்னெடு மதியந் தீண்டுங் கோபுர மேகந் தாவுங்
கன்னெடும் புரிசை வீதி யாவையுங் களிப்பக் கண்டான். (௭௩)

அற்றைநா ளாதி யாக வேடக மென்னு நாமம்
பெற்றதா லேட கத்தின் மேவிய பிரானைப் பாண்டிக்
கொற்றவன் சமண ரோடுங் கூடிய பாவ மெல்லாம்
பற்றறப் பூசை செய்து பாசமுங் கழியப் பெற்றான். (௭௪)

நறைகெழு துழாயி னானுங் கலுழனு நாகர் வேந்தும்
முறையினா லுகங்கண் மூன்றும் பூசித்து முடியா வின்ப
நிறையருள் பெற்றா ரன்ன நிராமய விலிங்கந் தன்னை
இறுதியா முகத்திற் பாண்டி யிறைமகன் பூசைசெய்தான். (௭௫)

அங்கண்மா நகர்கண் டாங்கோ ராண்டிறை கொண்டு காழிப்
புங்கவ ரோடும் பின்னாட் பூழியர் பெருமான் மீண்டு
மங்கல மதுரை சேர்ந்து வைகுநா ணீற்றுச் செல்வம்
எங்கணும் விளங்கச் சின்னா ளிருந்துபின் ஞானச் செல்வர். (௭௬)

வடபுலத் துள்ள வீசன் பதிகளும் வணங்கிப் பாடக்
கடவமென் றெழுந்து கூடற் கண்ணுதற் பெருமான் றன்னை
இடனுறை கயற்க ணாளை யிறைஞ்சிப்பல் வரனும் பெற்று
விடைகொடு தமிழ்நா டெங்கும் பணிந்தனர் மீண்டு போவார். (௭௭)

தன்பெருங் கற்பி னாளு மமைச்சனுந் தமிழ்நர் கோனும்
பின்புற ணந்தண் காழிப் பிரானடி பிரிவாற் றாராய்
அன்புதந் தவர்பா லட்ட வன்றுதொட் டானாக் கேண்மை
இன்பமுந் துன்ப மாகி விளைந்துமுன் னீர்ப்பப் போனார். (௭௮)

சண்பையர் தலைவர் தாமு மனையராய்த் தம்பின் செல்லும்
நண்புடை யவரை நோக்கி நம்மிடத் தன்பு நீங்காப்
பண்பின ராகி நீறு பாதுகாத் தீசன் கீர்த்தி
மண்பட வாழ்மி னீது மறுக்கன்மி னினமி னென்றார். (௭௯)

ஆளுடைப் புகலி வேந்த ரருண்மொழி மறுக்க வஞ்சித்
தாளுடைப் பதுமச் செந்தா டலையுறப் பணிந்து மீண்டு
வாளுடைத் தானைத் தென்னன் மதுரையில் வந்தான் கஞ்சத்
தோளுடைச் சிங்க மன்னார் சோழர்கோ னாடு புக்கார். (௮௦)

ஞானமா மதநீர் சோர ஞானசம் பந்த ரென்னும்
மானமா யானை வந்து கடம்பமா வனத்திற் றுன்னும்
ஊனமாஞ் சமண ரென்னுந் தருக்களை யொடித்து வெண்ணீ
றானமாப் பூழி யள்ளித் தூற்றிய தவனி யெங்கும். (௮௧)

வே று.

ஆதி யூலயத் தடலைகொண் டாழிசூழ் காழிச்
சோதி வேதியர் பாண்டியன் சுரந்தணித் துடலிற்
பேதி யாதகூ னிமிர்த்தலாற் பிறங்குகற் பரிதிப்
பூதி யாவினுஞ் சிறந்ததவ் வட்டில்வாய்ப் பூதி. (௮௨)

சமணரைக்கழுவேற்றியபடலமுற்றிற்று.

ஆக திருவிருத்தம் - ௩,௨௫௫.

அறுபத்துநான்காவது

வன்னியுங் கிணறும்

இலிங்கமுமழைத்தபடலம்.

சென்னிவெண் டிங்கண் மிலைச்சிய மதுரைச் சிவனரு ளடைந்தசம் பந்தர்
துன்னிருஞ் சமணைக் கழுமுனை யேற்றித் துணித்தவா றிசைத்தனம் வணிகக்
கன்னிதன் மன்றற் கரியினை மாற்றாள் காணவக் கண்ணுத லருளால்
வன்னியுங் கிணறு மிலிங்கமு மாங்கு வந்தவா றெடுத்தினி யுரைப்பாம். (க)

பொன்மலர்க் கைதை வேலிசூழ் வேலைப் புறத்தொரு பட்டினத் துள்ளான்
மின்மணிக் கொடும்பூ ணொருகுல வணிகன் வேறுவே றும்பல செல்வத்
தன்மையிற் சிறந்தோன் மகவில னாகித் தன்மனக் கினியதோர் காட்சி
நன்மனைக் கொடியோ டம்பலபுரிந்தோர் நகைமதிக் கொம்பையீன்றெடுத்தான்.

அத்தன வணிகற் குரியநன் மருக னவன்முதற் கடிமண முடித்தோன்
முத்தமிழ் மதுரைப் பதியுளா னவற்கே முறையினா லேற்றுநான் பயந்த
வித்தக மயிலைக் கொடுப்பலென் றனைய வியற்குல வணிகர்கோன் றன்னோ
டொத்தபல் கிளைஞர் யாவரு மறிய வுணர்த்தினான் சிலபக லொழிய. (௩)

ஊழ்வினை வலியா லொருயி ரிழந்தா னுயிர்க்குடம் பனையதன் கற்பின்
சூழ்கதிர் மணிப்பூண் மனைவியு மிறப்பத் துணிந்தன ளவரிரு வோர்க்கும்
ஆழ்கடற் கிளைஞர் செயத்தகு கடன்க ளாற்றியச் செய்தியை மதுரை
வாழ்தரு மருகற் குணர்த்துவா னோலை விடுத்தனர் மருமகன் வாங்கா. (௪)

தன்னருண் மாமன் றுஞ்சினான் கூடத் தாரமுந் துஞ்சிய திப்பால்
அன்னவற் களவின் றாய தனமுண் டவனணி நாண்மக வின்றிப்
பின்னொரு பெண்ணைப் பெற்றன னவளைத் தனக்கெனப் பேசினா னனைய
கன்னியை மணந்து செல்கென முடங்கற் கழறிய பாசுரந் தெரியா. (௫)

வீழ்ந்தனன் றரைமேற் புரண்டன னுயிர்ப்பு வீங்கினன் விழிப்புனல் வெள்ளத்
தாழ்ந்தனன் விம்முற் றம்மவோ வென்றென் றரற்றினன் கிளைஞர்நட் படைந்து
வாழ்ந்தவர் தழுவத் தழீஇத்தழீஇக் கரைந்தான் மற்றவர் தேற்றிடத் தெளிந்து
சூழ்ந்தவெந் துயர்நீத் தொருதலை மாமன் றொன்னகர்க் கேகுவான் றுணிந்தான்.

அங்குள கிளைஞர் சிலரொடுங் கூடி யருங்கடி மதுரைநீத் தேகிப்
பொங்கிருங் கழிசூழ் பட்டினங் குறுகிப் புகுதுவான் வரவறிந் தங்குத்
தங்குதங் கிளைஞர் வினவநேர் வாரைத் தழீஇத்தழீஇச் சொலவிடுத் தேகிக்
கொங்கிவர் தளவத் தாரினான் மாமன் கோயில்புக் கிருந்தன னாக. (௭)

வேறு.

நாள்சில கழிந்த பின்னர் நாய்கரே றனையா னன்ன
வாள்புரை கண்ணி னாளை மதுரையிற் கொடுபோ யங்கென்
கேளிர்முன் வேட்ப லென்று கிளந்துதன் மாம னீட்டு
நீள்பெரும் பொருள்கண் மற்றுங் கைக்கொண்டு நெறியிற் செல்வான். (௮)

வழிவிட வருவார் தம்மை நிறுத்திப்பின் மதுரை மூதூர்க்
கெழுதரு சுற்றத் தாரை முன்செனீ ரென்று போக்கித்
தெரிபரி சனமுந் தானுந் தோகையும் வைக லொன்றிற்
கழிவழி யரைமேற் பெய்த காவத மாகப் போவான். (௯)

வெங்கதிர் வேலை செல்லும் வேலைவந் தணையு முன்னம்
இங்கிருந் தொழிக மென்னாப் புந்திபய மூதா ரெய்தி,
அங்கிறை கோயின் முன்னிக் கூவனீ ராடி யங்குத்
தங்கிய வன்னி மாடே போனகஞ் சமைத்துண் டெல்வாய். (௧௦)

மூலைவைத்த சிலையான் கோயின் மருங்கொரு பழியி னும்பர்த்
தலைவைத்துத் துயிலு மெல்லை விதிவழிச் சார வந்தோர்
கொலைவைத்த விடவாய் நாகங் கடித்தது கொதித்து நீண்ட
விலைவைத்த கொடும்பூ ணாய்கன் விடந்தலைக் கொண்டு மாய்ந்தான் (௧௧)

அங்குள பரிச னங்க ளாவிலித் திரங்கிச் சூழக்
கொங்கைகள் புடைத்துச் சேடிக் குற்றிடை மகளி ரேங்கச்
சிங்கவே று... ணாகந் தீண்டிடா தொதுங்கிப் போந்
பங்கய மலாகமகாம் பன்னாள் பாவைபோற் புறம்பு நின்றாள். (௧௨)

வேறு.

ஆளியே றன்னவ னரவின்வாய்ப் பட்டது மவிந்ததும்
மீளிவே லுண்கணார் கைகுலைத் தழுவதும் விழுவதுங்
கேளிர்சூழ்ந் தயர்வதுஞ் சோர்வதுங் கண்டிளங் கிளியனாள்
வாளியே றுண்டதோர் மயிலின்வீழ்ந் துயங்கினாண் மயங்கினாள். (௧௩)

வடிக்கணாட் செருகின வருகின வுயிர்ப்பழல் வாய்ப்படுந்
தொடுத்தபூங் கோதைபோற் சோர்ந்ததா கங்கரஞ் சோர்ந்தன
அடித்தளிர் சோர்ந்தன கன்னியன் னப்பெடை யன்னவள்
இடிக்கெதிர்ப பட்டுவீழ்ந் தாளெனக் கிடந்தன ளென்செய்வாள். (௧௪)

சாயும்பூங் கொம்பரிற் சூழ்ந்திறந் தான்புறஞ் சார்ந்தழூஉம்
ஆயமென் மகளிர்மீண் டன்பனோ டெங்கைதன் னாவியும்
போயதே கொல்லென மடியுறக் கொடுங்கையாற் புறந்தழீஇத்
தூயதா செறிந்திளைப் பாற்றினார் சிறிதுயிர் தோற்றவே. (௧௫)

மெய்கிழிந் தின்னுயிர் மீண்டுதன் யாக்கையின் மெல்லவே
கைகலந் தாங்கிரு காவியங் குற்றன கண்களும்
பொய்கைநீ லஞ்சிறி தவிழ்ந்தென வலர்ந்தன பூவையை
மைகழி நாண்முத னன்குநால் வேலியாய் வளைந்தவே. (௧௬)

கையெறி யுங்குழற் கற்றைசோ ருந்திரி காறுளி
நெய்யெனக் கண்புனல் கொங்கைமுற் றத்துக நெஞ்சுகும்
பையவாய் விடும்புறம் பார்க்குநா ணெடுந்தளைப் படுஞ்சிறு
தெய்வந்தொட் டாளெனத் தேம்பிவிம் மாந்தொளி தேயுமால். (௧௭)

வணங்கில்செல் வந்தழீஇப் பிறந்தநா டொட்டொரு வைகலும்
அணங்கெனக் கனவிலுங் கண்டிலா ளன்பன்மே லன்பெனும்
இணங்குதன் னுருவமாய் நிறைவரம் பிற்றென விருந்தோர்பெண்
அணங்குவாய் விட்டழு தாலெனப் புலம்பலுற் றனளரோ. (௧௮)

வேறு.

என்னா யகனேயோ வென்னிருகண் மணியேயோ வென்னை...யீன்றான்
றன்னாவி யன்னதனி மருகாவோ முருகாவோ தாரார் மூல்லை
மன்னாவோ வணிகர்குல மணியேயோ விடவரவின் வாய்ப்பட் டாயோ
உன்னாக நிழலான வென்னைவிடுத் தெவ்வண்ண மொளிப்ப தேயோ. (௧௯)

பொன்னாட்டின் மடவாரைப் புணர்வதற்கோ நம்மளகா புரத்து வேந்தன்
நன்னாட்டின் மடவாரை மணப்பதற்கோ வினைக்கடித்த நாகர் வேந்தன்
றன்னாட்டின் மடவாரைத் தழுவுதற்கோ வென்னாவித் தலைவா வென்னை
இந்நாட்டி லிருத்தியென்னை வஞ்சித்துப் போயினவா றென்னே யென்னே. (உ0)

தென்னுலகிற் புகுந்தனையோ பணிந்தனையோ மாதுலனைத் தேவியோடுந்
தன்னிருதோ ளாரவாரத் தழுவினையோ நானுமுடன் சார்ந்தே னாகில்
என்னுரிய குரவரையுங் கண்ணாரக் காணேனோ வெனையீங் கிட்டாய்
பின்னுரிய பரிசனமுங் கைவிட்டாய் தனிபோயென் பெற்றாயையா. (உக)

வரிசைமரு மகனரவால் விளிந்ததுநா னறைபோய மனத்தோ டிங்குப்
பரிவுறலு மெனைப்பயந்தார் நோற்றபய னன்றாகப் பலித்த தேயோ
பெரிதவரிக் கட்கலக்கங் காணாமு னிறந்தன்றோ பிழைத்தா ரந்தோ
அரியதிலு மரியபய னதுவன்றோ வெவர்பெற்றா ரவர்போ லம்மா. (உஉ)

உன்காதன் மாமனெனைப் பயந்தவன்றே யுறவறிய வுனக்கே பேசிப்
பின்காதன் மனைவியொடு முயிரிழந்தான் யானுமந்தப் பெற்றி யாலே
என்காத லுயிர்போக வெற்றுடம்போ டிருக்குமுட னிறப்பே னென்னாத்
தன்காதற் றுணையிழந்த வன்றிலென விருந்தழுதா டமிய ளானாள். (உங)

வேறு.

நன்னக ருறக்க நீங்கி நடுக்கமுற் றழுங்கக் காழித்
தென்னகர் ஞானச் செல்வர் சிவனகர் தொறும்போய்ப் பாடி
அந்நக ரடைந்தா ரங்கோ ரணிமடத் திருந்தார் கேட்டு
தென்னென வாள்விட் டாய்ந்து கோயிலி னிடைவந் தெய்தி. (உச)

கன்னிநீ யாரை யுற்ற தென்னெனக் கன்னி தாழ்ந்து
தன்னரு மரபு மீன்றார் தம்மையு மருகற் கென்றே
உன்னினர் மன்றல் பேசி யிறந்தது முயிரன் னானே
டிந்நெறி யடைந்தீங் குற்ற நிகழ்ச்சியு மெடுத்துச் சொன்னாள். (உரு)

தந்தையுந் தாயு மன்னார் தமியளா யிரங்கும் பேதைப்
பைந்தொடி யாவி காப்பான் பாம்புகோட் பட்டான் மாடே
வந்தவ னாக மெல்லா மருந்துரு வாகும் வண்ணஞ்
சிந்தைசெய் தருட்கண் வைத்தார் குதித்தது தீவாய் நஞ்சம். (உசு)

எழுந்தன னுறங்கி னான்போ லிறந்தவன் யாருங் கண்டு
தொழுந்தகை ஞான வேந்தைத் தொழுதனர் துதிசெய் தார்வத்
தழுந்தினர் கன்னி யன்ன மனையவ ளின்பத் தீந்தேன்
பொழிந்தொரு புறத்தே கஞ்சம் பூத்ததோர் கொம்பி னின்றாள். (உஎ)

தலைவனை யறந்த போதுந் தனியுயிர் பெற்ற போதுஞ்
சிலைநுதல் காதன் மாமன் செல்வியா யிருந்துந் தீண்டா
நிலைமையு மீன்புங் கற்பி னீர்மையும் வியந்து நோக்கி
மலைமகன் ஞான முண்டார் வணிகனை நோக்கிச் சொல்வார். (உஅ)

வருதிநின் மரபுக் கெல்லா மணியனா யுன்றன் மாமன்
றருதிரு வனையா ளின்பஞ் சாருநா ளுன்பம் வந்து
பெருகுநா ளன்றி யென்றுன் மெய்தொடப் பெறுவ ளீண்டே
திருமண முடித்துக் கொண்டு போகெனச் செப்ப லோடும். (உகூ)

செங்கணே றனையா னையன் றிருமொழி தலைமேற் கொண்டு
பங்கயன் படைத்த சாதி நான்கையும் பாது காப்பீர்
எங்குல வணிகரின்றிக் கரிகளு மின்றி யீங்கே
மங்கல முடிக்கும் வண்ணம் யாதென வணங்கிச் சொன்னான் (௰)

கன்னியை யீன்ற ஞான்றே யுனக்கென்றன காதன மாமன்
உன்னிய துறவி னுள்ளா ரறிவரே யுனக்கீ தன்றி
வன்னியுங் கிணறு மிந்த விலிங்கமுங் கரிகண் மைந்தா
இந்நிலை வதுவை செய்தி யெம்முறை கடவா தென்றார். (௧௧)

மாசறு மனத்தான் கோழி வேளாளைப் பணிந்து நீரே
தேசிகர் குரவர் நட்டோர் தெய்வமுங் கிளையு மென்னாப்
பேசியவ் வாறே வேள்வி பெற்றியா னிழீஇத்தான் வேட்ட
பாசிழை யோடு தாழ்ந்து விடைகொடு பரவிப் போனான். (௧௨)

ஏவல்செய் யாயத் தாரு மடியரு மீண்ட வீண்டிக்
காவல்செய் மதுரை மூதூர் குறுகித்தன் காதன் மாமன்
பூவையை மணந்த வண்ணங் கேட்டங்குப் புடைசூழ் சுற்றம்
யாவரு முவப்ப வின்புற் றிருந்தன னிளங்கோ மன்னன். (௧௩)

தன்பெருந் தனமு மாம னீட்டிய தனமு மீட்டி
மன்பெரு நிதிக்கோ னென்ன வாணிகம் பெருக்கி நாய்கன்
இன்புறு காத லார்க ளிருவரு மீன்ற காதல்
நன்பொருண் மகிழ்ச்சி செய்ய நலம்பெற வாழு நாளில். (௧௪)

மூத்தவள் சிறுவர் சால மூர்க்கரா யுள்ளா ரேனை
மாத்தளி ரியலி னுட்கோர் மைந்தனுண் டிவனு மன்ன
தீத்தொழி லாக மன்ன சிறார்களு மல்லற் செல்வம்
பூத்தநீ ணியமத் தூடு போய்விளை யாடல் செய்வார். (௧௫)

முந்திய மணாட்டி மைந்தர் முகிழ்முலை யிளைய பாவை
மைந்தனை யொருநாட் சீறி யடித்தனர் வருந்தி யீன்ற
சந்தணி முலையாண் மாற்று டனையரை வைதா ளீன்ற
பைந்தொடி தானுஞ் சீறி யிளையளைப் பழித்து வைவாள். (௧௬)

எந்தவூ ரெந்தச் சாதி யார்மகள் யாவர் காணச்
செந்தழல் சான்றா வெங்கோன் கடிமணஞ் செய்துவந்த
கொந்தவிழ் கோதை நீயென் கொழுநனுக் காசைப் பட்டு
வந்தவ ளான காமக் கிழத்திக்கேன் வாயும் வீறும். (௧௭)

உரியவன் றீமுன் னாக வுன்னைவேட் டதற்கு வேறு
கரியுள தாகிற் கூறிக் காட்டெனக் கழற லோடும்
எரிசுட வாடிச் சாய்ந்த விணர்மலர்க் கொம்பிற் சாம்பித்
தெரியிழை நாணஞ் சாய்ப்ப நின்றிது செப்பு கின்றாள். (௧௮)

அரவின்வாய்ப் பட்ட வைக லாருயி ரளித்த ஞானப்
புரவல ரருளா லெங்கோன் புறம்பய நாதன் வன்னித்
தருவொடு கிணறு காணச் செய்தனன் சாறம் மூன்று
கரிகளு முள்ள வென்றாள் கற்பினா லொப்பி லாதாள். (௧௯)

மாறவ னகைத்து நன்று நன்றுநின் மன்றல் வேள்விக்
கேற்றன கரியே சொன்னா யிங்குமக் கரிகண் மூன்றுந்
தோற்றுமே லதுவு மெய்யே யென்றன ரோகை யோடும்
வேற்றுமை யிலாத் சாய லிளையவள் விழுமங் கூரா (௪௰)

வெவ்வுயிர்ப் பெறிய வியப்போய மெல்விர னெரிக்குங் கையால
அவ்வயி றதுக்கும வீழுங் கண்புனல வெள்ளத் தாழுங்
கொவ்வைவாய துடிக்கு நாவரங் தலைகொளுங் கூச மன்றோ
தெய்வமே யாவா வென்னு மென்செயகேன் சிறியே னென்னும். (௪௧)

தாதைதா யிறந்த வன்றே தமியளா யிங்குப் போந்த
பேதையேற் காருண் டைய பேதுறும வணிகற் கென்று
மாதுல னுகி ஞாதி வழக்கறுத தரிமை யீந்த
நாதனே யேதி லாளவாய நகையினிற் காததி யென்னு. (௪௨)

அன்றிர வுண்டி யின்றித் துயிலின்றி யழுங்கிப் பின்னாட்
பொன்றிணி கமல வாவிப் புணணியப புனறோய்ந் தண்ட
நின்றிழி விமானக கோயி னிரமபிய வழகா முன்னாச்
சென்றிரு தாளில வீழ்நது தன்குறை செப்பி வேண்டும். (௪௩)

அன்றெனைக் கணவன வேட்ட விடத்தினி லதற்குச் சான்றாய்
நின்றவைத் தருவு நீயுங் கிணறுமங் நிலையே யிங்கும்
இன்றுவந் தேதி லாள்வாய நகைதுடைத தெனைககா வாயேற்
பொன்றுவ லெனறாள் கற்பின் புகழினை நிறுதத வந்தாள். (௪௪)

புலலுற் றழுங்கி நின்றாள் பரிவுகண் டந்தண் கூடல
எல்லையில கருணை மூர்த்தி யருளினு லெவருங் காணத
தொலலையின படியே யன்னுள சொலலிய கரிகண மூனறும்
ஒல்லைவந் திறுதத கோயி லுத்தர குணபா லெலலை. (௪௫)

அன்னபோ திளையாண் மூதநாட் கொணடுபோ யாலவா யெம்
முன்னவன திருமுன றாழந்து காட்டுவாண முகிறோய செனனி
வனனியீ திலிங்க மீது கிணறிதெனமன்றற் சானறாத
துனனிய வெனறாள் கண்டாண் முடிததலை தூக்கி நின்றாள். (௪௬)

அவ்விடைத் தருவு நீரு மனறுபோ லின்றுஞ் சான்றாய்
இவ்விடைப் பட்ட வென்ன வதிசய மெயாகருந தேறாத
தெய்வமு மெளிவந தஙகைக கனியினித திருவி னனாள்
கைவவசப் பட்ட தெனறாற் கற்பினுக கரிதே தமம. (௪௭)

மஙகைதன கற்பு மீச னிடததவள் வைத்த வன்பும்
அஙகண னவட்குச செயத வருளையும வியந்து நோக்கி
மஙகல நகரா ரெலலா மகிழ்ச்சியு ளாழ்நதார முலலைத
தொஙகலான முதும னாட்டி யொருததியுந் துன்படத் தாழ்ந்தாள். (௪௮)

மேதகு வணிகர் மூதத விளைகொடி யாளைப் பொலலாப்
பாதகி யிவளா மெனறு பழிததனா படிறு பேசிக்
கோதறு குணததி னாளைக் குடிப்பழு துரைததாய நீயென்
காதலி யாகா யென்று கணவனுஞ் சள்ளி விட்டான. (௪௯)

அங்கிலை யிளையாள் கேள்வ னீடியில்வீழ்ந் திரப்பா ளைய
என்னது கற்பை யின்று நிறுத்தினு ளிவண்மா றாளன்
றன்னையி லாதேற் கன்னை யாயினு ளிவளும் யானும்
இன்னுயி ருடல்போல் வாழ்வே மெனத்தழீஇத் தம்மி னட்டா (௫௦)

உடம்பினு மிரண்டே யன்றி யுயிர்ப்பொரு ளிரண்டற் றுள்ளம்
மடம்படு மழுக்கா றற்று மைந்தரு மனைய ராக
விடம்படு மைவாய் நாகம் விழுங்கிரை யொழுந்துத் தம்மில்
இடம்படு மன்புற் றின்புற் றிருவரு மிருந்தா மன்றே. (௫௧)

அருந்ததி யனையாள் கேள்வழ் காயுளு மானுச் செல்வப்
பெருந்தன நிறைவுஞ் சீரு மொழுக்கமும் பீடும்பேறு
தருந்தவ நெறியுங் குன்றாத் தருமமும் புகழும் பல்க
இருந்தனள் கமலச் செல்வி யென்னவீற் றிருந்து மன்றே. (௫௨)

பொன்னவிர் கமலம் பூத்த பொய்கைசூ ழால வாயம
முன்னவன் விளையாட் டெல்லை கண்டியார் மொழிய வல்லார்
இன்னமு மளவின் றென்ப வெங்குரு நாத சாமி
சொன்னவா றுங்கட் கெண்ணெண் காதையுஞ் சொன்னே னம்ம. (௫௩)

வேறு.

என்றுதென் மலைமே லிருந்தமா தவத்தோ னின்னருட் குருபரன் றனையும்
அன்றவன் றிருவாய் மலர்ந்தவா சகமு மருள்கனிந் தொழுகவுள் ளடக்கித்
தென்றமி ழாலவாய்த் தனிப் பதியைச் சென்னிமேற் பன்னிரண் டும்பர்
ஒன்றவைத் திமையா வகையகக் கண்ணி யுடனுறை யொருவனை நினைந்தான்.

பரவச மடைந்து வழிகவர்ந் துண்ணும் பழிப்புல வேடர்போ யொளிப்ப
இருள்வெளி கடந்து திருவருள் வழிச்சென் றெண்ணிலாச் சராசர மனைத்தும்
புரைவற நிறைந்து காட்சிகண் காண்பான் புதைபடத் தனித்தபூ ரணமாய்
உரையுணர் விறந்த வுண்மையா னந்த வுணாவினை யுணர்வற வுணர்ந்தான்.

வன்னியுங்கிணறுமிலிங்கமுமழைத்தபடல முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௩,௩௪௦.

அறுபத்தைந்தாவது

அருச்சனைப்படலம்.

கன்னாதன வதுவைக் கரிகளா யிலிங்கக் கடவுளுங் கவைக்கருங் கோட்டு
வன்னியும் படுநீர்க் கூவலும் வந்த வழியிது மதுரைநா யகனைச்
சென்னியில் வைத்த முனிவனைப் பூசை செய்துமா தவரொருங் கெய்திப்
பன்னிற மலர்தூஉ யாலவா யானைப் பரவிய பரிசது பகர்வாம். (௧)

போதவா னந்தத் தனிக்கடல் பருகும் புயல்புரை முனிவனை வசிட்ட
மாதவ னத்தி முனிவரு முலோபா முத்திரை தன்னொடும் வரித்துப்
போதொடு சாந்த மான்மதந் தீபம் புகைமுதற் கருவிகைக் கொண்டு
மேதகு சிறப்பா லருச்சனை செய்து பின்னுமோர் விண்ணப்பம் செய்வார். (௨)

வேறு.

கோட்டஞ் சிலைகுனித்த கூடற் பிரானுடல
கேட்டஞ் செவிபடைத்த பேறடைந்தேங் கேட்டபடி
நாட்டங் களிப்ப நறுமலர்தூஉய்க் கண்டிறைஞ்ச
வேட்டங்கள் யாங்குளன வோதினார் மெய்த்தவரே. (௩)

என்ற வறவோ ரெதிரே முகமலர்ந்து
குன்ற மடக்குங் குறுமுனிவன் கூறுவான்
நன்றுமுனி காளிதனை நானுள்ளத் தெண்ணியாங்
கொன்றமொழிந் தீரென்றான் பின்னும்வியந் தோதுவான். (௪)

பண்ணான் மறைமுடியுந் தேறாப் பரசிவனை
எண்ணா ளவிறந்த வெக்கலையாற் கண்டுமுள
கண்ணா லறியாதார் வீட்டின்பங் காண்பரோ
மண்ணாதி யாறாறு நீத்ததனி மாதவரே. (௫)

அஞ்செவியி னூறுபடக் கேட்டபடி யாலவாய்ப்
பஞ்சமுகச் சோதிப் பரனைப்போ யர்ச்சித்து
நெஞ்சநெகக் கண்டு நினையா வழிநினைந்து
வஞ்சவினை வேர்களைவான் வம்மின்க ளென்றானே. (௬)

மங்கல வோரை வருதினத்தில் வானிழிந்த
கங்கை படிந்துலக நாயகனைக் கைதொழுது
புங்கவர்முன் சங்கற்பஞ் செய்தனுச்சை பூண்டொழுகி
அங்கவர்வா யாசி மொழிகேட் டகமகிழ்ந்தே. (௭)

ஐம்புலனுங் கூடற் பெருமா னடியொடுக்கி
நம்பனுரு வைந்தெழுத்து நாவாடக் கைகூப்பித்
தம்புனித சைவ தவத்தெய்வத் தேர்மேற்கொண்
டும்பர் வழிநடக்க லுற்றார்க ளற்றவரே. (௮)

செய்ய சடையர் திருநீறு சுண்ணித்த
மெய்யர்தவ நோற்றிளைத்த மேனியினா ருட்புறம்புந்
துய்யரணி கண்டிகையர் தோலு மருங்குடையர்
ஐயர் தவத்துக் கணிகலம்போற் போதுவார். (௯)

வேறு.

புண்ணியந் தழைக்குந் தெய்வத் தலங்களும் புலன்கள் வென்றோர்
நண்ணிய வனமுந் தீர்த்த நதிகளுந் தவத்தோர் நோற்கும்
வண்ணமு நோக்கி நோக்கி மலயமா முனிவன் காட்டக்
கண்ணிணை களிப்ப நோக்கிக் கைதொழு திறைஞ்சிச் செல்வார். (௧௦)

விருபாக்ஷம் திருப்பருப்பதம்.

சீறுகொ ளிலங்கை வேந்தைச் செகுத்திட விராமன் பூசித்
தாரணி விருபக் கண்ண னருள்பெறு தலமீ தும்பர்
ஏறிவீழ்ந் திறந்தோர் முன்ன மெண்ணிய வெண்ணி யாங்கே
மாறிய பிறப்பி னல்கு மலையிது காண்மின் காண்மின். (௧௧)

திருக்கோகர்ணம். சோமநாதம்.

சுரபிநீள் செவியி லிங்கச் சுடருரு வாயி னான்றன்
இரவினிற் றிருத்தேர் மன்றி னடக்குமூ ரவ்வூர் மேல
உரவுநீர்க் கரைத்தேண் மாதத் துயர்ந்தகார்த் திகையிற் றேரூர்த்
தரவுநீர்ச் சடையான் வேள்வி நடக்குமூ ரவ்வூர் காண்மின். (௧௨)

திருக்காளத்தி. திருவாலங்காடு. காஞ்சீபுரம்.

விற்பயி றடக்கை வேடன் மென்றவூன் பாகம் பார்த்தோன்
பொற்புறு கிரியீ தண்டம் புழைபட விடத்தா ணீட்டி
அற்புதன் காளி தோற்க வாடிய திதுமா நீழற்
கற்புடை யொருத்தி நோற்கும் பிலமிது காண்மின் காண்மின். (௧௩)

திருமாற்பேறு. திருவோத்தூர்.

திருமறு மார்பன் காவற் செயல்பெற வரனைப் பூசித்
திருகர முகிழ்த்து நேர்நின் றேத்திட மிதுவா மோத்தூர்
உரைவரம் பகன்ற முக்க ணுத்தமன் சந்தை கூட்டி
அருமறை யறவோர்க் கோது வித்திட † மதனைக் காண்மின். (௧௪)

திருவண்ணாமலை. திருக்கழுக்குன்றம். திருமுதுகுன்று.

அடிமுடி விலங்கும் புள்ளு மளந்திடா தண்டங் கீண்டு
நெடுகிய நெருப்பு நின்ற நிலையிது முள்வாய்க் கங்க
வடிவெடுத் திருவர் நோற்கு மலையிது பல்லே றூழி
இடையுற முன்னும் பின்னு மிருக்குமிக் குன்றைக் காண்மின். (௧௫)

திருக்கோவலூர். திருவதிகை.

அவுணரிற் களவ னான வந்தகற் காய்ந்து மூன்று
புவனமு மகவலை தீர்த்த புண்ணியன் புரமீ தாகும்
தவலரும் புரங்கண் மூன்றுந் தழனுதற் றிருக்கண் சாத்திப்
பவமறு மூவ ரன்பிற் பட்டவன் பதியைக் காண்மின். (௧௬)

சிதம்பரம். திருவாரூர். வேதாரணியம்.

சத்திய ஞானானந்த தத்துவ மசையற முடும்
நித்திய பரமா னந்த நிறையருண் மன்ற மீது
முத்தியங் குதித்தோ ரெய்தும் பதியது முதனூ லொன்கும்
பத்தியிற் பூசித் தேத்தும் பதியிது வாகும் பார்மின. (௧௭)

சீர்காழி. புள்ளிருக்குவேளூர்.

பிரமன்மான் முதலாந் தேவர் பிரளயத் திறவா வண்ணம்
பரமனூர் தோணி யேற்றும் பன்னிரு நாமம் பெற்று
புரமிது சடாயு சம்பா திகள்பெரும் பூசை செய்ய
வரமளித் திருநோய் தீர்க்கு மருந்துறை பதியீ தாகும். (௧௮)

* திருக்கார்த்திகையிலே தேர்த்திருவிழா நடக்குமூர் திருவஞ்சைக்களம் என்பாருமுளர்.

† ஓதுவித்த வென்பதீ கடைகுறைந்து நின்றது.

மாயூரம். திருக்கோடிகா. தருமபுரம்.

மதிநுத லிமயச் செல்வி மஞ்ஞையாய் வழிபட் டேத்தும்
இதுதுலாப் பொன்னித் தான மெம்மனோர் மூன்று கோடி
மதிபெறு முனிவர் வந்து வழிபடு மூது ரீதிப்
பதியறக் கடவுள் பூசை பண்ணிய தானங் காண்மின். (௧௯)

திருவெண்காடு. திருப்பனந்தாள்.

கோடுநான் குடைய வேழந் தானவன் றுறைத்த கோடடைப்
பாடற மீாற்றுப் பெற்ற பதியிது மாலை சாத்துந்
... மானங் காப்பான் முழ்ந்துபூங் கச்சிட் டீர்க்கும்
பீடுறு கலைய னன்பி னிமிர்ந்தவெம் பிரானூ ரீதால். (௨௦)

* கணபதீச்சரம். திருச்செய்ஞலூர்.

கரிமுகத் தவுணற் காய்ந்து கரிமுகத் தண்ணல் பூசை
புரிசிவ நகர மீது தாரகற் பொருது செவ்வேள்
அரனையர்ச் சித்த தாக்கீழ் மணற்குறி யான்பா லாட்டிப்
பரன்முடி மாலை சூடுஞ் சேய்வளம் பதியீ தாகும். (௨௧)

திருக்கடவூர். திருவழுவூர்.

கறுவியீழ் காலன் மார்பிற் சேவடிக் கமலஞ் சாத்திச்
சிறுவனுக் காயு ளீந்த சேவகப் பெருமான் மேய
அறைபுனற் பழன மூதூ ரதுவிது வானை தந்த
குறையுடற் போர்வை போர்த்த கொற்றவன் கோயில் காண்மின். (௨௨)

திருக்கண்டியூர். திருக்குறுக்கை. திருப்பறியல்

பங்கயக் கடவு ளீந்த பரிகலம் வாங்கிக் கொண்ட
அங்கண னிடமீ தாட லனங்கனை யமுது செய்த
செங்கணு னிருக்கை யீது மேழகச் சென்னி தன்னை
மங்கல மாமற் கீந்த மருகனு ரிருக்கை காண்மின். (௨௩)

திருவிற்குடி. திருப்புறம்பயம்.

திண்டிற லவுணன் றன்னைப் பெருவிரற் றீட்டு நேமி
உண்டிட விருந்தாக் கொண்டோ னுறையதா மொருத்தி மன்றல்
கண்டிடு கரியாய்க் கூவல் கன்னுத லிலிங்கம் வன்னி
எண்டிசை யறியக் காட்ட நின்றிட மிதனைக் காண்மின். (௨௪)

திருவிடைமருதூர். கும்பகோணம்.

சாமகண் டத்தன் றன்னைத் தானருச் சித்த தென்னர்
சேமமன் பிரம சாயை குறைத்ததிப் பதியாங் கங்கை
மாமகந் தோறும் வந்து வந்துதற் படிந்தோர் விட்டுப்
போமகம் போக மூழ்கும் புனிதநீர்ப் பதியைக் காண்மின். (௨௫)

சாமிமலை. திருவீழிமிழலை. திருவையாறு.

குருமொழி தந்தைக் கீந்தெங் குருவுறை மலையீ தெங்கோன்
கருமுகில் வண்ணத் தண்ணல் கண்ணிடந் தடியிற் சாத்தப்
பொருவிலா ளாழி யீந்த புரமிது நந்தி யெந்தை
திருவுரு வடைய நோற்ற தலமிது தெரிந்து காண்மின். (௨௬)

---

* தாபதன் என்றும் பாடம். தாபதன் என்றது இங்கே துருவாச முனிவரை.

திருவானைக்கா திரிசிராமலை

முடங்குகாழ் சிவந்தியானை மலைமகள் முளரி நாட்டத்
தடங்கடவு வண்ண ரேற்ற தவங்க ரிதுமுசச் சென்னி
மடங்கலே றனையா ருமம் வரையிது குடைய தோர் பாலை
அடங்கலும் பருகும் பொன்னி யாறிது காணமின் காணமின் (௫௭)

இந்தி வெண்முத்த தாரம் மெனக்கிடந் திலங்குஞ் சென்னி
மன்னவ னருடு தென்ப தமிழறி வைகைப் போயா
றநந்தி துறக்க மண்மேல் வழுக்கிவீழ்ந் தாங்குத் தோற்றித்
தென்னவ னாடு சேயத்தாது தெரிவதே காணமின் என்றான் (௫௮)

பொங்கர்மென் புதல்கள் ளன்ன பொருநதி சிறுகா லெனனம்
கொங்கலர் தடஞ்சிற றூற்றுக் குழியென்ன பழனஞ் சூலவி
நங்குமென் பாசியென்னத் தாழைதாழ் சிறுபல லெனனை
பைங்குலைக் கதலி மஞ்சட் பாத்திபோற் றோற்றக் கண்டா (௫௯)

பன்னிற மாட மாலை யுபரிகைப் பந்தி செற்கு
றன்னமவெண் குருகு செம்போத் தளதுபைங் கிளிமே லுஞ்ச
இன்னபுள் வேறு வேறு யொழுங்குபட் டிருப்ப தொப்ப
மின்னுபூங் கொடியப் புட்கள் சிறகென விரித்துக் கண்டா (௬௦)

வேறு.

கண்டு நாட்டு நகர்வளங்க ணடந்து நடந்து கண்களிகூர்ந்
தண்டு மீள ... ருழுதி வலமா வருமுனிவர்
விண்டு பூவும் மக... பஞ்சுணறும் தளிப்புத் தாரும் விரிபொழில்வாய்
வண்டு பாட்ட மயிலாடல பயிலா டானை வளர்நகரும் (௬௧)

சரத வேதம் பரவுபுன வாயி னகரும் தவசிரத்தா
இரத வாதஞ் செய்துசிவ னுருவங் கண்ட வெற்றிக்காம
... தனுக ... றையுங் கானப் பேரு மலைமகளை
விரதத்தோர் ... நெறிநின்று மணந்தார் சுழியல் விபனகரும். (௬௨)

திருவிராமேச்சரம் திருநெல்வேலி.

மறவா ளிலங்கை யிறைமகனை வதைத்த பழிபான மருணாட்டிப்பண
றறவா ணேமை யளித்தவனை யாசசித்த தக்கன ற வணிநகரும
நிறவாண முத்தும வயிரே நிறையும பொன்னும் விளைபொருநைத்
துறைவாயட பிறவாக கடவுளமேய வியிறறிற பிறநத தொனனகரும (௬௩)

திருக்குற்றாலம். திருப்பரங்குன்றம். திருவேடகம்

துளபக குனறைக கொன்றைமுடிக குன்ற மாககுந தொனனகரும
அளகைப் பொலிதத கொடியிளையோன மாமனோ நோக்கி ஞானமகள
புளகக குனறை மணநதுமுத விருநத பொருப்பும் போரவிசயன்
வளைவிற ருககக வடுக்கிடந்த முடியோன மேய வளநகரும. (௬௪)

கொண்டல பிடியுந திருவாப்ப னூருந தொழுது குளிர்திரைக்கை
வண்டு படியுங கமழ்முக வைகைப பிராட்டி யெதிர்வணங்கிக்
கண்டு படிநது திசையெட்டும விழுங்கி யண்டங் கிடந்திலகும
நெடியோ னெனவுயர்கோ புரமுன னிறைஞசி யுள்புகுந்தா (௬௫)

மறுகு தேரும பணிநதெழுநது வளைநது வளைநது பொற்கோயில
குறுகி விதியாற பொற்கமலங குடைநது செயயுங குறைநிறுவி
உறுதி பெறவைந தெழுத்தெண்ணி யூற்று மதத்து நாற்றடந்தோட
சிறுகு கண்ணா வைங்கரத்துச் சித்தி யானை யடிவணங்கா. (௬௬)

மும்மை யுலகு நான்மறையு முறையா லீன்ற வங்கயற்கண்
அம்மை யடிகண் முடியுறத்தாழ்ந் தன்பு கொடுத்தின் னருள்வாங்கி
வெம்மை யொளிகான் மணிக்கனக விமானத் தமர்ந்த தனிச்சுடரின்
செம்மை யடித்தா மரைவேணிச் சிரமேன் மலரப் பணிந்தேத்தா. (௩எ)

வேறு.

அன்றிரு போது முண்டி யுறந்திரா வறுக்குந் தீவாள்
என்றெழு முன்னீ ராடி நியதிக ளியற்றி யைந்தும்
வென்றுளத் தன்பு பாய விளைமுழு முதலைப் பார்மேல்
மின்றிரண் டென்ன நின்ற விமானமீ திருப்பக் கண்டார். (௩அ)

வாசமஞ் சனந்தேன் றன்னல் பைங்கனி மறுவி லானைந்
தாசறு மமுதீமைந்து தென்மலை யாரம் வாசம்
வீசுதண் பனிநீர் வெள்ள மான்மதம் விரைமென் போது
தூசணி மணிப்பூ ணல்ல சுவையமு தின்ன தாங்கா. (௩௯)

சதவுருத் திரத்தா லாட்டி மட்டித்துச் சாத்திப் பூட்டிப்
பதமுற மனுவா லட்ட பாலமு தருத்திப் பஞ்ச
விதமுறு வாசம் பாகு வெள்ளிலை யளித்துப் போகம்
உதவுறு தூப தீபா திகள்பல வுவப்ப நல்கா. (௪0)

ஐம்முகச் சைவச் செந்தீ யகத்தினுந் துணைவ யாக
வெய்ம்முகந் தருத்திப் பூசை நிரப்பிநால் வேதஞ் சொன்ன
மெய்ம்மனு நூற்றுப் பத்தான் மூவிலை வில்ல நீளங்
கைம்மல ரேந்திச் சாத்திக் கடவுளை யுவப்பச் செய்து. (௪௧)

வாசமஞ் சனநீ ரோடு மந்திர மலர்கைக் கொண்டு
பூசையின் பயனை முக்கட் புண்ணியன் கையி னல்கி
நேசநெஞ் சூறக் கண்க ணிறையநீ ரூறிச் சோர
ஈசனை யிறைஞ்சி யாரு மஞ்சலித் தேத்தல் செய்வார். (௪௨)

வேறு.

பழியொடு பாச மாறு கெடவாச வன்செய் பணிகொண்ட வண்ட சரணம்
வழிபடு தொண்டர் கொண்ட நிலைகண்டு வெள்ளி மணிமன்று ளாடு சரணஞ்
செழியன் விழிந்தி டாத படிமாறி யாட நெறிவித்த சோதி சரணம்
எழுகடல் கூவி மாமி யுடன்மாம னாட விசைவித்த வாதி சரணம். (௪௩)

வெங்கரி யாவி சோர நரசிங்க வாளி விடுவேட ரேறு சரணம்
புங்கவர் தேற வாதி மறையுட் கிடந்த பொருளோது போத சரணம்
வங்கம தேறி வேலை மகரம் பிடித்த வலையாண் மணாள சரணங்
கங்கண நாகம் வீசி நகரெல்லை கண்ட கறைகொண்ட கண்ட சரணம். (௪௪)

வந்தனி லாழி மேரு மகவா னகந்தை மடிவித்த நித்த சரணஞ்
சுந்தர நாம வாளி பணிகொண்டு கிள்ளி தொகைவென்ற வீர சரணம்
வெந்திறன் மாறன் முன்க லுருவானை கன்னன் மிசைவித்த சித்த சரணம்
முந்திய கல்வின் மாதர் பெறவட்ட சித்தி முயல்வித்த யோகி சரணம். (௪௫)

திருமணி மைந்தன் *மைந்தன் முடிசூட விற்ற திருமல்கு செல்வ சரணம்
மருமக னென்று மாம னுருவாய் வழக்கு வலிபேசு மைந்த சரணங்
குருமொழி தந்து நாரை குருவிக்கு வீடு குடிதந்த வெங்கத சரணம்
வருபழி யஞ்சி வேட மகனுக் கிரங்கு மதுராபு ரேச சரணம். (௪௬)

* மைந்தன் வீரபாண்டியன். மைந்து - வீரம்.

விருத்தகுமார பாலவருண்மேனி கொண்டு விளையாடு மண்ணல் சரணம்
குரத்தியை நச்சு பாலி யுயிருண்டு சேரி குடைவாகை வேல சரணங்
கருத்திலை பாணு ஞனி னிசைபாடி மாறு கனைவேத கீத சரணம்
நரித்திரண் மாவை மீள [illegible]கரங் கலங்க நரிசெய்த நம்ப சரணம். (௪௭)

முற்வக லாறி ரண்டு சிறுபன்றி யுண்ண முலைதந்த வன்னை சரணம்
பொற்புறு மாய வாவை யடலேறு கொண்டு பொருதட்ட சிட்ட சரணம்
பற்பல ஞால மெங்கு மடையப் பிரம்பு படுமட்ட மூர்த்தி சரணங்
கற்பி னொருத்தி மன்ற லறிவிக்க மூன்று கரிதக்த வள்ளல் சரணம். (௪௮)

அளவைக ளாலும் வேத மூத னூல்க ளாலு மயன்மாய னாலு மளவாக
களவை யுனக்கு நாம குணமின்ன சாதி கதிசெய்தி யில்லை யவையும்
உளவென யாம நிந்து துதிசெய்ய வேகொ லுலகஞ்செ யன்பி னெளிதாய்
விளையருண் மேனி கொண்டிவ் வறுபத்து நாலு விளையாடல் செய்த படியே.

வே று.

எனத்துதித்த வசிட்டாதி யிருடிகளைக் குறுமுனியை யெறிதே னீப்
வனத்துறையுஞ் சிவபெருமா னிலிங்கத்தின் மூர்த்தியாய் வந்து நோக்கிச்
சினத்தினைவென் றகந்தெளிந்தீர் நீர்செய்த பூசைதுதி தெய்வத் தானம்
அனைத்ினுக்கு மெனைத்துயிர்க்கு நிறைந்துநமக் கானந்த மாயிற் றென்றான். (௫௦)

சிறந்தவருள் சுரந்துகுறு முனியைவரு கென்றுகரஞ் சிரமேல் வைத்துப்
புறந்தடவி யெமையொப்பாய் நீயேநின் கற்புடைய பொலங்கொம் பன்னாள்
அறந்தழையு முமையொப்பா ளாதலினா லுமையொப்பா ரகிலத் தியாரே
நிறைந்ததவம் புரிந்தோனுந் தவத்துறுதி பெற்றோனு நீயே யன்றோ. (௫௧)

உனக்கரிய வரமினியாந் தருவதெவ னுனக்கரிதா வொன்றுங் காணேம்
எனக்கருணை செய்திலிங்கத் திடையிச்சை வடிவாய்ச்சென் றிருந்தானாகத்
தனக்கரிய வரநல்குஞ் சிவலிங்கந் தன்பெயராற் றுபித் தான்றன்
இனக்கருணை வசிட்டாதி முனிவர்களுந் தம்பெயரா லிலிங்கங் கண்டார். (௫௨)

எத்தியருச் சனைசெய்து நினைவிலரி தாயன்பி லெளிய வட்ட
[illegible]ர்த்தியையங் கயற்கண்ணி யன்பனைமுப் போதும்போய் முடிதாழ்ந் தின்பம்
[illegible]த்தமனத் தினராகிக் கருவித்தேன் பொதிந்தசிறு புட்போ லந்த
மாத்தலனில் வசிட்டாதி [illegible]னிவர்தபோ வனஞ்செய்து வதிந்தா ரன்றே. (௫௩)

அருச்சனைப்படல முற்றிற்று.

திருவாலவாய்க்காண்ட முற்றிற்று.

ஆக திருவிருத்தம் - ௧,௧௬௧.

மதுரையறுபத்துநான்குதிருவிளையாடற்புராணமுற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

பரஞ்சோதிமுனிவர் திருவடிவாழ்க

பரிசோதநபத்திரம்.

பக்கம்.	பாட்டு.	வரி.	பிழை.	திருத்தம்.
சுள		சுய	†	‡
,,		சுக	‡	†
ஙரு	,,	சுஉ	,என்றும்	என்னும்
எசா	ககசு	க	தவோக	தேவாக
கூள	,,	சுங	ந	* ந
கசு0	௲சு	ங	சூழ்ந்து	சூழ்ந்து
கசுவ	,,	,,	ஆங்கம்வெட்டினெ	மாயாதகந்தீர்த்த
டககூ	ஙஅ	க	விரணடத்தும்	விரணடாத்தும்
ங0அ	,,	சுஉ	†	*
,,	,,	,	‡	†
ஙகரு	ருள	௬	இரையுங்	டிரையும்
ஙகஅ	கங	உ	மிசனே	மீசனே
ஙஙக	ஙக	சா	மடைந்நு	மடைந்து

கசு-ம் பாரத்தில் க0ங முதல எட்டுப்பக்கஙகளிலுமுள்ள இலக்கங்க முறையே க0ரு முதலாகத் திருத்திக்கொள்க.

MAHAMAHOPADHYAY DR. U.V. SWAMINATHA IYER LIBRARY, TIRUVANMIYUR MADRAS-41.